
# ஸ்ரீ கஜானன் மகராஜ் குரு சரித்திரம்

## அற்புதங்களும் உபதேசங்களும்



ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ கஜானன் மகராஜ் குரு சரித்திரம்

**(அற்புதங்களும் உபதேசங்களும்)**

மராத்தி மூலம்

**ஸ்ரீ தாஸ்கணு மகராஜ்**

ஆங்கிலத்தில்

**பண்டிட்ஜி**

**நாயக்ஜி**

தமிழில்

**திருமதி ரமா சுப்ரமணியன்**



வெளியீடு :

**ஸ்ரீ கஜானன் மகராஜ் சமஸ்தானம்**


ஷேக்காவ், புல்தானா மாவட்டம் - 444203.

**PH : 07265 - 252018 / 252251**

**09881388331**



ஸ்ரீ கஜானன் மகராஜ், ஷேக்காவ்



ஸந்த்கவி ஸ்ரீ தாஸ்கனு மகராஜ், பண்டரிபுரம்
ஸ்ரீ கஜானன் விஜய் எழுதியவர்

## பொருளடக்கம்

பக்கம்

**அத்தியாயம் - 1** 13

1. மூலாதார மூர்த்தியும், முழுமுதற்கடவுளுமான ஸ்ரீ கணபதி தேவருக்கு நமஸ்காரங்கள்
2. ஸ்ரீ கஜானன் மகராஜ் ஷேக்காவ் கிராமத்தில் முதன் முதலாக ஒரு மரத்தடியில் திரு. பங்கட்லாலுக்கும், திரு. தாமோதருக்கும் காட்சியளித்து பின்னர் மறைந்த நிகழ்ச்சி

**அத்தியாயம் - 2** 22

1. ஸ்ரீ மகராஜ் அசுத்தமான குட்டையிலிருந்து தெளிந்த நீரை வரவழைத்த அற்புதம்
2. ஷேக்காவ் சிவாலயத்தில் திரு. கோவிந்தபுவாவிற்கு பாகவதத்தில் மறந்து போன ஸ்லோகங்களை நினைவூட்டிஉபதேசித்தல்
3. திரு. பங்கட்லாலின் இல்லத்தில் ஸ்ரீ மகராஜ் அவர்களைவரவேற்று உபசரித்த நிகழ்வு

**அத்தியாயம் - 3** 30

1. காசியிலிருந்து வந்த சந்யாசி, ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு ஹுக்கா அளித்தது
2. திரு. ஜனாராவ் தேஷ்முக் உயிரைக்காப்பாற்றிய அற்புதம்
3. உண்மையான குருவை தேர்ந்தெடுப்பதுதின் அவசியம்
4. ஆன்மீக வியாபாரியான திரு. காடோலன் என்பவரை ஸ்ரீ மகராஜ் அடித்து துரத்திய நிகழ்ச்சி

**அத்தியாயம் - 4** 38

1. திரு. ஜானகிராமனின் அகம்பாவத்தை அழித்தது
2. திரு. சந்த்முகின் இல்லத்தில் நிகழ்த்திய அற்புதம்
3. திரு. மாதவிற்கு முத்தி அளித்தது

**அத்தியாயம் - 5** 47

1. ஸ்ரீ மகராஜ் மகாதேவர் ஆலயத்தில் யோக நிஷ்டையில் அமர்ந்தது - இடையர்கள் அவரை பிம்பால்காவிற்கு அழைத்துவந்தது
2. அகோலியில் பல ஆண்டுகளாக வறண்ட கிணற்றில் நீரூற்றை வரவழைத்த அற்புதம்

**அத்தியாயம் - 6** 59

1. ஸ்ரீ மகராஜ் தம்மைத் தாக்கிய தேனீக்களிடம் அன்புடன் உரையாடுதல் - திரு. பங்கட்லாலின் பக்தியை சோதித்தல்
2. கானகத்தில் வசித்த ஸ்ரீ நரசிங்க மகராஜ் அவர்களுடன் சந்திப்பும் உரையாடலும்
3. சந்திரபாகா நதிக்கரையில் திரு. விராஜபூஷணரை ஆசீர்வதித்தல்

**அத்தியாயம் - 7** 71

1. தம்மை அடித்த பாட்டீல் சகோதரர்களிடத்திலும் கருணை காட்டிய அற்புதம்
2. திரு. காண்டேராவிற்கு பல ஆண்டுகளுக்குப்பின் குழந்தை வரம் அளித்தது

**அத்தியாயம் - 8** 85

1. சிறைக்குச் செல்லவிருந்த திரு கண்டுபாட்டிலை காப்பாற்றிய அற்புதம்
2. தெலிங்க அந்தணர்களின் முன்னால் வேத பாராயணம் செய்து அவர்களின் தவறைச் சுட்டிக்காட்டியது
3. போலி சன்யாசி பிரம்மகிரிக்கு பகவத் கீதையின் உட்பொருளைப்புரிய வைத்து, அகம்பாவம் அழித்தது

**அத்தியாயம் - 9** 96

1. பொல்லாத குதிரையை அன்பால் அடக்கிய அற்புதம்
2. வாக்குத் தவறிய சந்யாசியிடம் அவ்வாக்கை நினைவூட்டி புகையிலை பெற்றுக்கொண்டது
3. ஸ்ரீ மகராஜ் பாலகிருஷ்ணாவின் இல்லத்திற்கு தஸநவமி தினத்தில் அவருடைய குருவான ஸ்ரீ சமர்த்த இராம-தாஸரின் ரூபத்தில் காட்சி அளித்த அற்புதம்

**அத்தியாயம் - 10** 106

1. ஸ்ரீ மகராஜ் பாலபுவாவை சோதித்து தன்னிலை உணரச் செய்தல்

2. தூய்மையான அன்பு கொண்ட கணேஷப்பா, அவரது மனைவி சந்த்ராபாயின் குடிசைக்குச் சென்று ஆசீர்வதித்த நிகழ்வு

3. சுக்காலாலின் பொல்லாத மாட்டை அன்பால் அடக்கியது

4. லக்ஷ்மணன் கூடேவின் அகம்பாவத்தை அழித்தது

**அத்தியாயம் - 11** 121

1. கர்மவினையால் நாய் கடித்த பாஸ்கரருக்கு முக்தி அளித்தல்

2. ஸ்ரீ மகராஜ் தம் சீடர்களுடன் புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்லுதல்

3. ஸ்ரீ மகராஜ் அவர்களின் கட்டளைக்குப் பணிந்த காக்கைக் கூட்டங்கள்

4. கிணற்றில் வெடித்த பாறைகளுக்கு நடுவில் இருந்து தன் பக்தன் கணுவை ஸ்ரீ மகராஜ் காப்பாற்றிய அற்புதம்

**அத்தியாயம் - 12** 133

1. பச்சுலால் அகர்வாலின் ஆடம்பர உபசரிப்பை ஏற்க மறுத்தது

2. தன் உண்மையான ஏழை சீடனான பிதாம்பருக்கு ஸ்ரீ மகராஜ் அளித்த கௌரவம்

3. இலைகள் உதிர்ந்த காலத்திலும், தன் பக்தனைக் காப்பாற்ற பட்டுப்போன மரத்தில் இலைகளைத் துளிர்க்க வைத்து காய்களை காய்க்கவைத்த அற்புதம்

4. தன் சீடர்களின் சொந்த இடத்தில் தங்க விருப்பமின்றி தனக்காக மடம் கட்ட பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கேட்டுபெறச் செய்த அற்புத நிகழ்வு

**அத்தியாயம் - 13** 145

1. ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு ஆலயம் கட்டுவதற்கான பணிகள் நடந்த நிகழ்வு

2. ஆலய கட்டுமானப் பணிகள் நிகழ்ந்த போது நடந்த அற்புதங்கள்

3. தொழு நோயாளி கங்காபாரதிக்கு ஸ்ரீ மகராஜ் அளித்த வித்தியாசமான சிகிச்சை, கங்கா பாரதியை நோயில் இருந்து முற்றிலும் குணமாக்கிய அற்புதம்





4. ஸ்ரீ மகராஜ் அவர்களின் உத்தரவு பெறாமல் ஏற்பாடு செய்த விருந்து வீணான நிகழ்ச்சி

5. புண்டலீக போகரேவின் ப்ளேக் வியாதியை தன் இரு விரல்களால் ஸ்பரிசித்து குணமாக்கிய அற்புதம்

**அத்தியாயம் - 14** 158

1. கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொள்ளவிருந்த பந்துதாத்யாவை காப்பாற்றி அவருக்கு வாழ்வளித்த அற்புதம்

2. ஸ்ரீ மகராஜ் அவர்களின் வார்த்தைகளை மதிக்காததால் புனித நர்மதா நதி தேவதை உடைந்த படகில் இருந்து சீடர்களை காப்பாற்றிய அற்புதம். புனித நர்மதை நதி மகராஜ் அவர்களை வணங்கிச் சென்ற அற்புதம்

3. திரு. சதாசிவா தமது குரு திரு. மாதவநாத் மகராஜ் அவர்களிடம் கண்டு மகிழ்ந்தது

**அத்தியாயம் - 15** 170

1. சுதந்திர போராட்ட வீரர் திரு. பால கங்காதர திலக்கும், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கும் இடையிலான நிகழ்வு ஸ்ரீ மகராஜ் அன்புடன் திலகரை ஆசீர்வதித்தது

2. வெளிநாட்டிற்கு செல்ல விரைந்த திரு. ஸ்ரீதர் கோவிந்த காலேவிற்கு நமது ‘தேசத்தின்’ யோக சாஸ்திரத்தின் மகத்துவத்தை போதித்தல்

**அத்தியாயம் - 16** 181

1. உன் உண்மை பக்தன் புன்டலீகனுக்கு கனவில் தருவ-தாகக் கூறிய பாதுகையை இன்னொரு பக்தர் சியாம சிங்கின் மூலம் அளித்த அற்புதம்

2. ஸ்ரீ மகராஜ் அவர்கள் தன் உண்மை பக்தனான பாகு கொண்டுவரும் உணவிற்காக மாலை வரை பட்டினி-யாகக் கிடந்து உணவு உண்ட நிகழ்ச்சி

3. தனது பக்தர் துகாராமை துளைத்த குண்டுகளை, தாமாகவே கீழே விழ வைத்த அற்புதம்

**அத்தியாயம் - 17** 192

1. பாஸ்கர், ஸ்ரீ மகராஜ் அவர்களை வற்புறுத்தியதால் ஏற்பட்ட குழப்பமும், நீதிமன்றத்தில் ஸ்ரீ மகராஜ் நீதிபதியை தனது புகைக்குழாயைப்பற்ற வைக்கச் செய்த அற்புதம்

2. தமது இஸ்லாமிய நண்பர் திரு. மேதாப்ஷாவிற்கு நல்வழியை காட்டியதுடன், அவர் மேற்கொண்டிருந்த மசூதி கட்டும் பணியினை ஸ்ரீ மகராஜ் தாமே ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சி

3. பானாமதி என்ற பிசாசை தன் பார்வையால் ஓடச் செய்த அற்புதம்

4. தமது சகோதரருக்கு நிகரான திரு. நரசிங்க ஸ்வாமியின் ஆசிரமத்தின் கிணற்றில் இருந்த புனித கோதாவரி, பாகீரதி நதிகளை நீருற்றாக வரவழைத்த அற்புதம்

**அத்தியாயம் - 18** 204

1. தன் தீவிர பக்தையான திரு. பாஜாபாயின் கற்பைக் காப்பாற்றி, அவள் வேண்டுகோளை ஏற்ற நிகழ்ச்சி

2. மருத்துவர் பாகு கேவர் தன்னை வியாதிகளிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ள முடியாத போது ஸ்ரீ மகராஜ் அவர்கள் காப்பாற்றிய அற்புதம்

3. தன் உண்மையான பக்தன் பாபுனாவிற்கு ஸ்ரீ மகராஜ் அவர்களை பண்டரிபுர பாண்டுரங்கனாக காட்சி அளித்தது

4. காலரா வியாதியில் இருந்து தன் பக்தனை காப்பாற்றிய அற்புதம்

5. மரணித்து பல மணி நேரம் ஆன ஒரு நாயை ஸ்ரீ மகராஜ் உயிர்ப்பித்து ஓடச் செய்த அற்புதம்

**அத்தியாயம் - 19** 219

1. காசிநாத் என்பவருக்கு, அவர் எதுவும் ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் கேட்காமலேயே பதவி உயர்வு வழங்கிய அற்புதம்

2. திருவாளர் பூட்டியின் தங்கச்சிறையில் ஸ்ரீ மகராஜ் இருந்ததும் ஹரிபாட்டிலுடன் ஷேக்காவ் திரும்பியதும்

3. மகான் திரு. வாசுதேவானந்த சரஸ்வதி நம் ஸ்ரீ மகராஜ் அவர்களை சந்திக்க வந்த நிகழ்வு

4. இறைவனை நாம் அடைய உதவும் மூவகையான மார்கங்கள் பற்றி (கர்ம மார்கம், பக்தி மார்கம் மற்றும் யோக மார்கம்) உபதேசம்

5. வேதவிற்பன்னரான திரு. ஆத்மாராமிற்கு வேத உபதேசம் செய்த காட்சி





6. தன் பக்தனான மாரோட்டியின் வயலின் பயிர்களை விலங்குகளிடமிருந்து காத்தருளியது

7. காவல் துறையைச் சேர்ந்த திரு. நாராயணன், ஸ்ரீ மகராஜ் அவர்களை அடித்ததால் அவரும் அவரது உறவினர்களும் மரணம் அடைந்தது

8. சுக வாழ்விற்காக தம்மை தேடி வந்த ஹரிக்கு உபதேசம்

9. திரு. ராமச்சந்திரா அவர்களுக்கு யோக சாஸ்திரத்தின் மேன்மையை உபதேசித்தது

10. ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு அளித்த வாக்கை காப்பாற்றாத திரு. துகாராம் அவர்களுக்கு பாடம் கற்றுக் கொடுத்தது

11. ஸ்ரீ மகராஜ் பண்டரிபுரத்தில் ஹரிபாட்டீலிடம், தம்முடைய சமாதி நிலையைக் குறித்து கூறியது

12. ரிஷி பஞ்சமி அன்று ஸ்ரீ மகராஜ் சமாதி அடைந்த காட்சி

**அத்தியாயம் - 20** 246

1. ஸ்ரீ மகராஜ் மகா சமாதி அடைந்த பின்னரும் திரு. கணபதி அவர்களுக்கு காட்சியளித்து உரையாடியது

2. மனம் உடைந்து போன திரு. லக்ஷ்மணர் அவர்களுக்கு போரிபந்தர் இரயில் நிலையத்தில் காட்சியளித்தது

3. தம்மை தரிசிக்க வந்த மாதவ் ஜோஷியை வெள்ள அபாயத்திலிருந்து காப்பாற்றிய அற்புதம்

4. வியாபாரத்தில் நஷ்டமடைந்த திரு. கணேஷ் சுபேதாரிடத்தில் ஸ்ரீ மகராஜ் ஒரு பிச்சைக்காரன் உருவில் சென்று உதவியது

5. திரு. ராஜாராம் கேவர் ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆலயத்திலிருந்து ப்ரஸாதம் உண்ணாமல் சென்றதால் வழி தடுமாறி திரும்ப ஆலயத்திற்கே வந்த நிகழ்ச்சி

6. திரு. ரத்தன்சாவின் புதல்வனை மரணத்திலிருந்து காப்பாற்றியது

7. திருமதி. சந்திரபாகாவின் பிரசவ நேரத்தில் எல்லா மருத்துவர்களும் கைவிட்ட நிலையில் அவர் உயிரைக் காப்பாற்றிய அற்புதம்

8. கொடிய வியாதியில் அகப்பட்ட திருமதி. ஜானகாபாயை தமது சமாதியில் சேவை செய்யச்செய்து அவருடைய வியாதியை போக்கியது

**அத்தியாயம் - 21** **261**

1. ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆலய கட்டுமான பணியில் ஏற்பட்ட விபத்திலிருந்து தொழிலாளரைக் காப்பாற்றிய அற்புதம்
2. பிசாசு பிடித்திருந்த ராஜபுத்ர பெண்மணியை ஆலயத்தின் ஒரு தூணை அவள் மேல் விழச்செய்து காப்பாற்றிய அற்புதம்
3. தனது பக்தன் திரு. ராமச்சந்திரா பாட்டீலின் கடனை தீர்த்து அவரை ஆலயத்தின் கண்காணிப்பாளராக நியமித்தது
4. திரு. ராமச்சந்திரா பாட்டீலிடம் அதிகாரத்தில் இருப்பவர்கள் நடந்து கொள்ளும் விதம் பற்றி உபதேசித்தது
5. ஸ்ரீ மகராஜ் அவர்கள் நிகழ்த்திய அனைத்து அற்புதங்களில் சாராம்சம்
6. ஸ்ரீ மகராஜ் அவர்களின் சமாதி வளாகத்தில் நடைபெற்ற யாகங்களும், வழிபாடுகளும்
7. யாகம் நடத்தும் வேளையில் திரு. பங்கட்லாலின் உயிரைக் காத்த நிகழ்ச்சி
8. பேரார் பகுதி மக்களின் நேர்மையற்ற செயல்களால் ஸ்ரீ மகராஜ் வருந்தி தமது சமாதியைச் சுற்றி 30 அடி ஆழத்தில் தண்ணீர் இருக்கச் செய்தது
9. ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் இத்திவ்ய சரித்திரத்தை உள்ளன்போடும், பக்தியோடும், படிப்பவர்க்கும், கேட்பவர்க்கும், விளையும் பலன்களைப்பற்றி திரு. தாஸ்கணு மகாராஜ் அவர்களின் குறிப்பு.

★ ஸ்ரீ கஜானன் மகராஜ் சமஸ்தானம் - சீரிய பணிகள் **279**

**- ஜெய் கஜானன் -**





ஓம் ஸ்ரீ கணேஷ்வராய நமஹ

## அத்தியாயம் - 1

ஜெய் கஜானன் மகராஜ்

விலை மதிப்பான வைரக்கற்களுக்கும் விலை மதிப்பற்ற கூழாங்கற்களுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒரு சிறந்த வியாபாரியால் மட்டுமே காண இயலும். ஆயிரம் வழிப்போக்கர்கள் அவ்வழியே வந்து போனாலும் ஒருவராலும் நிஜத்தை கண்டு உணர முடியாமல் போனபோது, அந்த அதிர்ஷ்டம் நமது பங்கட்லாலுக்கு மட்டுமே கிட்டியது அது அவருடைய நற்பேறு என்று தான் சொல்ல வேண்டும். திரு. பங்கட்லால் (Bankat Lal) சற்றே கூர்ந்து கவனித்து, நிதானமாக அந்த சாது புருஷரிடம் சென்று, ''ஐயா நல்ல சுவையான உணவை நாங்கள் தரத் தயாராக உள்ளோம்! அவ்வாறிருக்க மற்றவர்கள் உண்ட இலைகளில் மீதமிருக்கும் உணவை தாங்கள் உண்ணவேண்டிய அவசியமென்ன'' என்று ஆதரவோடும் கேட்டு ஆத்மார்த்தமாக உணவளித்தவர். இந்த அதிர்ஷ்டம் யாருக்கு கிடைக்கும்!

முழு முதற்கடவுளும், மூலாதார மூர்த்தியுமான விநாயகரே உம்மை துதிக்கின்றேன்! இணையில்லாத புகழையும், எல்லையில்லா வெற்றியையும் கொண்ட விநாயகருக்கு எனது சிரம் தாழ்ந்த நமஸ்காரங்கள்! உம்மை நினைத்து எந்த காரியத்தை துவங்கினாலும் அக்னியின் அருகில் இருக்கும் பஞ்சுப்பொதியானது எரிந்து பஸ்மமாவதைப் போன்று, எதிர் வரும் தடைகளை உடைத்து வெற்றியை தருபவரே! உம்மை வணங்கி உமது அனுக்ரஹத்தை பெற வேண்டுகிறேன்!

எந்த விதமான ஞானமும், கவிதை திறனும், சொல்லாற்றலும் இல்லாத எமக்கு உமது ஆசீர்வாதம் ஒன்றே எல்லா தகுதிகளையும் பெற்றுத்தரவல்ல பொக்கிஷமாகும்.

ஹே ஜகதாம்பா! எம்முடைய சுயகௌரவமும், நம்பிக்கையும் தளர்ந்து போகாமல் தாங்கி நிறுத்திய உம்மை வணங்குகின்றேன்!

கவிதைகளுக்கும், கவிஞர்களுக்கும், கருத்துக்களுக்கும் முன்னோடியாக இருக்கும் வாக்தேவதை வாணி சரஸ்வதி சாரதா தேவியை நமஸ்கரிக்கின்றேன்! படைப்புக்களுக்கெல்லாம் தந்தையான பிரம்ம தேவரே உம்மை வணங்குகின்றேன்! ஒன்றும் அறியாத சிறுகுழந்தையைப் போன்ற நான், புதிதாகப் பிறந்த இளம் ஆட்டுக்குட்டி, உயர்ந்த மலைச்சிகரத்தை ஏறித் தொடுவதும், பிறவியிலேயே ஊமையான ஒருவன் தலைசிறந்த சொற்பொழிவாளராக ஆவதும் உமது கருணையால் மட்டுமே நிகழும். ஆகையால் கருணையோடு இந்த சரித்திரம் எழுதுவதற்கு துணையாக இருக்க வேண்டுகிறேன்!

காத்து அருள்பவரும், இந்த பிரபஞ்சத்தை கட்டி ஆள்பவரும், எல்லையற்ற ஆற்றலையும் உடைய புராணபுருஷரான பண்டரிநாதனுக்கு என் நமஸ்காரங்கள்! இயல்புகளை அனைத்தும் தன்னகத்தே கொண்ட பாண்டுரங்கனை வணங்குகின்றேன்!

எவ்வாறு ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி, வானர வீரர்களை ஆசிர்வதித்து அருளினாரோ, எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பசுக்களை மேய்க்கும் ஸ்தலத்தையும், மேய்ப்பவர்களையும் ஆசிர்வதித்து புனிதமாக்கினாரோ அவ்வாறே எம்மையும் ஆசிர்வதித்து அருளவேண்டும்!

இறைவா! சாதுக்கள் கூறியதைப்போல் வெள்ளிக்காசுகளால் அனுக்கிரஹத்தை வாங்க முடியாது. ஆத்மார்த்தமான பக்தியினாலேயே அது சாத்தியமாகும். ஆதலால் உம்மை சரணடைகின்றேன்! இந்த புனிதமான சரித்திரம் எழுதுவதற்கு நீர் எம்முடன் துணையாக இருக்க வேண்டுகிறேன்!

ஹே ஸ்வாமி! பவநிவாரா! நீலகண்டா! கங்காதரா! ஓம்கார ரூபா! த்ரியம்பகேஷ்வரா! அருள் புரிவீர்! தங்களின் கருணை, இரும்புத் துண்டையும் தங்கமாக்கவல்லது, நான் ஒரு சிறிய இரும்புத் தகடு! என்னை செதுக்கி, இந்த மகோன்னதமான சரித்திரத்தை எழுதுவதற்கு துணைபுரிய வேண்டுகிறேன்!

ஹே ஜகன்மாதா! கோல்ஹாபூர் மகாலக்ஷ்மி தாயே இந்த செயலைச் செய்வதற்கு அதிர்ஷ்டத்தை அளித்து அருளுங்கள்! ஹே தேவி துல்ஜாபூர் (Thuljapur - Bhavani) பவானி மாதாவே! அருள் நிறைந்த கரத்தை என் மேல் வைத்து ஆசிர்வதியுங்கள் அன்னையே!



மும்மூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ தத்தாத்ரேயரே! இந்த உன்னத பணியைச் செய்ய கருணையோடு அருள் தருவீராக!

மகரிஷிகளான ஸ்ரீ சாண்டில்யரும், ஸ்ரீ வசிஷ்டர், ஸ்ரீ பராசரர், ஸ்ரீ கௌதமர், ஸ்ரீ ஆதி சங்கராச்சார்யா, சாது புருஷர்களான ஸ்ரீ ஞானேஷ்வர், ஸ்ரீ நிவ்ருத்தி, துகாராம், ராமதாஸ் ஸ்ரீ குரு வாமன் சாஸ்திரி அனைவருக்கும், எமது சத்குரு ஷீர்டி வாசரான ஸ்ரீ சமர்த்த சாய்பாபா அவர்களுக்கும் அனந்த கோடி நமஸ்காரத்துடன் மன்றாடிக்கேட்டுக் கொள்வது என்னவெனில், என்னுடைய சோர்வு, அயர்ச்சிகளை நீக்கி இப்பணியை செய்வதற்கு முழுமையாக ஆட்படுத்துமாறு வேண்டுகிறேன்! தம்முடைய உன்னதமான அன்பு, ஊமையையும் பேசவைக்கும்!, நான் ஒரு வெறும் எழுதுகோல்,! அவ்வளவே! என்னை ஒரு கருவியாக்கி அதிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளுக்கு உயிரூட்டி சக்தியளிக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்!

குருவின் பேரில் அளவில்லா அன்பும், பக்தியும் கொண்ட பக்தர்களே! இனியும் நாம் நம்முடைய முழு கவனத்தையும் ஷேக்காவ் கிராம ஞானியும், **ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரியும், ஆன ஸ்ரீ கஜானன் மகராஜ்** அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய எண்ணற்ற லீலைகளையும், மகிமைகளையும், அற்புதங்களையும் ஆனந்தமாக காண்பதற்கு, ஒரே சிந்தனையோடு ஒரு முகமாக நாமும் ஷேக்காவ் என்ற சிறிய ஆனால் விலை மதிக்க இயலாத மாணிக்கத்தை தன்னகத்தே கொண்ட அந்த கிராமத்திற்கு செல்வோமாக!

ஸ்ரீ சமர்த்த சத்குருவின் இந்த அற்புதங்களையும், லீலைகளையும் படிப்பவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் முக்தியை தரவல்லது.

இச்சரித்திரம் எல்லாவற்றையும் முன்னிறுத்தி, முழுவதுமாக புனிதத்தன்மையால் நிறைந்ததால் இவை வாழ்வின் சத்தியமான வழியில் நம்மை நடத்திச் செல்லவல்லது. இறைத்தன்மையுடைய சாதுக்களையும், ஞானிகளையும் வணங்கும் பக்தர்களுக்கு இறைவனே கடனாளியாகிறான்.

வாருங்கள்! இப்பொழுது **ஸ்ரீ கஜானன் மகராஜின்** புகழை ஆனந்தமாக பாடுவோம்! ஜம்புத்தீபகற்பம் தொடங்கி அழிவில்லாத இந்த பாரத கண்டத்திற்கு மட்டுமே எண்ணற்ற சாதுக்களும், மகான்களும், ரிஷிகளும், சித்தர்களும் வாழ்ந்தார்கள் என்ற பெருமை உண்டு. இச்சரித்திரம் படிப்பவர்க்கும், கேட்பவர்க்கும் பேரானந்தம் தர வல்லது.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ரிஷிகளான, ஸ்ரீ நாரதர், துருவர், உத்தவர், சுதாமர், சுபத்ரவர், மஹாபலி, அஞ்சனி குமாரர், காயாது குமாரர், தர்மராஜர் அனைவரின் பாதங்களையும் ஸ்பரிசிக்கும் நற்பேறு பெற்றது நம் பாரத நாடு, இவர்களோடு ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யார், ஞானி அதோக்சாஜ், மாத்வா, வல்லபர், ராமானுஜர், நர்ஸிமேத்தா, துளஸிதாஸர், கபீர், கமல், சூர்தாசர், கௌரங் மகாபிரபு அவர்களோடு நாமதேவ், நரஹரி, சாகு, கனோபாத்ரா, ஜனி, சோகா, சாவ்தா, கூர்மாதாஸ் அவர்களோடு மகா கவிஞரான நவநாத் பக்தீசர் பாடிய கோரக்கர், மச்சீந்த்ரா, ஜலந்தர் முதலியோரும், தன்னுடைய ஆழ்ந்த பக்தியால் தனக்கு அளிக்கப்பட்ட விஷத்தை ஸ்ரீ மகாவிஷ்ணுவையே ஏற்றுக் கொள்ளச் செய்த பக்த மீராபாய் மற்றும் ஏழ்மையான தாழ்ந்த குலத்தில் பிறந்தவருடைய கடனை அடைப்பதற்கு கடவுளே முன்னால் தோன்றி துயர் துடைத்த திரு. தாமாஜிபந்த், கவிஞர் மஹிபதி பாடிய பல்வேறு சாதுக்களான, முகுந்த்ராஜ், ஜனார்தன், போதாலா, நிபட்நிரஞ்சன் இவர்கள் எல்லோருடைய வரலாறும் "பக்தி விஜய்" மற்றும் "பக்தி மாலா" என்ற நூல்களின் மூலமாகவும் நாம் அறிந்து ஆனந்தம் கொள்ளமுடியும்.

ஞானிகளுடைய சரித்திரம் எழுதுவதற்கு ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் போன்ற உன்னதமான பக்தியும், ஆத்மார்த்தமான அன்பும், எல்லாம் வல்ல இறைவனின் கருணையும், அருளும் பெற்றவர்களால் மட்டுமே இயலும்.

இச்சரித்திரம் எழுதும் ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் தன்னை ஒரு மிகப்பெரிய அதிர்ஷ்டசாலியாக கருதுகிறார்.

ஒரு நாள் "அகோட்" (Akot) என்ற ஒரு கிராமத்தில் நான் அந்த மகாபுருஷரைக் கண்டேன். அவரைக் குறித்து எழுதுவதற்கு நீண்ட நாட்களுக்கு பிறகே பாக்யம் பெற்றேன். விதர்ப ராஜ்ஜியத்தில், காமகாவ் (Khamgaon) நகரில் உள்ள ஒரு சிறு பகுதியான ஷேக்காவ் (Shegaon) என்ற சிறிய வியாபார ஸ்தலத்தில் அந்த மகானை தரிசிக்கும் பேறு பெற்றேன்.

அவர்தான் **ஸ்ரீ கஜானன் மகராஜ்** என்ற ஞானி, சாட்சாத் ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரி, தாமரை மலர் ஒரு சிறிய குளத்தில் மலர்ந்தாலும் அதனுடைய மணமும், வசீகரமும் அந்த இடத்தை முழுவதுமாக ஆக்கிரமிப்பது போல, இந்த மகான் இவ்வுலகம் முழுவதுமாக போற்றப்படுகிறார். ஷேக்காவ் என்ற சிறிய பகுதி வைரச் சுரங்கத்தில் தலை சிறந்த வைரமாக ஸ்ரீ கஜானன் மகராஜ்



அவர்களை இவ்வுலகிற்கு தந்து இணையில்லாத புகழைப் பெற்றது. இத்தகைய மாபெரும் ஞானியின் வரலாற்றை, மிகச் சாதாரணமான நான் எங்கனம் எழுதப்போகிறேன்?

தலை கூர்ந்து நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜனின் பாதாரவிந்தங்களில் சரணடைந்து அவர்தம் புகழைப்பாடுவோம், அது இம்மை மறுமைக்கும் நமக்கு துணையாய் நின்று முக்தியளிக்கும். எங்கனம் மழை முகிலைக்கண்டு மயில்கள் ஆனந்தமாக தோகை விரித்து ஆடுகிறதோ அது போன்றே நாம் இவர்தம் அற்புதங்களை கண்டு ஆனந்தம் கொள்வது உறுதி.

இத்தகைய மகானைப் பெற ஷேக்காவ் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும்? எவ்வாறு ஷீர்டி வாழ் மக்கள் ஸ்ரீ சமர்த்த சாய் பாபாவின் அருளால் நற்பேறு பெற்றார்களோ அவ்வாறே ஷேக்காவ் வாசிகளும் அதிர்ஷ்டசாலிகள், ஏனெனில் நம்முடைய நல்ல செயல்கள் ஒன்றே இதுபோன்ற பெரிய சாதுக்களை நம்மிடையே வரவழைக்கின்றது.

ஒருமுறை திரு. ராமச்சந்த்ர பாட்டீல் பண்டரிபுரத்திற்கு வருகை தந்தபோது ஷேக்காவ் வாசியும், சாதுவும், ஞானியும், மகாபுருஷருமான ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் பணியை என்னிடம் பணித்தார்.

அடியேனுக்கும் அந்த ஆசை நீண்ட நாட்களாக இருந்து வந்தது. ஆனால் சாதுக்களின், மகாபுருஷர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது சாதாரண செயல் அன்று. ஸ்ரீ கஜானன் மகராஜ் எல்லா சாது புருஷர்களிலும் சிறந்தவர், அவர் எங்கிருந்து வந்தார் என்று ஒருவருமே அறிய இயலவில்லை. அவருடைய கடந்த காலமும், பிறப்பு பற்றிய எந்த விவரமும் எவராலும் இன்று வரை அறிய இயலவில்லை.

அவருடைய மதம், இனம், குலம், பூர்விக இடம், எதுவுமே யாருக்குமே இன்று வரை தெரியவில்லை, (SAGA) சாகா வருஷத்தில், 1,800-களில் ஷேக்காவ் கிராமத்தில் இளமையான ஒரு வாலிபனாகத் தோன்றினார் என்பது ஒன்றுதான் இதுவரை நமக்குத் தெரிந்த செய்தியாகும்.

ஒரு சிலர் அவர் சாஜன்கட் என்ற இடத்திலிருந்து (Sajjangad) வந்ததாக (சந்த் ராமதாஸ் அவர்கள் வாழ்ந்த இடம்) கூறுகின்றனர். சிலர் ஒருவேளை சந்த் ராமதாஸின் அடுத்த ஜென்மமாக நமது கஜானன் மகராஜ் அவதாரம் எடுத்திருக்கக்கூடும் என்றும்

கருதுகின்றனர். இதுவரை எவருமே ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் பூர்வீகம் பற்றி அறிந்தவர் இல்லை.

சாதுக்கள் கடந்து வந்த பாதை மிகவும் அசாத்தியமானது. மாபெரும் யோகியான ஸ்ரீ கோரக்நாத்நாதர் குப்பைத் தொட்டியில் இருந்து கண்டெடுக்கப்பட்டவர். ஸ்ரீ கனிஃபா யானையின் காதில் இருந்து வெளிப்பட்டார். நமது ஸ்ரீ கஜானன் மகராஜ் தனியாக ஒரு இளைஞனாக வெளிப்பட்டு ஒரு சாது புருஷராக எண்ணற்ற லீலைகளைப்புரிந்தார். இச்சரித்திரம் படித்து முடித்தபின் ஸ்ரீ கஜானன் மகராஜின் அதி உன்னதமான ஆற்றலையும் இன்றைய தலைமுறையிலும் அவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அற்புதங்களும் நமக்கு தெளிவாகப்புரியவரும்.

நாம் முன்னரே சொன்னது போல ஸ்ரீ கஜானன் மகராஜ், மாக என்று மராட்டியில் அழைக்கப்படும் **மாசி மாதத்தில்,** (MAGH) **ஏழாம்** (7th) **பிறையில் ஷேக்காவ்** என்ற பகுதியில் தோன்றினார்.

தேவிதாஸ் என்ற சிறந்த பக்தர் ஒருவர் தனது மகனின் உபநயன மங்கல விழாவிற்காக ஒரு விருந்திற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்தார். அவ்விழாவில் உணவு உண்டவர்கள் தங்கள் இலைகளை மீதமிருக்கும் உணவோடு சேர்த்து அவ்வீட்டிற்கு வெளியில் தெருவோரத்தில் எறிந்தனர்.

அவ்விடத்தில் தோன்றிய ஸ்ரீ கஜானன் மகராஜ் அந்த இலைகளில் மீதமிருக்கும் உணவை எடுத்து உண்டு கொண்டு இருந்தார். இன்றளவும் அளவற்ற அற்புதங்களைப்புரிந்து கொண்டிருக்கும் அந்த மகராஜ் ஒரு காய்ந்த சாக்குத் துணியை இடுப்பைச் சுற்றி கட்டி இருந்தார். ஒரு ஹுக்கா வைத்திருந்தார். வேறு எதுவுமே அவரிடம் இல்லை. ஆனால் அவர்தம் சிரசைச்சுற்றி ஒரு ஒளிவட்டம் (Aura) பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவரது கண்கள் ஒரு மகாபுருஷரின் கண்களாக ஜொலித்துக் கொண்டிருந்தது. ஒருவிதமான அதிர்வு அலைகள் அவரைச் சுற்றி நடனமாடிக் கொண்டிருந்தது. வெறும் வெற்று உடலோடு எதைப்பற்றியும் இலட்சியம் செய்யாது கிடைத்த எல்லா உணவு பதார்த்தங்களையும் ஒன்றாக கலந்து உண்டு கொண்டு இருந்தார். எல்லா இடங்களையும் தேடிதேடி மீதமிருக்கும் உணவை சுவைத்துக் கொண்டிருந்தார்.

உணவே தலைசிறந்த ஒன்றாகும் தைத்ரிய உபநிஷத்தில் இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் உணவிலிருந்து உயிரூட்டப்பட்டவை என்றும் உணவு உயிரை காக்கும்



மருந்தாகவும், இறுதியாக நம் சரீரம் ஆத்மாவிடமிருந்து தனிமைப்படும்போது அதுவே உணவாக பிற உயிர்களுக்கு சென்று சேர்வதாகவும், **''அன்னம் ப்ரம்மம்''** என்றும் சொல்லப்பட்டிருப்பதை நமது ஞானிகள் எத்தகைய எளிமையாக, அழகாக தங்களுடைய செயல்களால் விளக்கம் அளித்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அச்சமயம் திரு. பங்கட்லால் அகர்வால் அவர்களும் அவரது உற்ற நண்பர் திரு. தாமோதர்பந்த் குல்கர்ணியும் இணைந்து திரு. தேவிதாஸ் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற விழாவிற்கு வந்து கொண்டிருந்தனர். தற்செயலாக அவர்கள் வரும் வழியில் தெருவோரத்தில் விழுந்த இலைகளின் மீத உணவை உண்டு கொண்டிருந்த நமது ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களைக் காண நேர்ந்தது. நண்பர்கள் இருவரும் மிகுந்த அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தனர். ஒரு மகானைப்போன்ற தோற்றத்தில் இருந்த அவரைப்பற்றி தமக்குள் பேசிக் கொண்டனர். இவருக்கு பசித்தால் நம்மிடம் சொல்லி இருக்கலாமே! இதென்ன கொடுமை! திரு. தேவிதாஸ் ஒரு நல்ல மனிதர். அவர் தன்வீட்டிற்கு வந்த எந்த விருந்தினரையும் உணவு உபசரிக்காமல் அனுப்பமாட்டார்.

இவ்வாறு திரு. பங்கட்லால் தாமோதரிடம் கூறினார். இருப்பினும் நாம் இவ்விடம் நின்று அவரின் செய்கைகளை சிறிது நேரம் காண்போம் என்று நண்பர்கள் இருவரும் அந்த சாதுவை உற்றுநோக்கிய வண்ணம் நின்று கொண்டு இருந்தனர்.

உண்மையான சாது புருஷர்களின் நடவடிக்கை சில சமயம் விநோதமாக இருக்கும். அவரைக்காணும் ஒவ்வொரு விநாடியும், இவர் ஒரு பெரிய மகானாகத்தான் இருக்க வேண்டும், இவர் சத்தியத்தின் திறவு கோலாகத்தான் இருக்க வேண்டும் என்று திரு. பங்கட்லாலுக்கு உள்ளத்தில் மிக அழுத்தமான உணர்வு ஏற்பட்டது.

வைரக்கற்களுக்கும், கூழாங்கற்களுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர ஒரு கைதேர்ந்த வியாபாரியால் மட்டுமே சாத்தியமாகும். ஆயிரம் வழிப்போக்கர்கள் அவ்வழியே வந்து போனாலும் ஒருவர் கூட நிஜத்தை கண்டு உணர முடியாமல் போனபோது, அந்த அதிர்ஷ்டம் நம் பங்கட்லாலுக்கு மட்டுமே கிடைத்தது அவருடைய நற்பேறு என்றே நாம் சொல்ல வேண்டும். திரு. பங்கட்லால் கூர்ந்து கவனித்து விட்டு நிதானமாக அவரிடம் சென்று, ''ஐயா நல்ல சுவையான உணவை நாங்கள் தரத் தயாராக உள்ளோம்! அவ்வாறிருக்க மற்றவர்கள் உண்ட இலைகளில்

மீதமிருக்கும் உணவை தாங்கள் உண்ணவேண்டிய அவசியமென்ன'' என்று ஆதரவோடு கேட்டு ஆத்மார்த்தமாக உணவளித்தவர். இந்த அதிர்ஷ்டம் யாருக்கு கிடைக்கும்?

இவ்வாறு பங்கட்லால் கேட்டவுடன் ஸ்ரீ கஜானன் மகராஜ் ஒருமுறை அவரை ஏறிட்டு நோக்கினார். அந்தப் பார்வை மிகவும் வசீகரமாக இருந்தது. அவருடைய உடல் நல்ல திடகாத்திரமாக இருந்தது. அந்தப் பார்வை ஒன்றே திரு. பங்கட்லாலின் கூற்றை ஆமோதிப்பதைப் போல தோன்றியவுடன் அடுத்தகணம் திரு. பங்கட்லால் நண்பர் தேவிதாஸின் வீட்டிலிருந்து ஒரு தட்டு நிறைய உணவுடன் வந்து நம் மகராஜின் முன் வைத்தார்.

விதவிதமான பதார்த்தங்கள் நிறைந்த அந்த உணவை ஒன்றாகக் கலந்து ஒரே தடவையாக உண்டு முடித்தார் நம் மகராஜ். சுவையைப்பற்றிய அக்கறையே அவருக்கு இல்லை. எல்லாவற்றையும் கடந்த ஞானியர்க்கு உணவின் சுவை ஒரு பொருட்டே இல்லை என்பது உண்மை. நாடாளும் ஒரு மஹா ராஜாவிற்கு ஒருவன் சிறிய பரிசைக் கொண்டு வந்தால் அந்த ராஜா எவ்வாறு இருப்பாரோ அதே மாதிரி நம் சத்குருவும் உணவையோ, சுவையையோ பற்றி அக்கறை கொள்ளவில்லை.

திரு. பங்கட்லால் ஆச்சரியமாக நண்பர் தாமோதரைப் பார்த்தார். அந்த சாதுவை, மனநிலை சரியில்லாதவர் என்று எண்ணியது எத்தகைய தவறு என்று அவர்களுக்குப் புரிந்தது. அச்சமயம் சூரியனின் ஒளிக்கதிர்கள் அக்னியாய் சுட்டு எரிந்து கொண்டிருந்த வெயில் நேரம், பறவைகளும் உணவு தேடக்கூட கூட்டை விட்டு வெளியே வரவில்லை. ஆனால் ஆச்சர்யம் நம் மகராஜ் அமைதியாக மிகவும் அமைதியாக, இத்தகைய சுற்றுப்புற சூழலால் சிறிதளவும் பாதிக்கப்படாதவாறு நடுத்தெருவில் வெற்று உடலோடு ஆகாயத்தை நோக்கிய வண்ணம் அமர்ந்து கொண்டு இருந்தார். திரு. பங்கட்லால் சாதுவை நோக்கி, ''தாம் பருகுவதற்கு நீர் இல்லையே,'' நான் சென்று நீர் எடுத்துக் கொண்டு வரவா! என்று கேட்டதும் சாது புன்னகைத்தார், ''கொண்டுவா, என் தேவையை உணர்ந்து உபசரிக்கும் நீ அறிவில் சிறந்தவன்'' என்றார். திரு. பங்கட்லால் மிகுந்த உற்சாகத்தோடு தம் நண்பரிடம், நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இந்த சாதுவிற்கு நீர் கொண்டுவந்து கொடுப்பது மிகவும் புண்ணியமாகும் என்று சொல்லிக் கொண்டு இருவரும் அருகில் இருந்து ஒரு வீட்டில் நீர் எடுக்க மண் குவளையை கேட்பதற்காகச் சென்றனர்.



ஆனால் அதற்குள் நம் சாது புருஷர் அருகில் இருக்கும் பசுக்கள் நீர் குடிக்கும் ஒரு குட்டையில் இருந்து ஒரு கை நிறைய சேறு கலந்த நீரை அள்ளி பருகினார். நண்பர்கள் இருவரும் சாதுவின் இச்செயலைக் கண்டு திகைத்து நின்றனர். அதற்கு அந்த சாது, ''**தண்ணீர் பிரம்மம்**'' அது ஒருபோதும் கெடுவதில்லை. நாம் பார்க்கும் பார்வையில் தான் உள்ளது என்றார். நண்பர்கள் இருவரும் இத்தகைய சாதுவை நமஸ்கரித்தால் அதைவிட புண்ணியம் எதுவும் இல்லை என்று சாதுவின் பொற்பாதங்கில் விழுந்தனர். ஆனால் ஆச்சர்யம்! நமஸ்கரித்தவர்கள் எழுவதற்கு முன்னரே அந்தச் சாது மறைந்து விட்டார். கண்களுக்கு எட்டிய தூரம் வரை அவர்கள் தேடியும் அவரைக் காணவில்லை. கண்மூடிதிறக்கும் நேரத்தில் மறைந்து விட்ட சாது எங்கே சென்றார் என்று நாம் அடுத்த அத்தியாயத்தில் காணலாம். ஞானியர் வாழ்க்கையை படிப்பவர்க்கு அளவில்லாத ஆனந்தம் ஏற்படும் என்பதை திரு. தாஸ்கணு மகராஜ் நன்றாக அறிந்திருந்தார். சத்குருவை இரு கைகளாலும் தொழுது இப்பணியை செவ்வனே செய்து முடிக்க வேண்டினார். மற்றவை அடுத்த அத்தியாயத்தில் காண்போம்.

**- ஜெய் கஜானன் -**



# அத்தியாயம் - 2

ஜெய் கஜானன் மகராஜ்

புனிதமான இடங்களிலும், உத்தமமான நாட்களிலும், ஒன்றாகக் கூடி விழா கொண்டாடுவதைப்போல, பக்தர்கள் அனைவரும் ஒன்று கூடி திரு. பங்கட்லாலின் இல்லத்தில் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை ஆனந்தமாக கண்டு களித்த வண்ணம் இருந்தனர். நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் பண்டரிபுர விட்டலைப்போன்று, கம்பீரமாக அமர்ந்து கொண்டு இருந்தார்.

இப்பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட உயிர்களை எல்லாம் காத்தருளும், புனிதமான சந்த்ரபாகா நதிக்கரையில் வீற்றிருக்கும் ருக்மிணி சமேத ஸ்ரீ பாண்டுரங்கனுக்கு என் நமஸ்காரங்கள்! எவ்வாறு ஆன்மாவை இழந்த சரீரம் பயனற்றதோ அவ்வாறே உம்முடைய அருளில்லாமல் இவ்வுலகில் எந்தச் செயலுமே இயங்க முடியாது.

ஒரு ஏரியின் அழகு அதில் நிறைந்திருக்கும் தூய்மையான நீரினால்தான், அதைப்போன்று, சுவையான சாறு நிறைந்த ஒரு பழத்திற்கு பாதுகாவலனாக அதைச் சுற்றி இருக்கும் அப்பழத்தின் தோல் ஒன்றே அப்பழத்திற்கு அழகாகும். இதைப் போன்று எத்தகைய வறுமையான சூழ்நிலையிலும் நம்மை பாதுகாக்கும் கவசமாகத் திகழ்பவர் நம் சத்குரு ஒருவரே ஆவார். சென்ற அத்தியாயத்தில் நம் சத்குரு மாயமாக மறைந்ததைப்பற்றி கண்டோம். அவரை நினைத்து நம் பங்கட்லால் மிகுந்த துயர் அடைந்தார். மனச்சோர்வுற்றவராக அந்த சாதுவின் பிம்பத்தை தம் மனதில் ஏற்று அவரைக் காண ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தார். உணவு அருந்தாமல், நித்திரை கொள்ளாமல் தனது கடமைகளைக் கூட செய்ய இயலாமல் யாரிடமும் தன் மன அழுத்தத்தைக்கூட பகிர்ந்து கொள்ள முடியாமல், அந்த சாதுவை தேடி ஷேக்காவ் கிராமம் முழுவதும் அலைந்து திரிந்து கொண்டிருந்தார். அவர் தெய்வமாக மதிக்கும் அவருடைய தந்தையிடம் கூட தன் துயரத்தை பகிர்ந்து கொள்ளவில்லை. அவருடைய தேடல் தொடர்ந்து கொண்டே இருந்தது. நம் வாழ்க்கையில் சிறு பருவம் முதல் நரை விழுந்த பருவம் வரை நாம் இவ்வுலக வாழ்க்கைக்குரிய பொருட்களை மட்டுமே தேடித்தேடி எதைத்தேடினோம் என்று உணராமலேயே, இறுதியில் மடிகிறோம்.



ஆனால் இறுதிவரை இறைவனை தேடும் பணியில் ஆர்வமுள்ளவர்கள் மிகச்சிலரே ஆவார்கள்.

பங்கட்லாலின் தந்தை திரு. பவானிராம் சிறந்த பக்தர் மட்டுமல்ல, நல்ல மனிதரும் ஆவார். அவர் தன் மகனை அன்போடு நோக்கி, "என்ன நேர்ந்தது மகனே! உன்னை இந்த அளவிற்கு பாதித்த விஷயம் என்ன" என்று வினவினார். பங்கட்லால் எந்த விஷயத்தையும் தன் காதுகளில் ஏற்கவில்லை. அவர் மனம் முழுவதும் சாதுவை தரிசிக்கும் ஒரே குறிக்கோளாக இருந்தது. மீண்டும் அவர் சாதுவை தேடுவதில் ஆர்வம் காட்டினார். இறுதியாக தன் இல்லத்திற்கு அருகில் இருந்த நண்பரான ராமாஜிபந்த் தேஷ்முக் என்பவரிடம் தன்னுடைய தேடலைக் குறித்தும், சாதுவைக்குறித்தும் எடுத்துக்கூறி எவ்வாறாயினும் தன்னை அந்த சாதுவிடத்தில் அழைத்துச் செல்லுமாறு உதவி வேண்டினார். இவ்வாறாக சில நாட்கள் நகர்ந்தன.

ஒரு சமயம் தனது பஜனைப் பாடல்களாலும், சத்சங்கம் நடத்தியும் பாகவத உபன்யாசம் நடத்தும் புகழ்பெற்ற கீர்த்தனை பாடகர் திரு. கோவிந்தபுவா டக்லிகர், ஷேக்காவ் கிராமத்தின் சிவாலயத்திற்கு வந்திருந்தார். நாலா திசைகளிலும் வந்திருந்த பக்தர்கள் அவருடைய சொற்பொழிவை கேட்பதற்கு ஆவலாக இருந்தனர். நமது பங்கட்லாலும் அவரது தையல்கார நண்பரான பீதாம்பரருடன், கோவிந்த புவாவின் கீர்த்தனைகளை கேட்பதற்கு வந்திருந்தார். என்ன ஆச்சர்யம்! அங்கே ஆலயத்திற்கு அருகில் தேடி அலைந்து சாதுவைக் கண்டு கொண்டார். பங்கட்லாலுக்கு மனம் மகிழ்ச்சியில் கரை புரண்டு ஓடியது. வறுமையில் வாடியவருக்கு தங்கப்புதையல் கிடைத்ததைப் போன்று மனம் ஆனந்தமடைந்தது.

பங்கட்லால் சாதுவின் பாதங்களை ஸ்பரிசித்து, "ஸ்வாமி தங்களுக்கு ஏதாவது உண்பதற்கு வேண்டுமா" என்று கேட்டவுடன் சாதுவும், "ஆம், விரைவாகச் சென்று மாலி என்ற குலத்தினரிடம் இருந்து சில ரொட்டித் துண்டுகளை வாங்கிவா" என்றார். அவர் விரைந்து சென்று சாது கேட்டதைக் கொண்டு வந்தார். சாதுவும் உணவருந்திய பின், "எனக்கு தண்ணீர் வேண்டும்! இந்த மண்குவளையில் அருகில் இருக்கும் குட்டையில் இருந்து நீரைக் கொண்டு வா!" என்றார். அதற்கு பங்கட்லால், "வேண்டாம் ஸ்வாமி! அது மிகவும் அசுத்தமான குட்டை நீர், நான் தங்களுக்கு தண்ணீர் தொட்டியில் இருந்து புதிதாக நிரப்பப்பட்ட நீரை எடுத்து வருகிறேன்" என்றார். "அந்தக்குட்டை நீர் தான் வேண்டும்.

மண்குவளையை மட்டும் குட்டையில் நுழைத்து நீரை எடுத்துவா, கைகளால் எடுக்க வேண்டாம் புரிந்ததா!'' என்று கம்பீரமாகக் கூறினார்.

சாதுவின் இந்த உத்தரவைப் பெற்றுக் கொண்டு பங்கட்லாலின் நண்பரான பிதாம்பரர் மண்குவளையை எடுத்துக் கொண்டு குட்டைக்கு அருகில் வந்தார். ஆனால் குட்டையில் எந்த இடத்திலும் அந்த மண்குவளையை நுழைக்கக்கூட இயலவில்லை. மேலாகத் தேங்கி இருந்த அசுத்தமான நீரே அவர் கண்களுக்கு தென்பட்டது. என்ன செய்வது என்று அவருக்கு தெரியவில்லை. சரி, சாது சொல்வதை கேட்டு நடப்பதே சிறந்தது என்று எண்ணி மண்குவளையை குட்டையின் மேல் வைத்தார். அவ்வளவு தான்! அதன்பிறகு நடந்த அற்புதத்தை அவரால் நம்பவே முடியவில்லை! மண்குவளை தரையில் பட்டதும் தரையிலிருந்து ஒரு நீரூற்று உடனே புறப்பட்டு பாய்ந்து வந்து தானாகவே குவளைக்குள் புகுந்து கொண்டது. பளிங்கு போல் தூய்மையான நீர், இது என்ன அற்புதம்! பிதாம்பருக்கு தெளிவாக புரிந்து விட்டது. இச்செயல் சாதுவின் அற்புதம் தான், அவரால் மட்டுமே இந்த அதிசயத்தை நிகழ்த்த முடியும், மகிழ்வோடு நீரை சாதுவிடம் சமர்ப்பித்து நமஸ்கரித்தார்.

சாது, ''உணவும், நீரும் அளித்தீர்கள், உண்டபிறகு போட்டுக் கொள்ள பாக்கை உனது சட்டைப் பையில் இருந்து எடுத்துக் கொடு!'' என்றார். பங்கட்லால் மிகுந்த ஆச்சர்யத்துடன் தன் குர்தாவிலிருந்து பாக்கை எடுத்துக் கொடுத்தார், பாக்குடன் ஒரு நாணயமும் சேர்த்து சமர்ப்பித்தார். மகராஜ் அந்த நாணயத்தை திருப்பிக் கொடுத்து, ''நான் வியாபாரி அல்ல, உண்மையான பக்தியை மட்டுமே மதிப்பவன்! இங்கிருந்து போ! கோவிந்த புவாவின் கீர்த்தனைகளை கேள்!'' என்றார். இருவரும் அவர் உத்தரவைப் பெற்று உடனடியாக ஆலயத்திற்குள் சென்று விட்டனர்.

மகராஜ், வேப்பமரத்தடியில் அமர்ந்து கொண்டு கோவிந்த புவாவின் சொற்பொழிவை கவனித்துக் கொண்டிருந்தார். இடையில் பாகவதத்தில் கோவிந்த புவாவிற்கு மறதி ஏற்பட்டு அடுத்த வரிகளை தொடர முடியாமல் போக நமது மகராஜ் அந்த வரிகளோடு சேர்த்து முழுவதுமாக கம்பீரத்தோடு பாடி முடித்து விட்டார். கோவிந்த புவாவிற்கும், கீர்த்தனை கேட்க அமர்ந்திருந்த அனைவருக்கும் ஒரே ஆச்சர்யம்! இவர் சத்தியமாக பெரிய



ஞானியாகத் தான் இருக்க வேண்டும் என்று சொல்லி அனைவரும் ஆலயத்தின் வெளியே வந்து மகராஜை சூழ்ந்து கொண்டனர். கோவிந்தபுவா மகராஜின் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து கண்ணீர்மல்க, ''ஸ்வாமி! தாங்கள் தான் எங்களைக் காக்க வந்த சங்கர் பகவானின் அவதாரம்! தாங்கள் தயைகூர்ந்து இந்த ஆலயத்திற்குள் வந்து அமர வேண்டும் அது தான் தங்களின் வாசஸ்தலம்!'' என்று வேண்ட, அனைவரும் அதை ஆமோதித்து சத்குருவை நமஸ்கரித்து வேண்டினார்கள்.

உடனே நம் சத்குரு சீற்றத்துடன், ''முதலில் நீ சொன்ன சொல்லில் உறுதியாக நிற்பதற்கு பழகு! பகவான் எல்லாவிடத்தும் நீக்கமற நிறைந்திருப்பதாகச் சொல்லி விட்டு என்னை ஏன் ஆலயத்திற்குள் வருமாறு வற்புறுத்துகிறாய்! என்ன பிரசங்கம் செய்கிறாயோ அதன்படி தான் நடக்க வேண்டும். பாகவதத்தை வெறும் வயிற்றுப்பிழைப்பிற்காக பாடுவதை விட்டுவிட்டு, வாழ்க்கை முறையாகவும் ஏற்று நடக்க வேண்டும்! உடனே இங்கிருந்து செல்! நீ சொல்லத் தவறிய வரிகளை திருத்தமாகச் சொல்!'' என்றார். ஞானிகளுக்கே உரிய மகத்தான உயரிய பண்பு இதுவல்லவோ! எத்தகைய அற்புதத்தை இந்த சாது நிகழ்த்தி இருக்கிறார்.

கோவிந்த புவா மனம் நிறைய ஆனந்தத்துடன், ''ப்ரியமுள்ள ஷேக்காவ் வாசிகளே! நீங்கள் பூர்வ ஜென்மத்தில் மிகுந்த புண்ணியம் செய்தவர்கள்! இங்கே நம்மிடம் வந்திருக்கும் இந்த சாது, பண்டரிபுர விட்டோபா ஆவார்! இவரால் இந்த நாடே புகழ்பெறப் போகிறது!'' என்று ஆர்ப்பரித்து துதித்தார். பேரானந்தம் அடைந்த பங்கட்லால் தனது இல்லதிற்கு சென்று தந்தையிடம் நடந்தவை அனைத்தையும் கூறி சத்குருவை தனது இல்லத்திற்கு அழைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அவர் தந்தையும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார். பங்கட்லாலின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

ஆனால் இதற்கிடையில் அங்கே நடந்தது வேறாக இருந்தது. தன் தந்தையிடம் அனுமதி பெற்று சத்குருவை அழைக்க வந்த பங்கட்லால் அதிர்ச்சி அடைந்தார், மறுபடியும் சத்குரு மாயமானார். இம்முறையும் சாது எங்கு சென்றார் என்று எவருக்கும் தெரியவில்லை. மிகுந்த மனச்சோர்வுடன் வீடு திரும்பினார் பங்கட்லால். இச்சமயத்தில் நாம் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். ஞானிகள் மற்றும் மகாபுருஷர்களின்

ஒவ்வொரு செய்கைக்குப் பின்னாலும் ஏதேனும் ஒரு காரணம் நிச்சயம் உண்டு. நம்மைப்போன்று சாமான்ய மனிதர்கள் சிலசமயம் அதை புரிந்து கொள்ள தவறுகிறோம். நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் சூரிய அஸ்தமனத்தின் போது, இன்னொரு சூரியன் உதயமானதைப்போல பங்கட்லால் கடைத்தெருவில் நம் சாதுவை கண்டு கொண்டார். கடைத் தெருவில் சத்குருவைச் சுற்றி எல்லா பசுக்களும் சூழ்ந்து கொண்டு அன்பை பொழிந்து கொண்டிருந்தன. மனிதர்களுக்கு அவர் அருகில் வர அவை அனுமதி அளிக்கவில்லை.

என்ன அற்புதம்! ஆநிரைகளை மேய்க்கும் கிருஷ்ண பரமாத்மாவாக அவைகளுக்கு, சாது காட்சி அளித்திருக்க வேண்டும். கடைத் தெருவில் அனைத்து வியாபாரிகளும் மகிழ்வோடு விளக்கேற்றி சாதுவை வரவேற்றனர். இம்முறை பங்கட்லால் வந்த வாய்ப்பை மீண்டும் நழுவவிடாமல் சத்குருவை தம்முடன் உடனே அழைத்துக் கொண்டு வந்து விட்டார். பவானிராம், சாதுவை பார்த்த மாத்திரத்தில் மிகுந்த ஆனந்தம் கொண்டார். அவருக்கு தன் வீட்டு ஊஞ்சலை இருக்கையாக அளித்து மகிழ்ந்தார். பவானிராம் சாதுவிடம், ''ஸ்வாமி நீங்கள் பகவான் சங்கரனின் அவதாரமாகும், சூரிய அஸ்தமனத்தில் அடியேனின் இல்லத்திற்கு வந்துள்ளீர்கள், தங்களுக்கு உணவளிக்க விரும்புகிறோம், தயவுகூர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்!'' என்றார். ஆனால் அச்சமயத்தில் உணவு எதுவும் தயாராக இருக்கவில்லை. பவானிராம் பழங்களையும், பாதாம் மற்றும் பேரீச்சம் பழங்களையும் அன்போடு சமர்ப்பித்து, சாதுவை ஏற்றுக்கொள்ள வேண்டினார். தூய்மையான அன்புடனும் பக்தியுடனும் சமர்ப்பிக்கப்படும் இலை, காய், மலர், பழம், நீர் எதுவாகிலும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் ஏற்றுக்கொள்ளப்படுவதைப்போல் நம் சத்குரு அவைகளை ஏற்றுக் கொண்டார்.

அன்று இரவு பவானிராமின் இல்லத்தில் ஸ்வாமி தங்கினார். சூரியன் உதயமாகும் வேளையில் பவானிராம் சத்குருவை அபிஷேகம் செய்தவதற்காக நீர் மற்றும் வாசனை திரவியங்களுக்கும் ஏற்பாடு செய்தார். அவருக்கு ஒரு அழகான மஞ்சள் பட்டுத்துணியை சுற்றி, மலர்களால் அவர் இருக்கையை அலங்கரித்தார். அனைவரும் மலர் மாலைகளை மகராஜ் அவர்களுக்கு அணிவித்தனர். சந்தனக்குழம்பால் குருவின் பாதங்களை அபிஷேகம் செய்தனர். பழங்களோடு அன்போடு காலை உணவாக சமர்ப்பித்தனர்.



பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகையில் அமர்ந்திருப்பதைப் போல ஸ்வாமி ஸ்ரீ கஜானன் மகராஜ் வீற்றிருந்தார். அன்று சோமவாரம், பகவான் சங்கரர் தினம். நம் சத்குருவை காணவந்திருந்த அனைவரும் அவர் விரும்பியதை அளித்து அவர் விருப்பத்தை நிறைவேற்றினர். திரு. இச்சாராம், மட்டும் இதற்கு விதிவிலக்கு. இச்சாராம், பங்கட்லாலின் சகோதரியின் மகனாவார். அவர் சூரிய அஸ்தமானம் வரை கடுமையாக உபவாசம் இருந்து குளித்து விட்டு மகாதேவரும், ஸ்ரீ சிவசங்கரின் அவதாரமும் ஆன நமது சத்குருவிடனிடத்தில் வந்தார்.

இச்சாராம் குருவை நமஸ்கரித்து, ''ஸ்வாமி! உபவாச தினம், ஆகையால் தாங்கள் உணவு உண்ட பிறகே நான் உண்ணமுடியும்! தயவுசெய்து இந்த உணவை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறி ஒரு தட்டு நிறைய சாதமும், காய்கறிகளும், சுவையான இனிப்பு பதார்த்தங்களும் கொண்டு வந்து கொடுத்தார். அந்த உணவு நான்கு பேர்களுக்கு மேல் தாராளமாகச் சாப்பிடக்கூடிய அளவில் மிக அதிகமாகவே இருந்தது. அடியவர்களின் அவாவினை பூர்த்தி செய்வதற்காக ஞானிகள் எத்தகைய துன்பத்தையும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது நமக்குத் தெரிந்த ஒன்று. நம் சத்குரு சிரித்துக் கொண்டே தமக்குத் தாமே பேசிக் கொண்டார், ''ஹே கணபையா! நீ நன்றாக சாப்பிடக்கூடிய இளைஞனா! சாப்பிடுவதில் நீ பேராசை கொண்டவனா! உன்னால் இப்பொழுது எவ்வளவு தான் உணவு உட்கொள்ள முடியும். முயற்சி செய்து இந்த உணவு முழுவதையும் விழுங்கு'' என்று தமக்குத்தாமே சொல்லி கொண்டார். அனைவரும் ஆச்சரியத்தோடு இந்தக் காட்சியை காண்பதற்கு தயாராக இருந்தனர். இதற்கு முன்னால் அடியவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட உணவு அனைத்தையும் உண்டபிறகு, தற்பொழுது பங்கட்லாலின் சகோதரன் இச்சாராம், நான்கு பேர்க்கு மேல் சாப்பிடக்கூடிய உணவினை சமர்ப்பித்ததும் நம் சத்குரு ஒரு பருக்கை, ஒரு துளி உப்பைக்கூட விட்டு வைக்காமல் அனைத்தையும் விழுங்கினார்.

இச்சாராம் தன் விருப்பம் நிறைவேறியது குறித்து நிம்மதி அடைந்தார். இச்சாராமின் விருப்பம் நிறைவேறியதும், நம் சத்குரு வயிற்றுக்குள் சென்ற அனைத்து உணவையும் வாயில் எடுத்து விட்டார். நினைத்த போதெல்லாம் உணவு உண்பதற்கும், வேண்டாம் என்ற போதும் உண்ட உணவை வாயில் எடுப்பதற்கும் ஞானிகளால் மட்டுமே சாத்தியமான ஒன்று. இதைத்தான் பேராசையை வென்று காட்டிய வழியாக பெரியோர்கள்

கருதுகிறார்கள். (Act of winning overgreed) இதேபோல் ஒருமுறை சாது சமர்த்த ராமதாஸ் அவர்களாலும் நடத்திக் காட்டப்பட்டது. மற்றவர்கள் நலனுக்காக ஞானிகளும், சாது புருஷர்களும் கடினமான சோதனைகளை கூட தாங்கி, பிறரின் கர்ம வினைகளை பொசுக்கி, நற்பேறு அளிக்க வல்லவர்கள். சில சமயம், இவர் போன்ற சத்குரு வாழ்ந்த காலத்தில் நாம் இல்லையே என்று மனம் ஏங்குகின்றது. அவர் இன்னமும் நம்முடன் கூட இருக்கிறார். நம் உள்ளத்தில் வீற்றிருக்கிறார். நாம் எத்தகைய சோதனைகளை சந்திக்க நேர்ந்தாலும் அதை அவர் உடைத்து நமக்கு விடுதலை அளிப்பதை அவர்மீது நம்பிக்கை கொண்டவர்கள் நிச்சயம் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். அடியவர்கள், அவர் வாயில் எடுத்த இடத்தை சுத்தம் செய்து, அவருக்கு ஸ்னானம் செய்து ஆசனத்தில் அமர வைத்தவுடன் அவர் கணபதி நாமஸ்மரண் செய்யத் தொடங்கினார். அனைவரும் அவரைத் தொடர்ந்து **'கண் கண் கணாத் போதே போல்'** என்று பாடத் தொடங்கினர்.

நம் சத்குருவின் பெயர் என்னவென்று முன்னர் ஒருவருக்கும் தெரியாது. அவரும் யாரிடத்தும் இது குறித்து சொன்னது இல்லை. **''அனைத்தும் பிரம்மம், அனைவரும் பிரம்மம்''** என்பதே அவர் கொள்கை, பெயரைப்பற்றி அவருக்கு எந்த அக்கறையும் இருந்ததில்லை. அவருடைய கணபதி நாமஸ்மரண் தொடர்ந்து நாள் முழுவதும், எப்பொழுதும் எல்லோருடைய காதுகளிலும் ஒலித்துக் கொண்டே இருந்ததால் எல்லோரும் அவரை அன்புடன் **''கஜானன் மகராஜ்''** என்ற பெயரில் அழைக்கத் தொடங்கினர். காலப்போக்கில் அதுவே அவர் பெயராக ஆகி விட்டது.

பல தேசங்களிலிருந்தும் வந்த பக்தர்கள் அனைவரும் பங்கட்லாலின் இல்லத்தில் சத்குருவின் கடைக்கண் பார்வைக்காக குழுமியிருந்தனர். சுப தினங்களிலும், இறைவழிபாட்டு ஆராதனை தினங்களிலும் மக்கள் கூடுவதைப்போல் மக்கள் கூட்டம் சத்குருவை காண்பதற்கு அலைமோதியது. பண்டரிபுர விட்டோபாவைப் போல இவை அனைத்தும் அறிந்தவராய் கம்பீரமாக வீற்றிருந்தார் நம் சத்குரு, சூரிய தேவன் தன் ஒளியை பாரபட்சமாக சிலருக்கு மட்டும் அளிப்பதில்லை. அதுபோல் நம் மகராஜ் வந்திருந்த அனைவரையும் அன்போடு அவர்களின் நலம் விசாரித்து உதவிக் கொண்டிருந்தார்.



அந்த இடத்தில் ஜாதி, இனம், குலம், வறுமை, செழுமை என்ற வித்தியாசம் எதுவுமே இல்லை. வருகை தந்த அனைவருக்கும் உணவும், தங்க இடமும் அளித்தார், இது அவருக்கு மட்டுமே சாத்தியமாகும்! அவ்வாறே அவரைக்குறித்து எழுதும் பணியையும் நான் செவ்வனே செய்வதற்கு எனக்கு துணையாக இருந்தார். அவருடைய பழக்கவழக்கங்கள் சாதாரணமானது அல்ல. சில நேரம் அன்பைப் பொழிவார். சிலநேரம் சீற்றமும் மற்றும் சில நேரங்களில் அமைதியாகவும் கழித்தார். அவர் எது செய்தாலும் அது அடியவர்களின் மனநிறைவுக்காகவும், நன்மைக்காகவும் செய்யப்பட்டவை. அவ்வாறே அவர் ஹுக்கா பிடித்ததும் அடியவர்கள் விரும்பி சமர்ப்பித்ததால், அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றவே அச்செயலை செய்தார். அவர் எந்த பழக்கத்திற்கும் அடிமையாகவில்லை. கால்கள் சென்ற இடம் சென்றார், உணவும், நீரும் அளித்தால் உண்பார். தன்னை விரோதியாக எண்ணியவனைக்கூட கருணையோடு நோக்கினார். அடுத்த அத்தியாயத்தில் ஸ்ரீ கஜானன் மகராஜின் அற்புதமான லீலைகளைக் காண்போம்.

**- ஜெய் கஜானன் -**



## அத்தியாயம் - 3

ஜெய் கஜானன் மகராஜ்

இப்பிரபஞ்சத்தை படைத்தவரும், உயிர்களிடத்தும் சமுத்திர அலைகளைப்போன்ற அன்பைப் பொழிபவரும், துயரத்தில் மூழ்கி இருப்பவர்க்கு விடுதலை அளிப்பவரும், யாசித்ததை எல்லாம் அளிக்க வல்ல கற்பக வ்ருக்ஷம் போன்றும் என்னிடத்தில் அன்பாய் இருந்து என்னை இந்த பணியை செய்ய துணைபுரிவாய்! தேன் கூட்டைச் சுற்றி தேனீக்கள் அமர்வதற்கு யாரிடமும் அழைப்பிதழ் பெறத் தேவையில்லை. அது போன்று தூர தேசங்களில் இருந்து பல்வேறு வகையான மக்கள் திரண்டு வந்து சத்குருவின் தரிசனத்திற்காக தவம் கிடந்தார்கள். ஒரு இனிமையான காலைப் பொழுதில் நம் சத்குரு மிகுந்த உற்சாகத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஆகாயத்தில் இளஞ்சிவப்பு நிறத்தில் இடப்பட்ட அழகான கோலங்கள் காணப்பட்டது. காற்றின் ஒலி, இனிமையான பறவைகளின் ஓசையோடு சேர்ந்து இசைப்பது போல கேட்டது. வயதில் முதியவர்கள் தங்கள் படுக்கைகளில் அமர்ந்து கொண்டு இறைவனின் நாமத்தை பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். சூரியதேவன் இருளை கிழித்துக் கொண்டு வெளிப்பட, அந்த வீட்டிலிருக்கும் பெண்மணி பசுமாட்டுத் தொழுவத்தை சுத்தம் செய்ய துவங்கினாள். கன்றுக்குட்டிகள், தாய்ப்பசுவைத் தேடி ஓடிவந்து பால் அருந்தின. இந்த காலை நேரம் மிகவும் உற்சாகமான, மனதிற்கு மகிழ்ச்சி, அளிக்கும் தருணமாகும். வழக்கமாக நம் சத்குருவை தரிசிக்கும் கூட்டத்திலிருந்து ஒரு வித்தியாசமான துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அந்த மனிதர் பார்ப்பதற்கு மனநிலை சரியில்லாதவர் போல் காணப்பட்டார், அவரது ஆடைகள் கிழிந்திருந்தது, ஒரு பிச்சைக்காரரைப்போல் தென்பட்டார், அவர் சிம்மத்தின் தோலை இடையில் சுற்றி இருந்தார், ஒரு கைக்குட்டையை தலையைச்சுற்றி கட்டி இருந்தார், கையில் ஒரு சிறுபையில் சில பொருட்களோடு நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்காக காத்துக் கொண்டிருந்தார். அங்கிருந்த ஒருவருக்கும் அவருடைய நடை, உடை, பாவனைகள் மேல் சிறிதளவும் விருப்பம் இல்லை. சத்குருவைச் சுற்றி வசதியான செல்வந்தர்கள் சூழ்ந்து கொண்டு இருந்தார்கள்.



அந்த பக்கிரி காசியில் இருந்து நம் சத்குருவின் புகழைக் கேள்வியுற்று அவரிடம் ஆசி பெறுவதற்காகவும், மற்றும் அவருக்கு சமர்ப்பிப்பதற்காக ஹுக்கா முதலிய புகையிலைப் பொருட்களையும் கொண்டு வந்திருந்தார். அங்கு சுற்றி இருந்தவர்களுக்கு இது பற்றி முன்னரே தெரியாது. ஒரு வேளை தெரிந்திருந்தால் அவர்கள் அந்த பக்கிரியை மகராஜின் தரிசனத்திற்காக, உள்ளே வருவதற்கு அனுமதித்து இருக்க மாட்டார்கள். ஆனால் நம் சத்குரு அனைத்தையும் அறிந்தவர். அவர் அந்தப்பக்கிரியை உள்ளே அழைத்து வரச் சொன்னார். சத்குருவிற்கு நிகழ்காலம் மட்டுமல்ல, இறந்த காலமும் எதிர்காலமும் துல்லியமாகத் தெரியும். அந்த பக்கிரி, சத்குரு நிச்சயமாக தன் சமர்ப்பணத்தை ஏற்றுக் கொள்வார் என்று முழு நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. சுற்றி இருப்பவர்கள் என்ன சொல்வார்களோ என்று நினைத்து அமைதியாக இருந்தார். சத்குரு அந்தப் பக்கிரியிடம், "நீ எனக்காக கொண்டு வந்திருக்கும் பொருளை வெளியில் எடு! அதற்காக நான் மூன்று மாதங்களாக காத்துக் கொண்டு இருக்கிறேன்!" என்று ஆணையிட்டதும், மகிழ்ச்சியில் பக்கிரி அவரை மீண்டும் மீண்டும் நமஸ்கரித்து கண்ணீர் சிந்தினார்.

நம் சத்குரு, அவரிடம் "ஏன் தயங்குகிறாய்! நேர்மையாக யோசிக்கத் தவறுகிறாய்! எனக்காக கொண்டு வந்திருக்கும் பொருள் வழக்கத்திற்கு மாறான ஒன்று என்று ஏன் சிந்திக்கவில்லை!" என்றார். பக்கிரி தலைகுனிந்து, "ஸ்வாமி என்னிடம் இருப்பது இது ஒன்றுதான், இதைத்தான் நான் தங்களுக்கு சமர்ப்பணம் செய்ய வந்தேன். கடவுளும், குருவும் சமர்ப்பணத்தை நிராகரிப்பதில்லை, தயவுகூர்ந்து, இதை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்

பக்கிரி சத்குருவிடம் தொடர்ந்து, "ஸ்வாமி நீங்கள் பகவான் சிவசங்கரரின் அவதாரம் ஆவீர்கள்! தாயார் அஞ்சனியின் விருப்பத்திற்கு இணங்க அவருக்கு மைந்தனாக வந்து உதித்தீர்கள்! தாங்கள் எல்லோருடைய விருப்பத்தையும் நிறைவேற்றப் பிறந்தவர்" என்று சொன்னதும் சத்குரு ஹுக்காவை வாயில் வைத்து அவரை புகையிலைப் பொருட்களை போடச் சொன்னார். அந்தப்பக்கிரியும் ஆனந்தமாக அவர் கட்டளையை நிறைவேற்றினார். இதுவே முதன்முதலாக நமது சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் ஹுக்கா புகைத்த நிகழ்ச்சியாகும். ஆனால், அவர் அதற்கு ஒருபோதும் அடிமையானதில்லை. எவ்வாறு தாமரை இலை மேல்நீர் ஒட்டாமல் இருக்குமோ அதுபோல நம் சத்குருவும் எதிலும் தம்மை ஈடுபடுத்தாமல் இருந்தார். அந்தப்பக்கிரி சத்குருவிடம் விடை பெற்றுக்கொண்டு இராமேஸ்வரத்திற்கு யாத்திரை சென்று விட்டார்.

சில சமயங்களில் சத்குரு வேதங்களை அட்சரசுத்தமாக பாடினார். சில சமயங்களில் மௌன குருவாக இருந்தார். அதிசயமாக சில சமயங்களில் சாஸ்திரிய சங்கீதத்தை ஆலாபனை செய்வார். ஆனால் எப்பொழுதும் அவருடைய நாமஸ்மரணை ''கண் கண் கணாத்போதே என்று'' கணபதியை துதித்துப் பாடிக் கொண்டே இருப்பார். சில நேரங்களில் எங்கேயாவது கால் போனபோக்கில் நடந்து கொண்டிருப்பார். சில நேரங்களில் ஏதோ ஒரு மரத்தடியில் படுத்து நீண்ட நேரம் உறங்கிக் கொண்டே இருப்பார். ஷேக்காவ் கிராமத்தின் எல்லாருடைய வீட்டுக் கதவுகளையும் உரிமையாகத் திறந்து உள்ளே செல்லக்கூடிய உரிமை அவருக்கு மட்டுமே உண்டு.

ஜனாராவ் தேஷ்முக் ஒரு வசதியான மனிதர், அவருடைய ஸ்வாசம் போராடிக் கொண்டிருந்தபோது, வைத்தியம் செய்த அனைத்து மருத்துவர்களும் இதற்குமேல், அவர் உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை என்று கைவிட்டனர். அவரது உறவினர்கள் எல்லோருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு ஒன்றாகக் கூடி விட்டனர். நிறைய பிரார்த்தனைகள், வழிபாடுகள் எல்லாம் செய்து தெய்வத்திடம் முறையிட்டனர். அவை எதுவுமே பலனளிக்கவில்லை. ஜனாராவ் தேஷ்முக்கின் உடல் நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டு போனது. இறுதியாக அவர் உறவினர் ஒருவர், நம் பங்கட்லாலிடம் வந்து ஜனாராவ் தேஷ்முக் உடல் நலம் குறித்து எடுத்துச் சொல்லி, ''நம் சத்குருவின் பாதங்களில் அபிஷேகம் செய்யப்பட்ட நீர் தமக்கு வேண்டும்'' என்று கேட்டார்.

பங்கட்லால் தன் தந்தையின் சம்மதத்துடன் சத்குருவின் உத்தரவைப் பெற்றுக் கொண்டு ஒரு குவளை அபிஷேக நீரை அளித்தார். அதில் ஒரு துளி ஜனாராவ் தேஷ்முக் பருகியவுடன் அவர் நினைவு தெளிந்து எழுந்து உட்கார்ந்தார். என்ன ஆச்சரியம்! அற்புதம் என்றால் இதுவல்லவோ! மருத்துவர்கள் பிழைக்கவே வாய்ப்பில்லை என்று சொன்னவரை ஒரு துளி நீரைப்பருக வைத்து எழுந்து உட்காரச் செய்த பெருமை நம் சத்குருவையே சாரும் ஜனாராவின் உறவினர்கள் இந்த அற்புதத்தைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். தொடர்ந்து ஏழு நாட்கள் அந்த நீரைப் பருகியதால் இதுவரை மருந்துகளையே உணவாக உண்டு கொண்டிருந்த ஜனாராவ் தேஷ்முக் எல்லா மருந்துகளையும் விட்டுவிட்டார். சத்குருவின் பாதம் கழுவிய நீரின் சக்தி தான் எத்தகையது! உடல்நிலை தேறி ஜனாராவ் தேஷ்முக் தானே எழுந்து நடந்து சென்று பவானிராம் வீட்டில் அமர்ந்திருந்த, ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரியும், த்ரிகால ஞானியுமான சத்குருவைக் கண்டு, மனம் நெகிழ நமஸ்கரித்து, அவருடைய அனுக்கிரஹம் பெற்றார்.



சாதுபுருஷர்களும், ஞானிகளும் கடவுளின் அவதாரங்கள். இத்தகைய நிகழ்வுகளால் குருவானவர் இயற்கையின் நியதிக்கு எதிரியானவர் என்று நாம் கருதக்கூடாது. ஒருபோதும் ஞானிகளும், குருவும் இயற்கையின் விதிகளுக்கு புறம்பான செயலில் ஈடுபடமாட்டார்கள். சத்குரு அழிவை தடுத்து மரணத்திலிருந்து நம்மை காப்பாற்றக் கூடியவர். இந்த ஜென்மத்தில் மட்டுமட்டுமல்ல, ஜென்ம ஜென்மாந்திர கணக்குகளையும் தீர்ப்பவர்.

சாது ஸ்ரீ த்யானேஷ்வர் ஒருமுறை இதைப்போன்று ஸ்ரீ சச்சிதானந்தருக்கு மரணம் ஏற்படும் தருவாயில் அவரைக் காப்பாற்றினார். அந்த மரணம் நெய்வாசே என்ற இடத்தில் அவருக்கு நேரவிருந்த ஒரு விபத்தால் நடக்கவிருந்தது. ஆனால் அந்த நேரத்தில் அவர் அந்த இடத்திலிருந்து மற்றொரு இடமான ஆலந்திக்கு செல்ல வேண்டியவர்.

மரணத்தைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால் அது மூன்று ரூபங்களைக் கொண்டது. இயற்கை மரணம், தமக்குத்தாமே விதித்துக் கொண்ட ஆத்மஹத்யாய மரணம் (தற்கொலை), விபத்தினால் ஏற்படும் மரணம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இயற்கை மரணத்தை ஒருவருமே தடுக்க இயலாது என்பது தான் சத்தியம். மற்ற இரண்டு மரணங்களும் தவிர்க்கப்பட்டு காப்பாற்றப்படலாம். அதற்கு தூய்மையான மனதும், குருவின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையும் இருப்பது அவசியம். இது முதல் நிலை.

இயற்கைக்கு மாறான மரணங்கள், விபத்து தற்கொலை போன்றவை எல்லாம் வல்ல இறைவனின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உண்மையாகவும், தூய்மையான பக்தியுடனும், நம்பிக்கையுடனும், சாதுக்களையும், தேவதைகளையும் சத்குருவையும் பிரார்த்திப்பவர்களுக்கு தக்க சமயத்தில், அழிவை தவிர்த்து நாம் நம்மைக் காப்பாற்றுவதை கண்கூடாக காணமுடியும். கர்மாவை மாற்றவும், குறைக்கவும், உடைக்கவும், ஒத்தி வைக்கவும், சத்குருவால் மட்டுமே இயலும். இங்குதான் குருவின் அவசியம் பற்றி நமக்கு தெளிவாகப் புரிகின்றது. இயற்கை மரணம் கூட நாம் ஒருவாறாக, மருத்துவரின் உதவியால் யூகித்து விட முடியும். ஆனால் இயற்கைக்கு புறம்பான கோர மரணங்களைத் தவிர்க்க நமக்கு சத்குருவின் மேல் ஆழமான நம்பிக்கை ஒன்றே துணைபுரிகிறது. இது இரண்டாம் நிலை.

மூன்றாவது நிலை நாம் தேர்ந்தெடுக்கும் குரு, நாம் நம்பிக்கை வைத்து போற்றும் குருவானவர் போலியாக இருக்கக்கூடாது. வெறும் காவி வஸ்திரங்களால் உண்மையான சாதுக்களை உருவாக்க முடியாது. குருவானவர் **"ஷட்ரிபு"** என்று சொல்லக்கூடிய ஆறு பாவங்களில் இருந்தும் விடுபட்டவராகவும் இருக்கவேண்டும். அவையாவன: 1. காமம் (Lust), 2. கோபம்(Anger), 3. பேராசை (Avarice), 4. சலனம் (Temptation), 5. தற்பெருமை (Ego), 6. பொறாமை (Jealous) என்ற இந்த ஆறு பாவங்களிலிருந்து விடுபட்டவரே குருவாகும் தகுதியைப் பெற்றவர்கள். இந்த ஆறு குணங்களில் இருந்த விடுபட்டவரையே நாம் குருவாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தகைய குருவை விட வேறு எவரையும் சரணடைய வேண்டியதில்லை.

குருவின் கருணையால் உயிர் பெற்ற தேஷ்முக் பங்கட்லாலின் இல்லத்தில் சத்குருவின் முன்னிலையில் நூற்றுக் கணக்கான கிராம வாசிகளுக்கு உணவளித்தார். இதற்குள் தேஷ்முக், சத்குருவின் அருளால் உயிர் பெற்ற நிகழ்வு எல்லா திசைளிலும் பரவத் தொடங்கியது. மக்கள் கூட்டம் தொலை தூரங்களில் இருந்தும், சாதுவின் தரிசனம் பெற வந்து கொண்டிருந்தனர்.

குருவின் தரிசனம் பெற ஆயிரக்கணக்கான பேர் வந்தாலும் அவர்களில் உண்மையானவர்களை கண்டறியும் ஞானம் குருவுக்கு மட்டுமே உண்டு. அதனால், அவர் சிலரிடம் சில சமயம், சற்று கடுமையாகவும் நடந்து கொள்ள வேண்டியதாக இருந்தது. ஆனால், உண்மையான பக்தர்கள் குருவின் இந்த செய்கையை நன்கு அறிந்தவர்கள், அதனால் அவர்கள் நம்பிக்கை இழக்க மாட்டார்கள். எவ்வாறு பக்தப்ரஹலாதன், ஸ்வாமி நரஸிம்ம மூர்த்தியின் கோர ரூபத்தைக் கண்டு, அஞ்சாமல் அவரை புகழ்ந்து பாடியதைப் போல, பக்தர்கள், குருவின் சீற்றத்தையும் தங்கள் நன்மைக்காகவே என்று புரிந்துக் கொண்டு அமைதி காத்தனர். எவ்வாறு காட்டில் புலி மற்ற மிருகங்களிடத்தில் கடுமையாகவும் அதே நேரத்தில் தன் குட்டிகளிடம் கருணையான தாயாகவும் இருப்பதைப் போன்று நமது குருவும் உண்மையானவர்களிடத்தில் அன்பைப் பொழிந்தார்.

இப்பொழுது நாம் திரு. விட்டோபா காடோலன் கதையைக் கேட்போம். அவர் தனக்குத்தானே திரு. கல்யாண் என்று பெயரிட்டுக் கொண்டார். அதற்குக் காரணம் திரு. கல்யாண் என்பவர், ஞானியான சமர்த்த இராமதாஸருக்கு நிறைய சேவை



செய்தவர். அதனால் தனக்கும் அந்தப் பெயர் சூட்டிக்கொண்டு, நமது சத்குருவின் சேவையில் ஈடுபட்டார். ஆனால் சிறிது காலத்தில் அவருக்கு அகம்பாவம் ஏற்பட்டது. அவர் எல்லோரிடமும், எல்லா காரியத்திற்கும், சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் தன்னையே நம்பியிருப்பதாக சொல்லிக் கொண்டு வந்தார்.

சில நேரங்களில் வாசனை மிகுந்த ஜவ்வாது முதலியவை பூமியிலிருந்து வரும்போது அந்த வாசனைப் பொருட்களோடு சேர்ந்த நிலமும் நல்ல நறுமணத்தைப் பெறுகின்றது. அதேபோல் நல்ல சந்தன மரக்கட்டைகளுடன் சேர்ந்து இருக்கும்போது சாதாரண மரக்கட்டைகளும் வாசனையைப் பெறுகிறது. இது இயற்கை. ஆனால், அதற்காக மரக்கட்டைகள் தம்மையே சந்தனக் கட்டைகளாக எண்ணி பெருமை கொள்ள இயலாது. சாதுக்களும், சாத்தானும் ஒரே பூமியில் இருந்து தோன்றுவதால் சாத்தான், சாதுவாகி விட முடியாது. வைரத்தோடு இணைந்து கிடைக்கப்பெறும் சாதாரண கற்களும் சில சமயம் வைரக்கற்கள் மாதிரி தோற்றத்தை நமக்கு ஏற்படுத்தும். கரும்புவயலில் கரும்போடு சேர்ந்து கத்தாழையும் வளர அனுமதிக்கிறது. மணம்மிக்க மல்லிகை செடியில் புதர்களும் கூடவே உள்ளது. சில சமயம் ஞானிகளுக்கும், போலி குருமார்களோடு சேர்ந்து இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்போது, கூழாங்கற்கள் பாறையிலிருந்து உடைந்து சிதறிய சிறு துகள்களாக தூக்கி எறியப்படும் நிலையில் இருக்கிறது. அதைப்போல விட்டோபா காடோலும் நமது சத்குருவால் தூக்கி எறியப்படும் நிலையில் இருக்கிறார்.

விட்டோபா தான் சத்குருவின் மிக அருகாமையில் இருப்பதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டான். அவன் சத்குருவை தரிசிக்க வந்த எல்லோரிடமும் தானே, சத்குருவான பரமேஷ்வரின் காவலான நந்தீஸ்வரர் ஆவேன் என்றும், என் அனுமதியின்றி சத்குருவை யாரும் தரிசிக்க இயலாது, என்றெல்லாம் கூறி தற்பெருமையால், அகம்பாவம் கொண்டு தன்னுடைய அழிவைத் தானே தேடிக் கொண்டான்.

சத்குரு ஒரு த்ரிகால ஞானி ஆவார். அவர் விட்டோபா காடோலன் செய்கைகள், பேச்சுக்கள் அனைத்தையும் அறிவார். தக்க சமயத்தில் அவனுக்கு ஒரு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்று எண்ணினார். அச்சமயத்தில் அங்கு நம் சத்குருவை தரிசிக்க நிறைய பேர்கள் கூட்டம் கூட்டமாக வந்திருந்தனர். ஸ்ரீ மகராஜ் அவர்கள் நன்றாக உறங்கிக் கொண்டு இருந்தார். ஞானிகள் உறக்க

நிலையில் இருந்தாலும் அவர்களின் ஆத்மா எப்போதும் விழிப்பு நிலையில் இருக்கும். தன்னைச் சுற்றி நடப்பவை அனைத்தும் அவர்களுக்குத் தெரியும். அங்கிருந்த எவருக்கும் அவரை எழுப்பி, அவரின் நித்திரையை கலைக்கும் தைரியம் இல்லை.

அவர்களில் ஒரு சிலர் விட்டோபா காடோலிடம் சென்று நாம் விரைந்து திரும்பி செல்ல வேண்டும் என்றும், ஸ்ரீ மகராஜ் உறங்கி கொண்டு இருப்பதால் அவரை உடனே எழுப்புமாறும் கேட்டுக்கொண்டனர். மேலும் அவர்கள் காடோலிடம், அவர் ஒருவரே சத்குருவிற்கு மிகவும் நெருங்கியவர் என்பதால் அவரால் மட்டுமே சத்குருவின் உறக்கத்தைக் கலைக்கும் தைரியம் இருப்பதாகவும் கூறினர். விட்டோபா காடோலின் விதி அவனை சத்குருவின் உறக்கத்தைக் கலைக்க ஏற்பாடு செய்து விட்டது. அவன் சத்குருவை எழுப்பி அவரைக்காண தொலை தூரத்தில் இருந்து பக்தர்கள் வந்திருப்பதாகவும், அவர் எழுந்து அவர்களை ஆசிர்வதிக்குமாறும் கூறினான். உறக்கம் கலைந்து எழுந்த சத்குரு பக்தர்கள் தம்மை தரிசித்து விட்டு செல்லும்வரை அமைதியாக இருந்தார். அவர்கள் அனைவரும் சென்றதும் அதுவரை பொறுமை காத்த நம் சத்குரு, ஒரு பெரிய தடியை எடுத்துக் கொண்டு, விட்டோபா காடோலை நன்றாக நையப்புடைத்தார். அவர் அவனிடம், ''உன்னைப் போன்ற திமிர் பிடித்தவனை நான் இனியும் சகித்துக் கொண்டால் இந்த புண்ணிய ஸ்தலத்தில் நான் தவறு செய்தவனாவேன். நீ செய்த தவறுக்கு உனக்க இதுவே சரியான தண்டனை'' என்று கூறி அவனை மடத்திலிருந்து விரட்டினார். கரும்புச்சாறு என்று நினைத்து கள்ளைக் குடிக்க வேண்டாம். ஒருபோதும் ஒரு சமயமும் ஒரு துளி விஷத்தைக்கூட நாம் உட்கொள்ள வேண்டாம். திருடர்களை நமது அருகில் ஒரு நாளும் வர சம்மதிக்க வேண்டாம். தீய எண்ணம் கொண்டவர்கள் நமது அருகில் வராமலும், நமது நண்பராகாமலும் நாம் கவனமாக இருக்க வேண்டும். இவ்வாறெல்லாம் கூறி அவனை விரட்டி அடித்தார்.

சத்குரு அவனை உதைத்து விரட்டி இனியும், அவன் திரும்பாமல் இருக்கவும் வழிசெய்தார். சத்குருவின் இச்செயல், சமுதாயத்தில் போலியானவர்களின் முகமூடியை கிழித்தெறியும் நற்செயலாகும். இங்கு நிறைய போலி மனிதர்கள், மக்களை தவறான வழியில் திசை திருப்பி விடுகிறார்கள். அதனால் சில சமயம் மக்கள் உண்மைக்கும், பொய்மைக்கும் வித்தியாசத்தை உணர இயலாமல் தவிக்கின்றனர். இனிமேலும், இந்த விட்டோபா போன்ற ஆன்மீக வியாபாரிகளை, இந்த சமுதாயம்



ஒதுக்கித்தள்ள வேண்டும். ஞானிகள் என்றுமே தம்மை உயர்வாக கருதுவதும் இல்லை. தம்மை கடவுள் என்று பறைசாற்றிக் கொள்வதும் இல்லை. அவர்கள் சமூகப்பிரக்ஞை, தேகப்பிரக்ஞை, இவையெல்லாம் கடந்தவர்கள். சாதுக்களும், ஞானிகளும், பாவிகளை மன்னித்து அவர்தம் கர்ம மூட்டையை பொசுக்கி நற்பேறு அளிக்கின்றனர். ஆனால் பாவிகளை ஒருபோதும் ஊக்கப்படுத்துவது இல்லை.

இந்த பூமாதேவி, கற்றாழை செடிகளையும், முட்புதர்களையும், மணம் மிகுந்த மல்லிகைச் செடியோடு சேர்ந்து வளர அனுமதிக்கிறாள். ஆனால் மல்லிகைச் செடி பாதுகாக்கப்படுகிறது. கற்றாழை நெருப்புக்கு இறையாகிறது. இதர சில மங்கல குணமுடைய செடிகள் வீட்டு வாசலில் தோரணமாக்கப்படுகிறது. சாதுக்கள் செடிகளைப்போல, மனிதர்களிடத்தில் வித்தியாசத்தை உணர்ந்து அவரவர்களின் கர்ம வினைக்கு ஏற்ப தகுதியானவற்றை கருணையோடு அளிக்கின்றனர்.

சத்குருவிடம் உதைவாங்கினாலும் விட்டோபா மிகவும் புண்ணியம் செய்தவர், இல்லையேல் சத்குருவிற்கு சேவை செய்து அவரது பாதங்களை ஸ்பரிசிக்கும் பாக்கியத்தை எவ்வாறு பெற்றிருக்க முடியும்? ஆனால் அவர் குருவின் பெருமையை உணரத் தவறிவிட்டார். ஒருவேளை அவர் குருவின் பெருமையை உணர்ந்திருந்தால் அது அவருக்கு புனிதமான (Providence) வழிகாட்டுதலை வழங்கி அவருக்கு அங்கே முக்தி அளிக்கப்பட்டிருக்கும். கேட்டதை எல்லாம் வழங்கும் கற்பகத்தரு விருக்ஷத்தின் அடியில் அமர்ந்து கொண்டு, வைரத்திற்கு பதிலாக கூழாங்கற்களை யாசித்தான். நினைத்ததை எல்லாம் தரும். காமதேனு பசுவிடம், தேங்காய் ஓடுகளை யாசகமாக கேட்டான். பெரிய ஞானிகளிடத்தில் சேர்ந்து இருப்பவர்கள் வேறுயாரும் இதுமாதிரியான தற்பெருமையோடும், அஹம்பாவத்துடன் இருப்பதில்லை. சத்குருவின் அருகாமையில் கிடைக்கும் ஆனந்தம், வேறு எதிலும் கிடைப்பதில்லை.

''வாருங்கள்! நாம் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் பாதங்களில் சரணடைந்து அவர் புகழ் பாடுவோம்.'' சத்குரு ஹுக்காவை எங்கனம் புகையும், நெருப்பும் இன்றியே பற்ற வைத்தார் என்பதையும் பஞ்ச பூதங்களும் அவரிடத்தில் பணிந்ததைப் பற்றியும் அடுத்த அத்தியாயத்தில் காணலாம்.

**- ஜெய் கஜானன் -**

# அத்தியாயம் - 4

ஜெய் கஜானன் மகராஜ்

எல்லாவிடத்திலும் நீக்கமற நிறைந்திருப்பவரும், மிகப் பெரியவரும், காப்பாற்றி இரட்சிப்பவரும் ஆகிய பல்வேறு நாமங்கள் கொண்ட நீலகண்டனே! கங்காதரனே! மகா காலேஷ்வரா! த்ரியம்பகேஷ்வரா! ஓம்காரேஷ்வரா! அருள் புரிவீராக! மகா தேவரும், மகாவிஷ்ணுவும் ஒருவரே! நதிகள் பல நாமத்தினால் ஓடினாலும் சுவையும், குணமும் எல்லாவற்றிக்கும் ஒன்றுதான்.

சிவரூபமும், விஷ்ணு ரூபமும் ஒரே ரூபத்திலிருந்து தோன்றியவையாகும். பக்தர்கள் வெவ்வேறு நாமங்களில் அழைத்தாலும் எல்லோரையும் நீங்கள் அனுக்ரஹித்தீர்கள்! மகாதேவரையும், மகாவிஷ்ணுவையும் ஒன்றாகக் காண்பவர்க்கு நீங்கள் கருணையோடு ஆசிர்வதித்தீர்கள்! அன்னையானவள் ஒருபோதும் தனது குழந்தைகளிடத்தில் வித்தியாசம் காண்பதில்லை, இந்த அறியாத குழந்தையை தாங்கள் அன்போடு ஆசிர்வதித்து, தங்கள் பாதங்களான கல்ப வ்ருக்ஷத்தின் கீழ் எமது இப்பணியை செம்மையாக நிறைவேற்ற அருள் புரிவீராக!

அந்த நாள் ஒரு விசேஷமான நாள். அக்ஷைய த்ருத்யை எனப்படும் புனிதமான நாள். வைசாக் என்ற (சித்திரை) மாதத்தில் ஷேக்காவ் மக்களுக்கு மிகவும் விசேஷமான நாள். ஏனெனில் விதர்ப்ப தேசத்து மக்கள், இந்த நாளில், தங்கள் மூதாதையர்களின் நினைவாக அவர்தம் தாகத்தைத் தணிக்க ஒரு குவளை தண்ணீர் சமர்ப்பிக்கும் நாள். சத்குரு அங்கிருந்த குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டி இருந்தார்.

பங்கட்லாலின் இல்லத்தில் அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஒரு குழந்தையை அழைத்து, சத்குரு தமது ஹுக்கா பைப்பில் புகையிலையை நிரப்பச் சொன்னார். அதன் பிறகு, அவர் அந்த ஹுக்காவை பற்றவைக்க, நெருப்புடன் கரித்துண்டை வாங்கிவரச் சொன்னார். பங்கட்லாலின் வீட்டில் ஹுக்கா பற்றவைக்க நெருப்பு இல்லாததால், அனைவரும் ஜானகிராம் என்ற பொற்கொல்லன் வீட்டில் நிச்சயமாக இருக்கும் என்று யோசனை கூறினர். உடனே அவர்கள், ஜானகிராமின் வீட்டிற்குச் சென்று, நெருப்புடன் கூடிய ஒரு கரித்துண்டை, ஹுக்கா பற்ற வைக்க கேட்டதாகக் கூறினார்.



ஆனால் ஜானகிராம் ஒரு அகம்பாவம் பிடித்த மனிதர். அவர் நெருப்பு தர மறுத்தது மட்டுமல்லாமல், சத்குருவை மிகவும் ஏளனமாகப் பேசினார். அவர் அந்தக் குழந்தைகளிடம் என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு மகானோ, ஞானியோ அல்ல! அவருடைய ஜாதி, மதம் எதுவுமே தெரியாது! எல்லோரிடமும் யாசகம் வாங்கி உண்ணுகிறார்! ஹுக்கா பிடிக்கிறார்! சில சமயம் நிர்வாணமாகவும் செல்கிறார்! அழுக்குத் துணியைச்சுற்றிக் கொண்டு பைத்தியக்காரனை போல அலைகிறார்! எச்சில் இலைகளின் உணவை உட்கொண்டு, சேற்று நீரை பருகும் அவரை எப்படி ஞானி என்று சொல்லமுடியும்! அவர் உண்மையிலேயே ஞானியாக இருந்தால் நெருப்புத்துண்டு இல்லாமல் ஹுக்காவைப் பற்றவைக்கட்டும்! இந்தப் பங்கட்லாலும் பைத்தியம் போல் அவர் பின்னால் அலைகிறார், ''என்று குருவை அவமதித்தது தீராத பழியைத் தேடிக் கொண்டார்.''

ஜாலந்தர் என்ற ஞானியும் ஒருமுறை நெருப்பை வரவழைத்துக் காட்டியுள்ளார். நமது ஷீர்டி சமர்த்த சாயி ஹுக்கா பற்றவைக்க தரையில் இருந்து தண்ணீர் வரவழைத்ததை நாம் எல்லோரும் அறிவோம்! ஞானிகளின் தபோபலத்திற்கும், அவர்களின் தூய்மையான அன்பிற்கும் பஞ்ச பூதங்களும் கட்டுப்பட்டு அவர்கள் இட்ட ஆணையை நிறைவேற்றுகின்றன. ஜானகிராமனின் அகம்பாவத்தை அடக்க, சத்குரு அவர் கேட்ட அதே வித்தையை எல்லோரும் வியக்கும் வண்ணம் செய்து காட்டினார். ஜானகிராமன் கூறியவற்றை, அந்தக் குழந்தைகள் அப்படியே நம் சத்குருவிடம் ஒப்புவித்தனர்.

சத்குரு சிரித்துக் கொண்டே, ''அப்படியே ஆகட்டும் என்று ஹுக்காவை வாயில் வைத்து, பங்கட்லாலிடம் ஒரு தீக்குச்சியை ஹுக்காவிற்கு மேல் வை'' என்று உத்தரவிட்டார். பங்கட்லாலும் குருவின் உத்தரவுப்படி எரிந்து முடிந்த பழைய தீக்குச்சி ஒன்றைக் கொண்டு வந்து ஹுக்காவின் குழாய்க்கு மேல் வைத்தார் அவ்வளவுதான்! என்ன அற்புதம். அந்த குச்சியில், திடீரென்று நெருப்புப் பிடித்தது. அது ஹுக்காவையும் பற்ற வைத்தது. சுற்றி இருந்த பக்தர்கள் அனைவரும் **''ஜெய் கஜானன் மகராஜ்''** என்று ஆரவாரித்தனர்.

நம்மில் பெரும்பாலானோர் ஞானிகள் தூய்மையானவர்கள் என்று கூற்று உண்மையானால் அவர்களின் பழக்க வழக்கங்களும் அவ்வாறு தானே இருந்தாக வேண்டும். பின் ஏன் புகையிலை

போன்ற பொருட்களை உபயோகிக்க வேண்டும்? என்ற இந்தக் கேள்வி அவர்களைப் பற்றி அறியாதவர்க்கு எழலாம். ஞானிகள் இந்த உலக மக்களின் நன்மையை வேண்டி தங்கள் சரீரத்தையே ஆஹுதி ஆக்கி நம் கர்மாவை பொசுக்கி நற்பேறு அளிக்கின்றனர். சிலர் பூர்வ ஜென்மங்களில் புரிந்த கொடும் பாவத்தால் பல்வேறு இன்னல்களையும், சொல்ல இயலாத துயரத்தையும் அனுபவிக்கின்றனர். சிலர் இந்த ஜென்மத்திலேயே கணக்கற்ற பாவங்களைச் செய்துவிட்டு இறுதியில் சத்குருவின் காலடியில் சரணடைகின்றனர். இத்தகைய மனிதர்களின் பாவங்களை பொசுக்க வேண்டி, பஞ்ச பூதங்களைத் துணையாகக் கொண்டு தங்களின் சரீரத்தை ஆஹுதியாக்கி, அடியவர்களை அழிவில் இருந்து தடுத்து காப்பாற்றுகின்றனர். அனைவரும் இந்தக்கருத்தை தெளிவாக உணர்ந்து கொண்டால் ஞானிகளைக் குறித்தும், சித்த புருஷர்களைக் குறித்தும், சாதுக்கள் பற்றியும் யாரும் தவறாக விமர்சிக்க மாட்டார்கள்! அந்தப் பாவம் அவர்களின் தலைமுறைகள் அனைத்தையும் பாதிக்கும் என்று உணர வேண்டும்.

முற்றும் துறந்து வெற்று உடலோடு நான்கு திசைகளையே ஆடையாக்கி எல்லா உயிர்களையும் தன்னுடையதாக எண்ணி, அவர்களின் கஷ்டங்களை போக்கவல்ல ஞானிகளுக்கு போதைப் பொருட்கள் எந்த உணர்வையும் தராது. உணவையே பாகுபாடு இல்லாமல் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து உண்ணும் இவர்கள் சுவையுணர்வு, சரீர உணர்வு மற்றும் எல்லா உணர்வுகளையும் கடந்தவர்கள் என்று நாம் உணர்ந்து அவர்களுக்கு செய்யும் சேவையே நம் தலைமுறைக்கும் புண்ணியம் வந்து சேரும் என்பதை உணர வேண்டும்.

குருவானவர் கருணையும் இரக்கமும் நிரம்பப்பெற்றவர். அதனால் தான் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் ஒரு சிறு தண்டனை மூலம் ஜானகிராமிற்கு பாபவிமோசனம் அளித்து அவரை மன்னித்து அருளினார். அன்று ஜானகிராமின் இல்லத்தில், அவரது அனைத்து உறவினர்களும், நண்பர்களும் மகிழ்ச்சியோடு கூடி இருந்தனர். அக்க்ஷய திருதியை (விதர்ப்ப நாட்டில் விசேஷமாக கொண்டாடப்படும் நாள்) என்ற புண்ணிய தினத்தை முன்னிட்டு ஜானகிராம் எல்லோருக்கும் விருந்து அளிக்க ஏற்பாடு செய்தார். ஒவ்வொரு விசேஷமான நாளுக்கும் சில உணவுப் பதார்த்தங்கள் பிரத்யேகமாக தயாரிக்கப்படும். இது ஒவ்வொரு மாநிலத்திற்கும், அவர்களின் விசேஷ நாட்களுக்கு ஏற்றவாறு வேறுபடும். குடிபட்வா (Gudipadwa) என்ற அறுவடை நாள் விழாவிற்கு



(பொங்கல் தினம்) வேம்பின் இலை அரைக்கப்பட்டு அனைவருக்கும் பரிமாறப்படும். அவ்வாறே அக்ஷயத்திருதியை முன்னிட்டு விதர்ப்ப நாட்டில் புளியை அரைத்து அதனுடன் சில பொருட்களைச் சேர்த்து ஒரு விதமான பதார்த்தமாக, விருந்தினருக்கு பறிமாறுவது வழக்கம். அன்று நடக்கவிருந்த நிகழ்ச்சி, ஜானகிராமை மிகவும் பக்குவமடைந்த மனிதனாக மாற்றியது என்றுதான் சொல்ல வேண்டும். விருந்தினர் அனைவரும் கூடி இருந்த வேளையில் இலைகளில், பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட புளி கறியை எடுத்து வந்தபோது, யாரும் எதிர்பாராத விதமாய், அந்த உணவு முழுவதிலும், புழுக்கள் நெளிந்து கொண்டிருக்கிறது. இந்த விஷயம் ஜானகிராமை அதிர்ச்சிக் குள்ளாக்கியது. இப்போதுதான் புதிதாகக் கொண்டு வந்த புளியில் எங்கிருந்து இத்தனை புழுக்கள் வந்தன! மிகவும் குழம்பி இருந்தார் ஜானகிராம்! வந்த விருந்தினர்கள் அந்த புழுக்களையும், நாற்றமடைந்து சீர்கேடான அந்த பதார்த்தத்தையும் கண்டு அருவருப்பில் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராக விருந்தைப் புறக்கணித்து விட்டு வெளியேறினர்.

ஜானகிராமிற்கு, தான் குருவிற்கு செய்த தவறான செயல்தான் இத்தனை துயரங்களுக்கு காரணம் என்று புரிய வந்தது. மனமுடைந்த ஜானகிராம், குருவை தவறாக ஏளனமாகப் பேசி தலைமுறைக்கும், பாவத்தைச் சுமந்து கொண்டோமே என்று நொந்து கொண்டு அழுது புலம்பியவண்ணம் ஓடிச் சென்று பங்கட்லாலின் வீட்டுக் கதவை தட்டினார். பங்கட்லால் அமைதியாக அவரை இருக்கும்படி சொல்லி, குருவிடம் அழைத்து வந்தார். குருவைக் கண்டதும், அவர் பாதங்களில் வீழ்ந்து கண்ணீரால் அபிஷேகம் செய்து, "தயவுசெய்து இந்தப் பாவியை மன்னித்து விடுங்கள் குருதேவ் என்று கதறினார்." குரு சிரித்துக்கொண்டே ஜானகிராமிடம், "ஜானகிராம்! எங்கே! அந்த புழுக்கள் நிறைந்த புளிக்கறியை கொண்டுவா! நான் காண வேண்டும்" என்றார். உடனே ஜானகிராம் ஓடிச் சென்று எடுத்து வந்தார். சத்குரு அந்த பாத்திரத்தை தம் கையால் ஸ்பரிசித்து, அதை ஒரு கணம் உற்று நோக்கினார். பிறகு அவர் ஜானகிராமிடம், "உனது பதார்த்தம் மிகவும் சுத்தமாக உள்ளதே எங்கே அந்தப் புழுக்கள்" என்று கேட்டார். உடனே ஜானகிராம் அந்தப் பாத்திரத்தை குருவின் கைகளில் இருந்து வாங்கிப் பார்க்க என்ன அற்புதம்! புழுக்கள் எல்லாம் மறைந்து, தெளிவாய் நல்ல மணத்துடன் அப்போது தான் புதிதாகத் தயாரிக்கப்பட்டது போல்

காணப்பட்ட அந்த உணவைக் கண்டதும், ஜானகிராம் கண்களில் கண்ணீர் மல்க, ''ஸ்வாமி! நான் தங்களின் மகிமையை உணர்ந்தேன்'' என்று கூறி அவரை நமஸ்கரித்தார். நம் மகராஜ் அமைதியாக சிரித்துக் கொண்டே அவரை ஆசிர்வதித்தார்.

குரு மார்களும் ஞானிகளும் புகழ் என்ற போதையில் ஒருபோதும் சிக்கிக் கொள்ள மாட்டார்கள். அவர்களை கடுமையாக விமர்சித்தாலும், பெருமையாகப் புகழ்ந்தாலும் எந்தப்பாதிப்பும் அவர்களுக்கு ஏற்படாது.

குருவின் அடுத்த லீலை, பங்கட்லாலின் வீட்டில் சந்த் முகின் என்ற பக்தரிடம் நடந்தது. சந்த் முகின் அனைவருடனும் சேர்ந்து குருவிற்கு மலர்களும், சந்தன குழம்பு மற்றும் மாம்பழங்கள் முதலிய கனிகளையும் சமர்ப்பித்தார். நம் குரு, , ''இது ஒன்றுமே தமக்கு வேண்டாம் என்றும் சந்த் முகின் வீட்டில் தயாரிக்கப்பட்ட கரஞ்சி என்ற (ரவையுடன், சர்க்கரை கலந்து செய்யப்படும் ஒரு சுவையான உணவு) பதார்த்தத்தை, அவர்கள் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள, எல்லாப் பானைகளுக்கும் அடியில் வைக்கப்பட்டுள்ள பானையில் இருந்து கொண்டு வரவேண்டும்'' என்றார்.

அது ஒரு வெயில் காலம் வெயிலின் கடுமை அதிகமாதலால் உணவுப்பதார்த்தம் விரைவில் கெட்டுவிடும். குருவின் இந்த ஆணையை கேட்ட சந்த் முகின் கலவரம் அடைந்தார். அவர் குருவிடம் ஸ்வாமி, ''ஸ்வாமி! நீங்கள் கேட்ட அந்த உணவு சென்ற மாதம் தயாரிக்கப்பட்டு எல்லாம் தீர்ந்து விட்டது. நீங்கள் விரும்பினால் நான் வீட்டிற்குச் சென்று புதிதாகத் தயாரித்து எடுத்து வருகிறேன்'' என்றார். நம் குரு சிரித்துக்கொண்டே, '' எனக்கு இதெல்லாம் தேவையில்லை கடைசிப்பானையில் மீதமிருக்கும் கரஞ்சி துண்டுகளே போதும், சென்று அவற்றை எடுத்து வா!'' என்று மீண்டும் ஆணையிட, வேறு வழியின்றி சந்த் முகின் வீட்டிற்குச் சென்றார். அவர் மனைவியிடம் குருவின் உத்தரவைக்கூற, அவள் சிறிது நேரம் யோசித்தாள். பின்னர் நினைவிற்கு வந்தவளாய், ''ஆமாம்! சத்குரு சொன்னது சரிதான். சென்ற மாதம் தயாரித்த கரஞ்சி, இரண்டு துண்டுகள் கடைசிப் பானையில் வைத்திருந்தேன்'' என்று சந்த் முகினிடம் சொல்லி அடுக்கி வைத்திருந்த பானைகளை எடுக்க வேண்டினாள்.

அவர்கள் இருவரின் மன வேதனை என்னவென்றால் ஒரு மாதத்திற்கு முன் தயாரிக்கப்பட்ட இந்த உணவு முழுவதும் கெட்டு



போய் இருக்கும், இதை எவ்வாறு சத்குருவிடம் சமர்ப்பிக்க முடியும், நாங்கள் என்ன பாவம் செய்தோம் என்று கவலை கொண்டு மனதில் குருவை நினைத்து பிரார்த்தனை செய்து ஒவ்வொரு பானையாக எடுத்து தரையில் வைத்தனர். குருவின் உத்தரவின்படி அந்தக் கடைசி பானையில் கரஞ்சி இரண்டு துண்டுகள் மீதமிருந்தன. என்ன அற்புதம்! அவைகள் தற்பொழுது தான் புதிதாகச் சமைத்த உணவைப்போல் நல்ல மணத்துடனும் இருந்தது. சந்த் முகினும் அவர் மனைவியும் குருவைப் போற்றி வணங்கி அவைகளை எடுத்துக் கொண்டு பங்கட்லாலின் இல்லம் சென்றனர். குரு அவர்களைக் கண்டதும், சிரித்துக் கொண்டே கைகளை நீட்டி ஒரு மாதத்திற்கு முன்னால் தயாரிக்கப்பட்ட கரஞ்சி என்ற பதார்த்தத்தை, எவ்வாறு ஸ்ரீராமசந்திரமூர்த்தி, சபரி என்ற மூதாட்டி தமக்கு அன்போடு சுவைத்து அளித்த நெல்லிக்கனிகளை உண்ட மாதிரி மிகவும் ஆனந்தமாக உண்டார். சந்த் முகினும் அவர் மனைவியும் இதை தமது பாக்யமாகக் கருதி குருவை நமஸ்கரித்தனர்.

குரு நினைத்தால் கடந்த காலமும் நிகழ்காலமாகும், நிகழ்காலமும் எதிர்காலமாக மாறும். ஜென்ம ஜென்மாந்திரங்களின் கணக்குகளை தீர்ப்பவர் சத்குரு.

ஷேக்காவ் கிராமத்திற்கு அருகில் அமைந்த சின்ஞ்சோலி (Chincholi) என்ற கிராமத்தில் மாதவ் என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். அறுபது வயது நிரம்பிய அவர் மிகவும் வயதான தோற்றத்துடனும், மிகுந்த பலஹீனத்துடனும் காணப்பட்டார். இளமையான பொழுதில் தவறான வழிகளில் இன்பத்தை தேடியதால், முதுமை வரும் முன்னரே உடலும், மனமும் தளர்ச்சியுற்று வியாதிகளால் பரிதவித்துக் கொண்டு இருந்தார். அவர் செய்த பாவங்களால், எந்த சக்தியாலும் விடுதலை அளிக்க முடியாத அளவிற்கு தண்டனை அனுபவித்துக் கொண்டு இருந்தார். அவர் மனைவி, குழந்தைகள் எல்லோரையும் பறிகொடுத்த நிலையில் தனியனாக நிலை குலைந்து போய் இருந்தார். இனியும் வாழ விரும்பாதவராய் தன்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டார். அவர் தன் இளமைப்பருவத்தில் ஒருகணம் கூட இறைவனை நினைத்துக்கூட பார்த்ததில்லை. எல்லாவற்றையும் இழந்த நிலையில் இறைவனைத் தேடினார். இந்த நிலை மாதவருக்கு மட்டுமல்ல, வசதிகளும், வாய்ப்பும், செல்வாக்கும் இருந்த நிலையில் இறைவனைப்பற்றி நினைவே இல்லாமல், தான் என்று மமதை கொண்டு இறுதியில்

எல்லாவற்றையும் இழந்த நிலையில் இறைவனிடம் அடைக்கலம் வேண்டுவதும் இவ்வுலகில் பெரும்பாலான மனிதர்களின் வழக்கமாகும். அந்நிலையிலும் நம்மை கைவிடாமல் நாம் செய்த பிழைகள் யாவற்றையும் பொறுத்து நம்மைக்காத்து இரட்சிப்பவர் சத்குருவே ஆவார்.

இறுதியாக மாதவன், குரு ஸ்ரீகஜானன் மகராஜிடம் சரணடைந்தார். அவரைப் போற்றித் துதித்து நமஸ்கரித்து தன் வலியைப் போக்கக் கூறி மன்றாடினார். குரு ஒரு நாள் முழுவதும் மாதவன் புலம்புவதைக் கேட்டுக் கொண்டு, "மாதவா! "இப்போது நீ இங்கு முறையிடுவது சரியே அல்ல! இறந்து விட்ட ஒரு நோயாளியை மருத்துவரிடம் கொண்டு செல்வதைப் போல, வயதான பிராயத்தில் மங்கல நாணை அணிவிப்பது போல, இளமைப்பருவத்தில் சின்றின்பங்களுக்கு மட்டுமே ஆசைப்பட்டு மற்ற எல்லா கடமைகளையும் மறந்து விட்டு! வீடு பற்றிக் கொண்டு எரியும் நேரத்தில் தண்ணீருக்காக கிணறு தோண்டுவதைப் போல உள்ளது உன்னுடைய கதை, நிஜத்தை ஒப்புக் கொண்டாக வேண்டும், சத்தியத்திலிருந்து ஒரு நாளும் தப்ப முடியாது. இப்போது என்னிடம் முறையிட்டு என்ன பயன்?" என்று மாதவனிடம் கூறி அவரை விலகி போகச் சொன்னார். குருவோடு கூட இருந்தவர்களும் குருவின் உபதேசத்தைக் கேட்டு அந்த இடத்தை விட்டு விலகிச் செல்லுமாறு கூறினர். ஆனால் மாதவரோ யாருடைய உபதேசத்தையும் காதில் வாங்க மறுத்து தொடர்ந்து பகவானின் நாமத்தையே ஸ்மரணைசெய்து கொண்டு இருந்தார்.

அன்று இரவுப்பொழுதிலும் அவர் நாமஸ்மரணையை தொடர்ந்து கொண்டிருந்தார். நடு நிசியிலும் அவர் பிரார்த்தனை தொடர்ந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் மாதவரைச் சோதிக்க எண்ணினார். நமது மஹராஜ் மரண தேவனான எமதர்ம ராஜாவாக உருவெடுத்தார். மாதவனிடத்தில் நெருங்கி அவரின் மூச்சை நிறுத்த முயற்சித்தார். மாதவரின் இதயம் துடித்துக் கொண்டு இருந்தது. அவர் பயத்தில் எழுந்து அந்த இடத்தை விட்ட ஓட ஆரம்பித்து விட்டார். நம் குரு உரத்த குரலில், "மாதவா! இவ்வளவுதான் என்மேல் நீ கொண்ட நம்பிக்கையா! மரண பயத்தைப்பற்றி நீ அறிந்து கொள்ளவே இவ்வாறு செய்தேன்! நீ இங்கிருந்து தப்பிச் செல்லவே முடியாது!" என்றார். உடனே மாதவன் குருவின் பாதாரவிந்தங்கில் சரணடைந்து, "ஸ்வாமி என்னை நரகத்திலிருந்து மீட்டு,



ஸ்வர்கத்தின் ஆசிர்வாதத்தை பெற்றுத் தாருங்கள்! இவ்வுலக வாழ்க்கையில் இருந்து நான் மீள வேண்டும்! இது என்னுடைய இறுதி வேண்டுகோள்! தயவுசெய்து எனக்கு முக்தியைத் தாருங்கள்!" என்று மன்றாடினான். என்னுடைய பாவங்களைக் குறித்து நான் நன்றாக அறிவேன், ஆனால் சத்குருவாகிய தாங்கள் நினைத்தால் என்னை நரகத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்பதையும் நான் நன்கு அறிவேன்! ஏனெனில் நான் உங்கள் காலடியில் தஞ்சம் புகுந்துள்ளேன். இது என்னுடைய பூர்வ ஜென்ம புண்ணியமாக கருதுகிறேன். சத்குருவிடம் தஞ்சம் அடைந்தவன் எவ்வாறு நரகத்திற்குச் செல்லமுடியும்? என்றவுடன் சத்குரு மனம் இரங்கினார். "மாதவா இறைவனின் நாமத்தை ஒரு மனதாக ஜபித்துக் கொண்டே இரு! உன் மரணம் உன்னை நெருங்கி விட்டது. ஆனால் இன்னும் நீ உயிர்வாழ ஆசைப்பட்டால் நான் உன் மரணத்தை ஒத்தி வைத்து, உன் வாழ்க்கையை நீட்டித்து தருகிறேன்" என்று கருணையோடு கூறினார்.

சத்குருவால் மட்டுமே இத்தகைய அற்புதங்களை நிகழ்த்த முடியும்! மாதவன், "ஸ்வாமி எனக்கு இந்த வாழ்க்கை போதும், முக்தியை தாருங்கள் என்று கண்ணீர் மல்க வேண்டினான். சத்குருவும் அப்படியே ஆகட்டுளம் நீ மறுபடியும் பிறக்க மாட்டாய்! என்று அவன் மனதோடு கூற மாதவனும் அதை மகிழ்ச்சியோடு ஏற்க, மாதவனின் ஸ்வாசம் நின்றது. கூடி இருந்த அனைவருக்கும் இவர்கள் நடுவில் மனதோடு நடந்த உரையாடல் புரியாமல் போகவே மாதவன், உணவு உண்ணாமல் இருந்ததால் உயிரை விட்டான் என்று நினைத்தனர். மாதவன் குருவின் காலடியில் உயிர் நீத்ததால் மீண்டும் பிறப்பில்லாத பெருவாழ்வு அடைந்தான்.

எல்லோருக்கும் இந்த நற்பேறு கிடைப்பதில்லை. குரு நினைத்த மாத்திரத்தில் மரணத்தைக்கூட தள்ளி வைக்க முடியும். ஒரு முறை, ஒரு நல்ல நாளில் குரு அனைவரிடமும், "முறையாக வேதம் பயின்ற வேத விற்பன்னர்களான அந்தணர்களை என்னிடம் அழைத்து வாருங்கள்! எல்லா வேதங்களையும் என் முன்னால் பாராயணம் செய்ய நான் விரும்புகிறேன்" என்றார். அதற்கு அந்த கிராமவாசிகள், "ஸ்வாமி இங்கு வேதம் பயிற்றுவிப்பவர்கள் என்று யாருமே இல்லை! யாரும் வெளியூர்களிலிருந்து இங்கு வரமாட்டார்கள்" என்று குருவிடத்தில் வருத்தப்பட்டுக் கூறினர். அதற்கு சத்குரு, " நாளை ஏற்பாடு செய்யுங்கள்" என்று கூறினார்.

அங்கு இருப்பவர்கள் சத்குருவின் வார்த்தைகளில் நம்பிக்கை உள்ளவர்கள் என்பதால் கிராமவாசிகள் எல்லாரிடமும் கேட்டு பணம் ரூ. 100 வசூல் செய்யப்பட்டது. அந்தப்பணம் வேதபாராயணம் செய்பவர்களுக்கான தட்சிணையாகும். மறுநாள், என்ன அற்புதம்! எங்கிருந்தோ வேத விற்பன்னர்கள் ஒரு குழுவாக ஷேக்காவ் கிராமத்திற்கு வந்து சத்குருவின் முன்னிலையில் எல்லா வேதங்களையும் முறையாக பாராயணம் செய்துவிட்டு தட்சிணையும் பெற்றுக் கொண்டு சென்றனர். குரு விரும்புவதை கடவுள் உடனே செய்து முடிக்கிறார் என்பதை தெளிவாக நம்மால் உணரமுடிகிறது. அந்த புனிதமான நாளை இன்றளவும் நினைவு கூறும் வகையில் பங்கட்லாலின் இல்லத்தில் ஒவ்வொரு வருடமும் அதே நாளில் வேத பாராயணத்தோடு பூஜை செய்யப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. பிரார்த்தனை யாவும் பக்தியின் வழியாக இச்சரித்திரம் படிக்கும் அடியவர்களுக்கு சென்று சேரட்டும். நமது சத்குருவின் அடுத்த லீலையைப் பற்றி வரும் அத்தியாயத்தில் காண்போம்.

**- ஜெய் கஜானன் -**





# அத்தியாயம் - 5

ஜெய் கஜானன் மகராஜ்

இவ்வுலகில் தன்னிகரில்லாத, யாரும் வெற்றி கொள்ள இயலாத தேவனே! கருணையும், மகிழ்ச்சியும் நிறைந்து இருக்கும் விநாயகருக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள். எப்போதும் பாவத்தில் உழன்று கொண்டு இருக்கும் எனக்கு, உம்மைப் புகழ்ந்து பாட ஒரு தகுதியும் இல்லாத எனக்கு கருணையோடு அருள் புரிவீராக! மிகவும் உயர்வான தகுதியுடன் இருப்பவர்கள், ஆதரவற்றவருக்கும், வறுமையால் வாடுபவர்க்கும் உதவி செய்வதைப் போல, சர்வேஸ்வரரும், சிவசங்கருமான மகேசன் தன்னுடைய உடலை சாம்பலால் மறைத்துக் கொண்டவரும், எளியோருக்கு எல்லாம் அடியவராக வந்து காப்பாற்றியவருமான உம்மை வணங்குகிறேன்! அன்னை எப்போதும் தம் குழந்தையின் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதைப்போல என்னை இப்பணியை சிறப்பாக செய்ய கருணையோடு அருள் புரிவீராக! சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜின் புகழ் நாலா திசைகளிலும் பரவியதால் அவரின் தரிசனத்திற்காக ஆயிரக்கணக்கான மக்கள் ஷேக்காவ் கிராமத்திற்கு வரத் தொடங்கினார்கள். ஆனால் சத்குரு இவற்றிலிருந்து விடுபட விரும்பினார். அவர் கால்கள் சென்ற பாதையில் செல்லத் தொடங்கினார். யாருக்குமே அவர் எங்கு சென்றிருக்கிறார், எப்போது திரும்புவார் என்று தெரிய வாய்ப்பு இல்லை.

ஒரு நாள் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தின் அருகில் இருக்கும் பிம்பால்காவ் என்ற கிராமத்தில், அழகிய சிறிய நீரோடைக்கு அருகில் ஒரு பழமையான சிவாலயத்தின் அருகில் பத்மாசனத்தில் அமர்ந்து யோக நிலையில் ஆழ்ந்தார் சத்குரு. அங்கு மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் அவைகளை தண்ணீர் குடிக்கவைப்பதற்காக நீரோடைக்கு வந்தனர். யோக நிலையில் இருந்த சாதுவின் ரூபத்தைக் கண்டதும் ஆச்சரியம் கொண்டனர். என்ன காரணத்தால் இவ்வாறு அமர்ந்து இருக்கிறார் என்று ஒவ்வொருவரும் ஆராய்ந்து கொண்டு இருந்தனர். ஒருவேளை பசியினால் இவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டு இருக்குமோ என்று நினைத்து ரொட்டித்துண்டு கொண்டு வந்து அருகில் வைத்தனர். அவரின் யோக நிலையைக் கலைக்க முயன்ற சிறுவர்கள் வெகுநேரமாகியும் கண்களை திறவாமல் யோக நிலையில் இருந்ததால், அதிசயமாக அவரையே பார்த்துக் கொண்டு

இருந்தனர். உடலில் உயிர் உள்ளதா என்று அவரைத் தொட்டுப் பார்த்தனர். உடல் சூடாக இருந்தது. ஆகையால் இவர் உயிருடன் தான் இருக்கிறார்.

ஒருவேளை பிசாசு இங்கு வந்திருக்க வேண்டுமோ என்று எண்ணமும் தோன்றியது. ஆனால் சிவாலயத்தின் வாயிலில் பூத, பிசாசு எதுவும் இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தனர். ஒருவேளை இந்த சாது தான் கடவுளின் அவதாரமோ என்று நினைத்து, தண்ணீர், மலர்கள் இவற்றால் அவர்தம் பாதங்களை கழுவி தாங்கள் சாப்பிடக் கொண்டுவந்த வெங்காயம், மற்றும் ரொட்டித்துண்டுகளை குருவுக்கு சமர்ப்பித்து வணங்கினர். ஞானிகளும், எளிமையும், தூய்மையான அன்பையும் கொண்ட எளியவர்களிடம் மட்டுமே வாசம் செய்வதை விரும்புகின்றனர். அனைத்து மாடு மேய்க்கும் சிறுவர்களும் சாதுவைச் சுற்றி அமர்ந்து கொண்டு தங்களுக்குத் தெரிந்த பிரார்த்தனைப் பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர். சிறிது நேரம் கழித்து தங்களுடைய பெற்றோர், வெகு நேரம் ஆகியும் தம்மைக் காணாமல் கவலை கொள்வர் என்பதும், தங்களுடன் வந்த கன்றுக் குட்டிகள் தங்கள் தாயைக் காண வேண்டி ஏங்கி நிற்கும் என்பதும் சிறுவர்களுக்கு நினைவில் தோன்றியதும் அவர்கள் வீடு திரும்பினர். தங்கள் பெற்றோரிடம் சாதுவைப்பற்றிக் கூறினர்.

வித்தியாசமான தோற்றத்தில் உணவும் நீரும் இல்லாமல் கண்களை மூடி யோக நிஷ்டையில் இருந்த சாதுவைப்பற்றி சிறுவர்கள் விவரித்ததும் அந்த ஊர் பிரஜைகள் யாவரும் மறுநாள் விடியற்காலையில் சாதுவை தரிசிப்பதற்காகச் சென்றனர். ஸ்ரீ கஜானன் மகராஜ் அதே இடத்திலேயே அசையாமல் அமர்ந்து இருந்தார். அவர் முன் சமர்ப்பிக்கப்பட்ட உணவும் அப்படியே இருந்தது. இந்த யோக நிலையைக் கண்டதும் அவர்களுக்கு ஜலந்தர் என்று சாதுவின் நினைவு பவந்தது. **சாது ஜலந்தரும்** இதே போன்ற யோக நிஷ்டையில் பன்னிரெண்டு (12 Years) ஆண்டு காலம் இருந்தார். எத்தகைய நீண்ட தவ வாழ்க்கையை தேர்ந்தெடுத்து ஞானிகள் இரவும் பகலும் தியானித்து பெற்ற அசாத்தியமான வரத்தை நம்மைப் போன்ற அடியவர்களின் கர்மாவைப் போக்கி நற்பேறு கிடைப்பதற்கு உதவும் கருணையை என்னவென்று சொல்வது?

அந்த ஊர் மக்கள் சாதுவை பிம்பால்காவ் (Pimpalgoan) கிராமத்திற்கு ஆரவாரத்துடனும் உற்சாகத்துடனும் தூக்கிக் கொண்டு வந்தனர். ஒரு அழகிய பல்லக்கில் சாதுவை அமர்த்தினர். குலால்



முதலிய வாசனைப் பொடி தூவி பல்வேறு மலர்களை அவருக்கு சூட்டினர். அங்குள்ள ஹனுமான் ஆலயத்தில், சாதுவுக்கு ஒரு சிறப்பான இடத்தை அளித்தனர். அப்போதும் சாது கண்களை திறக்காமல் அதே போன்று யோக நிஷ்டையில் இருந்தார். அவருடைய அனுக்ரஹம் பெற நீண்ட நேரம் கூடியிருந்த ஊர்மக்கள் அவர் யோகநிலையிலிருந்து திரும்பாததால், அவர் இயல்பு நிலைக்கு திரும்பும் வரை தாங்கள் யாரும் அவ்விடம் விட்டு நகர்ந்து செல்லப்போவதில்லை, உணவும் உண்ணப்போவது இல்லை என்ற சங்கல்பம் எடுத்து, அனைவரும் அவரைச் சுற்றி அமர்ந்து கொண்டனர். அடியவர்கள் தம்மால் வெறும் வயிற்றோடு இருப்பதை சாது எங்கனம் சகித்துக்கொள்வார்! உடனே கண்களை திறந்தார். யோக நிஷ்டையிலிருந்து வெளியில் வந்தார். சுற்றி இருந்த அனைவரும் மகிழ்ச்சியாக அவரை நமஸ்கரித்து அவருடைய அனுக்ரஹம் பெற்றுக் கொண்டனர்.

பிம்பால்காவ் கிராமத்திற்கு சாது வந்திருக்கும் விஷயம் அந்த ஊர்மட்டுமல்லாது அதன் பக்கத்து கிராமமான ஷேக்காவ் கிராமத்திற்கும் எட்டியது. அச்செய்தி காதில் விழுந்தபிறகும் பொறுத்துக் கொண்டிருப்பாரா நம் பங்கட்லால்! விரைந்து தன் மனைவியோடு பிம்பால்காவ் வந்தார் பங்கட்லால். பங்கட்லாலும் அவர் மனைவியும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை நமஸ்கரித்து, கைகளால் தொழுது ஷேக்காவ் கிராமத்திற்கு உடனே திரும்ப வேண்டினர். பங்கட்லால் குருவிடம், "ஸ்வாமி! ஒரு குழந்தையை தாயினிடமிருந்து எவ்வாறு பிரிக்க முடியும்? தங்கள் பக்தர்கள் அங்கே உணவும் நீரும் இன்றி தங்களுக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். தாங்கள் என்னுடன் வரவில்லை என்றால் நான் தங்கள் முன்னால் என் உயிரை மாய்த்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என்றார். பங்கட்லால் இவ்வாறு கூறியவுடன் குரு மனமிரங்கி, "ஆகட்டும் நாம் வருகிறோம்" என்றார்.

பங்கட்லால் மிகுந்த உற்சாகத்துடன் குருவை தன் வண்டியில் அமர பணிவுடன் வேண்ட குருவும் மகிழ்ந்து வண்டியில் ஏறிக்கொண்டார். அங்கிருந்த மக்கள் அனைவரும் பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்வை, எவ்வாறு அக்ரூரர் கோகுலத்திலிருந்து பிரிந்து கொண்டு செல்வதைப் போலத் தோன்றியதும் மனம் உடைந்து போயினர். பங்கட்லால் அவர்களைப் பணிந்து தொழுது நம் மகராஜ் நம்மைவிட்டு எங்கேயும் போகவில்லை, இங்கே சில மைல்கள் தொலைவிலிருக்கும் ஷேக்காவ் என்ற கிராமத்திற்குத்தான் வருகிறார். குருவுக்கு எந்த இடத்தில் வாசம் செய்ய

வேண்டுமென்று விருப்பமோ அதை அவர் தீர்மானிப்பது சரியான முடிவாகும் என்றார்.

ஷேக்காவ் சென்று கொண்டிருக்கும் வழியில் குரு பங்கட்லாலிடம் சிரித்துக் கொண்டே, ''பங்கட் உன்னுடைய இந்த செயல் எவ்வாறு உள்ளதென்றால் கொடுக்க வேண்டியவனே எடுத்துச் செல்வதைப்போல் உள்ளது. செல்வத்தை அள்ளித்தரும் தேவ்தை எல்லாருக்கும் தாயாராக விளங்கும் மஹாலட்சுமியும் மும்மூர்த்திகளில் ஒருவரான மஹா விஷ்ணுவும் உன் வீட்டில் சிறைபிடிக்கப்பட்டுள்ளார்கள், அதனால் தான் நான் உன்னைக் கண்டு பயந்து ஓடுகிறேன்'' என்றார். குருவின் இவ்விளையாட்டைக் கண்ட பங்கட்லால் சிரித்துக் கொண்டே, ''ஸ்வாமி மஹாலட்சுமி தேவியை யாரும் சிறைபிடிக்க இயலாது. அந்தத் தாய் என்னுடன் இருப்பதற்கு நீங்கள் தான் காரணம். நீங்கள் எங்களுடன் வசிப்பதால் செல்வத்திற்கு அதிபதியான மஹாலட்சுமி தாயாரும் எங்களுடன் இருக்கிறார். எப்போதும் குழந்தை தாயாரின் பாதுகாப்பின் கீழ் நிம்மதியாக இருக்கும். தங்களுடைய புனிதமான பாதங்களே எங்களுக்கு வளமையும் செழிப்பும், செல்வமும் ஆகும். இவை தவிர வேறு செல்வங்களைப்பற்றி எனக்கு கவலை இல்லை. ஆகையால் தான் நாங்கள் பிம்பால்காவ் கிராமத்திலிருந்து ஷேக்காவ் கிராமத்திற்கு தங்களை அழைத்துச் செல்ல வந்தோம்'' என்றார்.

பங்கட்லால் குருவிடம், ''இங்கு எதுவுமே என்னுடையது இல்லை. எல்லாம் தங்களுடையது, நான் ஒரு காவல்காரன், எவ்வாறு ஒரு காவல்காரன், எஜமானியை மாளிகைக்குள் வர முடியாமல் தடுக்கமுடியும்! தாங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள்! என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், இவ்வுலகில் உள்ள அனைவருக்கும் அனுக்ரஹம் அளியுங்கள், ஆசிர்வதியுங்கள். ஆனால் ஷேக்காவ் கிராமத்தையும் மறந்து விடாதீர்கள். எவ்வாறு பசுக்கள் காலையில் சென்றுவிட்டு மாலையில் திரும்புவதுபோல உங்களை இங்கு திரும்பி வருவதற்கு வேண்டுகிறோம். இதுவே எங்களுடைய உண்மையான கோரிக்கை'' என்றார்.

இங்கனம் நமது பங்கட்லால் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை அன்புடன் ஷேக்காவ் கிராமத்திற்கு மீண்டும் அழைத்து வந்து விட்டார். குருவும் பங்கட்லாலின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் வீட்டில் சில திணங்கள் தங்கவிட்டு பின் ஒரு நாள் அங்கிருந்து மாயமானார். எங்கனம் அதிவேகமாக சுழன்று வீசும் புயல் காற்று வீசியபோதும், வாயு பகவானின் புத்திரரான ஸ்ரீ ஆஞ்சநேயர், காற்றைக் கிழித்து விரைந்து செல்லும் திறன் கொண்டதைப் போன்று, நம் குருவும் ஒரு நல்ல காலைப் பொழுதில், நம் பங்கட்லாலின் வீட்டிலிருந்து வெளியேறினார். அது ஒரு கடுமையான (வைசாக்) சித்திரை மாதம், கோடைகாலம், எங்கும் வறண்டு, நீரற்ற வயல்களில் பயிர்கள் வாடி வதங்கி, வறட்சியால் சூழப்பட்ட பிரதேசமாக காட்சியளித்த அந்த இடத்தில் நம் குரு நடந்து போய்க் கொண்டு இருந்தார்.



அவர் அட்காவ் (Adgaon) என்ற கிராமத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அந்தப் பயணத்தின் நோக்கம் யாருக்கும் தெரியாது. அது அவருக்கு மட்டுமே தெரிந்த ஒன்றாகும். அட்காவ் கிராமம் செல்லும் வழியில் அகோலி என்ற மிக வறண்ட கிராமத்திற்கு வந்தடைந்தார். குருவின் நாக்கு வறளத் தொடங்கி தாகத்தை தணிக்க தண்ணீர் தேடினார்.

அருகில் இருந்த வயலில் கடுமையாக வேலை செய்து கொண்டு இருந்த பாஸ்கரா என்பவரிடம் வந்தார். பாஸ்கரா தன்னுடைய வயலில் சுட்டெரிக்கும் கோடைக்காலத்திலும் மண்ணை வளப்படுத்தி, உழுது தானியங்களை விளைவித்து அங்குள்ளோர் அனைவரின் பசியையும் போக்கும் சிறந்த விவசாயி ஆவார். கடுமையான தண்ணிர் பஞ்சம் காரணமாக அகோலி கிராம மக்கள் மிகுந்த துயரத்தில் இருந்தனர். பருவ மழையும் பொய்த்தது, அங்கு பசுநெய் கூட எளிதாக யார் வேண்டுமானாலும் பெறலாம், ஆனால் தண்ணீர் ஒரு குவளை கிடைப்பதற்காக பெரிய போராட்டம் நடைபெறும் இடமாக இருந்தது. பாஸ்கரா தன்னுடைய தேவைக்கான ரொட்டித் துண்டுகளையும் ஒரு குவளை தண்ணீரையும் அரும்பாடுபட்டு வெகு தொலைவிலிருந்து கொண்டு வந்து வயலுக்கு அருகில் ஒரு புதரில் வைத்திருந்தார். நம் குரு பாஸ்கராவிடம் சென்று, ''எனக்கு மிகவும் தாகமாக உள்ளது. தயவு செய்து சிறிதளவு தண்ணீர் வேண்டும், இல்லையென்று மட்டும் சொல்லிவிடாதே! இது ஒரு புனிதமான நற்செயலாகும். நிறைய தனவான்கள், செல்வந்தர்கள் கோடைகாலத்தில், வழிப்போக்கர்களின் தாகத்தை தணிப்பதற்காக ஆங்காங்கே தண்ணீர் பந்தல் வைத்து சேவை செய்கின்றனர். எனக்கு ஒரு வாய் தண்ணீர் இருந்தால் போதும், என் தாகம் தீர்ந்துவிடும்'' என்று கேட்டார்.

சத்குருவின் லீலைகளை யார் தான் புரிந்து கொள்ளமுடியும்! பாஸ்கராவிற்கு சாதுவைப் பார்த்த மாத்திரத்தில் கோபம் கொப்பளிக்கத் தொடங்கியது. அவன் சாதுவிடம், ''எவ்வாறு இந்தச் செயலை நற்செயல் என்று நான் எண்ண முடியும்? ஒருவருக்கு

தண்ணீர் அளித்து நான் என்ன பயனை பெறமுடியும்? மத நூல்கள் சத்கர்மாவை ஆற்றும்படியாகவும், ஆதரவற்றவர்களுக்கும், ஊனமடைந்தவர்க்கும், நலிந்தவர்க்கும், பின்னடைந்தவர்களுக்கும் தானம் அளிப்பது சாலச் சிறந்தது என்று உரைக்கின்றன. ஆனால் உன்னைப் போன்ற வாழ தகுதியில்லாதவர்க்கு தண்ணீர் அளிப்பது பாவமாகும், நாகத்திற்கு யாரும் அன்போடு உணவளிப்பதில்லை. யாரும் தன்னுடைய சொந்த வீட்டிலேயே திருட வந்தவனுக்கு அடைக்கலம் அளிக்க மாட்டார்கள். வீடு வீடாகச் சென்று உணவை யாசகமாகப் பெற்று உண்டு, நன்றாக பெருத்து இந்த சமூகத்திற்கு ஒரு பாரமாக இருக்கிறாய்! இந்த ஒரு குவளை தண்ணீர் வெகு தொலைவில் இருந்து என் தலையில் சுமந்து வந்தது, எனது தாகத்தை தணிப்பதற்காக மட்டுமே, உனக்காக அல்ல, நான் இவ்வளவு கூறியும் மரத்துப்போய் இங்கேயே நிற்க வேண்டிய அவசியம் என்ன? உன்னைப் போன்ற சோம்பேறிக்கு, நான் ஒரு துளி தண்ணீர் கூட தரமாட்டேன். உன் வழியை பார்த்துக்கொண்டு போ! இந்த உலக நன்மைக்காக நாங்கள் பாடுபடும்போது நீ ஒன்றும் செய்யாமல் இந்த சமூகத்தை பாழ்படுத்துகிறாய்! இவ்வாறெல்லாம் தகாத வார்த்தைகளை கூறி குருவை அவமதித்தான், அந்தோ பரிதாபம்!

பாஸ்கராவுக்கு நம் குருவைப் பற்றி தெரிந்தால் அவன் பேசிய சுடு சொற்களை அவனால் திரும்பப் பெற இயலுமா! சாது இவை அனைத்து தகாத வார்த்தைகளையும் பொறுமையாக உள்வாங்கி அமைதியாக சிரித்துக் கொண்டே அவனைக் கடந்து அருகில் இருந்த ஒரு கிணற்றை நோக்கிச் சென்றார். பாஸ்கரா சாதுவின் இச்செயலைப் பார்த்து உரத்த குரலில், "இந்தக் கிணற்றில் நீர் கிடைக்கும் என்று கற்பனை கூட செய்யமுடியாது. அது பல ஆண்டுகாலமாக வறண்ட கிணறு, இங்கிருந்து 2 மைல்கள் தொலைவில் சென்றால் மட்டுமே குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்கும், வேறு எந்த வழியும் உமக்கு இல்லை" என்றும் கூறினான். நம் குரு பாஸ்கராவை நோக்கி, "நல்லது, வறண்ட கிணற்றில் நான் நீரை எடுப்பதற்கு இப்போது முயற்சிக்கிறேன், உன்னைப் போன்ற தகுதியானவர்களும், உண்மையானவர்களும் தண்ணீர் கிடைக்காமல் எத்தகைய துயரத்தில் இருக்கிறார்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன்! இந்த சமூக நலனுக்காக நானும் என் பங்கை அளிக்க ஆசை கொள்கிறேன். என்னுடைய இந்த நோக்கம் நேர்மையானதாக இருந்தால் இறைவன் நிச்சயமாக எனக்கு உதவி செய்வார்" என்று சொன்னார்.



ஞானிகளின் அவதார நோக்கம் ப்ரபஞ்சத்தில் எல்லா உயிர்களையும் சௌக்கியமாய் வாழவைக்கவும், அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநாட்டவும் தான் என்பதை நிரூபிக்க நம் குரு அந்த அற்புதத்தை நிகழ்த்தினார். குரு அந்த கிணற்றின் அருகில் சென்று ஒரு கணம் அதை உற்றுநோக்கினார். பல ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தாலும், கோடையின் கடுமையாலும் வெடித்து உலர்ந்து காணப்பட்டது. அமைதியாக அருகில் இருந்த ஒரு பாறை மீது அமர்ந்தார். கண்களை மூடி இறைவனை பல விதமான ரூபங்களின் வடிவில் நாமத்தை தியானித்து அந்த ஊர் மக்களின் நலனுக்காக கிணற்றில் தண்ணீர் வரவழைக்குமாறு வேண்டினார். குரு, இறைவனிடம், "ஹே பரமேஸ்வரா, ஸ்ரீ ஹரி, பாண்டுரங்கா இந்தக் கிணற்றில் நீர் இல்லாத வறண்ட நிலையைக் கண்டு மனம் இரங்கி கருணையோடு இதை நீர் நிறைந்த கிணறாக மாற்றவேண்டும்" என்றார். மனிதர்களின் எல்லா முயற்சிகளும் பலனற்றுப் போனதாலும், பருவ மழை பொய்த்ததாலும் மக்களின் துன்பத்தை போக்குமாறு வேண்டினார். இறைவனால் கூடாதது எதுவுமே இல்லை என்பதை ஞானி நிருபித்துக் காட்டினார். அவர் பண்டரிபுர வாச பாண்டுரங்கனின் லீலைகளையும் மகிமைகளையும் எடுத்துரைத்தார். "ஹே பாண்டுரங்கா! முன்னொரு காலத்தில் எரியும் சூளையிலிருந்து பூனைக்குட்டிகளை காத்து அவற்றிற்கு உயிர் பிச்சை அளித்தாய்" என்றார்.

நாம் பாண்டுரங்கனின் அந்த லீலையைப்பற்றி காண்போம்! முன்னொரு காலத்தில் **ராக்கா கும்பார்** என்ற பானைகள் செய்யும் குயவன் ஒருவன் இருந்தான். அவன் பானைகள் செய்வதற்காக தன் வீட்டு வாயிலில் இருந்த உலைக் களத்தில் ஒரு காலை நேரத்தில் தீ மூட்டி, பாண்டுரங்கனை மனதில் தியானித்து தன் தொழிலைத் துவங்கினான். பாண்டுரங்கனின் உண்மையான பக்தனான ராக்கா கும்பார் அன்று அந்த உலையில் என்ன இருந்தது என்பதைக் கவனிக்காமல் மனதில் ஸ்ரீ ஹரியை நினைத்து நாமஸ்மரணை செய்து கொண்டே தீ மூட்டினான். அன்று அவன் வீட்டு பூனை பாதுகாப்பான இடமாகவும், மிதமான வெப்பத்துடனும் இருந்த அந்த உலையில் தன் குட்டிகளை ஈன்று பத்திரமாக வைத்துவிட்டு சென்று விட்டது. சிறிது நேரம் கழித்து அவன் வீட்டு உறவினர்கள் அந்தப் பூனை குட்டிகளை எங்கு பிரசவித்திருக்கும் என்று தேடி இறுதியாக உலையின் அருகில் வந்ததும், தாய்ப் பூனையும் குட்டிகளுக்கு பாலூட்ட அங்கு வந்தது. அது அங்கே உலை எரிந்து கொண்டிருந்த காட்சியைக் கண்டு பதைபதைத்த குட்டிகளை காப்பாற்ற அருகில் சென்றது.

ஆனால் நெருப்பின் ஜ்வாலை மிகவும் வெப்பமாக இருந்ததால் அருகில் செல்ல முடியாமல் கதறிய காட்சியைக் கண்டதும் அவனுக்கும் அவன் உறவினர்களுக்கும் உண்மை புரிய வந்தது. அவன் பாண்டுரங்கனை நினைத்து, ''ஸ்ரீ ஹரி உன் பக்தனை இந்த பாவத்திலிருந்து காப்பாற்றுவாயாக'' என்று மன்றாடினான். இரண்டு நாட்கள் தொடர்ந்து எரிந்து முடிந்த அந்த சூளையில் இருந்து மனித சரீரம் விழுந்தால் கூட சாம்பலும் மிஞ்சாது என்பது தான் உண்மை. ஆனால் அங்கு நடந்தது வேறு. இரண்டு நாட்களுக்குப் பிறகு தீயின் தணல் தணிந்து அது முற்றிலும் அணைந்தவுடன், ஸ்ரீஹரி அந்த அற்புதத்தை நிகழ்த்தினார். என்ன ஆச்சரியம்! அணைந்த அந்த உலையில் இருந்து, இனிமையான ஓசையுடன் அந்தக் குட்டிகள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. தாய் பூனை அளவு கடந்த ஆனந்தத்தோடு குட்டிகளை அணைத்துக் கொண்டது.

நம் குரு மஹராஜ் அந்த அற்புதத்தை நினைவு கூர்ந்தார். பக்த ப்ரஹலாதனுக்காக தூணிலிருந்து வெளிப்பட்ட நரஹரியை தியானித்தார். கோகுலத்திலிருந்து பன்னிரெண்டு கிராமங்களையும், அவற்றின் மக்களான இடையர்களைக் காத்த வைவஸ்வானராநந்தனை துதித்தார். தன் சிறுவிரலால் கோவர்தன பர்வதத்தை உயர்த்திய ஸ்ரீ கிருஷ்ண முராரியை போற்றினார்.

**சாது தாமாஜிபந்த்** என்ற உண்மையான பக்தனுக்காக தாழ்த்தப்பட்டவனாக வேடம் தரித்து வந்து காப்பாற்றியதை நினைவு கூர்ந்தார். முன்னொரு காலத்தில் பிடார் என்றும் பீதர் என்றும் அழைக்கப்படும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அந்த நகரில் முகலாய மன்னன் ஒருவன் ஆண்டு கொண்டிருந்தான். பாதுஷாவின் முன்சீப்பாக ஒரு முக்கிய அரசாங்க பதவியில் இருந்த சாது தாமாஜிபந்த் ஒரு சிறந்த ஹரிபக்தர். எப்போதும் பாண்டுரங்கனை நினைத்து தியானிப்பவர். ஒருமுறை மிகுந்த பஞ்ச காலம் ஏற்பட்டு தானியங்கள், பழங்கள் விளையாததால் வறுமையில் வாடிய மக்கள் சாது தாமாஜி பந்த்திடம் வந்து தங்களுக்கு ஏற்பட்ட கதியைக் கூறி உணவுக்காக தானியம் அளித்து உதவ வேண்டினர். சாது தாமாஜி மிகவும் இளகிய மனம் படைத்தவர். அவர் உடனே தம் பாதுகாப்பில் இருந்த பீதர் பாதுஷாவின் கஜானாவின் தானியங்கள் அனைத்தையும் எடுத்து ஏழை மக்களுக்கு, பாதுஷாவிடம் அனுமதி பெறாமலேயே வழங்கிவிட்டார். இச் செய்தி கேட்டு ஆத்திரமடைந்த பாதுஷா தாமாஜியை சிறையில் அடைத்து சித்ரவதை செய்தான். சாது தாமாஜி பாண்டுரங்கனை தியானித்தார்.



அந்த பாதுஷாவின் அரசவையில் பண்டரிபுர பாண்டுரங்கன், தாமே ஒரு தாழ்த்தப்பட்டவனாக வேடம் பூண்டு அரசவைக்கு வந்தார். அரசரும் அவர் யார்? எங்கிருந்து வருகிறார்? வருகையின நோக்கம் எல்லாவற்றையும் கேட்டார். அதற்கு நம் ஸ்ரீஹரி தம்மை பாண்டுரங்கன் அனுப்பி வைத்ததாகவும் தாம் தாமஜி கடனை அடைப்பதற்காக வந்திருப்பதாகவும் கூறினார். அரச சபையில் இக்கூற்றைக் கேட்ட அனைவரும் சிரித்தனர். ஒரு சாதாரண மனிதனிடம், அரசனின் கடனை தீர்க்கும் அளவிற்கு என்ன பொக்கிஷம் இருந்துவிட முடியும் என்று நகைத்தனர். பாதுஷா அவரிடம் உள்ளதை காண்பிக்குமாறு ஆணையிட்டார். நம் ஸ்ரீஹரி தன்னிடம் இருந்த ஒரு சிறு சுருக்குப்பையை பாதுஷாவிடம் சமர்ப்பித்தார். தம்மை கேலி செய்வதாக நினைத்த பாதுஷா சீற்றம் கொண்டார். அவர், ''என்னிடம் வேலை செய்த முன்சீப் தாமாஜி, கிராம மக்கள் அனைவருக்கும் வழங்கிய தானியத்திற்கு ஈடுகட்ட இந்த சுருக்குப் பையைக் காண்பித்து என்னை முட்டாளுக்குகிறாய்'' என்றார்.

ஸ்ரீஹரி பொறுமையாக அந்தச் சுருக்குப்பையை அரச சபைக்கு நடுவில் தலைகீழாக திருப்பினார்! என்ன அற்புதம்! அந்த சிறிய பையிலிருந்து தொடர்ந்து தங்க காசுகள் கொட்டிக் கொண்டே இருந்தன. அவற்றைக் கண்டவுடன் அங்கிருந்த அனைவரும் அதிசயத்தால் வாயடைத்துப் போனார்கள். பாதுஷாவும் இச்செயல் நிச்சயம் தெய்வத்தின் செயலாகத் தான் இருக்க வேண்டும என்று நினைத்து சாது தாமாஜியிடம் மன்னிப்பு வேண்டி விடுதலை செய்தார்.

பாதுஷா ஸ்ரீஹரியிடம் சென்று, ''உன் பண்டரிபுர பாண்டுரங்கனை நானும் தரிசிக்க வேண்டும் என்னையும் அழைத்துச் செல், அத்துடன் என் மகள் ஒரு பிறவி ஊமையாவாள், அந்தத் தெய்வத்திற்கு சக்தி இருந்தால் என் மகளை பேசவைக்கட்டும்'' என்று சொல்லி தன் மகளையும் அழைத்துக் கொண்டு அந்த முகலாய மன்னன் பண்டரிபுரத்தை அடைந்தார். ஸ்ரீஹரி பாதுஷாவை கோவிலின் வாயிலில் நிற்க வைத்து விட்டு உள்ளே சென்றவர் திரும்பவே இல்லை. பாதுஷாவிற்கு அப்போது தான் அரச சபைக்கு வந்தது வேறு யாருமல்ல அந்த பாண்டுரங்கனே என்று புரிய வந்தது. அவருக்கு என்ன பேசுவது என்று தெரியாமல் அதிர்ச்சியில் வாயடைத்து நின்றார். ஆனால் அவரின் செல்வ மகள் வாய் திறந்து பேச ஆரம்பித்து விட்டாள். பாண்டுரங்கனின் இந்த அற்புத லீலையை நம் குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் நினைவு கூர்ந்தார்.

அது மட்டுமல்ல மாடுகள் மேய்க்கும் தொழில் செய்த சாது, சோகாமேலா என்பவருக்கு ஸ்ரீஹரி தாமே மாடு மேய்த்ததையும் நினைவு கூர்ந்தார். ஒரு சமயம் **சாது சோகாமேலா** தன் எஜமானரின் மாடுகளை ஓட்டிக் கொண்டு வயல் வெளிக்கு சென்றார். அவர் பாண்டுரங்கனையே தன் உலகமாக நினைத்துக் கொண்டிருப்பவர். ஸ்ரீஹரியை நினைத்து பாட ஆரம்பித்து விட்டால். தம்மைச் சுற்றி என்ன நடந்தாலும் அதைப்பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது. அன்று மாடுகளை வயலில் மேயவிட்டு அவர் பாண்டுரங்கனை நினைத்து பஜனை செய்ய ஆரம்பித்தார். பொழுதும் சாய்ந்தது, அவருக்கு தாம் எங்கு இருக்கிறோம்!

தம் எஜமானர் தமக்கு இட்ட கட்டளை யாவற்றையும் மறந்து ஸ்ரீஹரியை மட்டுமே நினைத்து பாடிக் கொண்டிருந்தார். நன்றாக இருட்டத் தொடங்கியதும் சுய நினைவிற்கு வந்தார். அப்போதுதான் தாம் எஜமானின் மாடுகளை அழைத்துக் கொண்டு மேய்க்க வந்தது அவருக்கு நினைவில் வந்தது. மிகுந்த வருத்தத்துடன் வீடு திரும்பினார். தம் எஜமானரிடம் சென்று நடந்தவற்றைக் கூறி மன்னிக்க வேண்டினார். அதற்கு எஜமானர் சிரித்துக் கொண்டே, ''என்ன சோகாமேலா உனக்கு சித்த பிரமை ஏற்பட்டுவிட்டதா! பொழுது சாய்வதற்குள் மாடுகளை கொண்டு வந்து கொட்டிலில் அடைத்து விட்டு என்னிடம் போய் வருகிறேன் என்று சொல்லி விட்டுத்தானே சென்றாய்! இப்போது நடு நிசியில் வந்து மாடுகளை அழைத்து வரவில்லை என்கிறாய்! என்ன ஆயிற்று உனக்கு!'' என்றார். என்ன அற்புதம்! தன் பக்தனின் பக்தியையும் அதே சமயம் அவர் கடமையையும் கருத்தில் கொண்டு, அவருக்கு பதில் தாமே மாடுகளை வீடு திரும்பச் செய்த பாண்டுரங்கனின் மகிமையை என்னவென்று போற்றுவேன்! என்று நம் குரு பாண்டுரங்கனை போற்றித் துதித்தார்.

இதே போல் ஒரு சமயம் **சாது நாமதேவ்** என்ற ஞானி வறண்ட கிணற்றில், கடுமையான கோடை வேளையில் வெப்பம் மிகுந்த மார்வாட்ஆலியில் ஹரியைத் துதித்து தண்ணீர் வரவழைத்ததையும் பக்தியோடு நினைவு கூர்ந்தார். இவ்வாறு கஜானன் மகராஜ் இறைவனின் லீலைகளை போற்றி தண்ணீருக்காக வேண்டினார். தூரத்தில் நின்று அவர்தம் செய்கைகளை பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கரா அருவி போல பாய்ந்து வந்த நீரூற்றை பார்த்து இந்த சாது சாமான்ய மனிதரல்ல, இவர் இறைவனின் அவதாரம் என்று உணர்ந்து விரைந்து வந்து தம் சத்குருவின் பாதங்களில் தஞ்சமடைந்தார். அதற்குள் அந்தக் கிணறு நீரால்



வழிந்தது. ''ஸ்வாமி! தாங்கள் யார் என்று உணர்ந்து கொள்ளாமல் தவறிழைத்து விட்டேன்! என்னை மன்னித்தருளுங்கள்! பசுக்களை மேய்க்கும் இடையர்கள் ஸ்ரீ கிருஷ்ணரை பகவான் என்று உணராமல் தவறாகப் பேசியதை எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் மன்னித்தாரோ அதுபோல இந்த அறிவற்ற குழந்தையை மன்னித்தருளுங்கள் ஸ்வாமி! எவருடைய வெளித் தோற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டு அவரைப்பற்றி எந்த தவறான முடிவுக்கும் வரக்கூடாது என்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன் ஸ்வாமி! தங்களுடைய இத்தகைய அற்புதத்தால் என் அறிவுக்கண் திறந்தது! சிந்தை தெளிந்து விட்டது ஸ்வாமி! இனி நான் தங்களை விட்டு ஒருபோதும் அகல மாட்டேன்! தாங்கள் ஒரு தாயாக இந்த குழந்தையை ஸ்வீகரிக்க வேண்டும்! வெறுத்து என்னை தனிமைப்படுத்தாதீர்கள் ஸ்வாமி!'' என்று பலவாறு போற்றித்துதித்து தம் குருவின் பாதத்தில் சரணடைந்தான் பாஸ்கரன்.

சத்குரு பாஸ்கராவிடம், ''ஏன் பிதற்றுகிறாய் பாஸ்கரா! நான் இங்கு தண்ணீர் வரவழைத்ததற்கு காரணம் என்ன தெரியுமா! தினமும் நீ பல மைல்கல் தொலைவில் சென்று தண்ணீருக்காக போராடிக் கொண்டு வருவதை நிறுத்தவே நான் இவ்வாறு செய்தேன்! உன்னை ஒருபோதும் நான் தவறாக நினைக்கவில்லை! இந்த தண்ணீரில் நீ நல்ல வளமான பயிர்களை உருவாக்கி, எல்லோருக்கும் உணவளிப்பாய்!'' என்று மிகச் சாதாரண தொனியில் கூறினார். இதுவே நம் குருவின் பெருமையாகும் அசாதாரணமான ஒரு செயலைச் செய்த பின்னரும் அதை ஒரு பொருட்டாகவே நினைக்காமல் அதிலிருந்து விலகி நிற்பது ஞானிகளால் மட்டுமே இயலும். அது சாமான்ய மனிதரால் ஒரு போதும் சாத்தியமாகாது.

பாஸ்கரா, ''ஸ்வாமி நான் குற்ற உணர்ச்சியில் வருந்தி நிற்கின்றேன்! வறண்டு கிடந்த இந்த கிணற்றை போல் இதுவரை நாளும் இருந்தேன், தாம் எம் புத்தியை பரந்த மனப்பான்மை என்னும் தண்ணீரால் நிரப்பினீர்கள், ஸ்வாமி தங்கள் மேல் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை என்ற இந்த நீரூற்றைக் கொண்டு நான் ஆழ்ந்த பக்தியினால் ஆன பழத் தோட்டத்தை உருவாக்குவேன். என்னை ஆசிர்வதியுங்கள் ஸ்வாமி! நல்ல சிந்தனைகள் என்னுள் உருவானதைப் போன்ற மரக்கன்றுகளை நட்டு மரங்கள் வளர்ப்பேன்! தீர்மானமான செயலைப்போன்ற மலர்களையும் பழங்களையும் கொண்ட மரங்களை உருவாக்குவேன்! இயந்திரமான இவ்வுலக வாழ்க்கை பந்தங்களில்

இருந்து விலகி, அதிலிருந்து நான் கவரப்படாமல் என் கடமையைச் செய்ய என்னை ஆசிர்வதியுங்கள் ஸ்வாமி'' என்று ஆனந்தமாக நம் சத்குருவின் சரணங்களை ஸ்பரிசித்து ஆசிபெற்றான்.

சத்குருவின் ஆசியைப் பெற்ற பாஸ்கராவின் சிந்தனையில் எத்தனை மாற்றங்கள்! குருவின் பாதங்களை ஸ்பரிசிக்கும் பாக்கியம் பெற்றவன், எத்தகைய இழிந்த நிலையில் முன்னர் இருந்தாலும் மிக உயர்ந்த உன்னதமான நிலைக்க எடுத்துச் செல்லப்படுவான் என்பதை நாம் கூறவும் வேண்டுமா!

இறையருள் பெற்ற ஞானி, பக்த துகாராம் தன்னுடைய சரிதையில், ஒரு ஞானியின், சத்குருவின், சாது புருஷரின் சந்திப்பு ஒருவரை எத்தகைய உன்னதமான நிலைக்கு கொண்டு செல்லப்படுவதைப் பற்றி கூறியுள்ளார். நம் குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் பல ஆண்டுகளாக வறண்ட கிணற்றில் அற்புதமான நீரூற்றை வரவழைத்த இந்தச் செய்தி காட்டுத்தீயாக சுற்றியுள்ள எல்லா கிராமங்களுக்கும் பரவியது. அனைத்து கிராமங்களில் இருந்தும் மக்கள் கூட்டமாக வந்து சத்குருவை தரிசித்துவிட்டு, அந்தக் கிணற்றின் தண்ணீரில் தங்கள் தாகத்தை தணித்துக் கொண்டு சென்றனர். தேவர்களின் அமிர்தத்திற்கு நிகரான சுவையான அந்த நீரைப் பருகி அனைவரும் இத்தகைய ஒரு மகானை தாங்கள் தரிசித்ததால் ஆனந்தம் அடைந்தனர். எவ்வாறு தேன் ஈக்கள் தேன் கூட்டை மொய்த்துக் கொண்டு இருக்குமோ, எவ்வாறு எறும்புகளின் பாதை சர்க்கரை கட்டியை அடைவதில் இருக்குமோ அவ்வாறு மக்கள் திரளாக வந்து சத்குருவை தரிசித்தனர். அவர்கள் அனைவரின் அன்பையும் பெற்ற நம் குரு அட்காவ் கிராமம் செல்லும் எண்ணத்தை கைவிட்டு மறுபடி ஷேக்காவ் கிராமம் திரும்பினார். இம்முறை நம் பாஸ்கரா சத்குருவை பிரிய மனதின்றி தாமும் அவருடன் வந்தார். நம் குரு எந்த நோக்கத்திற்காக அட்காவ் என்ற கிராமத்திற்கு செல்ல நினைத்தாரோ அதை அதற்கு முன்னரே நிறைவேற்றிவிட்டார்.

ஞானிகளின் சங்கல்பத்தை தெய்வம் உடனுக்குடன் உறுதியாக்கிவிடும் என்பதை நாம் நன்கு உணரவேண்டும். இந்தக் கருத்தை நம் மனதில் கொண்டால் நம் வாழ்க்கை எப்போதும் வளத்துடனும், நலத்துடனும் அமையும் என்ற நம்பிக்கையுடன் அடுத்த அத்தியாயத்தில் நம் சத்குரு எவ்வாறு தேனீக்களிடம் உரையாடினார் என்பதை காணலாம்.

**- ஜெய் கஜானன் -**



# அத்தியாயம் - 6

ஜெய் கஜானன் மகராஜ்

முழுமுதற் கடவுளான கணபதியை துதிக்கின்றேன். விக்னேஷ்வரா! நீரே எல்லா மங்கல நிகழ்வுகளுக்கும் மூலாதாரமாக விளங்குபவர். குருவின் கருணையையும் அனுக்கிரஹத்தையும் பெற்றவர்கள், தமக்கு வரவிருக்கும் எல்லா துர்சம்பவங்களிலிருந்தும் தப்பித்து விடுவார்கள். அவ்வாறே! நான் தம்முடைய வாயிற்கதவில் மிகுந்த நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் காத்துக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய இந்த நம்பிக்கையை, தாம் தோற்கச் செய்தால் நான் தங்களுக்கும், தம்மைப் போன்ற ஞானியர்கட்கும் இழிவை ஏற்படுத்திய பாவத்தை செய்தேவனாவேன்.

ஹே மாதவா! என்னை வெறுத்து ஒதுக்காதே! இந்தக் குழந்தையின் வேண்டுகோளை ஏற்று எனக்கு கருணை காட்டுவாயாக! எவ்வாறு ஒரு தாய் தன் குழந்தை செய்யும் எல்லா தவறுகளையும் பொறுப்பார்களோ அது போல தாமும் என்னைக் காக்க வேண்டுகிறேன்!

ஒரு சமயம் நம் பங்கட்லால் தமது நண்பர்களை மகிழ்விக்க, தமது பண்ணை வீட்டில் ஒரு விழாவிற்கும், விருந்திற்கும் ஏற்பாடு செய்தார். அந்த விழாவில் நன்கு செழுமையாக விளைந்த சோளக் கதிர்களை தீயில் வாட்டி, நண்பர்களுக்கு அளிக்க விரும்பினார். அந்த விருந்தில், சிறப்பு விருந்தினராக நமது சத்குரு ஸ்ரீகஜானன் மகராஜ் அழைக்கப்பட்டு இருந்தார். அறுவடைக் காலம் முடிந்த பிறகு பங்கட்லாலின், பெரிய பண்ணை வீட்டில், அவரின் நண்பர்கள், அனைவரும் ஒரு பெரிய கிணற்றின், அருகில் அமர்ந்து கொண்டு இருந்தனர். வயதில் முதிர்ந்தவர்கள், நிறைய குவளைகளில் தண்ணீர் நிரப்பி கைகளில் வைத்திருந்தனர்.

சுற்றி இருந்த பெரிய புளிய மரங்களுக்கு அடியில், பணியாட்கள் அமர்ந்து ஆங்காங்கே தீ மூட்டி, சோளக் கதிர்களை சுட்டு, அனைவருக்கும் அளித்துக் கொண்டு இருந்தனர். நிறைய இடங்களில் தீ மூட்டியதால் நெருப்பும், புகையும் அடர்ந்து மேலே பரவியது. அந்த வெப்பத்தையும், புகையையும் சகிக்க முடியாமல், அந்த மரங்களில் மேல் பெரியதாக இருந்த தேன் கூட்டில் இருந்து தேனீக்கள் புறப்பட ஆயத்தமாயின.

விஷ அம்புள்ள, காட்டுத் தேனீக்கள் விரைந்து வெளிவரத் தொடங்கின. சோளக் கதிர்களை உண்டு மகிழ அங்கு காத்துக் கொண்டிருந்த விருந்தினர்கள் அனைவரும், காட்டாற்றின் வெள்ளம் போல் சீறிப் பாய்ந்து வந்த தேனீக்களைக் கண்டதும், அலறிக் கொண்டு ஓடி தங்களது போர்வையை எடுத்து வந்து முகம், உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு அமர்ந்தனர். தங்களின் நலனைக் குறித்து கவலை கொண்டு, தேனீக்களிடம் இருந்து, தம்மைக் காத்துக் கொண்டனர்.

இவ்வுலகில் வாழும் எல்லோரும் தங்களுடைய நலனையே விரும்புகின்றனர். அதைக் காப்பதற்கு இயன்ற அளவு அக்கறை எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் நமது சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களை தேனீக்கள் சுற்றி வளைத்துக் கொண்டன. அவர் தம்மைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்த தேனீக்களைப் பார்த்து, "நான் தான் தேனீ! அதன் விஷ அம்புகளும் நானே! அவை கட்டி இருக்கும் தேன் கூடும் நானே! இந்த நாடகத்தில் நானும் ஒரு பகுதியாவேன்! நானே விளைந்த சோளக் கதிர்! அதை உண்டு மகிழ்பவனும் நானே! இப் பிரபஞ்சத்தில் எங்கு சென்றாலும் எல்லா நிகழ்வுகளும் இந்த அண்ட நிறுவனத்தின் ஒரு பகுதியாகும் (Cosmic entity).

அந்த விஷ அம்புகள் உள்ள தேனீக்கள், நமது சத்குருவைச் சுற்றி ஒரு பெரிய கூடு கட்டியதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில், அவர் முகம், உடல், கை, கால்கள் முழுவதையும் சூழ்ந்து விட்டன. ஒரு சிறிய இடைவெளி கூட இல்லாமல், குருவின் உடலைச் சுற்றி முழுமையாக வளைத்து மொய்த்தன. அந்த தேனீக்கள் அம்புகளால் நம் சத்குருவை தலை முதல் கால் வரை துளைத்து எடுத்து விட்டன. சத்குரு அமைதியாக அமர்ந்து கொண்டு இருந்தார். சுற்றி அமர்ந்து கொண்டு இருந்த அனைவரும் செய்வது அறியாது தவித்து, தங்களைக் காத்துக் கொள்ள வேண்டி, அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதற்குள் பதறிப்போன பங்கட்லால், குருவை இவ்வாறு, இந்த இடத்திற்கு அழைத்து வந்தது, பெரிய தவறென உணர்ந்தார். பங்கட்லால், குருவை காப்பாற்ற வேண்டி தவித்த தவிப்பை சத்குரு தம் ஞான திருஷ்டியில் அறிந்தார். இதற்குள் காட்டுத் தேனீக்கள், தேன் கூட்டைச் சூழ்ந்து கொண்டு இருப்பதைப் போல, நம் சத்குருவை சூழ்ந்து கொண்டு அம்புகளால் அவர்தம் உடலை



துளைத்து விட்டன. இத்தகைய நிலையிலும், சத்குரு அமைதியாக, தம்மைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கம், இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த பங்கட்லால் ஒருவருக்காவது இருந்ததைக் கண்டு ஆனந்தமடைந்தார். அவர் உடலில் எந்தச் சலனமும் இல்லை. தமக்கு எதுவுமே நடவாததைப் போல் அமர்ந்து இருந்தார். நமது சத்குரு. பின்னர் அந்தத் தேனீக்களைப் பார்த்து, "ஹே தேனீக்களே! இப்பொழுது வேலை முடிந்து, உங்களுக்கு ஓய்வு எடுக்கும் நேரம் வந்துவிட்டது. அதனால் நீங்கள் அனைவரும் சென்று, ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று நிதானமாக கூறினார். அவர் கூறி முடித்தவுடன், என்ன அற்புதம்! அனைத்து தேனீக்களும், உடனடியாகச் சென்று தங்கள் கூட்டை ஆக்கிரமித்தன. சத்குருவின் உத்தரவிற்கு பணிந்து, ஒரு நிமிட காலத்திற்குள் எல்லா தேனீக்களும், அவரை விட்டுச் சென்றன. சத்குரு சிரித்துக் கொண்டே, "பங்கட்லால், என் உடலைப் பார்த்தாயா! நீ தேனீக்களுக்கும் இன்று சிறப்பான விருந்தினை அளித்திருக்கிறாய்" என்றார்.

இங்கு, நாம் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம், விருந்து உண்டு மகிழ நம்முடன் நூற்றுக் கணக்கில் நண்பர்கள் கூடுவர். ஆபத்துக் காலத்தில், நம்மைச் சுற்றி அவர்களில் ஒருவர் கூட இருக்கமாட்டார். ஆபத்து சூழும் காலத்தில், எல்லாம் வல்ல இறைவன் மட்டுமே நம்மைக் காப்பாற்றுவார். விஷ அம்புகள் கொண்ட தேனீக்கள், தாக்க வரும் சமயத்தில் விருந்து உண்டு மகிழ வந்தவர்கள் அனைவரும் ஓடிச் சென்று விட்டனர்.

பங்கட்லால், சத்குருவின் பாதங்களில் விழுந்து மன்னிப்பு வேண்டினார். "ஸ்வாமி! தங்களுக்கு இத்தகைய கொடுமை நிகழ்ந்ததற்கு நானே காரணம், என்னை மன்னித்து அருளுங்கள்! தங்கள் உடல் முழுவதும் கடித்துள்ள தேனீக்களின் அம்புகளை, உடலில் இருந்து பிரித்து எடுப்பதற்கு, உடனே பொற்கொல்லர் ஒருவரை, அழைத்து வருகிறேன்" என்றார். சத்குரு, "பங்கட்லால், இது ஒன்றும் பெரிய தவறு அல்ல! கடிப்பது, தேனீக்களின் இயற்கையான குணம், அதனுடைய இயல்பிற்கு ஏற்றவாறு அவை நடந்து கொண்டது.

இந்த விஷ அம்புகளும், கடிகளும் என்னை ஒன்றும் செய்து விட முடியாது. அனைத்து தேனீக்களும் இறைவனின் படைப்பில் ஒரு பகுதியே ஆகும். நானும் அவ்வாறே, அவரின் அவதாரமாவேன்! தண்ணீர் அடித்து தண்ணீருக்கு வலிக்கும் என்று

உன்னால் கூற முடியுமோ?'' என்ற இந்த தத்துவத்தை கேட்டவுடன், பங்கட்லால் விழிப்புணர்வைப் பெற்று மகிழ்ந்தார். எனினும் அவர் மனம் பதைத்து ஒரு பொற்கொல்லரை அழைத்து வந்தார்.

சத்குரு சிரித்துக் கொண்டே, ''பங்கட்லால், உன்னாலும், மற்ற யாராலும் இந்த அம்புகளை என் உடலில், தேடிக் காண முடியாது! அவ்வாறு இருக்க எப்படி அவற்றை பிரித்து எடுக்க முடியும்'' என்றார். சத்குரு, தன் சுவாசம் அடக்கி, ஸ்வாசத்தை மிக நீளமாக இழுத்து சற்று நேரம் கழித்து, திருப்பிச் செலுத்திய நேரத்தில், என்ன அற்புதம்! அவரின் உடலைத் துளைத்த அனைத்து விஷ அம்புகளும் தாமாகவே உடலைவிட்டு தெறித்து நாலாபுறங்களிலும் கீழே விழுந்தன. சுற்றி இருந்து இந்தக் காட்சியைக் கண்டவர்கள், மெய்சிலிர்த்து என்ன பேசுவது என்று தெரியாமல் இந்த அதிசயத்தைக் கண்டு வியந்தனர். நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் அற்புத சக்தியை உணர்ந்தனர்.

கருணையே உருவான நம் சத்குரு, மறுபடியும் அவர்களை ஒன்றாகக் கூடி அங்கே அமரச் செய்தார். தீயை மூட்டி, சோளக் கதிர்களை வறுத்து எடுக்கும் பணியில் அனைவரும் ஈடுபட்டனர். மகிழ்வோடு வந்தவர்கள் வருத்தத்துடன் வீடு திரும்ப அவர் மனம் இடமளிக்கவில்லை. இதற்கு முன்னர், தீயின் புகை கிளம்பிய சில வினாடிகளில், அத்தனை தேனீக்களும் விரைந்துவந்தன. ஆனால் இப்போது தீ நன்றாக எரிந்த போதும், புகை வானைத் தொடும் அளவிற்கு மேலெழுந்த போதும், குருவின் உத்தரவிற்கு கட்டுப்பட்டு தேனீக்கள் ஒன்று கூட கீழே வரவில்லை. அமைதியாக, அதன் கூட்டைச் சுற்றி அமர்ந்து கொண்டிருந்தன. விருந்தினர்கள் ஆனந்தமாக, சோளக் கதிர்களை சுவைத்து உண்டனர். அது நம் சத்குருவின் மகா ப்ரஸாதம் அல்லவா! விருந்து முடிந்து, அனைவரும் நம் குருவின் லீலையை அனுபவித்து, மகிழ்ந்த உணர்வோடு வீடு திரும்பினர். தன் உடலைச் சுற்றி, ஆயிரக்கணக்கான தேனீக்கள் கடித்துக் கொண்டிருந்த வேளையிலும், சற்றும் தம் நிதானத்தை இழக்காமல் எல்லாவற்றையும் தாம் ஒருவரே தாங்கி, உடன் இருந்த அனைவரையும் காத்து, அவர்களின் மன மகிழ்விற்கும் பங்கம் விளையாதவாறு, விருந்தையும் நடத்தி முடித்த, நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்தம் பாதங்களில் நாம் சரணடைவோமாக!

ஒரு சமயம், ஸ்ரீ நரசிங்கர் என்ற மராத்திய தேசத்து சாது ஒருவர், மனிதர்கள் யாருமே வாழ இயலாத, அடர்ந்த வனப் பிரதேசத்தில் வசித்து வந்தார். அவர் தம்முடைய தூய்மையான



ஆழ்ந்த பக்தியால் இறைவனோடு தம்மையே ஐக்கியமாக்கியவர். அவர் ஸ்ரீ கோட்டாஷய அலி என்பவரின் சிஷ்யரும், மகா ஞானியும் ஆவார். அவரை சென்று காண்பது என்பது, அவ்வளவு எளிதான செயலன்று. அத்தகைய அடர்ந்த காட்டுப்பிரதேசத்தில், மகாராஷ்டிர மாநிலத்தில், அகோட் என்ற பகுதியின் அருகில் வாழ்ந்து வந்தார். அங்கிருந்து முப்பத்தி ஆறு மைல்கல் தொலைவில் வட கிழக்குப் பகுதியில் நம் சத்குருவின் ஷேக்காவ் கிராமம் இருந்தது.

சாது ஸ்ரீ நரசிங்கர் வசித்த, அந்த ஸ்தலத்தில், ஓங்கி வளர்ந்த மரங்களும், அடர்ந்த புதர்கள் நிறைந்ததும், அப்புதரில் கொடிய விஷ நாகங்களும், அவற்றுக்கு இணையான ஜீவராசிகளும் வாழ்ந்து வந்தன. மனிதர்கள் யாருமே அவற்றிற்கு அருகில் செல்ல இயலாத நிலையில், அந்த ஸ்தலத்தில் ஸ்ரீ நரசிங்கர் ஏகாந்தமாக வசித்து வந்தார். அவர் தம்மை முற்றிலும் தனிமைப்படுத்தி, ஆனந்தமாக இறைவனைத் துதித்துக் கொண்டு இருந்தார். அப்பொழுது நமது சத்குருவை அவர் தரிசிக்கும் வேளை வந்துவிட்டது. நம் சத்குரு ஸ்ரீ நரசிங்கரின் தவ வாழ்க்கையை ஆசிர்வதிக்க விரும்பினார். அதனால் அவர் எவ்வித துணையும் இன்றி தாமே தனியாக, அந்தக் காட்டுப் பிரதேசம் சென்று, ஸ்ரீ நரசிங்கரை காண விரும்பினார்.

சத்குருவின் சங்கல்பம், இறைவனின் சங்கல்பமாகும். ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரியான நமது சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், ஸ்ரீ நரசிங்கரைக் காண வேண்டி, தம் பயணத்தை தொடங்கினார். ஞானிகள் ஒருவரை ஒருவர் சந்திப்பதை, முன்னரே அவர்கள் ஞான திருஷ்டியால் அறிந்த, இறைவனால் தீர்மானிக்கப்பட்ட விஷயமாகும். தூய்மையான ஆழ்ந்த பக்தியால், தம்மை இறைவனோடு ஐக்கியப்படுத்திய ஸ்ரீ நரசிங்க மகராஜ், நம் சத்குருவை எதிர் நோக்கி இருந்த ஆவலோடு காத்துக் கொண்டு இருந்தார்.

தண்ணீருடன் தண்ணீர் ஒன்றாகக் கலப்பது போன்ற ஒரே சிந்தனை கொண்ட இரு ஞானிகள், ஒருவரை ஒருவர் சந்திப்பது விசேஷமான உற்சவமாகும். ஸ்ரீ நரசிங்க மகராஜ் ஆனந்தத்தின் எல்லையில் இருந்தார். இத்தகைய விசேஷ உற்சவம், அன்று அந்த வனப்பிரதேசத்தில் நிகழவிருந்தது. ஒருவர் ஹரியாகவும் மற்றவர் ஹரஹர மகாதேவராகவும், ஒருவர் ஸ்ரீ இராமசந்திர மூர்த்தியானால் மற்றவர் ஸ்ரீ முரளிதரராகவும், ஒருவர் சாது புருஷர் ஸ்ரீ வசிஷ்டரானால் மற்றவர் ஸ்ரீ பராசரராகவும், ஒருவர் புனிதமான கங்கை நதியானால் மற்றவர் புனித கோதாவரியாகவும், ஒருவர்

கோஹினூர் வைரமானால் மற்றவர் கௌஸ்துபமணியாகவும், ஒருவர் வைனதேயரானால் (வைனதேயர் என்பது ஸ்ரீ மகாவிஷ்ணுவின் வாகனமாகிய ஸ்ரீ கருட தேவனைக் குறிக்கும் பெயராகும்) மற்றவர் மாதா அஞ்சனி புத்திரராகவும், ஒருவரை ஒருவர் அன்போடு அணைத்துக் கொண்டு, ஆனந்தமாக அருகில் அமர்ந்து கொண்டு, தங்கள் அனுபவங்களை பரிமாற்றம் செய்யத் தொடங்கினர். நம் சத்குரு, ஸ்ரீ நரசிங்கரிடம், குடும்ப வாழ்க்கையை, நீ தேர்ந்தெடுத்த முறை மிகவும் நன்று!

இப்பிரபஞ்சத்தின் அடிப்படைத் தத்துவமான பிரம்மத்தை உணர நான் யோகியாக, யோக மார்க்கத்தை தொடர்ந்தேன். யோக மார்கம், மிகவும் நூதனமான விஷயங்களை உள்ளடக்கியது. அவை மனிதனின் கற்பனைக்கும் எட்டாத அற்புதமாகும். புரிந்து கொள்ள இயலாத சில விஷயங்களை மறைக்கும் வேளையில், நான் மனிதர்களுக்கு நடுவில் சில சமயம், சித்த சுவாதீனம் இல்லாதவரைப் போல நடந்து கொள்ள வேண்டி வருகிறது. நான் உனக்கு யோக மார்கத்தின் அடிப்படைத் தத்துவமான மூன்று வழிகளைக் கூறுகிறேன்.

செயல் (Action). (Devotion) பக்தி. யோக மார்க்கத்தை கையாளும் திறமை (Yogic Ability). இவை மூன்றும் மிக முக்கியமானவை.

இவை மூன்றும் வேறு வேறு வழிகளாக நமக்கு தோன்றினாலும், உண்மையில் அம்மூன்று வழிகளும், ஒரே இலக்கை அடையத்தான் பயன்படுகிறது. யோகா என்பது, உடல், மெய், மனம் இவை மூன்றின் பல்வேறு செய்கைகளை, இயக்கங்களை, நடவடிக்கைகளை தம் கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறது. அப்பொழுது, தன்னிலையை உணர்ந்து கொள்வதோடு அவற்றை வேறுபடுத்திக் காணவும் இயலுகிறது. ஆத்மா, தன்னை அறிந்து கொள்வதன் மூலம், தன்னிலிருந்து விடுதலையாகிறது. யோகி ஒருவர், தன் மார்கத்தை நினைத்து பெருமையும், கர்வமும் கொள்ளும் போது, அவர் அடிப்படை உண்மைக்கு புறம்பானவராக ஆகிவிடுகிறார்.

யோக மார்கத்தை தேர்ந்தெடுக்கும் போது, எவ்வாறு தாமரை இலைமேல் ஒட்டாமல் நீர் அமர்ந்து கொண்டிருக்குமோ, அதைப்போல எல்லாவற்றிலும் இருந்து கொண்டும், அதே சமயம் அவற்றில் இருந்து விடுபட்டவராகவும் இருக்க வேண்டும். இத்தத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டுமானால், கூழாங்கற்கள்



தண்ணீருக்கு அடியில் இருந்தாலும், அவற்றில் ஒரு துளி நீர் கூட உள்வாங்காது இருப்பதைப் போன்ற வாழ்க்கையை வாழ வேண்டும்.

இவ்வுலக வாழ்க்கையில் எதிர்பார்ப்புகள் அற்ற உணர்வை நாம் பெற வேண்டும். இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்த பரமாத்மாவை நோக்கி, நம் கவனத்தை முழுமையாக செலுத்த வேண்டும். அப்பொழுது தான் இயலாதது என்பது எதுவும் இல்லை என்பது நமக்கு புரிய வருகிறது. நீயும், நானும், இறைவனும் ஒன்று தான். நம்மைச் சுற்றி இருக்கும் மக்களும் வேறு அல்ல. இந்த வழியைத் தேர்ந்தெடுப்பவர்கள், அனைவரும் ஒன்றின் கூறுகளே என்ற உண்மையை உணர வேண்டும். அவ்வாறே நடந்து கொள்ளவும் வேண்டும்.

சத்குருவின் இந்த தத்துவ விளக்கத்தை முழுமையாக உள்வாங்கிய, ஸ்ரீ நரசிங்க மகராஜ் பணிவுடன், ''ஸ்வாமி! நான் தங்களை தரிசிக்கும் பாக்கியத்தை அளித்ததற்கு மிகவும் நன்றி உள்ளவனாக இருப்பேன்! இந்தப் பிரபஞ்சத்தில், வாழ்க்கை என்ற வியாபாரம் ஒரு மாயை! அது மதியான நேரத்தில் நம்மைத் தொடரும் நிழலைப் போன்றதாகும்.

தங்களின் பரிந்துரையை நான் மனதார ஏற்றுக் கொள்கிறேன். நாம் என்னைச் சந்திக்க மீண்டும் மீண்டும் வர வேண்டும். இவ்வுலகத்தில், எல்லா நிகழ்வுகளும், முன்னரே இறைவனால் நிர்மானிக்கப்பட்டவையாகும். இருப்பினும் நம் கடமையை நாம் சிறப்பாகச் செய்ய வேண்டும். தங்களுக்காக தங்கள் இளைய சகோதரன், இங்கு எப்போதும் காத்துக் கொண்டிருப்பான்! ஸ்ரீ ராமச்சந்தர மூர்த்தியைக் காண வேண்டி, பல ஆண்டுகாலம் பரதன், நந்திக்கிராமத்தில் காத்துக் கொண்டிருந்ததைப் போல நான் தங்கள் வருகைக்காக காத்துக் காத்துக் கொண்டிருப்பேன்!''

அவர் மேலும், ''ஸ்வாமி! தங்களுடைய யோக ஆற்றலைக் குறித்து நன்கு அறிவேன், தங்களுடைய பாத சுவடுகள் எந்த இடத்திலேயும் படாமல் தாங்கள் நினைத்த மாத்திரத்தில், நினைத்த இடத்திற்கு செல்லும் ஆற்றல் பெற்றவர் என்பதையும் நான் நன்கு அறிவேன். தாங்கள் இங்கு மட்டுமல்ல மூன்று உலகங்களுக்கும், நினைத்த மாத்திரத்தில், செல்லக்கூடிய ஆற்றல் படைத்தவர்'' என்றார். ஞானிகள், இருவருடைய சம்பாஷணை பல்வேறு வித கருத்துக்களை மையமாகக் கொண்டு மிகுந்த அன்புடன் நடந்து முடிந்தது.

உண்மையான ஞானிகள் இயல்பும் இதுவே ஆகும். சாதுக்கள், சன்யாசிகள் என்ற பெயரில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டும், தற்பெருமை பறைசாற்றிக் கொண்டும், மடாதிபதிகளாக செல்வாக்கு பெற்றவர்கள், எல்லோரும் ஞானிகளாகிவிட இயலாது. அவர்களை யாரும் குருவாகத் தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு எந்த விதமான சக்தியும், ஆற்றலும் இல்லை. அவர்கள், தங்கள் மடத்திற்கு சொத்து சேர்ப்பதில் பேராசையும், இச்சையும் கொண்டவர்கள். அவர்களுடைய வழிகாட்டுதல், நம்மை உடைந்த படகு எவ்வாறு நடுக்கடலில் மூழ்கி விடுவது போல நம்மை மூழ்கடிக்கச் செய்யும். அவர்கள் தங்களை பெரிய மடத்தின் அதிபதிகளாக பறை சாற்றிக் கொண்டு மக்களை கவர்வதற்காக விளம்பரம் செய்யும் ஆன்மீக வியாபாரிகள் ஆவார்கள்.

சத்குரு மேலும் ஸ்ரீ நரசிங்கரைப் பார்த்து, ''தனக்கென்று சொந்த மடம் கட்டிக் கொள்வதாலோ அல்லது கவிதைகள், துதிப்பாடல்கள் எழுதுவதாலோ ஒரு மனிதன் ஞானியாகி விட முடியாது. ஒரு மனிதனை, ஞானியின் அந்தஸ்துக்கு கொண்டு செல்வதற்கு, அவன் மடாதிபதியாகவோ அல்லது கவிதை, கட்டுரை, கதை, எழுதுபவனாகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சிறந்த ஞானமும், சுய நலமில்லாத தன்மையும் இருக்க வேண்டியது அவசியம். எவராவது தங்க மூலாம் பூசிய செப்புத் தகடுகளை, தங்கத் தகடுகளாக ஏற்றுக் கொள்வார்களா? எவராவது தங்கள் வீட்டை அலங்கரிக்கும் ராஜகுமாரியான பெண்ணிடத்தில் தகாத முறையில் நடந்து கொள்வார்களா?

நல்ல விழிப்புணர்வுள்ள சிந்தனையும், பரந்த மனப்பான்மையும் கொண்ட ஒருவன் இக்குணங்களின் வாசனையே அற்ற மூர்க்கனிடத்தல் ஒரு நாளும் சேரமாட்டான்'' என்றார். இம்மைக்கும் மறுமைக்கும் நமக்கு வழிகாட்டக் கூடிய குருவைத் தேர்ந்தெடுப்பதில் பலரும் தவறுகிறார்கள், அதனால், ஒரு பயனும் இன்றி இறுதியில் வருந்துகிறார்கள் என்பதை நம் சத்குரு மிகவும் இயல்பாக நமக்கு எடுத்துரைத்தார். நல்ல குருவை, அடையாளம் காணும் அதிர்ஷ்டம் வாழ்க்கையில் எத்தனை மனிதர்களுக்கு கிட்டியுள்ளது! நம் சத்குருவும், அவர் சந்தித்த ஸ்ரீ நரசிங்கரும் உண்மையானவர்களும் மிகவும் அரிதாக நமக்குக் கிடைக்கப் பெற்றவர்களும் ஆவார்கள். புனிதமான கோதாவரி, பாகீரதி ஆறுகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து நடத்திய இந்தச் சந்திப்பு,



அதற்குள் அகோட் கிராம வாசிகள் அனைவருக்கும் காட்டுத் தீயாய் பரவியது.

பூக்களும், தேங்காய்களும் கையில் ஏந்தியபடி மக்கள் சாரை சாரையாக அந்தக் காட்டுப்பிரதேசத்தில் நுழைந்து, நம் சத்குருவைக்காண விரைந்து வந்தனர். ஆனால், அவர்கள் அங்கே சென்று அடையும் வேளையில், நம் சத்குரு, ஸ்ரீ நரசிங்கரிடம், அன்புடன் உத்தரவு பெற்று மாயமானார். அவர் எப்போது எங்கு இருப்பார் என்ற விவரம் தெரிந்திருந்தாலும் நல்லதிர்ஷ்டம் வாய்க்கப்பெற்றவர்களே அவரைக் காண முடியும்.

நம் சத்குரு, அவருடைய வழியைத் தொடர்ந்து வந்தவர்களில் நல்லதிர்ஷ்டம் பெற்ற ஒருவருடன் ஷிவர் (Shivar) என்ற கிராமத்தை வந்து அடைந்தார். ஷிவர் என்ற பகுதி, விதர்ப தேசத்தில், புனிதமான சந்த்ரபாகா நதிக்கரையில், தாரியாபூர் என்ற நகரில், அமைந்து இருந்தது. இப்பகுதி, விட்டோபாவான பண்டரிநாதனின் பண்டரிபுரத்திற்கு சிறிது தொலைவில் இருந்தது.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவிற்கு எண்ணற்ற இடங்களுக்கு சென்று வந்திருக்கிறார். அவர் ஒரு தூய்மையான சந்யாசியானதால், ஒரு இடத்திலும் வெகு நாட்கள் தங்குவதை விரும்பவில்லை. விதர்ப்ப நாட்டில் வ்ராஜபூஷன் (Vrajabhushan) என்ற அந்தணர், வேதசாஸ்திரங்கள் அனைத்தும் நன்கு கற்றுத் தெளிந்து, பகவான் சூரிய தேவனின் சிறந்த பக்தராக இருந்தார். அவர், நான்கு மொழிகளில் பாண்டித்யம் பெற்று இருந்தார். அப்பகுதி வாழ் மக்கள், அனைவரும் மதிக்கத் தகுந்த புகழ் பெற்றவராக இருந்தார். வ்ராஜபூஷன் தினமும், அதிகாலை புனித சந்த்ரபாகா நதியில் நீராடி, ஆதித்ய தேவனை ஆராதித்து, பிரார்த்தனை செய்வதை வழக்கமாக கொண்டு இருந்தார்.

அவருடைய பிரார்த்தனைகள், அவருக்கு சிறந்த பண்டிதர்களை மிகவும் நெருங்கிய நண்பர்களாக அளித்திருந்தன. மனிதர்கள் பெரும்பாலும், தம்மைச் சூழ்ந்து இருப்பவர்களின் சகத்திற்கு ஏற்றவாறு செயல்படுகின்ற குணத்தைக் கொண்டுள்ளனர். நம் வ்ராஜபூஷனருக்கு, அந்த நல்லதிர்ஷ்டம் அவரது நல்ல எண்ணங்களுக்கு ஏற்பவும். இறைவனின் மேல் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையும், அனுதினமும் செய்கின்ற பிரார்த்தனைகளும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தன.

அன்று வழக்கம் போல, வ்ராஜபூஷனர் சந்த்ரபாகா நதியில் ஸ்நானம் செய்து கொண்டு இருந்தார். அவர் ஆதித்ய தேவனை,

பூஜிக்க ஆரம்பித்த வேளையில், தொலைவில் நம் சத்குரு கஜானன் மகராஜ், நதிக்கரையில் கம்பீரமாக அமர்ந்து இருப்பதைக் கண்டார். அவரைக் கண்டதும் சுற்றி இருந்த இருள் நீங்கி, அதிகாலையில், அப்பகுதி ப்ரகாசிக்கத் தொடங்கியது. நமது சத்குருவின் தரிசனத்திற்காக, வைகறையில் இருள் விலகி, மேகங்கள் கலைந்து அந்த இனிமையான காலைப்பொழுது பறவைகளின் சந்தோஷமான ஓசையோடு தங்கள் இறைவனை வரவேற்பது போன்ற ஒரு காட்சியை இயற்கை காண்பித்திருந்தது.

எவ்வாறு அறிவில் சிறந்தவர்கள் தங்கள் தோழமையில் அறிவற்றவர்களை விலக்கி விடுவது போல சுற்றி இருந்த இருள் நீங்கி, சூரிய தேவன் ஆரவாரமாக கிழக்கில் உதயமானார். நமது சத்குரு அமர்ந்து இருந்ததையும் அவரைச் சுற்றி ஒளிக்கதிர்கள் போல அவரது சிஷ்யர்கள் அமர்ந்திருப்பது போன்ற ஒரு பேரின்ப காட்சியை வ்ராஜபூஷன் கண்டார். ப்ரகாசிக்கும் ரூபத்தையும், நீளமான கைகளையும், விழித்த நிலையில், கூர்மையான பார்வை மூக்கின் நுனியிலும் கொண்ட நம் சத்குருவைக் கண்டதும் வ்ராஜபூஷனர் மிகுந்த ஆனந்தத்துடன், அவரை நோக்கி விரைந்து ஓடினார்.

வ்ராஜபூஷனர், நம் சத்குருவின் பாதங்களில், அபிஷேகம் செய்து, மிகுந்த பக்தியுடனும், மரியாதையுடனும் அவர்முன் மண்டியிட்டு, சூரியதேவனின் பன்னிரெண்டு நாமங்களை கூறத் தொடங்கினார். அவருக்கு, நம் சத்குரு, சூரிய தேவனாக காட்சி அளித்தார். சத்குருவுக்கு ஆரத்தி எடுத்து, அவரைத்துதித்து இவ்வாறு பாடினார். ''ஸ்வாமி! இதுவரை நான் செய்த ஆதித்ய பூஜைக்கு இன்று தாங்கள், தங்களுடைய புனிதமான பாதங்களை ஸ்பரிசிக்கச் செய்து எனக்குப் பரிசளித்து விட்டீர்கள்! நான், உங்களிடம் ஆதித்ய தேவனைக் காண்கிறேன்! நீர் தான் படைப்புக் கடவுளான பிரம்ம தேவர், இப்பிரபஞ்சத்தில் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்ததன் காரணமாக உம்மை தரிசிக்கும் பாக்யம் கிடைத்தது. அதன் பலனாக என் கர்மா அழிந்தது! கருணை கூர்ந்து என் மேல் அன்பைப் பொழியுங்கள்! ஸ்வாமி இதையே நான் தங்களிடம் யாசிக்கிறேன்!'' என்று உள்ளம் உருகி பாடியவுடன், நம் சத்குரு ஒரு தாய் தன் குழந்தையை அன்போடு அணைத்துக் கொள்வதைப் போல வ்ராஜபூஷனரை அணைத்துக் கொண்டு அவர் சிரத்தில் தம் கரம் வைத்து ஆசிர்வதித்தார்.

அவரிடம் நம் சத்குரு, ''நீ அனைவராலும் அன்புடனும், மரியாதையுடனும் அழைக்கப்படுவாய்! ஒரு நாளும் உன்



கடமையில் இருந்து தவறாதே! வழிபாட்டு முறைகள் யாவையும் அர்த்தமற்றதாக எண்ண வேண்டாம்! ஆயினும் முழுவதுமாக உன்னை அந்தப்பயிற்சியில் இயந்திர கதியாக மாற்ற வேண்டாம்!

பலனைக் கருத்தில் கொள்ளாதவாறு உன் கடமையைச் செய்! இதுவே, இறைவனை அடைவதற்கு எளிமையான வழியாகும். உன்னுடைய பார்வை எப்போதும் குற்றமில்லாததாக இருக்க வேண்டும்! என்னுடைய கருத்தை மனதில் ஏற்பாயாக! இப்போது, நீ வீடு திரும்பு! உன்னுடைய தியானத்தில், நான் உன்னை சந்திப்பேன்'' என்றார். சத்குருவின் ஆசிர்வாதித்தால் மகிழ்ச்சியோடு வ்ராஜபூஷனர் அவரால் அன்புடன் தமக்கு அளிக்கப்பட்ட ப்ரஸாதமான தேங்காய் துண்டுகளோடு வீடு திரும்பினார்.

நம் சத்குரு, வந்த நோக்கம் நிறைவேறியதால் மீண்டும் ஷேக்காவ் கிராமத்திற்கு திரும்பினார். ஷேக்காவ் என்ற பெயர் இதற்கு முன்னர் ஷிவகாவ் (Shivgaon) ஆக இருந்தது. பல கிராமங்களின் பெயர் திரிந்து, நாளடைவில் எவ்வாறு மாறிவிட்டதோ அதைப் போல ஷிவகாவ் கிராமம், ஷேக்காவ் ஆக மாறிவிட்டது. பாட்டீல் பரம்பரையைச் சேர்ந்த பதினேழு வம்ச பாட்டீல்கள் இங்கு வசித்தனர். ஷேக்காவ் திரும்பிய சத்குரு, நீண்டநாட்கள் அங்கு தங்கவில்லை. அவர்தம் கால்கள் சென்றவிடத்தில் எல்லாம் சென்றார். ஆனால் அவர் நிரந்தரமாக ஒரு இடத்தில் தங்கும் வேளையும் வந்தது.

கோடைகாலம் முடிந்து ஷ்ராவன் எனப்படும் மழைக்காலம் ஆரம்பித்தவுடன், ஷேக்காவ் ஹனுமான் ஆலயத்தில் விழா தொடங்கியது. பாட்டீல் பரம்பரையினர், அவர் குடும்பத்தினர் அனைவரும் ஆலயத்தில் ஒன்றாகக் கூடினர். நாம் முன்னரே குறிப்பிட்ட பாட்டீல் பரம்பரை, சமுகத்தில் மிகவும் அதிகாரமும், அந்தஸ்தும் கொண்ட பரம்பரையாகும். அவர்தம் குடும்ப விழா எதுவாயினும் மக்கள் அனைவரும் இணைந்து பங்கெடுப்பது வழக்கமாகும்.

இந்த ஷ்ராவன் மாதம் முழுவதும் உற்சவங்களும், பண்டிகைகளும், வழிபாடுகளும், விருந்துமாக உற்சாகமாக, மக்களால் கொண்டாடப்படும். இந்த விழாக்களின், தலைவராக பாட்டீல் பரம்பரையைச் சேர்ந்த கந்து பாட்டீல் நியமிக்கப்பட்டார். அவர் மிகச்சிறந்த மனிதர். அதிகாரம் என்பது, எப்போதும் புலித்தோலுக்கு நிகரானது. அது மற்றவர்களுக்கும்,

உற்றவர்களுக்கும், பயத்தை அளிக்கக் கூடிய ஒன்றாகும். எனினும், மிகுந்த மரியாதையோடும், அன்போடும், பக்தியோடும் கிராம மக்கள் பாட்டீல் குடும்பத்துடன் இணைந்து விழாக்களை நடத்தினர். அரசன் பிரஜைக்களுக்கெல்லாம் தலைவனாக இருந்தாலும், அவனால் தனியாக ஒரு செயலையும், வெற்றிகரமாக செய்ய இயலாது. நம் சத்குரு ஒருவாறாக அந்த ஆலயத்திற்குள் வந்து சேர்ந்தார். அவர் ஷ்ராவன் மாதத்தின், உற்சவத்தில் பங்கெடுக்க வந்திருந்தார். அவரைச் சுற்றியுள்ளோர் அவர் எத்தனை நிமிடங்கள் அங்கு, இருப்பாரென்று அறியாதவர்களானாலும், இவ்விழா முடிந்தவுடன் அவர் அங்கேயே தங்கி விடுவாரென்பது இறைவன் மட்டுமே அறிவார். நம் சத்குரு, அந்த ஆலயத்திற்குள் அமர்ந்து கொண்டு நம் பங்கட்லாலிடம், ''நான் இனிமேல் இங்குதான் வாசம் செய்யப்போகிறேன் நீ வருத்தப்படமாட்டாய் என்று நம்புகிறேன்! சந்யாசிகள் வீடுகளில் வசிப்பது, நண்பர்களுடன் சேர்ந்து இருப்பது நல்லதன்று. ஆகவே, என்னுடைய பந்தங்களில் எல்லாம் விடுபட்டு, என் வாழ்க்கை முழுவதும் இந்த ஆலயத்தில் தங்குவதென்று தீர்மானித்திருக்கிறேன். இதற்காக, நான் உன்னை புறக்கணித்ததாக நீ எண்ண வேண்டாம்! என்னை அழைத்தால், உடனுக்குடன் உதவுவதற்கு நான் காத்துக் கொண்டு இருக்கிறேன். ஆதிசங்கராச்சார்யா, எல்லா இடங்களுக்கும் சென்று, தர்மத்தை நிலைநாட்ட வீடு துறந்தார். மச்சீந்திரரும், ஜாலந்தரும் வீடுகளைத் துறந்தவர்கள், மராத்திய வீரர் சிவாஜியை பக்குவப்படுத்திய ஸ்ரீ சமர்த்த இராமதாஸ் வீடு துறந்து, சஜ்ஜனகடா என்ற கானகத்தை தம் அரண்மனையாக ஏற்றார். இதை நீ யோசித்து மறுக்காமல் எனக்கு அனுமதி அளிப்பாயாக!

இந்த இடமும், உன்னுடையதே'' என்று அன்புடன் சத்குரு, பங்கட்லாலிடம் உரைத்தவுடன், பங்கட்லால் செய்வது அறியாது திகைத்தார். சத்குரு, தம்மிடம் எப்போதும் இருப்பதாக வாக்களித்ததால் அவர் அங்கேயே இருப்பதை மறுக்காமல், அவர் உத்திரவை ஏற்று வீடு திரும்பினார் நம் பங்கட்லால். சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், ஷேக்காவ் ஆலயத்தில் தங்கிவிட்ட செய்தி கிராமமக்கள் எல்லோருக்கும் ஆனந்தம் அளித்தது. பாட்டீல் பரம்பரையைச் சேர்ந்த பாஸ்கரபாட்டீல் அவருக்கு சேவை செய்வதற்காக, அவருடன் ஆலயத்திலேயே தங்கி விட்டார். இதை படித்துக்கொண்டிருக்கும், நாமும் உற்சாகமாக ஆலயம் சென்று சத்குருவின் பாதங்களில் பணிவோமாக!

**- ஜெய் கஜானன் -**



## அத்தியாயம் - 7

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! முழுமுதற்கடவுளான கணபதிக்கு என் முதல் வணக்கங்கள்! ஸ்ரீ ராமா! மேகவர்ண மூர்த்தி, மாதா சீதையின் ரூபத்தை உன்னுள் அடக்கியவரே! மகாராஜா தசரதரின் புத்திரரே, ஏராளமான சாதுக்களை இரட்சித்து, ஸ்வர்கத்தை காத்தவரே! உன்னுடைய அனுக்ரஹத்தால் வானரங்கள் இலங்கையின் மீது படையெடுத்து, இராவணனை வீழ்த்தினர், உன்னுடைய ஆசிர்வாதம் பெற்றவர்க்கு வெற்றி நிச்சயம்!

சமூகத்தில் மிக தாழ்த்தப்பட்ட நிலையில், ஒருவர் இருந்தாலும், உன்னுடைய கருணை இருந்தால், அவர் மிக உயர்ந்த நிலையை அடையமுடியும், எனக்கு அந்த அதிர்ஷ்டத்தை நீ தருவாயா! என் நிலைமை மிகவும் பரிதாபத்திற்கு உரியது, நான், ஞானமும், பக்தியும் அறவே இல்லாதவன், என் மனம், எப்போதும் நிலைகுலைந்தும், சந்தேகப்பட்டுக் கொண்டும் உள்ளது.

எல்லாவித தவறான எண்ணங்களும், என் மனதில் வந்து போகின்றன. நான் எவ்வாறு உன் அன்பைப் பெறமுடியும்! அதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது! ஆனால், வேத சாஸ்திரங்கள், எத்தகைய கொடிய பாவிகளையும் நீ மன்னித்து அருளியதாகக் கூறுகிறது! அத்தகைய விடுதலையை, எனக்கு அளிப்பதில் உனக்கு பெரிய விஷயமில்லை! உண்மையான கருணையும், அன்பும், தடுமாறி விழுந்து கொண்டிருப்பவனைத் தாங்கி அவனை ஏற்றுக் கொள்வதால் மட்டுமே வெளிப்படுகிறது. அத்தகைய கருணையைப் பொழிவதில் உனக்கு நிகர் யாரும் இல்லை!

என்னுடைய தோல்வியை மன்னித்து, என்னை தூயவனாக்கி ஏற்றுக் கொள்வாயாக! உனது கருணையினாலும், ஆசிர்வாதத்தாலும் மட்டுமே, என்னால் இப்பணியை முழுமையாகச் செய்ய இயலும். நான் முழுவதுமாக உன் பாதங்களில் என்னை அர்ப்பணிக்கிறேன்!'' என்றார்.

ஷ்ராவன் மாத விழா முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்றைய ஏற்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பு கண்டேராவ் என்ற பாட்டீல் குடும்பத்தின் மூத்தவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. நாம் முன்னரே குறிப்பிட்டவாறு பாட்டீல் பரம்பரை மிகுந்த செல்வாக்கும், அதிகாரமும்,

நிலபுலன்களும், பெரும் நிதியையும் கொண்டு மிகவும் ஆரவாரத்துடன் அப்பகுதியில் வாழ்ந்து வந்தனர். சாதுக்களிடமும், மகான்களிடமும் பக்தியற்றவர்களாகவும் இருந்தனர். காரணம் அவர்களிடம் இல்லாதது எதுவுமே இல்லை என்ற அகம்பாவம் அவர்களிடையே இருந்தது. காண்டேராவ், கிராம தலைவனாக இருந்ததால் அவர் வாரிசுகள் மிகுந்த செருக்கோடும், எல்லோரும் அவர்களிடம் பயந்து நடுங்கும் அளவிற்கு ஆணவத்துடனனும் நடந்து கொண்டனர்.

இனி காண்டேராவின் குடும்பத்தினரைப்பற்றி காண்போம். பாட்டீல் பரம்பரையில் வந்த மஹாதாஜிக்கு இரண்டு மகன்கள் பிறந்தனர். அவர்கள் கத்தாஜி (Kadaji)-யும், குக்காஜியும் (Kukaji) ஆவார்கள். குக்காஜி என்பவர் பண்டரிபுர விட்டோபாவின் (பாண்டுரங்கனின்) தீவிர பக்தராவார். அந்த குடும்பத்தினர் சாது ஸ்ரீகோமாஜி (நாக்ஸாரியில் வாழ்ந்தவர்) என்ற குருவால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்.

அவர்கள் இருவரில் குக்காஜிக்கு வாரிசுகள் இல்லை. கத்தாஜி ஆறு புதல்வர்களைப் பெற்று இருந்தார். அவர்கள் காண்டேராவ், கணபதி, நாராயணன், மாருதி, ஹரி, கிருஷ்ணாஜியும் ஆவார்கள். கத்தாஜியின் மரணத்திற்குப் பின்னர், அவர்தம் ஆறு மகன்களையும், தம் புதல்வர்களாக குக்காஜி வளர்த்தார் அங்கு சுற்றியுள்ள எல்லா கிராமங்களிலும் இவர்கள் அதிகாரமும், செல்வாக்கும் மிகுந்த, பெரிய செல்வந்தர்களாக இருந்தனர்.

குக்காஜியும் ஒரு சமயம் இறந்து விட்டதால், காண்டேராவ் தலைவராக (அந்தக் குடும்பத்தின்) பதவி வகித்தார். அவரது சகோதரர்கள் தங்கள் பொழுது போக்கிற்காக உடல் திண்மையைப் பெருக்கி, அதனை அனைவரிடமும் வெளிப்படுத்தி, மல்யுத்தம் செய்து வெற்றி பெற வேண்டியதே அவர்களின் நோக்கமாக இருந்தது. அவர்கள் கம்பு, வாள், இவற்றை சுழற்றுவதிலும் கைதேர்ந்தவர்களாக விளங்கினர். அவர்களில் சிறந்த வீரனாக ஹரி பாட்டீல் விளங்கினான்.

மக்கள், ஹனுமான் ஆலய விழாவிற்காக, சேவை செய்தாலும் பாட்டீல் பரம்பரையை மகிழ்வூட்டும் வேலையையும், வேறு வழியின்றி செய்து வந்தனர். அவர்தம் குடும்ப செல்வாக்கு காரணமாக, எவரும் அவர்களிடத்தில் விவாதிப்பதற்கு அஞ்சினர். அவர்களின் தலைவனான காண்டேராவ், அந்த கிராமத்தில் உள்ள பெரியவர்கள் அனைவரையும் அவமதித்து, கடுஞ்சொற்கள் கூறி வந்தான். அது மட்டுமல்லாமல், ஞானிகள், மகான்களைக் கூட



அவன் விட்டு வைக்கவில்லை. ஒருநாள் அவன்தம் சகோதரர்களுடன், ஆலயத்தில் பிரவேசித்தான். அவர்கள் அங்கு அமர்ந்து கொண்டிருந்த நம் சத்குரு கஜானன் மகராஜை கேலியாகப் பேசி, அவமானப் படுத்தினார். அந்த கிராமத்தில் தங்களை மட்டுமே யாவரும் வணங்கி போற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்ததால், சத்குருவை அவமதித்தார்கள்.

நம் சத்குருவை குறித்து, அவதூறான வார்த்தைகளைக் கூறி, அவர்தம் பெயரைக் குறித்தும் கேலி செய்து மகிழ்ந்தனர். இறுதியாக, சத்குருவை மல்யுத்தப் போட்டிக்கு அழைத்தனர். அவர் உண்மையான ஞானியானால், தங்களுடைய கைகளையும், தடிகளையும் தடுக்குமாறும், தங்களுடன் நேருக்குநேர் நின்று மல்யுத்தம் செய்யுமாறும் ஆணவத்துடன் அழைத்தனர். இவர்களின் சித்த சுவாதீனமில்லாத செய்கையைக் கண்டு சத்குரு வாய்விட்டுச் சிரித்தார்.

அவர்களின் இப்பேச்சைக் கேட்டதும் பாஸ்கராவிற்கு, மனம் பதறியது. அவர் சத்குருவிடம், ''ஸ்வாமி! நாம் இங்கிருந்து அகோலி சென்று விடலாம், செல்வத்தாலும், அதிகாரத்தாலும், ஆற்றலாலும் கேடு இழந்த இவர்கள், தங்களை துன்புறுத்துவதை நான் காண சகியேன்'' என்றார். நம் சத்குரு சிரித்துக் கொண்டே, ''பாஸ்கரா சற்று பொறு! பாட்டீல் குடும்பத்தினர் என்னிடம் மிகுந்த அன்பு கொண்டவர்கள், அவர்களின் முன்னோர்கள் எனது பக்தர்கள்!

ஆனால் விதிவசத்தால் நல்லொழுக்கத்தையும், அடக்கத்தையும், பணிவையும் கைவிட்டுவிட்டனர். அவர்களை புரிந்து கொள்ள, அவர்கள் அருகில் இருந்து நன்றாக கவனி'' என்று கூறினார். மேலும் அவர், ''அவர்களுக்கும் எனக்கும் உள்ள அன்பான தொடர்பை காண்பாயாக! அவர்களில், ஒவ்வொருவரும் எனது புதல்வனைப் போன்றவர்கள் ஆவார்கள்'' என்றார். தன்னை இகழ்ந்தவரைக்கூட தன் புதல்வனாகக் கருதி, அன்பு செலுத்தும் மனப்பான்மை, நம் சத்குருவுக்கே உரித்தானதாகும்.

இவ்வாறாக பாட்டீல் பரம்பரையின் முன்னோர்கள் பெருமளவு சாது புருஷர்களின் அன்பையும், ஆசிர்வாதத்தையும் பெற்றவர்கள். ஆனால், அதிகாரம் என்பது சிலசமயம் ஆணவத்தை அளிக்கிறது. ஒரு புலி எவ்வாறு பசுவின் குணத்தைப் பெறமுடியும்? கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் தீயானது, எவ்வாறு பனிக்கட்டியை போல் குளிர்ச்சியை தரும்? எங்ஙனம், ஒரு வாளின் நுனி மென்மையாக மழுங்கி இருக்க முடியும்? இந்த துர்குணம், சிறிது காலத்திற்குப் பிறகு, பருவகால மழைநீர்

மண்ணில் விழும் போது, சேறுடன் கலந்து தூய்மையற்றதாக இருந்தாலும், அந்த மாசு சிறிது நாட்களில், குளிர்காலம் தொடங்கும் முன்னரே கீழே தங்கிவிடுகிறது. அதனால் தண்ணீரும் தூய்மையாகி விடுகிறது. அதுபோல, துர்குணங்களும், செய்கைகளும் சில நாட்களில் மறைந்து மனம் அமைதி அடையும் வேளையும் வரும். சத்குருவின் அனுக்ரஹம் அதற்கு அவசியம் தேவைப்படுகிறது.

ஒரு சமயத்தில் அதற்கான வேளையும் வந்து விட்டது. காண்டேராவின் சகோதரர்களில், வீரதீர விளையாட்டுகளில் சிறந்த ஹரி, ஒருநாள், நம் சத்குரு அமர்ந்துள்ள ஹனுமான் ஆலய வளாகத்தில் பிரவேசித்தான். அவன் ஆலயத்தில் நுழைந்தவுடன், கம்பீரமாக அமர்ந்து கொண்டு, எல்லோரையும் ஆசிர்வதித்துக் கொண்டிருந்த நம் சத்குருவைக் கண்டதும், அவர் மகிமை அறியாமல், அவரை சோதித்துப்பார்க்க நினைத்து அவரை மல்யுத்தப் போட்டிக்கு அழைத்தான். அதுமட்டுமல்ல, சத்குருவின் தாரக மந்திரமான "கண்கண் கணாத்த போதே" (கணபதி மந்திரம்) என்ற கணபதி நாமஸ்மரணையையும் கேலி செய்தான். "நீர் எப்போதும் இந்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு எல்லோருடைய இதயத்திலும் உன் மீது மரியாதையையும் பக்தியையும் உருவாக்கிக் கொண்டாய், உங்களது சக்தி, மந்திரம் சொல்வதில் மட்டும் தானா! என்ற எனது சந்தேகத்தை தாம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று குருவை வம்புக்கு இழுத்தான். நீர், என்னை மல்யுத்தப் போட்டியில் வென்றால் நான் உமக்கு பெரிய பரிசு தருகிறேன்" என்றான். சத்குரு சிரித்துக் கொண்டே அமைதியாக இருந்தார்.

சத்குரு ஹரியிடம், "ஹரி! நீ ஒரு சக்தி வாய்ந்த வீரன்! பராக்கிரமசாலி! என்னை இந்த இடத்திலிருந்து, உன் வீரத்தைக் கொண்டு அப்புறப்படுத்து" என்றார். ஹரி உடனே கோபம் கொண்டு, சத்குருவை தன் பலம் கொண்ட மட்டும் இழுத்து, வெளியே தள்ள முயற்சித்தான். அந்தோ பரிதாபம்! தன் முழு பலத்தை பிரயோகித்தும், அவனால் தரையில் ஊன்றிக்கொண்டு இருந்த சத்குருவின் கைகளை கூட நகர்த்த முடியவில்லை. சத்குரு "கண்கண் கணாத்த போதே" என்ற கணபதி மந்திரத்தை தெளிவாகச் சொல்லிக் கொண்டு, மிகவும் இயல்பாக, எதுவுமே நடவாதது போல சிரித்துக் கொண்டு அமர்ந்திருந்தார். ஹரி, தன் மல்யுத்தப் போட்டியில் பயின்ற எல்லா வித்தைகளையும் கையாண்டு, சத்குருவை நகர்த்துவதற்கு முயற்சித்தான். சுற்றி உள்ள எல்லா பகுதிகளிலும்



வீரனாக பேசப்பட்ட ஹரி, சத்குருவின் முன் வாயடைத்து நின்றான். அவன் கை கால்கள் சோர்ந்து, மிகவும் களைத்து விட்டான். இறுதியாக, இத்தனை பலத்தை பிரயோகித்தும் மெல்லிய தேகம் கொண்ட, இந்த சாதுவை, நம்மால், ஒரு அங்குலம் கூட அசைக்க முடியவில்லையே! இவர் நிச்சயமாக பெரிய ஞானியாகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தவனாய் குருவின் பாதங்களில், சாஷ்டாங்கமாக தலை சாய்த்து மன்னிப்பு வேண்டினான்.

சத்குருவின் ஆத்மபலம், பெரிய மலைகளுக்கு நிகரானது, அது, அதி ஆற்றலுடைய யானைக்கு சமமானது. அவர் சக்தியின் முன், இவ்வுலகின் அனைத்து உயிர்களின் சக்தியும் தோற்றுப் போகும். ஹரி, அவர்முன் சக்தியற்ற நரியைப் போலவும், காட்டுப்புலியைப் பார்த்து குரைக்கும் நாயாகவும் தன்னை உணர்ந்தான். இதுவரை அவன் தலை, எந்த சாதுவிடமும் வணங்குவதற்காக குனிந்தது இல்லை. தற்பொழுது, தான் முழுவதுமாக தோற்று போனதை உணர்ந்து, அவர்தம் புனிதமான பாதங்களை சரணடைந்தான்.

சத்குரு சிரித்துக் கொண்டே, "ஹரி என்னை தோற்கடித்து விடு! இல்லையென்றால், நீ வாக்களித்த பரிசினை எனக்குத் தா! மல்யுத்தம், வீரமான ஆண் மகனை உலகிற்கு வெளிப்படுத்தும் வீர விளையாட்டாகும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், தன் சகோதரன் பலராமனுடன் சிறுவயதில் மல்யுத்தம் செய்து விளையாடி மகிழ்ந்தார். அவர்கள் கம்ச தேசத்தை முறைகேடாக ஆட்சி செய்த கொடிய அரசனின், பணியாட்களான முஷ்டிகன் மற்றும் சாணூரை வதம் செய்தனர். நல்ல ஆரோக்கியமான தேகம் தான், சிறந்த செல்வமாக ஒருவனுக்கு கருதப்படுகிறது. இரண்டாவதாக, நில புலன்களும், மூன்றாவதாக செல்வமும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ கிருஷ்ணர், யமுனை நதிக்கரையில், தம் தோழர்களோடு மல்யுத்தப் பயிற்சி செய்து, ஆயர்பாடியில் தோழர்கள் அனைவரையும் சிறந்த மல்யுத்த வீரர்களாக உருவாக்கினார். அதைப் போல இந்த ஷேக்காவ் நகர வாலிபர்களுக்கு, உனக்கு தெரிந்த இந்த வித்தையை கற்றுக் கொடுத்து இந்த கிராம வாலிபர்களை ஆரோக்கியமாகவும், பலசாலியாகவும் மாற்றுவாயாக!

இதுவே, நீ எனக்கு அளிக்கும் பரிசாகும்" என்றார். ஹரி, உடனே அவரை நமஸ்கரித்து, "ஸ்வாமி! தங்களின் ஆசீர்வாதத்தால் மட்டுமே அது சாத்தியமாகும்" என்றான். இந்த தருணத்தில் ஹரி, சத்குருவை பணியும் வித்தையை, சத்குருவிடம் இருந்தே கற்றுக்

கொண்டான். நாம் பெற்று இருக்கும், ஞானம், கல்வி, செல்வம், புகழ், செல்வாக்கு, பதவி, அந்தஸ்து இவை யாவும், நம்மிடம் பணிவு இல்லையெனில் பயனற்றுப்போகும், என்பதை நம் சத்குரு, எத்தனை எளிமையாக ஹரியை உணரவைத்தார். இந்த கருத்து, ஹரிக்கு மட்டுமல்ல, நம் அனைவருக்கும் தான் என்பதை நாம் உணரவேண்டும்.

ஹரி தன் தவறை உணர்ந்து கொண்டான். ஆனால், அவன் சகோதரர்கள் அதை உணரவில்லை. அதனால் அவர்கள் ஹரியை மிகவும் பலஹீனமானவன் என்று கூறினர். அவனிடம், "ஹரி, நாம் அனைவரும் புகழ் பெற்ற பாட்டீல் பரம்பரையைச் சார்ந்தவர்கள், நீ அதை மறந்துவிட்டாயா! இந்த பிரதேசம் முழுவதும், நம்முன் கைகள் கட்டி சேவகம் செய்யும் அளவிற்கு நாம் அதிகாரம் பெற்றவர்கள்! அவ்வாறு இருக்க, உடலில் ஒரு வஸ்திரம் கூட அணியாத ஒரு நிர்வாண சந்நியாசியிடம், தலை குனிந்து நிற்க வேண்டிய அவசியம் இல்லை! அவர் ஒரு சித்த சுவாதீனம் இல்லாதவரானதால், அவரைச் சுற்றி மக்கள் கூட்டம் இருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கமுடியும்! அத்தகைய வீணான, ஒரு உபயோகமும் அற்ற, அந்த செயல்பாட்டை, நாம் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். உடனடியாக நாம் செயலாற்ற வேண்டும். அப்பாவி மக்களை தம் வசமாக்கும் இந்த அறிவற்ற செயலை, நம் உடனே நிறுத்தியாக வேண்டும்!

நம் நகர மக்களை எச்சரித்து, காப்பது நம் கடமையாகும். ஏமாற்றுக்காரர்கள், சாதுவைப் போல வேடமிட்டு திரிகின்றனர்" என்றெல்லாம் கூறி அவர்கள், தங்கள் கைவசம் இருந்த விளைந்த, திடமான பெரிய கரும்புகளை கட்டி எடுத்துக் கொண்டு, சத்குரு அமர்ந்து இருந்த ஆலயத்தினுள் பிரவேசித்தனர். அந்தக் கரும்புகளைக் கொண்டு குருவை அடித்து விரட்டுவதற்காக திட்டமிட்டு வந்தனர்.

சுத்த தங்கம், தன்னுடைய மாசற்ற தன்மையை தீயில் இடப்பட்ட பின்னரே இவ்வுலகத்தாரால் உணரப்படுகிறது. கரும்புகளால் நடந்த சம்பவம் ஒன்றே பக்த துகாராமின் உண்மையான நிலையை உலகிற்கு காட்டியது. அந்த சம்பவத்தை நாம் இங்கு நினைவு கூர்வோம்.

பக்த துகாராம் ஒரு சிறந்த ஹரிபக்தர். ஹரி நாமஸ்மரணையை தம் ஸ்வாசமாகக் கொண்டவர், தம் வாழ்நாள் முழுவதும் ஹரியைத்துதிப்பதிலேயே கழித்தவர். ஹரியின்



விருப்பமும் அதுவே ஆனதால் ஹரி அவர் கனவில் தோன்றி, "துகாராம் நான் உன்னையும் உன் குடும்பத்தையும் கவனித்துக் கொள்கிறேன்! நீ என்னைக் குறித்து பாடல்கள் இயற்றி பாடுவாயாக!" என்று ஆணை பிறப்பித்தவுடன் பக்த துகாராம், தம் குடும்ப சூழ்நிலையை மறந்து, எங்கு சென்றாலும் பண்டரிபுர விட்டலையே தியானித்து பாடல்கள் எழுதி, பாடுவது வழக்கம். அவர் பொருள் ஈட்ட, வேலைக்குச் செல்லாததால், அவர் குடும்பம் வறுமையில் வாடியது. அவர் எந்த வயல்வெளியில் நின்று பாடினாலும், அவர்களின் வயலில் பயிர் செழித்து வளர்ந்த காரணத்தால் வயலுக்கு உரிமையாளர்கள், எல்லோரும் பக்த துகாராமை அழைத்துப் பாடச் சொல்லி மகிழ்ந்தனர். அதற்கு ஈடாக கரும்புகளையும், தானியமும் அளித்தனர்.

பக்த துகாராம் அவற்றை எடுத்துக் கொண்டு, ஆனந்தமாக பண்டரிபுர விட்டலை நினைத்து பாடிக் கொண்டே வந்தார். அவர் வீடு அமைந்த தெருவுக்கு அருகில் வந்ததும், அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர் அனைவரும் அவரிடம் இருந்து கரும்புகளை வாங்கி உண்ண திட்டமிட்டனர். அவர்கள் திட்டப்படி, ஒவ்வொருவரும் அவரிடம் வந்து பாண்டுரங்க விட்டலா என்று விட்டலின் பெயரைக் கூறியதும், நம் துகாராம் ஆனந்தமடைந்து கையில் இருக்கும் கரும்புகளை அவர்கள் எல்லோருக்கும் பகிர்ந்து அளித்து விட்டார். தொலைவில் இருந்து, அந்த காட்சியை பார்த்துக் கொண்டிருந்த மனைவி மிகவும் கோபம் கொண்டு, அவரிடம் எஞ்சியிருந்த ஒரே ஒரு கரும்பை அவர் கையில் இருந்து பறித்து, தூக்கி எறிந்துவிட்டாள். அந்தக் கரும்பு, இரண்டு துண்டுகளாக உடைந்தது. பக்த துகாராம் மிகுந்த மகிழ்ச்சியோடு, "பார்த்தாயா! இந்த ஒரு கரும்பை எப்படி நாம் இருவரும் உண்பது என்று எண்ணிக் கொண்டிருந்தேன், நீ இதை இரண்டாக்கி நம் இருவருக்கும் பகிர்ந்து அளித்துவிட்டாய் இதுவும் விட்டலின் திருவிளையாடல்!" என்று சொல்லி மகிழ்ந்தார்.

இந்த சம்பவம், பக்த துகாராம், தாம் எத்தனை முறைகள் சோதிக்கப்பட்டாலும், இறைவனின் நாமத்தைக் கொண்டு எல்லா சோதனைகளையும் சாதனைகளாக மாற்றிக் காட்டியதை நமக்கு நினைவூட்டுகிறது.

இதே நூற்றாண்டில் வாழ்ந்த மகா ஞானியான ஞானேஷ்வர் பிறப்பால், ஒரு அந்தணர், ஆனால் விதிவசமாக, தன் பெற்றோரை சிறுவயதிலேயே இழந்தார், தம் சகோதரர்களுடன் வறுமையில் வாடியபோதும், இறைவனின் மேல் உள்ள நம்பிக்கையை

விடவில்லை. யாசகம் பெற்று கல்வி பயின்று, வேதசாஸ்திரங்கள் அனைத்தும் இறையருளால் கற்றவர். தம்முடைய பெற்றோரை, தாம் இழக்க காரணமாக இருந்த அந்த கிராம மக்களை நோக்கி இவ்வாறு கூறினார், ''நாம் அனைவரும் பிரம்மம்! காணும் உயிர்கள் அனைத்திலும் இறைவன் இருக்கிறான்! இறைவன் இல்லாத இடம் எதுவுமே இல்லை! உங்களுடைய அஞ்ஞானத்தை போக்கி இறைவனை உங்களிலும் காணுங்கள்'' என்றார்.

உடனே அந்த கிராமவாசியினர், அனைத்து உயிர்களிலும் பிரம்மம் இருப்பதாக பிதற்றுகிறாய்! அப்படியானால், அங்கே சென்று கொண்டிருக்கும் எருமை மாட்டை இழுத்து வரச்சொல்கிறோம், அந்த எருமையிலும் இறைவன் இருக்கிறான் என்பதை நிரூபித்துக் காட்டு! என்று சவால் விட்டு, அங்கு சென்று கொண்டிருந்த வண்டியோட்டியிடம் அவனுடைய எருமை மாட்டை கொண்டுவரச் சொன்னார்கள். அவனும் எருமையை ஓட்டிவந்தான்.

சாது ஸ்ரீஞானேஷ்வர், உடனே இறைவனைத்துதித்து, ''ஸ்வாமி! இந்த எருமை மாட்டின் உயிரில் நீ இருப்பது சத்தியமானால் இந்த உயிரை எல்லா வேதங்களும் உரைக்க ஆணையிடுங்கள்!'' என்று கூறி அந்த எருமை மாட்டின் பின்னால், தன் கரத்தை வைத்தார், அவ்வளவுதான், அடுத்த கணம் என்ன ஆச்சரியம்! அந்த எருமை மாடு, மிகத் தெளிவாக, நான்கு வேதங்களையும் எடுத்து உரைத்தது. அனைவரும் அதிசயத்தில் ஆழ்ந்து, ஞானேஷ்வரரை பணிந்தனர். எத்தகைய சோதனைகளை தாண்டும் போதும், சத்குருவின் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை கொள்ள வேண்டும், அவர், எவ்வாறு துகாராமும், ஞானேஷ்வரும் பலவித சோதனைகளுக்கு ஆளான பிறகு, தங்கள் இறைத்தன்மையை வெளிப்படுத்தினார்களோ, அதைப்போன்று நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கும், தன்னை மெய்ப்பிக்க வேண்டிய சோதனைக் கட்டம் வந்துவிட்டது. சத்குருவின் மகிமையை சோதிக்க, நிறைய கரும்புகளோடு வந்த, காண்டேராவின் சகோதரர்கள், ஆணவத்துடன் ஆலயத்தில் பிரவேசித்தனர்.

சத்குருவின் பெருமையை உணர்ந்த, ஹரி மௌனமாக இருந்தான். மற்ற அனைவருக்கும் அவர் மகிமையை உணர வாய்ப்பளித்து அமைதியாக இருந்தான். காண்டேராவின் மற்ற சகோதரர்கள், சத்குருவை தகாத வார்த்தைகள் கூறி அவரிடம், ''நீ உண்மையான ஞானியானால், இந்த கரும்புகளினால், விழும் அடிகளையும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்'' என்றனர். தன்னைச்சுற்றி நடந்து கொண்டிருந்த அனைத்து



உரையாடல்களையும், தமக்கு விடப்பட்ட சவாலையும் கேட்டு ஸ்ரீ கஜானன் மகராஜ், அமைதியாக உட்கார்ந்து இருந்தார்.

இத்தனை அவதூறான வார்த்தைகளைக் கேட்டும் அமைதியாக இருந்த நம் சத்குருவை பார்த்து, மாருதி என்பவன், ''அவர் மிகவும் குழம்பி இருப்பதால் அவரால் எதையும் நிர்மானிக்க இயலவில்லை'' என்று கூறினான். கணபதி என்பவன் அவர் அரை மனதோடு ஒப்புதல் அளிப்பது போன்று இருப்பதாகக் கூறினான்.

எல்லோரும் வணங்கி, போற்றுதற்குரிய சத்குருவை, ஸ்ரீதத்த அவதாரியை, அவர் மகிமை அறியாமல் காண்டேராவ் சகோதரர்கள் அனைவரும், ஹரியைத் தவிர, சுற்றி வளைத்து நின்று கொண்டு கரும்புகளால் அடிக்க ஆரம்பித்தனர். பாஸ்கராவைத் தவிர எல்லா பக்தர்களும், இந்த காட்சியைக் கண்டு பயந்து ஓடிவிட்டனர்.

பாஸ்கரா அனைவரிடமும் மன்றாடி, ''சத்குருவை சித்ரவதை செய்யவேண்டாம், அது மகா பாவம் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார். மேலும், பாட்டீல் சகோதரர்களிடம், இரக்கமும், கருணையும் மிகுந்த இந்த சாது புருஷரிடம், தங்கள் வீரத்தை காண்பிக்க வேண்டாம். பாட்டீல் சகோதரர்களான, உங்கள் குடும்பத்திற்கு, இந்த பகுதியில் நல்ல பெயரும், அந்தஸ்தும் இருக்கிறது. உங்கள் செல்வாக்கு உள்ள பிரதேசத்தில், உங்களின் பாதுகாப்பில் இருக்கும் எல்லா உயிர்களிடத்தும் நீங்கள் அன்பாக இருக்க வேண்டாமா! உங்களுடைய பார்வையிலும், நம்பிக்கையிலும், அவர் சாது புருஷராக, ஞானியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாம் வசிக்கும் தெருவில் இருக்கும் ஒரு அப்பாவி மனிதனாக நினைத்தாவது இவரிடம் அன்பு காட்ட வேண்டாமா! வீரமுள்ள வேட்டைக்காரர்கள், எல்லோரும் பயந்து நடுங்கும் புலியை, வேட்டையாடுவது வழக்கம், ஆனால் அப்பாவி வெட்டுக்கிளியிடம், தங்கள் வீரத்தை காண்பிக்க மாட்டார்கள்.

இலங்கையின் மகாராஜாவான, இராவணனின் ஆணவத்தை அடக்கி, ராமபக்த ஹனுமான் இலங்கை முழுவதற்கும் தீ வைத்தார். ஆனால், அத்தீயானது ஏழைக்குடிமக்களின் கதவுகளைக் கூட நெருங்கவில்லை!'' இவ்வாறெல்லாம் கூறி, சத்குருவை அவர்களிடம் இருந்து, காப்பாற்ற நினைத்தார் பாஸ்கரா. ஆனால் பாட்டீல் சகோதரர்கள், பாஸ்கராவை, சற்று தள்ளி நிற்குமாறு எச்சரித்தனர். மக்கள் எல்லோரும் இவரை மகான் என்று போற்றுகின்றனர். இவர் உண்மையிலேயே மகானாக இருந்தால்,

தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளட்டும் என்று சொல்லி, பாஸ்கராவை தள்ளிவிட்டு, சத்குருவை தங்கள் கைகளில் உள்ள கரும்புகளால், வயலில் விளைந்த கதிரை, அடித்து நெல்மணிகளை வரவழைப்பது போல, மாறிமாறி அடித்தனர்.

நம்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அத்தனை அடிகளையும் தமது உடலில் தாங்கிக் கொண்டு, புன்னகை பூத்துக் கொண்டிருந்தார். இக்காட்சியை வரைவதற்கு கைகள் மட்டுமல்ல மனதும் வேதனையில் தவிக்கின்றது. இத்தகைய பொக்கிஷத்தை, காயப்படுத்தி, ஆனந்தமடையும் பாட்டீல் சகோதரர்களின் செயல், நமக்கு வருத்தம் விளைவித்தாலும், சத்குரு அவர்களை தம் குழந்தைகளாக எண்ணினார். அவர்கள் தொடர்ந்து அடித்ததால் கைகள் சோர்ந்து, மிகவும் களைப்படைந்துவிட்டனர். ஆனால், அவர்கள் சத்குருவின் சரீரத்தை பார்த்து திகைத்து போயினர். என்ன அற்புதம்! இத்தனை அடிகள் வாங்கியும் உடலில் ஒரு காயமும், அல்லது காயத்தின் சுவடும் கூட அவர் சரீரத்தில் இல்லை. அவர் என்ன சாமான்யமானவரா! ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரியான அவர் ஒரு யோகீஸ்வரர் ஆவார். தெய்வ அவதாரமாக இருந்தும், மானுடர்களின் கைகளில் அடிகள் வாங்கிய காரணம், உலகிற்கு உண்மையை எடுத்துக்காட்டவும், பாட்டீல் சகோதரர்களின் முன்னோர்கள், அவரின் அன்புக்கு பாத்திரமாக இருந்ததால், அவர்களை தண்டிக்காமல், அன்பால் திருத்துவதற்காகவும், இத்தகைய நாடகத்தை நடத்த வேண்டியதாகிறது.

ஞானிகள், எப்போதும் மனிதர்களின் பாவங்களை அழித்து, கர்மாவிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக, பல கடினமான சோதனைகளுக்கு, தம்மைத் தாமே ஆட்படுத்திக் கொள்வர். இது நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களுக்கும் பொருந்தும். அவர் சரீரத்தை, உற்று நோக்கிய பாட்டீல் சகோதரர்கள் பயந்து நடுங்கி, குருவின் பாதங்களில் சரணாகதி அடைந்தனர். தங்களை மன்னிக்கும்படி மன்றாடி வேண்டினர். சத்குரு அமைதியாக அவர்களைப் பார்த்து, ''நீங்கள் மிகவும் தளர்ந்து விட்டீர்கள்! உங்களுக்கு புத்துணர்ச்சி ஊட்ட, இதோ இந்தக் கரும்புகளைப் பிழிந்து நல்ல சுவையுள்ள கரும்புச்சாறு தருகிறேன்! நீங்கள், எல்லோரும் இதைப் பருகி, உங்கள் தாகத்தை, தீர்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி, அங்கிருந்த புதிய கரும்புகளை எடுத்து, எந்த இயந்திரத்தின் உதவியும் இன்றி, தம் கைகளால் மிக எளிதாக பிழிந்து, சாறு எடுத்து அவர்கள் அனைவரின் கைகளிலும்



ஊற்றினார். அவர்கள் மிகுந்த அதிர்ச்சியோடும், பக்தியுடனும் அதை வாங்கிப் பருகினர். தம்மை காயப்படுத்தியவரிடத்தும் அன்பை செலுத்தும் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் பாதங்களை நாமும் ஸ்பரிசித்து வணங்கி நலம் பெறுவோமாக!

ஒரு சிறந்த யோகீஸ்வரரால் மட்டுமே, இது மாதிரியான அற்புதங்கள் செய்யமுடியும். விளைந்த கரும்பின் சாற்றை, இயந்திரத்தின் மூலமே எடுக்க இயலும். இந்த அற்புதத்தை, அவர் உலகிற்கு எடுத்துக்காட்ட விரும்பிய காரணம், யோக நிலையின் மகத்துவத்தையும், யோகாசனத்தின் ஆற்றலையும், அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே! பவித்ரமான யோகநிலையில், பல அற்புத சக்திகளைப் பெறமுடியும். மனதை ஒருமுகப்படுத்தி, அகத்தின் ஆற்றலை அடையாளம் கண்டு கொண்டால், ஒருவன் எத்தகைய கடினமான செயல்களையும் மிகவும் எளிதாக செய்துவிடமுடியும். ஆனால், இது மாதிரியான அற்புத சக்திகளை சுயநலத்திற்காக அல்லாமல் பொது நலத்திற்காக பயன்படுத்தினால் மட்டுமே அது நமக்கு கட்டுப்படும். சத்குரு ஒரு சிறந்த யோகீஸ்வரர். அவர் தனக்கென்று எந்த வசதிகளையும் தேடிப் போகவில்லை. எல்லோரும் உண்டு எறிந்த இலைகளில், மீதமுள்ள உணவை உண்பவர். ஒருவருக்கும் பயன்படாத குட்டைத் தண்ணீரை பருகுபவர். தனக்கென்று ஒரு மடமோ, மண்டபமோ எதுவுமே அவருக்கு தேவைப்படவில்லை. ஒரே ஒரு கோவணத்துடன், தம் கால்கள் செல்லும் பாதையில் சென்று, மக்களின் குறைகளைத் தீர்த்து, தீயவர்களை நல்வழிப்படுத்தி வருவதையே, தம் நோக்கமாகக் கொண்டவர். அவரிடம் அஷ்டசித்திகளும் (Siddhi) கட்டுப்படும். சத்குருவின் இந்த பேராற்றலைக் கண்டு, ஆச்சரியத்தால் அவரை நமஸ்கரித்துவிட்டு, அவர்கள் விரைந்து, தமது மூத்தசகோதரனான காண்டேராவிடம் சென்று நடந்த விஷயத்தை கூறினர்.

சகோதரர்கள் கூறியதைக் கேட்டவுடன் காண்டேராவ், அந்த சாதுவை பார்த்து வர முடிவு செய்தான். ஆனாலும் அவனிடம், பணிவு துளியும் இல்லை. வழக்கமாக, இருவேறு தரப்பினரை நாம் ஒருமையில் அழைக்கும் பழக்கத்தை கொண்டுள்ளோம். ஒன்று, அன்னையிடம் கொண்ட அதிகமான அன்பினால், அன்னையையும், தம் கீழ் பணி செய்யும் வேலையாளையும், தமது நெருங்கிய நண்பரையும் நாம் மரியாதையுடன் அழைக்காவிட்டால் கூட அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால்,

காண்டேராவ் வயது வித்தியாசம் பாராமல், கண்ணில் கண்ட எவருக்கும் மரியாதை அளித்து பேச மாட்டான்.

அவனுடைய அந்த பழக்கத்தினால் தான் சாது ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்குக் கூட மரியாதை அளிக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. அது இயல்பாகவே அவனிடத்தில் இருந்த பழக்கமாகும். அவனுடைய ஹ்ருதயம், தூய்மையான தேங்காயைப் போலவும், வெளித்தோற்றம் தேங்காய் ஓட்டைப் போலவும் இரு வேறு விதமான குறைகளுடன் காணப்பட்டான். ஒருநாள் அவனது சிறிய தந்தையார், குக்காஜி, காண்டேராவை அழைத்து, அவனிடம், சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் நிறைய அற்புதங்களைச் செய்து கொண்டு இருக்கிறார் என்று கூறினாயே! பின் ஏன் அவர் முன் சென்ற போது, வாயை அடைத்து நின்றாய்? எனக்கு நாளுக்கு நாள் வயது ஏறி, முதுமையில் நான் தள்ளாடுகிறேன். நான் இறப்பதற்கு முன் நீ எனக்கு ஒரு பேரக் குழந்தையைப் பெற்று தர வேண்டும்! நீ சொல்லும் அந்த சாது உண்மையிலேயே ஒரு ஞானியானால், எனக்கு ஒரு பேரக் குழந்தை கிடைக்க அவர் வழி செய்யட்டும்! என்றார். காண்டேராவும், குக்காஜியின் சொல்லுக்கு கட்டுப்பட்டு சாதுவைக்காண வந்தான். அவன், சத்குருவிடம் தன் சிறிய தந்தையார் மறைவதற்குள் தன் மூலம் ஒரு பேரக் குழந்தையைக் காண விரும்புவதாகக் கூறினான்.

மேலும் அவன் சத்குருவிடம், "தங்களின் ஆசீர்வாதத்தால், எனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க வேண்டும்" என்று வேண்டினான்." சத்குருவும் சிரித்துக் கொண்டே, "காண்டேராவ் உனக்குத் தான் எல்லா கிராமங்களிலும் அதிகாரமும், செல்வாக்கும் உள்ளதே! பணபலமும், படை பலமும் பெற்ற நீ இவை எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு ஒரு குழந்தையை உன்னால் உருவாக்க இயலாதா? நீ எல்லோருக்கும் உத்தரவு பிறப்பிக்கின்றாய்! உன் அதிகாரத்தை பயன்படுத்தி, படைத்தவனுக்கும் உத்தரவு பிறப்பித்து ஏன் ஒரு குழந்தையை பெற்றுக் கொள்ளக்கூடாது! எதற்காக ஒன்றுமே இல்லாத இந்த ஆண்டியிடம் வருகிறாய்" என்றார்.

காண்டேராவிற்கு இப்போது தான் உண்மை நிலை புரிய வந்தது. அவன் கைகள் தொழுது, மண்டியிட்டு, "ஸ்வாமி! இந்த விஷயம் மனித அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது" என்றான். பயிர்கள் வாடிய போது அது வளர மழைநீர் அவசியம், மழை பொழிவது, என்பது மனிதனின் ஆணைக்குட்பட்ட செயலன்று. எப்போது, இறைவன் கருணையோடு, மழை பெய்வித்து, தண்ணீர் பூமியில் பாய்கிறதோ, அப்பொழுது மட்டுமே, மனிதனால் பயிர் விளைவிக்கப்படுகிறது. தன் உழைப்பிற்கேற்ற பலனையும் தேடிக் கொள்ளமுடிகிறது. இதுதான் என்னுடைய நிலைமை ஸ்வாமி, தங்களுடைய கருணை என் மேல் பொழியட்டும்" என்று மன்றாடினான்.



சத்குரு சிரித்துக் கொண்டே, "நீ என்னிடம் வேண்டி பிச்சை எடுக்க வந்துள்ளாய்! அதனால், நான் உனக்கு ஒரு மகன் பிறக்க ஆசிர்வதிக்கிறேன்! அவனுக்கு பிக்யா என்று நீ பெயர் சூட்ட வேண்டும்" என்றார். மேலும் அவனிடம் சத்குரு, "எல்லாம் என்கையில் இருப்பதாக நீ நினைக்க வேண்டாம், நான் எல்லா வல்ல பரம்பொருளை தியானித்து, உன் ஆசையைப் பூர்த்தி செய்யுமாறு வேண்டுகிறேன் என்றார். அதற்கு பதிலாக நீ படைத்தவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக, உன் கிராமத்தில் வாழும் எல்லா அந்தணர்கட்கும், மாம்பழச்சாறுடன் விருந்து தரவேண்டும்" என்றார். காண்டேராவ் அதற்கு சம்மதித்து, தன் சிறிய தந்தையாரிடம் சென்று நடந்ததைக் கூறினான், இதைக் கேட்ட குக்காஜி, மிகவும் நெகிழ்ந்து அவ்வாறே செய்வதாக ஒப்புதல் அளித்தார். சத்குருவின் வாக்கிற்கு இணங்க பலவருடங்களாக, குழந்தைப்பேறு இல்லாத காண்டேராவின் மனைவி, ஒரு அழகிய ஆண் குழந்தையை ஈன்றாள். சத்குருவின் மகிமையை எண்ணி அனைவரும் மகிழ்ந்தனர்.

காண்டேராவ் சர்க்கரையும், கோதுமையையும் ஏழைகளுக்கு வழங்கினான். ஷேக்காவ் கிராம குழந்தைகள் எல்லோருக்கும் இனிப்பு பதார்த்தங்கள் வழங்கப்பட்டன. சத்குருவின் ஆணைக்கு ஏற்ப அக்குழந்தைக்கு பிக்கு (Bikku), என்று பெயர் சூட்டப்பட்டது. அவனும் வளர்பிறையாக வளர்ந்து சிறந்து விளங்கினான். சத்குருவின் கட்டளைக்கேற்ப, காண்டேராவ் அப்பகுதியில் வாழும் அனைத்து அந்தணர்களுக்கும் அழைப்பு விடுத்து, மாம்பழச்சாறுடன் விருந்தளித்தான். அந்த முறை இன்றளவும், பாட்டீல் பரம்பரையினரால் தொடர்ந்து நடந்து கொண்டுவருகிறது. சத்குருவின் கருணையால், அந்த குழந்தை அவர்கள் வீட்டில் பிறந்து தவழ ஆரம்பித்தது.

பாட்டீல் பரம்பரையினர், நம் சத்குருவின் கிருபையால் நாரிக ஈன்ற செய்தி அனைவருக்கும் எட்டியது. ஆனால் அச்செய்தி, தேஷ்முக் குடும்பத்தாருக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. தேஷ்முக் குடும்பமும், பாட்டீல் குடும்பமும் பரம்பரை எதிரிகள். இருவரும் ஒருவரை ஒருவர் தாக்குதவற்கான

சந்தர்ப்பத்தை எப்போதும் எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருப்பார்கள். குருவின் அருளால் பாட்டீல் பரம்பரையினர் பல நன்மைகளை பெற்றது கண்டு தேஷ்முக் குடும்பம் மிகுந்த கோபமும், பொறாமையும் கொண்டனர். அவர்கள் இருவர் குடும்பமும், கற்று அறிந்த இரண்டு பண்டிதர்களைப் போலவும், வேறுவேறு பதவியில் இருக்கும் இரு மந்திரிகளைப் போலவும், இரண்டு பகையாளிகளைப் போலவும், இரண்டு நாய்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதைப் போல பாட்டீல் குடும்பமும், தேஷ்முக் குடும்பமும் தீராத பகையில் இருந்தது.

தன் பேரனைக் கண்டவுடன் குக்காஜி உயிர் நீத்தார். காண்டேராவிற்கு, இனி தம்மை வழிநடத்திச் செல்ல ஒருவரும் இல்லாதது குறித்து மிகவும் வருந்தினார். காண்டேராவின் இந்த மனநிலை தேஷ்முக் குடும்பத்திற்கும், மிகவும் சாதகமாக இருந்தது. அவர்கள் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி பாட்டீல் குடும்பத்தை நாசம் செய்ய திட்டம் தீட்டினர்.

**- ஜெய் கஜானன் -**





# அத்தியாயம் - 8

ஜெய் கஜானன் மகராஜ்

வசுதேவருக்கும், தேவகி மாதாவுக்கும், ப்ரியமான புதல்வரான ஸ்ரீ கிருஷ்ணரே! ஆயர்பாடியில் கோபகோபிகைகளின்! ரட்சகனாக விளங்கியவனே! அசுரர்களை அழித்து அப்பாவி மக்களைக் காத்தவனே! கருணையோடு என்னை ஆசீர்வதிப்பாயாக! பக்தியையும், தபஸின் நிலையையும் குறித்து எனக்கு போதித்து, வைத்தவர் தாங்கள்! இவை இரண்டும் இன்றி தங்களுடைய உதவியை யாரும் பெற இயலாது. சமஸ்கிருதத்தில் உயர்வாக புகழ்ந்து சொல்லப்பட்டுள்ள பக்தியை நான் உங்களிடம் சமர்ப்பிக்க இயலாத நிலையில் உள்ளேன்! அவையாவும், என் ஞானத்திற்கு எட்டாதவையாக உள்ளன. அதனால், நான் ஊமையாக இருக்கிறேன். தாமரையின் தண்டிலிருந்து தேனை எவ்வாறு ஒரு தவளை எடுக்கமுடியும்! அது போலத்தான் எனது நிலையும் உள்ளது. உங்களுடைய கருணையைப் பெற இயலாத, உபயோகமற்றவனாக இருக்கிறேன். ஏழைகளுக்கு அன்னதானம் அளித்தோ, புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லவோ, உன்னதமான ஆலயங்களுக்கு சென்று தரிசித்தோ, இவையாவும் செய்ய இயலாத நிலையில், என் சரீரமும், கண்களும் உள்ளது. எல்லா திசைகளிலும் உதவியைப் பெறமுடியாத நிலையில் நான் உள்ளேன்!

ஏழைகளின் கனவும், நம்பிக்கையும் ஒரு நாளும் நிறைவேறாது என்று அனைவரும் தெளிவாக கூறுகின்றனர். ஆனால், உன்னுடைய அனுக்ரஹம் இருந்தால், நிச்சயம் எல்லா நம்பிக்கைகளும், கனவும் நிறைவேறும். உனது அருளைப்பெற யாரும் செல்வந்தராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

எவ்வாறு மழைநீர் பூமியில் பாயும்போது நதிகளும், ஆறுகளும், குளங்களும் பாரபட்சமின்றி நிரம்பி வழிவதைப் போல உன்னுடைய கருணை என்னும் ஆனந்த மழையில் நான் நனைய விரும்புகின்றேன். அதிலிருந்து கிடைக்கப்பெறும் ஒரு துளிகூட என் சோதனைகள் யாவற்றையும் தகர்த்துவிடும் என்று நம்பிக்கை கொண்டுள்ளேன்.

சென்ற அத்தியாயத்தில், நாம் பாட்டீல் குடும்பத்திற்கும் தேஷ்முக் குடும்பத்திற்கும் இடையில் உருவான பகையைக் குறித்து

கண்டோம். இதுபோன்ற குடும்ப பகையால், எப்போதும் சண்டையும், சச்சரவும் ஏற்பட்டு, மனம் நிம்மதியின்றி, தவிக்கும் நிலை உருவாகும். காச நோயானது உடலை அரிப்பது போல, பகை சமூகத்தை உருக்குலைத்துவிடும். தேஷ்முக் குடும்பத்தினரின் திட்டமானது, பாட்டீல் குடும்பத்தை பழி வாங்க வேண்டும் என்பதே. அவர்கள் திட்டப்படி, முதல் பகடையை மாரியாமஹர் என்பவர் மூலம் உருட்ட ஆரம்பித்தனர்.

மாரியாமஹர் என்பவன், அந்தப்பகுதி மக்களின் தபால், தந்தி முதலியவற்றை எடுத்துக்கொண்டு இரயில் நிலையத்தில் சேர்த்து, அடுத்த கிராமங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்லும் அரசாங்க வேலையில் இருந்தான். காண்டேராவ், அந்த ஊருக்குத் தலைவன் ஆதலால் அந்தப்பகுதி மக்களின் தபால் முதலியவற்றை ஒப்படைக்க வேண்டியது அவருடைய கடமையாகும்.

தேஷ்முக் குடும்பத்தினர் மாரியாவிடம் அவனுக்கு தங்குமிடம் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுத்து காண்டேராவின் உத்தரவுக்கு, கீழ் பணிய தேவையில்லை என்று கூறி மாரியாவை, காண்டேராவுக்கு எதிராக தூண்டிவிட்டனர். காண்டேராவ், அப்பகுதி மக்களின் தலைவன் ஆனதால், ஷேக்காவ் கிராமத்தின், தகவல் செய்திகளை மாரியாவிடம் கொடுத்து, சேர்க்க வேண்டிய இடத்தில், சேர்க்குமாறு உத்தரவிட்டான். இம்முறை, ஒரு முக்கிய கடிதம் அகோலா நகரத்தின் காவல் நிலையத்திற்கு, அனுப்ப வேண்டியிருந்தது. காண்டேராவ் அக்கடிதத்தை மார்யாவிடம் கொடுத்து, அகோலா காவல் நிலையத்தில் சேர்க்குமாறு உத்தரவிடவே, மார்யா அப்பணியை தாம் செய்ய இயலாது என்று மறுத்தான். மேலும் அவன் தாம் தேஷ்முக் குடும்பத்தினரின் நண்பன் ஆனதால், தாம் இனிமேல் காண்டேராவின் உத்தரவிற்கு பணிய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறினான். அத்தோடு விடாமல், அவன் காண்டேராவின் குடும்பம் குறித்து, தகாத வார்த்தைகள் கூறி அனைவரின் முன்னிலையிலும் காண்டேராவை அவமானப் படுத்தினான்.

காண்டேராவ், அவனை எச்சரித்து அரசாங்க ஊழியர் இவ்வாறு நடந்து கொள்ளலாகாது. அரசாங்க உத்தரவிற்கு கட்டுப்பட்டு அக்கடிதத்தை கொண்டு செல்லுமாறு மீண்டும் எச்சரித்தான். மார்யா இம்முறை மிகவும் தீவிரமாக காண்டேராவை எதிர்க்க ஆரம்பித்தான். அவன் மேலும் மேலும் ஆபாசமான வார்த்தைகளைக் கூறி காண்டேராவ் குடும்பத்தினரை இழிவுபடுத்தவும், காண்டேராவ் பொறுக்க இயலாமல் அருகில்



இருந்த ஒரு தடியால், மார்யாவின் கையில் அடித்தார். கையில் மணிக்கட்டு உடைந்து காயமானதால், மாயாவின் நண்பர்கள், அவனை தேஷ்முக் குடும்பத்தினரிடம் கூட்டிச் சென்றனர். தேஷ்முக் குடும்பத்தினர், மாரியாவை காவல் நிலையத்தில், வழக்கு பதிவு செய்து காண்டேராவை சிறையில் அடைப்பதற்கு ஏற்பாடு செய்தனர். காண்டேராவ் மீது வழக்கு தொடரப்பட்டது. ஷேக்காவ் கிராமத்தில், இத்தனை வருடகாலமாக, அதிகாரமும், செல்வாக்கும் மிக்க தலைவனான, காண்டேராவ் மிகவும் மனம் வருந்தி தன் கஷ்டங்களுக்கான ஒரே தீர்வு, சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் ஒருவரே என்ற முடிவுக்கு வந்து இரவோடு இரவாக அவரைத் தேடி ஓடி வந்தான்.

இதற்கிடையில் காண்டேராவ் குடும்பத்தினர், அகோலா என்ற பகுதியில் இருக்கும் வக்கீல் இடம் சென்று தம் சகோதரரை எங்ஙனம் காப்பாற்றுவது என்பது குறித்து ஆலோசனை நடத்தினர். அனைத்து வழக்குரைஞர்களும், காண்டேராவ் அனைவர் முன்னிலையிலும் செய்த இச்செயலை நியாயப்படுத்த முடியாத காரணத்தால், அவன் சிறையில் தள்ளப்படுவது உறுதியாகும் என்று கூறினார்கள். இச்செய்தி, காட்டுத் தீ போல ஷேக்காவ் கிராமம் முழுவதும், பரவியது. பாட்டீல் குடும்பத்தினர், இத்தனை வருடங்களாக அனுபவித்து வந்த மரியாதையும், அந்தஸ்தும் ஒரே நாளில் தகர்க்கப்படுவது குறித்து, காண்டேராவ் மிகுந்த கவலை கொண்டு, சத்குருவை தஞ்சமடைவது ஒன்றே, தமக்கு ஆறுதல் தரும் என்று, அவர் பாதங்களில் சரணடைந்தார்.

அவன் சத்குருவிடம், ''ஸ்வாமி! நான் செய்தது நிச்சயமாக தவறுதான், ஒப்புக்கொள்கிறேன்! ஆனால், ஒரு அரசாங்க ஊழியர், தம் கடமையைச் செய்ய மறுத்து, கிராம மக்களின் நலனை புறக்கணித்தான். மேலும், என் குடும்பத்தாரைக் குறித்து தகாத வார்த்தைகள் கூறியதால் நான் அவனை அடிக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டேன். எனக்குத் தெரியும்! ஸ்வாமி, நாளை நான் ஒருவேளை சிறை செல்ல வேண்டிவரும், என்னால் என் குடும்பத்தினருக்கும், இத்தகைய அவமானம் நேர்ந்ததால் நான் இன்று இரவே என் உயிரை மாய்த்துக் கொள்ளவும், சித்தமாக உள்ளேன்'' என்று கூறினான்.

சத்குரு சிரித்துக் கொண்டே அவனை தழுவிக் கொண்டார். அவர் காண்டேராவிடம், ''பார்த்தாயா! தேஷ்முக் குடும்பமும் உங்கள் இனத்தவர் தானே! அவர்களோடு ஏன் இந்தப் பகை உணர்வு கொள்ள வேண்டும். சில சமயங்களில், அரசாங்க

ஊழியம் செய்யும்போது, இதுமாதிரியான சோதனைகளுக்கு உள்ளாக நேரிடும்! நீ சிறை செல்லத் தேவையில்லை! அனைவரிடமும் ஒற்றுமையாய் இரு'' என்று ஆசிர்வதித்து அனுப்பினார்.

காண்டேராவ் மேலும் சத்குருவிடம், ''ஸ்வாமி! மகாபாரதத்தில் சிந்து ராஜ்ய அரசன் ஜெயத்ரதனை, அழிப்பேன் என்று அர்ஜுனன் சபதம் செய்தான். அவனால், அந்தக் காரியத்தை செய்ய இயலாததால், தன் வாக்கை காப்பாற்ற, தீயில் குளித்து, தன் உயிரையும் மாய்த்துக் கொள்ளத் தயாராக இருந்தான். இந்நிலையில், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அவனைக் காப்பாற்றவில்லையா! அது போல, ஹஸ்தினாபுர ராஜ சபையில், அனைவரும் கூடியிருந்த வேளையில், ஒருவரும் திரௌபதிக்கு உதவ இயலாத நிலையில், ஸ்ரீ கிருஷ்ணர் வஸ்திரம் அளித்து, மானம் காக்கவில்லையா! அதைப்போல, என் நிலையும், என் குடும்பத்தினரின் நிலையும், இத்தனை ஆண்டுகளாக பெற்று வந்த மரியாதையும், கௌரவமும், இன்று அழியும் நிலையில் உள்ளது. தங்களைத் தவிர, எங்களைக் காக்க யாரும் இல்லை'' என்று கூறிய காண்டேராவின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. சத்குரு சிரித்துக் கொண்டே, ''மகாபாரதத்தில் பாண்டவர்களிடம் தர்மம் இருந்தது. அதனால் இறைவன் அவர்களுக்கு உதவினார். அது இல்லாத காரணத்தால் கௌரவர்கள் தோல்வி அடைந்தனர். அதைப் போல உன் மீது பழி சுமத்தி சிறைக்கு அனுப்ப நினைத்த, தேஷ்முக் குடும்பத்தினரின் திட்டமும், தோல்வி அடைவது நிச்சயம் அதனால் நீ தைரியமாக இரு'' என்று கூறி காண்டேராவை அனுப்பி வைத்தார்.

சத்குருவின் வார்த்தை எவ்வாறு பொய்க்க முடியும்? மறுநாள், யாருமே எதிர்பாராத வகையில் காண்டேராவ் மீது சுமத்திய குற்றத்தில் நியாயம் இல்லை என்று காவல் நிலையத்தில் முடிவு செய்யப்பட்டது. காண்டேராவ், மறுநாள் சிறை செல்வது உறுதி என்று தேஷ்முக் குடும்பத்தினர் மட்டுமல்லாது, காண்டேராவின் சகோதரர்கள் மற்றும் அவர்களுக்காக ஆஜரான வக்கீல் மற்றும் கிராம சபையினருக்கும் இத்தகவல் மிகுந்த வியப்பை அளித்தது. இத்தீர்ப்பு மனிதரால் எழுதப்பட்டது அல்ல. சத்குருவால் தீர்மானிக்கப்பட்ட தீர்ப்பு. இந்நிகழ்ச்சியைக் கண்டு பாட்டீல் சகோதரர்கள் சத்குருவின் மகிமையை உணர்ந்து கொண்டு, அவரை தங்கள் இடத்தில் வசிக்குமாறு வேண்டி அழைத்து வந்தனர்.



சத்குருவின் ஒவ்வொரு அசைவிலும் ஏதேனும்ஒரு காரணம் இல்லாமல் இருக்க முடியாது. அதை அவரே அறிய இயலும். சத்குரு தங்கி இருந்த இடத்திற்கு அருகில், நன்கு வேதம் பயின்ற, பழமையான காலாச்சாரம் நிறைந்த தெலிங்க இனத்தைச் சார்ந்த பண்டிதர்கள், தங்கி இருந்தனர். ஆனால் அவர்கள், அறிந்த அந்த மகத்துவமான வேதங்களைக் கொண்டு, நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இருந்தனர். அவர்களின் நோக்கம், வருமானத்தில் மட்டுமே இருந்தது. அவர்கள் சத்குரு தங்கி இருந்த இடத்திற்கு வந்ததும், அவர் ஆழ்ந்த துயில் கொண்டிருந்தார். பண்டிதர்கள், அவர் தூக்கத்தைக் கலைத்து, தம் பாண்டித்யத்தை பறைசாற்ற எண்ணி, அவர் முன்னால் அமர்ந்து எல்லோரும் வேதங்களை பாட ஆரம்பித்தனர். அவர்களின் நோக்கமும், பக்தியற்றதாகவும், வேதங்களின் மேல் இல்லாமலும் சத்குருவிடம் தங்கள் பெருமையை எடுத்துரைக்க வந்ததாகவே இருந்தது. அந்த அகம்பாவத்தால், இடையில் ஒரு தவறு ஏற்பட்டுவிட்டது. இதுவரை பொறுமையாக உறங்கி கொண்டிருந்த மகராஜ், இப்போது தவறிழைத்ததை கேட்டதும் உடனே எழுந்து விட்டார்.

மகான்களும், ஞானிகளும் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையிலும் அவர்களின் உள்ளுணர்வு எப்போதும் விழிப்பு நிலையிலேயே இருக்கும். அதுவரை ஆனந்தமாக வேத கோஷத்தை, ரசித்து கொண்டு உறங்கிக் கொண்டிருந்தவர், இடையில் ஒரு தவறு ஏற்பட்டதும் எழுந்து விட்டார். அவர், பண்டிதர்களிடம், ''நீங்கள் புனிதமான வேதங்களுக்கு களங்கம் ஏற்படுத்த நினைக்கிறீர்கள்! அவை வியாபாரத்திற்கான கருவிகள் அல்ல, அவை ஒவ்வொன்றும் மனித சமூகத்திற்கு ஒரு பாடமாகும், நீங்கள், வேதங்களை கரைத்துக் குடித்த, வேத விற்பன்னர்கள் போன்ற ஒரு பொய்யான தோற்றத்தை எல்லோரிடத்திலும் ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறீர்கள். இப்போது நீங்கள் சொல்லிய தவறான பகுதியை, நான் திருத்திச் சொல்கிறேன்! இதை நன்றாகக் கவனித்து திரும்பச் சொல்லுங்கள்'' என்று கூறி, எந்த அத்யாயத்தை தவறாகப் பாடினார்களோ அவற்றை அட்சர சுத்தமாக அனைவரும், வியக்கும் வகையில் தெளிவான உச்சரிப்புடன் சொல்லி முடித்தார். அதைக் கேட்டவர்கள், வேதகால ரிஷியான வசிஷ்டரே வந்த தங்கள் முன்னால் நின்று வேதங்களை கூறுவதைப் போல உணர்ந்தனர்.

சத்குருவின் வேத ஞானத்தைக் கண்ட பண்டிதர்கள், சுடர் வீசி பிரகாசிக்கும், சூரியனின் கதிர் வீச்சிற்கு முன்னால் ஒரு

மெழுகுவர்த்தியை ஏந்தி வந்தது போல உணர்ந்து, தங்கள் தலை தாழ்ந்து தவறை உணர்ந்து வருந்தினர்.

சத்குரு அந்த பண்டிதர்களின் எண்ணத்தை நன்கு அறிந்தவர். அவர்கள், நமது கஜானன் மகராஜ், ஒரு சித்த சுவாதீனமில்லாதவர் என்றும், ஒன்றும் அறியாதவர் என்றும் நினைத்துக் கொண்டு தங்களின் திறமையைக் காட்டி, அவரைக் கவர நினைத்து வந்ததையும் நம் சத்குரு நன்கு அறிவார். அவரின் ஞானத்தை கண்டவுடன், நான்கு வேதங்களும், அவருடைய கட்டுப்பாட்டில் இருப்பதையும் உணர்ந்தனர். இத்தகைய மகா ஞானி, கடவுளின் அவதாரமாகத்தான் இருக்கமுடியும் என்றும் உணர்ந்து கொண்டனர். பண்டிதர்கள், தங்களுடைய பூர்வ ஜென்ம நல்வினைகளின் பலனால், சத்குருவின் தரிசனம் கிடைத்ததை எண்ணி அவரை வணங்கினர்.

சத்குரு அவர்களின் விருப்பத்தை அறிந்து காண்டேராவிடம் பண்டிதர் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் தட்சிணை வழங்குமாறு கூறினார். தட்சிணை பெற்றுக் கொண்ட பண்டிதர்கள் மகிழ்ச்சியோடு திரும்பினார்கள். ஞானிகள், எப்போதும் மக்களின் நலனுக்காக தங்களை சோதனைக்கு உட்படுத்திக் கொண்ட போதும், மனிதர்களிடத்திலும், வாழ்க்கையிடத்திலும் பற்றுதலை களைந்தவர்கள். விருப்பு, வெறுப்பு அற்றவர்கள். நம் சத்குரு, தாம் இருந்த இடத்திலிருந்து வெளியேற முடிவு செய்து, ஷேக்காவ் கிராமத்தின் வடக்குத் திசையில் உள்ள ஒரு வனத்தில் அடர்ந்த கிளைகளைக் கொண்ட, ஒரு வேப்பமரத்தின் அடியில் சென்று வாசம் செய்யத் தொடங்கினார். ஷீர்டியில் வாழ்ந்த சமர்த்த சாயிநாதரும் வேப்பமரத்தின் அடியில் வாசம் செய்வதையே விரும்பினார்.

அந்த பூங்காவில் ஒரு சிவாலயம் இருந்தது. அந்தப்பகுதியின் உரிமையாளரான, கிருஷ்ணாஜி என்பவரிடம், நம் சத்குரு, தாம் மகாதேவரான சிவசங்கர் பகவானின் அருகில் வாசம் செய்யவே விரும்புவதாகவும், அந்த இடத்தில் தமக்கு ஒரு சிறிய கூடாரம் அமைத்துத் தருமாறும் கேட்டார். எந்த இடத்தில், அரசன் வாசம் செய்கிறானோ அந்த இடம் தான் அரசாங்கத்தின் தலைநகரமாக விளங்கமுடியும். அது போல நம் சத்குரு வாசம் செய்த ஷேக்காவ் கிராமத்தின், சிவாலயத்தின் அருகில் அமைந்த, வேப்பமரத்தில் அமைக்கப்பட்ட கூடாரம், அங்கு அவருடைய தரிசனம் பெற வந்தவர்களுக்கு, தேவாலயமாக அமைந்தது.



சத்குருவின் பணிவிடைக்காக பாஸ்கராவும், துகாராம் கோகடேயும் அங்கேயே அவருடன் தங்கி இருந்தனர். வருகை தரும் பக்தர்களுக்கு உணவு விநியோகம் கிருஷ்ணாஜியின் மேற்பார்வையில் நடந்தது. சத்குருவின் உத்தரவுடன் அவர் உணவருந்தியவுடன் அந்தப்பிரசாதம் அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

அச்சமயம், சத்குருவால் அந்த அற்புதம் அங்கு நடந்தது. அதன் மூலம் நம் சத்குருவின் புகழ் நாடெங்கும் பரவியது. அவர் தங்கி இருந்த கூடாரத்திற்கு அருகில் 20 பேர்கள் கொண்ட ஒரு யாத்திரை கூட்டம் வந்து இறங்கியது. அவர்கள் கஜானன் மகராஜ் குறித்து, கேள்வியுற்று அவரைக் காண வந்தனர். வெறும் பகட்டுக்காகவும், வயிற்று பிழைப்புக்காகவும் வறட்டு கௌரவத்தோடும், எந்த ஞானமும் இல்லாத அந்த யாத்திரைக் கூட்டம், நமது சத்குருவை குறித்து தகாத வார்த்தைகளை கூறத் தொடங்கினார்கள். அவர்கள் கிருஷ்ணாஜியிடம் தாங்கள் புனித நதியான கங்கை ஓடும் காசியில் இருந்து இராமேஸ்வரம் சென்று கொண்டிருக்கும் யாத்திரைக் குழு என்று கூறினர். மற்றும் தாங்கள் ஸ்ரீ பிரம்மகிரியின் சீடர்கள் என்றும் ஸ்ரீ பிரம்மகிரியின் இல்லத்தில் அடியேளே சேவகனாக இருக்கிறார் என்றும் கூறினார்கள். அவர்களின் சீடர்களான தாங்கள் புனித ஸ்தலங்களான கங்கோத்ரி, கேதார்நாத், ஹிங்லாஜ் (தற்போது பாகிஸ்தான் வசம் உள்ள, புகழ் வாய்ந்த ஹிங்குலாம்பிகா தேவியின் ஆலயம் அமைந்த இடம்) கிரிநார் மற்றும் மனோதிரி முதலிய இடங்களுக்கு சென்று இறுதியாக அங்கு வந்திருப்பதாகவும் கூறினார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் கிருஷ்ணாஜியிடம், பூர்வ ஜென்மத்தில் ஷேக்காவ் கிராம மக்கள் அனைவரும் செய்த நல்வினையின் காரணமாக, ஸ்ரீ பிரம்மகிரியின் தரிசனம் கிடைக்கப் பெறுகிறார்கள் என்றும் பிதற்றினார்கள். அதுமட்டுமில்லாமல் தங்களுக்கு மூன்று நாட்கள் தங்குவதற்கு வசதியான இடமும், ஷீராபுரி சேர்த்த உணவு வேண்டுமென்றும் கேட்டனர். (ஷீரா என்பது பொதுவாக சத்தியநாராயண பூஜை வழிபாட்டில் ரவையும், சர்க்கரையும் கலந்து செய்யப்படும் பிரசாதமாகும். மகாராஷ்ட்டிர தேசத்தில் கோதுமை ரவையையும் பயன்படுத்தி செய்யப்படும் இந்தப் பூரி வகை விசேஷ நாட்களில் பரிமாறப்படுவது வழக்கமாக கருதப்படுகிறது.)

அவர்கள் கிருஷ்ணாஜியிடம், தங்களுக்கு உணவளித்து, உபசரிக்க தவறிய குற்றத்திற்கு ஆளாக வேண்டாம் என்றும் பயமுறுத்தினர். மேலும் நமது சத்குருவை, சித்தப்பிரமை

பிடித்தவர் போல தெருவில் அமர்ந்து கொண்டிருப்பவர் என்றும் அவருக்கு உபசரிப்பது, பசுவை காலால் உதைத்துவிட்டு, கழுதைக்கு உணவளிப்பதற்கு சமமாகும் என்றும் மிகவும் இழிவாக கூறினார்கள். கிருஷ்ணாஜி வேறுவழியின்றி, விரும்பிய உணவு வகைகளும், புகைப்பதற்கு கஞ்சாவும் மறுநாள் ஏற்பாடு செய்வதாகக் கூறினார்.

நடக்கும் நிகழ்வைத் தடுக்க யாரால் இயலும்? சத்குருவால் மட்டுமே அவர்களுடைய கேள்விகளுக்கு விடையளிக்க இயலும். அன்று மத்தியான வேளையில், உணவு உண்டு முடித்தவுடன் நம் சத்குருவின் முன்னிலையில் போலி சன்யாசி பிரம்மகிரியும், அவன் சீடர்களும் அமர்ந்து இருந்தனர். பிரம்மகிரி தன்னுடைய பெருமையை காட்டிக் கொள்வதற்காக பகவத் கீதையை எடுத்து அனைவரின் முன்னிலையிலும் போதிக்க ஆரம்பித்தான். அவன் ஆத்மா என்பது அழியாத ஒன்று, எந்த சக்தியாலும் அதை, உடைக்கமுடியாது என்றும் ஆத்மபலம் குறித்தும் பலவாறு சொல்லிக் கொண்டிருந்தான்.

போலி சந்நியாசியான பிரம்மகிரி, ஆத்மபலத்தால் சாதிக்க இயலாத, காரியம் எதுவும் இல்லை என்றும் பகவத்கீதை கூறுவதாக போதித்துக் கொண்டிருந்தான். சத்குருவிற்கு பிரம்மகிரி ஒரு கபட வேடதாரி என்பதும் அவனிடத்தில் எந்த ஆன்மீக உணர்வும், குறிக்கோளும் இல்லை என்பதும் நன்றாகத் தெரியும். ஆதலால், அமைதியாக இருந்தார். பிரம்மகிரியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் அவன் வெறும் வார்த்தை ஜாலங்களை வைத்தே தம்மை ஏமாற்றுவதாகக் கருதி, சத்குருவிடம் சென்று நமஸ்கரித்தனர், சத்குருவின் தரிசனத்திற்காக வந்தவர்கள், அவரிடம், ''ஸ்வாமி! பிரம்மகிரியின் தத்துவக் கோட்பாடுகளைக் கேட்டோம்! அவற்றின் நிஜத்தை தங்களிடம் காண்கிறோம்! எங்களை ஆசீர்வதியுங்கள்'' என்றனர். பக்தர்களின், இப்பேச்சைக் கேட்ட பிரம்மகிரியும் அவன் சீடர்களும் ஆத்திரம் அடைந்தனர். இதற்கு இடையில் கஞ்சாவை புகைத்துக் கொண்டிருந்த அவர்களில் ஒருவனது புகைக்குழாயில் இருந்து ஒரு தீப்பொறி காற்றில் பறந்து, சத்குரு அமர்ந்து இருந்த மரக்கட்டிலின் மீது விழுந்தது. காற்று பலமாக வீசியதால் அந்தக் கட்டில் தீப்பற்றி எரியத் தொடங்கியது.

வெகு விரைவில், சத்குரு அமர்ந்து கொண்டிருந்த, கட்டில் முழுவதும் தீஜ்வாலைகளால் சூழப்பட்டு எரியத் தொடங்கியது. எச்சலனமும் இன்றி, அக்கட்டிலில் சத்குரு அமைதியாக அமர்ந்து கொண்டு இருந்தார். அதைப்பார்த்த பாஸ்கரா பயந்து, அத்தீயை



அணைக்க தண்ணீர் கொண்டுவருமாறு கூறினான். நம் சத்குரு சிரித்துக் கொண்டே, ''பாஸ்கரா தீயை அணைக்க தண்ணீர் தேவையில்லை, பிரம்மகிரியை இங்கு அழைத்து வந்து என்னுடன் அமரச் செய்யுங்கள்'' என்றார். அவர் அவனை நோக்கி, ''ஹே பிரம்மகிரி உனக்கு பகவத் கீதையின் உட்கருத்தும், அதன் தத்துவ விளக்கங்களும் நன்றாகத் தெரியுமே! கீதையில், நீ கூறிய ஆத்ம பலத்தின் சக்தியை இப்பொழுது உணர்த்தும் நேரம் வந்துவிட்டது! தீயின் ஜ்வாலைகள், ஆத்மாவில் குடி கொண்டுள்ள பிரம்மாவை ஒன்றும் செய்ய முடியாது என்று இப்போது, நீ போதித்த தத்துவத்தை, நிரூபித்துக் காட்டுவாயாக! என்னுடன் இங்கு வந்து அமர நீ பயப்படத் தேவையில்லை, பாஸ்கரா! பிரம்மகிரியை இங்கு அழைத்து வந்து என்னுடன் அமரச் செய்வாயாக'' என்றார். இதற்குள், தீ வானை நோக்கி எழுந்து கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. பாஸ்கரா நல்ல உடல்வாகும், பலமும் பொருந்தியவன் என்பதால் அவன் பிரம்மகிரியை, தன் இரு கைகளாலும் இழுத்துக் கொண்டு, சத்குருவின் அருகில் வந்தான். பக்த பிரஹலாதனை, ஹரிபக்தியை கைவிடச் சொல்லி அவன் தந்தை துன்புறுத்தும் காட்சியை நினைவு கூர்ந்தார். ஹிரண்யகசிபு தன் செல்வபுதல்வனான பக்த பிரஹலாதனை தீயில் தள்ளியபோதும் அவன் கொண்டிருந்த ஹரிபக்தியால் தீ அவனை ஒன்றும் செய்யவில்லை என்பதையும் கூறினார்.

பக்த பிரஹலாதனிடம் நடத்தப்பட்ட அதே சோதனை நம் சத்குருவிடம் நடத்தப்பட்டது. சத்குரு தாம் அமர்ந்து இருந்த இடத்தைவிட்டு அசையாமல், ஒன்றுமே நிகழாதது போல அமர்ந்து கொண்டு நிதானமாக பேசிக் கொண்டு இருந்தார். இதற்குள் பாஸ்கரா பிரம்மகிரியை இழுத்து வந்து சத்குருவின் கட்டிலின் அருகில் உட்கார ஆணையிட்டான். இனிமேலும் தன் பெருமை சத்குருவின் முன்னால் செல்லாத காசு என்று உணர்ந்த பிரம்மகிரி உடனே பாஸ்கராவிடம், ''தயவுசெய்து எரிந்துக் கொண்டிருக்கும் கட்டிலில் என்னை அமரச் சொல்லாதே! சத்குருவின் மகிமையை உணரத் தவறிய பாவி நான்'' என்று கை கூப்பி பாஸ்கராவிடம் உயிர்பிச்சை வேண்டினான்.

பாஸ்கரா தன் கரங்களால் பிரம்மகிரியை இறுக்கிப் பிடித்துக்கொண்டு, பிரம்மகிரி! சத்குரு சொல்லியதை செய்து காட்டு! தீயின் ஜ்வாலை பிரம்மாவை ஒன்று செய்யமுடியாது என்பதை இப்போதே இத்தீயில் அமர்ந்து நிரூபித்துக் காட்டுவாயாக! என்று வற்புறுத்தினான். உடனே பிரம்மகிரி பயந்து

நடுங்கி, ''நான் இன்பமான வாழ்க்கையையும், இனிமைய உணவையும் ஏற்க நினைக்கும் ஒரு போலி சந்நியா பகவத்கீதையை, இந்தக் காரணம் கருதியே பயின்றேன்! சத்குரு ரூபம் தெரியாமல் அவரை சித்த சுவாதீனமற்றவர் என்றே என்னை கருணை கூர்ந்து மன்னித்து அருளுங்கள்'' என கதறினான்.

ஷேக்காவ் மக்கள் பிரம்மகிரியை பொருட்படுத்தவில்ல அவர்கள் அனைவரும் சத்குருவிடம் அந்த இடத்தை வி நீங்குமாறு மன்றாடி வேண்டிக் கொண்டனர். சத்குரு அ கட்டிலை விட்டு எழுந்து விலகிய, அந்த விநாடியே கட் முழுவதுமாக நொறுங்கி சாம்பலானது. இதைப் பார்த் கொண்டிருந்த பிரம்மகிரி, அவமானத்தால் தலையை தாழ்த் காண்டான். அவனால் அப்போது ஒரு வார்த்தை கூட இயலவில்லை. சத்குரு, மக்களின் வேண்டுகோளுக்கு இண அந்தக் கட்டிலை விட்டு வெளியே வந்தார்.

ஊர்மக்கள் தண்ணீரை அடித்து அத்தீயை அணைத்த சத்குருவின் அற்புத லீலைக்கு ஒரு எடுத்துக்காட்டாக, அக்கட்டி ஒரு சிறு பகுதியை மட்டும் பாதுகாப்பாக இன் வைத்திருக்கின்றனர். புனிதமான கங்கை நதி எவ்வ தன்னுடைய புனிதத் தன்மையால், தன்னை நாடி வ பக்தர்களின், மனதிலுள்ள அழுக்கைப் போக்கி, அவர்களுக்கு பலனை அளிக்கிறதோ, அதைப்போல் பிரம்மகிரியும் அ சீடர்களும் சத்குருவின் பாதங்களை தஞ்சமடைந்து தங்கள் துர்குணங்களை நீக்கிக் கொண்டனர்.

அன்று நடு இரவில், நம் சத்குரு பிரம்மகிரியிட ''சந்நியாசிகள் உலக சுகங்களைத் தேடக்கூடாது என் அதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டு என்றும் கூறினார். ''எவற்றை மக்களுக்கு போதிக்கிறார்க அவற்றை முதலில் போதிப்பவர்கள் கடைபிடிக்க வேண்டு என்றார். ஒருவர் தாம் கூறிய வார்த்தைகளுக்குரிய அர்த்தத் தாமே புரிந்து கொள்ளாது போனால், அவற்றை கேட்பவர்கள் எவ்வாறு புரிந்து கொண்டு கடைபிடிக்க இயலும்? சத்குரு மே பிரம்மகிரியிடம், ''நீ கற்றுக்கொண்ட பாகவதத்தில் கூறப்ப பொருளையும் அதையும் தாண்டி அவற்றில் மறைந்து இருக் உட்கருத்தையும் உணர்ந்து கொள்வது மிகவும் அவசியமாகு இக்கருத்தை உணர்ந்த, ஸ்ரீஜாலந்தர், ஸ்ரீமச்சீந்திரர், ஸ்ரீகோரக்



நிவிருத்தினி மற்றும் ஸ்ரீதியானேஷ்வர் போன்றவர்களும் இப்பிரபஞ்சத்தில் ஞானிகளின் நிலைக்கு தங்களை தகுதியுடையவர்களாக்கினார்கள்.

ஸ்ரீசங்கராச்சார்யா தன்னிலை உணர்ந்த மகா ஞானியாவார், ஏகநாத், இல்லறத்தில் வாழ்ந்தபோதும், முக்தி நிலையை அடைந்தார். சுவாமி சமர்த்த ராமதாஸ், பிரம்மச்சாரியாக இவ்வுலக ஆசைகள் துறந்து, மகா ஞானியானார். இத்தகைய மகா ஞானிகளை நினைவில் நிறுத்திக் கொண்டு, க்ஷீராபுரி உணவுக்காக அலைவதை நிறுத்து'' என்றார். மற்றும் அவர் ஸ்ரீ பிரம்மகிரியிடம், தேவையில்லாமல் எல்லோருடைய பொழுதையும் வீணாக்குகிறாய்'' என்றார். சத்குருவின் தெளிவான அறிவுரையை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பிரம்மகிரி, மறுநாள் பொழுது விடிவதற்குள்ளாக, தன் சீடர்களோடு அவ்விடத்தை விட்டு வெளியேறினார். பொழுது விடிந்ததும் இச்செய்தி காட்டுத்தீயாய் கிராமம் முழுவதும் பரவி, சத்குருவின் அற்புதத்தைக் காண மக்கள் கூட்டமாகத் திரண்டு வந்து, தீயில் எரிந்த அந்தக் கட்டிலை கண்டனர்.

இதைப் படிக்கும் பக்தர்கள் இயந்திரமயமான இவ்வுலக ஆசைகளில் இருந்து விடுபடுவார்கள் என்ற நம்பிக்கையுடன் சத்குருவை வணங்கி நாம் அடுத்த அத்தியாயத்தைக் காண்போம்.

**- ஜெய் கஜானன் -**



# அத்தியாயம் - 9

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! ருக்மிணி தேவியின் சக்தி ரூப புனித சந்திரபாகா நதிக்கரையில், வேய்ங்குழல் ஊதி சாதுக் ஆசீர்வதிக்க வந்தவரே! நீ அனைவருடைய ரட்சகன், சமுத்திரத் போல கருணையை வாரி நீ அனைவருக்கும் வழங்கினாய்! மி சிறப்பு வாய்ந்தவற்றில் சிறப்பு, அவற்றைவிட தாழ்ந்தவ இயல்பை ஒப்பிட்டே பிரகாசிக்க முடியும். தாழ்ந்த கொண்டுதான் உயர்வானவற்றை ஒப்பிட்டு கூற இய அதைப்போல இவ்வுலகில் பாவிகள் இருக்கின்ற காரணத்தால் அவர்களின் பாவங்களை போக்க வல்ல பரமாத்மா முக்கியத்து பெறுகிறார். இவ்வுலகில் பிறந்த அனைவரும் சத்கர்மா (நற்செயல்கள்) உத்தமர்களாகவிட்டால் இறைவனின் முக்கியத்து பற்றி எவ்வாறு எல்லோரும் புரிந்து கொள்ள இயலும்?

இரும்புத் துண்டையும் தங்கமாக மாற்றும் சந்த்ர அற்புதக்கல் போல, புனித கோதாவரி நதியானது, தன்னை வருவோரை தன்னைப்போலவே புனிதமாக மாற்றுவதைப் போ மாதவனே, என்னையும் காப்பாற்றி இப்பணியைச் செ அருள்வீராக!

ஒரு சமயம், பகவானின் திருவிளையாட உபன்யாசமாகவும், பஜனைப் பாடல்களாகவும் பாடிக்கொ எல்லா கிராமங்களிலும் உள்ள ஆலயங்களிலும், பஜ பாடகராக விளங்கும் கோவிந்தபுவா (இவர் நம் சத்குரு புனிதமாக்கப்பட்டவர் என்பதை இரண்டாம் அத்தியாய கண்டோம் ஷேக்காவ் கிராமத்தில், உள்ள புகழ் சிவாலயத்திற்கு வந்தார். அந்த சிவாலயம் மி பழமையானதும், பிரசித்தி பெற்றதும் ஆகும். அந்த ஆ திருப்பணியைச் செய்தவர் திரு. மோடே என்பவர் ஆ பொதுவாக வசதி படைத்தவர்கள், வாகனங்களை வாங்குவதி கேளிக்கை விடுதிகளில் சென்று உல்லாச பொழுதுபோக்குவதிலும் மட்டுமே ஆர்வம் காட்டுவது வழ ஆனால் நமது மோடே இதற்கு அப்பாற்ப்பட்டவர். இறைபக்தியுடைய சிறந்த மனிதர். திரு. மோ இடிபாடுகளுடன் சிதிலமடைந்த, அந்த சிவாலயத்தை புதுப்



மக்கள் யாவரும் அங்கு பயமின்றி சென்று வழிபட ஏற்பாடு செய்தார். இறைப்பாடகரான திரு. கோவிந்த புவா அன்று அந்த சிவாலயத்தில், ஒரு நாள் முழுவதும் தங்கி இருந்து பஜனை செய்வதற்காக வந்திருந்தார். அவருடைய குதிரையை, ஆலயத்தின் வாசலில் கட்டி வைத்தார். அந்தக் குதிரை மிகவும் ஆவேசமான குதிரையாகும். அதைக்கண்டு, கிராம மக்கள் யாருமே, அதன் அருகில் செல்லக்கூட அஞ்சுவார்கள். அக்குதிரை, எல்லோரையும், உதைத்து தள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தது. சில சமயம் அது தன் கட்டுக்களை அறுத்துக் கொண்டு, தெருவில் ஓட ஆரம்பித்துவிடும். அப்போது, கண்ணில் கண்ட அனைத்து பொருட்களையும், மிதித்து நாசமாக்கி விடும். அக்குதிரையால், கோவிந்த புவாவிற்கு மிகுந்த வேதனையும், அவமானமும் ஏற்பட்டது. அவரும் பலமுறை அக்குதிரையை பழக்கப்படுத்த முயற்சி செய்து தோற்றுப் போய்விட்டார்.

அக்குதிரையை கட்டி வைப்பதற்காகவே, விசேஷமான சங்கிலி ஒன்றை தயார் செய்து அதை எப்போதும் தன்னுடன் எடுத்துச் செல்வதை, வழக்கமாகக் கொண்டு இருந்தார் கோவிந்த புவா. அச்சங்கிலி இல்லையெனில், அக்குதிரை கட்டுக்கடங்காத யானையின் வேகத்தோடு நாச வேலையை துவங்கிவிடும். அன்று, கோவிந்த புவா, அச்சங்கிலியைக் கொண்டு வர மறந்து விட்டார். வழக்கம்போல, குதிரையை ஆலயத்தின் வெளியில் கட்டிவிட்டு. தம் காலட்சேபத்தை தொடங்கினார்.

அது நடுநிசி நேரமாதலால் மிகவும் அமைதியாகக் காணப்பட்ட அந்நேரத்தில் ஆந்தைக் கூட கூட்டைவிட்டு வரவில்லை.

கிராமத்தின் எல்லைக் கதவுகளை மூடப்பட்டு மரண அமைதியுடன் காணப்பட்ட அந்நேரத்தில், நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், ஆலயத்திற்கு அருகில் அக்குதிரை கட்டப்பட்டிருந்த இடத்திற்கு வந்தார். ஞானிகளின் அவதாரம், கொடியவர்களை வழிப்படுத்த இறைவனால் வழங்கப்பட்டதாகும். எவ்வாறு மருந்துகள், நம்மை நோயில் இருந்து விடுவிக்கின்றதோ, ஞானிகளும் கயவர்களின் கொடிய தன்மையை போக்கி, அவர்களை ரட்சிப்பதற்காகவே அவதாரம் எடுத்துள்ளனர். நமது சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், மிகவும் ஆனந்தமாக, அக்குதிரையின் நான்கு கால்களுக்கு நடுவில் படுத்துக்கொண்டு உறங்க ஆரம்பித்தார். அந்த நிலையிலும் அவரின் உள்ளுணர்வு ''கண்கண் கணாத்த போதே'' என்று கணபதி மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தது.

அவருடைய வாக்கில், ஆத்மாவும் பிரம்மாவும் ஒன்றே என்பதும் அவை இரண்டையும் பிரிக்க இயலாது என்பதையும் போதித்துக் கொண்டிருப்பார். என்ன அற்புதம்! ஆவேசமான அக்குதிரை, அவ்விடத்தை விட்டு ஒரு விநாடி கூட அசையாமல் சத்குருவின் உறக்கத்தை கலைக்காமல் நான்கு கால்களையும் அசைக்காமல், இரவு முழுவதும், அப்படியே நின்று கொண்டிருந்தது.

கோவிந்த புவா எப்போதும், எங்கு இரவில் சென்றாலும், தூக்கம் அற்றவராக இரவில் அடிக்கடி கண்விழித்துக்கொண்டு குதிரை என்ன செய்கிறது, எங்கு செல்கிறது என்பதைக் கண்காணித்துக் கொண்டிருப்பது வழக்கம். அன்று, நன்றாக தூங்கி எழுந்தவர் அக்குதிரையின் அருகில் வந்தவுடன், அவர் மிகுந்த ஆச்சரியத்துடன் அக்குதிரை அவ்விடத்திலேயே அசையாமல் நிற்பதைக் கண்டார். ஒருவேளை குதிரைக்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்குமோ என்று சந்தேகம் கொண்டார். அவர் குதிரைக்கு அருகில் நெருங்கி வந்ததும், அதன் நான்கு கால்களுக்கு நடுவில், ஒருவர் படுத்து உறங்கிக் கொண்டு இருப்பதைக் கண்டவுடன் திகைத்து நின்றார்.

அது யாராக இருக்க முடியும் என்ற ஐயத்தில் கூர்ந்து நோக்கியவுடன் அவர் கண்களில், நம் சத்குருவே உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. இத்தனை நேரம் இக்குதிரை, அடங்கி இருந்ததின் காரணம் இப்போது அவருக்கு புரிந்து விட்டது. அவர் உடனே சத்குருவின் பாதங்களை ஸ்பரிசித்து, "ஸ்வாமி! இது என்ன லீலை? மணம் மிக்க சந்தன வாசனையின் முன்னால், தீய வாசனை காணாமல் போவது போல, தங்களைச் சுற்றி இருக்கும் அக்குதிரை தன் கொடிய பழக்கங்களைக் கைவிட்டு சாதுவாக மாறிவிட்டது. அக்குதிரையினால், நான் இத்தனை காலம் எத்தனை துன்பங்களை அனுபவித்தேன்! இதன்மேல் அமர்ந்து இருக்கும் போது, குதித்து கீழே தள்ளியும், உதைத்தும் இக்குதிரை என்னை பலவாறு துன்புறுத்தி இருக்கிறது! அதனால் மனம் நொந்து போய் இக்குதிரையை, விற்பதற்கு முயற்சி செய்து பார்த்தேன்!

துரதிர்ஷ்டவசமாக, இதை வாங்குவதற்குக்கூட ஒருவரும் முன்வரவில்லை. இலவசமாகவாவது, யாராவது இக்குதிரையை இழுத்துக்கொண்டு போகட்டும் என்று இருந்தேன்! விலை இன்றி இலவசமாக ஆக்கியபோதுகூட, இக்குதிரையை கூட்டிச் செல்வதற்கு, ஒருவரும் தயாராக இல்லை! இன்று சத்குருவாகிய தம்மால், இது அமைதியாக இருக்கிறது! என்னைப் போல ஒரு உபன்யாசம் செய்பவரின் குதிரையும், மென்மையாகத் தானே



இருக்க வேண்டும்? ஆடுகளை அடைக்கும் கொட்டிலில், ஒரு புலி இருந்தால் அது எத்தகைய விபரீதமானது? அக்குதிரை, தன்னுடைய பழக்கத்தை மாற்றி, இப்போது அமைதியான நிலையை அடைந்தது. நம் சத்குருவின் உபதேசம் தான், அந்த ஜீவனை மாற்றிய மந்திர வித்தையாகும். நம் சத்குரு அக்குதிரையைப் பார்த்து, "ஹே நண்பா! உன்னுடைய தீய செயல்களை நிறுத்திவிடு, நல்ல மென்மையான குணமடையவனாக நீ மாறுவாயாக! நீ நின்று கொண்டிருப்பது சிவாலயத்தின் ஈசனின் முன்னால் என்பதை நினைவில் கொள்! அமைதியான எருதைப்போல நீ நடந்துக் கொள்ள வேண்டும்! இனியும் யாரையும் நீ துன்புறுத்தக் கூடாது" என்று ஆணையிட்டு, உடனே சென்றுவிட்டார். கோவிந்த புவா தன் பொல்லாத குதிரையை கொண்டு வந்த செய்தி எல்லோருக்கும் தெரியவே, அனைவரும் அவரிடம், "ஏன் இக்குதிரையை மீண்டும் இங்கு கொண்டு வந்தீர்கள்? எங்கள் குழந்தைகளையும் பெண்களையும் இக்குதிரை உதைத்து துன்புறுத்தப் போகிறதே" என்றவுடன், கோவிந்த புவா அமைதியாக, "இப்போது இக்குதிரை சாதுவான மிருகமாகி விட்டது! நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆசீர்வாதமே இதற்குக் காரணம்" என்றார்.

"இக்குதிரையின், எல்லா தீய குணங்களும் ஒரே இரவில் அழிந்துவிட்டது. இனிமேல் இதைக்கண்டு யாரும் பயங்கொள்ளத் தேவையில்லை" என்றார். அவர் கூறியதற்கு ஏற்றவாறு, அக்குதிரையும் எந்தச் சங்கிலியும் இல்லாமல், அமைதியாக நின்று கொண்டிருந்தது. அக்குதிரைக்கு அருகில் பச்சைக் காய்கறிகளும், பசுமை நிறைந்த புல்வெளியும் இருந்தும் கூட எதையும் தொடாமல், நின்றுக் கொண்டிருப்பதை பார்த்து, அனைவரும் ஆச்சரியமடைந்தனர். இதுவே நம் சத்குருவின் மகிமையாகும். கோவிந்த புவா சத்குருவைப் புகழ்ந்து, சத்குருவின் ஆசீர்வாதம் பெற்றால் தீயவரும், நல்லவர்களாக மாறிவிடுவார்கள். அடங்காத மிருகங்களும் மென்மையானதாக மாறிவிடும் என்று கூறி நம் சத்குரு சென்ற திசை நோக்கி, "ஸ்வாமி! இக்குதிரையை போலவே என்னையும் ஆசீர்வதித்து புனிதமாக்குங்கள்" என்று தொழுது அக்கிராமத்தை விட்டுச் சென்றார். நம் ஸ்வாமி ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரம் ஆதலால் அனைத்து தத்த அவதாரங்களும் தர்மத்தை நிலைநாட்டி, துன்புறும் மக்களின் துயர் துடைத்து, தம்மை நாடி வந்தவர்களின் கர்மாவை அழித்து, அதன் பலனை அளித்து காத்ததைப் போல தாமும் அவ்வழியில் நின்று மக்களின் நியாயமான கோரிக்கைகள்

அனைத்தையும் நிறைவேற்றினார். இதேபோல ஒரு முறை, ஸ்ரீ தத்த அவதாரியான அக்கல்கோட் மகராஜ் ஸ்வாமி சமர்த்தர், அரசரின் உத்தரவின் பேரில் கொல்லப்படவிருந்த யானையையும், குரங்கையும் காப்பாற்றியதையும் நாம் நினைவு கூறலாம்.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், புகழ் நாலா தேசங்களிலும் பரவியது. பல கிராமங்களில் இருந்தும், மக்கள் திரளமாக வந்து சத்குருவிடம் தன் வேண்டுதலைக் கூறி ஆசீர்வாதம் பெற்றுச் சென்றனர். தங்கள் கோரிக்கைகள், பூர்த்தி அடைந்தவுடன் சத்குருவை நமஸ்கரித்து, நன்றியை தெரிவித்துச் சென்றனர். அவர்களில் இரு அந்தணர்கள், பாலாபூர் என்ற கிராமத்திலிருந்து சத்குருவைக் காண வந்தனர். அவர்கள் சென்ற முறை வந்தபோது, சத்குருவிடம் தம் கோரிக்கைகளை வைத்தனர். அவை நிறைவேறிய பின் மீண்டும் ஷேக்காவ் கிராமம் வந்திருந்து சத்குருவுக்கு அவர் புகைப்பதற்கான பொருளை வாங்கி, சமர்ப்பிக்க சங்கல்பம் எடுத்துக் கொண்டிருந்தனர். ஆனால் இம்முறை வந்தபோது அச்சங்கல்பத்தை மறந்து விட்டனர். அவர்கள் மனதளவில் வெட்கப்பட்டு, மிகவும் வருந்தி, அடுத்த முறை வரும்போது இரண்டு பங்கு அதிகமாக புகைப்பொருட்கள் வாங்கி, சமர்ப்பிப்பதாக சங்கல்பம் மேற்கொண்டு விட்டுச் சென்று விட்டனர்.

இரண்டாம் முறை, அவர்கள் வந்தபோது கூட, அவர்கள் குருவிற்கு சமர்ப்பணம் செய்வதற்காக புகைப்பொருளை கொண்டுவர மறந்து விட்டிருந்தனர். சங்கல்பம் எவ்வாறு தெரியவரும் என்று எண்ணி இருக்கக்கூடும். சத்குரு, திரிகால ஞானியாவார். அவர் இம்முறை, பாஸ்கராவை நோக்கி, ''பார்த்தாயா இவர்களின் பழக்கத்தை! எதைத் தருவதாக சத்தியம் செய்தார்களோ, அதை மறந்து விட்டனர்! அந்தணர்களாக இருந்து கொண்டு, அளித்த வாக்கை நிறைவேற்றாமல் இருப்பதால் அவர்கள் குலத்தின் பெருமையை உயர்த்த தவறிவிட்டனர்! ஒன்றைச் செய்வதாக சங்கல்பம் எடுத்துக்கொண்டு அதையே மறந்து விட்டால் அவர்கள் கோரிக்கைகள் எவ்வாறு நிறைவேறும், கடவுளின் ஆசீர்வாதத்தை பெறுவதற்கு முன் அவர்கள் தங்கள் வாக்கை நிறைவேற்றட்டும்'' என்றார்.

அவ்விருவரும் மிகுந்த வேதனை கொண்டனர். ஆயினும், தாம் இருவரும் அளித்த வாக்கு சத்குருவிற்கு தெரியவந்தது குறித்து மிகுந்த அதிர்ச்சியோடும், ஆச்சர்யத்தோடும் ஒருவரை ஒருவர் உற்று நோக்கினர். ஸ்ரீ கஜானன் மகராஜ், அனைவரின் மனதையும் துல்லியமாக படிக்க வல்லவர் என்பதையும், அவர் தம்மை நாடி வரும் மக்கள், எந்தத் தேசத்தில் இருந்தாலும், அவர்கள் அளித்த வாக்கை நினைவூட்டி பெற்றுக் கொள்ளும், ஞான திருஷ்டியும் உடையவர் என்பதும் அவர்களுக்குப் புரிந்தது. அவ்விருவரும், உடனே எழுந்து அருகில் இருக்கும் கடைக்குச் சென்று புகைப்பொருள்கள் வாங்கி வர புறப்பட்டனர்.



அவர்களின் மனநிலையைப் புரிந்துகொண்ட, ஸ்ரீ கஜானன் மகராஜ் உடனே அவர்களிடம், ''ஏன் நீங்கள் கீழே சிந்திய பாலுக்காக அழுகிறீர்கள்? நான் ஒன்றும் புகைப்பதற்கான ஆசைகளோ, எண்ணங்களோ கொள்ளவில்லை. எந்த பொருளின் மீதும் ஆசைகளைக் களைந்தவனே சந்யாசி ஆக முடியும். ஒரு விஷயத்தை நன்கு கவனியுங்கள்! கடவுளுக்காக செய்த சத்தியத்தை, அளித்த வாக்கை, சமர்ப்பணம் செய்வதாக எடுத்துக்கொண்ட சங்கல்பத்தை உடனே நிறைவேற்றுங்கள்! பொய்யர்களும், பொய்யான வாக்களித்தவர்களும் ஒரு நாளும் வெற்றி பெற முடியாது. இதை நன்றாக உணர்ந்து கொண்டு இப்பொழுது சென்று உங்கள் கோரிக்கை நிறைவேறியதும் எமக்குத் தருவதாக கூறியவற்றை வாங்கி வாருங்கள்'' என்று அவர்களுக்கு உத்தரவிட்டார். அது மட்டுமல்லாமல் அவர்களிடம் உங்கள் கோரிக்கை, அடுத்த வாரத்திற்குள் நிறைவேறிவிடும். ஆனால் அவ்வாறு நிறைவேறியவுடன் எல்லாம் வல்ல பரமேஸ்வரனை தரிசிக்க இங்கு ஐந்து முறை இந்த இடத்திற்கு நீங்கள் வர வேண்டும்! பரமேஸ்வரரின் அருளால் குபேரக் கடவுள் அளவற்ற செல்வத்தைப் பெற்றார்.

சர்வேஸ்வரனை நமஸ்கரித்துவிட்டுச் செல்லுங்கள்! அடுத்தமுறை வரும்போது, வாக்களித்ததை கொண்டு வாருங்கள்! தம் வாழ்நாளில் எந்த ஒருவரும், கடவுளிடமோ, சத்குருவிடமோ, எப்பொருளையாவது சமர்ப்பிக்க நினைத்தால் அதை மீறவே கூடாது'' என்று கூறி அவர்களை வீடு திரும்புமாறு உத்தரவிட்டார்.

அவர்களும் சத்குருவின் மகிமையை உணர்ந்து கொண்டு, பாலாபூர் திரும்பினர். குரு அளித்த வாக்கின்படி ஒரே வாரத்தில் அவர்களின் கோரிக்கை நிறைவேறியதும், தாம் சமர்ப்பிக்க நினைத்த புகைப்பொருளை வாங்கி குருவிடம் சமர்ப்பித்து, ஆசி பெற்றுச் சென்றனர்.

இப்பொழுது நாம், நம் சத்குருவின் மற்றொரு லீலையைக் காண்போம். பாலாபூரில் வசித்து வந்த பாலகிருஷ்ணா

என்பவரும், அவர் மனைவி புட்லாபாயும் சத்குருவின் பரம பக்தர்களாவார்கள். பாலகிருஷ்ணாவும் அவர் மனைவியும், ஒவ்வொரு வருடமும் சஜ்ஜனகடாவிற்கு (மகாராஷ்டிர தேசத்தில், சதாரா மாவட்டத்தில் உள்ள ஸ்தலம் சஜ்ஜனகடா) கால் நடையாக நடந்து சென்று சமர்த்த ராமதாஸ் ஸ்வாமியின், மகா சமாதியை தரிசித்து வருவது வழக்கம். அவர்கள் இருவரும், தங்களுடைய யாத்திரையை பௌஷ் (Poush) மாதம் என்ற மராத்தியில் சொல்லப்படும் தை மாதத்தில், குரு பூர்ணிமாவில், தொடங்குவது வழக்கம். நீண்ட பயணம் என்பதால் தங்களுடன் மூன்று வஸ்த்துக்களை கொண்டு செல்வதை வழக்கமாக்கிக் கொண்டார்கள். அவர்கள் தினமும் ஜபம் செய்யும் ஜப மாலையும், அதை கையில் தாங்கிக் கொள்ளும் மரத்தினால் செய்யப்பட்ட தண்டமும், பிரார்த்தனைக்காக தரையில் விரிக்கும் பாய் விரிப்பும் மற்றும் ஸ்வாமி ராமதாஸ் எழுதிய புனித கிரந்தமாகிய தாஸ்போத் (Dassbodh) மட்டுமே ஆகும்.

தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம், கையேந்தி உணவு யாசித்து உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். கையேந்தி உணவு யாசிக்கும் வேளையில், நம் ஆணவமும், அகம்பாவமும் நம்மை விட்டு நீங்குகிறது. அவ்வாறு, தாங்கள் யாசித்துப் பெற்ற உணவை, ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கு நிவேதனம் செய்துவிட்டு, உண்பதே அவர்களின் வழக்கமாகும். அவர்கள் வழியெங்கும் ஸ்ரீ ராம நாமத்தை ஜெபித்துக் கொண்டும், நாமஸ்மரணை செய்து கொண்டும், பஜனைப் பாடல்கள் பாடிக்கொண்டும் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் வசித்துவந்த ஷேக்காவ் கிராமத்தின் வழியாக காம்காவ், மேக்கர், தூல்காவ், ஜால்னா (Dassbodh) (Khamagaon, Mehker, Deulgaon, Jalna) வழியாக பயணம் செய்து ஸ்ரீ ஆனந்த ஸ்வாமிக்கு, தங்கள் மரியாதையை செலுத்திவிட்டு, ஜால்னாவிலிருந்து ஜாம்ப் (Jamp) என்ற ஸ்தலத்திற்கு வந்து ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் அவதரித்த இடத்தில், மூன்று நாட்கள் தங்கி ஸ்வாமியை ஆராதனை செய்வார்கள்.

அவர்கள் அங்கிருந்து திவாரா, பீட், மொஹாரி, பேலேஷ்வர் மற்றும் தூம்காவனில், சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகளின் பக்தரான, ஸ்ரீ கல்யாண் அவர்களின், பிறந்த ஸ்தலத்தையும், தரிசித்துவிட்டு, நர்ஸிங்கபூர், பண்டரிபுரம், ஷிங்னாபூர், வாயா, நாதோபோதே வழியாக சமர்த்த ஸ்வாமி ராமதாஸ் அவர்களின் மகா சமாதி அமைந்த ஸ்தலமான சஜ்ஜனகடாவிற்கு மகா (Magh) என்று மராத்தியில் சொல்லப்படும், மாசி மாதத்தில், நவமியை



கொண்டாடும் உற்சவத்தில் பங்கு பெறுவதற்கு, சுமார் ஒன்றரை மாத கால பயணத்திற்குப் பிறகு வந்து சேர்வதை, பல ஆண்டுகள் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அந்த பக்தியை விவரித்துச் சொல்ல, வார்த்தைகளே இல்லை என்று சொல்லலாம். அவர்கள் சமர்த்த ராமதாஸ் ஸ்தலத்திற்கு வந்ததும், அவரின் நினைவாக அவர்களால் இயன்ற அளவிற்கு அன்னதானம் அளிப்பார்கள். பாலகிருஷ்ணா உண்மையில் ஒரு ராமதாஸி ஆவார். அவரைப் போன்ற பக்தரை நாம் காண்பது மிகவும் அரிதாகும். உற்சவம் முடிந்த பிறகு, அவர்கள் அதே வழியாக தங்கள் கிராமத்திற்கு திரும்புவார்கள். இந்த வழக்கத்தை பாலகிருஷ்ணா தம் அறுபது (60) வயது வரை தொடர்ந்து செய்தார். வயது முதிர்ந்ததால், அவருக்கு பலஹீனம் ஏற்பட்டது. அவர் ஒருமுறை திரும்பி வழியில், சமர்த்த ராமதாஸரின் மஹா சமாதியில் அமர்ந்துக் கொண்டு கண்ணீர் வடித்தார்.

அவர் மிகுந்த வேதனையோடு தம் ஸ்வாமியிடம், "அளவற்ற ஆற்றலுடைய ராமதாஸ ஸ்வாமியே! நீங்கள் என்னுடைய சத்குருவும், என்னை வழிநடத்துபவரும் ஆவீர். எனக்கு வயதான காரணத்தால் இனிமேல் இத்தனை தூர பிரயாணம் என்னால் செய்ய இயலாது! வண்டியில் அமர்ந்து, பிரயாணம் செய்வது கூட கஷ்டமாகத் தோன்றுகிறது! நல்ல ஆரோக்கியமான உடல்நிலை இல்லாத காரணத்தால், நான் எவ்வாறு இத்தனை தூரம் பிரயாணம் செய்து வந்து தங்கள் "தரிசனம் பெற முடியும்" என்று அழுதுவிட்டு உறங்கச் சென்றுவிட்டார். அன்று தூக்கத்தில், அவர் கனவில், அவரின் ஸ்வாமியான, ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் தோன்றினார். அவர் பாலகிருஷ்ணாவிடம், "நீ இனிமேல் என்னைத் தேடி இத்தனை தூரம் பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை! உன் பக்தி என்னை மிகவும் சந்தோஷப்படுத்தியது! அடுத்த நவமி உற்சவத்தில் நான் உன்னைத் தேடி உன் இல்லத்திற்கு வருவேன்! இது என்னுடைய சத்திய வாக்காகும்! உன்னால் இயன்றவரை, எளிமையாக உற்சவம் நடத்துவாயாக" என்றார்.

பாலகிருஷ்ணா மிகுந்த சந்தோஷம் அடைந்தார். உடனே பாலாபூருக்கு தன் மனைவியுடன் திரும்பினார். இப்போது நாம் அடுத்த நவமியில் என்ன நடக்க இருக்கிறது என்பதைக் காண்போம்.

பாலகிருஷ்ணா மாசி மாதத்தில், ஸ்வாமிகளின் உத்தரவிற்கு ஏற்ப நவமி உற்சவத்தை தம் கிராமவாசிகளோடு தொடங்கினார். பகல்பொழுதில் தாஸ்போத் (Dassbodh) என்று சொல்லப்பட்ட

சமர்த்த ராமதாஸ் அவர்களால் எழுதப்பட்ட, புனித கிரந்தத்தை (புஸ்தகம்) படித்தும், இரவில் கீர்த்தனைகள் பாடியும், மத்தியான நேரத்தில், அந்தணர்களுக்கு உணவு அளித்தும், சாயங்கால வேளையில் ஆரத்தி எடுத்தும் உற்சவத்தை சிறப்பாக நடத்திக்கொண்டு இருந்தார். பாலாபூர் கிராமவாசிகளும், தங்களால் இயன்ற அளவிற்கு, உதவி செய்து உற்சவம் தடையில்லாமல் நடக்க ஏற்பாடு செய்தனர். ஒன்பது நாட்களுக்கு அந்த உற்சவம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. பாலகிருஷ்ணா, தமது சத்குரு அளித்த வாக்கிற்கு ஏற்ப, தன்னைக் காண தன் இல்லத்திற்கு வருவதை நினைத்து, ஆனந்தத்துடனும், ஆவலோடும் காத்துக்கொண்டு இருந்தார்.

எட்டு நாட்கள் விழா சிறப்பாக நடந்து முடிந்தவுடன், ஒன்பதாவது நாள், அந்த அதிசயம் நடந்தது. ஒரு மத்தியான வேளையில் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், பாலகிருஷ்ணாவின் இல்லத்தின் வாசலில் வந்து நின்றார். அப்போது பாலகிருஷ்ணா சமர்த்த ராமதாஸ் ஸ்வாமி வரும் நாளானதால் கிராம மக்கள் அனைவரோடும் சேர்ந்துகொண்டு தம் ஸ்வாமியைக் காண ஆவலோடு இருந்தார்.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், பாலகிருஷ்ணனின் வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்த கிராமவாசிகள், ஆச்சரியத்தில் பாலகிருஷ்ணாவை அழைத்து குருவிற்கு மரியாதை செய்து வரவேற்கச் சொன்னார்கள். பாலகிருஷ்ணா ஸ்ரீ கஜானன் மகராஜ், தன் வீட்டு வாசலில் நிற்பதைப் பார்த்து, ஆச்சரியத்துடன் ஓடி வந்தார். அதே சமயம் அவருடைய கண்கள், வருவதாக வாக்களித்த தமது சமர்த்த ராமதாஸரைத் தேடியது. அவருக்குத் தெரியும், குருவின் வாக்கு ஒருநாளும் பொய்யாகாது. வாயிலில் வந்த நின்ற ஸ்ரீ கஜானன் மகராஜ் முதலில், ''ஜெய் ஜெய் ரகுவீரசமர்த்த'' என்ற உரக்க கூறினார், அது மட்டுமலலாமல் தாஸ்போத் எனப்படும், புனித கிரந்தத்திலிருந்து, ஸ்லோகங்களை தொடர்ச்சியாகக் கூறினார். அனைவரும், அதிசயமாக, அவரைப் பார்த்துக்கொண்டு இருந்தனர். ஸ்லோக வரிகளைக் கேட்டவுடன், பாலகிருஷ்ணா உடலில் ஆடை எதுவுமின்றி வீட்டு வாயிலில் நின்று கொண்டு இருந்த ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை ஒருமுறை உற்று நோக்கினார். அப்போது, அந்த அற்புதம் நடந்தது. பாலகிருஷ்ணாவின் பார்வையில், அவரது குரு சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் தெளிவாகவும், ப்ரகாஸமாகவும், தெரிந்தார்.



தமது குரு, சமர்த்த ராமதாஸ் தன்னைக் காண வந்திருப்பதைப் பார்த்து, ஆனந்தமடைந்து அவர் கண்களில், கண்ணீர் பெருக்கெடுத்தது. அடுத்த கணம், சமர்த்த ராமதாஸ், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களும், மாறி மாறி காட்சி அளித்தனர். அவர் குழப்பத்தை அறிந்த, ஸ்ரீ கஜானன் மகராஜ், ''இவ்வாறு நீ குழப்பம் அடையத் தேவையில்லை! பாலகிருஷ்ணா, சென்ற ஜென்மாவில் நான் சஜ்ஜனகடாவின், சமர்த்த ராமதாஸராக இருந்தேன். இப்போது, கஜானன் மகராஜ் ஆக ஷேக்காவ் கிராமத்தில் இருக்கிறேன்! நானே உனது குரு சமர்த்த ராமதாஸராவேன்! சென்ற வருஷத்தில், சஜ்ஜனகடாவில் நான் உனக்கு அளித்த வாக்கை காப்பாற்றவே இங்கு வந்தேன்! என்னை, நீ சந்தேகிக்க வேண்டாம்! ஆத்மாவை மட்டுமே பார்க்க வேண்டும்! சரீரத்தை அல்ல! பகவத் கீதையில் நீ கற்றதை நினைவில் கொள்! இப்போது, என்னை அழைத்து சென்று, ஒரு ஆசனத்தில் அமர்த்துவாயாக'' என்றார். பாலகிருஷ்ணாவும் சத்குருவின் கைகளை பிடித்து அழைத்துவந்து, ஆசனத்தில் அமரச் செய்தான். ஸ்ரீ கஜானன் மகராஜ், பாலாபூருக்கு வந்த செய்தி, எல்லா திசைகளிலும் பரவ, மக்கள் திரண்டு வந்து, ஸ்வாமியை தரிசித்து ஆவசீர்வாதம் பெற்றுச் சென்றனர். பாலகிருஷ்ணாவும், தம் சத்குருவை வணங்கி, அன்று முழுவதும் அவர் கூறிய வார்த்தைகளையே நினைத்துக் கொண்டு இருந்தான். அன்று இரவில், அவன் கனவில் சமர்த்த ராமதாஸர் தோன்றினார். அவர் பாலகிருஷ்ணாவிடம், ''ஸ்ரீ கஜானன் மகராஜ் என்னுடைய அவதாரம் ஆவார்! உன்னுடைய சந்தேகம் அர்த்தமில்லாதது! அதை ஒதுக்கிவிட்டு, அவரை வணங்கி உபசரிப்பாயாக! நீ அவருக்கு செய்யும் வழிபாடு எனக்குச் செய்வதற்கு சமமாகும்! உன்னுடைய இந்த வீண் சந்தேகம் உனக்கு தோல்வியை ஏற்படுத்தும். அவரை என் ரூபத்தில் கண்டு வணங்குவாயாக'' என்றார்.

தம் குருவின் இந்த உபதேசத்தைக் கேட்ட பாலகிருஷ்ணா, தம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், முன்னிலையில் பணிவுடன் மண்டியிட்டு வணங்கி, ''ஸ்வாமி! தாங்கள் என் மனதில் தோன்றிய எல்லா சந்தேகங்களையும் கனவில் நீக்கிவிட்டீர்கள்! இப்போது, நான் இந்த வருஷத்தின் நவமி உற்சவத்தை, முழுமையாக நடத்திய திருப்தியடைந்தேன். தாங்கள், எம்முடன் சில நாட்கள் தங்கி இருந்தால், நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்'' என்று வணங்கி வேண்டிக் கொண்டான்.

சத்குரு, பாலகிருஷ்ணாவிடம், சில நாட்கள் கழித்து தாம் திரும்பவும் இன்னொரு முறை வருவதாகக் கூறிவிட்டு உடனே மறைந்து விட்டார். அடுத்த நொடியில், நம் சத்குரு ஷேக்காவ் கிராமத்தில் அமர்ந்துக்கொண்டு இருந்தார். அவர் சென்ற வழியில், யாருக்குமே அவர் தென்படவில்லை. பாலாபூரில் இருந்து, ஷேக்காவ் கிராமத்திற்கு, சத்குரு எவ்வாறு சென்றார் என்று அனைவரும் வியந்தனர். யோகீஸ்வரரான நம் சத்குரு, பிரயாணம் செய்வதற்கு வாகனங்கள் தேவையில்லை. யதீஸ்வரர்களும், சித்த புருஷர்களும், மகான்களும், ஞானிகளும், அவதாரம் செய்த, புண்ணிய பூமி நம் பாரத தேசமாகும். இவர்கள் மறைந்தும், ஆகாய மார்க்கமாகவும், தன்னிச்சையாகவும், எந்த வாகனத்தின் உதவியும் இன்றி எங்கு வேண்டுமானாலும் சென்று வரக்கூடிய, ஆற்றல் படைத்தவர்கள்! இதற்குக் காரணம், இவர்களின் தவ வலிமையும், தன்னலமற்ற தன்மையுமே ஆகும். நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களைப் பற்றி எழுதிய தாஸ்கணு மகராஜ் அவர்களின் விருப்பம்,

இச்சரித்திரத்தை படிக்கும் பக்தர்கள், தாங்கள் வாழ்க்கையில் எல்லா நலன்களையும் பெற்று ஆனந்தமாக வாழ வேண்டும் என்பதே ஆகும், நாமும் சத்குரு, ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களின் பாதங்களை ஸ்பரிசித்து, அவரது ஆசீர்வாதத்துடன் அடுத்த அத்தியாயத்தில், அவர்தம் அற்புதங்களைக் காண்போமா?

**- ஜெய் கஜானன் -**





# அத்தியாயம் - 10

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! பரிபூர்ண பிரம்மமான, பண்டரிபுர பாண்டுரங்கனே! நீரே கதியற்று நிற்போர்க்கு பாதுகாப்பாக திகழ்கிறாய்! தயை கூர்ந்து, உன் பாதங்களை பற்றிய என்னை, தள்ளி விடாதே! ஹே நாராயணா! இந்த தாஸ்கணுவின் பாவத்தை மன்னித்து, என்னை புறக்கணிக்காமல், ஆதரவு அளிப்பாயாக! என்னுடைய கணக்கில் ஒரு புண்ணியமும் இல்லை! என்பது எனக்கு நன்றாக தெரியும். அதனால் நான் உன்னிடம் வருவதற்கு எந்த தகுதியும் இல்லாதவன்! எவ்வாறு புனிதமான கோதாவரி நதியானவள்!, தம் கிளைகளுக்கு பரிந்து இடம் கொடுப்பது போல, என்னையும், என் கோரிக்கையையும் ஏற்பாயாக! அளவில்லாத ஆற்றலுடைய, நீங்கள் நினைத்தால், எதுவும் சாத்தியமாகும்! ஏழையும் செல்வந்தராக முடியும்! அதனால் என் பாவத்தை மன்னித்து என்னை ஏற்பாயாக!

ஒருமுறை நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அமராவதி சென்று அங்கு ஸ்ரீ ஆத்மாராம் பிகாஜி என்பவர் இல்லத்தில் தங்கினார். ஆத்மாராம் காயாஸ்த பிரபு இனத்தைச் சேர்ந்தவர். அவர் அமராவதியில், உயர்ந்த பதவியில் இருந்த அதிகாரி ஆவார். அவர் எப்போதும் சாதுக்களையும், ஞானிகளையும் வணங்கி, உபசரித்து போற்றக்கூடியவர். ஆத்மாராம், ஒரு சிறந்த மனிதரும், எளிமையானவரும் ஆவார். நம் சத்குரு, ஸ்ரீ கஜானன் மகராஜ், ஆத்மாராமின் "இல்லத்திற்கு சென்றவுடன், ஆத்மாராம், சத்குருவை, பக்தியோடு உபசரித்து அவருக்கு வெந்நீரில் அபிஷேகம் செய்து, சந்தன குழம்பை அவர் மீது பூசி, வெண்பட்டால் அவருக்கு வஸ்திரம் அணிவித்து, அவருடைய நெற்றியில் கஸ்தூரி திலகமிட்டு, வாசனை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிவித்து, இனிமையான சுவைமிக்க பதார்த்தங்களை சமர்ப்பித்து, நமஸ்கரித்து குரு தட்சிணையாக ஒரு நூறு ரூபாய் நோட்டையும் அளித்தார். அவருக்கு ஆரத்தி எடுத்தபிறகு, நறுமணமிக்க ஊதுபத்தி ஏற்றி வைத்து, மலர்களால் அர்ச்சனையும் செய்தார். இந்த வழிபாட்டை, ஆத்மாராம் தூய்ஃமையான அன்போடும், சிறந்த பக்தியோடும் செய்தார். அமராவதியின் மக்கள், சத்குருவை காண வெள்ளம் போல திரண்டு வந்தனர். எல்லாரும் சத்குருவை தமது இல்லத்திற்கு அழைத்துச்சென்று, உபசரிக்க வேண்டும் என்று ஆசை

கொண்டனர். அனைவருடைய விருப்பமும் அதுவாக இருந்தாலும் அவரவர் செய்த புண்ணியங்களுக்கு ஏற்றவாறு, சத்குருவின் விருப்பத்திற்கு ஏற்ற இல்லங்களை, அவரே தேர்ந்தெடுப்பது வழக்கம். அவருடைய பாதங்களை ஸ்பரிசித்து, அபிஷேகம் செய்ய, புண்ணியம் செய்தவர்களுக்கு மட்டுமே பாக்கியம் கிடைக்கும். ஞானிகள், தம் ஞான திருஷ்டியால், அனைவரைக் குறித்தும் அறிந்துக் கொள்ள வல்லவர்கள்.

அமராவதியில், கணேஷ் ஸ்ரீ க்ருஷ்ண கபர்டே என்கிற தாதாசாஹேப், யஜுர் வேத அந்தணர் ஆவார். அவருடைய வேண்டுகோளை ஏற்றும் நம் சத்குரு அவர் இல்லத்திற்கு சென்று அவருடைய வேண்டுதலையும், உபசரிப்பையும் ஏற்றுக் கொண்டார். கணேஷப்பா என்கிற லிங்காயத் இனத்தைச் சார்ந்தவர், அவருடைய மனைவி சந்த்ரா பாய், நம் சத்குருவின் தீவிர பக்தையாவாள். சந்த்ராபாய், தன் கணவரிடம், எவ்வாறாயினும் சத்குருவை நம் இல்லத்திற்கு அழைத்து வந்து, உபசரிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். அவள் மேலும் தன் கணவரிடம், நமது மனது தூய்மையாகவும், உண்மையான பக்தியோடும் இருந்தால் சத்குரு நமது இல்லத்தை ஆசீர்வதிப்பார். அவர் எப்போதும், தமது பக்தர்களுக்கு ஆதரவு அளித்து, பாதுகாப்பார் என்றும் கூறினாள். கணேஷப்பா உடனே, அவர் மனைவி சந்த்ராபாயிடம், "நீ முட்டாள்தனமாக சிந்திக்கிறாய். மகா புருஷரை, நமது ஏழ்மையான இந்த குடிலுக்கு அழைப்பது சாதாரண காரியமன்று! அதற்கு செல்வாக்கு மிக்கவர்களின் சிபாரிசும், அந்தஸ்தும் தேவை, என்றும் ஸ்ரீ கபர்டே, சாதுவை தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு பல செல்வந்தர்களும் மிகுந்த பிரயத்தனம் மேற்கொண்டதாகவும் கூறி, இனியும் இதைப் பற்றி பேச வேண்டாம்" என்றார்.

அதற்கு அவர் மனைவி, "இதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்! என் மனம், அவர் நம் வீட்டிற்கு வருவார் என்பதை எனக்குச் சொல்கிறது. உங்களுக்குத் தெரியுமா? சாது புருஷர்களும், ஞானிகளும் எப்போதும் ஏழை பக்தர்களிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர்கள். அதனால் அவரிடம் என் வேண்டுகோளைத் தெரிவியுங்கள்" என்றாள்.

கணேஷப்பா, நம் சத்குருவின் முன்னிலையில் பேசுவதற்கு தைரியமின்றி அமைதியாக உட்கார்ந்து கொண்டு இருந்தார். ஆனால் சத்குருவிற்கு கணேஷப்பாவின் மனநிலை நன்றாகத் தெரியுமல்லவா? கணேஷப்பா ஒரு வார்த்தை கூட பேசாத நிலையில், சத்குரு அவரை நோக்கி, "நான் உன் வீட்டிற்கு



வருகிறேன்! இங்கிருந்து, எத்தனை தூரம் செல்ல வேண்டும் என்று சொல், என் முன்னால் உன் மனதை திறந்து வெளிப்படையாக பேசுவதற்கு, தயங்க வேண்டிய அவசியம் இல்லை" என்றார்.

சத்குருவின் இம்மொழிகளைக் கேட்ட கணேஷப்பா, ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தார். அவர் சத்குருவை நமஸ்கரித்து, தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். சத்குரு அவர்கள் வீட்டிற்குச் சென்றதும், கணேஷப்பா தன் எளிமையான குடிசையில் உள்ள எல்லாவற்றையும் சத்குருவிடம் சமர்ப்பணம் செய்து, அவரை தொழுதார்.

இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம், சத்குருவானவர் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், அந்தஸ்து இவை யாவற்றையும் தூர எறிந்துவிட்டு, உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் தூய்மையான அன்புக்கு மட்டுமே, கட்டுப்பட்டு பக்தர்களை காத்து, அவர்களின் நலனில் அவர்கள் சொல்லாமலேயே தாமாகவே முன்னின்று அக்கறை கொள்வார்! ஒரு தாய், குழந்தைகளின் நலனை அவர்கள் சொல்லாமலேயே அறிந்து, உதவுவது போல, சத்குருவும் அன்பைப் பொழிந்து, தம் பக்தர்களைக் காப்பார் என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

அமராவதியில், மற்றொரு சுவையான சம்பவம் நடந்தது. ஸ்ரீ ஆத்மாராமின் உறவினரான, பாலபுவா சத்குரு செல்கின்ற, எல்லா இடங்களுக்கும் சென்று அவரை தரிசிப்பார். அவர் மும்பையில், தபால் நிலைய அதிகாரியாக இருந்தார். பாலபுவா அமராவதிக்கு தன்னுடைய உறவினரைக் காணும் பொருட்டு, விடுமுறை எடுத்துக் கொண்டு, சில நாட்கள் தங்குவதற்காக வந்திருந்தார். ஆனால், இங்கு வந்தவுடன், நம் சத்குருவை சந்தித்த பின், திரும்பிச்செல்ல அவர் மனம் மறுத்தது. அவர் எல்லாவற்றையும் துறந்துவிட்டு, தம் வாழ்நாள் முழுவதும் சத்குருவின் சேவைக்கே அர்ப்பணிக்க விரும்பினார். குடும்ப வாழ்க்கையில், விருப்பமில்லாதவராய், தம் வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்த சத்குருவின் தரிசனத்தை, நினைத்து இல்லற வாழ்வைத் துறந்து, சத்குருவைப் பின்பற்றி தம் வாழ்நாள் முழுவதையும் அவருடனேயே கழிக்க விரும்பினார். சிறிது நாட்களுக்குப் பிறகு, சத்குரு அமராவதியை விட்டு ஷேக்காவ் திரும்பினார்.

அவர் ஷேக்காவ் திரும்பியதும் மோடேயின் சிவலாயத்திற்கு வந்தார். அந்த ஆலயத்தின் கிழக்கில் ஒரு காலிமனை இருந்தது. நம் சத்குரு, ஸ்ரீ கஜானன் மகராஜ், அந்த காலி மனையில் சென்று

அமர்ந்தார். இதற்கிடையில் கிருஷ்ணா பாட்டீல் இச்செய்தி கேட்டு, ஓடி வந்து சத்குருவின் முன் மண்டியிட்டு அமர்ந்து அழுதார். சத்குரு, அவரிடம், ''ஏன் அழுகிறாய், என்ன குறை உனக்கு? சீக்கிரம் சொல்'' என்றார். அதற்கு கிருஷ்ணா பாட்டீல் கைகள் தொழுது, ''ஸ்வாமி! மன்னிக்க முடியாத அளவிற்கு நான் என்ன குற்றம் செய்தேன்! நான் உங்கள் குழந்தை! நீங்கள் இங்கு வந்து அமர வேண்டிய காரணம் என்ன என்று கூறுங்கள், நீங்கள் அமர்ந்து கொண்டிருக்கும், இந்த இடத்தின் சொந்தக்காரன் தேஷ்முக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆகையால், தயவு செய்து இந்த இடம் விட்டு, என் இல்லத்திற்கு வாருங்கள், நான் என் இல்லம் முழுவதையும், தங்களுக்கு அர்ப்பணித்து விடுகிறேன்'' என்று பாட்டீல் சகோதரர்கள் சார்பில் வேண்டிக் கொண்டான். (இதற்கு முன் அத்தியாயத்தில், தேஷ்முக் குடும்பத்தினரின் பகை உணர்வு குறித்து கண்டோம்). தற்போது மகராஜ், தேஷ்முக் குடும்பத்தை சார்ந்தவரின் நிலத்தில், தாம் அமரப்போவதாக கூறி, அங்கு சென்று அமர்ந்துக் கொண்டார்.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் சிரித்துக் கொண்டே, ''பாட்டீல் சகோதரர்களிடம், உங்கள் நன்மையை கருத்தில் கொண்டு தான், நான் இந்த இடத்தில் அமர்ந்து கொண்டு இருக்கிறேன். இக்கருத்தை, நீங்கள் சிறிது காலத்திற்குப் பிறகு புரிந்துக் கொள்வீர்கள். பாட்டீல் குடும்பத்தினரும், தேஷ்முக் குடும்பத்தினரும், அமைதியாக வாழ்வதற்கு உரிய ஏற்பாடு செய்வதாக நான் உங்களுக்கு வாக்களிக்கிறேன்'' என்றார். எல்லா உயர்ந்த அதிகாரிகளும், உயர்ந்த பதவியில் இருப்பவர்களும் செய்யும் தவறு என்னவென்றால், தங்களின் செயல்களும், நடவடிக்கைகளும், அதற்கேற்ற விளைவை, தமக்குப் பெற்றுத் தரும் என்பதை மறந்து போவது தான். இப்போது நீங்கள் சென்று பங்கட்லாலை அழைத்து வாருங்கள்! அவன் வீட்டைவிட்டு நான் விலகிய போது, என் மீது கோபம் கொள்ளவில்லை, அவனை அழைத்து வந்து அதன் காரணத்தை கேளுங்கள். என்னுடைய ஆசீர்வாதம் எப்போதும் உங்களுடன் இருக்கும். எதிர்காலத்திலும் கூட நான் உங்களுடன் இருப்பேன்'' என்றார்

பாட்டீல் குடும்பத்தினர், பங்கட்லாலை அழைத்து வந்தனர், பங்கட்லால் அவர்களிடம் தயவுசெய்து சத்குருவின் செயலை மறுத்து, அவரை உங்கள் தோட்டத்திற்கு அழைத்துச் செல்லும் கருத்தை கைவிடுங்கள்! நாம் அனைவரும் அவருடைய குழந்தைகள் ஆவோம்! சத்குரு என் வீட்டைவிட்டு சென்றபோது, நான் எதையும்



கூறி அவரைத் தடுக்கவில்லை. அவருடைய அன்பு, நம் அனைவரின் மீதும் சமமாகப் பொழிகிறது. இந்தக் காலி மனையின் உரிமையாளர் சாகாராம் அயோல்கர், ஒரு சிறந்த மனிதர். அவர் நம் சத்குருவிற்கு இடம் அளிப்பதற்கு மறுக்க மாட்டார் என்பதை நான் தெளிவாக நம்புகிறேன். இந்த மனை, சத்குருவினிடம் வந்து சேர்ந்ததும், நாம் அனைவரும் ஒன்று கூடி, அடுத்த செயல் குறித்து ஆலோசிக்கலாம் என்று கூறினார். நம் சத்குருவால் அவ்விரு குடும்பத்தினருக்கும் உடன்பாடு ஏற்பட்டு அவர் அமர்ந்த அந்த இடத்தில் ஒரு மடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த ஏற்பாட்டை முன்னின்று நடத்தியவர், பராஷரம் சாவோஜி என்பவர் ஆவார். நம் சத்குருவின் முக்கியமான சீடர்களான, அமராவதியைச் சேர்ந்த பாலபுவா, பீதாம்பர், கணேஷப்பா மற்றும் ராமச்சந்திரா குருராவும் ஆவார்கள். அவர்கள் ஐவரும், பஞ்ச பாண்டவர்களாகவும், ஸ்ரீ கஜானன் மகராஜ், ஸ்ரீ கிருஷ்ணராகவும் ஒருவரை விட்டு மற்றவர் பிரியாமல் இருந்தனர்.

இவர்கள் நால்வரில் பாலபுவா தன் குடும்ப வாழ்க்கையையும், பதவியையும் முற்றிலுமாகத் துறந்தவர். மகராஜ் அவர்களுக்கு சேவை செய்வதை மட்டுமே வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதினார். அவருக்கு அரசாங்கத்திலிருந்து, பணியை தொடர வேண்டி பலமுறை கடிதங்கள் வந்தபோதும் அவர் அதை பொருட்படுத்தவில்லை. பாஸ்கரா, பாலபுவாவின் சேவை கண்டு பொறாமை கொண்டவனாய், ''ஸ்வாமி! இந்த பாலபுவா அவர் இடத்திற்கு திரும்ப மறுக்கிறார். அவருக்கு இங்கே கிடைக்கக் கூடிய, இனிப்புப் பதார்த்தங்கள் அங்கே கிடைக்கப் பெறாததால், நம்மை விட்டு செல்ல அவருக்கு மனம் வரவில்லை. அவர் தங்களிடம் அடி வாங்கினால் தான் இந்த இடத்தைவிட்டு நீங்குவார். குரங்குகள் எப்போதும் தடியடிக்கு மட்டுமே பயங்கொள்ளும். பெரிய மலைகளும், இடி, மின்னல் போன்ற இயற்கையின் சீற்றத்திற்கு பயப்படும்'' என்றார்.

அதன்பிறகு பாஸ்கரா, பாலபுவாவிடம் திரும்பிச் செல்லுமாறு வற்புறுத்தவே, பாலபுவா சென்றுவிட்டு, சில நாட்களில் திரும்ப வந்து விட்டார். இம்முறை அவர்தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு வந்துவிட்டார். இம்முறை பாஸ்கரா மிகுந்த கோபம் கொண்டான். அவன் பாலபுவாவிடம், ''ஏன் வெட்கமில்லாத மாடுகள் துரத்தப்பட்ட பின்னரும், பசும்புல்லைத் தேடி வருவதைப் போல திரும்பி இங்கே வந்து எங்களுக்கு தொல்லை

கொடுக்கிறாய். வாழ்க்கையில் எல்லாவற்றையும் துறந்தவர்கள் மட்டுமே இங்கு வரமுடியும்'' என்றார்.

இதுவரை பொறுமையாக பாஸ்கராவின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மகராஜ் அவனுடைய ஆணவத்திற்கு ஒரு முடிவு கட்ட நினைத்தார். பாஸ்கராவின் அறியாமையை நீக்கவும் அவன் பாலபுவாவின் சேவையையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டி ஒரு நாடகத்தை துவக்கினார்.

ஸ்ரீ மகராஜ் அவர்களின் அருகில் இருந்த, ஒருவரின் கைகளில் பெரிய குடை ஒன்று இருந்தது. ஸ்ரீ மகராஜ், அந்த குடையை அவரிடம் இருந்து வாங்கி, பாலபுவாவை மாறி மாறி அடிக்கத் தொடங்கினார். சிறிது நேரத்தில் அக்குடையே உடைந்து விட்டது. குடை உடைந்ததும், பக்கத்தில் இருந்து ஒரு கரும்பை எடுத்து, மறுபடியும் பாலபுவாவை அடிக்க ஆரம்பித்தார். இம்முறை தொடர்ந்து அடி விழுந்துக் கொண்டே இருந்தது. சுற்றி நின்ற அனைவரும், அதிர்ச்சியில் உறைந்து நின்றனர். பலர் அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டனர். பாலபுவா பேச்சு மூச்சின்றி கீழே கிடந்தார். சிறிது நேரத்தில் அந்த கரும்பும் உடைந்து விட்டது. இப்போது மண்பாண்டம் செய்வது போல, தன் இரு கால்களால் உதைக்க ஆரம்பித்தார். இந்நிகழ்ச்சி பாஸ்கராவிற்கு மிகுந்த வேதனை அளித்தது. சுற்றி இருந்தவர்கள் பாலபுவா இறந்து விட்டான் என்ற முடிவு செய்து அங்கிருந்து சென்று விட்டனர். ஒரு சிலர் மகராஜ் அவர்களிடம் பேசுவதற்கு பங்கட்லால், கிருஷ்ணாஜி என்ற இருவரால் மட்டுமே இயலும் என்று கருதி அவர்களை அழைத்து வரச் செய்தனர்.

பங்கட்லால், சத்குருவின் கோபாவேசத்தை பார்த்து பயந்தவனாக சிறிது நேரம் நின்றுவிட்டு பிறகு மெதுவாகச் சென்று அவரிடம், ''ஸ்வாமி! பாலபுவா தங்களின் பரமபக்தன் ஆவான். அவனை இவ்வாறு காயப்படுத்துவது தங்களுக்கு மிகுந்த வேதனை அளிப்பதாகக் கூறினார்.'' நம் சத்குரு உரத்த குரலில் சிரித்தார். பங்கட்லால் உனக்கு என்ன ஆயிற்று? ஏன் இவ்வாறு பிதற்றுகிறாய்? நான் பாலபுவாவை அடிக்கவோ காயப்படுத்தவோ இல்லை. உனக்கு சந்தேகமாக இருந்தால் அங்கே பார் என்று கூறி, ''எழுந்திரு எனதருமை பாலபுவா, எழுந்து எல்லோருக்கும் உன் உடலைக் காண்பிப்பாயாக'' என்றார். உடனே தூக்கத்தில் இருந்து எழுந்தவனைப் போல பாலபுவா எழுந்து நின்றான். சுற்றி நின்ற அனைவரும் அவன் உடலை பரிசோதித்துப் பார்த்தனர் என்ன



அற்புதம்! ஒரு காயம் கூட அவன் உடலில் இல்லை. குடையால் அடித்தும், பிறகு கரும்பால் அடித்தும், அதுவும் உடைந்து போக, கால்களால் உதைத்த பிறகும் கூட, ஏதோ தூக்கத்தில் இருந்து எழுந்து வந்தவனைக் போல, பாலபுவா, வலியின் ரேகையோ ஒரு சிறு தழும்போ இல்லாமல், புத்துணர்ச்சியுடன் காணப்பட்டான். பாலபுவாவிற்கு எதிராக பேசிய பாஸ்கரா மற்றும் அனைவருக்கும் பாலபுவாவிடம், தனது அன்பு எத்தகையது என்பதை உணர்த்தவே இந்த நாடகம் ஆடினார் சத்குரு என்ற உண்மை அனைவருக்கும் புரிந்தது. பாலபுவா, பழைய நிலையைக் காட்டிலும் இன்னும் அதிகமான புத்துணர்ச்சியோடும், புது பொலிவோடும் ஆனந்தமாகக் காணப்பட்டான்.

இந்நிகழ்வின் மூலம், தங்கம் எப்போதும் அமிலத்தின் மூலமாகவே பரிசோதிக்கப்படும், குருவிடம் பாலபுவாவின் உரிமையும், அதிகாரமும், அளவு கடந்த அன்பும் எல்லோருக்கும் தெரிய வந்தது. பாலபுவாவை, சத்குரு ஸ்பரிசித்து, ஒவ்வொரு முறையும் அவருடைய மகாப்ரஸாதமான, ஆசீர்வாதத்தை பெற்றார் என்பது தான் உண்மையாகும்.

ஒரு பசுவின் மூலம், மற்றொரு அற்புதத்தை சத்குரு எவ்வாறு நிகழ்த்தினார் என்பதை இனி காண்போம். பாலாபூரில் சுகாலால் அகர்வால், என்பவரிடம் ஒரு பசு இருந்தது. அப்பசு நச்சுத்தன்மை கொண்ட கொடிய பசுவாக, தீய செயல்களையே புரிந்து கொண்டு இருந்தது. அப்பசு, தன் கூர்மையான கொம்புகளால், அவ்வூரில் போவோர், வருவோர் அனைவரையும் குத்தி காயப்படுத்துவதை வழக்கமாக கொண்டிருந்தது. கடைத் தெருவில், அப்பசு ஏதாவது ஒரு கடையில் புகுந்து, தன்னால் இயன்றவரை, தானியங்களை உண்டுவிட்டு மீதமிருந்த தானியங்களையும் மற்ற பொருட்களையும், கொம்புகளாலும், கால்களாலும் உதைத்து, தெருவில் தள்ளி விடுவது வழக்கம். அப்பசு எண்ணெய் மற்றும் நெய் நிரம்பிய பெரிய தகர பீப்பாய்களை தரையில், உருட்டி தெருவில் தள்ளி, அனைவரையும் அச்சுறுத்தி வந்தது. அப்பசுவை, எந்த கயிற்றாலும் கட்ட முடியவில்லை. அவ்வாறே கட்டினாலும், அடுத்த நிமிடம் அக்கயிற்றை அறுத்து கொண்டு கடைவீதிக்கு ஓடிவந்துவிடும். அப்பசு, புலியின் குணத்தைக் கொண்டு இருந்ததால் யாரும் அதை நெருங்கவே பயந்தனர். அப்பசு கருத்தரிக்கவும் இல்லை. அப்பசுவால் மிகுந்த வேதனை அடைந்த, பாலாபூர் மக்கள், அதன் உரிமையாளர் சுக்காலாலிடம் அதை கசாப்புக் கடைக்காரனிடம் ஒப்படைத்துவிடுமாறும் இல்லையெனில் துப்பாக்கியால் சுட்டுக்

கொல்லுமாறும் கூறினர். சுக்காலாலும் வேறு வழியின்றி அதற்கு சம்மதித்தார்.

ஒரு இஸ்லாமியர், அப்பசுவை தன் துப்பாக்கியால் சுடுவதற்கு முயற்சிக்க, அதற்கு முன்னால் அப்பசு சீறிப் பாய்ந்து அவரைத் தன் கொம்புகளால் பலத்த காயப்படுத்திவிட்டது. சுக்காலால் என்ன செய்வது என்று தெரியாமல், மிகுந்த வேதனையோடு அப்பசுவை அழைத்துச் சென்று பக்கத்து ஊரில் விட்டு விட்டு வந்துவிட்டார். அடுத்தநாள், அப்பசு பக்கத்து ஊரில் இருந்து இரவோடு இரவாக சுக்காலால் வீட்டு வாயிலில் கம்பீரமாக வருகை தந்து தன் எஜமானரைக் காணும் ஆவலில் நின்றுக் கொண்டிருந்தது.

சுக்காலாலுக்கு அப்பசு, பெரிய பாரமாகப் போய்விட்டது. கிராம மக்கள், அவரிடம் அப்பசுவை ஷேக்காவ் நகரத்தில் இருக்கும் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு தானமாக அளித்துவிடு, என்றும் சாது புருஷருக்கு பசுவை தானமளிப்பது, பெரிய புண்ணியமாகும் என்றும், நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், முன்னர் ஒருமுறை கோவிந்த புவாவின், பொல்லாத குதிரையை அமைதியுறச் செய்தவர் என்பதையும், சுக்காலாலிடம் எடுத்துரைத்தனர். அனைவருக்கும் இந்த திட்டம், மிகவும் பிடித்துப்போனது. ஆனால், யார் அதைப் பிடித்துக் கொண்டு செல்வது என்ற பிரச்சினை எழுந்தது.

கிராம மக்கள், பச்சைப் புல் மற்றும் பருத்திவிதைகளை தரையில் பரப்பி, அப்பசுவை பிடிக்க காத்துக்கொண்டு இருந்தனர். அப்பசு பச்சைப் புல்லை உண்ண வந்தவுடன், பத்து பதினைந்து பேர்கள் சேர்ந்து அப்பசுவைச் சுற்றி திடமான இரும்புச் சங்கிலியால் கட்டி இழுத்து, மாட்டுவண்டியில் தூக்கி அமர வைத்தனர். அந்த வண்டியோடு, கிராம மக்கள் சத்குருவை தரிசிக்கவும், அப்பசுவை அவருக்கு வழங்கவும் ஷேக்காவ் கிராமத்திற்கு வந்தனர். வரும் வழியில், அந்த அற்புதம் நடந்தது. இரும்புச் சங்கிலியால் பிணைத்தும் அதை விடுவிக்க முயன்று தோல்வியுற்று, ஆவேசத்துடன் இருந்த அப்பசு ஷேக்காவ் கிராம எல்லையை நெருங்கியதும் மிகவும் சாதுவாக மாறிவிட்டது. சத்குருவின் முன்னால் அப்பசுவை கொண்டு வந்து நிறுத்தியதும், சத்குரு அப்பசுவை உற்று நோக்கினார். என்ன ஆச்சரியம்! அப்பசுவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அது தன் தலையை தாழ்த்திக் கொண்டு, ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆசிர்வாதத்தை ஏற்க தயாராக இருந்தது.



சத்குரு அவர்களைப் பார்த்து கோபத்துடன், ''இது என்ன முட்டாள்தனமான காரியத்தை செய்திருக்கிறீர்கள்? பாவம் இப்பசுவின் கழுத்து, கை கால்களை இரும்புச் சங்கிலியால் பிணைக்க வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது! ஒரு புலியிடம் நடந்துக் கொள்ள வேண்டிய முறையை, இப்பசுவிடம் கையாண்டு இருக்கிறீர்கள். பசு எல்லா உயிர்களுக்கும் தாய் ஆவாள். அவளை இவ்வாறு சித்ரவதை செய்து, பெரும் பாவத்திற்கு ஆளாகியிருக்கிறீர்கள். இவளை உடனே விடுவித்து விடுங்கள்! இவள் யாரையும் துன்புறுத்த மாட்டாள்'' என்று கூறி சங்கிலியை விடுவிக்க உத்தரவு இட்டார்.

இந்த வாக்கை அளித்தும் கூட ஒருவருக்கும், அதனருகில் செல்வதற்கு தைரியம் வரவில்லை. சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் இந்த பசுவின் குணத்தை அறிய மாட்டார் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் பயந்து நின்று கொண்டிருக்க சத்குரு தன் புனிதமான கைகளால், அந்த சங்கிலியை அறுத்து, அப்பசுவை விடுவித்தார். அப்பசு விடுதலையானதும் அனைவரும் பயந்தனர். ஆனால் என்ன அற்புதம்? அப்பசு, தன் நான்கு கால்களையும் மடக்கி, சிரம் தாழ்த்தி, சத்குருவின் பாதங்களை, தன் நாக்கால் ஆனந்தமாக ஸ்பரிசித்தது. பாலாபூர் மக்கள் அனைவரும், இக்காட்சியைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர். ஊரையே நாசம் செய்த அப்பசு, அத்துறவியின் பாதங்களைப் பற்றியிருப்பது குறித்து அனைவரும் வியந்து நம் சத்குருவை நமஸ்கரித்தனர். சத்குரு இப்போது அப்பசுவைப் பார்த்து, ''நீ இனிமேல் யாரையும் துன்புறுத்தக் கூடாது! அதே சமயம் இந்த இடத்தைவிட்டு எங்கேயும் போகவும் கூடாது'' என்று கட்டளையிட்டார். அது தலையை ஆட்டி சம்மதித்து அவரின் பாதங்களை ஸ்பரிசித்தது. இக்காட்சியைக் கண்ட கிராமவாசிகள், சத்குருவை போற்றி, ஆனந்தத்துடன் தங்கள் கிராமம் திரும்பினர். குருவின் வாக்கை, விலங்குகள் கூட பணிவிட்டு ஏற்றுக்கொள்ளும் அற்புதம் அங்கே நடந்தது.

''ஜெய் ஸ்ரீ கஜானன் மகராஜ்'' என்ற மங்கள கோஷத்துடன், நம் சத்குருவின் அற்புத லீலைகளை தொடர்ந்து காண்போம். அனைத்து பெரிய மருத்துவர்களும் கைவிட்ட நிலையில், தம்மிடம் தஞ்சம் அடைந்த, லக்ஷ்மண் கூடே என்பவரை எவ்வாறு காப்பாற்றினார் என்பதை இப்போது காண்போம்.

மகாராஷ்டிர தேசத்தில், கரஞ்சா நகரில் (தத்த அவதாரியான, ஸ்ரீ குரு நிருசிம்ம ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவதரித்த இடம்)

லக்ஷ்மண் கூடே என்ற அந்தணர், தீராத வயிற்று வலியால் கடும் அவஸ்தை அடைந்தார். ஆயுர்வேத மருத்துவத்தில், உயர்வான நிலை அடைந்த மிகச்சிறந்த மருத்துவர்களும் அவரை கைவிட்டு விட்டனர். அவரால், இரண்டு பேர்களின் உதவியின்றி இரண்டு அடி கூட எடுத்து வைக்க இயலவில்லை. இறுதியாக, உறவினர்கள் அவரை, ஷேக்காவ் கிராமத்தில், சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை தரிசித்தால், அவர் உடல்நிலை தேறுவது உறுதி என்று கூறினார்கள். லக்ஷ்மண் கூடேவும் தன் உதவியாளர்களை அழைத்துக் கொண்டு ஷேக்காவ் வந்து அடைந்தார். வழியெங்கும் மிக்க வலியும், வேதனையும் அவரை துன்புறுத்தியது. அவரது மனைவி சிறந்த பதிவிரதை ஆவாள். அவள் தன் கணவரின் வலியை நீக்குமாறு, ஸ்ரீ கஜானன் மகராஜ் முன் வணங்கி, ''ஓ கஜானன் மகராஜ் நான் உன்னுடைய குழந்தையாவேன்! தயை கூர்ந்து, என் கணவனை இந்த வியாதியில் இருந்து நீங்கள் காப்பாற்ற வேண்டும். உயிர், காக்கும் மருந்தாக தாங்கள் இருக்கும்போது, என் கணவரை மரணம் தீண்ட முடியாது. ஆகையால் தயவு செய்து என் கணவரை காப்பாற்ற வேண்டும்'' என்று மன்றாடினாள்.

அதே சமயம், ஸ்ரீ கஜானன் மகராஜ், மாம்பழத்தை சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக, தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த மாம்பழத்தை அவளிடம் தூக்கி எறிந்தரர். சத்குரு அவளிடம், ''குழந்தாய்! நீ இப்போது சென்று இந்த மாம்பழத்தை உன் கணவனை, உண்ணச் செய்வாயாக! இது அவனுடைய கொடிய வயிற்று வலியை தீர்க்கும் அரிய மருந்தாகும்'' என்றார். மேலும், ''நீ அவனுடைய நலனை கருத்தில் கொண்ட நல்ல மனைவியாவாய்'' என்றார்.

சத்குரு அவ்வாறு கூறிவிட்டு, தன் புகைக் குழாயை வாயில் வைத்து புகைக்க ஆரம்பித்தார். அந்த பெண் அந்த இடத்தை விட்டு அசையாமல் அங்கேயே உட்கார்ந்து கொண்டு இருந்தாள். பாஸ்கரா உடனே அவளிடம், ''ஓ பெண்ணே! நீ இனியும் இங்கு உட்காரத் தேவையில்லை உன் கணவனை, கரஞ்சா அழைத்துச் சென்றுவிட்டு, சத்குருவின் மகாப்ரஸாதமான இந்த மாங்கனியை அவருக்கு அளிப்பாயாக! அதை உண்டு முடித்ததும் அவன் எல்லா வியாதிகளில் இருந்தும் விடுபடுவான்'' என்றார்.



அவன் தன் கணவனை அழைத்துக்கொண்டு, கரஞ்சா திரும்பினாள். அந்த ஊர் மக்கள் அவளிடம், ஷேக்காவ் கிராமத்தில் என்ன நடந்தது என்று விசாரித்தனர். அவள் மகராஜ் அளித்த மகாப்ரஸாதமான அந்த மாங்கனியை உண்ணும் வேளையில், அவன் கணவன் குணமடைந்து விடப் போவதாகக் கூறினாள். இதற்கிடையில், அவன் கணவனுக்கு வைத்தியம் செய்த எல்லா மருத்துவர்களும், கடுமையான வயிற்று வலிக்கு, மாங்கனி மிகவும் ஆபத்தை விளைவிக்கும், என்றும் வைத்திய சாஸ்திரமான மகோன்னத், சுஷ்ருத், நிகண்ட் முதலிய நூல்களில் சொல்லப்பட்டுள்ள, எல்லா கருத்துக்களும் இத்தகைகய வயிற்றுவலிக்கு மாங்கனி மிகவும் ஆபத்தை விளைவிக்கும் என்று கூறினர். மேலும் அவர்கள் அந்த மாம்பழத்தை அவள் கணவனிடத்தில் தருவதற்கு பதிலாக அவளே உண்டால் அவள் புண்ணியத்தால் கணவன் உயிர் பிழைக்க வழி உண்டு என்றும் பலவாறு கருத்துக்களைக் கூறினர்.

மருத்துவர்களின் இத்தீர்மானத்தை கேள்வியுற்று, கிராம மக்கள் அவளை கேலி செய்யத் தொடங்கினர். ஆனால் அங்கே ஒரு அற்புதம் நடக்கவிருப்பது யாருக்குமே தெரியவில்லை. மாங்கனியை உண்ட அவளது கணவன், தன் வயிறு திடீரென்று இலேசாகி வலியில்லாத ஒரு நிலைக்கு கொண்டு செல்வதை நன்றாக உணர்ந்தான். சிறிது நேரத்தில் அவன் வலியில் இருந்து, முழுவதுமாக விடுபட்டான். அனைவரும், சத்குருவின் இந்த அற்புதம் கண்டு அதிசயித்தனர். அவன் தனக்கு, இதற்கு முன்னால் வலி இருந்தது என்பதையே மறந்துவிட்டிருந்தான்.

இந்நிகழ்ச்சி நமக்கு அளிக்கும் செய்தி! பெரிய மருத்துவர்கள் ஆனாலும், பெரிய சாஸ்திர நூல்கள் ஆனாலும் அவை எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் சத்குருவுக்கு உண்டு என்பதாகும். இயற்கைக்கு புறம்பாக நிகழ்வுகள் நடக்கும்போது மருத்துவர்கள் கைகட்டி நின்று வேடிக்கை மட்டுமே காண முடியும். அந்த சமயத்தில் சத்குருவும், ஞானிகளும் நம்மை கைவிடமாட்டார்கள். ஆனால் நாம் அதற்குத் தகுதியானவர்களாக இருக்க வேண்டும். உண்மையானவர்களாக, பூரண நம்பிக்கையோடும், பக்தியோடும் சத்குருவின் வாக்கை, வேதவாக்காக எடுத்துக்கொள்பவனுக்கு வாழ்க்கையில் எத்தகைய இடர்கள் வந்தாலும் சத்குரு அவற்றை எதிர்கொண்டு நம்மை காத்து இரட்சிப்பார்.

இத்தகைய தகுதி, நம் லக்ஷ்மண் கூடேவுக்கு இல்லாத காரணத்தால் உடல் நலம் தேறினாலும் சத்குருவின் சாபத்திற்கு அவன் ஆளாக நேர்ந்தது. அந்நிகழ்வைப் பற்றி இப்போது காணலாம்.

தன் உடல்நிலை தேறியவுடன், லக்ஷ்மண் கூடே பழைய நிலைக்குத் திரும்பி மிகுந்த ஆரோக்கியத்தோடும் புத்துணர்ச்சியாடும் காணப்பட்டான். தன்னுடைய இந்நிலைக்கு காரணம் ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களின் ஆசீர்வாதமே, என்பதை அத்தம்பதியினர் நன்றாக உணர்ந்து அவரை எவ்வாறாவது கரஞ்சா அழைத்து வந்து தம் இல்லத்தில் சத்குருவை சகல மரியாதைகளோடும் உபசரித்து, தன் நன்றிக்கடனை செலுத்த வேண்டும் என்று முடிவெடுத்து அவர்கள் ஷேக்காவ் சென்றனர்.

அங்கு நம் சத்குருவை தொழுது, தன்னுடைய இந்த ஆரோக்கியமான தேக நிலைக்கு சத்குரு மட்டுமே காரணம் என்று கூறி அவரை வணங்கி சிறிது நாட்கள் கரஞ்சாவில் உள்ள தமது இல்லத்தில் தங்கி, தம் உபசரிப்பை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். சத்குரு முதலில் வர இயலாது என்று கூறி மறுத்த பின்னும் லக்ஷ்மண் கூடே மீண்டும் வற்புத்தியதால் அவர் கரஞ்சா வருவதற்கு சம்மதித்தார்.

மகராஜ் தன்னுடன் சங்கர், பாஷூ, பிதாம்பர் இவர்களை அழைத்துக்கொண்டு கரஞ்சா சென்று லக்ஷ்மண் கூடேயின் இல்லத்திற்குச் சென்றார். அங்குதான் எதிர்பாராவிதமாக அந்த சம்பவம் நடந்தது. லக்ஷ்மண் கூடே சத்குருவை வரவேற்று உபசரித்து அவருக்கு எல்லா பூஜைகளும் செய்தான். பூஜை முடிந்த பிறகு, மகராஜ் அவனிடம் தட்சிணை கேட்டார். லக்ஷ்மண் கூடே உடனே சத்குருவிடம், ''மகராஜ் என்னுடையது எல்லாம் தங்களுடையதே அவ்வாறிருக்க நான் யார் தங்களுக்கு தட்சிணை அளிப்பதற்கு'' என்று கூறி சில நாணயங்களை அரை மனதோடு தட்டில் வைத்தான். இதே போன்று ஒருமுறை ஷீரடியில் ஸ்ரீ சாய்பாபா தன் பக்தர்களிடத்தில், ''நான் வாங்கும் ஒவ்வொரு ரூபாய் தட்சிணைக்கும் அதற்குப் பதிலாக பத்து மடங்கு திருப்பித் தர கடமைப் பட்டுள்ளேன்'' என்று கூறிய சம்பவத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜூம், லக்ஷ்மண் கூடேயின் கர்மாவை போக்க, அவனிடம் தட்சிணை கேட்டார். அவர், ஆசாபாசங்கள் அனைத்தையும் துறந்த யோகீஸ்வரர். அவருக்கு லக்ஷ்மணன் கூடேயிடம் இருந்து, தட்சிணை வாங்குவதற்கு ஒரு தேவையும் இருந்ததில்லை. அதற்குப் பதிலாக லக்ஷ்மண் கூடேவுக்கு பல மடங்கு செல்வமளித்து செல்வந்தராக்கவே அவனிடம் தட்சிணை கேட்டார். ஆனால், அத்தகுதியை லக்ஷ்மண் கூடே பெற்றிருக்கவில்லை. அதனால், அவன், சத்குருவிற்கு சொற்ப நாணயத்தை அளித்து தம் செல்வத்தை, பத்திரமாக பூட்டி வைத்திருந்தான். சத்குருவிற்கு அவன் குணம் நன்றாகத் தெரிந்தது. அவர் அவனிடம், ''உன்னிடம் இருக்கும் பணம் உன்னுடையதல்ல, என்னுடையது என்று நீ சொன்னாய்! அப்படியென்றால், இந்த நாணயங்களை எங்கிருந்து பெற்றாய்? உன்னுடைய தந்திரத்தை என்னிடம் காண்பிக்காதே! நீ சொன்னது போல எல்லாவற்றையும் எனக்களித்துவிட்டு பிறகு ஏன் செல்வம் வைத்திருக்கும் அறையைப் பூட்டி வைத்திருக்கிறாய்? அந்த பூட்டை உடைத்துப் போடு, கதவுகளைத் திற'' என்று ஆணையிட்டார்.



சத்குருவின் வார்த்தையைக் கேட்டும் லக்ஷ்மண் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தான். மகராஜ் மீண்டும் அவனிடம் பணம் வைத்திருக்கும் பாதுகாப்பு பெட்டக அறையை திறந்து விடச்சொல்லி உத்தரவிட்டார். இம்முறை லக்ஷ்மண் அரை மனதோடும், கோபத்தோடும் எல்லாக் கதவுகளையும் திறந்துவிட்டு சத்குருவை, அவருக்கு என்ன வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளச் சொன்னான். அதைக் கூட அவனுடைய ஆழ்மனது, ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு நடிகனால், ராஜகுமாரனாக நீண்ட நாள் வேடமிட முடியாது. கசப்பு நிறைந்த பொருட்கள் பார்வைக்கு அமிர்தமாக தோன்றினாலும், அதன் கசப்பு அதன் உள்ளிருந்து காட்டிக் கொடுத்துவிடும். அதைப்போல, சாதுக்கள் இதுமாதிரியான, போலியான எண்ணம் கொண்டவர்களின் இல்லத்தில், ஒருநாளும் தங்கியதில்லை. அதனால் அவர் லக்ஷ்மண் வீட்டில் தண்ணீரோ, உணவோ எதையும் ஏற்கவில்லை. அவருக்கு அவனுடைய செல்வத்தைப் பற்றிய சிந்தனை ஒருநாளும் இருந்ததில்லை. அவனுடைய உள்ளத்தில் தூய்மை அற்றவனாக இருந்தான். இச்செயல் சத்குருவிற்கு பிடிக்காத காரணத்தால் அவர் அங்கிருந்து உடனே விலகினார்.

சத்குரு, லக்ஷ்மண் கூடேயிடம், ''நீ ஒரு முழுமையான சுயநலக்காரன், எல்லாவற்றையும் நீயே சொந்தமாக்கி கொள்வது தான் உன் எண்ணம், அதற்குண்டான பலனை அனுபவிக்க இனிமேல் நீ தயாராக இரு என்று கூறி, நான் உன் வீட்டு

செல்வத்தை ஆசிர்வதித்து அவற்றை இரு மடங்காக பெருக்கி உனக்கு மகிழ்ச்சியை தரலாம் என்று நினைத்தேன். அதற்கு நீ தகுதியில்லாதவன் ஆவாய்'' என்று கூறிவிட்டு உடனே சென்று விட்டார்.

சத்குருவின் அந்த வாக்கு, அடுத்த ஆறு மாதத்திற்குள்ளாகவே நிறைவேறியது. லக்ஷ்மண் கூடே தான் பெற்ற செல்வம் அனைத்தையும் இழந்து நடுத்தெருவில் கையேந்தி யாசகம் பெறும் நிலையை அடைந்தான். சத்குரு, கேட்டதெல்லாம் தரக்கூடிய சிந்தாமணிக்கு ஒப்பாவார். இதன் மூலம் எல்லோருக்கும் நம் சத்குரு புரியவைத்த கருத்து என்னவென்றால் பரமாத்மாவிடம், எப்போதும் உண்மையாகவும், நேர்மையாக நடந்துக் கொள்ள வேண்டும் என்பதேயாகும். சிந்தாமணியாக நம் சத்குரு இருக்கும்போது, நாம் ஏன் வீணாக கூழாங்கல்லைத் தேடி அலைய வேண்டும்? இக்கருத்தை படிக்கும் பக்தர்கள், சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் அன்பை நாம் பெற வேண்டுமெனில், அவரிடம் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**- ஜெய் கஜானன் -**





# அத்தியாயம் - 11

ஜெய் கஜானன் மகராஜ்

ஓம் கணேஷாய நமஹ! இப்பிரபஞ்சத்தில் எண்ணற்ற உயிர்கள் வாழ்வதைப் போல பசுபதி தேவா! பவானிபதியே! நீயும் பல ரூபங்களைக் கொண்டு இருக்கிறாய்! உருவமில்லாத உன்னுடைய ரூபமானது இப்பிரபஞ்சத்தை முழுவதுமாக தனதாக்கிக் கொண்டது அந்த ரூபம், மாயா என்ற மாயையும் உருவாக்கிக் கொண்டது. தேவாதி தேவா! உன் உண்மையான ரூபத்தை தீர்மானித்துச் சொல்வது என்பது எவராலும் இயலாத ஒன்றாகும்! அதனால் தான் கருணாசாகரனான நீ பல்வேறு குணங்களை உள்ளடக்கிய பல்வேறு ரூபங்களில் உன்னை வெளிப்படுத்துகிறாய்! பக்தர்கள் தங்களுக்கு பிரியமான நாமத்தில் உன்னை அழைக்கிறார்கள்! சைவத்தை பின்பற்றுவோர் உன்னை ஈஸ்வரனாகவும், வைஷ்ணவர்கள், உன்னை மகா விஷ்ணுவாகவும், ஸ்ரீ இராமனுஜர் உன்னை சீதாபதியாகவும் வேதாந்தவாதிகள் உன்னை பிரம்ம தேவனாகவும் வழிபடுகிறார்கள். பல்வேறு வகையான இந்த நாமங்களில் எந்த வித்தியாசமும் இல்லை.

நீ அனைவருக்கும் ஒருவரே. சோம்நாத்தில் நீ விஸ்வேஸ்வரராகவும், ஹிமாலயத்தில் கேதாரிநாதனாகவும், உஜ்ஜையினியில் மஹாகாலேஷ்வரராகவும், நாகநாதனாகவும், கிருஷ்ணீஸ்வரராகவும், த்ரயம்பகேஷ்வ்ரராகவும் பீமசங்கரராகவும், மல்லிகார்ஜுனர் என்ற நாமத்தாலும், ராமேஸ்வரர் என்ற நாமத்தாலும், கோகர்ணத்தில் சங்கரராகவும், சிங்னாபூரில் மகாதேவராகவும் பல்வேறு ரூபங்களில், பல இடங்களில் தோன்றி பக்தர்கள், அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு உன்னை வழிபட கருணையோடு அருள்புரிகிறாய். தங்களுடைய ரூபங்களுக்கும், நான் தலைவணங்கி நமஸ்கரிக்கிறேன்! இறைவனே, என்னை இயற்கையின் தீய எண்ணங்களில் இருந்து விடுபட தயை கூர்ந்து அருள் புரிவாயாக! கிரிஜாபதியே தங்களால் குபேரனும் அளவற்ற செல்வத்தை அடைந்தான் எனக்கும் கருணையோடு அருள் செய்வீராக!

ஸ்ரீ மகராஜ் வாக்களித்தபடி, அடுத்த வருடமும் தசநவமியை கொண்டாட, அவரின் ஆத்மார்த்தமான சிஷ்யர்களான சுக்லால் மற்றும் பாலகிருஷ்ணாவுடன் அங்கு இருந்தார். ஸ்ரீ மகராஜ்

அவர்களுடன் பாஸ்கர் பாட்டீல், பாலபுவா பீதாம்பர், கணு, ஜகதேவ் மற்றும் தின்தோகருடன் விழா சிறப்பாக நடைபெற்றது. ஆனால், விதியின் வசம் நம் பாஸ்கரா சிக்க வேண்டிய நிலைக்கு ஆளானார். ஒரு வெறிநாய் பாஸ்கராவை கடித்து விட்டது. பாஸ்கரா மிகவும் துன்புற்ற நிலையில் இருந்தார். சுற்றி இருந்தவர்கள், தங்களால் இயன்றவரை அவனுக்கு கைவைத்தியம் செய்தும், பாஸ்கராவின் நிலைமை மிகவும் மோசமானது. அனைவரும் அவரை சிறந்த மருத்துவரிடம் செல்லுமாறு வற்புறுத்தினர். ஆனால் பாஸ்கராவோ ஸ்ரீ கஜானன் மகராஜ் ஒருவரே தலைசிறந்த மருத்துவர் என்றும் அவரைத்தவிர வேறு மருத்துவர் தமக்குத் தேவை இல்லை என்றும் கூறியதால், எல்லோரும் அவரை சத்குருவிடம் அழைத்துச் சென்றனர்.

சத்குருவும் சிரித்துக் கொண்டே, ''இவ்வுலகில் பிறந்த யாருமே மரணத்தின் பிடியில் இருந்து, தப்பிக்கவே முடியாது. இந்த பாஸ்கர் ஷேக்காவ் கிராமத்தில், சுக்காலாவின் பசுவின் கொடுந்தன்மையை மாற்ற வேண்டினான். அந்த கொடிய தன்மையே தற்போது நாயின் வடிவில் வந்து அவனைக் கடித்தது. பாஸ்கர் சுயநலத்துடன், தாம் பால் கறந்து குடிப்பதற்காக, பசுவின் குணத்தை மாற்றுமாறு என்னிடம் கேட்டதால், அது நாய் வடிவில் வந்து கடித்து விட்டது. பாஸ்கரா! இப்பொழுது உறுதியாகச் சொல்! நான் உன்னை காப்பாற்ற வேண்டுமா? இந்த நாய் கடித்தது தற்செயலாக நடந்த ஒன்று. உன்னுடைய மரணம் நெருங்கிவிட்டது! உன் வாழ்க்கை முடிந்துவிட்டது! விரைவில் உன் உடலை விட்டு, ஆத்மா வெளியேற காத்துக் கொண்டு இருக்கிறது. நீ, இன்னும் இவ்வுலகில் வாழ விரும்புகிறாயா! உன் முடிவை உடனடியாகச் சொல்! என்னால் உன்னைக் காப்பாற்ற முடியும்! ஆனால், அது கடன் பெறுவதைப் போன்றது. அதனால் விரைந்து யோசித்து உன் முடிவைச் சொல்! இன்னும் இவ்வுலகில் வாழ ஆசை கொண்டாயா! இல்லையா! இந்த வாய்ப்பு இனிமேல் உனக்கு கிடைக்காது. உடனே சொல்வாயாக'' என்றார்.

ஸ்ரீ மகராஜ் அவர்களின் இவ்வுபதேசத்தை கேட்டதும் பாஸ்கரா, ''மகராஜ் நான் ஒன்றும்அறியாத உங்களின் குழந்தையாவேன். நீங்கள் என்ன செய்தாலும் அது என்னுடைய நன்மைக்கேயாகும்! சாது ஸ்ரீ துகாராம் தன்னுடைய பாடலில், ஒரு அம்மாவிற்கு மட்டுமே தன் குழந்தையின் நன்மையை உணர்ந்து கொண்டு நல்லதை வழங்க முடியும் என்றார்! அதைப்போல நான் தங்களின் குழந்தையாவேன்! ஆகையால் நான் ஏன் உங்களிடம்



வேண்டுகோளை ஏற்கச் சொல்லி கேட்க வேண்டும்? பரந்த சமுத்திரத்தை போன்ற தங்களுடைய ஞானமானது, எல்லாவற்றையும் அறிந்தது. எனக்கு என்ன செய்தால் நன்மை விளையுமோ அதைச் செய்வீராக'' என்றான்.

பாஸ்கராவின் இப்பணிவான வேண்டுதலால் மகிழ்ந்தார் ஸ்ரீ மகராஜ். உண்மையானவர்களுக்கு, உண்மையாக நடந்து கொள்வதே சந்தோஷத்தையும் அமைதியையும் தரவல்லவது. உடன் இருந்த சில பக்தர்கள் பாஸ்கராவை பிழைக்கச் செய்யுமாறு வேண்டினர்.

மகராஜ் அவர்களிடம், ''உங்களுடைய அறியாமை ஒன்றுதான் உங்களை இவ்வாறு பேசுமாறு தூண்டுகிறது! உங்களுக்கெல்லாம் ஒன்று தெரியுமா! ஜனனமும், மரணமும் உண்மையானது அல்ல, யாருமே புதிதாக பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை, ஆத்ம ஞானத்தால் மட்டுமே இந்த மாயைப்பற்றி அறிந்து கொள்ள இயலும் என்பதை அறிவில் சிறந்தவர்கள் கூறுவார்கள். சென்ற ஜன்மத்தின் பலனை அனுபவித்தே, ஆக வேண்டும்! அதிலிருந்து உன்னை நீ விடுவிக்க இயலாது!

பூர்வ ஜென்மத்தில் நீ செய்த வினையின் பயனாக இந்த ஜென்மம் எடுத்திருக்கிறாய்! அந்தப் பலனை இந்த ஜென்மத்தில் அனுபவித்தே ஆகவேண்டும். மறுபடியும் இந்த ஜென்மத்தில் நீ செய்து கொண்டு இருக்கும் செயலுக்கான பலனை அடுத்த ஜென்மம் எடுத்து தீர்க்க வேண்டும். இவ்வாறாக ஜனனமும் மரணமும் சேர்ந்த இந்த தொடர் சங்கிலி, நம் வாழ்க்கையில் நீண்டு கொண்டே இருக்கும். இச்சங்கிலித் தொடர், எப்போது அறுபடுகிறதோ அப்போது தான் நாம் முக்தி நிலையை அடைய முடியும். பாஸ்கரா தன் கர்மவினைக்கான பலனை அனுபவித்து தீர்த்து விட்டான். அதனால் இப்பொழுது அவன் முக்தி அடையப்போகும் காலம் நெருங்கி விட்டது. இதைப்பற்றி அறியாமல் யாரும் அவனை தடுக்காதீர்கள்! அவன் வழியில் அவனை செல்ல விடுங்கள்! பாஸ்கராவைப் போன்ற ஒரு பக்தனை காண்பது மிக அரிது. இவனைக் கடித்த அந்த நாய் அவனது முன் ஜென்ம விரோதி. அந்தப் பகையை இந்த ஜென்மத்தில் தீர்த்துக் கொண்டது. ஆனால் இச்சம்பவம் குறித்து பாஸ்கராவுக்கு அந்த நாய்மேல் கசப்புத் தன்மையும், அவன் மனதில், ஏதேனும் ஒரு மூலையில், பழிவாங்கும் எண்ணமும் தோன்றுமேயானால், அவன் மறுபடியும் ஜனனம் எடுத்து அந்த நாயை பழிவாங்க வேண்டும். இக்கருத்தை நன்றாகப் புரிந்து கொண்டதால்தான் பாஸ்கரா தன்

முன் ஜென்ம வினையை தீர்த்து விடுமாறு வேண்டினான்.

அவனுக்கு இவ்வுலக வாழ்க்கை முடிய இன்னும் இரண்டு மாத கால அவகாசம் இருக்கிறது. இந்த இரண்டு மாதகாலமும் இந்த நாய்கடியின் வேதனையில் இருந்து அவனை நான் காப்பாற்றுவேன். இது நான் அளிக்கும் உறுதிமொழியாகும்'' என்றார். த்ரிகால ஞானியனான சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், இந்த வேதனையில் இருந்து அவனை நான் காப்பாற்றாமல் போனால், ''அவன் மீண்டும் அதே நினைவில் அந்த நாயை பழிவாங்க நினைத்து அடுத்த ஜென்மத்தில் கஷ்டப்பட வேண்டும்'' என்றார்.

சத்குருவின் அந்த அளவற்ற ஆத்ம ஞானத்தை மிகச்சாதாரண மனிதர்கள் அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ள முடியாது. பாலபுவா, பாஸ்கராவை மிகவும் புகழ்ந்தார். பாஸ்கராவின் உண்மையான குருபக்திக்கு கிடைத்த பரிசு அவன் அடையப் போகும் முக்தியாகும் என்று மகிழ்ந்து பாராட்டினார்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அனைவரும் ஷேக்காவ் திரும்பினர். பாஸ்கரா பாலாபூரில் நடந்தது எல்லாவற்றையும் எல்லோரிடமும் கூறினான். சத்குருவின் கருணையைப் புகழ்ந்து இருகைகள் தொழுது, ''ஷேக்காவ் என்ற இந்த கிராமம், நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களால் மிகவும் புண்ணியம் வாய்ந்த பூமியாகும்! இந்த விலைமதிப்பற்ற செல்வத்திற்கு நாம் எல்லோரும் நிரந்தரமாக ஒரு மணிமண்டபம் எழுப்ப வேண்டும்! நம் தலை முறையினரும் சத்குருவைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்!

எவ்வாறு ஞானேஷ்வருக்கும், சமர்த்த ராமதாஸ் ஸ்வாமி அவர்களுக்கும் தேஹுவில் வசித்த ஸ்ரீ துகாராம் மகராஜ் அவர்களுக்கும் மணிமண்டபம் எழுப்பப்பட்டதோ, அவ்வாறே நம் சத்குருவிற்கும் நாம் ஒன்று கூடி மணிமண்டபம் எழுப்ப வேண்டும். பாஸ்கரா இக்கருத்தை எல்லோரிடம் சென்று எடுத்துச் சொல்லி புரிய வைத்தார். சத்குருவிற்கு தெரியாமல் அவரின் உண்மையான பக்தர்களாகிய பங்கட்லால், ஹரிபாட்டீல், மாரோட்டி, சந்திராபன், ஸ்ரீ பாதராவ் வாலிகர், தாராசந்த் சாவோகர் மற்றும் அனைவர் முன்னிலையிலும் பாஸ்கரா, ''என்னுடைய இவ்வுலக வாழ்க்கை இன்னும் இரண்டு மாதங்கள் மட்டுமே! என்னுடைய இறுதி ஆசை என்னவென்றால்! அழகான மண்டபம் ஒன்றை நம் சத்குருவிற்கு தாங்கள் எல்லோரும் கட்டுவதாக எனக்கு வாக்கு அளித்தால், நான் நிம்மதியாகவும் ஆனந்தமாகவும் வைகுந்தம் சென்று விடுவேன்'' என்றார். உடனே எல்லோரும் நம் சத்குருவிற்கு மண்டபம் கட்டித் தருவதாக பாஸ்கராவிடம் வாக்களித்தனர். பாஸ்கராவின் கடைசி ஆசை நிறைவேறியதால் அவன் மகிழ்ச்சி அடைந்தான்.



சில நாட்களுக்குப்பின் பாஸ்கராவிற்கு தளர்ச்சி ஏற்பட்டு, ஒவ்வொரு நாளும் மரணத்தை நோக்கி காத்துக் கொண்டிருக்கும் ஒரு குழந்தை போல ஆனார். இதற்கு இடையில் ஒரு புனிதமான நாளில், சத்குரு பாஸ்கராவிடம், பாஸ்கரா, ''நாம் ஸ்ரீ மகாசிவராத்திரியை கொண்டாட புனித கோதாவரி நதிக்கரையில் பவநிவாரராவாக அமர்ந்திருக்கும், த்ரியம்பகேஷ்வருக்கு செல்வோம்! அப்பிரதேசம் ஜோதிர் லிங்கத்தின் மகிமையால் எல்லா பாவங்களையும் அழித்துவிடக்கூடிய புனித ஸ்தலமாகும். இனியும் காலம் தாமதிக்காதே! நீ சென்று கோதாவரி நதியில் நீராடி, த்ரியம்பகேஷ்வருக்கு அருகில் இருக்கும் பிரம்மகிரி மலையில், ஏராளமான உயிர் காக்கும் அற்புத சக்தி வாய்ந்த மூலிகைகள் இருக்கின்றன. நம் கஹினிநாதர் (நவ நாராயணரில் ஒருவராவார்) அற்புத சக்தி வாய்ந்த மூலிகைகள் யாவற்றையும் நன்றாக அறிந்தவர். ஆதலால் அவரிடம் உன் நாய்கடி நோய்க்கான மூலிகையை பெற்று வரலாம்'' என்றார்.

உடனே பாஸ்கரா''ஸ்வாமி! எனக்கு உயிர்காக்கும் மருந்துகள் ஏன் தேவைப்படவேண்டும்? தங்களுடைய ஆசிகள் எல்லா மருந்துகளை விடவும் உயர்ந்த ஒன்றாகும்! தங்களின் கருணையால் நான் இந்த வேதனையிலிருந்து மீளப் போகிறேன்! எனக்கு இருப்பது இன்னும் இரண்டு மாதங்கள் தான்! அந்த நாட்களையும் நான் ஷேக்காவ் கிராமத்தில், தங்களுடன் கழிக்க விரும்புகிறேன்! எனக்கு நீங்கள் தான் த்ரயம்பகேஷ்வரர்! தங்களின் பாதம் ஒன்றே புனித கோதாவரி நதியாகும்! அவ்வாறு இருக்க வேறு புனித ஸ்தலங்களை நான் நாடிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை'' என்றான்.

சத்குரு, ''பாஸ்கரா நீ சொல்வது சரிதான்! நான் மறுக்கவில்லை! ஆனால் எவரும் புனிதமான ஸ்தலங்களின் முக்கியத்துவத்தை உணராமல் இருக்கக்கூடாது'' என்று கூறி பாஸ்கராவை, பிதாம்பரையும், பாலபுவாவையும் உடன் அழைத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார்.

சத்குருவின் கட்டளையை ஏற்று அனைவரும், மகாசிவராத்திரி அன்று த்ரயம்பஷேஷ்வருக்குச் சென்றனர். புனித கோதாவரி நதியில்

நீராடினர். புனித குஷாவ்ரத் நதியிலும் நீராடி பரமேஸ்வரரை வழிபட்டனர். நிவ்ருத்தி மற்றும் கஹினிநாதருக்கும் பூஜை செய்து வழிபட்டனர். அவர்கள் அங்கிருந்து நாசிக் வந்தடைந்து, சாது கோபால்தாஸ் அவர்களைச் சந்தித்தனர். சாது கோபால்தாஸ் எப்போதும் பஞ்சவடியில் உள்ள காலாராமர் கோவிலின் வாயிலில் அமர்ந்து கொண்டு இருப்பவர். அவருக்கு முன்னால் புனித அரசமரம், அவருக்கு மேடை அமைத்தது போல காணப்படும். சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் தன் சிஷ்யர்களோடு அந்த மரத்தடியில் சென்று அமர்ந்தார். அதைக் கண்ட சாது கோபால்தாஸ், மிகவும் மகிழ்ந்து தன்னைச் சுற்றி இருப்பவர்களிடம், ''இன்று என் சகோதரர் என்னைக் காண விதர்பதேசத்தில் இருந்து வந்துள்ளார். அவருடைய திருநாமம் ஸ்ரீ கஜானன் மகராஜ் என்பதாகும். அனைவரும் உடனே சென்று அவருக்கு மரியாதை செலுத்தி, என்னுடைய சார்பாக, தேங்காவும், சர்க்கரையும் சமர்ப்பித்து இந்த மாலையையும் அவருக்கு அணிவித்து ஆசி பெற்று வாருங்கள். நாங்கள் இருவரும் இரண்டு உடலாக் காணப்பட்டாலும் இருவரும் ஒருவரே'' என்றார்.

அனைவரும் சாது கோபால்தாஸின் உத்தரவை ஏற்று, சத்குருவிற்கு சகல மரியாதையும் செய்து அவரை வழிபட்டனர். சத்குரு பாஸ்கராவிடம், அவர் அளித்த பிரசாதத்தை அனைவருக்கும் பகிர்ந்து அளிப்பாயாக! நான் இன்று பஞ்சவடியில் என் சகோதரனைக் காண ஆவலாக வந்தேன்! வந்த வேலை முடிந்துவிட்டது! இனி நாம் நாசிக்கில் வசிக்கும் ஸ்ரீ துமால் என்ற வழக்கறிஞரை சந்திக்க செல்லலாம் என்றார். ஞானிகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு இடங்களில் வாசம் செய்தாலும், அவர்கள் அனைவரும் ஒருவரே ஆவார்கள். அவர்கள் அனைவருமே தெய்வீகத் தொடர்புடையவர்கள் ஆவார்கள்.

சத்குரு நாசிக் வந்தவுடன், அவரின் தரிசனம் பெற அநேக மக்கள் திரண்டு வந்தனர். அங்கு சில நாட்கள் தங்கி பின்னர் ஷேக்காவ் திரும்பினர். சியாம் சிங் என்பவர் சத்குருவை அட்காவ் கிராமத்திற்கு அழைத்தார். சத்குரு ஸ்ரீ ராம நவமிக்கு பின் வருவதாக வாக்களித்தார். அவர் வாக்களித்தபடி சியாம் சிங்கின் அழைப்பை ஏற்று ஸ்ரீ ஹனுமான் ஜெயந்தி அன்று அடகாவ் சென்றார். அங்கு அநேக அற்புதங்களை நிகழ்த்தினார். சில சமயங்களில், அவரின் செய்கை மிகவும் விசித்திரமாக இருந்தது. ஆனால் அதன் காரணத்தை நம்மால் அறிய இயலாது. ஒருமுறை



அவர் பாஸ்கராவை இழுத்து, தரையில் தள்ளிவிட்டு அவன்மேல் அமர்ந்து கொண்டு அவன் மார்பில் அடிக்கத் தொடங்கினார்.

அதைக்கண்ட அனைவரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். ஒவ்வொருக்கும் அவர் அருகில் சென்று, அவருடைய செய்கையை தடுக்க தைரியமில்லை. எல்லோரும் செயலற்று நின்று பார்த்துக் கொண்டு இருந்தனர். பாலபுவா மெதுவாக சத்குருவை நோக்கி, ''ஸ்வாமி! பாஸ்கராவை தயை கூர்ந்து விட்டுவிடுங்கள்! பாஸ்கரா பூமிக்கு கீழே புதையுண்டு இறந்துவிடுவான்'' என்றார்.

ஆனார் ஆச்சரியம்! பாஸ்கரா சிறிதும் கவலையின்றி பாலபுவாவிடம், ''சத்குருவை இவ்வாறு தடுக்காதீர்கள்! அவர் என்னை என்ன செய்ய விரும்புகிறாரோ, அதைச் செய்யட்டும்! அவர் என்னுடைய கடவுள். அவர் என்னை காயப்படுத்திக் கொண்டு இருப்பதாக நீங்கள் எல்லோரும் நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்! ஆனால் அவர் என்னுடன் விளையாடிக் கொண்டு இருக்கிறார்! இந்த அனுபவத்தை உணர வேண்டுமெனில் அவரை நன்றாக புரிந்து கொண்டவர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்'' என்றார். அனைவரும் அதிசயத்தால் பேச்சின்றி நின்றனர். இத்தனை அடி வாங்கியபிறகும், மார்பில் ஏறி அமர்ந்து மூச்சு திணர வைத்தும் கூட பாஸ்கரா ஒன்றுமே நடவாதது போல வெகு இயல்பாக சிரித்துக் கொண்டு இருப்பதைக் கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

அதன் பிறகு பாஸ்கராவுடனும் மற்ற சீடர்களுடனும் அட்காவ் கிராமத்திற்கு வந்தனர். சத்குரு பாலபுவாவிடம், பாஸ்கராவை அடித்ததன் காரணத்தை அனைவரிடமும் கூறினார். ''பாலபுவா! உனக்கு நினைவிருக்கிறதா! இந்த பாஸ்கரா கூறியதால் நீ அன்று என்னிடம் குடையில் அடிவாங்கினாயா! அந்த செய்கையால் இவன் பாவம் சுமக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் அவனை அடித்தேன்! என்னுடைய ஒவ்வொரு செய்கைக்கும் பின்னால் இருக்கும் காரணத்தை உணர வேண்டும்! பாஸ்கராவை அடித்ததற்கு, வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்'' என்றார்.

தற்போது அட்காவ் கிராமத்தில், ஸ்ரீ ஹனுமநத் ஜெயந்திக்கு பிறகு என்ன நடக்கப் போகிறது என்று எல்லோரும் பார்த்துக் கொண்டு இருந்தனர். சத்குரு குறிப்பிட்ட பஞ்சமி தினமும் வந்தது. பிரசாதமாக தயாரிக்கப்பட்ட காலா (Kala) எனப்படும்

கற்கண்டு சேர்த்த ப்ரசாதம் அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது. அதன் பிறகு சத்குரு பாஸ்கராவை நோக்கி, ''பாஸ்கரா உன்னுடைய பிரயாணம் இன்று நிச்சயிக்கப்பட்டுள்ளது! நீ கிழக்குத் திசையை நோக்கி பத்மாசன நிலையில் அமரந்து கொண்டு மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை தியானம் செய். ஹரியை நினைத்து தியானம் செய்! உன்னுடைய பயண நேரம் துவங்கிவிடடது! அதற்காக நீ தயாராக இருக்க வேண்டும்'' என்றார்.

சத்குரு சுற்றி இருந்து மற்ற அனைவரிடமும், ''நீங்கள் எல்லோரும் விட்டல்! விட்டல்! நாராயணா! என்று நாமஸ்மரணை செய்யுங்கள், இன்று உங்கள் சகோதரன் வைகுந்தம் செல்லப்போகிறான்! ஸ்ரீ ஹரிக்கு மலர்கள் தூவி வழிபடுங்கள்'' என்றார்.

சத்குருவின் உத்தரவுக்கு கீழ்பணிந்து, பாஸ்கராவும் பத்மாசன நிலையில் கிழக்கு நோக்கி அமர்ந்து, இரண்டு கண்களையும் ஒரு முகமாக மூக்கின் நுனியில் நிலைப்படுத்தி, மனதை அமைதியாக்கி, தன்னை இறைவனுக்கு முழுவதும் அர்பணித்து வழிபட்டான். அனைவரும் காலைமுதல் மத்யானம் வரை அன்று பஜனை செய்து கொண்டிருந்தனர். சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் உரத்த குரலில் ''ஹர ஹர'' (Har Har) என்ற மகாதேவரின் நாமம் கூறியவுடன், பாஸ்கரா வைகுந்தத்திற்கு சென்று விட்டான். ஞானிகளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் மட்டுமே வைகுந்தத்திற்கு நேரடியாகச் செல்லும் தகுதியை பெற்றவர்கள் ஆவார்கள், மக்கள் சத்குருவிடம், பாஸ்கராவின் சிதையை தீயிடுவதற்கு இடத்தை குறிப்பிடுமாறு வேண்டினர். பாஸ்கராவின் உடலை, அருகில் இருந்த சிவா பார்வதியின் ஆயலத்திற்கு சற்று தொலைவில் தீயிலிடுமாறு கூறினார். சத்குருவின் கட்டளைக்கு பணிந்து, அழகான பல்லக்கு ஒன்றைச் செய்து அதில் பாஸ்கராவின் உடலைகிடத்தி, அப்பல்லக்கை வாழை இலைகளால் சுற்றி, ஊர்வலமாகச் சென்று பஜனை செய்து, த்வாரகேஷ்வரர் ஆலயத்திற்கு அருகில் வந்தவுடன், சத்குரு குறிப்பிட்டவாறு சகல மரியாதைகளோடு பாஸ்கராவிற்கு இறுதிச் சடங்கை செய்து முடித்தனர். ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆத்ம பக்தனான பாஸ்கரா மறைந்தது கண்டு மக்கள் உணர்ச்சியை கட்டுப்படுத்த இயலாமல் கண்ணீர் விட்டு அழுதனர். அடுத்த நாள் பாஸ்கராவின் நினைவாக ஏழை மக்களுக்கு அன்னதானம் அளித்தனர்.

மகராஜ் குறிப்பிட்ட ஸ்ரீ கிருஷ்ணாசங்கர் பார்வதி ஆலயம், அட்காவ் கிராமத்திலிருந்து வடக்கு திசையில் சுமார் ஒரு மைல்கல்



தொலைவில் உள்ளது. அந்த ஆலயத்தை சுற்றி இயற்கை வளத்தோடு, பசுமையாக நிறைந்திருந்த பச்சைப்புல்வெளிகளும், வேம்பு, அரசமரங்ளும், அத்திமரங்களும் மற்றும் பல புனிதமான வ்ருக்ஷங்களும், தாவரங்களும், வாசனை மிகுந்த புஷ்பங்கள் பூக்கும் மரங்களும் அமைந்து இருந்தன. இந்த இடம் அகோலி கிராமத்திற்கும், அட்காவ் கிராமத்திற்கும் நடுவில் உள்ள பகுதியாகும். ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கும் சந்தபண்டாரா என்ற பத்து நாள் அன்னதான வைபவமும் பாஸ்கராவின் நினைவாக நடத்தப்பட்டது.

அப்பொழுது தான் அங்கு அந்த அதிசயம் நம் சத்குருவால் நிகழ்த்தப்பட்டது. அன்னதானம் உண்பதற்காக ஏழை மக்கள், அங்கிருந்த ஒரு பெரிய புளிய மரத்தின் அடியில் தினமும் கூடுவது வழக்கம். ஆனால் அவர்களை உணவு உண்ணவிடாமல், அந்த மரத்தில் இருந்த காக்கைகள், மிகவும் தொல்லை கொடுத்துக் கொண்டு இருந்தன. இந்தக் காக்கை கூட்டத்தால் அருவருப்படைந்த மக்கள் உணவைப் பெற்று உண்பதில் மிகுந்த வேதனைக்குள்ளாயினர். அவர்களின் தலைவன் உடனே காக்கையை சுடுபவனை அழைத்து அவற்றை கலைப்பதற்காக சுட்டுத்தள்ள உத்தரவிட்டான்.

அங்கு வந்த நம் சத்குரு, அவர்களை தடுத்தார். சத்குரு அவர்களிடம், ''காக்கைகளை சுடத் தேவையில்லை. அவை ஒரு தவறும் செய்யவில்லை. தங்களைப் போன்றே அவைகளும் பிரசாதம் பெற்று உண்பதற்காக வந்துள்ளது. பாஸ்கராவின் ஆத்மா நேரடியாக வைகுந்தத்திற்கு செல்ல வேண்டும். அதற்காக பித்ருக்களுக்கு (மூதாதையர்) சேர வேண்டியதை சமர்ப்பிக்கத் தவறக்கூடாது. ஒருவன் இவ்வுலகை விட்டு உயிர் நீத்த பிறகு அவன் ஆத்மா, பத்து நாட்களுக்கு ஆகாயத்தில் அலைந்து கொண்டிருக்கும்! பதினோராம் நாள், ஒரு பிண்ட உருண்டை சாதம், காக்கைகள் உண்பதால் அந்த ஆத்மா விடுதலை அடைகிறது. இன்று காக்கைகளுக்கு உணவு தரப்படாததால் அவை ஆக்ரோஷத்தோடு வன்முறையில் இறங்கியுள்ளன. இந்த சமர்ப்பணம், நேரடியாக ஸ்வர்கத்திற்கு செல்ல முடியாதவர்களுக்கு உரியதாகும்.

ஆனால் நம் பாஸ்கரா நேரடியாக ஸ்வர்கத்திற்கு செல்லும் தகுதியை உடையவன். ஏனென்றால் அவன் வாழும் காலத்திலேயே, எல்லா பந்தங்களில் இருந்தும் தம்மை விடுவித்துக்

கொண்டவன். வாழும் நாட்களில் நம்மைச் சூழ்ந்திருக்கும் பந்தங்களில் இருந்து விலகி, தாமரை இலை நீர் போல, நாம் நம்முடைய கடமையை மட்டும் செய்தால், பித்ருக்கள் சமர்ப்பணமின்றி நம்மை நேரடியாக ஸ்வர்கத்திற்கு அழைத்துச் செல்ல இறைவனால் ஆசிர்வாதிக்கப்படுவோம். பாஸ்கரா இவ்வாறு ஆசிர்வாதிக்கப்பட்டதால் காக்கைகள் மிகுந்த ஆக்ரோஷம் கொண்டு அங்கு உணவு உண்பவர்களை தொல்லைக்கு ஆளாக்கின. அதனால் காக்கைகளை சுட்டுவிடாதீர்கள். நான் அவைகளிடத்தில் சொல்லி வைக்கிறேன். அவை நாளை முதல் இந்தப் பக்கமே வராமல் இருக்க நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன், என்று சொல்லி நம் சத்குரு காக்கைகளைப் பார்த்து, ''நீங்கள் யாருமே நாளை முதல் இங்கு வரக்கூடாது! அவ்வாறு உங்களால் தொல்லை ஏற்படுமானால் அது என்னுடைய பாஸ்கராவின் மதிப்பை குறைப்பதற்கு சமமாகும்! ஆகையால் உங்களுக்கு தேவைப்படும் உணவு முழுவதையும் இன்று ஆத்மார்த்தமாக தின்று விடுங்கள்! நாளை முதல் இங்கு ஒரு காக்கை கூட வரக்கூடாது'' என்று ஆணையிட்டார்.

சத்குருவின் இத்தகைய உரையாடலை கேட்டதும், அங்கிருந்தவர்கள் மன நிம்மதி அடைந்தனர். ஆனால் சத்குருவிடம் நம்பிக்கை அற்ற சிலர் அவரை கேலி செய்தனர். எவ்வாறு மனிதனரின் ஆணையை ஏற்று பறவைகள் நடக்கும்! இவையெல்லாம் கட்டுக்கதைகள், என்றும் கூறினர். அடுத்த நாள் காலையில், மகராஜ் அவர்களின் ஆணையை எவ்வாறு காக்கைகள் ஏற்கும் என்பதை, பரிட்சித்துப் பார்க்க எண்ணி அனைவரும் அப்பகுதியில் வந்து கூடியிருந்தனர். என்ன ஆச்சரியம்! சமைத்த உணவு நாலா பக்கங்களிலும் சிந்தி இருந்தாலும் ஒரு காக்கை கூட அவ்விடம் வரவில்லை. அன்று மட்டுமல்ல அன்றிலிருந்து பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு காக்கை கூட அப்பிரதேசத்திலிருந்து வரவில்லை. சத்குருவின் வாக்கு, தெய்வத்தின் வாக்காகும். அதை உணர்ந்தவர்கள் மட்டுமே உண்மையான பக்தர்களாக இருக்க முடியும்.

அன்றிலிருந்து பதினாலாம் நாள் (14) ஸ்ரீ மகராஜ் தன் சீடர்களுடன் ஷேக்காவ் திரும்பினார். சத்குருவை சரணமடைந்தவர்கள் எத்தகைய ஆபத்தில் இருந்தாலும் நிச்சயமாக காப்பாற்றப்படுவார்கள் என்பதை இனி நாம் கணு லாவரியா-வின் மூலமாக உணரலாம்.



கணு லாவரியா ஒரு ஏழைத் தொழிலாளி. அந்த கிராமம், மழை பொழியாத காரணத்தால் தண்ணீர் இன்றி வறண்டு காணப்பட்டது. அனைவரும் கூடி ஊர் கிணற்றை நன்றாகத் தோண்ட ஏற்பாடு செய்தனர். அதற்கான ஒப்பந்தத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அந்த ஊர் மக்கள் அனைவரும் கூடி அக்கிணற்றை தோண்டத் தொடங்கினர். பத்து அடிக்கு (10 Feet) மேல் சிறிதும் தோண்ட முடியாதவாறு, பெரிய பாறைகள் காணப்பட்டன. உடனே அவர்கள் வெடி வைத்து, அப்பாறைகளை உடைத்து, தண்ணீர் வரவழைக்க முயற்சியை மேற்கொண்டனர். பாறையின் மேற்பரப்பில் நான்கு துளைகள் இட்டு அவற்றை மரக்குழாயில் வெடி மருந்துப் பொருட்களோடு மூடி வைத்து, வெளிப்பகுதியில் ஒரு கயிற்றின் மூலம், அவற்றை வெடிக்க வைக்க முயற்சியை மேற் கொண்டனர்.

ஆனால் அக்குழாய்களை நன்றாக அழுத்தம் செய்த பின்னரே மருந்துகள் வெடிக்கத் தொடங்கும். அக்காரியத்தை யாருமே செய்வதற்கு துணியவில்லை. எல்லோரும் நமக்கு ஆபத்து விளையும் என்று பயந்தனர். ஒப்பந்தத் தொழிலாளியான, நம் கணு லாவரியா, தம் குடும்பம் ஏழ்மையானதாக இருந்ததால், அப்பணியை தாமே செய்வதாக ஒப்புக்கொண்டார். அவர் அக்குழாய்களை அழுத்தவும், அது உடனே வெடிக்கத் தொடங்கிவிட்டன. நாலாபுறமும் வெடி மருந்துகள் வெடிக்கத் துவங்கியதும், பாறைகள் தூள்தூளாக கிணற்றைச் சுற்றி பரவியது. கணு லாவரியா கிணற்றினுள் இருந்து வெளியில் வர முடியாமல் நன்றாக சிக்கிக் கொண்டான். கணு லாவ்ரியா நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் உண்மையான பக்தனாவான். அவன் ஒவ்வொரு முறை வெடிக்கும் போதும் சத்குருவை மனதார பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். அங்கு இருந்தவர்கள் எல்லோரும் கணுவின் உடல் நிச்சயமாக தூள் தூளாக சிதறி விட்டது என்றே நினைத்தனர்.

கிணற்றுக்கு அருகில் எல்லோரும் கூடியதும் கிணற்றின் உள்ளிருந்து ஆச்சரியமாக கணுவின் குரல் தெளிவாக கேட்டது. ''எல்லோரும் என்னைத் தூக்கி விடுங்கள்! இந்தக் கணு, சத்குருவின் அருளால் பிழைத்துக் கொண்டான்! எனக்கு ஒரு காயமும் ஏற்படவில்லை. ஆனால் என் மீதுள்ள பாறை, என்னை வெளியே வர முடியாமல் தடுக்கிறது'' என்ற குரலைக் கேட்டதும் அனைவரும் உற்காகத்தால் துள்ளிக் குதித்தனர். அங்கிருந்த

கடினமான பெரிய பாறையை அகற்றி கணுவை மேலே தூக்கி வந்தனர், கணு மிகவும் உற்சாகமாக சத்குருவிடம் சென்று அவரை நமஸ்கரித்தான். அவன் எதுவும் பேசவில்லை.

நம் சத்குரு அவனிடம் சிரித்துக் கொண்டே, ''கணு கிணற்றுக்குள் உட்கார்ந்து கொண்டு எத்தனை கற்களை தூர எறிந்தாய்? ஒரு பெரிய பாறை உன்னை மறைத்து அழிவிலிருந்து காப்பாற்றிவிட்டது. இனிமேலும் வெடி மருந்துக் குழாய்களை கையால் தொடாதே! இப்பொழுது நீ செல்! பெரிய அழிவிலிருந்து இன்று நீ காப்பாற்றப்பட்டாய்'' என்று கூறி கணுவை ஆசிர்வதித்து அனுப்பி வைத்தார்.

கிணற்றில் வெடி மருந்து வெடித்து கணு சிக்கிக் கொண்டு காப்பாற்றப்பட்ட செய்தி அந்த ஊர் முழுவதும் பேசப்பட்டதால், எல்லோரும் கணுவை காண ஆவலாக வந்து கொண்டிருந்தனர். கணு அவர்களிடம், ''சத்குரு, வெடி மருந்து வெடிக்கத் துவங்கியதும் என் கைகளை பிடித்துக் கொண்டு, கீழே இருந்து ஓர் பெரிய பாறையின் கீழ் பத்திரமாக மறைத்து வைத்ததால் தான், ஒரு சிறிய காயமும் இன்றி தப்பித்ததாகக்'' கூறினான். ஸ்ரீ மகராஜ் அவர்களின் இத்தகைய அற்புதத்தை விவரிக்கக் கூட எனக்கு வார்த்தைகள் இல்லை என்று கூறினான். இந்த அத்தியாத்தில், சத்குருவின் அற்புதத்தைக் கண்ட, நாமும் நம் வாழ்வில் சத்குருவின் மகிமையால் மகிழ்ச்சியோடு இருப்போம். இதுவே தாஸ்கணுவாகிய என்னுடைய வேண்டுகோளாகும்.

**- ஜெய் கஜானன் -**





# அத்தியாயம் - 12

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கஜானனாய நம! ஓ கணபதி தேவா! மயூரேஷ்வரா! என் இருதயத்தில் வந்து அமர்ந்து என்னை இப்பணியை நன்றாக செய்து முடிக்க அருள் புரிவாயாக! மூலாதார மூர்த்தியான உன்னால் மட்டுமே கற்றுத் தெளிந்த அறிவாற்றலையும், ஞானத்தையும், விவேகத்தைம் வழங்கி பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு, அதற்கு இடையூறாக இருக்கும் எல்லா தடைகளையும் நீக்கி காக்க இயலும்! எல்லா புராணங்களும் இக்கருத்தையே வலியுறுத்திச் சொல்கின்றன! ஓ ஏகதந்தனே! லம்போதரனே! பார்வதிசுதனே! பாலச்சந்திரனே! சிந்தூரனே! என்னை இவ்வுலகப் பொருட்களின் மீதான ஆர்வத்திலிருந்து மீட்டு கரை சேர்க்க வேண்டுகிறேன்.

அகோலாவில், பச்சுலால் அகர்வால் என்ற மிகப் பெரிய செல்வந்தர் வாழ்ந்து வந்தார். அவர் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் குறித்தும், அவர் கரஞ்சாவில் லக்ஷ்மண் கூடே மூலமாக நிகழ்த்திய அற்புதத்தை கேள்விப்பட்டு, சத்குருவை சந்திக்கவும், உபசரிக்கவும், நமஸ்கரிக்கவும் மிகவும் ஆர்வத்துடன் காத்துக் கொண்டு இருந்தார். சத்குரு கரஞ்சாவில் நடத்திய லீலையின் உண்மையை கண்டறிய விரும்பினார். அதன் பின்னால் இருக்கும் தத்துவத்தையும் அறிந்து கொள்ள விரும்பினார். சத்குரு அகோலா வந்தவுடன் தாமாகவே பச்சுலாலைத் தேடி அவர் இல்லத்திற்கு வந்தார். சத்குருவை நினைத்த மாத்திரத்தில் அவர் நம்மிடையே தோன்றுவது, கலியுகத்தில் எத்தகைய அற்புதம் என்பதையும் நாம் உணர வேண்டும்! சத்குருவை கண்டவுடன் பச்சுலால் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை, அவர் சத்குருவிடம், அவரை சகல மரியாதையுடமன் தாம் பூஜை செய்ய விரும்புவதாக கூறினார். சத்குருவும் அதற்கு சம்மதித்தார்.

பச்சுலால் பூஜைக்காக பிரம்மாண்டமான ஏற்பாடுகளைச் செய்தார். நறுமணமிக்க நீரால் சத்குருவிற்கு அபிஷேகம் செய்து, பட்டு பீதாம்பரத்தால், ஆன அழகிய வேலைப்பாட்டுடன் தயாரிக்கப்பட்ட வஸ்திரம் அளித்து, சுவை மிகுந்த பால் பேடாவை அவருக்கு சமர்ப்பித்தார். பச்சுலால் அத்துடன் நிறுத்தி இருந்தால், நம் சத்குருவின் மனம் மகிழ்ந்து இருக்கும். ஆனால் அவர் சத்குருவிற்கு தங்கத்தால் ஆன பெரிய சங்கிலியை அவர் கழுத்தைச்

சுற்றி பதக்க அட்டிகை போல அணிவித்து, பத்து விரல்களிலும் தங்க மோதிரங்கள் அணிவித்ததுடன், கைகளில் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட தங்கச் சங்கிலியை, கைக் காப்பாக இடது கையில் அணிவித்து, உடலுக்கு நறுமண திரவியங்கள் பூசி மகிழ்ந்தார். சத்குரு பொறுமையாகவும், அமைதியாகவும் அமர்ந்து கொண்டிருந்தார். மேலும் பச்சுலால் சிறப்பான விருந்திற்கு ஏற்பாடு செய்து ஜிலேபி போன்ற இனிப்புவகைகளுடன் சத்குருவுக்கு சமர்ப்பணம் செய்தார். அத்தோடு விட்டாரா பச்சுலால்! ஒரு தட்டு நிறைய தங்கக் காசுகள் சுமார் பத்தாயிம் மதிப்பிற்கு மேல் (அக்காலத்தில் பத்தாயிரம் என்பது மிகப் பெரிய செல்வந்தர்கள் மட்டுமே வைத்திருக்கக்கூடிய செல்வமாகும்.) ஒரு தேங்காயில் இட்டு, மகராஜ் அடியேன் ஸ்ரீ ராமசந்திர மூர்த்திக்காக ஒரு ஆலயம் கட்ட ஆசைபடுகிறேன் என்னுடைய இடத்தில் ஸ்ரீராமநவமி திருவிழா கொண்டாடுவதற்கு போதுமானதாக இல்லாத காரணத்தால் விரைவில் ஆலயம் கட்டி முடிக்க ஆசிர்வதித்த அருள் செய்யுங்கள் என்றார்.

பச்சுலால், ஸ்ரீ மகராஜ் அவர்களின் பாதத்தில் தன் தலை வைத்து ஆசிர்வதிக்க வேண்டினார். சத்குருவும் மகிழ்ந்து, பச்சுலாலிடம், ''ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி உன்னுடைய இந்த ஆசையை நிச்சயம் பூர்த்தி செய்வார். ஆனால் நீ என்னுடைய உடலில் செய்து இருப்பது என்ன? இத்தனை ஆபரணங்களை அணிவித்து, என்னை திருவிழாவில் அலங்கரிக்கும் காளையைப் போன்று என்னையும் அலங்கரிக்க வேண்டிய அவசியம் என்ன? ஒன்றை நினைவில் கொள் பச்சுலால்! நான் ஒன்றும் போலேர் எனப்படும் திருவிழாவில் அலங்காரம் செய்யப்பட்ட காளையோ அல்லது தசராவுக்காக அலங்காரம் செய்யப்பட்ட குதிரையோ அல்ல! இந்த ஆபரணங்களால், எனக்கு எந்தப் பலனும் இல்லை! ஆனால் இவை எனக்கு விஷம் போன்று கடுமையானது! என்னை இவ்வுலக வாழ்க்கையின் சுகங்களை காட்டி திசை திருப்ப எண்ணாதே! பச்சுலால் நீ உன்னுடைய பகட்டை காண்பிப்பதற்காகவும், எல்லோருக்கும் உன் செல்வத்தை காட்டவும் தான் இத்தகைய காரியங்களைச் செய்தாயா! எப்போதும்! பெறுபவர்களுக்கு என்ன அளித்தால் மனம் மகிழ்ச்சி அடையுமோ, அதைத்தான் தருபவர்களும் தர வேண்டும்! நான் எங்கும் நிர்வாணமாக சுற்றி அலைந்து கொண்டிருக்கும் ஒரு பைத்தியக்கார சந்நியாசி! இந்த ஆபரணங்கள் எல்லாம் உன்னைப் போன்ற குடும்ப வாழ்க்கை வாழ்பவர்க்கு மட்டுமே பயன்படக்கூடியது!



பீமா நதிக்கரையில் ஒரே ஒரு செங்கலின் மீது நின்று கொண்டு உலகத்தை காத்து இரட்சிக்கும், என் பாண்டுரங்கன், நான் விரும்பினால் எல்லா செல்வத்தையும் எனக்கு அளிப்பார்'' என்று சொல்லி எல்லா நகைகளையும், பட்டு பீதாம்பர வஸ்திரத்தையும் அவிழ்த்து தூர எறிந்தார். பச்சுலால் சமர்ப்பித்த பால் பேடா ஒன்றை மட்டும் எடுத்து தன் வாயில் போட்டுக் கொண்டார். உடனடியாக அந்த இடம் விட்டு சென்று மறைந்து விட்டார். இந்த லீலை அகோலாவின் பெரும்பான்மையான மக்கள் நிறைந்திருந்த கூட்டத்தில், அனைவர் முன்னிலையிலும் நடந்தேறிய ஒன்றாகும். இந்நிகழ்ச்சியைக் கண்டு சுற்றி இருந்த அனைவரும் சத்குரு இவ்வாறு கோபித்துக் கொண்டு சென்றதற்காக வருந்தினர். அவர்களில் சிலர் கரஞ்சாவைச் சேர்ந்தவர்கள். அவர்களும் லக்ஷ்மண் கூடேவைப் போன்றே பச்சுலால் செய்ததை அறிந்து மனம் வருந்தினர். இந்த லீலையைப் படிக்கும் கோடிக்கணக்கான அடியவர்க்கும் இது போன்ற சந்தேகங்கள் எழக்கூடும். ஆனால் சத்குருவின் மனதையும், அதனுள் ஆழ்ந்து இருக்கும் கருத்தையும் அறிந்து கொள்வது எவராலும் இயலாத ஒன்றாகும்.

மக்கள் அனைவருக்கும் லக்ஷ்மண் கூடேவின் மனதிலும், பச்சுலாலின் மனதிலும் வியாபித்திருக்கும் எண்ணம் எதுவென்று தெரியாது. ஆனால் நம் சத்குரு நம் எல்லோருடைய மனதையும் படிக்கும் ஆற்றலுடையவர். காணிக்கை என்பது சொற்ப தொகையே ஆனாலும் ஆத்மார்த்த பக்தியுடனும், அன்புடனும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு சிலர் பட்டு வஸ்திரத்தை சமர்ப்பித்துவிட்டு மனதில் ஒரு கவளம் தானியத்தை சமர்ப்பித்திருந்தால் மட்டுமே போதுமே என்றும் ஒரு சிலர் சுவையான இனிப்பு வகைகளை சமர்ப்பித்து கடவுளே இதை எல்லாம் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, மனதால் ஒரு கோப்பை நிலக்கடலை சமர்ப்பித்தால் கூட போதுமே என்றும் நினைவில் கொண்டால் சத்குரு எவ்வாறு ஏற்றுக் கொள்வார். ஒரு ரூபாய் சமர்ப்பித்தால் கூட உள்ளன்போடு சமர்ப்பணம் நிகழ வேண்டும்.

இறைவனை சரீரத்தால் மட்டும் தொழுதால் ஒரு பலனும் கிட்டாது. ஆத்மாவால் அன்புடனும், பக்தியுடனும், பூஜை செய்ய வேண்டும். இதை விடுத்து உள் ஒன்று வைத்து புறம் ஒன்றாக இருக்கக்கூடியவர்களின் பூஜைக்கான பலனும் அதற்கு ஏற்கனவே கிடைக்கும். லக்ஷ்மண் கூடே நிச்சயமாக தவறு செய்தவர் ஆதலால் அவருக்கு சத்குருவின் ஆசிர்வாதம் கிடைக்கவில்லை. வாழ்க்கையின் கடைசி பாகத்தில் பெரும் தரித்திரத்தில் அவர்

கழிக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் பச்சுலால் அவ்வாறு இல்லாமல், மனதாலும், வாக்காலும் சத்குருவை வணங்கினார். சத்குருவும், தன்னுடைய உண்மை நிலையை இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டவே பச்சுலாலின் ஆபரணங்களை தூக்கி எறிந்தார். ஆனால் மனதார அவரை ஆசிர்வதித்து விட்டுச் சென்றார். இவ்வுலகில் எவரெல்லாம் சாதுக்களின் ஆசிர்வாதம் பெற்றுள்ளார்களோ அவர்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

சத்குருவின் ஆசிர்வாதம் பெற்ற, பச்சுலால் தாம் விரும்பிய அனைத்தையும் பெற்றார். ஆனால் அவர் மனம் நிம்மதி அடையாமல் சத்குருவைத் தேடிக் கொண்டிருந்தது. அகோலாவில் அவர் எங்கு தேடியும் சத்குருவை காணமுடியவில்லை. இதுவரை இவ்வுலக சுக வாழ்க்கையில் இன்பத்தை கண்டு கொண்டிருந்த பச்சுலால் இப்போது இவற்றைக் காட்டிலும் உயர்ந்த, பேரானந்தம் அளிக்கக்கூடிய இறை அன்பைக் கண்டு கொண்டார். இதுவல்லவோ சத்குருவின் மகிமை!

ஷேக்காவ் கிராமத்தில் நம் சத்குருவின் மடத்தில் அவரின் ஆத்ம சீடரான ஷிம்பி என்ற இனத்தைச் சேர்ந்த பிதாம்பர் என்பவர். சேவை செய்து வந்தார். அவர் சத்குருவிற்கு செய்யும் சேவையே உலகில் தலை சிறந்த ஒன்றாகக் கருதி மிகவும் சிரத்தையுடனும், பக்தியுடனும், அன்புடனும் சேவை செய்து வந்தார். அவர் ஒரு போதும் தன்னைப் பற்றி சிந்தித்தது இல்லை. அத்தகைய பண்புடைய பிதாம்பர் மிகவும் பழையதான ஒரு வேஷ்டியை உடுத்தி இருந்தார். பல நாட்கள் ஆனதால் அத்துணி மிகவும் கந்தலாகி அவருடைய பின்புறம் கிழிந்த நிலையில் இருந்தது. அவர் அதைப்பற்றி எல்லாம் சிந்திக்கவே இல்லை. சத்குருவிற்கு செய்யும் சேவை ஒன்றையே நம் கடமையாகச் செய்து வந்தார். மகராஜ் இதனைக் கண்டு கொண்டார்.

அபர் பிதாம்பரை அழைத்து, ''உன்னுடைய பெயர் பிதாம்பர். ஆனால் உன்னிடத்தில் உடுத்திக் கொள்வதற்கு ஒரு நல்ல துணிகூட இல்லை. உன்னுடைய பின்புறத்தை மறைப்பதற்காகவாவது, நீ ஒரு நல்ல வேஷ்டியை உடுத்தியே ஆக வேண்டும், சோனுபாய் என்ற பெயருள்ள ஒரு பெண்மணி அலுமினிய வளையலுக்கு கூட வழியில்லாமல் அலைந்ததைப் போன்றும், கங்கா பாய் என்ற பெயருள்ள பெண்மணி குடிப்பதற்கு ஒரு துளி நீர் கூட இல்லாமல் இறக்க வேண்டியதைப் போல உள்ளது என்று கூறி தன் கையில் உள்ள ஒரு மேல் வஸ்திரத்தை (மேல்பகுதியில் உடுத்தக்கூடிய துண்டு) அவனிடம் கொடுத்து, இதைக் கட்டிக் கொண்டு உன்



பின்புறத்தை மறைத்துக் கொள்! இப்போது நீ அணிந்திருக்கும் வேஷ்டி தரை துடைக்க மட்டுமே பயன்படும் என்பதால் இதை நீ தூர எறிந்துவிட்டு இந்த மேல் வஸ்திரத்தை உன் இடுப்பைச் சுற்றி உடுத்திக் கொள். யார் என்ன சொன்னாலும், அதற்காக இந்த வஸ்திரத்தை அவிழ்க்காதே'' என்றும் கூறினார். சோனுபாய் என்று அவர் குறிப்பிட்டது சோனா என்பது வடமொழியில் தங்கத்தைக் குறிக்கும் சொல்லாகும். தங்கத்தை குறிக்கும் பெயரில் இருந்த ஒரு பெண், தகரத்திற்கும் அலுமினியத்திற்கும் வழியின்றி இருப்பது போன்றும், கங்காபாய் என்பது கங்கை நதியை பெயராகக் கொண்ட ஒரு பெண்மணி, குடிக்க தண்ணீர் இன்றி இறக்க வேண்டியதைப் போல நம் பிதாம்பர், பெயரில் விலையுயர்ந்த பீதாம்பரம் என்ற வஸ்திரத்தைக் கொண்டு, ஒரு கிழிந்த துணியுடன் அலைவது மிகவும் பரிதாபத்திற்குரியது என்றும் சத்குரு வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

பிதாம்பர் சத்குருவின் சொல்லுக்கு கீழ் படிந்தான். அவர் அணிந்த மேல்துண்டை தன் இடுப்பைச் சுற்றி கட்டிக் கொண்டான். அங்கிருந்த எல்லோரும் அவனை கேலி செய்து இகழ்ந்து பேசினார்கள். அவர்கள் சத்குரு பிதாம்பருக்கு மிகவும் முக்கியத்துவம் அளிப்பதை விரும்பவில்லை. அதனால் அவன் மீது பொறாமை கொண்டனர். இது தான் இவ்வுலக வாழ்க்கையின் இயல்பாகும். அடி மனதின் ஆழத்தில் சுயநலம் தலை தூக்கும் வேளையில் தன்னுடன் பிறந்த சகோதர சகோதரிகளே எதிரியாக மாறி, பொறாமை கொள்வார்கள். இனியும் நாம் இதைப்பற்றி பேசுவது என்பது கழிவு நீர்த் தொட்டியை திறப்பதற்குச் சமானமாகும். அது நமக்கு துர்நாற்றத்தை மட்டுமே அளிக்கும். சத்குருவின் சீடர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் யாவரும் அவரின் சீடர்களாக முடியாது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டுமே அவரின் உண்மையான சீடர்களாக இருந்தார்கள். அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில், நிறைந்த புதர்களுக்கும் காட்டு மரங்களுக்கும் நடுவில் ஒரு சில சந்தன மரங்களும் இருப்பதைப் போன்று நம் சத்குருவைச் சுற்றி உண்மையான சீடர்கள் ஒரு சிலரும் இருந்தனர்.

பிதாம்பர், சத்குருவின் வஸ்திரத்தை உடுத்திக் கொண்டதைக் கண்ட அனைவரும், அவனிடம், ''மகராஜ் அவர்களுடைய உடைகளை நீ உடுத்தக் கூடாது என்று'' கூறி அவனை வார்த்தைகளால் மிவும் காயப்படுத்தினர். பிதாம்பரும் பொறுமையுடன் அவர்களிடம் சத்குருவின் ஆணையை ஏற்று தான்

இவ்வாறு செய்ததாகவும், அவருடைய கட்டளையை ஏற்பது ஒன்றுதான் தம்கடமை என்றும் கூறினான். இந்நிகழ்வு சீடர்கள் நடுவில் சஞ்சலத்தை, ஏற்படுத்தியது. இதை கண்ட சத்குரு, பிதாம்பரை அழைத்து, ''பிதாம்பர் நீ இங்கிருந்து புறப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது! எவ்வாறு ஒரு குழந்தை வளர்ந்து பெரியவனானவுடன் அன்னையை விட்டு வெளியில் செல்வதைப்போல நீயும் இப்போது இந்த இடத்தை விட்டு செல்ல வேண்டும்! என்னுடைய ஆசிர்வாதம் உனக்கு எப்போதும் உண்டு! நீ நலிந்தவர்களையும், வாடியவர்களையும் சென்று காப்பாற்றுவாயாக'' என்றார்.

பிதாம்பர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓட சத்குருவை நமஸ்கரித்து திரும்பி திரும்பி சத்குருவை பார்த்து கொண்டே சென்றான். சத்குரு அவனை மடத்தைவிட்டு நீக்கியதற்கு உரிய காரணங்களை உணரக்கூடிய பக்குவம் எவருக்கும் இல்லை. அவர் பிதாம்பருக்கு ஒரு நல்ல எதிர் காலத்தை காண்பிக்க விரும்பினார். மடத்தைவிட்டு நீங்கிய பிதாம்பர், ஸ்ரீ மகராஜ் அவர்களின் நாமத்தை ஜெபித்துக் கொண்டே கொண்தாலி (Kandhali) என்ற கிராமத்தை அடைந்தான். அங்கே ஒரு பெரிய மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டு சத்குருவை தியானம் செய்ய தொடங்கினான். அன்று இரவு முழுவதும் குருவின் நாமத்தை ஜெபித்துக் கொண்டு இருந்தான். ஆனால் அங்கிருந்த பெரிய எறும்புகள் அவன் மீது ஏறி விளையாடத் தொடங்கியது. உடனே அவன் அடுத்த நாள் காலையில் அந்த மரத்தின் மீது ஏறி ஒரு கிளையின் மீது உட்கார்ந்து கொண்டு தியானம் செய்யத் தொடங்கினான். அங்கும் எறும்புகள் வரத் தொடங்க கிளைவிட்டு கிளை தாவிக் கொண்டே இருந்தான். இதைப் பார்த்து கொண்டிருந்த மாடு மேய்ப்பவர்கள் மிகுந்த ஆச்சர்யம் அடைந்தனர். அவர்களுக்கு பிதாம்பர் இவ்வாறு கிளைவிட்டு கிளை குரங்கு போல ஏன் தாவித் தாவி ஓட வேண்டும் என்று புதிராக இருந்தது. சின்னஞ்சிறு கிளைகளில் கூட அவன் தாவி அமரும் போது ஒரு தடவை கூட கிளைகள் முறிந்தோ, அவன் கீழே விழுந்தோ எதுவும் நடக்காமல் இருந்தது அவர்களுக்கு மேலும் ஆச்சரியம் அளித்தது.

அவர்களில் ஒருவன் இவன் நிச்சயமாக ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் சீடனாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் அவர் ஒருவரே நிறைய அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு இருப்பவர் என்று கூறினான். அவர்கள் எல்லோரும் தங்கள் வீடுகளுக்குச் சென்று எல்லோருக்கும் பிதாம்பர் மரத்தில் தாவிக்



கொண்டிருப்பதைக் குறித்து ஆச்சரியத்துடன் கூறினர். அதைக் கேட்ட அனைவரும் அங்கு வந்து அந்த மாமரத்தடியில் ஒன்றாகக் கூடினார்கள். அவர்கள் அந்த மாமரத்தில் தாவிக் கொண்டிருந்த பிதாம்பரைக் கண்டு இவன் ஏதோ சூழ்ச்சி செய்து தன்னை ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களிடம் சீடன் என்று கூறி மிகவும் உயர்ந்தவனாக காட்டிக் கொள்வதற்காகவே இவ்வாறு செய்வதாக நினைத்தார்கள்.

சத்குருவின் லீலைகளை யாரால் விவரிக்க இயலும்! அவர்களின் ஒருவன், பாஸ்கரா பாட்டில் என்ற உண்மையான சத்குருவின் சீடர் இறந்துவிட்டதாகவும் இவன் போலியாக தோற்றத்தை ஏற்படுத்தி தம் அனைவரையும் ஏமாற்றுவதற்காக இங்கு வந்துள்ளதாகவும் கூறினான். இக்கருத்தை மற்றவர்களும் ஏற்றுக் கொண்டனர். இவன் உண்மையான சீடனாக இருந்தால், ஏன் மடத்தைவிட்டு நீங்கி சத்குருவிடம் இருந்து நீங்கி, இத்தனை தொலையில் வந்து ஏன் மரத்தில் குரங்கு போலத் தாவிக் கொண்டிருக்க வேண்டும்! மடத்தில் உணவும், இனிப்புப் பதார்த்தங்களும் உண்டு சுகமான வாழ்க்கையை விடுத்து ஏன் இவ்வாறு இங்கு வந்து மாமரத்தின் கிளைகளில் தாவிக் குதிக்க வேண்டும் என்றும் கூறினார்கள். அவர்களின் ஒருவன் பிதாம்பர் மீது எந்தக் கருத்தையும் உருவாக்குவதற்கு பதிலாக, அவனிடமே காரணத்தைக் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்று யோசனை கூறினான். உடனே அதைக்கேட்ட மற்றொருவன் பிதாம்பரைப் பார்த்து, ''அவன் யாரென்பதையும், எதற்காக இங்கு வர வேண்டும் என்றும் அவனுடைய குரு யார் என்பதையும் விளக்கிச் செல்லுமாறு'' கேட்டான்.

பிதாம்பர் அங்கு கூடி இருந்த மக்களைப் பார்த்து, ''நான் ஷிம்பி இனத்தைச் சேர்ந்த பிதாம்பர் என்ற பெயர் கொண்டவன். ஷேக்காவ் கிராம வாசியான நான் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆத்ம சீடனாவேன். என்னுடைய சத்குருவின் கட்டளைக்கு ஏற்ப இங்கு வந்துள்ளேன். நான் முதலில் இந்த மாமரத்தின் அடியில் அமர்ந்து கொண்டு தியானம் செய்து கொண்டிருந்தேன். இங்குள்ள எறும்புகள் என்னை மிகவும் தொல்லைப்படுத்தியதால் நான் கிளைவிட்டு கிளை தாவிக் கொண்டு இருக்கிறேன்'' என்று கூறியவுடன் அங்கு கூடியிருந்த அனைவரும் அவன் மீது மிகுந்த கோபம் கொண்டனர்.

அவர்கள் அவனிடம், ''சத்குருவின் பெயரைச்சொல்லி எங்களை முட்டாளாக்க நினைக்காதே! நாங்கள் உன்னை

எச்சரிக்கிறோம்! நீ இவ்வாறு சொல்வது எவ்வாறு உள்ளதென்றால் ஒரு மஹாராஜாவின் மகாராணி தன் அரண்மனையை விட்டு வந்து வேலைக்காரனைப் போல வேலைப் பார்ப்பது போல உள்ளது. உன்னுடைய கூற்று'' என்றனர்.

இறுதியாக அந்த கிராமத்தில் தேஷ்முக் என்று சொல்லப்பட்ட அதிகாரியான ஷியாம்ராவ், பிதாம்பரிடம், ''நான் சொல்வதைக் கவனமாகக் கேள்! ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் இறைவன் ஆவார். நீ இவ்வாறு அவரின் பெயரை தாழ்த்துவதற்காக இந்த நாடகம் ஆடுகிறாய்! முட்டாள் உனக்கு ஒன்று தெரியுமா! ஒரு முறை ஸ்ரீ கஜானன் மகராஜ் காய்கள் காய்க்காத காலத்தில் கூட வெறுமையாக இருந்த ஒரு மாமரத்தில் நிறைய மாங்காய்களை உருவாக்கினார். இப்பொழுது நாங்கள் உனக்கு சவால் விடுகின்றோம்! நீ உண்மையிலேயே சத்குருவின் சீடனாக இருந்தால் இலைகளே இல்லாமல், எல்லாம் உதிர்ந்த நிலையில் இருக்கும் இந்த மாமரத்தில் பச்சை இலைகளை உருவாக்கிக் காட்டு! பலராம் பாட்டீலின் இந்த மரம் உன் வாக்கினால் பசுமையாக இலைகளோடு பொலிவோடு காணப்பட வேண்டும். இல்லையெனில் எங்களுடைய அடிகளை வாங்குவதற்கு நீ தயாராக இருக்க வேண்டும்! இந்த அற்புதத்தை நீ நிகழ்த்தினால் சகல மரியாதையோடும் அழைத்துச் செல்கிறோம். இல்லையெனில் அனைவரும் ஒன்று சேர்ந்து அடித்துக் கொன்றுவிடுவோம். சத்குருவின் ஆத்மார்த்த சீடன் என்பவரால் நிச்சயமாக ஒரு அளவிற்கு அவரைப் போன்றே அற்புதங்களை நிகழ்த்தக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாகத் தான் இருக்க முடியும். அதனால் இனியும் நேரம் கடத்த வேண்டாம். உடனே இந்த மரத்தில் பசுமையான இலைகளை உருவாக்கிக் காட்டுவாயாக'' என்றார்.

பிதாம்பர் மிகுந்த பயத்துடன் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை தியானித்தான். ''சத்குருவே இது என்ன சோதனை! அவன் அவர்களிடம் தயவு செய்து என்னை இந்த இக்கட்டான சூழ்நிலையில் தள்ளிவிடாதீர்கள்! வைரங்களும் கூழாங்கற்களும் ஒரே சுரங்கத்தில் இருப்பவை. நான் என்னை பற்றிய உண்மையை உங்களுக்கு சொல்லிவிட்டேன். நீங்கள் வைரமாக எண்ணாமல், சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் சீடனான என்னை ஒரு கூழாங்கல்லாக எண்ணி விட்டு விடுங்கள். நான் சொல்வது அனைத்தும் உண்மை நான் சொன்ன கருத்தில் ஒரு பொய் கூட இல்லை, ஒரு கூழாங்கல் சுரங்கத்தின் பெயரை ஒரு நாளும் தாழ்த்தாது. நான் என் சத்குருவின் பெயருக்கு ஒரு நாளும் களங்கம் விளைவிக்க மாட்டேன் என்னை நம்புங்கள்'' என்று மன்றாடினான்.



இதைக் கேட்ட தலைவனான ஷியாம்பால், ''நீ பேசுவது முட்டாள்தனமாக உள்ளது. ஒரு உண்மையான சீடன் துயரத்தில் இருக்கும் போது நிச்சயம் சத்குருவானவர் வேண்டும் பொழுது வந்து தன் சீடனை நிச்சயம் காப்பாற்றுவார். நீ சத்குருவின் சீடன் என்று சொல்லத்தக்க அளவில் உயர்ந்து காணப்படாவிட்டாலும் சத்குருவானவர் ஆபத்தில் இருக்கும் தம் சீடனை ஒரு போதும் கைவிடமாட்டார். அதனால் நீ கூறுவது உண்மையானால் சத்குருவை தியானம் செய்து உடனே இம்மரத்தில் பசுமையான இலைகளை வரவழைத்துக் காட்டுவாயாக'' என்றார்.

பிதாம்பர் இப்பொழுது ஒரு பக்கம் சமுத்திரம் மறுபக்கம் சாத்தான் என்ற நிலைக்கு தள்ளப்பட்டார். இன்னும் சிறிது நேரத்தில் சுற்றி இருந்த அனைவராலும் தாம் தாக்கப்படுவோம் என்பது உறுதியாக தெரிந்து விட்ட நிலையில் பிதாம்பர் இரு கைகளையும் சேர்த்து சத்குருவை தியானித்து, ''ஸ்வாமி! கஜானன் மகராஜ், என் நாராயணா! என்னைக் காரணம் கொண்டு இவர்கள் தங்களைப் பழிக்கிறார்கள். தம்முடைய உயர்ந்த நிலையை இவ்வுலகத்திற்கு எடுத்துச் செல்வதற்காக தயவு செய்து இந்த மரத்தில் இலைகளை உருவாக்குங்கள் ஸ்வாமி! நான் உங்களை மட்டுமே நம்பி இருக்கிறேன்! தாங்கள் என்னைக் காப்பாற்றாவிட்டால் நான் இவர்களால் தாக்கப்பட்டு மரணிப்பது உறுதியாகும். ப்ரஹலாதனின் வார்த்தையை காப்பாற்ற நரஹரி தூணில் இருந்து வெளியே வந்தார். எந்த தூணில் பக்த ஜனாபாய் கொல்லப்படவேண்டுமோ அந்த தூண் தண்ணீராக மாறி ஓடியதும் நாராயணனின் லீலையாகும்.

சத்குருவிற்கும் இறைவனுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. இறைவனே சத்குரு, சத்குருவே இறைவன். நான் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் சீடனாக அங்கீகாரம் பெற்றவன். ஆகையால் எனக்கென்று எந்த தனிப்பட்ட குணங்களும் இல்லை. மாலைகளில் கட்டுவதற்காக பயன்படுத்தப்படும் கயிறானது மலர்களால் முக்கியத்துவம் பெறுவதைப் போல நான் தங்களால் முக்கியத்துவம் பெற்றவன். தாம் உயர்ந்த மணமிக்க கஸ்தூரியாவீர்கள்! நானோ ஒரு புழுதிப்படலமாவேன்! என்னை இவ்வாறு சோதிப்பது தாம்தான் என்பதை நான் நன்கு அறிவேன். தயவு செய்து இனியும சோதிக்காமல் ஓடி வந்து இந்த மரத்தில் இலைகளை உருவாக்குங்கள்'' என்று கண்ணீர் விட்டு அழுதான்.

பிதாம்பர் அங்கு கூடியிருந்தவர்களிடம் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் நாமத்தை ஜெபிக்குமாறு வேண்டினான். உடனே அனைவரும், ''ஜெய்கஜானன், ஜெய்கஜானன்'' என்று ஒரு மனதாகக்

கூறினார்கள். என்ன அற்புதம்! இலையுதிர் காலத்தில் இலைகளற்ற அந்த மரக்கிளைகளில் பசுமையான இலைகள் துளிர்விடத் தொடங்கின. சிறிது நேரத்தில் அந்த மாமரம் முழுவதுமாக பசுமையான இலைகளால் மூடப்பட்டு மிகவும் அழகாக காட்சியளித்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் ஆச்சர்யம் அடைந்தனர். அங்கிருந்த ஒரு சிலர் ஒரு வேளை இது மாயத் தோற்றமாகவோ அல்லது கனவாகவோ இருக்கக்கூடும் என்று சந்தேகம் எழுந்தது. அதனால் அவர்கள் ஒருவரை ஒருவர் கிளிப் பார்த்துக் கொண்டனர். ஒரு சிலர் இவன் ஒரு மாயாவியாக கூட, இருக்கலாம் அதனால் ஏதாவது தந்திரம் செய்து தற்காலிகமாக இலைக் வரவழைத்திருக்கக்கூடும் என்று நினைத்து அம்மரத்தின் இலைகளை பறித்துப் பார்த்தனர். அதன் கிளைகளில் இலை பறிக்கப்பட்டவுடன் வெண்மையாக பால்வடியத் தொடங்கியதும் அவர்கள் அனைவரும் பிதாம்பர் நிச்சயமாக ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் சீடராகதான் இருக்க முடியும் என்று நம்பிக்கை கொண்டனர்.

அவர்கள் அனைவரும் பிதாம்பரின் உண்மையான குரு பக்தியையும் அவருடைய சிறப்பையும் பாராட்டி, அவரை தம் காந்தோலி (Khondoli) கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர். எவ்வாறு பசுவானது தன் குழந்தையான கன்றுக் குட்டியைத் தேடிவருவது போல என்றாவது ஒரு நாள் நம் கிராமத்திற்கு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களும் தம் சீடனைக் காண வருவார் என்ற நம்பிக்கையில் அவர்கள் பிதாம்பரை சகல மரியாதையுகளுடன் அழைத்துச் சென்றனர். இதில் ஆச்சர்யம் என்னவென்றால் இன்றளவும் அந்த மாமரத்தில் மற்ற மரங்களை விட அதிகமான சுவைமிகுந்த காய்கள் காய்த்துக் கொண்டிருக்கின்றன. காந்தோலி கிராம மக்கள் பிதாம்பரை மதித்துப் போற்றினர். இந்த இடத்தில் பிதாம்பர் ஒரு மடத்தையே ஸ்தாபிப்பதற்கு உதவி செய்தனர். பிதாம்பரும் அதே இடத்திலேயே வாழ்ந்து உயிர் நீத்தார்.

ஒரு முறை ஷேக்காவ் கிராமத்தில் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் ஏதோ ஒன்றை நினைத்து பரிதவித்துக் கொண்டு நிதானமின்றி இங்கும் அங்கும் அலைந்து கொண்டு இருந்தார். அவருடைய சீடர்கள் இது குறித்து அவரிடம் கேட்டதற்கு அவர் கிருஷ்ணா பாட்டீல் என்ற என்னுடைய பக்தர் தினமும் எனக்கு பாக்கு சமர்ப்பித்து பூஜிப்பவர் இன்று அவர் இறந்துவிட்டார். அவருடைய மகன் ராம் வயதில் மிகவும் சிறியவன். ராம் வளர்ந்து பெரியவனாகி எனக்கு சேவை செய்யும் போது பாக்கு சமர்ப்பித்து பூஜிப்பான். ஆனால் தற்போது தனக்கு அவ்வாறு பாக்கு அளிக்க



யாரும் இல்லாததால் தான் மடத்தை விட்டு நீங்கி செல்ல இருப்பதாகவும் கூறினார்.

சத்குருவின் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் அங்கிருந்த எல்லோரும் சத்குரு இந்த ஷேக்காவ் கிராமம் விட்டு செல்லப்போகிறார் என்று புரிந்து கொண்டு அவர் பாதங்களைப் பற்றிக் கொண்டனர். அவர்களில் மகிபாதராவ், பங்கட்லால், தாராசந்த், மாரோட்டி மற்றும் சிலரும் சத்குரு மகராஜ் தயவு செய்து எங்களை விட்டுச் செல்லாதீர்கள்! நீங்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று வாருங்கள்! ஆனால் ஷேக்காவ் கிராமத்தை விட்டுச் செல்லாதீர்கள் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டர்.

சத்குரு அவர்களிடம் ஷேக்காவ் கிராம மக்கள் தங்களுக்குள் ஒற்றுமை இன்றி பிரிவினையை ஏற்படுத்திக் கொண்டதால் தாம் யாருடைய வீட்டிற்கும் செல்லப் போவது இல்லை என்றும் ஒரு வேளை தாம் ஷேக்காவ் கிராமத்தில் தங்க வேண்டுமென்றால் யாருடைய சொந்த இடத்திலும் தான் வசிக்கப் போவது இல்லை என்றும் தெளிவாகக் கூறிவிட்டார். இந்த முடிவு எல்லோரையும் மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளியது. சத்குரு யாருடைய சொந்த இடத்திலும் தங்கவில்லையெனில் அவருக்கென்று ஒரு இடத்தை அரசாங்கத்திடம் இருந்த பெறவேண்டிய சூழ்நிலையில் அவருடைய சீடர்கள் இருந்தனர். பிரிட்டீஷ் அரசாங்கம் எவ்வாறு ஒரு சாதுவிற்கு மரியாதை அளித்து மடம் கட்டுவதற்கு இடம் அளிக்கும் என்று மிகுந்த கவலை கொண்டனர்.

பங்கட்லால் மிகுந்த கவலையோடு சத்குருவிடம், ''ஆங்கில அரசாங்கம், தம்முடைய மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து மடம் கட்டுவதற்கு இடமளிக்கும் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை. அதனால் அவருடைய கருத்தை கருணையோடு மாற்றிக் கொண்டு அவர் யாருடைய இடத்தில் தங்க விருப்பம் கொள்கிறாரோ அந்த இடத்திலேயே தங்கட்டும், மற்றவர்கள் அதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்க மாட்டார்கள்'' என்றும் பணிவோடு கேட்டுக் கொண்டார்.

சத்குரு அவர்களிடம், ''நீங்கள் எதையும் அறியாத சீடர்களாக இருக்கிறீர்கள்! எல்லா நிலமும், இடமும் இறைவனுக்கே சொந்தமானது! எத்தனையோ மகாராஜாக்கள் இங்கு ஆட்சி செய்து உள்ளனர். ஆனால் எந்த இடமும் எப்போதும் என் பாண்டுரங்கனுக்கு மட்டுமே சொந்தமானதாகும். பரம்பரையாக அதிகாரம் பெற்ற காரணத்தால் மகாராஜாக்கள் நிறைய இடத்திற்கு சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் எல்லோரும்

மடிந்துவிட்டனர். நீங்கள் ஹரி பாட்டீலிடம் சென்று கேட்டுப் பாருங்கள்! அவன் அரசாங்கத்திடம் இருந்து நிலம் பெற்றுத் தருவான்'' என்றார்.

அவரின் ஆணையை ஏற்று ஹரி பாட்டிலின் சம்மதத்துடன் அரசாங்கத்திடம் சத்குருவிற்கு மடம் கட்டுவதற்காக இடம் கேட்டு மனு அளிக்கப்பட்டது. அச்சமயத்தில் திரு. காரி என்பவர் மாவட்ட ஆட்சியாளராக புல்தானா மாவட்டத்தில் இருந்ததால், அவர் சம்மதம் அளித்து முதலில் ஒரு ஏக்கர் நிலம் அரசாங்கத்தின் சார்பில் மடம் கட்டுவதற்கு அளிக்கப்படும் என்றும் நிலம் கைக்கு வந்த ஒரு வருடகாலத்திற்குள் அதை முறையாக பயன்படுத்தினால் மேலும் நிறைய நிலங்கள் வழங்கப்படும் என்றும் உறுதிமொழி அளித்தார். திருவாளர் காரி அளித்த அந்த உறுதிமொழி ஆவணம் இன்றளவும் பதிவு செய்யப்பட்ட ஆவணமாக உள்ளது. இந்த அற்புதம் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களால் நடத்தப்பட்ட ஒன்றாகும். இல்லையென்றால் பிரிட்டிஷ் அரசாங்கம் நம் மதசார்புள்ள நடவடிக்கைகளை ஆதரித்து அதற்காக உதவியும் செய்வது எங்கனம் சாத்தியமாகும்! அதன் பிறகு காரியும், பங்கட்லாலும் நிதி திரட்டி கட்டிட வேலையை துவக்கினர். இந்நிகழ்ச்சி இன்னும் விரிவாக அடுத்த அத்தியாயத்தில் நாம் காணலாம்.

கடவுள் எப்போதும் சாதுக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தயாராக இருக்கிறார். டோங்கர் காவ் கிராமத்தை சேர்ந்த (Donogargaon) விது பாட்டீலும், வாடேகாவ் (Wadegaon) கிராமத்தைச் சேர்ந்த லக்ஷ்மணர் பாட்டீலும், ஷேக்காவ் (Shekgaon) கிராமத்தைச் சேர்ந்த ஜாகுஅபாவும் கட்டுமான பணிக்கு நிதி திரட்டும் வேலையில் அதிக அளவு பங்களிப்பு செய்தவர்கள் ஆவார்கள். இவ்வத்தியாயத்தில் நம் சத்குரு நம் சீடர்களிடம் பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்வதற்காக யாருக்குமே சொந்தமான இடத்தில் தாம் இருக்கப் போவதில்லை என்றும் அரசாங்கத்தினரால் பரிசாக அளிக்கப்பட்ட இடத்தில் வாழ்ந்தார். மக்களின் மனதை படிக்கும் ஆற்றல் உடையவர். அதனால்தான் ஒருவேளை, பின்னால் வரும் சந்ததியினர் சத்குருவை தமக்கே சொந்தம் என்றும், தம்முடைய இடத்தில்தான் சத்குரு மடம் கட்டிக் கொண்டார் என்றும் ஒருவரும் எண்ணக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில் அரசால் அளிக்கப்பட்ட இடத்தில் வாழ்ந்தார். ஞானியரும், சாதுக்களும் முக்காலத்தையும் உணர்ந்தவர்கள். ஒரு மனதாக இவ்வத்தியாயத்தை படிக்கும் அனைவருக்கும் நம் சத்குரு எல்லாவிதமான சந்தோஷத்தையும் அளித்து ஆசிர்வதிப்பாராக!

**- ஜெய் கஜானன் -**



# அத்தியாயம் - 13

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! ஓ ஸ்ரீ ஹரி! ஞானிகளில் தலை சிறந்த ஞானியே! கருணைக் கடலே! கோப, கோபிகைகளின் ஆத்ம நண்பனே! தயை கூர்ந்து உங்களை எனக்கு வெளிப்படுத்துங்கள். பிரம்ம தேவர் ஒரு சமயம் தங்களின் இறைத் தன்மையை காணவேண்டி கோகுலத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் பசுக்களையும் கன்றுக்குட்டிகளையும் கவர்ந்து சென்றாரே! அச்சமயத்தில் நீரே பசுக்களாகவும் கன்று குட்டிகளாகவும் உருவெடுத்து உன் இறைத்தன்மையை பிரம்ம தேவருக்கு வெளிப்படுத்தினாய்! யமுனை நதிக்கரையில் காளிங்க நாகத்தின் மேல் நர்த்தனம் ஆடி அதனை அடக்கி ரமணகத்வீபத்திற்கு அனுப்பி வைத்து அதன் பிடியிலிருந்து நந்த கோபர்களை விடுவித்தாய்! அதைப்போல தயை கூர்ந்து எனக்கு நேரவிருக்கும் தீய நிகழ்வுகளை உடைத்து பயத்தின் பிடியில் இருந்து என்னை விடுவிப்பாயாக! நான் என்றுமே உன்னுடைய அறியாக் குழந்தையாவேன். உனது ஆசிகளுக்கு நான் தகுதியற்றவன் இருப்பினும் தயை கூர்ந்து வேண்டுகோளுக்கு இணங்கி உடனடியாக என் மன வேதனைகள் எல்லாவற்றையும் களைந்து அருள் புரிவாயாக!

இப்பொழுது நாம் பங்கட்லால், ஹரிபாட்டில் லக்ஷ்மண், விது ஜாக்தேவ் இவர்களுடன் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு மடம் கட்டுவதற்கான நிதியை திரட்டுவதில் ஏற்பட்ட சுவையான நிகழ்வுகளை பகிர்ந்து கொள்வோம்.

சத்குருவின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் உடனடியாக நிதி அளித்தனர். அவர்மீது நம்பிக்கை அற்ற சிலர், ''ஏன் உங்கள் ஞானி நிதி திரட்ட வேண்டும்? எப்போதும் நீங்கள் உங்கள் மகராஜ் மிகப்பெரிய ஞானி என்றும் அவரால் நிகழ்த்த முடியாத அற்புதங்கள் எதுவுமே இல்லை என்றும் கூறினீர்களே! பிறகு ஏன் அவருக்கு மடம் கட்ட பணம் தேவைப்படுகிறது? குபேரர் அவருடைய பொக்கிஷத்தின் காவலரானால் உடனே குபேரனின் கஜானாவில் இருந்து வேண்டுமென்ற நிதியை எடுத்துக் கொள்ளலாமே? ஏன் இவ்வாறு வீடு வீடாகச் சென்று நிதி திரட்டுகிறீர்கள்?'' என்றெல்லாம் இழிவாகப் பேசியதும், ஜாக்தேவ் அவர்களைப் பார்த்து, பலமாக

சிரித்து, ''நிதி திரட்டும் இச்செயல் உங்களுடைய நன்மைக்காகத்தான்! சத்குருவிற்கு மடமோ, கோவிலோ எதுவுமே தேவையில்லை! இந்த செய்கைகளுக்கான பலன்களை அனுபவிப்பது நாம்தான்!

இந்த உலகமே அவருக்கு மடம், பசுமையான வனங்களும் காடுகளும் நிறைந்த இந்த பூமி அவர் உறங்கும் கட்டிலாகும். அஷ்டமகா சித்திகளும் அவருக்கு பணி செய்து கொண்டிருக்கும் பணியாளர்களாக நின்று கொண்டு இருக்கின்றன. நீங்கள் தரப்போகும் இந்த நிதியை அவர் பொருட்படுத்த வேண்டிய அவசியமே இல்லை! அவருடைய பராக்கிரமும், புகழும் நீங்கள் கற்பனை கூட செய்ய முடியாத நிலையில் இருப்பதால் அதை உங்களால் உணர இயலாது! நீங்கள் இவ்வாறு பேசுவது ஒரு மெழுகுவர்த்தி சூரியனின் கதிர் வீச்சை குறைப்பதற்கு முயற்சிப்பது போல உள்ளது. சூரிய பகவானே ஒளியாவார்! அதற்கு ஒளியை சேர்க்கவோ, குறைக்கவோ மெழுகுவர்த்தியின் உதவி தேவையில்லை. எங்கனம் ஒரு சேவகன் மஹா சக்ரவர்த்தியின் புகழுக்கு காரணமாக இருக்க முடியும்?

இவ்வுலகில் மனிதர்களாக பிறப்பெடுத்தவர்கள் அனைவரும் லௌகீக சுகங்களுக்காக எப்போதும் அலைந்து கொண்டும் அவற்றிற்காக போராடிக் கொண்டும் இருப்பவர்கள் ஆவார்கள். அத்தகைய மனிதர்களின் தேவையையும், கோரிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்காக இத்தகைய தர்மகாரியத்தை செய்தே தீர வேண்டும்! ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். மருந்துகளால், உடலில் ஏற்பட்டுள்ள நோய்களை மட்டுமே தீர்க்க முடியும் அது ஆத்மாவிற்கு பயன்படாது! நோய்களுக்கு அடிமையானதுதான் இந்த சரீரம், ஆத்மா அல்ல! பிறப்பும் இறப்பும் இந்த சரீரத்திற்கு மட்டும் தான் ஆத்மாவிற்கு அல்ல. சத்கர்மா அதாவது இந்த மருந்தாகிய நற்காரியங்கள் செய்வதனால் மட்டுமே நம்முடைய இவ்வுலக தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலும். பாவமாகிய வியாதி தீர வேண்டுமெனில் மருந்தாகிய நற்செயல்களினால் மட்டுமே இயலும். புண்ணியமாகிய இம்மருந்து பாவமாகிய நம் தீய எண்ணங்களை அழித்து வருகின்றன. ஆகையால் நற்காரியங்கள் என்கிற விதையை விதைத்து இவ்வுலக வாழ்க்கையில் மகிழ்ச்சியை அறுவடை செய்யுங்கள்! பாறையில் தூவப்பட்ட தானியங்கள் ஒருபோதும் முளைப்பதில்லை. தீய எண்ணங்களும், செய்கைகளும் பாறையின் மீது தூவப்பட்ட தானியங்கள் போல பறவைகளாலும்,



பூச்சிகளாலும் உட்கொள்ளப்பட்டு அழிக்கப்படுகின்றன. ஞானிகளுக்கும் சாதுக்களுக்கும் செய்கின்ற சேவையைக் காட்டிலும் புண்ணியமானது வேறு ஒன்றும் இல்லை. எல்லா ஞானியர்களுக்கும் தலை சிறந்தவர் நம் சத்குரு ஆவார்.

ஒரு சிறிய விதை விதைக்கப்பட்டவுடன் அதிலிருந்த கொத்தாக தானியங்கள் காய்ப்பது போல, சாதுவிற்காக செய்யப்படும் ஏதாவது ஒரு நற்செயல் பல மடங்கு புண்ணியத்தையும் அதன் பலனையும் நமக்கு தரவல்லது'' என்றார். இவ்வாறு கூறியதும் சத்குருவிற்கு செய்யும் சேவையைக் குறித்து தவறாகப் பேசியவர்கள் மௌனம் காத்தனர். சத்தியமான வார்த்தைகள் வீண்வாதம் செய்தவர்களின் வாயை அடைத்தன. அந்த சமூகத்தின் அந்தஸ்தும், வசதியும் மிக்கவர்களிடையே மட்டும் பெருமளவு நிதி திரட்டப்பட்டது. அதன் பின்னர் கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டது. முதலில் ஆலய வளாகத்தைச் சுற்றி சுவர் எழுப்பப்பட்டது.

ஷேக்காவ் கிராம வாசிகள் எல்லோரும் தங்களால் இயன்ற உதவியை மகிழ்வோடு செய்தனர். எருது பூட்டிய பெரிய வண்டிகில் சுண்ணாம்புக் கற்களும், மணலும் மற்றும் இதர கட்டிட பணிக்குத் தேவையான பொருட்களும் வரவழைக்கப்பட்டன. அச்சமயம் நம் சத்குரு தம்முடைய பழைய மடத்தில் அமர்ந்து கொண்டு இருந்தார். அவர் தாமே நேரடியாகச் சென்று அங்கு அமர்ந்தால் தான் கட்டிட பணிகள் எதிர்பார்த்த அளவு அதிவேகமாக முடியும் என்று நினைத்தார். அவர் அவ்வாறு நினைத்தவுடன் ஒரு காளை வண்டியில் ஏறி அமர்ந்தார். அவ்வண்டி கட்டிட பணிக்கான மணலை ஏற்றிக் கொண்டு சென்று கொண்டு இருந்தது. சத்குரு வண்டியில் ஏறியவுடன் அவ்வண்டியை ஓட்டிச் சென்று கொண்டு இருந்த மஹர் என்ற குலத்தைச் சார்ந்த வண்டியோட்டி உடனே கீழே குதித்து விட்டான். மகராஜ் அவனிடம் காரணம் கேட்டவுடன் அவன், ''ஸ்வாமி! என்னுடைய தாழ்ந்த குலத்தின் காரணமாக நான் தங்களின் அருகில் அமர இயலாது'' என்று கூறியதும் சத்குரு சிரித்துக் கொண்டே, ''தான் ஒரு சாதுவானதால் தனக்கு தாழ்ச்சி உயர்வு எதுவுமே இல்லை'' என்று கூறி அவனை வண்டியில் அமர்ந்த ஓட்டச் சொன்னார்.

எல்லாம் வல்ல பரம்பொருளான நம் சத்குருவின் இத்தகைய கனிவான மொழிகளைக் கேட்டு மகிழ்ந்த அவன் ஸ்வாமி நீங்கள் சொல்வது உண்மை ஆனால் தங்களுக்கு இணையாக வண்டியில் அமர்ந்து வருவதற்கான தகுதி எனக்கு இல்லை. மாரோட்டி என்ற

ஸ்ரீ ராம பக்தன் ஸ்வாமியின் மீது கொண்ட அளவற்ற காதலால் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியுடன் தான் ஒன்றாகி விட்ட போதிலும் அவன் அவருக்கு இணையாக அமரவில்லை. அவருக்கு முன்னால் நின்று கொண்டு இரண்டு கைகளையும் கூப்பி சேவை செய்து கொண்டு இருந்தான். ஆகையால் நான் தங்களுக்கு அருகில் அமர இயலாது என்றார்.

சத்குருவும் அவனது வேண்டுகோளுக்கு சம்மதித்து அவ்வண்டியின் காளைகளிடத்தில், ''காளைகளே, நீங்கள் நடந்து முன்னால் சென்று கொண்டிருக்கும் உங்கள் வண்டியோட்டியின் சொல்லுக்கு கட்டுபட்டு செல்லுங்கள்'' என்று உத்தரவிட்டார். என்ன ஆச்சரியம்! காளைகள் வண்டியோட்டி இல்லாமலேயே சத்குருவின் கட்டளைக்கு பணிந்து சீராக செல்லத் தொடங்கியது. ஆலயம் கட்டும் இடம் வந்ததும் தானாகவே நின்று சத்குரு இறங்கிச் செல்வதற்கு ஒத்துழைத்தது அக்காளைகள் என்ன பாக்கியம் செய்து இருக்க வேண்டும்? நம் சத்குரு வண்டியில் இருந்து இறங்கியவுடன் நேரடியாகச் சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமரந்து கொண்டார். அவர் அமர்ந்த இடம் அந்த இரண்டு நிலப்பகுதிகளின் (Plots) சர்வே (Survey No. 43/45) எண்களுக்கு நடுவில் அமர்ந்து இருந்ததே அதன் சிறப்பாகும்.

மகராஜ் எந்த இடத்தில் அமர்ந்தாரோ அந்த இடத்தையே மடத்தின் மையப்பகுதியாக ஆக்கி விடுவதென தீர்மானிக்கப்பட்டது. இதில் அற்புதம் என்னவென்றால் அரசாங்கத்தால் மடத்திற்கு அளிக்கப்பட்டது வெறும் ஒரு ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே ஆகும். ஆனால் மகராஜ் அமர்ந்து இருந்த மையப்பகுதி அதைக் காட்டிலும் கூடுதலாக 11 குழிகள் (Gunthan) (11,979 sq.ft.) ஆக்கிரமித்து இருந்தது. சத்குருவின் தீர்மானம் மகேசனின் தீர்ப்பாகும். அந்த மாவட்ட ஆட்சியாளரும் (Collector) மேலும் அதிகமான நிலம் மடத்திற்கு தருவதாக வாக்களித்ததால் பணிகள் தடையின்றி துவக்கப்பட்டன. ஆனால் ஹரிபாட்டிலும் மற்ற பக்தர்களும் சில அரசு ஊழியர்களின் தலையீட்டால் கவலையுற்றனர். அவர்களிடம் கூடுதலாக இருந்த நிலம் குறித்து சிலர் அரசாங்கத்திடம் புகார் செய்ததே அதற்குக் காரணமாகும்.

அரசாங்கமும் அந்தப் புகாரை பரிசீலிக்க திரு. ஜோஷி என்ற உயர் அதிகாரியை நியமித்தது. இதைத் தவிர இது குறித்து அபராதத் தொகையும் விதிக்கப்பட்டது. ஹரிபாட்டிலும் மற்றவர்களும் இந்நிகழ்வை சத்குருவிடம் தெரிவித்தனர். சத்குரு சிரித்துக் கொண்டே புகார் மனு, அபராதம் எல்லாமே தள்ளுபடி



செய்யப்படும் என்று கூறினார். அவர் வாக்கு சத்திய வாக்கானது. திரு. ஜோஷி அந்த நிலத்தை மேற்பார்வையிட்டவுடன் கூடுதல் ஆக்கிரமிப்பிற்காக அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையை ரத்து செய்ய உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவு ஆணையை பெற்ற ஹரிபாட்டிலுக்கு தான் முதல் முதலாக தபால்காரரான மஹர் குலத்தவனை அடித்த போது மகராஜ் மன்னிப்பு வழங்கி அவரை தண்டனையில் இருந்து காப்பாற்றியது நினைவிற்கு வந்தது. இப்பொழுதும் இந்த சிக்கலை மகராஜ் விடுவித்து தம் பணியை செய்ய உதவியதைக் கண்டு ஆனந்தமடைந்தார். மகராஜ் என்ன வாக்களித்தாரோ அந்த வாக்கு எந்த தடைகள் ஏற்பட்டாலும் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை ஹரிபாட்டிலும், ஆலயப்பணியில் ஈடுபட்டிருந்த அனைவரும் உணர்ந்தனர்.

தாஸ்கணுவாகிய நான் இப்பொழுது மகராஜ் புரிந்த பல அற்புதங்களை விவரித்து சொல்ல இருக்கிறேன். ஒரு சமயம் கங்காபார்தி என்ற பெயருடைய ஒருவன் சாவதாத் (Savadad) என்ற கிராமத்திற்கு சத்குருவின் தரிசனத்திற்காக வந்திருந்தான் சாவாத் கிராமம் மேக்கர் (Mehkar) என்ற கிராமத்தின் ஒரு பகுதியாகும். கங்காபார்தி ஒரு தொழு நோயாளியாவான். அவன் உடல் முழுவதும் குஷ்ட ரோகத்தால் அழுகி, இரு கால்களும் வெடித்த நிலையில் இருந்தான். அவன் வியாதி ஏறக்குறைய அவன் உடலை தின்று விட்டிருந்தது. அவன் விரல் நுனிகளும் இவ்வியாதிக்கு இரையாகியிருந்தது. உடல் முழுவதும் அழுகிய நிலையில் துர்நாற்றத்தால் மிகுந்த அரிப்பும் ஏற்பட்டு தோல் முழுவதம் சிவப்பு வண்ணத்தில் மாறி இருந்தது. நம் மகராஜ் அவர்களின் அற்புதங்களை கேள்விப்பட்டு நிச்சயமாக நம்மை இந்த வியாதியில் இருந்து காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் மிகுந்த கஷ்டத்துடனும் பல்வேறு இடர்பாடுகளுடன் ஷேக்காவ் கிராமம் வந்தடைந்தான். கால்கள் நடக்க இயலாத நிலையில் எவ்வாறாயிருப்பினும் சத்குருவின் தரிசனத்தைப் பெற முயற்சித்தான்.

ஆனால் சத்குருவின் சீடர்கள் கங்காபார்தியை சத்குருவின் அருகில் செல்ல அனுமதிக்கவில்லை. அந்த நோய் மிக வேகமாக பரவும் நோய் என்ற எண்ணத்தில் அவர்கள் கங்காபார்தியை சற்று தொலைவில் நின்று கொண்டு தரிசனம் செய்யுமாறு தடுத்தனர். ஒரு நாள் அவர்கள் எல்லோரையும் மீறி சத்குருவின் அருகில் சென்று அவரின் ஆசிர்வாதம் பெறவேண்டி அனைவரையும் தள்ளிவிட்டு மகராஜ் அவர்களின் அருகில் வந்து அவர் பாதங்களில்

தம் தலையை வைத்து தம்மை ஆசிர்வதிக்குமாறு கண்ணீர்விட்டு வேண்டிக் கொண்டான். ஸ்ரீ மகராஜ் அவன் தலையில் ஓங்கி ஒரு அடிகொடுத்தார். உடனே அவன் எழுந்து நின்று சத்குருவை பார்த்தான். அடுத்த அடி அவன் இரு கன்னங்களில் விழுந்தது. அதன்பிறகு உடைந்து பிளவுபட்ட அவனது கால்களில் ஒரு உதை கொடுத்தார் ஸ்ரீ மகராஜ். அவன் உடலில் காறி உமிழ்ந்தார். அவர் உமிழ்ந்த அந்த நீர் அவன் உடலில் முழுவதும் பட்டவுடன் கங்காபார்திக்கு சத்குருவின் மகாப்ரஸாதமாக அமைந்தது. அவன் அந்த உமிழ்நீரை தன் உடல் முழுவதும் தடவிக் கொண்டான்.

இந்த சம்பவத்தை பார்த்துக் கொண்டு அருகில் இருந்த ஒருவன் கங்காபார்தியை கேலி செய்யத் தொடங்கினான். அவன் கங்காபார்தியிடம், ''சத்குரு உமிழ்ந்த நீரை உடனடியாக சோப்புக்கட்டியால் தேய்த்து குளித்துவிட்டு வரச்சொன்னான். இதுபோன்ற மூடத்தனமான நம்பிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்க வேண்டாம். மேலும் இங்கு வந்து இந்த பைத்தியக்கார மனிதனிடம் ஆசீர்வாதம் வாங்குவதற்கு பதிலாக ஒரு நல்ல மருத்துவரை அணுகி மருந்துகளை உட்கொண்டால் அதுவே போதுமானது என்றும் அறிவுரை வழங்கினான். அவன் பேசி முடித்தவுடன் கங்காபார்தி சிரித்துக் கொண்டே, ''நீ நினைப்பது தவறு. ஞானிகளிடமும் யோகிகளிடமும் அசுத்தம் என்ற சொல்லுக்கே இடமில்லை. கஸ்தூரி நல்ல மணம் தருமே தவிர ஒருபோதும் துர்நாற்றத்தை தராது. நீ கண்ட இந்த உமிழ்நீர் என் வியாதியை தீர்க்கும் மருந்தாக மாறியது. அதனுடைய மணம் சுகந்த கஸ்தூரியின் மணத்தைவிட உயர்வானது. உனக்கு இன்னும் சந்தேகம் ஏற்பட்டால் என் உடலை சற்று முகர்ந்துபார்! உண்மை நிலையை நீ உணர்வாய்! உன்னைப் பொறுத்தவரை இது எச்சில்நீர். ஏனென்றால் இது உனக்கானது அல்ல, உமிழ்நீரை மருந்தாக நினைக்கும் நான் முட்டாளாக உனக்குத் தெரியலாம். ஆனால் இது முழுவதும் அற்புதமான மருந்தாகும். சத்குருவின் உயர்வான நிலைபற்றி நீ அறியவில்லை. இன்னும் உண்மைநிலையை நீ உணரவில்லையெனில் என்னுடன் புறப்பட்டுவா, சத்குரு தினமும் குளிக்கும் அந்த இடத்தின் மண்ணை என் உடலில் பூசி அதனால் நிகழும் மாற்றத்தை உனக்கு காண்பிக்கிறேன்'' என்று கூறி ஆவேசம் வந்தவன்போல் அவனை இழுத்துக் கொண்டு கங்காபார்தி சத்குரு ஸ்நானம் செய்யும் குளக்கரைக்குச் சென்றான்.

அவ்விருவரும் அக்குளக்கரையில் குளிப்பதற்காக தயாரானார்கள். கங்காபார்தி சத்குருவை மனதால் தியானித்து அங்கிருந்த மண்ணை கையில் எடுத்தான். என்ன அற்புதம்! உடனே அது மருந்தாக மாறியது, ஸ்ரீ மகராஜ் அவர்களை கேலி செய்தவனும் அங்கிருந்தே மண்ணை எடுத்தான். அது வெறும் களிமண்ணாகவே இருந்தது. அவன் தன் தவறை உணர்ந்து வருந்தி சத்குருவின் பாதத்தில் சரணடைந்தான்.



ஸ்ரீ மகராஜ் அவர்கள் அருகில் செல்ல அவரது சிஷ்யர்கள் அனுமதி மறுத்ததால் கங்காபார்தி தொலைவில் அவரது பார்வை படும்படியான இடத்தில் அமர்ந்து கொண்டு பஜனைப் பாடல்களைப்பாடிக் கொண்டு இருந்தான். அவன் இனிமையான குரலையும் நல்ல சங்கீத ஞானத்தையும் பெற்று இருந்ததால் தினமும் சத்குருவின் முன்னால் அமர்ந்து கொண்டு ஆனந்தமாக பஜனைப்பாடல்களை பாடிக் கொண்டு இருந்தான். இவ்வாறாக 14 நாட்கள் பாடியதும் அவன் உடல் முழுவதும் இருந்த சிவப்பு வண்ணம் மாறியது. உடலின் தொழுநோயால் அரிக்கப்பட்ட ஒவ்வொரு பாகமும் இயல்பு நிலைக்கு மாறத்தொடங்கியது. கால்களின் வெடிப்பு மறைந்து இரு கால்களும் திடகாத்திரமான நிலைக்கு மாறியது. கங்காபார்தியின் விசுவாசமும் சத்குருவிடம் அவன் கொண்டிருந்த நம்பிக்கையும் அவனை பழைய நிலைக்கு மாற்றியது. அவனுடைய இனிமையான பாடல்களைக் கேட்டு அனைவரும் ஆனந்தமடைந்தனர்.

கங்காபார்தியின் உடல் பழைய நிலைக்கு மாறியதும் அதனை கேள்விப்பட்டு மனைவி அனுசுயா மற்றும் அவனுடைய மகன் சந்தோஷ்பார்தி இருவரும் ஷேக்காவ் வந்திருந்து கங்காபார்தியை அழைத்துச் செல்வதற்கு சத்குருவிடம் உத்தரவு வேண்டினர். அவர்கள் இருவரும் கைகள் கூப்பி கங்காபார்தியிடம், ''சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் கிருபையாலும், கருணையாலும் தாங்கள் பூரண குணமடைந்துவிட்டீர்கள். இனி ஸ்வாமியிடம் எங்களோடு வருவதற்கு தாங்கள் உத்தரவு வேண்டுங்கள்'' என்றனர்.

கங்காபார்தி தீர்மானமாக தயவுசெய்து என்னிடம் எதையும் வேண்டாதீர்கள். நான் இனியும் உங்களுக்கு சொந்தமானவன் அல்லன்! என் கன்னங்களில் ஓங்கி அறைந்த சத்குரு எனக்கு இந்த உண்மையை உணரவைத்தார். நான் இன்று அணிந்திருக்கும் இந்த காவி வஸ்திரத்திற்கு ஒருபோதும் களங்கம் விளைவிக்க மாட்டேன். என் கண்கள் திறந்தன, நான் இனியும் குடும்ப வாழ்க்கை வாழ இயலாது என்று கூறி தன் மகனிடம், ''சந்தோஷபார்தி, நீ உன் தாயை அழைத்துக் கொண்டு சாவதாத் கிராமம் செல்வாயாக! உன் தாய்க்கு அடிபணிந்து அவளது சொல்லைத்தட்டாமல் அவளுக்கு

சேவை செய்யவேண்டும். அவளை மகிழ்விக்க வேண்டியது உன் கடமை. எவ்வாறு புண்டலீகன் தன் தாயாருக்கு சேவை செய்ததன் மூலம் பாண்டுரங்கன், இதயத்தில் இடம் பிடித்தானோ அதைப்போல் நீயும் உன் தாயாருக்கு சேவை செய்ய வேண்டும். அந்த சேவை உனக்கு வாசுதேவரின் அனுக்ரஹத்தைப் பெற்றுத்தரும். நான் உங்களுடன சாவதாத் கிராமத்திற்கு ஒருவேளை வருவதாக இருந்தால் என்னை இந்த தொழுநோய் ரோகம் மறுபடியும் தொற்றுக் கொண்டு அளவில்லாத வேதனையை எல்லோருக்கும் அளித்துக் கொண்டு இருக்கும். இந்த உண்மையை நான் ஸ்வாமியிடம் இருந்து உணர்ந்ததால் நான் அங்குவர இயலாது. அதனால் தயவு செய்து என்னை வற்புறுத்தாதே! நான் இங்கிருந்து என் ஸ்வாமிக்கு சேவை செய்வதையே என் வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதுகிறேன். என்னுடைய இந்த மாற்றத்தை எனக்குள் ஏற்படுத்திய சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு சேவை செய்ய எனக்கு வாய்ப்பளியுங்கள். அதனால் தாங்கள் கிராமம் நோக்கி புறப்படுங்கள்'' என்று வேண்டிக்கொண்டான்.

கங்காபார்தியின் வேண்டுகோளுக்கு பணிந்து அவன் மனைவியும் மகனும் தங்கள் கிராமமான சாவதாத் புறப்பட்டனர். கங்காபார்தி மட்டும் ஷேக்காவ் கிராமத்தில் இருந்துகொண்டு தினமும் சத்குருவிற்கு முன்னால் ஆனந்தமாக பலபாடல்கள்பாடி சேவை செய்துவந்தான். நம் சத்குரு ஒருபோதும் ஒருவரையும் இல்லற வாழ்க்கையையும், மனைவி மக்களையும் தியாகம் செய்ய வற்புறுத்தியது இல்லை. கங்காபார்தியின் விதிப்பயன் மிகவும் மோசமாக இருந்ததால் அவனுடைய பக்திக்கு மனம் இரங்கி அவனை வேதனையில் இருந்து விடுவித்தார். ஆனால் அவனது கர்மாவின் காரணமாக அவன் மீண்டும் இல்லறத்தை சேரும் வேளையில் அவனுக்கு இந்த ரோக நோய் மீண்டும் பிடித்து அவன் வாழ்க்கை முழுவதும் வேதனையை அனுபவிக்காமல் அவனை தன்னிடத்தில் இருக்கச் செய்து காப்பாற்றினார். ஞானியரின் செய்கைகளுக்கு சாமான்ய மனிதர்கள் யாரும் விளக்கம் கூற இயலாது. அது நம் கற்பனைக்கும் எட்டாத அறிவாகும்.

கங்காபார்தி முழுமையாக குணமடைந்து புதுப் பொலிவோடும், ஒளி பொருந்திய தேகத்துடனும் காணப்பட்டான். சிறிது நாட்களில் சத்குருவின் கட்டளையை ஏற்று மால்காபூர் சென்று தங்கினான். பௌஷ் மாதத்தில் ஒருநாள் சியாம்சிங் ஷேக்காவ் வந்திருந்து ஸ்ரீ மகராஜ் அவர்களை தங்கள் கிராமமான



முந்த்காவ் (Mundgaon) அழைத்தான். ஏற்கனவே அவன் ஸ்ரீ மகராஜ் அவர்களை அழைத்தபோத அவர் தாம் சில நாட்கள் கழித்து வருவதாக வாக்களித்தார். அதை நினைவுகூர்ந்து சியாம்சிங் சத்குருவை அழைத்துப்போக ஷேக்காவ் வந்திருந்தான். தாம் வாக்களித்தபடியே ஸ்ரீ மகராஜ் அவனுடன் முந்த்காவ் சென்றார். அங்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். சத்குருவின் தரிசனத்திற்காக சியாம்சிங் ஸ்ரீ மகராஜ் அவர்களை வரவேற்று பெரிய விருந்திற்கான ஏற்பாட்டைச் செய்தான். அவன் தனது கிராமமான முந்த்காவ், பைத்தான் என்ற கிராமத்திற்கு இணையான புகழ் பெற்றதாக மகிழ்ந்தான். பைத்தான் (Paithan) என்ற கிராமம் ஞானி ஏக்நாத் என்ற மிகப்பெரிய யோகியால் புகழ்பெற்றது. அதைப்போல முந்த்காவ் கிராமமும் நம் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களால் புகழ்பெற்றது. தூர தேசத்தில் இருந்து கீர்த்தனைகள் பாடுபவர்கள் முந்த்காவ் கிராமம் வந்திருந்து கஜானன் மகராஜ் அவர்கள் முன்னிலையில் ஆனந்தமாக பாடவும் செய்தனர்.

சியாம்சிங் சத்குருவிடம் யோசனை பெறாமலேயே பெரிய அளவிற்கு விருந்திற்கு ஏற்பாடு செய்தான். நாம் எத்தகைய செயில் இறங்கினாலும் இறைவனின் உத்தரவு இன்றி ஒருபோதும் செய்ய இயலாது. உணவு தயாரிக்கும் பணி நிறைவடையும் நேரத்தில் சியாம்சிங் உணவை பெறுவதற்காக ஏராளமான மக்களை அழைத்து இருந்தான். ஸ்ரீ மகராஜ் சியாம்சிங்கிடம் இன்று சதுர்த்தஸி (Chathurdashi) யாதலால் இயல்பாவே இன்று வெறுமையான நாளாகும். ஆகையால் நீ நாளை பௌர்ணமி அன்று எல்லோருக்கும் உணவு வழங்குவாயாக! என்றார்.

சியாம்சிங் மிகவும் கலக்கம் அடைந்து மகராஜ் உணவு தயாரிக்கும் பணி பாதிக்குமேல் நிறைவடைந்துவிட்டது. மக்களும் உணவருந்த வந்து அமர்ந்து விட்டனர். இப்போது நான் என்ன சொல்லி அவர்களை அனுப்பி வைப்பேன். உணவு அனைத்தும் வீணாகிவிடும். அதனால் இந்த சிக்கலில் இருந்து தாங்கள் என்னை காப்பாற்ற வேண்டுமென்று வேண்டினான்.

ஸ்ரீ கஜானன் மகராஜ் உன்னுடைய வழியில் நீ செல்வது சரியாக இருக்கலாம் ஆனால் இறைவனால் இச்செய்கை இன்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சியாம்சிங் இன்று இந்த உணவு வீணாகவேண்டும் என்பது இறைவனின் தீர்ப்பு. நீயும் உன் குடும்பத்தாரும் எப்போதும் நீங்கள் நினைத்தவாறே எல்லா நிகழ்வுகளும் அமைய வேண்டும் என நினைக்கிறீர்கள். ஆனால் அது சாத்தியமாகாது என்பதை நீயும் உன் குடும்பத்தாரும் நன்றாக

புரிந்துகொள்ள வேண்டும் என்றார். ஆனால் சியாம்சிங்கிற்கு ஏராளமான மக்கள் உணவு பெற்று உண்பதற்கு வரிசையில் அமர்ந்திருக்கும்போது சத்குரு ஏன் இவ்வாறு சொல்ல வேண்டும். இவர்களை என்ன சொல்லி வழி அனுப்பி வைப்பது என்றெல்லாம் எண்ணிக் கொண்டு இருந்தான். அவன் இவ்வாறு நினைத்தமாத்திரத்தில் தெளிவாக இருந்த ஆகாய மேகங்கள் திடீரென்று கருநிறமாக மாறி பலமான இடியுடன், காற்றுடன் புயல் மழை பெய்ய தொடங்கியது. கிராம சாலைகள் முழுவதும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடத்தொடங்கியது. இனியும் அங்கு உணவு பெற்றுச் செல்ல யார் அமர்ந்திருக்க முடியும்? சத்குருவின் வாக்கிற்கேற்ப சியாம்சிங் மற்றும் அவன் குடும்பத்தாருக்கு உண்மை நிலையை உணரவைத்தார்.

அன்று அந்த உணவு வீணாகபோனதும் சியாம்சிங் தன் தவறுக்காக மிகவும் வருந்தி சத்குருவிடம், ''ஓ மகராஜ்! மக்கள் அனைவரும் இந்த கடுமையான மழையில் உணவு உண்ணாமல் வருத்தத்துடன் வீடு திரும்பிவிட்டனர். தாம் தயவு கூர்ந்து நாளை இதேபோல் நேராதவாறு காத்தருள வேண்டும். இது மழைக் காலமே அல்ல. இந்த மழை எங்கள் உணவினை வீணாக்குவதற்காக பெய்த மழையாகவே எனக்கு தோன்றுகிறது. இதுபோன்ற மழைக் காலமே இல்லாத நேரத்தில் மழை பெய்தால் அது பயிர்களை நாசமாக்கி அதனால் கிராம வாசிகள் அனைவரும் என்னுடைய பாவத்தின் பயனாக இந்த நாசம் தமக்கு வந்தடைந்ததாக பழியை என்மீது சுமத்துவார்கள். அதனால் தயவு கூர்ந்து நாளை இதுபோன்று மழை வராதவாறு தடுத்து என்னை காத்து அருள்வீராக'' என்று மன்றாடி வேண்டிக்கொண்டான்.

சத்குருவும் அவனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். உடனே அவர் தனது கருணையான பார்வையால் ஒருமுறை ஆகாயத்தை உற்றுநோக்கினார். என்ன அற்புதம்! அத்தனை மழைமேகங்களும் ஒரே நொடியில விலகி, பிரகாசமான சூரிய ஒளி வீசத்தொடங்கியது. இதுவே நம் சத்குருவின் ஆத்ம பலமாகும். அடுத்த நாள் சியாம்சிங் பந்தாரா என்று மகாராஷ்டிர தேசத்தில் அழைக்கப்படும், கிராமம் முழுவதும் உணவு உபசரிக்கும் விழாவினை சிறப்பாக நடத்தினான். சியாம்சிங் உணவு வழங்கிய இந்தநாள் இன்றும் முந்த்காவ் (Mundgaon) கிராமத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டு, அனைவரும் விருந்து உண்டு மகிழ்ந்து வருகிறார்கள். சியாம்சிங் தன்னுடைய நிலசொத்துக்கள் முழுவதையும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் பாதத்தில் சமர்ப்பித்துவிட்டான்.



முந்த்காவ் (Mundgaon) கிராமத்தில் அநேக மக்கள் ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் சிஷ்யர்களாக சேர்ந்தனர். அவர்களின் மிக இளையவனான ஒரு சிறியவன் புண்டலீக போகரே (Pundalika Bhokre) என்பவன் ஆவான். ஆவன் குன்பி என்ற இனத்தைச் சார்ந்த உகிர்தா என்பவனின் ஒரு வாரிசு ஆவான். பேரார் என்ற பகுதியிலும் கெர்பஞ்சா என்ற மகாராஷ்ட்ர பிரதேசத்திலும் (Berar) (Penayaa in Telengan) (Kerpunja in Maharashtra) இந்த பெயர், தங்கள் குடும்பங்களின் வாரிசு ஒருவேளை உயிர்பிழைக்க வாய்ப்பு இல்லாத போது அக்குழந்தை பிழைக்க வேண்டி பெரியோர்களால் வைக்கப்படுவது வழக்கும். நம் தமிழ்நாட்டிலும் பிறக்கும் சில குழந்தைகள் உயிருக்காக போராடும் வேளையில் பெற்றோர்கள், குலதேவதை அல்லது இஷ்ட தெய்வத்தின் பெயரை இடுவதும் பொதுவான வழக்கமாக இன்றளவும் இருந்து வருகின்றது. அத்தகைய பெயருடைய நம் புண்டலீக போகரே முந்த்காவ் (Mundgaon) கிராமத்தில் இருந்து ஒவ்வொரு வாத்ய ஏகாதசி தினத்தன்றும் நம் மகராஜ் அவர்களின் தரிசனம் பெற ஷேக்காவ் வருவது வழக்கமாக இருந்தது. எவ்வாறு வார்கரி என்ற இனத்தவரின் சம்ப்ரதாயம் ஒவ்வொரு வருடமும் ஷேக்காவ் கிராமத்தில் இருந்து பண்டரிபுரம் செல்வதைப்போல புண்டலீகனும் ஒவ்வொரு வாத்ய ஏகாதசி (Vadya Ekadasi) தினத்தன்று நம் சத்குருவை தரிசிக்க வருவது வழக்கமாக இருந்தது. வார்கரி சம்ப்ரதாயம் குறித்து இறுதில் நாம் விரிவாகக் காண்போம்!

புண்டலீகனும் ஒவ்வொரு மாதமும் தன் ஷேக்காவ் பயணத்தைத் தொடர்ந்து கொண்டு இருந்தான். ஒரு சமயம் ஏகாதசியன்று பயணத்தை தொடங்கிய புண்டலீகன் தாம் வசிக்கும் பேரார் (Berar) பகுதி முழுவதும் ப்ளேக் (Plague) நோயால் மக்கள் பீடிக்கப்பட்டு இறந்து வருவதை கேள்விப்பட்டான். அவன் அதைப்பற்றி கவலை கொள்ளவில்லை. சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை, தரிசிக்க செல்லும் சம்ப்ரதாயத்தை கைவிடமறுத்து தன் பயணத்தை தொடங்கினான். சற்று நேரத்திற்குள் அவனுக்கு பிளேக் (Plague) ஜுரம் தொற்றிக் கொண்டது. அந்த ஊர் மக்கள் யாவரும் தங்கள் வீடுகளை விட்டு வெட்டவெளியில் வசிக்க ஆரம்பித்தனர். இந்த ப்ளேக் வியாதி ஒருவரைப்பற்றினால் முதலில் உடல் முழுவதும் நடுக்கம் ஏற்பட்டு பின்னர் கடுமையான காய்ச்சலால், பாதிக்கப்படுவார்கள். பின்னர், கண்கள் ரத்தச்சிவப்பு வர்ணமாக மாறி, கைகால் மூட்டு இணைப்புகளில் பாதிப்பு, ஏற்பட்டு தன் சக்தியை முழுவதுமாக

இழந்து இறந்துவிடுவார்கள். இந்த கொடிய ப்ளேக் நோய் இந்தியாவில் இதற்கு முன்னால் பரவவில்லை. ஆங்கிலேய ஆதிக்கத்தினால், ஐரோப்பிய நாடுகளில் இருந்து, இந்தியாவிற்குள் நுழைந்து இலட்சக்கணக்கான உயிர்களை பலிவாங்கியது. இந்த நோய் ஒருவரை தொற்றிக் கொண்டவுடன், ஊர் முழுவதும் காட்டு தீ போல பரவும் வல்லமை உடையது. ப்ளேக் நோய் தங்கள் ஊரில் பரவியதை உணர்ந்த மக்கள் வீடுகளை புறக்கணித்து, வெட்ட வெளியில் சாலைகளிலும் வந்து வயற்காடுகளிலும் வாழத் தொடங்கினர். இக்கொடிய வியாதி முந்த்காவ் (Mundgaon) மக்களையும் தாக்கியது. அன்று வாத்ய ஏகாதசி தினமானதால் நம் புண்டலீகன், சத்குருவை மனதில் தியானித்து தம் கால்நடைப்பயணத்தை தொடங்கினான்.

புண்டலீகன் ஏறக்குறைய பத்துமைல்கள் தொலைவு நடந்து சென்றவுடன், அவனால் ஒரு அடி கூட எடுத்து வைக்க இயலவில்லை. அவனுக்கும் ப்ளேக் வியாதி தொற்றிக்கொண்டது. அவனுடைய தோள் இணைப்புகளிலும், கால்களிலும் (Joints) கடுமையான வலி ஏற்பட்டு, சக்தி அனைத்தையும் இழந்து விட்டான். இப்போது அவன் ப்ளேக் காய்ச்சலால் முழுமையாக பீடிக்கப்பட்டான். அவனுடைய இந்த நிலை கண்டு, அவன் தந்தை மிகவும் கவலையுற்று கண்ணீர் சிந்தினார்.

ஆனால் புண்டலீகன் இருகைகளையும் கூப்பி, "ஓ கஜானன் மகராஜ்! ஒவ்வொரு வாத்ய ஏகாதசி அன்றும் நான் தம்மை தரிசிக்க வருவதை தாங்கள் அறிவீர்கள்! இன்றும் நான் தங்களை தரிசிக்க வருவதற்கு எந்த தடையும் இல்லாமல் காத்தருள வேண்டுகிறேன். நான் தங்களின் பாதம் நோக்கி ஷேக்காவ் வந்து சேர வேண்டும். அவ்வாறு வந்து நான், தங்களை தரிசித்துவிட்டால் அதன் பிறகு நான் இறப்பதைப்பற்றி கவலை கொள்ளவில்லை. ஆகையால் தயைகூர்ந்து, நான் ஷேக்காவில் தங்களை தரிசிக்கும் வரை, இந்த ப்ளேக் நோயால் நான் சோர்வடையாதவாறு என்னை காத்தருள வேண்டுகிறேன்.

தன் ஒரே வாரிசான புண்டலீகன் இந்த நிலை கண்டு அவன் தந்தை சத்குருவைத் தொழுதார். அத்துடன் பாதயாத்திரை செல்வதற்கு புண்டலீகனால் இயலாது என்ற கருத்தினால் அவனுக்கு எருது பூட்டிய வண்டி ஒன்று ஏற்பாடு செய்து தருவதாகக் கூறினார்.

ஆனால், புண்டலீகன் அதை மறுத்தான். அவன் தன் தந்தையிடம், "தந்தையே நான் ஷேக்காவ் கிராமத்திற்கு ஒவ்வொரு முறையும் பாதயாத்திரை சென்று கொண்டிருக்கிறேன். மிக மெதுவாக நடந்து சென்று கூட எவ்வாறாயினும் நான் ஸ்ரீ மகராஜ்



அவர்களை நிச்சயமாக தரிசனம் செய்வேன்! ஒரு வேளை இதற்கு இடையில் நான் இறக்க நேரிட்டால் என் அன்புத்தந்தையே என் உடலை தயைகூர்ந்து ஷேக்காவ் எடுத்துச் செல்லுங்கள். எதற்கும் கவலை கொள்ளாதீர்கள் என்று சொல்லிவிட்டு நடக்கத் தொடங்கினான். மிகவும் கடுமையான உடல் வேதனைக்கு நடுவில் அவன் ஷேக்காவ் அடைந்து சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கினான்.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் தன் கைகளால், வியாதியால் வலுவிழந்த அவன் தோள்களை இறுக்கிப்பிடித்து அழுத்தினார். பின்னால் அவனிடம், " புண்டலீகா உன்னுடைய மரணம் தவிர்க்கப்பட்டது. இனியும் நீ பயங்கொள்ள தேவையில்லை. உனக்கு வந்த ஆபத்து தடுக்கப்பட்டுவிட்டது'' என்றார்.

என்ன அற்புதம்! சத்குரு அவன் தோள்பட்டை இணைப்புகளில் கைவைத்து அழுத்தியதும் அவன் வலி மறந்து இழந்த சக்தியை முழுவதும் திரும்பப்பெற்றான். அவனது ஜுரம் வந்த வேகத்தில் காணாமல் போனது. உடல் பழைய நிலைக்குத் திரும்பியது. ஒரே நேரத்தில் எல்லா வலிகளும் மறைந்து ப்ளேக் நோயிலிருந்து அவன் விடுவிக்கப்பட்டான். அவனது உடல் சிறிது பலவீனமாக இருந்ததால், ஸ்ரீ மகராஜ் அவன் தாய் அளித்த நைவேத்யத்தை இரண்டு கவளம் எடுத்து தன் வாயில் போட்டுக் கொண்டார். உடனே அந்த பலஹீனமும் மறைந்து மிகுந்த புத்துணர்ச்சி பெற்றான். இதுவே புண்டலீகனின் குருபக்திக்கு கிடைத்த பெரிய பரிசாகும். குருவின் மீது நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்களை அவர் ஒருபோதும் கைவிடுவதில்லை. உண்மையான குருவானவர் ஒரு சிறியவனுக்கு காமதேனுவை போன்றவர். காமதேனு நாம் நினைத்த அனைத்தையும் தரும் தெய்வமாகும். ஆனால் நம் சத்குருவோ நாம் நினைக்க மறந்ததைக்கூட நமக்கு தருவார். சத்குருவின் தரிசனம் கிடைத்தபிறகு புதுப்பொலிவுடன் புண்டலீகன் முந்த்காவ் திரும்பினான். இந்த அற்புதங்கள் யாவும் சத்தியமான குருவின் அற்புதங்களாகும். இவற்றில் ஒரு பகுதியைக்கூட யாராலும் மறுக்க முடியாது.

சத்குருவின் இச்சரித்திரத்தை படிப்பதாலேயே நமக்கு வரவிருக்கும் பேராபத்துகள் தவிர்க்கப்பட்டு நாம் பாதுகாப்பை உணரமுடியும். தாஸ்கணு மகராஜ் அவர்களால் எழுதப்பட்ட இச்சரித்திரத்தை படிப்பவர்கள் அனைவருக்கும் ஆனந்தத்தையும், பாதுகாப்பையும் வழங்கும் என்பதில் ஐயமில்லை.

**- ஜெய் கஜானன் -**

## அத்தியாயம் - 14

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! ஓ கௌசல்யாவின் புத்திரரான ஸ்ரீராமபிரானே! ரகுவம்சத்தின் மணிமகுடமே! ஓ சீதாபதியே! இக்குழந்தையை கருணையோடு காப்பாயாக! நீ கருணாயோடு! கல்லாய் மாறிப்போன அகலிகைக்கு உயிரூட்டிட, த்ரதிகா என்ற அந்த கல்லுக்கு சாபவிமோசனம் அளித்து காப்பாற்றினாய். உன்னைக்காண வேண்டுமென்று காத்துக் கொண்டு இருந்த சபரியின் ஆசையை நிறைவேற்றினாய்! ஓ தசரத நந்தனா! உன் பக்தர்களைக் காக்க உன் அரசபதவியைத் துறந்தாய்! வானரங்களுக்கு அற்புத சக்தியை அளித்தாய்! இராவணனை வதைத்தவனே! உன் நாமத்தின் மகிமையினால் கற்களைக் கூட கடலில் மூழ்காமல் மிதக்கச் செய்தாய்! உன்னை வணங்கிய விபீஷணனுக்காக, இலங்கையின் அரச பதவி அளித்து, சிறப்பித்தாய்! உன்னைச் சரணடைந்தவர்கள், வறுமையிலிருந்தும், அறியாமையிலிருந்தும், துயரத்திலிருந்தும், பரிபூரணமாக விடுதலை அடைவார்கள் என்பது நிச்சயமாகும். தயவு கூர்ந்த இவற்றையெல்லாம் நினைவில் கொண்டு இந்த தாஸ்கணுவை காத்தருளுங்கள்! தாயை விட்டு, குழந்தை எங்கே செல்ல முடியும்! நீ என்னுடைய தாய், தந்தை, குரு! மற்றும் பக்தர்கள் நினைத்ததை அள்ளிவழங்கும், கல்பதரு மரமாவாய்! ஓ ராமா! இவ்வுலகவாழ்க்கை சமுத்திரத்தில் மிதக்கும் படகைப் போன்றது. தயைகூர்ந்து எம்மை கரை சேர்ப்பாயாக.

மேக்கர் என்ற கிராமத்தில் ''பந்து தாத்யா'' என்ற பெயருடைய ஒரு அந்தணர் இருந்தார். அவர் மிகவும் நல்லவராகவும் பரந்த மனத்தை உடையவராகவும் இருந்தார். ஆனாலும் அவர் இவ்வுலக வாழ்வின் சுகபோகங்களின் மீது மிகுந்த இச்சை கொண்டு இருந்தார். அவருடைய இல்லத்திற்கு தொடர்ந்து வருகை தந்து கொண்டு இருந்த எல்லா விருந்தின்ர்களுக்கும் தம் செல்வத்தை வாரி இறைத்து செலவிட்டுக் கொண்டு இருந்தார். அவர் இச்செயலை தொடர்ந்து வெகு நாட்களாக செய்து கொண்டு இருந்த காரணத்தால் அவருடைய செல்வம் முழுவதும் கரைந்து காணாமல் போனது.



அந்த நிலைக்கு ஆளானபோதும் அவர் மனம் திருந்தாமல், பலரிடத்தில் நிறைய தொகையை கடனாகப் பெற்று அவற்றையும் விருந்தினருக்காக செலவழித்துவிட்டார். இறுதியாக மிஞ்சிய தன்னுடைய வீட்டையும் அடகு வைத்து அத்தொகையையும் செலவழித்துவிட்டார். கடன் சுமை நாலாபுறங்களிலும் அவரை விரட்டி அடிக்க அவர் வெளி உலகத்தை காணவே வெட்கப்பட்டு, அவமானத்தால் நிலைகுலைந்து போனார். அது மட்டுமல்லாமல் வீட்டில் இருக்கும் பாத்திர பண்டங்கள் அனைத்தையும் விற்கும் நிலை அவருக்கு ஏற்பட்டது. இப்போது அவர் ஒரு முழுமையான கடனாளியானார். இரண்டு வேளை உணவைக் கூட அவரால் அவர் குடும்பத்திற்கு வழங்க இயலவில்லை. மனைவியும் குழந்தைகளும் இவ்வாறு பட்டினி கிடப்பதைப்பார்த்து அவருக்கு இவ்வுலக வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டது.

''பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகில் இடமில்லை'' என்று திருவள்ளுவர் கூறியதைப் போல பந்து தாத்யா பொருளில்லாத இந்த வாழ்க்கை நரகமென்று முடிவு செய்து தற்கொலை செய்து கொள்ள தீர்மானித்தார். ஒருவேளை கிணற்றில் குதித்தால் மக்கள் தம்மை காப்பாற்றி விடுவார்கள். அதன் பிறகு தற்கொலை முயற்சி செய்ததாக தாம் சிறை செல்ல நேரிடும் என்பதால் பந்து தாத்யா ஒரு தீர்மானத்திற்கு வந்தார். இங்கிருந்து இமயமலைக்குச் சென்று தம் உடலை மாய்த்துக்கொண்டால் தற்கொலை செய்த பாவத்தில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

இவற்றை மனதில் கொண்டு, தம் வீட்டைவிட்டு வெறும் சிம்மத்தோலை இடையில் சுற்றிக் கொண்டு, உடல் முழுவதும் சாம்பலை பூசிக் கொண்டு ஒருவரும் தன்னை அடையாளம் கண்டு கொள்ளாதவாறு அவர் வெளியேறினார். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் செல்வாக்கோடு இருந்த குடும்பங்கள், எப்போதும் மக்களின் பார்வையில் குற்றவாளியாக நிற்பதற்கு மிகவும் வெட்கமும் வேதனையும் கொள்வார்கள் என்பது உலகறியதி.

பந்து தாத்யா, வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் இறைவனிடம், ''கடவுளே! என்னிடம் மட்டும் உனக்கு ஏன் இத்தனை வெறுப்பு உண்டானது! நான் உன்னிடம் முழுவதும் நம்பிக்கை கொண்டு இருந்தேன்! புராணங்களில், பிச்சைக்காரர்கள் கூட கடவுளின் அருளால் செல்வந்தர்களாகி விடுவார்கள் என்று கூறுகின்றன. ஆனால் என் தற்போதைய அனுபவம் அவையாவும்

பொய் என்று கூறுகின்றன. பக்தியை பாடிய கவிஞர்களும், காவியங்களும் உள்ளன, ஏழைகளின் பாதுகாவலன் என்று தவறாகப் புரிந்து கொண்டு கூறுவதாக எனக்கு தோன்றுகிறது.

ஓ ஸ்ரீ ஹரி! இப்போது என் வாழ்க்கையின் முடிவு உன் கையில் உள்ளது. என்னுடைய மரணத்திற்கு நீயே காரணமாவாய்! ஆகையால் என்னைக் காப்பதன் மூலம் உன்னைப் பழியில் இருந்து நீயே காத்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து இமாலயத்திற்கு செல்வதற்கு பயணச்சீட்டு வாங்க இரயில் நிலைய்த்திற்கு வந்தார்.

அங்கு ஒரு பிராமணர் பந்து தாத்யாவின் அருகில் வந்து, ஹரித்வாருக்கு பயணச்சீட்டு வாங்க வேண்டாம். முதலில் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் என்ற பெரிய ஞானியை தரிசித்துவிட்டு பிறகு ஹரித்வார் செல்லுங்கள் என்று கூறினார். ஸ்ரீ கஜானன் மகராஜ், ஷேக்காவ் கிராமத்தில் இருக்கிறார். அவரை முதலில் சென்று தரிசித்துவிட்டு பின்னர் முடிவெடுப்பதைப்பற்றி சிந்தியுங்கள், எக்காரணத்தை முன்னிட்டும் தற்காலிக வேதனைக்காக, சந்தர்ப்ப சூழ்நிலை சாதகமாக அமையாததால் தேவையில்லாத முடிவை எடுக்க வேண்டாம். நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்! சாதுவின் தரிசனம் ஒருபோதும் வீணாகப்போனது இல்லை, என்றெல்லாம் கூறியதும் பந்து தாத்யா குழப்பமடைந்தார். ஒருவேளை மாறு வேடத்தில் இருக்கும் தம்மை யாராவது அடையாளம் கண்டுவிட்டாரோ! என்று அஞ்சி அவரிடம் அவர் யாரென்று கூட கேட்க தைரியமற்றவராய் ஷேக்காவ் செல்ல முடிவெடுத்தார்.

ஷேக்காவ் வந்து ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களைக் கண்டதும், சாஷ்டாங்கமாக அவர் கால்களில் விழுந்து வணங்கினார். சத்குரு சிரித்துக் கொண்டே, "பந்து தாத்யா! நீ ஏன் இமாலயத்திற்கு சென்று தற்கொலை செய்து கொள்ள வேண்டும்? ஓ மகனே! யாருக்கும் தன்னைத் தானே மாய்த்துக் கொள்வதற்கு கூட உரிமை இல்லை, என்பதை புரிந்துகொள்! என்றும் நம்பிக்கையை இழக்காதே!

நீ இப்போது உன்னை மாய்த்துக் கொள்ள முடிவு எடுத்தால், மறுபடியும் இன்னொரு ஜென்மம் எடுத்து தற்கொலை செய்ததற்கான, பாவத்தின் சுமையை நீ அனுபவித்தாக வேண்டும்! இப்போது நீ இமயமலைக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை! புனித கங்கை நதியில், உன் உடலை மாய்த்துக் கொள்ள



வேண்டிய அவசியமும் இல்லை. நீ உடனே உன் வீட்டிற்குச் செல்! உன்னை இரயில் நிலையத்தில் சந்தித்த அந்த பிராமணரை உனக்கு அடையாளம் தெரிந்ததா? உடனே, வீட்டிற்குச் திரும்பி செல்! அங்கு உன்னுடைய தோட்டத்தில் மாசோபாவிற்கான (காவல் தெய்வம்) விக்கிரஹம் (மூர்த்தி) வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு நடு இரவில் 12 மணிக்கு செல்வாயாக! அங்கு இருக்கும் கருவேல மரத்திற்கு (Bapul Tree) அடியில், மாசோபா மூர்த்திக்கு, கிழக்கு திசையில், மூன்று அடி ஆழத்தில், தோண்டினால் உனக்கு செல்வம் கிடைக்கும். அச்செல்வத்தைக் கொண்டு உன் கடனை எல்லாம் தீர்ப்பாய்! உன் மனைவி குழந்தைகளை ஒருபோதும் விட்டு பிரியாதே! இனிமேல் ஒருபோதும் இத்தகைய தவறான முடிவினை எடுக்க முயற்சிக்காதே! என்று அன்புடனும் கருணையுடனும் சத்குரு கூறியதும், சத்குருவை நமஸ்கரித்து பந்து தாத்யா, உடனடியாக கேர்தா (Kherda) என்ற தன் கிராமத்திற்கு திரும்பினான்.

சத்குரு கூறியவாறு, அன்று இரவு தன் தோட்டத்திற்கு சென்று அங்கிருந்து கருவேல மரத்தின் (Bapul Tree) அடியில் 3 அடி ஆழத்தில் தோண்டியவுடன், ஒரு செப்புக்குடத்தைக் கண்டார். ஆச்சரியத்துடன் அக்குடத்தை வெளியில் எடுத்து அதன் மேல் உறையை நீக்கி, அதன் உள்ளே பார்த்த பந்து தாத்யா ஆனந்தத்தில் ஜெய் கஜானன், என்று குரல் எழுப்பினார். என்ன அற்புதம்! அச்செப்புக் குடத்திற்குள் 400 தங்கக்காசுக்கள் (Moharas) இருந்தன. மகிழ்ச்சியில் "ஜெய் கஜானன் ஜெய் கஜானன்" என்று கூறி நடனம் ஆடினார். சத்குருவின் கட்டளைக்கு ஏற்ப தன் கடனை எல்லாம் அடைத்து பந்து தாத்யா, அடமானம் வைத்து இருந்த தன் வீட்டையும் தோட்டத்தையும் மீட்டு தன் குடும்பத்தை நல்ல முறையில் பாதுகாத்து வந்தார்.

ஒருவன் மரணிக்கும் நேரத்தில் உயிரைக் காப்பாற்ற உயிர்த்தேனாக வந்தது போல, கடலில் மூழ்கி இறக்கவிருந்த, ஒருவனது படகை கரை சேர்த்து, காப்பாற்றியதுபோல பந்து தாத்யா தன் கெட்ட நாட்கள் தம்மைவிட்டு சென்றுவிட்டதை முழுமையாக உணர்ந்தார்.

ஆனந்தமாக சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களை தரிசிக்க, ஷேக்காவ் வந்து அவர் பாதங்களில் நமஸ்கரித்தார். ஸ்ரீ மகராஜ் பந்து தாத்யாவிடம், "நீ ஏன் என்னை வந்து நமஸ்கரிக்கிறாய்? இச்செல்வத்தை அளித்தவனிடம் சென்று நன்றி

சொல்வாயாக! இப்பொழுதாவது ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்! செல்வத்தை செலவழிக்கும் போது மிக கவனமாக இருக்க வேண்டும்! தேவையற்ற வீண் செலவுகளை தவிர்க்க வேண்டும்! உன்னிடத்தில், செல்வம் இருக்கும் வரை மட்டுமே உன்னைத் தேடி மக்கள் கூட்டம் அலைமோதும்! ஆனால் ஸ்ரீமன் நாராயணன், உன்னை எப்போதும் காத்து இரட்சிப்பவர்! உன்னுடைய கெட்ட நேரங்களிலும் உனக்கு துணையாக நிற்பவர் அவர்! அவரை எப்போதும் வணங்குவாயாக! அவன் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டார்'' என்று கூறினார்.

பந்து தாத்யா சத்குருவின் பாதங்களில் நமஸ்கரித்து, தம்மையும் தம் குடும்பத்தையும் தக்க சமயத்தில் காப்பாற்றியதற்கு கண்ணீர் மல்க நன்றி தெரிவித்துவிட்டு ஆனந்தமாக தன் கிராமத்திற்குச் சென்றார். நம்முடைய துயரமான நாட்களில், சோதனைகள் ஏற்படும்போது அதுவரை, நம்முடன் நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள், நம்மைவிட்டு விலகிச் சென்றுவிடுவார்கள். இதுதான் உலக நியதி. இந்த அறிவுரையை, நம் சத்குரு பந்து தாத்யாவிற்கு வழங்கியதுடன், மட்டுமல்லாது, அவன் வறுமை தீர்ந்து மனைவி மக்களோடு சௌபாக்கியமாக வாழவும் வழிசெய்தார். சத்குருவால் மட்டுமே இத்தகைய அற்புதங்களை நிகழ்த்த முடியும்.

சோமவாரமான திங்கட்கிழமையும், அமாவாசை நாளும் இணைந்த புனிதமான சோமாவதி என்று அழைக்கப்பட்டும், புராணங்களால் மிக உயர்வாகச் சொல்லப்பட்ட இந்நன்னாளில், புனித நர்மதை ஆற்றில் நீராடுவது ஒருவன் வாழ்நாளில் செய்யப்படும் மிக புண்ணிய காரியமாக கருதப்படுகிறது. ஷேக்காவ் கிராம மக்களும் புனித நர்மதை ஆற்றில் நீராடுவதற்கு, உண்டான பயண ஏற்பாடுகளைச் செய்யத்துவங்கினர். அவர்களில் நம் பங்கட்லால், மார்த்தாண்ட பாட்டீல், மாருதி, சந்த்ராபன் மற்றும் பஜ்ரங்லாலுடன் இணைந்து ஓம்காரேஷ்வரை தரிசிக்கச் செல்வதற்கு தீர்மானித்தனர். பங்கட்லால் இந்தப் புனிதமான நாளில் நர்மதை ஆற்றில் நீராட தம்முடன் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களும் வந்தால் தம் பயணம் இனிமையாகவும், அதே சமயம் மிகவும் பாதுகாப்பாகவும் இருக்கும் என்று நினைத்தார். இம்முடிவை மற்ற நால்வரும் ஒருமனதாக ஆமோதித்தனர். அவர்கள் யாவரும் சத்குருவிடம் சென்று சத்குருவும் தம்முடன் ஓம்காரேஷ்வரர் வருமாறு அன்புடன் வேண்டினர். அவர்கள்



சத்குருவிடம், அவர் தம்முடன் வரும்போது தம்முடைய பிரயாணம் மிகவும் பாதுகாப்பாகவும், தமக்கு எந்தத்தீங்கும் நேராமலும் இருக்கும் என்பதாலும் சத்குருவை தம்முடன் வரவேண்டும் என்று அழைத்தனர்.

ஸ்ரீ கஜானன் மகராஜ் சிரித்துக் கொண்டே, ''புனிதமான தேவி நர்மதை, எப்போதும் என்னுடன் இருக்கிறாள். அதனால் அவளை, அங்கு சென்று தொல்லை செய்ய நான் விரும்பவில்லை. நீங்கள் எல்லோரும் ஓம்காரேஷ்வரர் செல்லுங்கள்! ஓம்காரேஷ்வர் மிகத் தொன்மையும், சிறப்பையும் பெற்ற ஸ்தலமாகும்! முதன்முதலில் இங்கு அரசாட்சி செய்த வீரம்பொருந்திய மன்னன் மாந்தாதா (Mandhata) என்ற பெயருடையவன் ஆவான்! ஸ்ரீ சங்கராச்சார்யா ஸ்வாமிகளும் முதன்முதலில் ஆன்மிக சீர்திருத்தம் செய்ய, சபதம் எடுத்துக் கொண்ட ஆலயமும் ஓம்காரேஷ்வரர் ஆகும். ஸ்ரீ சங்கராச்சார்யா ஸ்வாமிகள், இங்கிருந்தே, மக்களை இவ்வுலக வாழ்வின் பந்தங்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் சீரிய பணியைத் தொடங்கினார். ஆகையால், தாங்கள் அந்த ஸ்தலத்திற்கு சென்று, என்னுடைய நர்மதையை தரிசித்து வாருங்கள்! ஆனால் எக்காரணம் கொண்டும் என்னை தங்களோடு வரச்சொல்லி வற்புறுத்தாதீர்கள்! எனக்கு இந்த மாதிரியான சம்ப்ரதாயங்கள் தேவையில்லை! ஆகையால் நீங்கள் புறப்படுங்கள்'' என்று கூறினார். ஆனால் அந்நால்வரும் சத்குருவின் பேச்சை கேட்பதாக இல்லை. சத்குருவின் மேல் அளவுகடந்த அன்பு கொண்டுள்ள அவர்கள், அவர்தம் பாதங்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, அவர் தம்முடன் வந்தேயாக வேண்டும் என்று அன்புடன் அழைத்தனர்.

ஸ்ரீ மகராஜ் அவர்களிடம், ''நீங்கள் எல்லோரும் ஒன்றைப் புரிந்து கொள்ளவே இல்லை! எனதருகில் இருக்கும் இந்தக்கிணற்றில், தேவி நர்மதை ஆனந்தமாக வாசம் செய்கிறாள்! நான் இவளை விட்டுவிட்டு ஓம்காரேஷ்வரர் சென்றால், என் ப்ரிய நர்மதை என்னிடத்தில் கோபம் கொள்வாள். அதனால் உங்களுடைய நன்மைக்காக சொல்கிறேன். என்னை இங்கேயே விட்டுவிட்டு நீங்கள் சென்று வாருங்கள்! என்னுடைய இக்கூற்று உங்கள் நன்மைக்காக மட்டுமே என்பதை நீங்கள் நன்கு உணர வேண்டும்'' என்று மீண்டும் எச்சரித்தார்.

ஆனால் விதியின் வலிமை மிகவும் சக்திவாய்ந்தது என்பது நம் சத்குரு அறிந்ததே. அவர் த்ரிகால ஞானியும், ஸ்ரீ தத்தரின்

அவதாரமும் ஆவார். மீண்டும் சந்த்ரபானும் மாரோட்டியும் சத்குரு வரவில்லையென்றால், தாமும் செல்லப்போவதில்லை என்று வற்புறுத்தினர். வேறுவழியின்றி அவர்களின் அன்புக்கு பணிந்த சத்குரு அவர்களிடம் தாம் அவர்களோடு வருவதாக இருந்தால், நேரவிருக்கும் சம்பவங்களுக்கு அவர்களே பொறுப்பு என்றும், பின்னர் ஏதாவது தீங்கு நேருமாயின் தம்மை அவர்கள் பழிக்கலாகாது என்றும் கூறினார்.

அந்நால்வரும், சத்குருவுடன் செல்லும்போது, தமக்கு எதுவும் நேராமல் அவர் தம்மை இரட்சிப்பார் என்ற நம்பிக்கையில் அவருடன் புறப்பட்டனர். அவர்கள் சத்குருவுடன் ஓம்காரேஷ்வரர் வந்து அடைந்தனர். சோமாவதி நாளான அன்று, அந்த ஸ்தலம் முழுவதும் ஆயிரக்கணக்கான பக்தர்களால் சூழப்பட்டிருந்தது. ஆண்களும், பெண்களும் புனித நர்மதை நதியின் கரையோரங்களில், வரிசையாக அமர்ந்து கொண்டு இருந்தனர். பலர் அந்நதியில் நீராடி மகிழ்ந்தனர். மற்றும் பலர் மந்திரங்களை இடைவிடாமல் ஜபித்துக் கொண்டு இருந்தனர். ஏராளமானவர்கள் கைகளில் புஷ்பங்கள், மலர் மாலைகளை ஏந்திக் கொண்டு ஓம்காரேஷ்வரரை தரிசிக்க, ஆலயத்திற்குள் சென்றனர். நர்மதை நதிக்கரையில் அமர்ந்திருந்தவர்கள் இனிமையான சுவையுள்ள பதார்த்தங்களை சுவைத்தபடி, நதி தேவதையின் அழகை, ரசித்துக் கொண்டு இருந்தனர். அங்குள்ளவர்களைச் சுற்றி தீர்த்த யாத்திரை வந்த நிறைய பஜனை கோஷ்டிகள், பஜனைப்பாடல்களை ஆனந்தமாக இசைத்துக் கொண்டு இருந்தனர். அப்புனிதநாளில் ஓம்காரேஷ்வரர் ஆலயமும் அதைச் சுற்றிலும் விழாக்கோலத்துடன் விசேஷ அபிஷேகங்களும், ஆராதனையுமாக தரிசிக்க வந்தவர்களை, மெய்மறக்கச் செய்தன. பங்கட்லாலும் அவருடன் வந்தவர்களும், ஓம்காரேஷ்வரரை தரிசிக்க ஆலயம் சென்றனர்.

இந்த ஆரவாரங்களுக்கு நடுவில், எவ்வித சலனமும் இன்றி, புனித நர்மதை நதியின் கரையில், பத்மாசனம் இட்டு ஓம்காரேஷ்வரரை நோக்கி, அமைதியாக அமர்ந்து கொண்டு இருந்தார் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ். ஆலயத்திற்குள் சென்று ஸ்வாமியை தரிசித்துவிட்டு வந்த அந்நால்வரும், ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் வந்து, தம்மோடு புறப்படுமாறு வேண்டினார், மற்றும் அவர்கள், ஆயிரக்கணக்கான மக்கள் வந்தவண்ணம் இருந்தபடியால் திரும்பச் செல்வதற்கு, சாலை வழியை தேர்ந்தெடுக்க வேண்டாம் என்றும் மேலும் எருது பூட்டிய வண்டியில் வந்தவர்கள், தங்கள் எருதுகளை நம்புவதால், ஏராளமான வண்டிகளுக்கு நடுவில் தம் பயணம் தொடர்வது சாத்தியமே இல்லை என்றும் கூறினர். ஆகையால் திரும்பச் செல்வதற்கு, நதிக்கரையில் சிறிய படகை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, நர்மதை நதியில் பிரயாணம் செய்து, வெகு விரைவாக தம் கிராமத்தை அடைந்துவிடலாம் என்றும் தம் கருத்துக்களைத் தெரிவித்தனர். சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், ஒரு வார்த்தையும் மறுப்பு காட்டாமல் அவர்கள் இஷ்டப்படியே வருவதற்குச் சம்மதித்தார்.



ஸ்ரீ மகராஜ் அவர்கள், நால்வரோடும் மற்றும் படகோட்டியுடனும் படகில் ஏறி அமர்ந்தவுடன், கேடிகாட் (Khedighat) என்ற பகுதியில் இருந்து, அவர்களின் நதிப்பயணம் தொடங்கியது. வழியில் மிகப்பெரிய பாறை ஒன்றில், அப்படகு திடீரென்று பலமாக மோதியது. அவர்கள், அச்சமயம் கரைபுரண்டு ஓடும், நர்மதை நதியின் அதிக வெள்ளப்பெருக்கெடுக்கும் நடுப்பகுதியில், ப்ரயாணித்துக் கொண்டு இருந்தனர். பெரிய பாறைமீது படகு மோதியவுடன், படகின் கீழ் ஒரு பகுதி வெள்ளத்தில் அடித்துச் சென்றது. அந்த இடத்தில் ஒரு பெரிய துளை ஏற்பட்டது. மிக வேகமாக நதிநீர் படகின் உள்ளே அத்துளைவழியாக பாய்ந்துவரத் தொடங்கியது. படகோட்டி அதைக் கவனித்தவுடன், இனியும் தாமதித்தால் தாம் உயிர் பிழைக்க இயலாது என்பதால், உடனடியாக அப்படகில் இருந்து குதித்து நீந்த ஆரம்பித்தான். விரைந்து அப்படகு மூழ்கும் அபாயம் ஏற்பட்டது.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் மிகவும் அமைதியாக, ''கண், கண் கணாத போலே'' என்ற கணபதி மந்திரத்தை, தொடர்ந்து உச்சரித்துக் கொண்டே இருந்தார். மற்ற நால்வரும் மிகவும் நடுக்கமுற்று, தங்கள் கைகளை கூப்பி, ''ஸ்ரீ மகராஜ் அன்பான இதயத்தை உடையவரே, தங்கள் சொல்பேச்சைக் கேட்காததால், நாங்கள் அனைவரும் குற்ற உணர்வில் இருக்கிறோம்! இதனுடைய பயனாக புனித நர்மதா எங்கள் மீது கோபித்துக் கொண்டு எங்களை மூழ்கடித்து, தண்டனையளிக்கப்போகிறாள். இப்போது மரணத்தின் விளிம்பில் இருக்கிறோம்! ஓ ஸ்வாமி! இனியும் தங்களின் ஒவ்வொரு வார்த்தையையும், வேதவாக்காக நினைத்து அதற்கு கீழ்படிகிறோம் என்று நாங்கள் உறுதி அளிக்கிறோம்! இந்தப்பயங்கரத்தில் இருந்து எம்மை கருணையோடு காப்பாற்றுங்கள், ஸ்வாமி எங்களை பத்திரமாக, ஷேக்காவ்

அழைத்துச் செல்ல மன்றாடி வேண்டுகிறோம்'' என்று கண்ணீருடன் வேண்டிக் கொண்டனர்.

இதற்குள் அப்படகு முழுவதும், ஏறக்குறைய தண்ணீரால் நிரம்பி விட்டிருந்தது! சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை நோக்கி, ''நீங்கள் இவ்வாறு பயப்படத் தேவையில்லை! இப்புனித நர்மதை, தங்களை ஒரு நாளும் துன்புறுத்தமாட்டாள்! இது நான் அளிக்கும் வாக்கு'' என்று கூறி ஸ்ரீ மகராஜ் நர்மதை நதியை துதித்தார். ''ஓ! புனிதமான தேவி நர்மதையே! குற்றமுள்ள எல்லாவற்றையும் அழித்துவிடும் தேவியே! இவர்களுடைய குற்றத்தை மன்னித்து கருணை காட்டுவாயாக!'' என்று அவர் இவ்வாறு துதித்தவுடன், என்ன ஆச்சரியம்! வந்த வேகத்தில் அப்படகில் உள்ளே இருந்த தண்ணீர் வெளியேற துவங்கியது. அப்படகின் த்வாரம் நர்மதா தேவியின் கரத்தால் அடைக்கப்பட்டது. அப்படகு மிதக்க ஆரம்பித்தது. நர்மதை தேவி மனித உருவில், அடர்ந்த நீண்ட கூந்தலுடன் தன் கரத்தால் தாங்கி கரை வரை கொண்டுவந்து சேர்த்தாள்.

அந்நால்வரும் மிகுந்த ஆச்சர்யத்துடன், அவளை நோக்கி, ''ஓ பெண்ணே! நீ எங்களை காப்பாற்றிவிட்டாய்! அன்பு கூர்ந்துநீ யார் என்பதை எங்களுக்குச் சொல்வாயாக என்றனர். உன்னுடைய ஈரத்துணியை மாற்றிக்கொள்! எங்களிடத்தில் உனக்காக காய்ந்த துணிகள் உள்ளன'' என்றனர்.

புனித தேவதையான நர்மதை சிரித்துக் கொண்டே, ''அவர்களிடத்தில் நான் ஓம்கார் என்ற மீனவரின் மகளாவேன்! என் பெயர் நர்மதா! வழக்கத்தில் நான் ஈரத்துணிகளுடனே வசிப்பவள் ஆவேன் '' என்று கூறி சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை பணிந்து உடனே மின்னலைப் போன்று மறைந்துவிட்டாள்.

இவை எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருந்த, நால்வரும் மிகவும் ஆனந்தமாக, புனித நர்மதை நதியே, நம் சத்குருவை. தரிசிக்க வந்ததை எண்ணி சத்குருவை வணங்கினர், இருப்பினும் நம் பங்கட்லால் சத்குருவின் மூலம் அப்பெண் யார் என்பதனை தெரிந்து கொள்ள ஆவலாகி அவரிடம் அப்பெண் பற்றிய விவரத்தைக் கூறுமாறு வேண்டினான்.

பங்கட்லால் இதைப்பற்றி கேட்டதும், நம் சத்குரு, ஏற்கெனவே தங்களிடம் நர்மதை தன்னைப்பற்றி கூறியதை ஏன் திரும்பவும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? அவள் கூறிய அந்த மீனவன் ஓம்கார்தான் ஓம்காரேஷ்வரர் ஆவார். அவர் தாம்,



தண்ணீரின் ரூபத்தைக் கொண்டவள் என்று கூறும்போதே, அவள்தான் நர்மதா தேவி என்பது தங்களுக்கு புரியவில்லையா! மனதில் ஒருபோதும் சந்தேகத்திற்கு இடம் அளிக்கக் கூடாது, தன்னைத் தேடி வந்தவர்களை, ஆபத்திலிருந்து தேவி நர்மதை, எப்போதும் காப்பாற்றுபவள் ஆவாள்! ஒருமுறை அனைவரும் உரத்த குரலில், ''ஜெய்'' என்று நர்மதை தேவிக்கு நன்றி சொல்லி, எப்போதெல்லாம் ஆபத்து நேர்கிறதோ, அப்போதெல்லாம் காத்து இரட்சிக்குமாறு வேண்டிக் கொள்ளுங்கள்'' என்றார்.

இவையாவற்றையும் மிகுந்த ஆச்சர்யத்துடன் கேட்ட அந்நால்வரும், சத்குருவின் முன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து போற்றினர். ஷேக்காவ் கிராமம் திரும்பியதும் நடந்த அற்புதங்களை அனைவரிடமும் சொல்லி மகிழ்ந்தனர்.

கருணைக்கடலான நம் சத்குரு, ஸ்ரீ கஜானன் மகராஜ், மரணிக்கும் வேளையிலும் தம்மை நாடி வந்தவர்களை, காப்பாற்றும் மகத்தான சக்தியை பெற்றவர். அந்நால்வரையும் மரணபயம் துரத்தியபோது, சத்குருவின் பாதங்களில் சரணடைந்த காரணத்தால், தவறு செய்த போதும், கருணையோட மன்னித்து, அவர்களை காப்பாற்றினார். இந்த அற்புதங்களை நினைவு கூறும்போது நாமும் பங்கட்லால் மற்றும் அவர்களுடைய தோழர்களுடன் ஸ்ரீ மகராஜ் அவர்களுடனும் இணைந்து அப்படகில் பயணித்த அனுபவம் நமக்குள் ஏற்படுகிறது.

ஒரு சமயம் திருவாளர் சதாசிவ ரங்கநாத் வானவாலே(Sadashiva Ranganath Wanawala), தம் நண்பருடன் சத்குருவை தரிசிக்க ஷேக்காவ் கிராமத்திற்கு வந்தார். சதாசிவா என்கிற தாத்யா, என்ற பெயருடைய அவர் வித்தரகூட் என்ற இடத்தில் வாழ்ந்த ஸ்ரீமாதவ்நாத் மகராஜ் என்பவருடைய சீடர் ஸ்ரீமாதவ்நாத் யோக கலையின் தீவிர பயிற்சியாளரும் மிகப் பெரிய அளவில் யோக கலையை மால்வா (Malwa) என்ற பகுதியில், பிரபலப்படுத்தியவரும் ஆவார். சதாசிவா நம் சத்குருவை தரிசிக்க வந்தபோது, அவர் உணவருந்திக் கொண்டு இருந்தார். உடனே சதாசிவா தம் குருவான ஸ்ரீமாதவநாத் மகராஜ் அவர்களை நினைவு கூர்ந்தார். சாதுக்கள் தாம் ஒருவரை ஒருவர் சந்திக்காமலேயே ஒருவரை மற்றவர் புரிந்து வைத்து இருப்பார்கள்.

உடனே ஸ்ரீ கஜானன் மகராஜ், ஸ்ரீமாதவநாத் மகராஜின் சிஷ்யரை என்னிடத்தில் அழைத்து வாருங்கள் என்றார், மேலும் அவர் சதாசிவனுடைய குரு ஸ்ரீமாதவ்நாத் மகராஜ் சற்று நேரம்

முன்னர் தம்முடன் உணவருந்தியதாகவும், தற்போதுதான் அந்த இடத்தைவிட்டுச் சென்றதாகவும், திரு. சதாசிவா சற்று முன்னர் வந்திருந்தால் அவருடைய குருவையும் தரிசித்திருக்கலாம் என்றும் கூறினார். அது மட்டுமல்லாமல் அவருடைய குரு, தம்முடன் உணவருந்திவிட்டு (பான்) வெற்றிலை போட்டுக் கொள்ளாமல் சென்றுவிட்டதாகவும், நினைவு கூர்ந்தார். மேலும் அவர், திரு. சதாசிவ் வானேவாலே அவர்களுக்கு பாரம்பரிய முறையில், வரவேற்பு அளித்து அவரிடத்தல் இரண்டு (பான்) வெற்றிலைகளைக் கொடுத்தார்.

அந்த வெற்றிலைகளை ஸ்ரீமாதவ்நாத் மகராஜ் இடத்தில் சேர்க்குமாறு கூறிவிட்டு தாம் பின்வருமாறு கூறியவார்த்தைகளை மாற்றாமல் அவ்வாறே ஸ்ரீமாதவநாத் மகராஜ் அவர்களிடத்தில் விளக்கச் சொன்னார். சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், ஸ்ரீமாதவநாத் மகராஜ் அவர்களிடத்தில் நாம் இருவரும் இணைந்தே மதிய உணவு உண்டோம்! ஆனால் தம்முடைய வெற்றிலையை (Pan) நீங்கள் மறந்துவிட்டு போய்விட்டீர்கள் என்று கூறச்சொன்னார். இவற்றையெல்லாம் மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்ட திரு. சதாசிவா அவ்விரண்டு வெற்றிலைகளை பெற்றுக்கொண்டு தம் குருவான ஸ்ரீமாதவநாத் மகராஜ் அவர்களிடம் சென்று நடந்தவைகளை விவரித்தார், மற்றும் அவர் குருவிடம் ஷேக்காவ் கிராமம் சென்று ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களோடு உணவு உண்டாரா என்றும் சந்தேகத்துடன் கேட்டார்.

அதற்கு அவர் குரு, ''ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் கூறியது முற்றிலும் சரியே! அவர் உணவு உண்பதற்கு முன்னால், என்னை நினைத்ததால் நாங்கள் இருவரும் சேர்ந்து உணவருந்தினோம். நாங்கள் பலமுறை ஒருவரை ஒருவர் சந்தித்திருக்கிறோம். அதுகுறித்து தமக்கு ஒரு சந்தேகமும் வரத்தேவையில்லை என்றார். அவர் மேலும் தாமும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களும் வேறு உடல் தோற்றத்தில் காணப்பட்டாலும் தங்கள் உயிர் மூச்சு ஒன்றேயாகும் என்றார். இது ஒரு ஆழ்ந்த அறிவுக்குட்பட்ட விஷயமாததலால் புரிந்து கொள்வதற்கு சிறிது தாமதமாகும் என்றும் கூறினார். அவர் மேலும் ஆச்சர்யமாக நல்லவேளை நான் வெற்றிலை போட்டுக் கொள்ள மறந்துவிட்டேன், ஆகையால் ஸ்ரீ கஜானன் மகராஜ் கொடுத்தனுப்பிய வெற்றிலையை தருவாயாக'' என்றார். பிறகு வெற்றிலையை மடித்து, வாயில் போட்டுக்கொண்டு, சிறிது அதை ப்ரஸாதமாக, திரு. சதாசிவ வானேவாலே அவருக்கும் வழங்கினார்.



திரு. சதாசிவ வானவாலே இது போன்ற அற்புதத்தை, தாம் இதுவரை கண்டு அறியாததால், மெய்மறந்து ஆனந்தமடைந்தார்.

ஞானியரின் இத்தகைய வியத்தகு சந்திப்பைக் குறித்து ஞானி த்யானேஷ்வர் மகராஜ், தம்முடைய மராத்திய நூலான, ''சங்க்தியோ பஸஸ்தி'' (Chengdeo Pasaste)-யில் அழகாக விவரித்துள்ளார். அதை படிப்பவர்கள், ஞானிகள் ஒருவரை ஒருவர் எங்கனம் சந்தித்துக் கொள்கிறார்கள் என்பதை நன்கு உணரமுடியும். இதில் ஆச்சர்யம் என்னவென்றால், ''ஞானிகள் எந்த இடத்தில், எத்தனை தொலைவில் இருந்தாலும், தங்கள் இடத்தைவிட்டு நீங்காமலேயே சந்தித்துக் கொள்வார்கள் என்பது தான், சீக்முகம்மது அவர்கள், ஸ்ரீகோண்டா (Shree Gonda)-வில் வாழ்ந்தார். ஸ்ரீதுகாராம் தேஹூ (Dehu)-வில் வாழ்ந்தார். ஆனால் ஒருமுறை தேஹூ (Dehu)-வில் ஸ்ரீதுகாராம் கீர்த்தனைகள் பாடிக்கொண்டிருந்தபோது அந்த கொட்டகை தீப்பற்றி எரிந்தது. ஆனால் அந்த நேரத்தில் ஸ்ரீகோண்டா (Shree Gonda)-வில் வாழ்ந்த சீக் முகம்மது தனது பிரதேசத்தில் இருந்து கொண்டு, மானசீகமாக தீயணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் அடைந்தார். இச்சம்பவம் மஹிபால் (Mahipal) என்பவரால் ''பக்தி விஜய்'' (Bhakthi Vijay) என்ற மராத்திய நூலில் இடம் பெற்றுள்ளது. இதைப்போன்றே ஸ்ரீமாணிக்பிரபு என்ற ஸ்ரீதத்த அவதாரி பாட்டீலின் மகனை ஹாலி (Hali) என்ற கிராமத்தை அடையும் வேளையில், ஒரு கிணற்றில் விழ இருந்தபோது காப்பாற்றினார். உண்மையான யோகிகள் மட்டுமே இத்தகைய ஆற்றலைப் பெற்று இருக்கிறார்கள். யோகம் என்பது மிகவும் சக்திவாய்ந்த கலையாகும். அதனால் முறையாக யோக கலையைப் பயின்றால், நம் ஆன்ம பலத்தை பலமடங்கு பெருக்கமுடியும்.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களின் இத்தகைய அற்புதங்களைப் படிக்கும் பக்தர்களுக்கும் இதுபோன்ற அற்புதங்களை, தம்முடைய வாழ்க்கையிலும் சத்குரு நிகழ்த்தி, மரண பயத்திலிருந்து நம்மைக் காத்து இரட்சிப்பார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

**- ஜெய் கஜானன் -**

# அத்தியாயம் - 15

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! ஓ கஸ்யபரின் மைந்தனான வாமன தேவரே! குழந்தை நாராயணா! பலிராஜனின் கோரிக்கையை நிறைவேற்ற அவன் தமக்கு அளித்த மூன்றாவது அடியினை அன்புடன் ஏற்று அவனை ஆசீர்வதித்தாய்! அவனுடைய பூலோக ராஜ்ஜியத்தை நீ எடுத்துக்கொண்டு அவருக்கு வைகுண்ட ராஜ்யத்தை பரிசாக அளித்தாய்! அவரிடம் இருந்து நெல்லிக்கனியை பெற்று அவருக்கு உமது பிரசாதமாக தேங்காயை அளித்தாய்! பலிராஜனின் ஆத்மார்த்த பக்தியினால், நீ பரசவமமைடைந்து அவருடைய வாயில் கதவுகளின் அருகே அமர்ந்து காவலாக இருக்க சம்மதித்தாய்! உன்னுடைய ஆசீர்வாதத்தால் பலிராஜன் அரசர்களுக்கெல்லாம் தலைவனான அந்த யுகம் முழுவதும் அரசாட்சி செய்தான்.

வேதங்களுக்கெல்லாம் தலைவனாக நீ இந்த வாமன அவதாரத்தில் வேதங்களை முறையாகப் பயின்றி வேத விற்பன்னராக காட்சி அளித்தாய்! உன்னுடைய எல்லா அவதாரங்களிலும் இந்த அவதாரம் (வாமன அவதாரம்) மிகவும் சிறப்பு வாய்ந்ததற்கு காரணம் நீ அனைத்து தேவதைகளின், அரசர்களின், மன்னர்களின் அன்பையும் பெற்றாய், இந்த அவதாரத்தில் நீ யாரையும் சம்ஹாரம் செய்யவில்லை (அழித்தல்). எதிரிகள் என்று உனக்கு யாருமே இருந்தது இல்லை. அனைத்து தேவர்களும், கடவுளும், பூத பிசாசுகளும் உன்னை தங்கள் நண்பனாக ஏற்றுக் கொண்டன! உன்னுடைய இந்த வாமன அவதாரத்தில் இறைவனை மகிழ்வித்து, பூத பிசாசுகளையும் காப்பாற்றினாய்! உன்னுடைய இறைத்தன்மையை நீ அனைவருக்கும் புரியவைத்தாய்! ஓ வாமன தேவரே! என சிரம் தாழ்த்தி உன்னை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன், கருணையோடு உன் கரத்தினை, என் சிரத்தின் மீது வைத்து இந்த தாஸ்கணுவை ஆசீர்வதிக்குமாறு வேண்டுகிறேன்!

**ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர்**, மகாராஷ்டிர தேசத்தின், கோஹினூர் வைரமாக கருதப்படுபவர், நமது பாரத தேசத்தின் விடுதலைக்காக, அல்லும் பகலும் அயர்வின்றி உழைத்தவர். தைரியமும் வீரமும் பொருந்திய நேர்மையான தலைசிறந்த மனிதர். தம்முடைய வீரம் மிகுந்த



சொற்பொழிவுகளாலும், எழுத்தாலும் பிரிட்டிஷ்காரர்களை நிலை குலையச் செய்தார். மகாபாரதத்தின் பீஷ்மருக்கு இணையான கொள்கையையும், வேதங்களில் நாவுக்கு அரசராக கருதப்படும் ப்ரஹஸ்பதிக்கு இணையான பேச்சுத் திறமையும் கொண்டவர், நம் பாலகங்காதர திலகர். அவர் தம்முடைய சீரிய சேவைக்காக, மக்களிடம் இருந்து லோகமான்ய என்ற பட்டத்தைப் பெற்று எல்லோராலும் அன்புடன் **லோகமான்ய பாலகங்காதர திலகர்** என்று அழைக்கப்படுபவர்.

ஒரு முறை பாலகங்காதர திலகர், பொதுமக்களின் அன்பான வேண்டுகோளை ஏற்று ஸ்ரீ சிவாஜி ஜெயந்தி (பிறந்த நாள்) அன்று ஒரு பொது நிகழ்ச்சியில் பேசுவதற்காக அகோலாவிற்கு அழைக்கப்பட்டார். கல்வியில் சிறந்த, நிறைய பண்டிதர்கள், திலகரின் சொற்பொழிவு நடக்கவிருக்கும் விழாவிற்கான ஏற்பாட்டை, ஆவலோடு செய்து கொண்டு இருந்தனர். அவர்களில் முக்கியமானவர்களாக தாம்லே (Damle), கோலாட்கர் (Kolhatkar), கபர்டே (Kharpade) இவர்களோடு பலரும் வீர சிவாஜி ஜெயந்தியை முன்னிட்டு, அகோலாவிற்கு வந்திருந்தனர். பேரார் (Berar) மக்கள் ஸ்ரீ திலகரின் சொற்பொழிவு தமது பகுதியில் நடக்கவிருப்பதால் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். பேரார் பகுதியின் மற்றொரு மிகப்பெரிய சிறப்பு அம்சம் என்னவென்றால், மராட்டிய வீரர், **சக்கரவர்த்தி வீரசிவாஜி** அவதரித்த இடமாகும். சிவாஜியின் அன்னை ஜீஜாபாய் பிறந்து வளர்ந்த இடமான சிந்த்கெட்(Sindkhed), பேரார் பிரதேசத்தில் அமைந்துள்ளது. ஜிஜாபாய் சிவாஜியை பெற்று எடுத்த நேரத்தில், பேரார் பகுதியும் மகாராஷ்டிரமும் இணைந்து சிவாஜிக்கு சிறப்பளித்தது. சிவாஜியின் தந்தை மகாராஷ்டிரத்தை சேர்ந்தவர், தாயார் ஜீஜாபாய் பேரார் பிரதேசத்தைச் சார்ந்தவர், என்பதால் வீர சிவாஜியின் பிறப்பால் பேராரும் மகாராஷ்டிரமும் கை கோர்த்துக் கொண்டன.

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க விழாவில் பங்கெடுத்து சிறப்புரை ஆற்றுவதற்காக சிறப்பு விருந்தினராக ஸ்ரீ திலகரும் வந்திருப்பது அனைவருக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி அளித்தது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ஒருமாதத்திற்கு முன்னரே தொடங்கப்பட்டு, எல்லோரும் ஒற்றுமையுடன் செயல்பட்டனர். விழா தலைவர், துணை தலைவர், வரவேற்புக குழு, என்று அனைவரும் பொறுப்புகளைப் பிரித்துக் கொண்டு அவரவர் வேலைகளை கண்ணும் கருத்துமாய் செய்தனர். இந்த விழாவை மேலும் சிறப்பிக்க சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை

அழைக்க வேண்டும் என்று பலர் யோசனை கூறினர். ஆனால் சிலர், அவரது நடை, உடை, பாவனை குறித்து கேலி செய்தனர். உடலில் வஸ்திரமே உடுத்தாத இவர் விழாவுக்கு வந்து ஸ்ரீதிலகரையும் அடித்து, உதைத்து விடப் போகிறார். ஏறக்குறைய பைத்தியக்காரனைப் போல இருப்பவரை நம்பி, எங்கனம் விழாவை சிறப்பிக்க அழைப்பு விடுப்பீர்கள்! என்றும் கூறினார்கள்.

ஆனால் சத்குருவை நன்றாக உணர்ந்தவர்கள், அவரை விழாவிற்கு, அழைப்பதால் ஆங்கிலேயரை எதிர்த்து போராடுவதற்கு தேவையான ஆசீர்வாதம், நிச்சயம் லோகமானிய பாலகங்காதர திலகருக்கு கிடைக்கும் என்றும் அத்தகைய ஆசீர்வாதம் இந்தச் சூழ்நிலையில் ஸ்ரீ திலகருக்கு அவசியம் தேவை என்பதையும் உணர்ந்தனர். அதனால் வீண்வாதத்திற்காக கேலி செய்தவர்களை விழாக்குழுவினர் பொருட்படுத்தவில்லை. அது மட்டுமல்லாமல், ஆங்கிலேயரை எதிர்த்து நடக்கவிருக்கும் விழாவில் கலகம் ஏற்படாதவாறு பாதுகாக்க, ஸ்ரீ மகராஜ் அவர்களின் பாதங்கள் அந்த இடத்தில் பதிய வேண்டும். அதனால் அவ்விழா எவ்வித இடையூறுமின்றி நடைபெறும் என்று நிச்சயமாக கூறினார்கள்.

எவ்வாறு மராட்டிய வீரர் சத்ரபதி சிவாஜி, ஸ்ரீ சமர்த்த ராமதாஸின் கருணையாலும், ஆசீர்வாதத்தாலும் அரசாட்சி செய்ததைப் போல நமது திலகரும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆசீர்வாதத்தால் நமது நாட்டு சுதந்திரத்திற்காக போராடும் சக்தியைப் பெறுவார் என்றும் நம்பிக்கை கொண்டனர். ஸ்ரீ சமர்த்த இராமதாஸ் ஸ்வாமிகள், மராட்டிய வீரர் சத்ரபதி சிவாஜியின் மீது அளவு கடந்த அன்பு கொண்டவர். சிவாஜியின் சீரிய பணியால் மகாராஷ்டிர தேசமே புத்துயிர் பெறுவதற்கு, ஸ்ரீ சமர்த்த இராமதாஸ் ஸ்வாமிகளின் அனுக்கிரஹம் பேருதவியாக இருந்தது. நமது சத்குரு, ஸ்ரீ கஜானன் மகராஜ் ஒரு சமயம் ஸ்ரீ சமர்த்த இராமதாஸ் ஸ்வாமிகளின் ரூபத்தில் அவரது அடியவர்க்கு ஆசீர்வாதம் அளித்தார் என்பதை நாம் முன்னரே கண்டோம். எந்த ஒரு செயலையும் துவங்கும் முன்னர் முழு முதற்கடவுளான கணபதி ராஜனின் அருளும், குருவின் ஆசியும் அவசியம் தேவை. இவை இரண்டும் ஒருவருக்கு கிடைத்துவிட்டால் அவர் எடுத்துக் கொண்ட முயற்சியை சத்குரு வெற்றி பெறச்செய்வார். சிலர் லோகமானிய பாலகங்காதர திலகர் உண்மையாகவே சிறந்த தலைவரானால் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், நிச்சயமாக விழாவிற்கு வந்து அவருக்கு தம் ஆசியினை வழங்குவார் என்றனர். பெரும்பான்மை



மக்கள் சத்குருவிற்கு அழைப்பு விடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியதால் அனைவரும் இக்கருத்தை ஏற்றனர்.

விழாக்குழுவினர் ஷேக்காவ் சென்று சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களை விழாவிற்கு வந்து சிறப்பிக்குமாறு பணிவோடு வேண்டிக் கொண்டனர். அவர்கள் அழைத்ததைக் கேட்டவுடன் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் சிரித்துக் கொண்டே, தமக்கு அருகில் இருந்த கபேர்டேயிடம், "நான் ஸ்ரீ சிவாஜியின் பிறந்த நாள் விழாவிற்கு நிச்சயம் வருவேன்! அது மட்டுமல்லாமல் நீங்கள் விரும்பும் முறையில் நடந்து கொள்வேன்! சமூக சீர்திருத்தத்திற்காக உழைத்த எல்லாருடைய வேண்டுகோளையும் நிறைவேற்றுவதற்காக அவ்விழாவினை சிறப்பித்து திரும்புவேன்! அதுமட்டுமல்லாமல், திலக், தகுதியும், திறமையும் பெற்ற ஒரு தேசிய தலைவர் ஆவார். நம் தேசத்தின் விடுதலைக்காக, அவர் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், நான் அவரை அகோலா சென்று சந்திப்பேன். எதிர்காலத்திலும் திலக்கின் சேவையால் இத்தேசம் பெருமை கொள்ளும். நான் திலக்கையும், அங்கு வரவிருக்கும் ஆலந்தியைச் சேர்ந்து ஸ்ரீ நரசிங்க சரஸ்வதியின் சிஷ்யரான, அன்னா பட்டவர்த்தனரையும், சந்திக்க அகோலா நிச்சயமாக வருவேன்" என்றார்.

திரு. கபர்டே மிக்க மகிழ்ச்சியோடு, ஸ்ரீ மகராஜ் அவர்களிடத்தில் தம் அழைப்பை ஏற்றதற்கு நன்றியைத் தெரிவித்தார். கபர்டே தன்னுடன் வந்த கோலாட்கரிடம், "ஸ்ரீ மகராஜ் பேராரின் (Berar) வைரம் போன்றவர் ஆவார்! அவர் திரிகால ஞானியாவார்! ஆகையால் அகோலாவில் என்ன நடக்கவிருக்கிறது, என்பதை அவர் நன்கு அறிவார். சத்குருவின் இந்த ஒப்புதல், நமது விழாவிற்கான மிகச்சிறப்பு அம்சமும், பாதுகாப்பும் ஆகும்" என்றார். அவர்கள் அனைவரும் ஸ்ரீ மகராஜ் அவர்களை வணங்கிவிட்டு அகோலா திரும்பினர்.

சிவாஜியின் பிறந்த நாள் விழாவிற்கு இன்னும் எட்டு நாட்களே இருந்தன. பொதுமக்கள் அனைவரும் லோகமானிய பாலகங்காதர திலக்கின் வருகைக்காக காத்துக் கொண்டு இருந்தனர். அந்த விழா ஒரு வைசாக் (Vawsakh) மாதத்தில் 1830, மிகப்பெரிய மேடை அமைக்கப்பட்டு, பெரிய பந்தலில் மிகச்சிறப்பாக நடந்தேறியது. அன்று மற்றொரு விசேஷம் என்னவெனில் அன்றைய தினம் அக்ஷயத் திருதியை நாள் (Akshya Tritya), நாம் முன்னரே கண்டவாறு, விதர்ப தேசத்தில்

இந்த நாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் நாளாகும். பல்வேறு இடங்களில் இருந்தும், ஸ்ரீ பாலகங்காதர திலகரையும், சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களையும் காண, மக்கள் வெள்ளம் போல திரண்டு அகோலா வந்தனர். ஸ்ரீ மகராஜ் வாக்களித்தபடி மிகச்சரியான நேரத்திற்கு வருகை தந்து ஸ்ரீ திலக் மற்றும் அன்னா பட்டவர்தன், கபர்டே, தாம்லே, கோலாட்கர், பாவே மற்றும் வெங்கடராவ் தேசாய் (Venkatrao Desai) அவர்களோடு மேடையில் அமர்ந்திருந்தார், விழாவும் தொடங்கியது. அங்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்களை வரவேற்ற பின், சிம்மக்குரலோன் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும், லோகமான்ய பாலகங்காதர திலக் எழுந்து உரையாற்றத் தொடங்கினார்.

"இன்று மிகவும் புனிதமான நாளாகும். அதற்குக் காரணம் இந்த தேசத்திற்காக தன் வாழ்நாள் முழுவதும் சேவை செய்த வீர சிவாஜியின் பிறந்த நாள் விழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். குரு ஸ்ரீராமதாஸ் ஸ்வாமி அவர்களின் ஆசியால், வீர சிவாஜியின் புகழ் நாடு முழுவதும் பரவியது. அதுபோல ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆசீர்வாதமும் இன்று இந்த விழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கிறது. வீர சிவாஜியின் வாழ்வும், அவரது இலட்சியமும் எவ்வாறு வெற்றியை எட்டியதோ அதைப்போல, இவ்விழாவும் வெற்றி அடையும் என்று நான் நம்பிக்கையோடு உள்ளேன். இன்று நமது தேசத்தில் இது மாதிரியான கூட்டங்களும், விழாக்களும் அவசியம் தேவைப்படும் ஒன்றாகும். விடுதலை சூரியன் அஸ்தமித்ததால் எங்கும் வறுமையும், அடிமைத்தனமும் மேலோங்கி நிற்கிறது. சுதந்திரமற்ற எந்த தேசமும் உயிரிழந்த ஒன்றாகும். அதனால் இத்தகைய கூட்டங்களும், வழிகாட்டுதல் முறைகளும் நம் மக்களுக்கு சுதந்திரத்தின் மேல் உள்ள காதலை வெளிப்படுத்த வேண்டும். ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இத்தகைய வழிகாட்டுதலை மக்களுக்கு வழங்குவார்களா? என்று நேரிடையாக ஆளும் ஆங்கில அரசை தாக்கியவுடன், நடக்கவிருப்பதை அறிந்த ஸ்ரீ கஜானன் மகராஜ், சிரித்துக் கொண்டே எழுந்து, "வேண்டாம் வேண்டாம் திலகரே! உம்முடைய இப்பேச்சு உம்மை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப் போகிறது என்று சொல்லிவிட்டு வழக்கம்போல தமது ஜபத்தை அதாவது "கண்கண் கணாத்த போதே" என்ற கணபதி மந்திரத்தை சொல்ல ஆரம்பித்தார்."

அவ்விழா எவ்வித தடங்கலின்றி, மிகச் சிறப்பாக



நடந்தேறியது. அனைவரும் லோகமான்ய பாலகங்காதர திலக்கை வெகுவாக பாராட்டினார்கள். ஆனால் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களின் வாக்குப்படி, அதே வருடம், பாலகங்காதர திலகர் ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டார். (Section 124) வழக்கு 124-ன் கீழ் ஆங்கில அரசுக்கு எதிராக பிரச்சாரம் செய்ததால், ஸ்ரீ திலகர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆங்கில அரசின் ஆதிக்கத்தின் முன்னால், பிரபல வழக்கறிஞர்களின் வாதமும் பயனற்றுப் போனது ஒரு சிலர் பாலகங்காதர திலகரைக் காப்பாற்ற சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களிடம் வேண்டுமாறு யோசனை கூறினர்.

ஸ்ரீ தாதாசாஹேப் கபர்டே மிகச்சிறந்த மனிதரும் பிரபல வழக்கறிஞரும் ஆவார். அவர் அமராவதியில் இருந்து, மும்பை வரை சென்று பாலகங்காதர திலகரை வழக்கிலிருந்து விலக்க முயற்சி செய்தார். திரு. கபர்டே, அகோலாவில் தன்னை சந்தித்த கோலோட்கரிடம், ஷேக்காவ் சென்று ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களிடம் ஸ்ரீ திலக்கை காப்பாற்றுமாறு வேண்டுங்கள், என்று கூறினார். கோலோட்கரிடம் நானே நேரில் சென்று, சத்குருவை தரிசித்து உதவி வேண்டுவதாக இருந்தேன்! ஆனால் இந்த வழக்குவிசாரணைக்காக, நான் மும்பை சென்றுவர வேண்டும் ஆகையால் தாங்கள், சென்று சத்குருவிடம் உதவி வேண்டுங்கள் என்று கூறினார்.

கோலோட்கர் ஸ்ரீ திலக்கின் தீவிர ஆதரவாளரும் பக்தரும் ஆவார். அவர் ஸ்ரீ திலகரை விடுவிக்க உடனே ஷேக்காவ் புறப்பட்டார். ஷேக்காவ் வந்தவுடன் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததால் அவர் எழுந்திருக்கும் வரை பொறுமையுடன் அருகில் அமர்ந்து கொண்டு இருந்தார். தொடர்ந்து மூன்ற நாட்கள் சத்குரு தூக்கத்தில் இருந்தார். ஞானிகளும் யோகிகளும் தாம் நினைத்த நேரத்தில் உண்ணவும் உறங்கவும், வாயு வேகத்தில் தொலைதூர பிரயாணமும் செய்யக் கூடிய வல்லமை படைத்தவர்கள். சத்குரு தொடர்ந்து மூன்று நாட்கள் உறக்கத்தில் இருந்தாலும், அவரது புலன்கள் என்றுமே விழிப்பு நிலையில் இருக்கும். அவர் த்ரிகால ஞானியானதால் கோலோட்கர் தம் கோரிக்கையை வேண்டுவதற்கு முன்னரே, விழாமேடையில் தீர்கதரிசனமாக நடக்கப் போவதை உரைத்து விட்டார்.

கோலோட்கர், பாலகங்காதர திலகரை மிகவும் விரும்பினார். அவருடைய அன்பும், மதிப்பும் ஸ்ரீதிலகரிடம் அவர் கொண்டிருந்த

மரியாதை மிகவும் உயர்வானதாகும். சத்குரு உறக்கத்தில் இருந்தாலும், கோலோட்கர் அவரைவிட்டு அகலவில்லை மிகவும் பணிவோடு அவருடன் மூன்று நாட்கள் அங்கேயே தங்கி இருந்தார். நான்காவது நாள் ஸ்ரீ கஜானன் உறக்கத்தில் இருந்து எழுந்தார்.

அவர் கோலோட்கரிடம், ''உன்னுடைய இந்த முயற்சிகள் வெற்றியைத் தரப்போவது இல்லை. ஒன்றை ஞாபகப்படுத்துகிறேன்! ஸ்ரீ சமர்த்த இராமதாஸ் ஸ்வாமிகளின் பரிபூர்ண ஆசிர்வாதம் பெற்றும் கூட வீரசிவாஜியை, முகலாயகர்கள் கைது செய்து சிறையில் அடைத்தனர். நல்லவர்கள் தாங்கும் துயரம் மட்டுமே, நம் எல்லோருடைய விடுதலைக்காக விதைக்கப்படும் முதல் விதையாகும். துன்பங்களும் துயரங்களும் இல்லாமல் விடுதலையின் பயனை எவ்வாறு அனுபவிக்க இயலும்?

கம்சனின் (Khamsa) கதையைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய்! இப்போது நான் சொல்வதை நீ புரிந்துகொள்! நான் ஒரு ரொட்டித்துண்டை தருகிறேன், அதை எடுத்துச் சென்று விரைவாக திலக்கை உண்ணச் செய்வாயாக! எவ்வளவு விரைவில் இச்செயலைச் செய்ய இயலுமோ, அதன் பலன் திலககை சென்று சேரும். இந்த ப்ரஸாதம் திலக் அவர்களின், தேச விடுதலைக்காக மட்டுமல்லாமல், ஆத்ம விடுதலைக்கும் வழிவகுக்கும். வருங்காலத்தில் அவரால் மிகப்பெரிய படைப்புகள் உருவாகும். அவருடைய ஆன்மீகப் படைப்புகள், உலகம் முழுவதும் புகழப்படும்! அவர் நம்மை விட்டு வெகு தொலையில் இருந்தாலும், அது தவிர்க்க இயலாத ஒன்றாகும். ஆகையால் இப்போது நீ புறப்பட்டு விரைந்து செல்வாயாக'' என்றார்.

ஸ்ரீ மகராஜ் அவர்களுடைய இப்பேச்சைக் கேட்ட கோலோட்கர் குழப்பமடைந்தார். அவரை வணங்கிவிட்டு அவர் அளித்த மகாப்ரஸாதமான ரொட்டித் துண்டை எடுத்துக் கொண்டு, மும்பைக்கு விரைந்தார். அங்கு அவர் திலக்கிடம் நடந்த யாவற்றையும் விளக்கி சத்குரு அளித்த மகாப்ரஸாதத்தையும் அளித்தார்.

நடந்த நிகழ்வுகளை எல்லாம் கோலாட்கரின் மூலம் அறிந்து கொண்ட பாலகங்காதர திலகர், ''ஸ்ரீ கஜானன் மகராஜ்'' மிகப் பெரிய ஞானியாவார்! அவர் சொல்வது அனைத்தும் வேதவாக்காகும், ஒரு தனிமனிதனாக இருந்து கொண்டு, சுயநலம் மிக்க அரசாங்கத்தை எதிர்த்து என்ன செய்ய முடியும்? அரசாங்க



ஊழியர் அல்லது அதிகாரி தவறு செய்தால் அரசு உடனடியாக, அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் ஆளும் சுயநலம்மிக்க ஆங்கிலேய அரசாங்கம், தங்களின் அதிகாரிக் செய்யும் தவறை நியாயப்படுத்த முயற்சிக்கும் வேளையில், தனி மனிதனால் அதைத் தடுக்க இயலாது! ஸ்ரீ மகராஜ் என் பெரிய படைப்புகளை உருவாக்குவேன் என்று சொன்னது பற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லை! ஞானிகளுக்கு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாமே தெள்ளத் தெளிவாக தெரியும். நாம் எல்லோரும் சாதாரண மனிதர்கள்! எதிர்காலத்தல் நிகழவிருப்பதை பொறுத்திருந்து காண்போம் என்றார்.

பாலகங்காதர திலகருக்கு பற்கள் முழுவதும் விழுந்து விட்டபடியால் அந்த ரொட்டித்துண்டை, கைகளால் பொடித்து தூளாக்கி வாயில் போட்டுக் கொண்டார். பின்னர் அவரைக் கைது செய்தவர்கள் அவரை மேண்டலி (Mandaly) என்ற இடத்தில் சிறை வைத்தனர். அங்குதான் ஸ்ரீ திலகரை இந்த உலகிற்கு ''ஜகத்குரு'' என்று அடையாளம் காட்டிய, பாகவதத்தின் விளக்கவுரையான ''கீதா'' என்ற பெயரின் காவியம் உருவாக்கப்பட்டது. பகவத் கீதையில் பல்வேறு அம்சங்கள் மிக தெளிவான முறையில், நூதனமான முறையில் அவரால் விளக்கப்பட்டிருந்தது. தேச விடுதலைக்காக மட்டுமல்லாமல், மனித சமூகத்தின், ஆத்ம விடுதலைக்காகவும் மட்டுமல்லாமல் அவருடைய படைப்புகள் பேருதவியாய் இருந்தன. சில விளக்கங்கள் அத்வைதத்தின் அடிப்படையிலும் சில த்வைதத்தின் (Dwait and Advait Philoophy) அடிப்படையிலும் மேலும் சில படைப்புகள் கர்மாவைக் (Karma) குறித்தும் உருவாக்கப்பட்டன. அவருடைய எழுத்துக்கள், நம் தேசம் சுதந்திரம் பெற்றபிறகு புகழப்பட்டதை விட, ஆன்மீகத்தில் அவர் படைப்புகள் அடைந்த வெற்றி, மனித சமுதாயம் உள்ளவரை என்றுமே பேசப்படும் அளவிற்கு சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ், பாலகங்காதர திலக்கை ''ஜகத்குரு'' என்ற பட்டத்திற்கு தகுதியுடையவராக மாற்றினார். நாம் அன்னி தேசத்தவரிடம் இருந்த விடுதலை பெற்றாலும் நம்முடைய பந்தபாசங்களில் அவற்றின் மீதுள்ள நாட்டங்கள்இருந்தும் நாம் விடுதலை பெறுவதற் தயாராக இருக்க வேண்டும் என்ற கொள்கையையும், தனிமனித ஒழுக்கத்தையும் பகவத் கீதையில் சொல்லப்பட்டதை, மிகத் தெளிவாக அவருடைய படைப்புகளில் விவரிக்கப்பட்டிருந்தது.

அவருடைய இவ்வுரையின் மூலம் எக்காரணத்தைக் கொண்டும், சுதந்திரத்தின் அர்த்தம் தனிமனித ஒழுக்கத்தை மீறுவது

என்பது மிகத்தவறான கருத்தாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வான படைப்புகளினானல், லோகமான்ய பாலகங்காதர திலகரின் புகழ் வானில் சந்திரனும், சூரியனும் உலவும் வரை மனித சமுதாயத்தில் நீடித்து இருக்கும். இப்புகழை அவருக்கு தேடித்தந்தவர் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் என்பதை நாம் நினைவுகூற வேண்டும். இத்தகைய மகா வேதார சத்குருவை, ஞானியை, யோகீஸ்வரரைப்பற்றி நாம் படிப்பதற்கும், கேட்பதற்கும் நாம் நிறைய புண்ணியம் செய்தவர்களாக இருக்க வேண்டும்.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் நம் தேசத்தின் மீது மிகுந்த பற்று கொண்டவர். அவர் ஒரு முழுமையான சந்யாசியாதலால், அரசியல் விவகாரங்களில் தேவையில்லாமல் அவர் தலைவிடுவதில்லை. த...மைநாடி வருபவர்க்கும், தன்னையே, நினைத்துக் கொண்டிருப்பவர்க்கும் வரும் இடரில் இருந்து அவர்களை காப்பாற்றுபவரும், அவர் எத்தகைய தொலைவில் இருந்தாலும் தம் அபயக்கரங்களை நீட்டி பக்தர்களை காத்தருளும் தெய்வமாக நம் சத்குரு, எண்ணற்ற அற்புதங்களை இன்னமும் செய்து கொண்டே இருக்கிறார்.

ஒரு சமயம், ஸ்ரீதர் கோவிந்த பாலே (Sridher Govinda Kale) என்ற பெயருடைய ஒரு ஏழை மாணவன், அந்தண குடும்பத்தை சேர்ந்தவன். கோலாபூரில், கரவீர் என்ற இடத்தில், ஆங்கில பள்ளியில் சேர்ந்து மெட்ரிக் வகுப்பில் முதலாவதாக தேர்ச்சி பெற்று கல்லூரியில் சேர்ந்தவுடன் இண்ட்டர் (Inter) என்று அக்காலத்தில் சொல்லப்பட்ட வகுப்பில் தோல்வி அடைந்துவிட்டான். மகாராஷ்டிர பிரதேசத்தில் அப்போதைய மிக பிரபலமான நாளிதழ் (செய்தித்) ''கேசரி'' (Keseri) ஓயாமா, டோகோ (Oyama, Togo) அவர்கள் இருவரின் கதை பற்றி பிரசுரிக்கப்பட்டதை கண்டான். அவர்களுடைய சரிதையால் மிகவும் கவரப்பட்டு வெளிநாடுகளுக்குச் சென்ற, தொழில்நுட்ப கல்வி பயின்று அவர்களைப் போன்று தம் தாய் நாட்டிற்கு பெருமை சேர்க்க நினைத்தான். ஓயாமா, டோகோ என்பவர்கள், தங்களுடைய திறமையால், தங்கள் தேசமான (Japan) ஜப்பான் நாட்டிற்கு பெருமை தேடித் தந்ததைப்பற்றி வந்த அந்த கட்டுரை, அவனை மிகவும் கவர்ந்தது. ஆனால், அவன் வறுமை காரணமாக, எதுவும் செய்ய இயலாத நிலையில் இருந்தான். மனிதர்கள் பெரும்பாலும் வசதி வாய்ப்புகள் நிறைந்த செல்வந்தர்களுக்கு மட்டுமே உதவ தயாராக இருப்பார்கள். ஏழைகளுக்கு உதவி செய்ய ஒருவரும் முன்வர மாட்டார்கள்



என்பது உலக நியதி, ஸ்ரீதரன், பாந்த்ரா (Bhandra) சென்று, முன்றோ (Monro) பள்ளியில், ஆசிரியராக வேலை பார்த்துக் கொண்டு இருந்த, தம் நண்பனிடம் இது பற்றி கலந்து ஆலோசித்தான். அவனுடைய நண்பனும் ஸ்ரீதரனின் இந்த உயர்வான எண்ணத்திற்காக பாராட்டினான். ஆனால் நிதி உதவியின்றி, இவ்வுலகத்தில் ஏழை மக்கள், காற்றில் மட்டுமே கோட்டை கட்ட இயலும்!

விதர்ப தேசத்தில், ஒரு கோடைகாலத்தில், ஸ்ரீதரனும் அவன் நண்பனும் கோலாபூருக்கு செல்ல தீர்மானித்தனர். செல்லும் வழியில் அவர்கள் ஸ்ரீ கஜானன் மகராஜ் என்ற மிகப் பெரிய ஞானியைப் பற்றியும், அவரின் அற்புதங்கள் பற்றியும் எல்லோரும் சொல்லக் கேட்டதும், ஷேக்காவ் கிராமத்தில் இறங்கி, சத்குருவை தரிசித்துவிட்டு கோலாபூருக்கு செல்ல தீர்மானித்தனர். ஷேக்காவ் கிராமத்திற்கு, அவர்கள் வந்தவுடன் தங்களுடைய பெட்டிகளை, அங்குள்ள, தபால் அலுவலகத்தில் வைத்துவிட்டு, சத்குருவை தரிசிக்க வந்தனர். அவர் முன் நமஸ்கரித்து வணங்கி, கைகள் கூப்பியவண்ணம் அவரின் அருகில் அமரந்து கொண்டனர். ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு, ஸ்ரீதரனின் தீர்மானம் என்னவென்பது தெளிவாகத் தெரியும்.

சத்குரு ஸ்ரீதரனை நோக்கி, ''நீ வெளிநாடு செல்ல வேண்டுமென்ற எண்ணத்தை கைவிடு. உனக்கு வேண்டிய அனைத்தும் இங்கே கொட்டிக் கிடக்கின்றது. உடல் சார்ந்த விஞ்ஞானத்தை கைவிட்டு, உள்ளம் சார்ந்த மெய் ஞானத்தை தேடுவாயாக, அது உன் ஆத்மாவிற்கு அமைதியை அளிக்கும்'' என்று கூறியவுடன், ஸ்ரீதரன் உடனடியாக தனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டதை உணர்ந்தான். இதே போன்று ஒரு முறை கோலாபூரில் ஒரு ஞானியும் தம்மிடத்தில் கூறியதை நினைவு கூர்ந்தான்.

ஸ்ரீ மகராஜ் அவனிடம், ''நீ இந்துஸ்தான் (இந்தியா) விட்டு வெளியே செல்வதைப் பற்றி யோசிக்காதே! இங்கு ஜனனம் (Birth) எடுத்தவர்கள், மிகுந்த புண்ணியம் செய்தவர்கள் ஆவார்கள்! யோகசாஸ்திரம், எல்லா விஞ்ஞானத்தையும் விட தலைசிறந்ததாகும். யோகசாஸ்திரத்தை முறையாகக்கற்று பயிற்சி பெற்றவன் எந்த சாஸ்திரத்தையும், விஞ்ஞானத்தையும் பற்றி கவலை கொள்ள மாட்டான். யோகசாஸ்திரத்தை விட உயர்வானது தன்னை அறிதல் என்ற அறிவாகும் (Adyatma). யோக சாஸ்திரத்தை முறையாக கற்று வருவாய்! வேறு எங்கேயும் நீ செல்ல 'வேண்டிய தேவையோ, அவசியமோ உனக்கு இல்லை'' என்றார்.

அடுத்ததாக என்ன செய்யலாம், என்று குழப்பமடைந்த ஸ்ரீதரன் சத்குருவின் தெளிவான தீர்க்கமான இந்த வார்த்தைகளை கேட்டதும், மனம் மகிழ்ந்து அன்று சூரியன் கிழக்கில் உதயமானதும், மேற்கில் அஸ்தமனமானதும் தம்மை மகிழ்விப்பதற்காகவே என்று உணர்ந்தான். உண்மையான ஞானியால் மட்டுமே இத்தகைய பரிமாற்றத்தை (Transform) ஒருவரின் மனதில் ஏற்படுத்த முடியும். ஏனெனில் உண்மை நிலையை நன்றாக உணர்ந்தவர்கள் மட்டுமே ஞானியர் ஆவார்கள்.

ஸ்ரீ மகராஜ் ஸ்ரீதரனிடம், ''நீ இங்கு மட்டும் நிச்சயமாக செழிப்பாக இருப்பாய், இப்போது உன் நண்பனுடன் கோலாபூர் செல்வாயாக, அங்கு உன் மனைவி, உனக்காக காத்துக் கொண்டு இருக்கிறாள்'' என்றார்.

சத்குருவின் இந்தவாக்கு, தம் வாழ்வில் உண்மையான சம்பவமாக விரைவில் மாறியதை ஸ்ரீதரன் தெளிவாக உணர்ந்தான். அதன் விளைவாக, பி.ஏ. இளங்கலை பட்டமும், அதைத் தொடர்ந்து முதுகலை பட்டமும் (M.A.) முதலாவதாக தேர்ச்சி பெற்று, சிந்து அரசர்களால் ஆளப்பட்ட சிவபுரியில் கல்லூரியின் முதல்வராக வேலைக்கு அமர்த்தப்பட்டான். ஞானிகள் கடவுளின் அவதாரங்கள், அவர்களின் ஆசீர்வாதம் பெற்றவர்கள், வெற்றி பெறுவது உறுதியாகும். தான் அத்தகைய ஒரு பெரிய பதவியில் அமர்ந்ததை ஸ்ரீதரன், சத்குருவின் ஆசீர்வாதம் மட்டுமே காரணம் என்பதை உணர்ந்து கொண்டான். நம்முடைய தேசத்தில் மட்டுமே ஞானிகள் என்ற பயிர், செழித்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஸ்வர்கமாகிய மரங்கள் வேறு எங்கேயும் தம் வேர்களை பரவவிடுவதில்லை. இந்த புண்ணிய தேசத்தில் மட்டுமே சாதுக்களும், ஞானிகளுமாகிய வேர்கள் விட்டு, பெரிய கிளைகளுடன் கூடிய மரங்களாக, இத்தேசத்தின் அனைத்து பகுதிகளிலும் ஆக்கிரமித்து, மக்களை சன்மார்க்க நெறியில் நடத்திச் சென்று கொண்டிருக்கின்றன. அத்தகைய வாய்ப்பினை நமக்க ப்ரஸாதமாக அளித்து, நம் தேசத்திற்கும், சத்குரு ஸ்ரீ கஜானன் அவர்களுக்கும், மற்றும் அவரைப் போன்ற பல்வேறு ஞானியர்களுக்கும் நம் பணிவான நமஸ்காரங்களை சமர்ப்பித்து மகிழ்ச்சியோடு அடுத்த அத்தியாயத்தில் நம் சத்குருவின், லீலைகளைக் காண்போமா?

**- ஜெய் கஜானன் -**



# அத்தியாயம் - 16

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! ஓ பரசுராமரே! (மகாவிஷ்ணுவின் ஆறாவது அவதாரம்) ஜமதக்கினியின் மைந்தரே (Jamadagni) (ஜமதக்கினி புகழ்பெற்ற வேதகால ரிஷியாவார்) உன்னை போற்றி வணங்குகிறேன்! தயை கூர்ந்து என்னை கருணையோடு காத்தருள்வாயாக! உன் அந்தண குடும்பத்தினரை பழியில் இருந்து காப்பாற்றினாய்! எப்போதும் நி உறங்காமல் எங்களை காத்து இரட்சித்துக் கொண்டு இருக்கிறாய் என்பது எமக்குத் தெரியும். இப்போதைய சூழ்நிலையில் உன்னுடைய உதவியின்றி செய்யப்படும் எல்லா செயல்களும் பயனில்லாமல் போய்விடுகின்றன. ஆரிய சம்ப்ரதாயத்தை உன்னைத் தவிர யாராலும் காப்பாற்ற முடியாது..

ஸ்ரீ கஜானன் மகராஜ் அவரது செய்கைகளை யாராலும் புரிந்து கொள்ள இயலாது. அவர் இவ்வாறு செய்வார் என்று யாராலும் கூறவும் இயலாது. புண்டலீகன் என்ற பெயருடைய ஸ்ரீ மகராஜ் அவர்களின் தீவிர பக்தன், முந்தகாவ் (Mundgoan) கிராமத்தில் இருந்து ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நாளில் ஷேக்காவ் வந்து மகராஜ் அவர்களின் ஆசீர்வாதம் பெற்று செல்வது வழக்கம். புண்டலீகனைப் பொறுத்தவரை ஸ்ரீ கஜானன் மகராஜ் ஒருவரையே இஷ்டதெய்வமாக வழிபட்டான். அதே கிராமத்தில் பாகாபாய் (Bhagabai) என்ற அகம்பாவம் கொண்டவள் இருந்தாள். அவள் ஒரு நிலையான கொள்கையில் மனதை செலுத்த இயலாத நிலையில் எந்த விஷயத்திலும் ஆர்வமற்றவளாகவும் இருந்தாள். அதுமட்டுமல்லாமல் தன்னுடைய இந்த தவறை உணராதவளாய், அனைவரையும் தம் பக்கம் தவறாக திசை திருப்பும் பணியிலும் ஈடுபட்டாள். நேர்வழியில் செல்பவர்களையும் மனம் குழம்பவைத்து தவறான திசையில் திருப்பி விடுவதையயே தம் தொழிலாகக் கொண்டு இருந்தாள். புண்டலீகன் சத்குருவை தரிசிக்க வருவதை தடுத்து அவன் மனதையும் விஷமாக மாற்ற எண்ணம் கொண்டாள்.

ஒருநாள் அவள் புண்டலீகனிடம், ''நீ உன்னுடைய வாழ்க்கையை வீணாகக் கழித்துக் கொண்டு இருக்கிறாய். உனக்கு இதுவரை உண்மையான குரு என்று எவருமே இல்லை, நீ

ஷேக்காவ் கிராமத்திற்கு சென்று ஸ்ரீ கஜானன் மகராஜை உன் குருவாக ஏற்று தரிசனம் செய்து கொண்டு வருகிறாய்! ஆனால் அவர் உனக்கு இதுவரை ஏதாவது ஒரு மந்திரத்தை சொல்லி குரு உபதேசமாக செய்திருக்கிறாரா? குரு உபதேசம் என்பது ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை இடைவிடாமல் ஜபிக்க வேண்டி, தன் சீடன் காதில் குரு ரஹஸ்யமாக சொல்லப்படும் மந்திரம் ஆகும். அவள் மேலும், ஒன்றை நினைவில் கொள் புண்டலீகா! முறையான சம்ப்ரதாயத்தையும், வழிமுறைகளையும் பின்பற்றாத ஒருவரை நிச்சயமாக உண்மையான குருவாக ஏற்றுக் கொள்ள முடியாது.

நீ உன்னுடைய காய்ச்சலில் இருந்து விடுதலை ஆனதால், இந்த பைத்தியக்கார மனிதரை குருவாக ஏற்றுக் கொண்டுள்ளாய்! அத தானாக நிகழ்ந்த சம்பவமாகும். அவர் அடிக்கடி கூறம் ''கணகண'' என்ற மந்திரமும், அனைவரின் கைகளிலும் உணவை பிரசாதமாக உண்ணும் தன்மையும் வைத்து பார்க்கும் போது, ஒரு சராசரி நிலைக்கும் தாழ்ந்த மனிதர் என்பதைக் காட்டுகின்றன. அவரை நீ குருவாக ஏற்றுக் கொண்டுள்ளாய், நான் சொல்வதைக் கவனமாகக் கேள்! நாளை நீ என்னுடன் புறப்பட்டு ஆங்கன்காவ் (Angongaon) கிராமத்திற்கு சென்று, அங்கு ஸ்ரீ கேகாஜியின் (Kekaji) சீடரை நம் குருவாக ஏற்றுக் கொள்வோம். குருவாகப்பட்டவர் நன்கு கற்றுத் தெளிந்தவராகவும், ஞானமுள்ளவராகவும், சகல சாஸ்திர கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராகவும் மற்றும் எல்லாவித உயர்வான குணங்களையும் கொண்டு உன்னை வழிநடத்தி தன்நிலை அறியச் செய்தல் (Self realisation) மூலம் முக்தி அளிக்க வல்லவராக இருக்க வேண்டும். ஆனால் நான் கூறிய இத்தகைய உயர்வான குணங்கள் ஒன்றுகூட உன்னுடைய கஜானன் மகராஜ் அவர்களிடம் வெளிப்படவில்லை. ஆகையால் நாளைபொழுது விடிந்தவுடன் நாம் ஆங்கன்காவ் சென்று கீர்த்தனைகள் கேட்போம். தயாராக இரு! என்று புண்டலீகனை குழப்பமடையச் செய்துவிட்டு சென்றுவிட்டாள்.

புண்டலீகன் மிகவும் குழப்பமடைந்தான். அவன் தன்னுடைய சத்குரு, தெய்வம் அனைவரையும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ரூபத்தில் கண்டு கொண்டிருக்கிறான். தற்போது பாகாபாய் இவ்வாறு கூறியதால் தான் என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் பாகாபாயிடம் தான் நாளை ஆங்கன்காவ் வருவதாகச் சொல்லிவிட்டான். அன்று இரவு அவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்த வேளையில், அவன் கனவில், ஸ்ரீ



கஜானன் மகராஜ் அவர்களைப் போன்ற ஒருவரின் உருவம் அவன் முன்னால் வந்து நின்றது.

சத்குரு அவனிடம் புண்டலீகா, ''நீ நாளை பாகாபாயி கூறியவாறு, ஆங்கன்காவ் செல்வதாக நினைத்துக் கொண்டுள்ளாய்! வேறு குருவைத் தேடி நீ போவதாக இருந்தால் தாராளமாகச் செல்லலாம். நீ தேடிப்போகும் குருவின் பெயர் காசிநாத் என்பதாகும். அவரைத் தேடி போகும் வேளையில் நீ முழுமையாக மனம் உடைந்து போவது உறுதியாகும். குருவாகப்பட்டவர் வெறும் மந்திரங்களை காதுகளில் கூறுவதனால் மட்டுமே, அந்த அந்தஸ்தை பெற்றுவிடுவாரா! அப்படியானால் நிறைய பேர்கள் அடுத்தவர் காதுகளில் பேசும் ரஹஸ்ய பேச்சுக்கள் குரு உபதேசம் ஆகிவிடுமா! புண்டலீகா இத்தகைய அர்த்தமற்ற வார்த்தைகளை நம்பி யாரிடமும் செல்லாதே! என்னைக் கூர்ந்து கவனிப்பாயாக! நான் உயர்வான ஒரு மந்திரத்தை உன் காதுகளில் ஓதுகிறேன் என்று சொல்லிவிட்டு, புண்டலீகன் காதுகளின் மிக அருகில் வந்து, ''கண்கண் கணாத்த போதே போலே'' என்ற மந்திரத்தை மிக ரஹஸ்யமாக ஓதினார். அவர் மேலும் புண்டலீகனிடம் அவனுக்கு என்ன வேண்டுமோ அதை அவரிடம் வேண்டிப் பெற்றுக் கொள்ள சொன்னார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட புண்டலீகன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் கூர்ந்து கவனித்து யோசிக்கும் வேளையில், தன் கனவில் வந்தவர் வேறு யாரும் அல்ல, நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களே என்று உணர்ந்து கொண்டபின் அவரிடம் தாம் என்றென்றும் பூஜை செய்வதற்கு அவருடைய பாதுகைகளை கேட்டான். அதைத் தவிர அவன் தனக்கென்று வேறு எதுவும் கேட்கவில்லை. சத்குருவின் பாதுகைகள் நம்மோடு இருக்கும் போது அதைவிட சலக ஐஸ்வர்யங்களும் தரும் பொருள் வேறு எதுவாகவும் இருக்க இயலாது என்பதை நன்கு உணர்ந்ததால், தமக்கு குருவின் திருப்பாதுகைகள் வேண்டும் என்று கேட்டான். இந்த அனைத்து சம்பவங்களும் அவன் கனவில நடந்தேறியது. நம் சத்குரு தம் பாதுகைகளை அளித்து இந்தப் பாதுகைகளை எடுத்துக்கொண்டு நாளை மத்தியான நேரத்திலிருந்து பூஜை செய்வாயாக! என்று கனவில் அவன் கேள்விக்கான பதிலையும் அளித்துவிட்டார்.

மறுநாள் விடியற் காலையில் புண்டலீகன் எழுந்து தன்னைச் சுற்றிலும் குருவின் பாதுகைகள் தென்படுகிறதா என்று எல்லா இடங்களிலும் நோக்கினான். ஆனால் அங்கு பாதுகைகள் எதுவும்

அவன் கண்களுக்கு புலப்படவில்லை. அவன் மிகவும் குழம்பினான். அவன் மீண்டும் மகராஜ் கூறியதை நினைவு கூர்ந்தான். மறுநாள் மத்யான நேரத்திலிருந்து பாதுகா பூஜை செய்யத் தொடங்குவாயாக என்று குரு நமக்கு கட்டளை இட்டிருக்கிறார். ஆனால் என்னிடம் அவர் பாதுகைகள் ஒன்றுமே இல்லையே! புதிதாக பாதுகைகளை தயார் செய்து வழி படலாம் என்றால் ஸ்ரீ மகராஜ் தாமே பாதுகைகளை தருவதாக கூறியிருக்கும் போது தாம் ஏன் புதிய பாதுகைகளை தயார் செய்ய வேண்டும் என்று எண்ணி அந்த எண்ணத்தை கைவிட்டான். அவன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, அவன் வீட்டின் வெளியில் பாகாபாயி வந்து ஆங்கன்காவ் செல்வதற்கு தம்மோடு வருமாறு அழைத்தாள்.

புண்டலீகன் திட்டவட்டமாக பாகாபாயிடம், தாம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களைத் தவிர வேறு எவரையும் குருவாக ஏற்றுக் கொள்ள இயலாது என்று கூறி அவளோடு செல்ல மறுத்து விட்டான். அதனால் பாகாபாயி தனியாக ஆங்கன்காவ் சென்றுவிட்டாள்.

இப்போது நாம் ஷேக்காவ் கிராமத்தில் என்ன நடக்க இருக்கிறது என்பதைக் காண்போம்! புண்டலீகன் கனவில் இச்சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் சியாம்சிங் (Zyan Singh Rajput), ஷேக்காவ் சென்று ஸ்ரீ மகராஜ் அவர்களின் தரிசனத்தைப் பெற்றார். அவர் சத்குருவிடம் விடை பெற்றுக் கொண்டு, தம் கிராமமான முந்த்காவ் (Mundgoan) செல்வதற்கு தயாராக இருக்கும் வேளையில், என்ன அற்புதம்! சத்குரு பாலபுவாவை அழைத்து, சியாம்சிங் என்பவர் முந்த்காவ் செல்வதால், அவரிடம் தம் பாதுகைகளை கொடுத்து, அதை புண்டலீகனிடம் சேர்த்து விடுமாறு கூறினார். பாலபுவாவும் அவ்வாறே சத்குருவின் பாதுகைகளை சியாம்சிங்கிடம் அளிதத்தார். சியாம்சிங் அந்தப் பாதுகைகளை எடுத்துக் கொண்டு முந்த்காவ் புறப்பட்டார்.

முந்த்காவ் கிராமத்தின் எல்லையில் புண்டலீகன் அவரைச் சந்தித்தான். அவன் சியாம் சிங்கிடம் சத்குருவை தரிசித்து வந்ததைக் குறித்தும் விசாரித்த பொழுது, சத்குரு தமக்காக ப்ரஸாதம் ஏதாவது அனுப்பியிருக்கிறாரா என்று கேட்டவுடன் சியாம் சிங் மிகுந்த ஆச்சரியம் அடைந்தார். அவர் புண்டலீகனை தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவன் என்ன காரணத்தால் இவ்வாறு கேட்டான் என்று விவரமாகக் கூறச் சொன்னார்.



புண்டலீகனும் நடந்த எல்லாவற்றையும் விவரித்தான். சத்குரு தம்மை இன்று மத்யான நேரம் முதல் பாதுகா பூஜை செய்யச் சொன்னதாகக் கூறியதும், சியாம்சிங் மிக்க மகிழ்ச்சியோடு சத்குரு அளித்த பாதுகைகளை அளித்தார். என்ன அற்புதம்! புண்டலீகன் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அந்த பாதுகைகளை தம் தலையில் வைத்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினான். அந்தப் பாதுகைகள் இன்றளவும் முந்த்காவ் கிராமத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. சத்குருவின் வாக்கு தெய்வவாக்காகும். புண்டலீகன் ஆத்மார்த்த பக்திக்கு கிடைத்த பரிசே சத்குருவின் திருப்பாதுகைகள் என்று உணர்ந்து அன்று மத்யான நேரம் முதல் பாதுகா பூஜையை தொடங்கினான்.

சாதுக்களும், ஞானிகளும் ஒரு போதும் தம் பக்தர்களை தவறான வழியில் திசை திரும்புவதற்கு அனுமதிக்க மாட்டார்கள். ஒரு வேளை தவறான வழியில் செல்வதற்கு முயற்சித்தாலும் அதைத் தடுத்து நிறுத்தி சரியான பாதையை காண்பிக்கும் தர்மத்தை சத்குருவால் மட்டுமே சாதிக்க இயலும்.

நாம் தற்போது ஸ்ரீ மகராஜ் எவ்வாறு தன் பக்தர்களின் கோரிக்கையை ஏற்று அவற்றை பூர்த்தி செய்கிறார் என்பதை மற்றொரு நிகழ்வின் மூலம் காண்போம்.

அகோலாவில் ராஜாராம் கேவர் (Rajaram Kaver) என்ற அந்தணர் ஒருவர், தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களை வியாபாரம் செய்யும் தொழிலைச் செய்து கொண்டு இருந்தார். அவர் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களிடம் மிகுந்த பக்தியும், நம்பிக்கையும் கொண்டவர். அவரைப் போன்ற அவரது புத்திரர்களும் சத்குருவின் மேல் மிகுந்த மரியாதையும், நம்பிக்கையும் வைத்திருந்தனர். ராஜாராமிற்கு இரண்டு மகன்கள் இருந்தனர். கோபால் திரியம்பக் இளையவன். அவன் மருத்துவக் கல்லூரி மாணவன். பாகு (Bhav) என்று செல்லப் பெயரால் அழைக்கப்பட்ட த்ரயம்பக் ஹைத்ராபாத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த படித்துக் கொண்டு இருந்தான். த்ரயம்பக் சிறு வயது முதல் தம் தந்தையைப் போன்றே சத்குருவிடம் மிகவும் பக்தியோடும் அன்போடும் இருந்து வந்தான். அவனுக்கு ஏதேனும் தடங்கல் ஏற்படும்போதெல்லாம் சத்குருவை மனதில் தியானித்தான்.

ஒரு சமயம் கல்லூரி விடுமுறை நாளில் அவன் அகோலாவிற்கு வந்தான். பாகு என்று அழைக்கப்பட்ட த்ரயம்பக்,

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு அவர் விரும்பிய ரொட்டித்துண்டுகள், வெங்காயம், அம்பாடி கறி (கோங்குரா என்ற இலையால் சமைக்கப்படும் உணவு, அம்பாடி கறி) மற்றும் மிளகாய் கலந்த உணவை, அவருக்கு தாம் அளிக்க வேண்டும் என்று மிகவும் ஆவலோடு இருந்தான். ஆனால் அவனுக்கு யார் இவற்றையெல்லாம் செய்து தருவார்கள்? அவனுடைய அன்னை சிறுவயதிலேயே காலமாகிவிட்டார். அவனுடைய சகோதரனின் மனைவியான நேனி (Neni) என்பவளிடம் இந்த உதவியைக் கேட்பதற்கு பயந்தான்.

பாகு, ஸ்ரீ மகராஜ் அவர்களை பிரார்த்தித்தான், ''ஓ மகராஜ்! தாங்கள் மிகவும் விரும்பிய உணவினை தங்களுக்கு என் கைகளால் தருவதற்கு ஆசைப்படுகிறேன். ஆனால் எனது சகோதரன் மனைவி இவற்றை எவ்வாறு தயார் செய்து தருவாள்? இவ்வுலகில் தாய் ஒருத்தியால் மட்டுமே தன் மகனின் தேவையை பூர்த்தி செய்ய இயலும்'' என்று வருந்தியபடி தனது அறையில் அமர்ந்து இருந்தான். அச்சமயம் அவனது சகோதரனின் மனைவி நேனி அங்கு வந்தாள். அவன் இவ்வாறு வருத்தத்துடன் அமர்ந்து இருப்பதன் காரணம் கேட்டாள்! பாகு அவரிடம் சொல்வதற்கு தயங்கினான். உடனே அவள் தன் சகோதரனின் மனைவியை, தாயாக நினைத்து தன் மனதில் உள்ளவற்றை தம்மோடு பகிர்ந்து கொள்ளச் சொன்னாள். பாகுவும், தாம் சத்குருவிற்கு அவர் விரும்பிய உணவினை அளிக்க விரும்பியதாகவும் அதைத் தயார் செய்வதற்கு தமக்கு உதவி தேவைப்படுவதாகவும் கூறியவுடன் நேனி சிரித்துக் கொண்டே பாகுவிடம் அவர் வேண்டிய உணவினை சமைத்து தருவதாக கூறினாள். அவள் உடனே சமையலறைக்கு சென்று உணவை தயார் செய்து கொண்டு வந்து பாகுவிடம் விரைவாக இரயில் நிலையம் சென்று 12 மணிக்கு செல்லவிருக்கும் இரயிலில் ஷேக்காவ் சென்று சத்குருவிற்கு உணவளிக்குமாறு கூறினாள்.

பாகுவும் மிகுந்த மகிழ்ச்சியோடு அதைப் பெற்றுக் கொண்டு இரயில் நிலையம் சென்றான். ஆனால் அங்கு நடந்தது வேறு. 12 மணிக்கு புறப்பட வேண்டிய இரயில் புறப்பட்டு சென்று விட்டிருந்தது. அவன் சிறிது தாமதமாக வந்ததால் அவனால் அந்த இரயிலை பிடிக்க இயலவில்லை. மிகவும் வருந்தினான். அவன் கண்களில் கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது. அவன் இரயில் நிலையம் விட்டு அசையவில்லை. அங்கேயே அமர்ந்து விட்டான். அவன் ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் கைகள் தொழுது, ''ஓ மகராஜ்! இதென்ன சோதனை! இந்த உணவு நான் இன்று



தங்களுக்கு மதிய உணவாக சமர்ப்பிக்க வேண்டிய உணவாகும். ஆனால் நான் வண்டியை தவறவிட்டு விட்டேன். இன்று இந்த உணவை, மதிய உணவாக தாங்கள் ஏற்காவிட்டால், நான் எதுவுமே உண்ணப் போவதில்லை. ஓ குருதேவா! இந்த பக்தனை புறக்கணித்து விடாதீர்கள், உங்களைக்கண்டு இந்த உணவை அளிப்பதற்கு ஓடி வந்து கொண்டு இருக்கிறேன்! நீங்கள் அளவில்லாத ஆற்றலுடையவர். நீங்கள் கோதாரீஸ்வரர் ஆலயத்திற்கு மனதால் நினைத்தவுடன் செல்லக் கூடியவர். பின்னர் ஏன் இங்கு வந்து இந்த உணவை தாங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது. நான் தங்களுக்கு கட்டளை இடவில்லை. நான் ஆத்மார்த்த அன்போடு தங்களை அழைக்கிறேன். அடுத்த இரயில் வண்டி வருவதற்கு இன்னும் 3 மணி நேரம் அவகாசம் இருக்கிறது. அதற்குள் தாங்கள் மதிய உணவை முடித்து விடுவீர்கள். நான் என்ன செய்வேன்?'' என்று புலம்பி அழுதான். அவன் உணவு எதுவும் உட்கொள்ளாமல் அடுத்த 3 மணி வண்டியில் ஏறி ஷேக்காவ் சென்று மகராஜ் இருக்கும் இடத்தை அடைந்தான்.

அங்கு அவன் கண்ட காட்சி அவனுடைய கண்களில் மட்டுமல்ல, இதைப் படிக்கும் பக்தர்கள் அனைவரின் கண்களிலும் கண்ணீர் வரவழைப்பதான தானது. ஸ்ரீ கஜானன் மகராஜ் தன் முன்னால் ஏற்றுக் கொள்ளும்படி, பக்தர்களால் வைக்கப்பட்ட ஏராளமான தட்டுகளின் சுவை மிகுந்த உணவு வகைகள் எதையும் தொடாமல் பட்டினியோடு, பாகு வரும்வரை அமர்ந்து கொண்டு இருந்தார். தன் பக்தன் உணவு உண்ணாத பொழுது தானும் உண்ணாமல், அன்று தமக்காக சமர்பிக்கப்பட்ட அனைத்து உணவையும் (ஜிலேபி, மோதிகீர், கேவர், கீர் என்று அழைக்கப்படும் பாயஸம், ஸ்ரீகந்த் என்று அழைக்கப்படும் உணவு மற்றும் பூரி கறி வகைகள்) நிராகரித்துவிட்டு பாகு என்றழைக்கப்பட்ட த்ரயம்பக், தமக்காக கொண்டு வந்திருக்கும் ரொட்டித் துண்டுகளும், பச்சை வெங்காயத் துண்டுகளும், இவற்றை பச்சை மிளகாயோடு சேர்த்து உண்ணக்கூடிய அந்த எளிமையான உணவிற்காக சாயங்காலம் வரை சத்குரு காத்துக் கொண்டு இருந்தார். அவருடைய அன்பு எத்தகையது என்பது இந்நிகழ்வின் மூலம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

பாலபுவா சத்குருவிடம், பக்தர்கள் தமக்காக காத்துக் கொண்டிருப்பதாகவும் தாம் உண்டுவிட்டு அந்த ப்ரஸாதத்தை பக்தர்களுக்கு விநியோகிக்க அனுமதி அளியுங்கள் என்றும்

மன்றாடிக் கேட்டுக் கொண்டு இருந்தார். சத்குருவோ அவை எதையும் இலட்சியம் செய்யவில்லை. அவர் பாலபுவாவிடம் இந்த உணவு வகைகளை சாயங்காலப்பொழுதில் மட்டுமே தான் உண்ணப் போவதாகவும், பக்தர்களுக்கு அதுவரை காத்துக் கொண்டு இருப்பதற்கு பொறுமை இருந்தால் இருக்கச் சொல்லவும் அவ்வாறு இல்லையெனில் அவர்களை இவ்விடம் விட்டு நீங்கிச் செல்வதற்கும் உத்தரவிட்டார்.

பாகு தாம் கொண்டு வந்த உணவுப்பையுடன் சத்குருவின் முன்னால் வந்து நின்றவுடன் எவ்வாறு மனம் நிறைய சந்தோஷத்துடன் ஒரு குழந்தை தன் தாயை தொலைத்துவிட்டு தேடி மீண்டும் கண்டுகொண்டது போல உணர்வுடன் அவருடைய கட்டளைக்காக கைகள் தொழுது காத்துக் கொண்டு இருந்தான்.

பாகுவைக் கண்டவுடன் அவன் எதுவும் பேசாமல் நின்றதைப் பார்த்து சத்குரு சிரித்துக் கொண்டு, ''பாகு இது எந்தவிதமான அழைப்பு உன்னுடையது! இதுவா மதிய உணவிற்கான நேரம், உன்னுடைய அழைப்பினால் நான் கட்டுபட்டு இருக்கிறேன். நான் இன்னும் உணவருந்தவில்லை. உடனே எனக்கு உணவு அளிப்பாயாக'' என்றார்.

என்ன ஆச்சரியம்! தன் அழைப்பினை ஏற்று தான் கூறிய ஒரு வார்த்தைக்காக அன்போடு சத்குரு சாயங்காலம்வரை உண்ணாமல் அமர்ந்து இருப்பதை எண்ணி பாகு ஒரு விநாடி தன்னையே மறந்து விட்டான். இதுதான் அன்பை வெளிப்படுத்தும் உச்சநிலையாக இருக்க முடியும். உடனே அவன் நடந்த யாவற்றையும் விவரித்து, தம்மால் சத்குரு பசியோடு இருப்பதற்கு மிகுந்த வருத்தம் தெரிவித்தான். பாலபுவா மேலும் எதுவும் கூறாமல் முதலில் தாம் கொண்டு வந்த உணவை சத்குருவிற்கு அளிக்க வேண்டினார்.

உடனே பாகு தாம் கொண்டு வந்திருந்த மூன்று ரொட்டி துண்டுகளையும், கறியையும், வெயங்காயத் துண்டுகளையும், ஸ்ரீ மகராஜ் அவருக்கு சமர்ப்பித்தான். சத்குரு இரண்டு ரொட்டித் துண்டுகளை எடுத்து உண்டார். மூன்றாவதை அங்கிருப்பவர்களுக்கு பிரஸாதமாக விநியோகிக்க கட்டளையிட்டார். அங்கிருந்த அனைவரும் சத்குருவின் இத்தகைய அன்பைக்கண்டு ஆச்சரியம் கொண்டனர். எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர், ஹஸ்தினாபுரத்தில் கௌரவர்களின் ராஜ உபசாரத்தை ஏற்காமல் ஸ்ரீ விதுரரின் குடிசையில் தங்கி அவருடன் எளிமையான உணவை உட்கொண்டது போல நமது சத்குருவும் வசதியானவர்கள் கொண்டு வந்திருந்த



உணவைத் தள்ளி, பாகுவின் எளிமையான உணவினை அவருடைய அன்பிற்கு கட்டுப்பட்டு காத்திருந்து உண்டார். பாகு மகிழ்ச்சியோடு மகராஜ் அளித்த ப்ரஸாதத்தை வாங்கிக் கொண்டான்.

உண்மையான பக்திக்கு ஞானியரும் தெய்வங்களும் நிச்சயம் கட்டுப்படுவார்கள் என்பதை இந்நிகழ்ச்சியின் மூலம் காணமுடிகிறது. ஸ்ரீ மகராஜ் பாகுவிடம் மன நிறைவோடும், மகிழ்வோடும் அகோலா திரும்பிச் செல்லுமாறும் மேலும் பாகு மருத்துவக் கல்லூரியில் சிறப்பாக தேர்ச்சி பெறுவான் என்றும் வாழ்த்தினார்.

பாகு சத்குருவிடம் தாம் அவருடைய ஆசீர்வதித்தை பெறுவதற்கு மட்டுமே இங்கு வந்ததாகவும் கூறினார். வேறு எந்த கோரிக்கையும் வைப்பதற்காக வரவில்லை என்றும் பாகு சத்குருவிடம் தான் தன்னுடைய செல்வமாக நினைப்பது சத்குருவின் பாதங்கள் மட்டுமே என்று கூறி அவரை நமஸ்கரித்து ஆசீர்வாதம் வேண்டினான். சத்குருவும் அவனை ஆசீர்வதித்து அகோலாவிற்கு அனுப்பி வைத்தார். பாகு தம் வாழ்க்கையின் தேவை முழுவதும் பூர்த்தி ஆன நிறைவோடும் உற்சாகத்துடன் அகோலா திரும்பினான்.

ஒரு முறை துகாராம் ஷிகோகர் (Tukaram Shegoker) என்ற பெயருடைய ஒரு சிறந்த மனிதர் ஷேக்காவ் கிராமத்திலிருந்து வந்தார். அவர் ஒரு ஏழை விவசாயி ஆவார். பகல் நேரம் முழுவதும் வயலில் அரும்பாடுபட்டு உழைத்துவிட்டு, தினமும் இரவு நேரத்தில் மகராஜ் அவர்களின் தரிசனத்திற்காக மடத்திற்குச் செல்வது அவரது வழக்கமாக இருந்தது. அவர் சத்குரு புகைபிடிக்கும் குழாயை சுத்தம் செய்து கொண்டிருந்தார். இச்செயலை அவருடைய தினசரி நடவடிக்கையாக மிகவும் சிரத்தையுடன் செய்து வந்தார். ஆனால் விதி யாரையும் விட்டு வைக்காது. சத்குருவின் தயவால் விதியையும் வெல்ல இயலும் என்பதற்கு துகாராம் வாழ்வில் நடந்த சம்பவம் சாட்சியாக விளங்குகின்றது.

ஒரு நாள் நல்ல குளிர் காலத்தில் தன் வயலில் வேலையை செய்து முடித்துவிட்டு தீ மூட்டி அதற்கு அருகில் அமர்ந்து துகாராம் குளிர்காய்ந்து கொண்டு இருந்தார். அவருக்குப் பின்னால் இருந்த சிறிய புதரில் ஒரு முயல் இருந்தது. வேட்டைக்காரன் ஒருவன் தன் கையில் துப்பாக்கியுடன் முயலைக் கொல்வதற்காக

குறிபார்த்தான். அவன் சரியாக முயலைக் குறி பார்த்து சுட்டவுடன் முயல் இறந்த விட்டது. ஆனால் அவன் சுட்ட குண்டுகளில் ஒன்று துகாராமின் காதுகளின் பின்பகுதியில் தாக்கி உள்ளே சென்றுவிட்டது. அப்போதைய நாட்களில் அறுவை சிகிச்சை என்பது பெரிய செல்வந்தர்களாலும் வசதியுள்ள ஒரு சில இடங்களில் மட்டுமே செய்யப்பட்டு வந்தது. மேலும் அக்காலத்தில் பெரும்பான்மை ஏழை விவசாயிகள் அலோபதி மருந்துகளின் மேல் நம்பிக்கை அற்றவர்களாகவும், மூலிகை மருந்துகளின் மீது மட்டுமே நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தனர். தலையில் குண்டு துளைத்ததால் துகாராமிற்கு கடுமையான தலைவலி ஏற்பட்டது. அவரால் அமைதியாக உறங்கவும் முடியவில்லை. அவர் மருத்துவர்களிடம் காண்பித்த போது, அவர்கள் அந்த குண்டை எடுப்பதற்கு தம்மால் ஆன முயற்சிகள் செய்து பார்த்தனர். ஆனால் அந்த குண்டு சென்ற இடம் காதுப்பகுதிக்கு பின்னால் என்பதால் அவர்களால் அக்குண்டை எடுக்க இயலவில்லை. எல்லா மருத்துவர்களும் கைவிட்ட நிலையில் துகாராம் மனம் தளராமல் அந்த வலியோடு நம் சத்குருவின் மடத்திற்கு தினமும் வந்து சேவை செய்து கொண்டு இருந்தார். அவர் தொடர்ந்து உட்கொண்ட மாத்திரைகளும் மருந்துகளும் அவனுக்கு எந்த பலனும் அளிக்கவில்லை.

ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஒரு பக்தர், துகாராமிடம் மருந்துகள் உட்கொள்வதை கைவிடச் சொன்னார். மருத்துவர்களே கைவிட்ட நிலையில் மருந்துகள் எவ்வாறு காப்பாற்ற இயலும்? ஆகையால் மருந்துகள் உட்கொள்வதை நிறுத்திவிட்டு ஸ்ரீ மகராஜ் அவர்களின் மடத்தை சுத்தம் செய்யும் சேவையில் ஈடுபட்டால் மட்டுமே அவன் குணமடைவான் என்று அந்த பக்தர் கூறியவுடன், துகாராம் அதற்கு சம்மதித்து மருந்துகளை தவிர்த்தார். தினமும் காலையில் மடத்தை சுத்தம் செய்து வெகு தூய்மையாக வைத்து இருந்தார். துகாராமின் இந்த சேவை 14 வருடங்கள் இடைவிடாது நடந்து கொண்டு இருந்தது. அவர் மடம் சுத்தம் செய்து, சத்குருவை நமஸ்கரித்து விட்டு, தன்னுடைய வயல் வேலையையும் கவனித்து வந்தார். ஒருநாள் என்ன அற்புதம்! அவர் குளித்து விட்டு மடத்தின் தரையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது அவன் காதுகளில் இருந்து ஏதோ ஒரு பொருள் கீழே விழுந்தது. உடனடியாக அவன் தலைவலி நீங்கி புத்துணர்ச்சி அடைந்தான். கீழே விழுந்த அப்பொருள்



என்னவென்று பார்த்தால் ஆச்சர்யம்! 14 வருடங்களுக்கு முன்னால் முயல் வேட்டைக்காரன் துப்பாக்கியால் சுட்ட அதே குண்டு, இன்று அவனுடைய சேவையால் மகிழ்ந்த சத்குருவின் கருணையால் அவனைவிட்டுச் சென்றது.

சத்குருவின் கருணையால் முற்றிலும் வலியிலிருந்து நீங்கிய அவன் நன்றியுணர்வோடு தன் ஆயுள் முழுவதும் தினமும் மடத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டான். சத்குருவுக்கு செய்யும் சேவை ஒரு நாளும் வீண்போகாது என்பது துகாராமிடம் சத்குரு நிகழ்த்திய இந்த அற்புதம் நமக்கு உணர்த்துகிறது.

இன்றளவும் ஷேக்காவ் கிராமத்தில் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆலயம் அமைந்திருக்கும் இடம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களால் தினசரி சூழப்பட்டிருந்தாலும் சேவர்களின் அயராத சீரிய பணியினால் ஆலய வளாகத்தினுள் ஒரு சிறிய காகித குப்பையைக்கூட நம்மால் காண இயலாது. ஆலய வளாகம் முழுக்க பளிங்குபோல மிகவும் அழகாக காட்சி அளிக்கின்றது. சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆசிகளைப்பெற அவர் மகாசமாதி அடைந்திருக்கும் ஆலயத்திற்கு அனைவரும் நிச்சயம் சென்று ஒரு முறையாவது தரிசனம் பெற வேண்டும்.

**- ஜெய் கஜானன் -**



## அத்தியாயம் - 17

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! முழுமுதற் கடவுளே! விநாயகா! உம்மை போற்றுகின்றனே! நீ மங்கள நாயகன் ஆவாய்! பக்தர்களைக் காப்பாற்றும் உம்மைப்பணிந்து போற்றுகின்றேன்! இருள் என்ற அறியாமையில் இருந்து எம்மை விடுவிக்குமாறு வேண்டுகின்றேன். வாடியவர்க்கும், நலிந்தவர்களுக்கும் உறுதுணையாக நின்று காப்பாற்றும் தேவனே! உம்மை போற்றுகின்றேன்.

ஹிரண்யகசிபு கொடூரமான ராக்ஷஸனாகவும், நல்லோர்களின் எதிரியாகவும், இருந்ததால் நீ அவனை கொல்வதற்காக தூணில் இருந்து வெளிப்பட்டு உன் பக்தனாக ப்ரஹலாதனை காப்பாற்றினாய். அப்போத ஸ்ரீ ஹரியாகிய நீங்கள் மிகவும் கோரமாகவும், அச்சம் விளைவிக்கக் கூடிய பற்களையும், தாடையையும் கொண்டு கழுத்துப் பகுதியும் கண்களும் ரத்தச் சிவப்பு நிறத்தில் பார்ப்பதற்கு இந்த பிரபஞ்சத்தையே அழித்துவிடும் பயங்கரமான தோற்றத்தில் நீர் காணப்பட்டீர்கள்! ஆனால் இந்த கொடூரமான உருவம் ப்ரஹலாதனையோ, உன் பக்தர்களையோ பயமுறச் செய்யவில்லை. புலிக்குட்டிகள் தாய் புலியின் மடியில் விளையாடுவதைப் போல உணரச் செய்தாய்! உன்னுடைய இந்த பயங்கர தோறறத்தால் மஹாலட்சுமி தாயாரும் பயந்து உனதருகில் வருவதற்கு தயங்கிய வேளையில், உன் பக்தர்கள் உன் பாதங்களை ஸ்பரிசித்து ஆனந்தம் அடைந்தனர்.

ஓ லட்சுமிகாந்தனே! நீ உன்னுடைய பக்தருக்கும், சாதுக்களுக்கும், ஞானியருக்கும் மிகவும் அன்பானவன். அவர்களின் அன்புக்குரியவனான நீ அவர்களின் கோரிக்கைகளை ஏற்றாய். ஒருபோதும் அவர்கள் வேண்டியதை நீ மறுத்தது இல்லை. தற்போது தாஸ்கனுவாகிய நான் உன்னை சரணடைகின்றேன். உன்னுடைய புகழைப்பாடும் எனக்கு பயம் அறியாத உள்ளத்தைத் தருவாயாக!

அகோலாவில் இருந்து ஏராளமான பக்தர்கள் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களைக்காண பலமுறை ஷேக்காவ் போய் வந்து கொண்டு இருப்பார்கள். அவர்களில் சப்தகாவ் (Chapadgaon) கிராமத்தைச் சேர்ந்த பாபுகிருஷ்ணா (Bapukirshna), கடேவ்சேத் (Khatavseth), கண்டுலாலின் மகனான பச்சுலால் மற்றும் பலரும் ஆவார்கள்.



ஒரு சமயம் ஸ்ரீ மகராஜ் அகோலா வந்திருந்து அங்குள்ள காட்டவ் (Khatav) தொழிற்சாலையில் தங்கி இருந்தார். விஷ்ணுகா என்ற பெயருடைய பக்தர், பாஸ்கரனிடம் மன்றாடி எவ்வாறாயினும் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை மால்காபூருக்கு அழைத்து வருமாறு வேண்டிக் கொண்டார். பாஸ்கரா என்பவரைப்பற்றி நாம் முந்தைய அத்தியாயங்களில் தெரிந்து கொண்டதைப் போல அவர் சத்குருவால் அட்காவ் கிராமத்தில் முக்தியை அடைந்தவர் ஆவார். அதே பாஸ்கரா தம் நண்பரான விஷ்ணுகாவின் வேண்டுகோளுக்கு இணங்க மால்காபூருக்கு நம் சத்குருவை அழைத்து வருவதாக வாக்களித்தான். ஆனால் அவன் இது குறித்து சத்குருவிடம் உத்தரவு பெறவில்லை.

பாஸ்கரா சத்குருவிடம், ''ஸ்வாமி! தாங்கள் விஷ்ணுகாவின் அழைப்பை ஏற்று மால்காபூருக்கு வர வேண்டும். அவன் தாங்களை அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளான்'' என்று கூறினார். ஸ்ரீ மகராஜ் அவனிடம் பாஸ்கரா, ''எனக்கு மால்காபூர் செல்ல விருப்பமில்லை! என்னை வற்புறுத்தாதே! இவ்வாறு நீ என்னை வற்புறுத்துவதானால் நான் உன்னை இலட்சியம் செய்யமாட்டேன். எவ்வாறு ஒரு கயிறை அதன் நீளத்திற்கும் மேலாக அழுத்தம் கொடுத்து இழுக்கும் போது அக்கயிறு துண்டிக்கப்படுகிறதோ அதைப்போல நான் மால்காபூருக்கு வருவதை விரும்பவில்லை. இங்கிருந்து நகர்வதற்கு எனக்கு இஷ்டமில்லை, என்னை விட்டுவிடு'' என்றார்.

பாஸ்கரா குருவிடம் ஆத்மார்த்த அன்புடைய சிஷ்யன் ஆனாலும் குருவின் வாக்கை மீற இயலாது. சில காரணங்களால் குரு அம்முடிவினை எடுத்திருக்கக்கூடும் என்று உணர்ந்து அவன் சத்குருவை வற்புறுத்தாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவன் சத்குருவிடம், ''நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்! விஷ்ணுகா தங்களுடைய அன்பிற்குரிய பக்தர். அவருக்கு நான் வாக்களித்திருக்கிறேன். நீங்கள் இப்போது அதை மறுப்பது எனக்கு அதிர்ச்சியாக உள்ளது. தயை கூர்ந்து மால்காபூர் சென்று நான் விஷ்ணுகாவிற்கு அளித்த வாக்கினை கௌரவிப்பீர்கள் என நிச்சயமாக நம்புகிறேன்'' என்றான்.

மீண்டும் மீண்டும் சத்குருவை வற்புறுத்தி இரயில் நிலையத்திற்கு அழைத்து வந்தான். பாஸ்கராவின் வேண்டுதலுக்கு

ஏற்றவாறு அந்த இரயில் நிலைய அதிகாரி ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்காக ஒரு தனி கூபேயை (Compartment) காலி செய்து கொடுத்தார். ஸ்ரீ மகராஜ் தான் இருந்த இடம் விட்டு அசையவில்லை. இரயில் நகர வேண்டிய நேரம் வந்ததும் யாரும் எதிர்பாராமல் ஸ்ரீ மகராஜ் திடீரென்று தாவி ஒரு பெட்டியில் ஏறிக் கொண்டார். பாஸ்கராவிற்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. சத்குரு ஏறிய அந்தப் பெட்டி பெண்களுக்காக ஒதுக்கப்பட்டு இருந்த பகுதியாகும். ஸ்ரீ மகராஜ் வண்டியில் ஏறியதும் அங்கிருந்த பெண்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் ஒரு நிர்வாணசாமியார் வந்து ஏறியதும் அலறியடித்துக் கொண்டு வண்டியை நிறுத்தி இரயில் நிலைய காவல் துறைக்கு புகார் அளித்தனர்.

இரயில் நிலைய காவல்துறையின் அதிகாரி அங்கு வந்து தம் சத்குருவை கைகளைப்பற்றி வண்டியின் வெளியே இழுத்தார். சத்குரு நிதானமாக அமைதியாக அதே இடத்தில் அமர்ந்து கொண்டிருந்தார்! அந்த அதிகாரி நம் சத்குருவை நோக்கி நிர்வாண மனிதனே! உனக்கு அறிவே இல்லையா! பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் நீ எப்படி உள்ளே வரமுடியும்? என்றெல்லாம் பேசியபொழுதும் சத்குரு தாம் எந்த விஷயத்திலும் சம்பந்தப்படாதவர் போன்று அமைதியாக அதே இடத்தில் அமர்ந்து இருந்தார்.

காவல்துறை அதிகாரி, இரயில் நிலைய அதிகாரியை அழைத்து வந்தார். இரயில் நிலைய அதிகாரி நமது சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் குறித்து நன்றாக உணர்ந்து கொண்டவர். ஆதலால் காவல்துறை அதிகாரியிடம் இவர் பெரிய மகான், இவரால் யாருக்கும் எந்த தீங்கும் நேராது அதனால் அவர் இங்கே அமர்ந்து கொண்டு பிரயாணம் செய்ய தயவு செய்து அனுமதிப்பீர்களாக என்று வேண்டிக் கொண்டார். ஆனால் காவல்துறை அதிகாரி தாம் ஏற்கனவே இது குறித்து (டெலிகிராம்) தந்தி மூலம் தன்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பி விட்டதாகவும் இனிமேல் தன் கைகளில் எதுவும் இல்லை என்றும் கூறினார். இச்செய்தியைக் கேட்டவுடன் கவலையுற்ற இரயில் நிலைய அதிகாரி, சத்குருவின் முன்னால் பணிந்து தன் தலையில் இருந்த தொப்பியை மரியாதை நிமித்தம் எடுத்து கைகளில் வைத்துக்கொண்டு ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் தயை கூர்ந்து வண்டியில் இருந்து கீழே இறங்குமாறு வேண்டிக் கொண்டார். சத்குருவும் அவருடைய அன்புக்காகவும், வண்டியில் இருந்த கூட்டத்தை மதித்தும் இறங்கினார். ஏறக்குறைய இதே நேரத்தில்



நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவருக்கு எதிராக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவ்வழக்கை விசாரிக்க நீதிபதி ஸ்ரீ ஜாதருக்கு உத்திரவிடப்பட்டது. அவர் சத்குருவை விசாரிக்க ஷேக்காவ் வந்து ஓய்வு விடுதியில் தங்கியிருந்தார். அதே நேரத்தில் வெங்கடராவ் தேசாய் அகோலாவில் இருந்து வேறு வேலை நிமித்தம் ஷேக்காவ் வந்திருந்தார். ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்று அறிந்து கொள்ளும் பரபரப்பில் மக்கள் அனைவரும் திரண்டு ஸ்ரீ ஜாதர் இருந்த ஓய்வு விடுதியைச் சுற்றி நின்று கொண்டு இருந்தனர். திரு. தேசாய், திரு. ஜாதரிடம் மக்கள் கூட்டம் தம் விடுதியைச் சுற்றி இருப்பதன் காரணத்தை விசாரித்தார். திரு. ஜாதர் அந்த வழக்கு ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்காகும் என்று அவர்களிடம் விவரித்தார்.

திரு. தேசாய் தமது இரு கரங்களை கூப்பி, திரு. ஜாதரிடம் இந்த வழக்கு பொய்யானது அவர் புனிதமான மகான், அவருக்கு எவ்வித பற்றுதலும் கிடையாது, அவர் கடவுளின் அவதாரம், அவர் ஒரு தெய்வீக மனிதர் மற்றும் யோகிகள் அனைவராலும் போற்றப்படும் யோகீஸ்வரரும் அவரே! காவல் நிலைய அதிகாரி தவறான வழக்கை அவர்மீது பதிவு செய்து விட்டது. இப்பொழுது நீங்கள் அந்த தவறை சரி செய்து அவர் மீதுள்ள வழக்கை உடனடியாக திரும்பபெற வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் திரு. ஜாதர் திரு. தேசாய் அவர்களிடம் காவல் நிலையம் வழக்கை பதிவு செய்வதற்கு முன்னரே இதைப்பற்றி யோசித்திருக்க வேண்டும். இப்பொழுது வழக்கு நீதிமன்றத்திற்கு வந்து விட்டது. சட்டத்திற்கு புறம்பாக நான் பதில் கூற இயலாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளேன். இச்சூழ்நிலை மிகவும் கடினமானதாகும்.

வழக்கை விசாரிப்பதற்காக திரு. ஜாதர் தன்னுடைய எழுத்தரிடம் (Clerk-கிளார்க்) ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை அழைத்து வருமாறு கூறினார். அந்த எழுத்தர் அரசாங்க வழக்கப்படி ஒரு காவல் துறையாளரை (Constable) அனுப்பி சத்குருவை உடனடியாக தன்னுடன் கிளம்பி வரும்படியாகவும் இல்லையெனில் அவரை இழுத்துக்கொண்டு போக நேரும்படியாகவும் கூறி மிரட்டினான். ஸ்ரீ மகராஜ் அவர்களின் லீலைகள் பற்றி அவனுக்கு தெரிவதற்கு அவன் புண்ணியம் எதுவும்

செய்யவில்லைபோலும்! ஸ்ரீ மகராஜ் அவன் கூறியதைக் கேட்டதும், ''முடிந்தால் என்னை இழுத்துக் கொண்டு போ! பார்க்கலாம் வா!'' என்றார். அவர் இவ்வாறு சொல்லி விட்டு தன்னுடைய கைகளை நீட்டி அந்த காவலாளியின் கைகளை இறுகப்பற்றினார். சத்குருவின் பிடி இறுகியதால் அவனுடைய கைகளில் இரத்த ஓட்டம் தடைபட்டு அவன் முகம் உடல் முழுவதும் வெளிறிப்போனான். அதன்பிறகு அவன் நீதிமன்றத்திற்கு எவ்வாறு சத்குருவோடு செல்ல முடியும்? மருத்துவமனைக்கு அல்லவா செல்ல வேண்டும்? அவன் திரும்பாததால் திரு. ஜாதர் ஏதோ விபரீதம் நிகழ்ந்திருப்பது குறித்து அறிந்து கொண்டு, திரு. வெங்கடராவ் தேசாய் அவர்களை வேண்டி ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் சட்டத்திற்கு மதிப்பளித்து தயவு கூர்ந்து அழைத்து வரச் சொன்னார். அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரையும் கலைந்து போகச் சொன்னார். திரு. தேசாய் அங்கு காவலாளிக்கு நேர்ந்தது என்ன என்பதை அறிந்து கொண்டு தாமே ஸ்ரீ மகராஜ் அவர்களை சகல மரியாதையோடு அழைத்துவர புறப்பட்டார். அவர் சத்குருவின் சீடர்களிடம், அவருக்கு இடுப்பில் சுற்றிக் கொள்வதற்கு ஒரு வேஷ்டியை அணிவிக்கச்செய்தார். ஆனால் செல்கின்ற வழியில் அந்த வேஷ்டியை ஸ்ரீ மகராஜ் தூக்கி எறிந்துவிட்டு நிர்வாணமாகவே நடந்து நீதிமன்றம் சென்றார்.

அங்கு நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜாதர், ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு வணக்கம் செலுத்தி அவரைப் பணிந்து, அங்கிருந்த நாற்காலியில் அமர வேண்டினார். ஸ்ரீ மகராஜ் நாற்காலியில் அமர்ந்ததும் திரு. ஜாதர் அவரிடம், ''அரசாங்க சட்டப்படி நகரத்தில் இவ்வாறு ஆடையில்லாமல் செல்லக் கூடாது என்பதால் தாங்கள் தயை கூர்ந்த நிர்வாண நிலையை மாற்றி ஏதேனும் ஆடை அணிந்து கொள்ளுங்கள்'' என்றார்.

ஸ்ரீ மகராஜ் சிரித்துக் கொண்டே, ''நீ இவ்விஷயத்தில் ஏன் இவ்வளவு கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்? முதலில் நீ என்னுடைய ஹுக்கா குழாயில் புகையிலையை நிரப்புவாயாக! இதுமாதிரி விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டாம்!'' என்று நிதானமாக நீதிபதிக்கு உத்தரவிட்டார்.

அவர் பேச்சைக் கேட்டதும் திரு. ஜாதர், மனம் உருகி இதுவரை ஏதோ மாயையில் கட்டுண்டவரைப் போலவும், தற்பொழுது தான் விடுதலையாகி விட்டதைப் போலவும் உணர்ந்தார். ஸ்ரீ மகராஜ் இவ்வுலக வாழ்க்கை



முறைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்பதை மெதுவாக உணரத் துவங்கினார்.

அவர் முன்னால் நாம் சத்குரு பகவதியின் வ்ருஷப தேவரைப் போலவும், சுக்ராச்சாரியரைப் போலவும், நாமதேவரின் அவதாரம் போலவும் தெரிந்தார். ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் பேரின்ப மன நிலையைக்கண்டு தாமும் தன் நிலை உணர்ந்து, தன்னிலிருந்து விடுதலையாகி விட்ட நிலையை அடைந்தார். அவர் மனம் முழுவதும் ஆனந்தத்தில் திளைத்தது. அப்பொழுது திரு. ஜாதர், இந்த மகான் எந்த குற்றத்தையும் செய்திருக்க முடியாது. இவர் மீது எந்த வழக்கும் பதிவு செய்யவும் இயலாது. அக்னியின் தீ ஜ்வாலைகளுக்கு காரணமான கூறுகளால், அக்னி தேவரை குற்றம் சொல்லவோ தவிர்க்கவோ முடியாது. அதை பத்திரப்படுத்தி நாம் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பத்திரப்படுத்தா விட்டால் அது தன்னை சுற்றி இருந்த இடம் முழுவதையும் எரித்து சாம்பலாக்கி விடும். அதற்காக பழியை அக்னியின் மேல் சுமத்த இயலாது. சுடுவது அக்னியின் இயல்பான தன்மையாகும். அதே போல் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் நிர்வாண நிலை, அக்னியின் ஜ்வாலைக்கு சமமானது. அதைப் பத்திரப்படுத்த இயலாத குற்றம் அவருடைய சிஷ்யர்களைச் சேர்ந்தது. ஆகையால் பழியை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் அவருடைய சிஷ்யர்கள் ஆவார்கள்'' என்று தீர்மானித்தார்.

திரு. ஜாதர் தன்னுடைய தீர்ப்பை இவ்வாறு எழுதினார். அதாவது, ''ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆத்மா ஏற்கனவே விடுதலை அடைந்து விட்டது (Liberated Soul). அவரை சரிவர பார்த்துக் கொள்ள வேண்டிய கடமையில் இருந்து தவறியவன் பாஸ்கரா ஆவார். அதனால் நான் பாஸ்கராவுக்கு, ஐந்து ரூபாய் அபராதம் விதித்து, ஸ்ரீ கஜானன் மகராஜை வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கின்றேன்'' என்று எழுதினார். தீர்ப்புகள் தீர்மானிக்கப்படுவதும், பின்னர் அது திருத்தப்படுவதும், நம் சத்குருவின் கைகளில் மட்டுமே உள்ளது என்பதை அனைவருக்கும் உணர்த்தினார்.

ஸ்ரீ மகராஜ் இத்தீர்ப்பை கேட்டதும், ''பாஸ்கராவிடம் இனிமேல் தன் சொல்லை மீறி தன் விருப்பத்திற்கு மாறாக எச் செயலையும் எதிர்காலத்தில் செய்ய வேண்டாம்,'' என்று கூறினார். பாஸ்கரா மௌனமாக இருந்தான். அவருடைய சிஷ்யர்கள் இனிமேல் எங்கு செல்வதாக இருந்தாலும் எருது பூட்டிய வண்டியை அமர்த்திக்கொண்டு செல்ல வேண்டும் என்றும், புகை வண்டியில்

சத்குருவை பயணம் செய்ய வைக்க முயற்சிக்க மாட்டோம் என்றும் தீர்மானம் செய்தனர். இந்த தீர்மானமும் சத்குருவின் சங்கல்பம் தான் என்பதும் அனைவரும் தெரிந்ததே!

ஒரு சமயம் ஸ்ரீ மகராஜ் அகோலாவிற்கு வருகை தந்தார். அப்போது அவர் பாபுராவின் வீட்டில் தங்கியிருந்தார். பாபுராவின் நண்பரும், ஞானியும் ஆன இஸ்லாமிய சாது மேதாப்ஷா (Mehtbsha) என்பவர் மூர்திஸாபூரிலிருக்கும் குரும் (Murtizapur-Kurum) என்ற இடத்தில் வாழ்ந்து வந்தார். அவர் பாபுராவிடம் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை தாம் தரிசிக்க விரும்புவதாகவும், அவர் அகோலாவிற்கு வருகை தரும் சமயம் தன்னிடத்தில் தகவலைத் தெரிவிக்கவும் என்று கூறினார்.

ஸ்ரீ மேதாப்ஷாவின் விருப்பதற்கு ஏற்ப பாபுராவ் ஒருவரை குரும் (Kurum) அனுப்பி வைத்து அங்கிருந்த மேதாப்ஷாவிற்கு தகவல் தெரிவித்து வரும்படி கூறினார். அந்த மனிதரும் குரும் செல்வதற்காக புறப்பட்டார். இதில் அற்புதம் என்னவென்றால் அவர் குரும் வருவதற்கு முன்னால் மேதாப்ஷா அகோலாவிற்கு புறப்பட்டு வந்து கொண்டு இருந்தார். இருவரும் எதிர்எதிராக சந்தித்துக் கொண்டனர். அந்த மனிதர் தான் யார் என்பதை கூட மேதாப்ஷாவினிடத்தில் கூறவில்லை. மேதாப்ஷா அந்த மனிதரை அழைத்து நீங்கள் குரும் வரை சென்று என்னை தேட வேண்டாம். நான் தான் மேதாப்ஷா என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக்கொண்டார். அந்த மனிதருக்கு பெரும் வியப்பாக இருந்தது. நாம் இவரைத் தேடி வந்தது இவருக்கு எப்படித் தெரிந்தது என்று பெரும் வியப்படைந்தார். ஒரு ஞானியின் செய்கைகள் அனைத்தும் மற்றொரு ஞானிக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய தொடர்பு நேரிடையாக சந்திக்க வேண்டுமென்று அவசியமில்லை. ஆத்மாவோடு ஒருவரை ஒருவர் தொடர்பு கொண்டு ஒருவர் பணியை மற்றவர் நடத்திக் கொடுப்பதும் உண்டு (External Communication).

ஸ்ரீ மேதாப்ஷா அவர்கள் தம்மோது நான்கு இஸ்லாமிய பக்தர்களையும் அழைத்து வந்தார். அவர்கள் அனைவரும் பாபுராவின் வீட்டில் அன்று தங்கியிருந்தனர். மறுநாள் காலை மேதாப்ஷாவை காண வந்த ஸ்ரீ மகராஜ் உடனே அவரது தலை முடியைப்பற்றி அவரை அடிக்கத் துவங்கினார். சத்குருவினுடைய இந்த தாக்குதலின் நோக்கம் மேதாப்ஷா இஸ்லாமிய சமூகத்திற்கு ஏற்ப கட்டுப்பாடுகளை தன்னிடத்தில் கொண்டிருந்ததால், அத்தன்மை மேதாப்ஷாவை தன்நிலை உணர முடியாமல், அவருடைய ஆத்மா விடுதலை பெறாமல் தடுத்துக்கொண்டு இருந்தது. இத்தகைய அடிகளால், சத்குரு மேதாப்ஷாவின் அந்த தீய குணங்களை அகற்றி தன்னிலையை உணரச் செய்வதற்காகவேதான் என்பதை ஞானியான மேதாப்ஷாவும் நன்றாக உணர்ந்து இருந்தார். அதனால் அவர் சத்குருவின் அடிகளை ஆனந்தமாக ஏற்றுக் கொண்டிருந்தார். ஆனால் அவரோடு கூட வந்திருந்த மற்ற இஸ்லாமிய நண்பர்கள் இத்தாக்குதலை உணர்ந்து கொள்ள முடியாமல், அதற்கு எதிர்ப்பு தெரவித்து மேதாப்ஷாவை விடுவிக்க முயற்சித்தனர். ஆனால் மேதாப்ஷா அவர்களை அமைதியுடனும் பொறுமையுடனும் இருக்கும்படியாகவும், அவ்வாறு இல்லையெனில் அவரவர் விருப்பம் போல குரும் செல்லலாம் என்றும் உத்தரவிட்டார். சிங்காதுவைத் தவிர மேதாப்ஷாவுடன் வந்தவர்கள் அனைவரும் குரும் திரும்ப சென்று விட்டனர்.



அதே சமயம் சேட்பச்சுலால், ஸ்ரீ மகராஜ் அவர்களை தங்கள் வீட்டிற்கு மறுநாளைக்கு விருந்திற்கு அழைத்தான். அடுத்த நாள் ஸ்ரீ மகராஜ் டாங்கா எனப்படும் குதிரை வண்டியில் பச்சுலாலின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் ஆச்சர்யம்! டாங்காவிலிருந்து கீழே இறங்காமல், சத்குரு வண்டியை பின்னால் திரும்பிப் போகச் சொன்னார். சத்குருவின் அச்செய்கையை நோக்கிய அனைவரும் ஆச்சர்யமடைந்தனர். ஏனெனில் அந்தநாள் பச்சுலாலின் வீட்டிற்கு ஸ்ரீ மகராஜ் வருவதாக வாக்களித்திருந்தார். அந்த கூட்டத்தில் இருந்த ஒரு விவரம் அறிந்த பக்குவமான மனிதர் ஒருவர், பச்சுலாலிடம் ஸ்ரீ மகராஜ், ஞானியான மேதாப்ஷாவை விருந்துக்கு அழைக்காததால், தாமும் வர மறுத்து விட்டார். ஆகையால் நீங்கள் மேதாப்ஷாவையும் அழைத்து வாருங்கள் என்றார். அவர்கள் சென்று மேதாப்ஷாவையும் அழைத்தனர்.

நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் மற்றும் மேதாப்ஷா இருவரும் ஒரே டாங்கா வண்டியில் புறப்பட்டு வந்து சேர்ந்தனர். நம் சத்குரு, ஞானியான மேதாப்ஷாவின் மீது எத்தகைய அன்பு கொண்டிருந்தார் என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர். அன்று மேதாப்ஷா தங்குவதற்காக அருகில் இருக்கும் நாடகக் கொட்டகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் தங்குவதற்காக அருகில் இருக்கும் ஸ்ரீராமர் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனால் நம் சத்குரு தன்னுடைய இடத்தை துறந்து மேதாப்ஷா தங்கி இருக்கும் நாடகக் கொட்டகையில் வந்து அவரோடு சேர்ந்து தங்கினார்.

எல்லோரும் உணவு அருந்திய பிறகு, ஞானியான மேதாப்ஷா தம்முடன் இருந்த தமது சீடரிடம், பஞ்சாப் செல்வதற்கு இரயில் நிலையம் சென்று, பயணச்சீட்டு பெற்று வருமாறு கூறினார். ஆனால் அவர் மேதாப்ஷாவிடம், அவர் குரும் கிராமத்தை விட்டு செல்வதாக இருந்தால் அங்கு நடந்து கொண்டிருந்த மசூதியின் கட்டுமான வேலை முடிந்தவுடன் செல்லவும் என்று வேண்டிக் கொண்டார்.

அந்த மசூதியின் கட்டிடப் பணிக் ஏறக்குறைய பாதி கடந்து விட்டபடியால் முழுமையாக மசூதி கட்டி முடிக்கப்பட்ட பின்னர் மேதாப்ஷா குரும் விட்டு செல்லலாம் என்று அவருடைய சீடர் கேட்டவுடன், மேதாப்ஷா அவரிடம், ''எனக்கு பஞ்சாப் செல்வதற்கு சத்குருவின் உத்தரவு கிடைத்து விட்டபடியால், நான் தாமதமின்றி உடனடியாக புறப்பட வேண்டும். உனக்கு ஒரு உண்மையைச் சொல்ல வேண்டுமானால், பாதி தூரம் கட்டி முடிக்கப்பட்ட அந்த மசூதி, சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் கருணையால் முழுமை பெறும் என்றும் கூறினார். சாதுக்களுக்கும், ஞானிகளுக்கும் எல்லா மதமும் ஒன்றே, மனிதர்களுக்கிடையே மட்டும் தான் மத வேறுபாடுகள் உண்டு. சாதுக்களும், ஞானிகளும் எல்லா மதங்களையும் ஒன்றாகப்பார்க்கும் பக்குவமுடையவர்கள் என்றும் கூறினார். வெறும் மசூதி மட்டுமே இஸ்லாமியத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாக நினைத்துக் கொண்டிருந்தால், அது உங்கள் எல்லோரையும் அழித்துவிடும் என்றார்.

ஆலயங்களும், மசூதிகளும் ஒரே மாதிரியான கற்களால் கட்டப்படும் கட்டிடம் என்றும் அதனுடைய உருவத்திற்காகவும், அமைப்பிற்காகவும் மட்டும் அவை தனித்துவம் பெறுவதாக நினைத்தால் அது முட்டாள்தனமாகும். அவர் தம் சீடர்களை நோக்கி நீங்கள் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்? முஸ்லிம்களுக்கு மட்டும் தான் இறைவன் இருக்கிறாரா? இந்துகளுக்கு இறைவன் இல்லாமல் பிசாசுகள் இருக்கின்றதா? ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்! இந்துக்களையும், முஸ்லீம்களையும் படைத்தது ஒரே கடவுள் தான். எந்த ஒரு மனிதனும், தன்னுடைய மதத்தை மிகவும் விரும்பினால் அதில் தவறில்லை. அதற்காக பிறர் மதத்தையும் மதிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். இது உயர்வான குணம் எல்லா மதத்தினரிடமும் இருந்தால், அது நம் எல்லோரையும் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வைக்கும். அவ்வாறு இல்லையெனில், மதப்பிரிவினையால் நாம வாழ்கின்ற இந்த



சொற்ப நேரத்து வாழ்க்கையிலும், நாம் சந்தோஷத்தை தொலைத்து விடுவோம். இப்போது நீ குரும் செல்வாயாக! மசூதி மிகச்சிறப்பாக ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களால் விரைவில் கட்டி முடிக்கப்படும்'' என்றார்.

எத்தகைய அற்புதமான வார்த்தைகள்! ஸ்ரீ மேதாப்ஷா இத்தகைய உயர்வான நிலைக்கு மாற்றப்பட்டதற்கு (Transformation) முழுமையான காரணம், நம் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள்தான் என்பதும் நம் அனைவருக்கும் தெரிந்ததே! ஞானிகள் மதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதை இத்தகைய நிகழ்வின் மூலம் நாம் உணரலாம்.

மேதாப்ஷா, சத்குருவின் உத்தரவை ஏற்று பஞ்சாப் சென்றுவிட்டார். அங்கு அவருக்கு இட்ட பணியை சிறப்பாக செய்து வந்தார். அவர் மீண்டும் குரும் திரும்பவே இல்லை. நம் தேசத்தில் வாழும் அனைத்து இந்துக்களும், இஸ்லாமியர்களும் இந்த அடிப்படைத் தத்துவத்தினை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்து கொண்டால், மதப்பிரிவினைகள் அறவே ஒழிந்துவிடும். மேதாப்ஷவை நம் சத்குரு தாக்கினாலும், அவர் மீது அளவு கடந்து அன்பு வைத்து இருந்தார்! அவரை அழைக்காமல் உணவருந்த சத்குரு வர மறுத்துவிட்டார். இது ஞானியரின் இடையே உள்ள தூய்மையான அன்பிற்கு எடுத்துக்காட்டாகும்.

ஸ்ரீபாபுராவின் வீட்டில், சத்குரு மற்றும் அவருடன் வந்த அனைவருக்கும் விருந்தளிக்கப்பட்டதைக் கண்டோம். இனி, ''ஸ்ரீ மகராஜ் பாபுராவின் வீட்டில் விருந்து உண்டதற்கான பலனை அவருக்கு எவ்வாறு அளித்தார்'' என்பதைக் காணலாம்.

ஸ்ரீ பாபுராவின் மனைவி, பானாமதி என்ற ஒரு மோகினிப்பிசாசால் பீடிக்கப்பட்டு, மிகுந்த அவஸ்தைக்குள்ளானாள். அவள் தன் நெற்றியில் குங்குமம் வைத்துக்கொள்வதற்கு முயற்சிக்கும் போது, ஒரு கயிறு அவளுடைய கழுத்தை இறுக்கிப்பிடித்து, அந்த சமயத்தில் அவளது உடைகள் தீப்பற்றி எரியத்துவங்கும். சில நேரங்களில், அவள் முதுகுப் பகுதியில் நிறைய காயங்களும், கீறல்களும் காணப்படும். காயவைத்திருந்த அவளது ஆடைகள் திடீரென்று தீப்பற்றி எரியத் தொடங்கும். இத்தகைய அச்சம் விளைவிக்கக் கூடிய புதிரான நிகழ்ச்சிக் அவளுடைய உடல் நலத்தை வெகுவாக பாதித்தன.

அவள் உணவின் சுவையை இழந்தாள். சரியான சமயத்தில் உணவு உண்ணாத காரணத்தால், மிகவும் பலஹீனமான சரீரத்தை

அடைந்தாள். பாபுராவ்! அவளை குணமாக்குவதற்காக நிறைய பணம் செலவழித்தும் கூட அவளை குணமாக்க இயலவில்லை. இறுதியாக, நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் முன்னால் கைகள் தொழுது, மண்டியிட்டு மகராஜ், தன் மனைவி பானாமதி என்ற மோகினிப்பிசாசால் பீடிக்கப்பட்டிருக்கிறாள்.

நான் என்னால் இயன்றவரை அவளை குணப்படுத்த முயற்சித்தேன். அனைத்து முயற்சிகளை மேற்கொண்டும் எந்த பலனும் இல்லை. நான் மிகவும் மனம் உடைந்து போய் இருக்கிறேன். உங்களுடைய ராஜ்யத்தில் எவ்வாறு பானாமதி உள்ளே வரமுடியும்? எங்கனம் ஒரு நரியானது, சிங்கத்தின் குகை வாசலில் வந்து ஓலமிட முடியும்? எவ்வாறு துர்நாற்றம் மணம்மிக்க கஸ்தூரியின் முன்னால் தன் இயல்பைக் காண்பிக்க இயலும்! என்று அழுது புலம்பினார்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நம் சத்குரு, ஸ்ரீ கஜானன் மகராஜ், அவரது மனைவியை கருணையோடு ஒரே ஒரு பார்வை பார்த்தவுடன் பானாமதி தொலைந்துவிட்டாள். ஸ்வாமியின் மகிமையைக்காண பூதபிசாசுகளும் வந்து நமஸ்கரித்து போகும் அற்புதம் அங்கு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களால் நடத்தப்பட்டது.

நதிதேவதைகள் தங்களின் மீது பெரும்பான்மையாக பாவம் செய்தவர்கள் வந்து, தங்கள் பாவத்தை மூழ்கி தொலைத்து விடுவதால், புண்ணிய ஆத்மாவோடு எவரேனும் ஒருவர் தன்னை தீண்டுவதற்காக வந்தால் நதி தேவதைகள் ஆனந்த கூத்தாடுவது வழக்கம். அத்தகைய நதி தேவதைகள் ஒன்றாக இணைந்து நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு அபிஷேகம் செய்த அற்புதமான சம்பவத்தை இப்போது காண்போம்.

ஒரு சமயம் ஸ்ரீ மகராஜ் அகோட் அருகில் சாது ஸ்ரீநரசிங்கரை காண வந்திருந்தார். அந்த மடத்திற்கு அருகில் ஒரு கிணறு இருந்தது. ஸ்ரீ மகராஜ் உடனடியாகச் சென்று அந்தக் கிணற்றின் ஓரத்தில் அமர்ந்து கொண்டு கால்களை அதனுள் தொங்க விட்டுக்கொண்டு அந்த கிணற்றை உற்று நோக்கிக் கொண்டு இருந்தார். அனைவரும் சத்குருவின் இச்செயலால் ஆச்சர்யமடைந்தனர். ஸ்ரீநரசிங்கர் சத்குருவிடம் அவர் நடந்து கொள்வதின் காரணம் என்ன என்று கேட்டார்.

அதற்கு நம் ஸ்ரீ கஜானன் மகராஜ், நான் புனித கோதாவரியையும், பாகீரதியும், யமுனையையும் இந்தக் கிணற்றில்



காண்கிறேன். மேலும் வேறு என்ன வகையான புனிதமான நதிகள் கலந்துள்ளன என்று தேடிக்கொண்டிருக்கிறேன் என்றார். மேலும் அவர் ஸ்ரீ நரசிங்கரிடம் தினமும் இந்நதிகளின் சங்கமத்தில் நீ இன்பமாக நீராடுகிறாய்? ஏன் எனக்கு மட்டும் நதி தேவதைகளின் புனித நீர் தடைவிதிக்கப்பட்டுள்ளதா! என்று கூறிவிட்டு இன்று இந்த நதி தேவதைகள் அனைத்தும மேலே எழுந்து இங்கு வந்து என்மீது பொழிய வேண்டும். நான் ஆனந்தமாக புனித நதிகளில் நீராடவேண்டும் என்றார்.

அவர் கூறியதைக்கேட்ட அங்குள்ளவர்கள் இவருக்கு நிச்சயமாக சித்தபிரமை ஏற்பட்டுள்ளது என்றும் இதுமாதிரியான நிகழ்வுக் நடப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று கூறினர். ஆனால் என்ன அற்புதம்! சத்குரு பணித்தவுடன், புனித நதிதேவதைகளான கோதாவரியும், பாகீரதியும், யமுனையும் அதோடு கங்கையும் இணைந்து, மேலே எழுந்து சத்குரு இருக்கும் இடம் வரை பாய்ந்து, நீருற்று போல அவரைச் சூழ்ந்து அபிஷேகம் செய்தன. இக்காட்சியை பார்த்தவர்கள் மெய்சிலிர்த்து நின்றனர். சத்குரு மேலும் எல்லோரையும் அழைத்து, இப்புனித நதி தேவதைகளில் நீராடச் சொன்னார். சத்குருவின் வாக்கை தெய்வவாக்காக நம்பியவர்கள் ஆனந்தமாக நீராடினர். தெய்வமும் எப்பொழுதும் ஞானியர்களுக்கும், மகான்களுக்கும் கட்டுப்பட்டு அவர்களின் தேவையை பூர்த்தி செய்கின்றது.

ஸ்ரீ மகராஜ் நீராடி முடித்தவுடன் அந்த இடம் விட்டு சென்றுவிட்டார். அவர் சென்றவுடன் அந்த நீருற்றுகள் யாவும் மறைந்தன. பழைய நிலையில் கிணற்றின் தண்ணீரும் உள்ளே சென்றுவிட்டது. ஸ்ரீ நரசிங்கரின் சந்திப்பு நிறைவடைந்தவுடன் ஸ்ரீ மகராஜ், மனவேகத்தில் மறைந்து விரைந்து ஷேக்காவ் சென்றுவிட்டார். தாஸ்கணு மகராஜ் அவர்களின், இந்த விஜய் கிரந்தத்தை படிப்பவர்களை, சத்குரு பாதுகாவலனாக இருந்து இரட்சிப்பார்.

**- ஜெய் கஜானன் -**



# அத்தியாயம் - 18

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! சித்விலாசனே! கோவிந்தனே! ஸ்ரீநிவாசனே! உன்னைப் போற்றுகிறேன்! பேரின்ப நிலையின் பிரதிநிதியே! நலிந்தவர்களின் சகோதரரே! என்னையும் கருணையோடு காண்பாயாக! ஓ கேசவா! சேஷமர்தனா! மாதவா! மதுசூதனா! பூதனாவை அழித்தவனே! (பூதனா என்ற அரக்கியை கம்சன், குழந்தை கிருஷ்ணருக்கு, பால் கொடுக்ச்சொல்லி கிருஷ்ணனைக் கொல்வதற்கு ஏற்பாடு செய்தான். அரக்கி பூதனா கிருஷ்ணரை நெருங்கும் வேளையில், அந்த அரக்கியைப்பற்றி தெரிந்து கொண்டு அவன் உயிரைக் குடித்துவிட்டார்.) பாண்டுரங்கா! ருக்மிணிதேவியின் சக்தியே! எனக்கு என்ன வேண்டும் என்பதை நீ அறிவாய்! அதனால் தான் என் தேவையை கூற வேண்டிய அவசியம் இல்லை. நீ பக்தர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதாக புராணங்கள் கூறுகின்றன. ஆகையால் நான் சிரம் தாழ்ந்து உன்னை வணங்கி வந்து தாஸ்கணுவின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுகிறேன். நான் எப்பொழுதும் தங்களுடையவன் மட்டுமே ஆவேன்.

அகோட் கிராமத்தின் அருகில் முந்த்காவ் (Mundgan) என்ற பகுதியில் பானாபாய் என்ற பக்தை வசித்து வந்தாள். அவள் ஹஸ்திமாலி என்ற வகுப்பில் பிறந்தவள். அவளுடைய தந்தை சிவராம் மற்றும் தாயார் பாலுபாய் இருவரும் பானாபாய்க்கு சிறுவயதிலேயே திருமணம் செய்துவிட்டனர். அக்காலத்தில் பால்ய விவாகம் மறுக்கப்படவில்லை. அதனால் சிறு குழந்தையான பானாபாய் பூப்பெய்தும் வரை தன் தாயின் வீட்டில் இருந்தாள். பூப்பெய்தியவுடன் அவள் தந்தை சிவராம், அவளை அழைத்துக்கொண்டு தன் மருமகன் வீட்டிற்குச் சென்றார். ஆனால் விதியில் விளையாட்டு வேறுவிதமாக இருந்தது. அவரது மருமகன், ஆண் மகனின் தன்மை இல்லாதவனாக இருந்தான். இந்த உண்மை தெரிந்ததும் பானாபாயின் தாய் தந்தையர் மிகவும் வருந்தினர். தன் மகள் சிறு வயதிலேயே வாழ்க்கையை இழந்து விட்டாள் என்று எண்ணி, வேறு திருமணம் செய்யலாம் என்ற யோசனையை பானாபாயின் தாய் பாலுபாய் தெரிவித்தார். ஆனால் அவன் தந்தை சிவராமன் அக்கருத்தை ஏற்கவில்லை.



ஆண்மகனின் இயல்பு, ஒரு குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் அவசியம் தானாகவே வந்தடையும் என்றும் அதனால் மறுமணத்திற்கு அவசியம் இல்லை என்றும் கூறினார். அதனால் அவர்கள் பொறுமையோடு காத்திருந்து, தவறாமல் மருந்து மாத்திரைகள் சரிவர எடுத்துக் கொள்வதன் மூலம், தம் மருமகன் ஆண் தன்மை அடைந்துவிடுவான் என்றும் அதன் பிறகு தம் மகளின் வாழ்க்கையும் சிறப்பாக அமையும் என்றும் நம்பிக்கையோடு இருந்தனர்.

பெற்றோர் இருவரும் பாஜாபாயை மருமகனிடம் சேர்த்து விட்டு முந்த்காவ் (Mundgan) திரும்பினர். பாஜாபாயும் 16 வயது பருவம் அடைந்தவுடன், மிகவும் வசீகரமான தோற்றத்துடன், உயரமான உடல்வாகையும், அழகான கண்களையும், கூர்மையான நாசியையும் கொண்டு அழகிய சிற்பம் போல இருந்தாள். அவளைக் காண நேர்ந்த அனைவரும் அவள் மேல் காதல் வயப்படும் அளவிற்கு அழகுப்பதுமையாக இருந்தாள். ஆனால் விதியின் கொடுரமான பார்வையால், அவளுடைய அழகு அவளுக்கு பல சோதனைகளைத் தந்தது.

அவளது கணவன் ஆண் தன்மையற்ற காரணத்தால், அவனது மூத்து சகோதரன் பாஜாபாயின் மீது காதல் வயப்பட்டான். பலமுறை அவளிடம் வந்து தமது விருப்பத்தை தெரிவித்ததும், அவளை வற்புறுத்தியும் வந்தான். அவன் அவளிடம் ஆயுள் காலம் முழுவதும் அவளுக்கு தாம் காவலனாக இருப்பதாகவும், கணவனாகவும் அவளைப் பார்த்துக் கொள்வதாகவும் கூறி அவள் மனதில் தன்னைப் பற்றிய ஆசைகளைத் தூண்டும் விதமாக நடந்து கொள்ளத் தொடங்கினான். ஆனால் அவனுடைய முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தன.

பாஜாபாய் மனம் உடைந்தவளாய், ''இறைவா! இது என்ன சோதனை! தங்களை சிறு வயது முதல் வேண்டிக் கொண்டு இருக்கின்றேன். இது தான் நான் தங்களிடம் இருந்து பெற்ற பலனா? நான் திருமணம் கொண்டவன் ஆண்மகனே அல்ல என்பதும் அது என்னுடைய தலை விதியென்றும் நான் உணர்கிறேன். ஆனால் ஒரு வழியில் அதுவும் நன்மைக்கே ஆகும். நான் என்னை முழுவதுமாக தங்களின் பாதங்களில் அர்பணிக்க தீர்மானித்துள்ளேன். இப்பொழுது என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோள் என்னவென்றால், என்னை ஒரு ஆண்மகனும் தீண்டக்கூடாது என்பது தான்'' என்று இறைவனை வேண்டினாள்.

ஒரு சமயம் அவள் கணவனின் சகோதரன், இரவு நேரத்தில் பாஜாபாயைத் தேடி வந்தான். ஆனால் பாஜாபாயி அவளைத் தள்ளி நிற்கச் செய்து, இவ்வாறான தீய செயலைச் செய்யத் துணிந்த, அவனை வெட்கக்கேடான மனிதன் என்றும் கணவனுடைய மூத்த சகோதரன் தந்தைக்குச் சமம் ஆவார் என்பதால் தன்னை அவர் மகளைப் போல நினைக்க வேண்டும் என்றும் அறிவுரை கூறினாள். ஆனால் அவள் அழகின் மேல் மயக்கத்தில் இருந்த அவன், அவள் கூறியவற்றை சிறிதளவும் எண்ணிப் பார்க்காமல், அவன் கையைப் பற்றுவதற்காக வேகமாக வந்தான். இதற்கிடையில் தன்னுடைய மூத்த மகனின் அலறல் சத்தம் கேட்டு திடுக்கிட்டு ஓடிச் சென்று பார்த்தபொழுது, அவனுடைய மூத்த மகன் முதல் மாடியில் இருந்து கீழே விழுந்து கிடந்தான். பாஜாபயி உடனே விரைந்து சென்று, அவர் மகனைத் தூக்கிக்கொண்டு வந்து, தன் மடியில் கிடத்தி அவன் காயங்களுக்கு மருந்து இட்டாள். அவள் தன் கணவனின் சகோதரனை நோக்கி, ''இதை பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், பிறர் மனைவியின் மீது இச்சை கொள்வது பாவச் செயல் என்று கூறி, செய்த தவறை அவனுக்கு உணர்த்தினாள்.'' கீழே விழுந்து கிடந்த தன் மகனின் காயத்தைக் கண்டவுடன், அவன் மனம் மாறியது. தான் செய்த தவறுக்காக வருந்தினான். அதன் பின்னர் பாஜாபாயி இருக்கும் இடத்திற்குக் கூட அவன் செல்லவில்லை. அவனால் பாஜாபாயிக்கு ஒரு தொல்லையும் நேரவில்லை. பாஜாபாயி வேண்டிக் கேட்டுக் கொண்ட வரத்தை அதாவது அவளை எந்த ஒரு ஆண்மகனும் தீண்டக்கூடாது என்ற வரத்தை நம் சத்குரு காப்பாற்றினார்.

பாஜாபாயின் தந்தை சிவராம், தன் மகளை அங்கிருந்து அழைத்துக் கொண்டு தனது முந்த்காவ் கிராமத்திற்கு வந்தார். பாஜாபாயின் தாய் பாலுபாய், தன் கணவனிடம் ஷேக்காவ் சென்று, ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை தம் மகளுடன் நமஸ்கரித்து, தன் அன்பு மகளான பாஜாபாயை ஆசீர்வதிக்க வேண்டினார்கள். மேலும் அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கவும் ஆசீர்வதிக்குமாறு வேண்டினார்கள்.

ஸ்ரீ மகராஜ் சிரித்துக் கொண்டே, ''அவளுக்கு குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பே இல்லை. இவ்வுலகில் உள்ள எல்லா ஆண் மகன்களும் இவளுடைய தந்தைக்குச் சமமமானவர்கள். ஆகையால் இவள் கல்யாணம் குறித்த சிந்தனையை மறந்து விடுங்கள்'' என்றார்.



சிவராம் இதைக்கேட்டு மிகுந்த வருத்தத்துடன் முந்த்காவ் திரும்பினார். ஆனால் பாஜாபாயி ஆனந்தத்துடன் முந்த்காவ் திரும்பினாள். அவள் கேட்ட வரத்தை சத்குரு அவளுக்கு அளித்து விட்டார். அவள் ஸ்ரீ மகராஜ் அவர்களின் தீவிர பக்தையாக மாறினாள்.

அன்று முதல் பாஜாபாயி புண்டலீகன் என்ற சத்குருவின் ஒரு பக்தருடன் ஷேக்காவ் சென்று சத்குருவை தரிசிக்கத் தொடங்கினாள். அவள் பெற்றோர் அதற்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. அவர்கள் தன் மகள், தொடர்ந்து சென்று சத்குருவின் ஆசீர்வாதம் பெறுவதன் மூலம் அவளுடைய திருமண வாழ்க்கை புத்துணர்ச்சி பெறும் என்று நினைத்தனர். ஆனால் விதி மறுபடியும் பாஜாபாயிக்கு எதிராக செயல்பட தொடங்கியது. அங்குள்ள மக்கள் அனைவர் மனதிலும், அவர்கள் இருவரின் தொடர்பையும் வேறு விதமாக எண்ணத் தொடங்கினர். அந்த ஊர் முழுவதும் பாஜாபாய், புண்டலீகனுடன் தகாத உறவு கொண்டதாக செய்திகள் பரவத் தொடங்கியது. அவர்கள் அத்துடன் நிற்காமல் புண்டலீகன் மராத்தா இனத்தைச் சேர்ந்தவர் ஆவான். ஆகையால் அவர்களின் தொடர்பு சமூகத்தில் உயர்வு தாழ்வு குலப்பிரச்சினைகளும் ஏற்படும் என்பதால் அவர்கள் உறவைத் துண்டிக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

ஆனால் பாஜாபாயி மற்றும் புண்டலீகனின் உறவு மிகவும் புனிதமானதாகும். அவர்களின் இதயம் மிகவும் பரிசுத்தமானது. இந்த சமூகத்தில் ஒரு இளம் பெண், தன் கணவனுடன் வாழ இயலாத நிலையில், எத்தயைக இழிவுகளைத் தாங்க வேண்டி உள்ளது என்று நினைக்கும்பொழுது மனம் வேதனையால் வாடுகிறது. பாஜாபாயின் தாயார் பூலாபாயி, அனைவரும் தன் மகள் குறித்து இவ்வாறு கூறியதை பாஜாபாயிடம் கூறி, அவள் புண்டலீகனுடன் சேர்ந்து, ஷேக்காவ் செல்வது தவறு என்றும் ஒரு இளம் பெண், வாலிபனுடன் இவ்வாறு தொடர்ந்து செல்வது வெறும் உடல் கவர்ச்சியால் கவரப்பட்டதுதான் காரணம் என்றும் கூறி மகளைத்தடுத்தாள். மேலும் பூலாபாயி தன் கணவனிடம் தன் மகளுக்கு தங்கள் இனத்தில் ஒரு நல்ல ஆண்மகனை தேர்ந்தெடுத்து மறு விவாகம் செய்யுமாறு கூறினாள்.

பூலாபாயின் மனதில், ஷேக்காவ் சென்று சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களிடம் தன் மகளுக்கும் புண்டலீகனுக்கும் உள்ள உறவைப்பற்றி கேட்டுத் தெரிந்து கொள்வோம் என்ற எண்ணம் எழுந்தது. சாதுக்கள் எப்போதும் சத்தியத்தை மட்டுமே பேசக்கூடியவர்கள். சத்குரு தெய்வீக மணம் கமழும் சந்தனத்திற்கு

நிகரானவர் ஆகையால் அதிலிருந்து துர்நாற்றம் புறப்படுவதற்கு வாய்ப்பே இல்லை.

ஸ்ரீ மகராஜ், அவர்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்ய எண்ணி, ''புண்டலீகன் மற்றும் பாஜா, இவர்கள் இருவரும் சென்ற ஜென்மத்தில் உடன் பிறந்தவர்கள். அதனால் அவளுடைய அன்பை புறக்கணிக்காதே! பொதுமக்கள் எவ்வாறு தவறாகப்பேசினாலும் அதைப்பற்றி கவலை கொள்ள வேண்டாம். நீங்கள் இருவரும் இணைந்து, இறைவனை வழிபடுங்கள்'' என்று சொல்லி பாஜாபாயின் தாயை அழைத்து, பூலாபாயியிடம், ''உன் மகளின் நடவடிக்கைகளை குறை கூறுவதை விட்டுவிடு! அவள் புண்டலீகனின் சகோதரி ஆவாள். அது மட்டுமல்லாமல் பாஜாபாயி தன் கணவரோடும், அல்லது வேறு எந்த ஆண் மகனோடும் சேர்ந்து இருக்கப்போவது இல்லை. பக்த ஜனாபாய் எவ்வாறு பண்டரிநாதனான பாண்டுரங்கனுக்கு சேவகியாக இருந்ததைப் போல, அவளும் இறைவனின் சேவகியாக ஆயுள்காலம் வரை இருக்கப்பிறந்தவள்.

ஜானாபாய், பக்த நாமதேவ் அவர்களை குருவாக ஏற்றுக் கொண்டதைப்போல், பாஜாபாயி என்னிடத்தில் சரணடைந்திருக்கிறாள். ஆகையால் இனிமேல் யாரும் என் ஜனாபாய்க்கு தொல்லை அளிக்க நான் அனுமதிக்க மாட்டேன்'' என்று கருணையோடும், ஆத்மார்த்த அன்போடும் சத்குரு கூறியதும் பாஜாபாயி கண்ணீர் மல்க சத்குருவை நமஸ்கரித்து நன்றி கூறினாள்.

இறைவனின் அவதாரமான ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் வாயிலாக இவ்வார்த்தைகளை கேட்டவுடன், பாஜாபாயின் தந்தை சிவராம் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். ஆனந்தத்தால் பேச முடியாமல் அவர் தொண்டை அடைத்தது. அவர்கள் பாஜாபாயுடன் முந்த்காவ் திரும்பினர். அதற்குப்பின்னர் பாஜாபாயின் பெற்றோர், அவள் புண்டலீகனுடன் ஷேக்காவ் செல்ல எவ்வித தடையும் விதிக்கவில்லை. பக்தர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அவர்கள் வழிபாடு முறைகளையும், அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ற வாழ்க்கை முறைகளையும் அளித்து, காத்து இரட்சிப்பவர் நம் சத்குரு ஆவார்.

மற்றொரு நிகழ்வின் மூலம் எவ்வாறு ஸ்ரீ மகராஜ் எப்போதும் தம் பக்தர்களை காத்து இரட்சிக்கிறார் என்று காணலாம்.

காம்காவ் (Kangaon) கிராம அரசு மருத்துவமனையில், மருத்துவராக திரு. பாகுகேவர் (Bhagu Kavar) பணிபுரிந்து வந்தார்.



அவர் உடலில் துர்நாற்றம் வீசும் சீழ்கட்டிகளால் மிகவும் அவஸ்தையுற்றார். அவர் மருத்துவராக இருப்பினும், தனது உடலின் கட்டிகளை கரைய வைக்க அவரால் இயலவில்லை. அதனால் அவர் புல்தானா, அகோலா, அமராவதி ஆகிய இடங்களில் இருந்து மருத்துவர்களை வரவழைத்து, அவர்களின் மருத்துவமும், அறுவை சிகிச்சை அளித்தும் கூட பாகுவின் கட்டிகள் குணமாகவில்லை. பாகு இருப்புக் கொள்ளாதவராய், வலியை தாங்க இயலாமல், படுக்கையில் புலம்பிக் கொண்டிருந்தார். பாகுவின் மூத்த சகோதரர், பாகுவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருவதைக் கண்டு மிகுந்த கவலையுற்றார்.

இவ்வியாதிக்கு தர வேண்டிய ஒரே மருந்து, ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் திருப்பாதங்களை நினைவில் கொள்ள வேண்டியதுதான். சத்குருவை நினைத்து, பாகு இரு கைகளையும் கூப்பி, ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களிடம் தம்மை காப்பாற்றுமாறு வேண்டினார்.

அன்று இரவு நடுநிசி நேரத்தில், அருகில் இருந்த வனத்தில் நரிகளும் அலறத் தொடங்கிய, நேரத்தில் ஒரு அருமையான ஜோடி காளைகள் பூட்டிய வண்டி ஒன்று வந்து பாகுவின் கதவருகில் நின்றது. அவ்வண்டியில் இருந்து ஒரு அந்தணர் இறங்கினார். அவர் மருத்துவரின் வாயிற் கதவுகளைத் தட்டும் வேளையில், பாகுவின் சகோதரர் வந்து கதவுகளைத் திறந்தான். வண்டியில் வந்த அந்தணரிடம் வந்த காரணம் பற்றி விசாரித்தான்.

வண்டியில் வந்த அந்தணர் தன்னுடைய பெயர் கணேஷ் என்றும் தாம் ஷேக்காவ் கிராமத்தில் இருந்து தீர்த்தமும், கட்டியில் தடவும் பொடியையும் எடுத்து வந்து இருப்பதாகவும் கூறினான். அத்தீர்த்தத்தை பாகுவின் வாயில் ஊற்றவும், அப்பொடியை பாகுவின் கட்டிகளில் தடவவும் கூறிவிட்டு உடனே அந்த அந்தணர் மறைந்துவிட்டார்.

தம் சகோதரன் மூலம் நடந்த யாவற்றையும் கேள்வியுற்ற பாகு உடனடியாக ஒரு பணியாளை அனுப்பி, பிராமணரை உடனே அழைத்து வரச் செய்தான். ஆனால் ஒரு வினாடிப் பொழுதில், அந்த பிராமணர் காணாமல் போய்விட்டார். அவர் சென்ற பாதை முழுவதும் தேடிப்பார்த்து பாதச் சுவடுகள் கூடத் தென்படவில்லை. பாகு தீர்த்தத்தை தன் வாயில் ஊற்றிக் கொண்டான். அப்பொடியை தன் கட்டிகளில் தடவி ஒரு விநாடி கூட

தாண்டவில்லை. உடனே அக்கட்டிகள் உடைந்து, அதனுள் இருந்த அத்தனை சீழும் வெளியில் கொட்டிவிட்டது. ஒரு மணிநேரத்தில் கட்டிகளின் சீழ் அனைத்தும் வெளியேறி வலி முழுவதும் குறைந்துவிட்டது. அன்று பாகு வலியில்லாமல் நிம்மதியாக உறங்கினான். சத்குரு அளித்த மருந்தினை தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்கள் தடவிய பின்னர், பாகு முற்றிலுமாக குணமாகிவிட்டான். அவன் ஷேக்காவ் வந்து நம் சத்குருவை நமஸ்கரித்து நன்றி செலுத்தினான்.

ஸ்ரீ மகராஜ் அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டே, "அன்று இரவு நீ என்னுடைய எருதுகளுக்கு, புல்கூட தரவில்லை" என்றார். பாகுவிற்கு இப்பொழுது நன்றாகப் புரிந்துவிட்டது. தம்மைக்காண வந்த அந்தணர், சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் தான் என்பதை உணர்ந்து கொண்ட பாகு, அவருக்கு நன்றி செலுத்தி ஷேக்காவ் கிராம மக்களுக்கு உணவளித்தார்.

ஒரு முறை ஸ்ரீ மகராஜ், புனித சந்த்ரபாகா நதிக்கரையில் அமைந்துள்ள பண்டரிபுர விட்டலைக் காண்பதற்கு புறப்பட்டார். அவருடன் பல பக்தர்கள் உடன் வந்தனர். அரசாங்கம் பண்டரிபுரத்திற்கு நிறைய இரயில்கள் ஷேக்காவ் கிராமத்தில் இருந்து செலுத்திக் கொண்டிருக்கிறது. முக்கியமான விசேஷ நாளான ஆஷாட ஏகாதசி தினத்தன்று நிறைய இரயில்களுக்கு அரசு ஏற்பாடு செய்திருந்தது.

ஜாகு, அபாபாட்டீல், பாபுனா மற்றும் பலரும் ஸ்ரீ மகராஜ் அவர்களுடன் முதலில் நாக்சாரி சென்றனர். அங்குள்ள மலைப்பகுதியில் பாதாளத்தில் பெரிய குகை ஒன்றுள்ளது. அந்த குகையில் அருகில் இயற்கையாகவே அமைந்த நல்ல நீருற்றுகள் காணப்பட்ட இடம் நாக்சாரி என்பதாகும். நாக்சாரியின் அந்தக் குகைப் பகுதியில், பெரிய ஞானியான கோமாஜி என்ற மகானின் சமாதி அமைந்த இடமும் உள்ளது. ஸ்ரீ கோமாஜி மகராஜ், மகாத்ஜி பாட்டீலின் முதல் குருவும், பாட்டீல் சமூகத்தினரின் நல்வாழ்விற்காக தனது கைகளால் ஆசிர்வாதம் செய்தவரும் ஆவார்.

அதன் காரணமாகவே பாட்டீல் சமூகத்தினர், ஷேக்காவ் கிராமத்தில் இருந்து, பண்டரிபுரம் செல்லும் பொழுது முதலில் நாக்சாரி சென்று, அங்குள்ள ஸ்ரீ கோமாஜி மகராஜ் அவர்களுக்கு மரியாதை அளித்து, நமஸ்கரித்து விட்டு செல்வது வழக்கம். இந்த கலாசாரத்தை அனுசரித்து அவர்கள் பண்டரிபுரத்திற்கு சென்றனர். ஸ்ரீ மகராஜ் அவர்களுடன் ஏறக்குறைய 50 பேர்கள் இருந்தனர்.



ஆஷாடசுத்த ஏகாதசியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வார்கரிகள் (ஒவ்வொரு முறையும் பண்டரிபுரத்திற்கு தவறாது செல்பவர்கள், வார்கரிகள் என்ற இனத்தவரின் பழக்கமாக இன்று வரை தொடர்ந்து வருகின்றது) பண்டரிபுரத்தை அடைந்தனர். நாம் குறிப்பிட்ட வார்கரி சம்ப்ராத முறை இன்றளவும் ஆயிரக்கணக்கான பக்தர்களால் ஆங்கில மாதமான ஜூன் (June) மாதத்தில் ஷேக்காவில் இருந்து, சத்குருவின் திரு உருவத்தோடு புறப்பட்டு கால் நடையாக பண்டரிபுரத்தை அடைந்து, பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கால் நடையாக ஷேக்காவ் கிராமத்திற்கு, ஏறக்குறைய 35 நாட்களுக்கும் மேலாக பயணம் செய்து திரும்பும் வழக்கம் மிகவும் சிறப்பாகவும், பக்தியுடனும் நடைபெற்று வருகின்றது. இந்த சம்ப்ரதாய முறைக்குப் பெயர் மராத்திய மொழியில் வார்காரி என்பதாகும்.

ஸ்ரீ மகராஜ் உடன் பக்தர்கள் பண்டரிபுரத்தை அடைந்தவுடன், ஆகாயம் மேக மூட்டத்துடனும், மிதமான மழையுடனும் காணப்பட்டது. பூலோக வைகுண்டமாகவும், கருணைக் கடலாகவும் பண்டரிபுரம் காட்சி அளித்தது. அந்த ஆலயத்தைச் சுற்றி வரும் (Pradakshina) பக்தர்களின் கூட்டம் அலை மோதியதால், எங்கும் **"ஜெய் ஜெய் பாண்டுரங்க ஹரி, ஜெய் ஜெய் ராம க்ருஷ்ண ஹரி"** என்ற ஹரி நாமம் எல்லோருடைய காதுகளையும் துளைத்தது, அந்தப் புனிதமான வளாகம் முழுவதும் புத்துணர்ச்சியோடும், ஆனந்தத்துடனும் மக்கள் வெள்ளம் கோஷங்கள் எழுப்பி ஆரவாரித்தனர். ஞானிகளின் பல்லக்கு ஊர்வலம் விமர்சையாக நடைபெற்றது. அவர்களில் நாதர், நிவ்ருத்தி, த்யானேஷ்வர், சாவதா, கோராகும்பர், ஸ்ரீ துகோபா தேவுகர், சோபன் முக்தாபாய் மற்றும் ஜனார்தன் போன்ற மகாஞானியரின் பல்லக்கு ஊர்வலம் நடைபெறுகையில் பக்தர்கள் உற்சாகமாக புக்கா (Bukka) எனப்படும் வாசனைப் பொடிகள், வானை நோக்கி தூவப்பட்டதால் அந்த வளாகம் முழுவதும் நறுமணம் கமழ்ந்தது. மேலும் துளசி மற்றும் மலர்களை பல்லக்குகளை நோக்கி தூவி, தங்கள் மகிழ்ச்சியையும், பக்தியையும் பக்தர்கள் தெரிவித்துக் கொண்டனர்.

இத்தகைய தெய்வீக உணர்வில் தாமும் பங்கெடுத்து பக்தர்களை உற்சாகப்படுத்த, ஸ்ரீ மகராஜ் அவர்கள் பண்டரிபுரம் வந்து, ஆலய வளாகத்தை சுற்றி வலம் வரும் இடத்தில் அமைந்த குக்காஜி பாட்டீலின் இல்லத்தில் தங்கினார். ஸ்ரீ மகராஜ் அவர்களும் வந்தவுடன் மக்கள் கூட்டம் ஆலய வளாகத்தில்

வெள்ளமாகத் திரண்டுவந்தது. கூட்டத்தை கண்காணிக்கவும், கலவரம் நேராமல் தடுக்கவும் காவல் துறையினர் சீரிய பணியினை செய்து கொண்டு இருந்தனர். புனிதமான ஏகாதசி அன்று ஷேக்காவ் கிராம மக்கள் பாபுனாவைத் தவிர அனைவரும் ஆலயத்திற்குள், ஹரி பாட்டிலுடன் வந்திருந்தனர். பாபுனா குளிப்பதற்காக குளியலறை சென்றதால் அவரை விட்டு விட்டு மற்ற எல்லோரும் வந்து விட்டனர். பாபுனா குளித்து முடித்து வெளியில் வந்த பின் அனைவரும் தன்னை விட்டு விட்டு ஆலயத்திற்கு முன்னதாகவே சென்று விட்டதை உணர்ந்தார். அவர் மிகவும் விரைந்து ஆலயத்திற்குள் செல்ல முயற்சித்தார். ஆனால் மக்கள் வெள்ளம் போல குழுமியிருந்ததால் அவரால் ஆலயத்திற்குள் செல்ல இயலவில்லை. அவர் முயற்சித்த எல்லா வழிகளும் மக்கள் கூட்டத்தால் சூழப்பட்டு இருந்ததால், அவரால் எந்த வழியாகவும் ஆலயத்திற்குள் வர இயலவில்லை. அவர் ஆதரவற்ற நிலையில் தம் மனதில், "ஓ விட்டலா! ரிஷிகேசா! என்னை மட்டும் ஏன் இவ்வாறு அழவைக்கிறாய்! உன் தரிசனத்திற்காக உள்ளே வருவதற்கு ஏன் எனக்கு தடை விதிக்கிறாய்?

நீ சாவதாமாலிக்கு தரிசனம் அளிப்பதற்காக ஆரண் சென்றாய்! அதைப்போல பாண்டுரங்கனே! ஆலயத்தின் வெளியில் வந்து இந்த மக்கள் கூட்டத்தையும் கடந்து, எனக்கு தரிசனம் அளிப்பாயாக! 16 மைகல்கல் தொலைவில் இருக்கும் ஆரண் என்ற இடத்திற்குச் சென்று, நீ சாவதாமாலிக்கு தரிசனம் அளித்தாய்! நான் உன் ஆலயத்தின் அருகிலேயே இருக்கிறேன்! மக்கள் உன்னை ஆதரவற்றவர்களுடைய ஆதவன் என்று அழைக்கின்றனர். அவ்வாறு இருக்கையில் ஏன் என்னை புறக்கணிக்கிறாய்?''

இவ்வாறு தொடர்ந்து பாபுனா பகல் முழுவதும் புலம்பிக் கொண்டு இருந்து விட்டு மிகவும் சோர்வடைந்து, மாலைப்பொழுதில் வீட்டிற்கு வந்து விட்டார். பாண்டுரங்கனின் தரிசனம் கிடைக்காததால் மிகவும் சோர்வடைந்த அவர், மேலும் அன்று முழுவதும் உணவு அருந்தாமல் இருந்ததால் மிகவும் பலஹீனம் அடைந்தவராக காணப்பட்டார்.

அவருடைய ஒரே தீர்மானம், விட்டலைக் காண்பது தான். அதனால் அவர் குக்காஜியின் வீட்டில் தங்கி இருந்தாலும் மனம் முழுவதும் பண்டரிநாதனின் ஆலயத்தைச் சுற்றி வந்து கொண்டு இருந்தது. அவருக்கு முன்னர் வந்து தரிசனம் பெற்ற அனைவரும்



பாபுனாராவை கேலி செய்தனர். அவர்கள் பாபுனா ஒரு துரதிர்ஷ்டசாலி என்றும் அதனால் தான் அவரால் பாண்டுரங்கனின் தரிசனம் பெற இயலவில்லை என்றும் கூறி அவர் மனதை மிகவும் புண்படுத்தினர். மேலும் அவர்கள், பாபுனா பண்டரிபுரம் வந்திருந்து ஆலயத்திற்கு வராமல் அங்கு ஏற்பாடு செய்திருந்த வியாபார நிலையங்களை சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்ததால் அவரால் தரிசனம் பெற இயலவில்லை என்று கூறி சிரித்தனர். மற்றும் சிலர் அவர் நல்லவராக இல்லாததால், அவரால் தரிசனம் பெற இயலவில்லை என்றனர். மற்றும் சிலர் பாபுனா, வேதவேதாங்கங்களை கற்றுத் தெளிந்த பண்டிதர் ஆகையால் அவருக்கு பண்டரிபுரம் வந்து பாண்டுரங்கனை தரிசனம் செய்யத் தேவையில்லை என்று ஆலய வளாகத்திற்குள் வராமல், நடுத்தெருவில் பாண்டுரங்கனை தரிசனம் செய்வார் என்று கூறி அவர் மனதை வேதனைக்குள்ளள்கினர்.

வேதங்களை கற்றுத் தெரிந்தவர்கள் இறைவனை ஆத்மாவில் கண்டு வழிபடுவர். ஆகையால் பாபுனா ஆலயத்திற்கு செல்பவர்களை முட்டாளகக் கருதுபவர் என்றும் அவன் இனிமேல் பண்டரிபுரம் வரத் தேவையில்லை என்றும் ஷேக்காவ் கிராமத்திற்கே விட்டோபாவை அழைக்கும் தகுதிவாய்ந்தவர் என்றும் தொடர்ந்து அவரை கேலி செய்து கொண்டு இருந்தனர். பொதுவாக வேதாந்திகள் பிறருக்கு அறிவுரை கூறவே விரும்புவார்கள். ஆனால் கூறிய அறிவுரை பிறருக்கு மட்டுமே, அதை தாங்கள் பின்பற்ற மாட்டார்கள். அவர்களுக்கு தன்னிலை அறிதல் என்ற நிலை, (முதலில் கடவுளை மூர்த்தி ரூபத்தில் வெளியில் வைத்து யூகித்தால் மட்டுமே பின்னர் அந்தராத்மாவில் இறைவனை முழுமையாக கொண்டுவர இயலும் என்பதை அறியமாட்டார்கள்.) எவ்வாறு ஒரு குழந்தை யானையின் உருவத்தை முதலில் வரைப்படத்தில் கண்டு, அதை உணர்ந்து, மனதில் பதியவைத்து கொண்டு பிற்பாடு யானையை நேரில் காணும்போது, தம் மனத்தில் உள்ள உருவத்தை வெளியில் கொணர்ந்து ஆனந்தப்படுமோ அதைப் போல இறைவனை முதலில் சகுண மூர்த்தியாக விக்ரகங்களின் மூலம் அல்லது படங்களின் மூலம் வழிபட்ட பின்னரே ஆத்மாவில் வழிபடும் பக்குவத்தை நாம் அடைய இயலும். மானச பூஜை (மனதில் வழிபடுவது) எல்லாவற்றிலும் மேலான பூஜையாகும். ஆனால் அதனுடைய முதல் நிலை மூர்த்தி வழிபாடு மட்டுமே ஆகும்!

பாபுனா மீதான இத்தகைய குற்றச்சாட்டை எல்லோரும் சம்மதித்தனர். அவருக்கு ஆதரவாக பேச ஒருவரும் முன்வரவில்லை. அவர் உணவு எதுவும் அருந்தாமல் அமைதியாக அனைத்து கேலிப் பேச்சுகளையும், குற்றச்சாட்டுகளையும் கேட்டுக்கொண்டு மனதில் ஸ்ரீ ஹரியை மட்டுமே நினைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார். ஸ்ரீ மகராஜ் இவை அனைத்தையும் கவனித்துக் கொண்டு இருந்தார். நாம் ஆதரவற்ற நிலையில் இருக்கும்போது நம்மைக் காப்பாற்ற இறைவனால் மட்டுமே இயலும்! ஞானியின் அன்புக்கு பாத்திரமானவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் ஆவார்கள்.

ஸ்ரீ மகராஜ் பாபுனாவிடம், ''கவலை கொள்ள வேண்டாம் பாவுனா! இங்கே வா, உனக்கு ருக்மிணி ரமணனை காண்பிக்கிறேன்'' என்றார். இவ்வாறு சொல்லிவிட்டு ஸ்ரீ மகராஜ் எழுந்து நின்று தன் இருகைகளையும் பாண்டுரங்களைப் போன்று இடையில் வைத்துக் கொண்டு நின்றதும் என்ன அற்புதம்! பாபுனா தன் எதிரில் பாண்டுரங்கனை துளசி மாலைகளோடு கண்டார்! அவருக்கு வார்த்தைகள் வரவில்லை. சாஷ்டங்கமாக விட்டோபாவை நமஸ்கரித்து மறுபடியும் உற்று கவனித்தார். என்ன ஆச்சரியம்! சற்று முன்னர் விட்டோபா இருந்த இடத்தில் தற்போது ஸ்ரீ கஜானன் மகராஜ் இருந்தார். பாபுனா மகிழ்ச்சி ஆனந்த தாண்டவம் ஆடினார். அவர் உடனே ஆலயத்திற்குச் சென்று கவனித்தார். அங்கு அவர் கண்ட அதே விக்ரஹம் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ரூபத்தில் குக்காஜியின் வீட்டிலும் கண்டார். இதைவிட என்ன பாக்கியம் அவருக்கு கிடைக்க முடியும்! அவரை கேலி செய்தவர்கள், ஸ்ரீ மகராஜ் மூலமாக அவர் நேரடியாக பாண்டுரங்கனை தரிசித்ததை அறிந்து, ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் தமக்கும் ஸ்ரீ விட்டோபாவின் தரிசனத்தை காண்பிக்குமாறு வேண்டினர்.

ஸ்ரீ மகராஜ் அவர்களிடம், ''முதலில் உங்கள் மனதை பாபுனாவைப் போல பக்குவப்படுத்துங்கள்! அதன் பின்னர் நான் உங்களுக்கு விட்டோபாவைக் காண்பிக்கிறேன். ஸ்ரீ விட்டோபாவின் தரிசனம், நீங்கள் நினைப்பதுபோல கடைத் தெருவில் விற்கப்படும் பொருள் அல்ல! அதற்கு மனம் மிகவும் பக்குவப்பட்டும், பக்தியும், அடக்கமும் தேவை. அவை இருந்தால் மட்டுமே பாபுனாவைப் போல ஸ்ரீ விட்டோபாவின் தரிசனத்தை எந்த இடத்திலும் பெற முடியும்?''



ஆலயத்திற்கு செல்லாமலேயே பாபுனாவிற்கு ஸ்ரீ மகராஜ் விட்டோபாவின் தரிசனத்தை அளித்தது எத்தகைய அற்புதம்! ஓர் உண்மையான ஞானியால் மட்டுமே இது போன்ற அற்புதங்களைச் செய்ய இயலும். நாம் முன்னரே குறிப்பிட்டவாறு ஞானியர்க்கும் கடவுளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எவ்வாறு சர்க்கரையும் அதனுடைய தன்மையான இனிப்பையும் தனித்தனியாக பிரிக்க இயலாதோ அதைப்போல ஞானியரையும், இறைவனையும் வேறாக பிரிக்க இயலாது. இந்த உண்மையை உணர்ந்து கொண்ட அவர்களின் சிஷ்யர்கள் மனம் திருந்தி, ஸ்ரீ ஹரியின் பிரஸாதத்தைப் பெற்றுக் கொண்டு அனைவரும் ஷேக்காவ் திரும்பினர்.

ஸ்ரீ விட்டோபாவின் கருணையாலும், ஆசீர்வாதத்தாலும் பாபுனாவிற்கு ஒரு மகன் பிறந்தான். அவன் மிகவும் புத்திமானாகத் திகழ்ந்தான். சாதுக்களுக்கும், ஞானியர்க்கும் செய்யும் சேவை என்றுமே வீண்போகாது. ஸ்ரீ ஹரியின் ஆசியால் பிறந்த தன் மகனுக்கு பாபுனா, நாமதேவ் என்ற பெயரை சூட்டினார்.

ஒரு சமயம் விதர்ப தேசத்தில் அமைந்த காவதே பகதூர் (Kavathe Bahadur) என்ற இடத்தில் இருந்து ஒரு பக்தர் குக்காஜியின் வாதாவிற்கு, துவாதசியன்று வந்திருந்தார். ஆனால் அப்பொழுது பண்டரிபுரம் முழுவதும் காலரா நோயால் பீடிக்கப்பட்டு இருந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக உயிரிழக்கத் தொடங்கினார்கள். கொடிய காலரா வியாதியால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். மருத்துவர்கள், காவல் துறையினரிடம் பண்டரிபுரத்திற்கு வந்த மக்களை உடனடியாக தங்கள் ஊருக்கு புறப்பட்டு செல்லுமாறு அறிவுரை வழங்கும்படி கூறினார்கள். ஆதலால் காவல் துறையினர் அங்கு வந்த மக்கள் அனைவரையும் பண்டரிபுரத்தை விட்டுச் செல்ல கூறினர். அதுமட்டுமல்லாமல் பலமுறை வற்புறுத்தி, பலவந்தமாகவும் மக்களை ஊருக்கு வெளியில் அப்புறப்படுத்தினர்.

பண்டரிபுரத்திற்கு தரிசனத்திற்காக வந்த காவதே பகதூரைச் சேர்ந்த ஒரு பக்தருக்கும் காலரா தொற்றிக் கொண்டது. அது மிகவும் வீரியமாக இருந்ததால் அவர் இறக்கப்போவது நிச்சயமாயிற்று. அங்கு அவருக்கு சிகிச்சை அளிப்பதற்கும், ஆறுதல் கூறுவதற்கும், ஆதரவு தருவதற்கும் ஒருவர் கூட இல்லை. பெரும்பான்மையோர் அந்த ஊரைக் காலிசெய்து விட்டனர். காலரா தீவிரமாக பாதித்ததால் அந்த பக்தருக்கு தொடர்ந்து வயிற்றுப் போக்கும், வாந்தியும் வந்து கொண்டு இருந்தது.

எல்லோராலும் சிறிது நேரத்தில் அவர் இறந்து விடுவார் என்ற எண்ணத்துடன் அவரை அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். மக்கள் எப்போதும் வசதிவாய்ப்பிற்காக நம்மைச் சுற்றி வருவார்கள். ஆனால் நாம் எல்லாவற்றையும் இழந்து ஆதரவு தேடும்போது நமது அருகில் ஒருவர் கூட இருக்க மாட்டார்கள். அந்த நேரத்தில் ஆண்டவன் மட்டுமே நமக்கு துணையாக நின்று நம்மை காப்பாற்றுவார். காவதே பகதூரில் இருந்து வந்த பக்தரை அநாதை போல் வராண்டாவில் கிடத்தி விட்டு எல்லோரும் சென்று விட்டனர். இதைப்பார்த்த கருணாமூர்த்தியான நம் சத்குரு, ''தன் சீடர்களிடம் வராண்டாவில் கிடத்தி இருந்த அந்த பக்தரை இங்கு தூக்கி கொண்டு வாருங்கள்'' என்றார்.

ஸ்ரீ மகராஜ் இவ்வாறு கூறியதைக் கேட்ட அவருடைய சீடர்கள், ''ஸ்வாமி! அவன் ஏறக்குறைய இறக்கும் தருவாயில் இருக்கும் தொற்றுவியாதிக்காரன். இன்னும் சற்று நேரத்தில் அவன் நிச்சயமாக இறந்துவிடுவான். நாங்கள் இங்கு 50 பேர்கள் உள்ளோம். அவனை தூக்கிக் கொண்டு வருவதன் மூலம் அந்த வியாதிகள் எங்களுக்கும் தொற்றிக் கொண்டால் நாங்கள் அனைவரும் இறந்துவிடுவோம். இந்த சூழ்நிலையில் அவனைக் காப்பாற்றுவதைவிட நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாம் இவ்விடத்தை விட்டுச் சென்று விடலாம்'' என்று யோசனை கூறினர்.

இவர்கள் பேச்சைக் கேட்டு கொண்டு இருந்த, ஸ்ரீ மகராஜ், ''தமது சகோதரரை இவ்வாறு தரையில் காலரா வியாதியில் விட்டுச் செல்ல நினைக்கும் நீங்கள் அனைவரும் முட்டாள் ஆவீர்கள்'' என்றார். ஸ்ரீ மகராஜ் அவர்கள் தாமாகவே சென்று அந்தப்பக்தனின் கரங்கள் பற்றி அவனை உட்கார வைத்தார். பிறகு அவனிடம், ''வா எழுந்திரு! நாம் விதர்ப தேசத்திற்கு செல்லலாம்'' என்றார்.

அந்த பக்தன் மிகுந்த ஆச்சரியத்துடன், ''நான் எவ்வாறு விதர்ப தேசம் செல்ல இயலும்! இன்னும் சிறிது நேரத்தில் மரணிக்கவிருக்கும் ஒரு தொற்று நோயாளி ஆவேன். எனக்கு ஆதரவாக என்னை அழைத்துச் செல்ல ஒருவரும் இங்கு இல்லை'' என்று கூறினான்.

நம் சத்குரு மகராஜ் சிரித்துக் கொண்டே, ''நீ இவ்வாறு பயப்படத் தேவையில்லை! உன் உயிரைக் குடிக்க வந்த மரணபயம் தவிர்க்கப்பட்டு விட்டது'' என்றார்.

இவ்வாறு அவனிடம் கூறிவிட்டு, ஸ்ரீ மகராஜ் தம் கரங்களை அவன் தலைமேல் வைத்தார். அவ்வளவுதான்! அந்த ஸ்பரிசத்தில் என்ன அற்புதம்! உடனடியாக அவனுடைய வாந்தியும், பேதியும் நின்றுவிட்டது. தான் இழந்த பலம் அனைத்தையும் திரும்பப் பெற்று புத்துணர்ச்சி அடைந்தவனாக ஆனான்.



மரணத்தின் விளிம்பில் இருந்த அவனை ஸ்ரீ மகராஜ் அவர்கள் கருணையோடு காப்பாற்றினார். அவன் மிகுந்த சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும் நம் சத்குருவின் பாதங்களை மீண்டும் நமஸ்கரித்தான். அவன் ஸ்ரீ மகராஜ் அவர்களிடம், ''ஸ்வாமிஜி! மரணத்தின் பிடியில் இருந்து என்னை வெளியில் கொண்டு வந்ததற்கு என் பணிவான நமஸ்காரங்கள்'' என்றான்.

இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த சீடர்கள் ''ஜெய் கஜானன் மகராஜ்'' என்று கோஷம் எழுப்பினர். அதுமட்டுமல்லாமல் யாரெல்லாம் ஸ்ரீ மகராஜ் அவர்களுடன் பண்டரிபுரத்தில் இருந்து ஷேக்காவ் திரும்பினார்களோ அவர்கள் பத்திரமாக ஒரு குறையும் இன்றி தங்கள் ஊருக்கு வந்தனர்.

ஒரு சமயம் சாஸ்திர சம்ப்ரதாயங்களை முறையாகப் பின்பற்றுபவரும், அவற்றில் சிறிதளவேனும் மாறாதவரும் தம் குலத்தின் பெருமையைக் கட்டி காப்பதாகவும் பறைசாற்றி கொண்ட ஒரு அந்தணன், ஷேக்காவ் கிராமத்திற்கு வந்திருந்தான். அவன் வெகு தொலைவில் இருந்து, சத்குரு ஸ்ரீ மகராஜ் அவர்களின் புகழைக் கேள்வியுற்று அவரை தரிசிக்க வந்திருந்தான். சாஸ்திர சம்ப்ரதாயங்களை கண்டிப்பாக பின்பற்றுபவன் ஆதலால் அக்கூட்டத்தில் யாரும் தன்னை தொடுவதைக் கூட அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் ஸ்ரீ மகராஜைக் கண்டவுடன் இவரை தரிசிப்பதற்காகவா இத்தனை தூரம் பிரயாணம் செய்துவந்தோம் என்று எண்ணினான். அவன் நம் சத்குருவை ஒரு சித்தமப்பிரமை கொண்டவர் என்றும் நம் முன்னோர்களால் முறையாகப் பின்பற்றப்பட்ட சாஸ்திர சம்ப்ரதாயங்களுக்கு எதிராக நடந்து கொள்வதாலும் அதனால் அவரை மக்கள் கூட்டம் வணங்குவதையும், நமஸ்கரிப்பதையும் வெறுத்தான். மடத்தில், கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக செல்ல முயற்சிக்கும்போது, வழியில் ஒரு நாய் இறந்து கிடந்ததைக் கண்ட அவன், மரணித்த இந்த நாயை அப்புறப்படுத்துவதற்கு கூட யாரும் இங்கே முன்வரவில்லை, இதைக்கண்டு கொண்டும் கஞ்சாவை புகைத்துக் கொண்டிருப்பவரை இவர்கள், மகராஜ் என்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். இவரைத் தரிசிப்பதற்காக, இத்தனை தொலைவில் இருந்து வந்த நான் ஒரு முட்டாள்

ஆவேன் என்று வெறுப்புடன் கூறினான்.

ஸ்ரீ மகராஜ் அவன் மனதில் நினைத்ததை நன்றாக உணர்ந்து கொண்டு, அவன் அருகில் சென்றார், "நீ நினைத்தவாறு அந்த நாய் இன்னும் இறக்கவில்லை. ஆகையால் சந்தேகம் கொள்ள வேண்டாம், உன்னுடைய பூஜையை சுதந்திரமாக நீ செய்யலாம்'' என்றார்.

அந்த அந்தணன் ஆத்திரத்துடன், ''நான் என்ன உங்களை மாதிரி பைத்தியம் பிடித்தவனா? இந்த நாய் இறந்து ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. இதன் உடலில் இருந்து துர்நாற்றம் அடிக்கத்துவங்கிவிட்டது. ஆனால் யாருமே இங்கு இதை அப்புறப்படுத்துவதில் அக்கறை கொள்ளவில்லை'' என்றான்.

ஸ்ரீ மகராஜ் சிரித்துக் கொண்டே அவனிடம், ''நாங்கள் ஒன்றும் அறியாதவர்கள்! ஆகையால் தவறிழைத்துவிட்டோம்! உன்னை விட ஞானம் எமக்கு அதிகமாக இல்லை. இந்த குவளையை எடுத்துக் கொண்டு கிணற்றுக்கு அருகில் என்னை தொடர்ந்து வா'' என்றார். இவ்வாறு கூறிவிட்டு ஸ்ரீ மகராஜ் தாம் செல்லும் வழியில் இருந்த அந்த இறந்த நாயை தம் பொற்பாதங்களால் ஸ்பரிசித்தார். ''ஜெய் கஜானன்'' என்ன ஆச்சரியம்! இறந்து வெகு நேரமாகிய அந்த நாய் சத்குருவின் பாதஸ்பரிசம் பட்டவுடன் உடனே சுறுசுறுப்பாக எழுந்து நின்றது. இதை அதிசயத்தோடு கவனித்த அந்த பிராமணன் வாயடைத்துப்போனான். ஸ்ரீ மகராஜ் அவர்கள் சாமானியமானவர் அல்ல என்பதும் அவர் திரிகால ஞானி என்பதும், இறந்தவரைக்கூட மீண்டும் உயிர் பிழைக்க வைக்கும் அவருடைய சக்தியையும் உணர்ந்தான். தான் அவதூறாக பேசிய பேச்சுக்களுக்கும், செய்கைகளுக்கும் வெட்கி தலை குனிந்து, ஸ்ரீ மகராஜ் அவர்களின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான். தன்னை தயவுகூர்ந்து மன்னித்து விடுமாறு மன்றாடிக் கேட்டுக் கொண்டான்.

தன் தவறை முழுவதுமாக உணர்ந்த அந்த வைதீக பிராமணன், அன்று முழுவதும் ஸ்ரீ மகராஜ் அவர்களை தரிசிக்க வந்த பக்தர்களுக்கு தம் கைகளால் உணவு பறிமாறினான். தானும் அவரிடம் இருந்து ப்ரஸாதம் பெற்றுக் கொண்டு சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை நிச்சயமாக தெய்வத்தின் அவதாரம் என்ற உறுதியான தீர்மானத்துடன் தனது கிராமத்திற்கு திரும்பினான்.

**- ஜெய் கஜானன் -**



# அத்தியாயம் - 19

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேசாய நமஹ! மகிழ்ச்சியை மட்டுமே நமக்கு அளிப்பவரை மனமார போற்றுகின்றேன்! என் சிரம் எப்பொழுதும் உங்கள் முன்னால் தாழ்ந்து பணியட்டும்! ஓ ராகவா! ரகுபதி! தயைகூர்ந்து விரைந்து வந்து எம்மை ஆசீர்வதிக்க வேண்டுகிறேன். அனைத்திலும் உயர்வான தன்மை கொண்ட உனக்கு, இவ்வாறு கடுமையாக நடந்து கொள்வது தகுமா? ஓ அனந்தனே! கருணையோடு நான் சொல்வதை சற்று சிந்தித்துப்பார்!

ஓ ஜகந்நாதரே! நான் ஆத்மார்த்தமாக உன்னை அழைக்கிறேன்! இந்த தாஸ்கணுவை ஏமாற்றாமல் ஏற்றுக்கொள்வாயாக!

ஒரு சமயம் ஸ்ரீ மகராஜ், ஷேக்காவ் கிராமத்தில் இருந்தபோது, காசிநாத் காண்டேராவ் (Kashinath Khanderao Garod) என்ற பிராமணன் அவரை தரிசிக்க வந்தான். அவன் ஸ்ரீ மகராஜ் அவர்களின் முன்னால் நமஸ்கரித்தான். சத்குருவைப் பார்த்த மாத்திரத்தில், அவன் தம் தந்தையால் எழுதப்பட்ட, ஜீவன் முக்திக்கு உரிய அனைத்து குறியீடுகளிலும் ஸ்ரீ மகராஜ் அவர்களை, தன்னுள் கண்டான். அவ்வாறு காண இயன்றதால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் தனக்குள் தாம் மிகவும் பாக்கியம் செய்தவனாக இருக்க வேண்டும். இல்லையெனில் காம்காவ் கிராமத்தில் இருந்து, ஸ்ரீ மகராஜ் அவர்களை தரிசிக்க வந்திருக்க இயலாது என்று நினைத்தான். அவன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்தபோது, ஸ்ரீ மகராஜ் அவனுடைய கை முட்டியை அழுத்தி தள்ளிவிட்டு அவனிடம், ''போ! உன் ஆவல் நிறைவேறிவிட்டது! தபால்காரன் உனக்குத் தருவதற்காக (டெலிகிராம்) தந்தியுடன் காத்துக் கொண்டு இருக்கிறான்'' என்றார். சத்குருவின் இப்பேச்சைக் கேட்ட காசிநாத் குழப்பமடைந்தான். மேலும் ஸ்ரீ மகராஜ் சொன்ன வார்த்தைகளின் பொருளை உணர்ந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தான். அவன் ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் எதையும் கேட்டுப் பெறுவதற்காக வரவில்லை. அவ்வாறு இருக்க அவரிடம் சென்று அவர் கூறியதற்கான அர்த்தத்தை கேட்பதற்கு அவனுக்கு தைரியம் வரவில்லை. இருகைகள் கூப்பி தொழுது அவர்முன் மண்டியிட்டு நமஸ்கரித்துவிட்டு காம்காவ் திரும்பினான்.

அவன் தன் வீட்டின் வாசலில் வந்தபோது, அவன் கண்டகாட்சி அவனை மிகவும் அதிசயிக்க வைத்தது. ஸ்ரீ மகராஜ் கூறியதைப்போன்று, அவன் வீட்டு வாசலில் ஒரு தபால்காரன் நின்று கொண்டு இருந்தான். அவன் விரைந்து சென்று அந்த தபால்காரனிடம் தமக்கு வந்திருந்த (டெலிகிராம்) தந்தியை வாங்கிப்படித்தான். என்ன ஆச்சரியம்! அவனுக்கு உத்யோக உயர்வு கிடைத்திருப்பதாகவும், முன்சீப் ஆக அவன் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதாகவும், விரைவில் மோர்ஷி என்ற இடத்தில் புதிய பதவியில் அவன் அமர வேண்டும் என்றும் அந்தந்தியில் குறிப்பிடப்பட்டு இருந்தது. உண்மையிலேயே மிகப்பெரிய ஞானியான ஸ்ரீ கஜானன் மகராஜ், தன் கைமுட்டியை மடக்கியதற்கு உண்டான அர்த்தத்தை அவன் இப்போது புரிந்துகொண்டான். ஞானியரின் தொடர்பு நமக்கு எப்போதும் உயர்வான நிலையை அளிக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

ஒரு சமயம் ஸ்ரீ மகராஜ், ஸ்ரீ கோபாலபூட்டியின் (Gopal Buty) அழைப்பை ஏற்று நாக்பூர் சென்றார். நாக்பூர் போசால (Bhose's) ராஜியத்தின் தலைநகரமாக ஒரு காலத்தில் விளங்கியது. அதன்பிறகு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தால் அதனுடைய பெருமையையும், சுதந்திரத்தையும் இழந்துவிட்டது. யானைகளும், குதிரைகளும், பல்லக்குகளும் மறைந்து, மோட்டார் கார்களுக்கு முக்கியத்துவம் அளித்த ஆங்கிலேய ஆட்சியால், பழைய பாரம்பரிய ஆட்சி தொலைந்துபோனது. மாற்றம் என்பதுதான் காலத்தின் தத்துவமாகும் இதற்கு யாரையும் குறை கூறி பயனில்லை. ஸ்ரீ கோபால்பூட்டியின் இல்லம் சீதாபுல்தி (Sita Buldy) என்ற இடத்தில் இருந்தது. ஸ்ரீ மகராஜ் ஒரு மாளிகைவீட்டில் தங்க வைக்கப்பட்டார். எவ்வாறு கோட்டையில் புலிவாசம் செய்தால் இருக்குமோ அவ்வாறே, ஸ்ரீ மகராஜ் அவர்களும் மாளிகையில் விருப்பமின்றி தங்கி இருந்தார். ஸ்ரீ பூட்டி, ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை வாழ்நாள் முழுவதும் தன்னுடன் வைத்துக் கொள்ளப் போவதாக தீர்மானித்தார்.

ஆனால் ஷேக்காவ் கிராமம், ஸ்ரீ மகராஜ் அவர்கள் இல்லாமல் வெறுமையாக காட்சி அளித்தது. எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணரை, அக்ரூரர் பிருந்தாவனத்தில் இருந்து அழைத்துச் சென்றாரோ அதுபோல ஸ்ரீ மகராஜ் இல்லாத ஷேக்காவ் கிராமம் பாலைவனாக இருண்டு கிடப்பதாக எண்ணினார்கள். பக்தர்கள் யாவரும் ஹரிபாட்டீலிடம் எவ்வாறாயினும், ஸ்ரீ மகராஜ் அவர்களை, ஷேக்காவ் திரும்ப அழைத்து வரவேண்டும் என்று



வேண்டிக் கொண்டனர். ஸ்ரீ மகராஜ் இல்லாத ஷேக்காவ் உயிரில்லாத உடல்போல காட்சி அளித்தது.

பக்தர்கள் ஹரிபாட்டீலிடம் அவர் தம் கிராமத்தின் தலைவர் என்பதாலும், ஸ்ரீ பூட்டி ஒரு சிறந்த செல்வந்தரும் செல்வாக்கு மிகுந்தவரும், சிறந்த சேவகரும் ஆவார் என்பதால், ஹரிபாட்டீலால் மட்டுமே, ஸ்ரீ பூட்டியிடம் பேசி, ஸ்ரீ மகராஜ் அவர்களை ஷேக்காவ் கிராமம் அழைத்து வர இயலும். எவ்வாறு ஒரு யானையால் மட்டுமே மற்றொரு யானையுடன் சண்டையிட இயலும் அதைப்போல, ஹரிபாட்டீலால் மட்டுமே ஸ்ரீ பூட்டியிடம், இதுபற்றி எடுத்துரைக்க முடியும் என்றும், யானையுடன் மோதுவதற்கு தங்களைப் போன்ற நரிகளுக்கு பலம் இல்லை என்றும் முடிவிற்கு வந்து, ஹரிபாட்டீலை அனைவரும் வற்புறுத்தினார்கள். மாருதி, ஜம்புமாலியுடன் சண்டையிட தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுபோல அர்ஜுனன் கர்ணனுடன் விற்போர் புரிய தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கள் யாவரும் இவ்வாறெல்லாம் எடுத்துரைத்து ஹரிபாட்டீலை நாக்பூருக்கு அனுப்பிவைத்தனர்.

ஷேக்காவ் கிராம வாசிகள் ஸ்ரீ மகராஜ் தங்களைவிட்டு விட்டு நாக்பூரில் வசிக்க விரும்பவில்லை. அதைப்போன்று ஸ்ரீ மகராஜ் அவர்களும் நாக்பூரில் வசிக்க விரும்பவில்லை. எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணன் ஹஸ்தினாபுரத்தில் அரண்மனை வாசம் செய்யாமல், மகாமந்திரி ஸ்ரீ விதுரரின் குடிசையில் தங்கியதைப் போல, சத்குருவும் நாக்பூரில் தங்குவதற்கு மனமில்லாதவராக இருந்தார். அவர் தொடர்ந்து ஸ்ரீ பூட்டியிடம், தாம் ஷேக்காவ் செல்லவிரும்புவதாகவும், தம்மை ஷேக்காவ் அழைத்துச் செல்லுமாறும் கூறினார். ஆனால் ஸ்ரீ பூட்டி அவர் கூறியதை இலட்சியம் செய்யாமல், ஸ்ரீ மகராஜ் தம்மைவிட்டு எங்கேயும் செல்லக்கூடாது என்பதில் மிக்க கவனத்தோடு இருந்தார்.

ஸ்ரீ பூட்டி சிறந்த பக்திமான், ஸ்ரீ மகராஜ் அவர்களின் சிறந்த தொண்டர், ஆனால் அவர் தன்னுடைய செல்வத்தின் மீது மிகுந்த பெருமையும் கர்வமும் கொண்டு இருந்தார். தினமும் அவர் ஸ்ரீ மகராஜ் அவர்களோடு நிறைய பேர்களுக்கு உணவளித்தார். அது மட்டுமல்லாமல் பஜனைப் பாடல்களும், நாமஸ்மரணையும் தொடர்ந்து நடந்து கொண்டு இருந்தது. ஆனால் ஷேக்காவ் மக்கள் யாரையும் அவர் ஸ்ரீ மகராஜ் அவர்களை தரிசிக்க, தன் வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை.

அது சமயம் ஷேக்காவ் கிராமத்தில் இருந்து, சிலர் ஸ்ரீ மகராஜ் அவர்களை அழைத்துவர நாக்பூரில், ஸ்ரீ பூட்டியின் இல்லத்திற்கு சென்றதும், ஸ்ரீ பூட்டியால் அவர்கள் உடனடியாக ஷேக்காவ் திரும்ப அனுப்பப்பட்டனர்.

இப்பொழுது இக்காரியத்தை சாதிக்க, சத்குருவின் சிறந்த பக்தரான, ஹரிபாட்டீல் தன் நண்பர்கள் சிலருடன் ஸ்ரீ மகராஜை அழைத்துவர நாக்பூருக்கு புறப்பட்டார். அவர்கள் இரயில் நிலையத்தில் நாக்பூருக்கு செல்வதற்காக நுழைந்தவுடன், அதே நேரத்தில் நாக்பூரில் ஸ்ரீ மகராஜ் பூட்டியிடம், ''கோபாலா! ஹரிபாட்டீல் நாக்பூருக்கு வருகிறான். அதனால் அவன் இங்கு வருவதற்குள் நான் அங்கு செல்லவேண்டும். அவன் இங்குவந்தால் இதுவரை நீ பெற்றுவந்த மகிழ்ச்சியும், மன அமைதியும் குலைந்துவிடும். ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள்! அவன் ஒரு பெரிய அரசாங்க அதிகாரியாவான்! உன்னுடைய பலம் உன்னுடைய செல்வம் மட்டுமே ஆகும். ஆனால் ஹரிபாட்டீல் தன்னுடைய உடல் பலத்தால் என்னைத் தூக்கிக் கொண்டு ஷேக்காவ் சென்றுவிடுவான்'' என்று கூறினார்.

இதற்கு இடையில் ஹரிபாட்டீல் விரைவாக நாக்பூருக்கு வந்து தம்மை தடுத்த ஸ்ரீ பூட்டியின் காவலாளியை தம் பலம் கொண்டு கீழே தள்ளிவிட்டு, வீட்டினுள் நுழைந்தான். அந்த சமயத்தில் பூட்டியின் இல்லத்தில் பிராமணர்களுக்கு போஜனம் நடக்கவிருந்தது. மிகப்பெரிய வரிசையில் பிராமணர்கள் அமர்ந்து இருந்தனர். அனைவருக்கும் வெள்ளித்தட்டுகளில் வகைவகையான உணவு பரிமாறப்பட்டு இருந்தன. வெள்ளிப் பாத்திரங்களில் சுவையான உணவு பதார்த்தங்கள் வைக்கப்பட்டு இருந்தன. பிராமணர்கள் அமர்வதற்காக விலையுயர்ந்த மரத்தால் ஆன பலகைகள் இடப்பட்டு இருந்தன. இவை யாவற்றிலும் நடுவில், அலங்காரமாக ஸ்ரீ மகராஜ் வீற்றிருந்தார். இதுதான் ஸ்ரீமான் பூட்டி தன் செல்வத்தை காண்பிக்கும் வகையில், பிராமணர்களுக்கு போஜனம் அளிக்கும் பழக்கமாக இருந்தது. ஸ்ரீ மான் பூட்டி நாக்பூரின் குபேரன் என்று அழைக்கப்படுவார்.

ஸ்ரீ மகராஜ், ஹரிபாட்டீல் காவலாளியை கீழே தள்ளிவிட்டு வீட்டினுள் நுழைந்ததை கண்டவுடன், விரைந்து எழுந்து சென்று, ''ஓ! ஹரி! வா நாம் ஷேக்காவ் சென்றுவிடலாம்! நானும் இங்கிருந்து புறப்படுவதற்கு விரும்புகிறேன். நீ என்னை அழைத்துப்போக வந்திருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று கூறி ஸ்ரீ மகராஜ், ஹரியுடன் வீட்டு



வாயிலை கடக்க முற்பட்டார். இதற்குள் ஸ்ரீ பூட்டி விரைந்து ஸ்ரீ மகராஜ் அவர்களின் இரு பாதங்களையும், மரியாதையுடன் பற்றிக் கொண்டு, ''ஓ! மகராஜ்! தயை கூர்ந்து என்னை புறக்கணிக்க வேண்டாம்! அன்போடு அளிக்கும் உணவை ஏற்றுக் கொண்டு பிறகு நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள்'' என்று மன்றாடி கேட்டுக் கொண்டார்.

மேலும் ஸ்ரீ பூட்டி, ''ஹரிபாட்டீலிடம் தயவு செய்து தன் கோரிக்கையை ஏற்று ப்ரஸாதம் உண்டுவிட்டு பிறகு, ஸ்ரீ மகராஜ் அவர்களை அழைத்துக்கொண்டு போவாயாக! என்றார். மேலும் ஸ்ரீ பூட்டி, எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது இனியும் நான் விரும்பினாலும் ஸ்ரீ மகராஜ் அவர்கள் இங்கே என்னுடன் தங்கபோவது இல்லை. என்னுடைய கௌரவத்தை, இந்த பிராமணர்கள் முன்னால் காப்பாற்ற வேண்டும்'' என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டார். ஒரு வேளை ஸ்ரீ மகராஜ் அவர்கள், உணவு உண்ணாமல் சென்றுவிட்டால், இந்தப் பிராமணர்கள் யாரும் உணவைத் தொடமாட்டார்கள். அப்படி ஒரு சம்பவம் நடந்தால் அது எனக்கு மிகவும் துக்கத்தையும், வெட்கக்கேடான நிகழ்வையும், அவமானத்தையும் நாக்பூரில் தேடித்தரும். ஆகையால் தயை கூர்ந்து ஷேக்காவ் மக்களோடு சேர்ந்து, ஸ்ரீ மகராஜ் அவர்களும் உணவருந்திவிட்டு பின்னர் செல்வதற்கான ஏற்பாட்டை நானே செய்து தருகிறேன் என்று பணிவோடு வேண்டிக் கொண்டதால், ஹரிபாட்டீல் இதற்கு சம்மதித்தார்.

ஸ்ரீ மகராஜ், ஷேக்காவ் கிராமவாசிகளுடன் மதிய உணவு அருந்தியவுடன் அனைவரும் ஷேக்காவ் புறப்பட ஆயத்தமானார்கள். ஸ்ரீ மகராஜ் அவர்களை வழி அனுப்ப எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டு இருந்தபோது, ஸ்ரீ பூட்டியின் மனைவியும் அந்த இல்லத்தின் லட்சுமியும் ஆன ஸ்ரீமதி. ஜானகிபாயி, ஸ்ரீ மகராஜ் அவர்களின் தரிசனத்திற்காக வெளியே வந்து அவர் பாதங்களை ஸ்பரிசித்து, அவரிடம் தம்முடைய எண்ணம் இன்னும் ஈடேறாமல் உள்ளது என்று தெரிவித்தார்.

ஸ்ரீ மகராஜ், அவர் சொல்வதைப் புரிந்து கொண்டு, குங்குமத்தை அவள் நெற்றியில் இட்டு, உனக்கு உன் விருப்பப்படியே இன்னொரு மகன் பிறப்பான். அவன் மிகவும் நல்லவனாகவும் இருப்பான் என்றும், நீ உன் எண்ணப்படியே உன் கணவன் ஆயுள் இருக்கும்போதே சுமங்கலியாக இறந்து, மோக்ஷத்தை (முக்தியை) அடைவாய் என்று ஆசீர்வதித்தார்.

அவருடைய இந்த ஆசீர்வாதத்துடன், சீதாபுல்தியை விட்டு நீங்கி அவர்கள் புறப்பட்டு ஸ்ரீராகுஜிராவ் அவர்களின் மாளிகைக்குச் சென்றனர். ராகுஜி மிகவும் எளிமையானவரும், பக்திமானாகவும், உத்தம குணத்தை கொண்டவரும், ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியின் சிறந்த பக்தரும் ஆவார். அவர் தன் ராஜ்ஜியத்தை, ஆங்கிலேயரிடம் இருந்து இழந்தவர். ஆனால் ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆசியினால், ஸ்வர்க்கராஜ்ஜியத்தின் பதவியைப் பெற்றார். அவர் ஸ்ரீ மகராஜ் அவர்களை ஆத்மார்த்த பக்தியுடனும் உள்ளன்புடனும் வழிபட்டார். பின்னர் அவர் ராம்டெக் (Ramtec) சென்று ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் தரிசனம் பெற்று ஷேக்காவ் கிராமத்திற்கு ஹரிபாட்டீலுடன் வந்தார்.

ஒரு சமயம் ஸ்ரீ ரங்கநாத் என்ற பெரிய சாது, தர்கல்யாண் (Dhar Kalayan) என்ற இடத்தில் இருந்து ஸ்ரீ மகராஜ் அவர்களின் தரிசனம் பெற ஷேக்காவ் வருகைதந்தார். ஸ்ரீ மகராஜ் அவர்களும், ஸ்ரீ ரங்கநாத் அவர்களும் தங்களுடைய பாணியில் அத்யாத்மாவைக் குறித்து ஒருவரை ஒருவர் நன்றாக அறிமுகம் ஆனவர்கள் போல, நீண்ட நேரம் உரையாடிக் கொண்டு இருந்தனர்.

ஒரு சமயம் கிருஷ்ணா நதிக்கரையில் வசித்துவந்த, மங்காவ் (Mangaon) கிராமத்தைச் சேர்ந்த **ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி** (ஸ்ரீ தத்த குருஸ்தலத்தை உருவாக்கியவர், கோராத் அஷ்டகத்தை இயற்றியவர், மேலும் நிறைல் ஸ்லோகங்களும் சமஸ்கிருதத்தில் எழுதியவர்) தேம்பேஸ்வாமிகள் என்று அனைவராலும் போற்றப்படுபவர் ஷேக்காவ் கிராமத்திற்கு, வந்து ஸ்ரீ மகராஜ் அவர்களை சந்திக்க ஏற்பாடு ஆகி இருந்தபோது ஸ்ரீ மகராஜ் பாலபுவாவிடம், ''ஓ பாலா! என்னுடைய அன்பு மிக்க சகோதரர்களில் ஒருவரான வாசுதேவானந்த ஸரஸ்வதி, நாளை என்னை காணவருகிறார். அவருக்கு உரிய முறையில் நல்லவரவேற்பும், மரியாதையும் அளிக்க வேண்டியது நம் கடமையாகும். அவர் மிகவும் பழமை வாய்ந்த கலாச்சாரத்தை பின்பற்றுவதில் கண்டிப்பானவர். ஆகையால் இவ்விடம் முழுவதும் சுத்தமாக இருக்க வேண்டும். ஒரு சிறிய குப்பை கூட தரையில் இருக்காமல் நீ பார்த்துக் கொள்ள வேண்டும். அவர் குப்பையும், அசுத்தத்தையும் கண்டால் பொறுக்க மாட்டார். அவருடைய கோபம் ஜமதக்கினி முனிவரின் கோபம் போன்றது. அந்த கராதா (Karhade) பிராமணர் எப்போதும் சுத்தமாக இருப்பவர். உயர்வான சாஸ்திரங்களை எல்லாம் கற்று சிறந்த



கல்வி அறிவு உடையவர், ஒழுக்கத்திற்கும் சாஸ்திர சம்பிரதாயத்திற்கும் மாறான காரியங்களை அவர் ஒருநாளும் சகித்துக் கொள்ளமாட்டார்.

எத்தகைய அன்புள்ளம் கொண்டவர் நம் ஸ்ரீ மகராஜ் என்பதை நினைக்கும் பொழுது மனம் மகிழ்ச்சியடைகிறது. ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதியும், ஸ்ரீ மகராஜ் அவர்களும் அதுவரை நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டதே இல்லை. இதுதான் உண்மையான ஞானியரின் நட்பாகும். நாம் முன்னர் குறிப்பிட்ட ஒரு வைதீக பிராமணன், சாஸ்திர சமப்ரதாயங்களை மட்டுமே கடைபிடித்து, தர்மத்தையும், அன்பையும் மறந்து கர்வம் கொண்டு எல்லோரையும் நிந்திக்கும் சுபாவம் கொண்டதால், சத்குரு அவனுக்கு இறந்த நாயை உயிருடன் எழுப்பி பாடம் கற்றுக் கொடுத்தார்.

ஆனால் தேம்பே ஸ்வாமிகள் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் உலகின் இன்பங்களை துறந்தவர். சிறந்த பண்புடைய ஞானியும் ஆவார். மனம் பக்குவப்பட்டால் அன்றி எத்தகைய நூல்களைக் கற்றாலும் அவை பயன்படாது. ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி, வருவதற்கு ஒரு நாளை முன்னரே ஸ்ரீ மகராஜ் பாலபாவுவிடம் அவர்பற்றி எடுத்துரைத்த விதம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி ஷேக்காவ் வந்ததும் அவர் ஸ்ரீ மகராஜ் அவர்களை சந்தித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு புன்னகைத்தனர். அவர்கள் இருவரும் மிவும் சந்தோஷத்துடன் காணப்பட்டனர். அவர் கர்மயோகி, நம் சத்குரு ராஜயோகி, யோகமார்க்கத்தின் அரசனாவார். அவர் நறுமணமிக்க மல்லிகை மலரின் வாசனையானால் மற்றவர் ரோஜா இதழின் வாசனை போன்றவர். ஒருவர் ஒருவரை புனித கங்கை நதியாகவும், மற்ற கோதாவரியாகவும், ஒப்பிட்டு சிறப்பிக்கலாம். ஒருவர் பசுபதியின் அவதாரம் என்றும் மற்றவர் ஸ்ரீ ராமநாராயணன் அவதாரம் என்றே கூறலாம்.

ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள், மடத்தினுள் நுழைந்து நம் சத்குருவை காணவந்தபோது, நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் தன் கட்டிலின் மேல் அமர்ந்து கொண்டு ஆனந்தத்தில் தமது இருகைகளையும் தட்டிக் கொண்டு இருந்தார். ஸ்ரீ வாசுதேவானந்தரைக் கண்டதும் விரல்கள் தாளம்போடுவதை

நிறுத்திவிட்டு கண்கள் நான்கும் சந்தித்துக் கொண்டன. செல்லும்போது ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி நம் சத்குருவிடம் கண்களால் உத்தரவு பெற்றபோது, நம் சத்குருவும் நல்லது என்று கூறி தன் தலையைத் தாழ்த்தி தன் சம்மதத்தை தெரிவித்தார். அவர் சென்றதும் பாலபுவாவிற்கு ஒரு சந்தேகம் எழும்பியது. அவர் நம் சத்குருவிடம், ''ஸ்வாமி! நீங்கள் இருவரும் வெவ்வேறான வழியில் ஆன்மீக உணர்வில் திளைத்தவர்கள். ஆனாலும் அவரைத் தங்களின் சகோதரர் என்று எவ்வாறு குறிப்பிட்டீர்கள்'' என்று கேட்டார்.

ஸ்ரீ மகராஜ் பாலபுவாவை நோக்கி, ''பாலா நீ இன்று ஒரு நல்ல கேள்வியைக் கேட்டாய்! **கடவுளை அடைய மூன்று வழிகள் உள்ளது. இவை மூன்றும் தன்னிலை அறிதல் என்ற இடத்திற்கு அழைத்துச் செல்லக்கூடியவை.** அவை தோற்றத்தில் வெவ்வேறாக தோன்றினாலும் அவற்றின் இயல்பு ஒன்றே ஆகும். அதனால் தான் இந்த குழப்பம் உனக்கு நேர்ந்தது'' என்று கூறிய சத்குரு அம்மூன்று மார்கங்களைக் குறித்தும் எடுத்துரைக்கத் துவங்கினார். இவ்விளக்கங்கள் பாலபுவாவிற்கு மட்டுமல்ல, இறைவனை அடைய வேண்டியும் ஆனால் அவ்வழியை அறியாமல் தவித்துக் கொண்டு இருக்கும் அனைவருக்கும் சத்குருவின் மகா பிரசாதமாகும்.

**கர்ம யோகம்**

கர்ம யோகமார்கத்தில் நாமும் நம்மைச்சுற்றி இருக்கும் இடமும், சுத்தமாகவும் நன்றாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். தோஷம் இல்லாத பட்டு வேஷ்டிகள் முதலியவற்றை உபயோகப்படுத்தி, சாஸ்திர சம்ப்ரதாயங்களை முறையாகப் பின்பற்ற வேண்டும். கர்ம யோகத்தில் ஒருவரையும் தீண்டக் கூடாது. இறைவனை மூன்று வேளையும், முறையான சம்ப்ரதாயங்கள் மூலம் பூஜிக்க வேண்டும். தவறாமல் விசேஷமான நாட்களிலும் உபவாசம், நோன்பு இவற்றை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். இந்த பழமைவாய்ந்த நம் காலாசாரத்தில் பழக்க வழக்கங்களை முறையாக பின்பற்றுவதன் மூலம் கர்மயோகத்தை அடைய இயலும், இவ்வாறாக மேற்கூறப்பட்ட நெறிமுறைகளில் ஏதாவது தவறு செய்து வழக்கத்திற்கு மாறாக ஒழுக்கமற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால் கர்ம யோக்திலிருந்து அவன் விடபட்டுவிடவேண்டும். மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியமாகிறது, மிகவும் முக்கியமாக கர்மயோகம் போதிப்பது என்னவெனில் எவரையும் மனதாலும், வாக்காலும்



காயப்படுத்தக்கூடாது. கர்ம யோத்தை முறையாகவும், சிரத்தையாகவும் பின்பற்றும் பலர், துரதிருஷ்டவசமாக பிறருடைய நடவடிக்கைகளை குறைகூறியும், கேலிசெய்தும் தம்மை பிறரைக்காட்டிலும் மிகைப்படுத்திக் காட்டிக்கொள்வதன் மூலமாகவும் கர்மயோக மார்கத்தை விட்டு அடியோடு நீககப்படுகின்றனர்.

**பக்திமார்கம்**

இந்த மார்கத்தில் மனம் மிகவும் தூய்மையுடனும், முழுமையான அன்புடனும் இருக்க வேண்டியது அவசியமாகும். தீய எண்ணங்கள் நிழல் கூட மனதில் தோன்றாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பக்தியின் ரஹஸ்யம் என்னவெனில் முழுமையான நம்பிக்கையும், தூய்மையான அன்பும் ஆகும். வழிபாடுகளில் கருத்தூன்றி இருக்க வேண்டும். இடைவிடாது ஹரி நாமத்தை உச்சரிக்க வேண்டும். ஆத்மாவில் இறைவனை நிறுத்தி எந்நேரமும் இறைவன் நாமத்தை உச்சரித்துக் கொண்டு இருக்க வேண்டும். எல்லா உயிர்களிலும் இறைவனை காண வேண்டும். மனம் உருகி பிரார்த்திக்கவும், பிறரின் நலனுக்காகவும் இறைவனை வேண்டுவது அவசியமாகும். இதை முறையாகப் பின்பற்றுபவர்கள் ஸ்ரீ ஹரியை காணலாம். இந்த மார்கத்தை பின்பற்றுவதன் மூலம் தன்னிலை அறிதல் என்பது மிகவும் எளிதாகிறது. ஆனால் நடைமுறையில் இது கர்ம யோகத்தை விட கடினமான மார்கமாகும். கண்ணுக்கெதிராக நீலவானம் தோன்றினாலும் தொடுவதற்கும், அருகில் செல்வதற்கும் இயலாததைப் போல நடைமுறைப்படுத்துவதில் கடினமான மார்கமாகும்.

**யோக மார்கம்**

மற்ற இரண்டு மார்கங்களை தவிர யோகமார்கம் உலகம் முழுவதும் விரைவாக பரவி வருகிறது. அது தன் ஆத்மாவில் நடக்கும் நிகழ்வாகும். யோகமார்கத்தை தேடுபவன் இறைவனை வெளியில் தேடக்கூடாது. தம் அந்தரங்க ஆத்மாவில் தேட வேண்டும். இந்த பிரபஞ்சத்தில் என்னவெல்லாம் இருக்கிறதோ, அவையாவும் அந்தராத்மாவில் காண வேண்டும். வெளி உலக நிகழ்வுகளை மனதில் நிறுத்தி ஆத்மாவில் அதன் செயல்பாட்டை துவங்க வேண்டும்.

முதலில் யோகாசனப் பயிற்சிகளைத் துவங்க வேண்டும். ஆசனங்கள், சக்கரங்கள் உணர்தல், இடகலை, பிங்கலை (Know

Bhak) என்ற நாடிகளின் சூத்திரத்தை அறிய வேண்டும். முத்திரைகளையும் (Dhouti, Tratak) முறையாக உணர்ந்து கொள்ள வேண்டும். யோகமார்க்கத்தை கடைபிடிப்பவர்கள் அதில் வெற்றி அடைய வேண்டுமெனில், முதலில் அவருக்கு குண்டலினியின் சக்தியும், சூட்சும நாடியின் சக்தியும் தெளிவாக புரிந்தபின்னர் அவற்றை முறையாக இயக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

இவை எல்லா மார்கங்களிலும் கிடைக்கும் பொதுவான பலன் தன்னை அறியும் அறிவாகும். ஆனால் அன்பும், ஈடுபாடும் இல்லாமல், தன்னை அறிதல் என்பது வீணான முயற்சியாகும். எந்தச் செயலும் அன்பின்றி, ஈடுபாடின்றி செய்யப்படுமானால் அது பலனை அளிக்காது. சரீரத்திற்கு மட்டுமே கருப்பு, சிவப்பு, வெள்ளை, உயரம், குள்ளம், அழகு, அருவருப்பு, இவையாவும் உள்ளன. ஆனால் ஆத்மாவிற்கு இவை எதுவுமே கிடையாது. சரீரங்கள் வித்தியாசமாக இருந்தாலும் ஆத்மா ஒன்றேயாகும். அதே போன்று, இந்த மூன்று மார்கங்களுக்கும் தன்னிலை அறிதல் என்ற மார்க்கத்தை நோக்கி நம்மை இட்டுச் செல்கிறது. மேற்கூறிய மூன்று மார்கங்களும் அடிப்படையில் வெவ்வேறான வழிமுறைகளைக் கொண்டுள்ளன. ஆனால் அவற்றின் இலட்சியமும், இலக்கும் ஒன்றே ஆகும்.

அந்த மார்கங்கள் தாங்கள் அடைய வேண்டிய இலக்கை அடைந்தவுடன் அவைகள் எல்லாம் ஒன்றாக ஆகிவிடுகின்றன. இந்த மூன்று மார்கங்களில் ஒன்றை கடைபிடிப்பவர்கள் யாவரும் இறுதியாக ஒளியின் நிலையை அடைகின்றனர். அவர்கள் தங்களுக்குள் வேறுபாடு இல்லாமல் ஒன்றாகக் கலக்கின்றனர். வசிஷ்டர், வாமதேவர், ஜமதக்கினி, அத்ரி, பாரசரர் மற்றும் சாண்டில்யமுனி தங்கள் இலக்கை கர்ம யோகத்தின் வாயிலாக அடைந்தனர். வியாசர், நாரதர், கயாது குமாரர், மாரோமட்டி, சபரி ஆகியோர், உத்தவர், சுதாமர், பார்த்தன் மற்றும் விதுரர் தங்கள் இலக்கை பக்தி யோகத்தின் வாயிலாக அடைந்தனர். ஸ்ரீ சங்கராச்சாரியார், குருவார், மச்சீந்திரர், கோரக்கர் மற்றும் ஜலந்தர் ஆகியோர்கள் தங்கள் இலக்கை யோக மார்கத்தின் மூலம் அடைந்தனர். இவற்றில் மூன்றில் மார்கங்களிலும் ஒவ்வொன்றை பின்பற்றிய வசிஷ்டரும், விதுரரும் மற்றும் மச்சீந்திரரும் ஒரே பலனை அடைந்தனர். இறுதியில் இவர்களுடைய இலக்கு ஒன்றே ஆகும். ஸ்ரீ தத்த அவதாரி ஸ்ரீ பாத வல்லபர் கர்ம யோகத்தின் முக்கியத்துவத்தை பாதுகாத்தார். அவரைத் தொடர்ந்து ஸ்ரீ நிருசிம்ம ஸரஸ்வதி கர்ம யோகத்தை ஏற்றார். (ஸ்ரீ தத்தரின்



இரண்டாவது அவதாரமான கானகாபூரி வாழ்ந்த ஸ்ரீ நிருசிம்ம சரஸ்வதி மகராஜ் ஆவார்.) அவரைத் தொடர்ந்து நாமா, சாவதா, த்யானேஷ்வர், சேனாகாணு, சோக்கா, மஹர் மற்றும் தாமாஜிபந்த், தானதேர் தங்கள் இலக்கை பக்தி மார்கத்தின் மூலம் அடைந்தனர். ஸ்ரீகோண்டாவைச் சார்ந்த சீக்முகமது வயலாரை சார்ந்த ஆனந்தி ஸ்வாமி, அஞ்சன்காவைச் சேர்ந்த, தேவநாத் மகராஜ் அவர்களும் யோகமார்கத்தை கடைபிடித்தனர். தற்பொழுது ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி கர்ம யோகத்தை கடைபிடித்து வருகிறார். நானும் மற்றும் பலரும் பக்திமார்கத்தை கடைபிடிக்கிறோம்.

பாலூரைச் சேர்ந்த தொண்டிபுவா நானா, ஜால்னாவைச் சேர்ந்த யஷ்வந்த்ராவ் போன்றவர்கள் பக்திமார்கத்தில் வெற்றியை ஈட்டியவர்கள். கல்லா அம்மா, ஷீர்டியில் வாழ்கின்ற சமர்த்த ஸ்ரீ சாய்பாபா மற்றும் குலாப்ராவ் சந்தூர், தஹசிலைச் சேர்ந்த, வார்கட் பகுதியில் வசித்த சாதுவான அட்கு ஆகியோரும், இறுதி இலக்கான தன்னிலை அறிதல் என்ற நிலையை அடைந்தவர்கள். முர்ஷாவைச் சேர்ந்த ஞானியும் நாக்பூரைச் சேர்ந்த தாஜுதீன் பாபா, அவர்களும் பக்தி மார்கத்தை கடைபிடித்தனர். மேற்கூறப்பட்ட எல்லா ஞானியரும் வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்டவர்கள். ஆனால் யாவரும் இறுதியில் இறைவனோடு கலந்துவிட்ட ஒன்றிய நிலையை அடைந்தனர். நாம் எந்த மார்கத்தை ஏற்றுக் கொள்கிறோம் என்பது முக்கியமல்ல. இறுதியில் அடைய வேண்டிய இலக்குதான் முக்கியத்துவம் வாய்ந்தது.

என்னைப் போன்ற எல்லா சகோதரர்களும் இவ்வுலகில் அவதாரம் எடுத்த நோக்கம் நல்லவர்களை வழி நடத்தி, மோட்சத்தை (முக்தியை) அடைவதற்கு துணை நிற்பது தான் ஆகும். அவரவர் விருப்பப்படி தேர்ந்தெடுக்கும் மார்கத்தை கடைபிடித்து, முக்தியை அடைவதுதான் இறுதி இலட்சியம் ஆகும்.

இப்பொழுது, இதை தவிர வேறு எதுவும் என்னிடத்தில் கேட்காதே! இதை எல்லோரிடத்தும் சொல்லவும் தேவையில்லை! நான் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும். என்மீது உண்மையான அன்பும், நம்பிக்கையும் கொண்டும் வருவோருக்கு மட்டும் தான் ஆசீர்வதித்து, அவருடைய கோரிக்கைகளை பூர்த்தி செய்கிறேன். நம்பிக்கை இல்லாதவர்கள் எனக்கு தேவையில்லை. பிரம்ம ஞானம் உண்மையான நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டவர்களுக்கே போதிக்கப்பட வேண்டும்.

நம்பிக்கையற்றவர்களுக்குக போதிப்பதில் ஒரு பலனும் இல்லை. கடவுளை அடைய நம்முடைய வழியில், நாம் உறுதியாக இருக்க வேண்டும்'' என்றார்.

சத்குருவின் இவ்வறிவுரையைக் கேட்ட பாலபுவா, கண்களில் கண்ணீர் சிந்தி சத்குருவை நமஸ்கரித்தார். பாலபுவாவின் உடல் முழுவதும் சிலிர்த்து, பேரின்ப நிலையை அடைந்துவிட்டது போன்ற உணர்வை அவருக்கு ஏற்படுத்தியது. அதை எடுத்துச் சொல்வதற்கு வார்த்தைககளே வராத நிலையில் அந்த உணர்வு அவரை ஆனந்தப்படுத்தியது. அவர் அமைதியாக ஸ்ரீ மகராஜ் அவர்களை வணங்கினார். நம் சத்குருவின் அவதார நோக்கம் தம்மிடம் நம்பிக்கை கொண்டிருக்கும் அடியவர்களுக்கு முக்தி அடையும் மார்கத்தை காண்பிப்பது தான் என்பதை நாம் தெளிவாக உணர இயலும்.

சானுபாய் என்ற பெயருடைய ஒரு பெண்மணி ஸ்ரீ மகராஜ் அவர்களின் தீவிர பக்தை ஆவார். ஒரு சமயம், ஸ்ரீ மகராஜ் அவளிடம், ''சானுபாய், ரொட்டிமாவும் பருப்பு வகைகளும் எடுத்துக் கொண்டு காலையும் மாலையும் இடைவிடாது சமைத்து இங்கு வருபவர்களுக்கு உணவு அளிப்பாயாக! இவ்வாறு செய்தால் ஸ்ரீமன் நாராயணன் உன்னை மிகவும் விரும்புவார்'' என்றார். வைசாபூரைச் சேர்ந்த அந்த சானுபாய் இன்றளவும் ஷேக்காவ் கிராமத்தில் வசித்து வருகிறார்.

ப்ரஹலாத புவா ஜோஷி ஒரு முறை, ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற வாய்ப்பு கிடைத்தும் அவ்வாய்ப்பை நழுவவிட்டார்.

காம்காவ் கிராமத்திற்கு அருகில் ஜாலம்ப் என்ற இடத்தில் துளசிராம் என்பவர் வசித்து வந்தார். அவருடைய மகன் ஆத்மாராம் மிகவும் திறமையான இளைஞன். அவருக்கு வேதங்களின் மேல் மிகுந்த ஈடுபாடு உண்டு. அதனால் காசிக்குச் சென்று வேதங்களைக் கற்றான். தினமும் அவன் பாகீரதி ஆற்றில் குளித்து விட்டு, உணவுக்காக மதுகரி (Madhukari) என்று கூறப்படும். கை நீட்டி யாசகம் பெற்ற உணவை, அருந்திவிட்டு, குருவிடம் சென்று, வேதங்களை கற்கத் துவங்குவது அவனது வழக்கமாக இருந்தது. இப்போதுள்ள மாணவர்களுக்கு இதுமிகவும் எதிரான செயலாகும். வீண்பேச்சுக்களிலும், கேளிக்கைகளிலும் பொழுதை வீணாக கழித்துக் கொண்டிருக்கும், இப்போதுள்ள இளைஞர் சமுதாயம் முறையாக கல்வி பயில மறுக்கின்றனர்.



ஆனால் ஆத்மாராம் அப்படி அல்ல, அவருடைய பொறுப்புகளை அவன் நன்றாக அறிந்தவன் அவன் ஷேக்காவ் சென்று ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை நமஸ்கரித்து, அவருக்கு மரியாதை செலுத்தினான். ஆத்மாராமிற்கு வேதங்கள் தெரிந்தாலும், ஸ்ரீ மகராஜ் வேதங்களுக்கெல்லாம் சூரியன் ஆவார். அவர் ஆத்மாராமோடு சேர்ந்து வேதங்கள் சொல்ல ஆரம்பித்தார். இடையில் ஆத்மாராம் தவறு செய்யும்போது அதைத் திருத்தினார்.

அங்கிருந்த அனைவரும், ஸ்ரீ மகராஜ் வேதங்களை இத்தனை கோர்வையாக பாராயணம் செய்ததை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆத்மாராம் மிகவும் மகிழ்ந்து அந்த இடம் விட்டுச் செல்ல மனமில்லாமல் அங்கேயே அவருடனே தங்கிவிட்டான். தேன் கூட்டைவிட்டு தேனி எவ்வாறு வெளியேறும்? தினமும் அவன் ஜாலம்பிலிருந்து ஷேக்காவ் வந்திருந்திருந்து, தன்னுடைய சேவையை சத்குருவுக்குச் செய்யத் தொடங்கினான். ஸ்ரீ மகராஜ் உடலைவிட்டு தன் இன்னுயிர் நீத்தபின்னும் கூட தன்னுடைய பக்தியால் ஆத்மாராம், அவர் மகாசமாதிக்கு தினமும் வந்து சேவை செய்தான். அவன் அதற்காக எவ்வித தொகையும் பெற்றுக் கொள்ளவில்லை. அவன் தன்னுடைய ஒரே வீட்டையும் தன் சொந்த நிலத்தையும் ஸ்ரீ கஜானன் மகராஜ் சமஸ்தானத்தின் ட்ரஸ்டுக்கு அளித்துவிட்டான். அளிக்கும் ஒரு பொருளுக்கு உரிய மதிப்பு உண்மையிலேயே அவன் ஆத்மார்த்தமான அன்புடன் அளித்ததால் பலமடங்கு மதிப்புப் பெறுகிறது. மதிப்பு என்பது அளிக்கும் பொருளில் அல்ல, அதை அளிக்கும் தூய்மையான ஆத்மாவை சேர்ந்தது. பக்த சபரி ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அளித்த பொருள் தான் கடித்த நெல்லிக்கனி அல்ல அதை அளித்த அவளுடைய ஆத்மார்த்தமான உள்ளம் மட்டுமே ஆகும்.

ஸ்வாமி தத்தாத்ரேய கேதார், நாராயண், ஜாம்கர் மற்றும் துதாஹரிபுவா இவர்க் வெறும் பால்மட்டுமே அருந்தி உயிர் வாழ்ந்தனர். இவர்கள் யாவரும் நம் சத்குருவின் தீவிர பக்தர்கள் ஆவார்கள்.

நாம் இப்போது பாலாபூர் தாலுகாவில் உள்ள மோர்காவ் பக்ரேயில் வசித்து வந்த மாருதிபந்த் பட்வாரியின் கதைபற்றி காண்போம். மாருதிபந்த் தன் பயிரை வயிலில் பாதுகாக்க திமாஜிமாலி என்பவரை பணியாளாக வைத்திருந்தார். ஒரு நாள் இரவு பயிரைக் காத்துக் கொண்டிருக்கும் வேளையில் திமாஜிமாலி அயர்ந்து தூங்கிவிட்டான். அந்த நேரத்தில் சில கழுதைகள்

வயலில் நுழைந்து பயிரை மேயத் தொடங்கியது. ஆனால் மாரோட்டி என்ற மாருதிபந்த் பட்வாரி ஸ்ரீ மகராஜ் அவர்களின் தீவிர பக்தராவார். ஆதலால் ஸ்ரீ மகராஜ் தன் பக்தனுக்காக அந்த பயிரைக் காக்க வயலுக்கு விரைந்து வந்தார். அங்கு தூங்கிக் கொண்டிருந்த திமாஜிமாலியை எழுப்பினார். திமாஜி தூக்கத்தில் இருந்து எழுந்திருக்கும் வேளையில் ஸ்ரீ மகராஜ் மறைந்துவிட்டார். அங்கு வந்து பயிர்களை நாசம் செய்து கொண்டிருந்த கழுதைகளை கண்டு அவைகளை விரட்டியடித்தான். ஆனால் பாதிக்குமேல் பயிர்களை கழுதைகள் தின்றுவிட்டிருந்தன. அவன் தன் எஜமானருக்கு விசுவாசமாக இருக்க இயலவில்லை என்பதை நினைத்து மிகவும் வருந்தினான். தன்னுடைய கவனக் குறைவிற்காக தான் எஜமானிடம் வேறு எந்த காரணமும் கூற இயலாது என்று உணர்ந்தான். இதைக் கூறும்போது, அப்போதைய பணியாட்கள் தங்கள் எஜமானன் மேல் வைத்த விசுவாசமும், துளியும் துரதிருஷ்டவசமாக இப்போதைய பணியாட்களிடம் காணப்படவில்லை. திமாஜி நேர்மையானவன் அதனால், தன்னால் தன் எஜமானருக்கு இத்தகைய நஷ்டம் ஏற்பட்டதை அவனாக் தாங்கிக் கொள்ள இயலவில்லை.

அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்தான். தன் எஜமானரிடம் நடந்த தவறுக்கு மன்னிப்பு கோரினால், அவர் நிச்சயம் தன்னை மன்னிப்பார் என்று நம்பிக்கை கொண்டார். ஆகையால் அவன் விரைந்து சென்று தன் எஜமானனின் கால்களைப் பிடித்துக் கொண்டு, ''ஓ ஐயாவே! என்னுடைய உறக்கம் தங்களுக்கு இன்று நிறைய நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டது. கழுதைகள், நான் உறங்கிக்கொண்டு இருந்ததால் வயலின் பயிரை நாசம் செய்துவிட்டன. கருணையோடு வயலுக்கு வந்து எத்தனை அளவு தானியங்கள் நஷ்டப்பட்டுப் போய்விட்டது என்று தெரிந்து கொள்ளுங்கள்'' என்றான். அப்பொழுதுதான் தன் மனம் ஒருவகையில் நிம்மதியாகும் என்றார்.

உடனே மாரோட்டி தனக்கு வயலுக்கு வருவதற்கு நேரமில்லை என்றும் தான் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை தரிசிக்க ஷேக்காவ் செல்வதாகவும் கூறினார். ஆனால் அவர் திரும்பிவரும் வேளையில் தன் வயலுக்கு வந்துபார்ப்பதாக வாக்களித்து ஷேக்காவ் கிராமத்திற்கு புறப்பட்டுச் சென்றார்.

மாரோட்டியைப் பார்த்த ஸ்ரீ மகராஜ் சிரித்துக் கொண்டே, ''உன்னால் எனக்கு நேற்று இரவு மிகுந்த தொல்லை ஏற்பட்டுவிட்டது. நீ என்னுடைய பக்தன். ஆனால் என்னை உன்



தோட்டத்தின் காவலாளியாக ஆக்கிவிட்டாய். சோம்பேறியான வேலைக்காரனை நியமித்து அவன்போல நீயும் உன் வீட்டில் சுகமாக படுத்து உறங்கிவிட்டாய்! மாரோட்டி! நேற்று இரவு உன் காவலாளி திமாஜி நன்றாகத் தூங்கியதால், கழுதைகள் உன் வயலின் தானியங்களை மேயத் தொடங்கியது. அதனால் உன் வயலைக் காக்க வேண்டி, நான் அங்கு வந்து தூங்கிக் கொண்டிருந்த திமாஜியை எழுப்பினேன். அவன் எழுந்தவுடன் கழுதைகளிடம் இருந்து பயிர்களைக் காக்குமாறு கூறிவிட்டு நான் திரும்பிவிட்டேன்'' என்றார். மாரோட்டி உண்மை நிலையை புரிந்து கொண்டான்.

ஸ்ரீ மகராஜ் அவர்களின் பாதங்களை ஸ்பரிசித்து, ஸ்ரீ மகராஜ், ''நீங்கள் மட்டுமே எங்களுடைய பாதுகாவலர்! குழந்தையின் எல்லாப் பொறுப்பையும் அதன் தாயார் ஏற்றுக் கொள்வதைக் போல, நீங்கள் எங்கள் வயலைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்கள்! இன்று எங்களிடம் இருக்கும் எல்லாமே தங்களுடையதுதான், அவ்வாறெனில், அந்த தானியங்களும் உங்களுடையவைதான். வெறும் பெயருக்காக மட்டுமே திமாஜி என் பணியாளனாக இருக்கிறான். தாங்கள் இந்த இடத்தில் அமர்ந்து கொண்டு இப்பிரபஞ்சம் முழுவதையும் காப்பாற்றுகிறீர்கள்! எவ்வாறு தாயானவள் தன் குழந்தை செய்யும் எல்லா தவறுகளையும் சகித்துக் கொள்கிறாளோ அதைப்போல தாங்கள் எங்கள் மார்கங் கிராமத்திற்கு வருகைதந்து வந்து என்னையும் என் பயிர்களையும் காத்தருளினீர்கள்! மிகுந்த நஷ்டத்திலிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். அன்பு கூர்ந்து இதே ஆசீர்வாதத்தை தொடர்ந்து எமக்கு தருவீராக, நான் இப்போது மோர்காவ் சென்று திமாஜியை வேலையைவிட்டு நீக்கிவிடுகிறேன்'' என்றான்.

ஸ்ரீ மகராஜ் மாரோட்டியிடம், ''வேண்டாம் திமாஜியை வேலையைவிட்டு நீக்க வேண்டாம். அவன் நேர்மையான பணியாள் ஆவான். கழுதைகள் உன் வயலை நாசம் செய்ததற்கு மிகவும் வருந்தினான். இன்று காலை அவன் உன்னைப் பார்த்து உன்னிடம் மன்னிப்பு வேண்டினான் அல்லவா? அவன் மேலும் வயலை ஒருமுறை நீ வந்து பார்வையிட்டு நஷ்டத்தை கணக்கிட்டு சொல்லுமாறு உன்னை வேண்டிக் கொண்டபோது, நீ அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு இங்கு வந்துவிட்டாய்! இதெல்லாம் சரிதானே'' என்றார் சத்குரு.

மாரோட்டி, ஸ்ரீ மகராஜ் அவர்களின் அளவற்ற ஆற்றலை எண்ணி, அதிசயித்து நான் யாரிடமும் இதைப் பற்றி பேசக்கூட

இல்லை. நடந்த எல்லாவற்றையும் துல்லியமாக கணக்கிட்டுச் சொல்லும் இவர் நிச்சயமாக, தெய்வ அவதாரமாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து அவரை நமஸ்கரித்து விட்டு தம் கிராமத்திற்கு திரும்பினான்.

ஒரு சமயம் 1816-ல் வருடத்தில் பாலாபூரில் ஸ்ரீ மகராஜ், சுக்லால் பன்சிலால் அவர்கள் வீட்டில் வராண்டாவில் மகிழ்ச்சியோடு உட்கார்ந்து இருந்தார். அவர் முழுநிர்வாணமாக இருந்தார். உடலில் ஒரு வஸ்திரமும் இல்லாமல் இருந்தார். அந்த வழியாகச் சென்ற மக்கள் அவருக்கு மரியாதை அளித்துவிட்டு வணங்கிச் சென்றனர். ஸ்ரீ மகராஜ் அமர்ந்திருந்த சுக்லால் பன்சிலாலின் வீடு முக்கியமான கடைத் தெருப் பகுதியில் அமைந்திருந்தது. அந்த வழியாக ஒரு காவல் துறையாளர் போய்க் கொண்டு இருந்தார். அவருடைய பெயர் அஸ்ராஜி என்பதாகும். அஸ்ராஜி, ஸ்ரீ மகராஜ் அவர்களைப் பார்த்துவிட்டு ஆத்திரமடைந்தார். இவ்வாறு கடைத்தெருவுக்கு நடுவில், எல்லோரும் பார்க்கும்படியாக, உடலில் ஆடையின்றி அமர்ந்திருக்கும் இந்த சந்யாசி!

ஞானி என்ற பெயரால் வேண்டுமென்றே இவ்வாறு அமர்ந்து கொண்டு இருக்கும் இவர், எல்லோரையும் கவர வேண்டும் என்பதற்காகவே இந்த வேடம் போடுகிறார் என்று அஸ்ராஜி கூறி சத்குருவைப் பற்றி பலவாறு இகழ்ந்து பேசியும், ஸ்ரீ மகராஜ் பொறுமையுடனும் அமைதியாகவும் அமர்ந்திருந்தார். அவருடைய அமைதி அவன் கோபத்தை இன்னும் அதிகமாக்கியது, கையில் உள்ள கரும்பால் அவரை அடிக்க ஆரம்பித்தான். அவன் அடித்த அடியில் ஸ்ரீ மகராஜ் அவர்களின் உடலில் அடியின் தழும்புகள் ஏற்பட்டன. அவர் அப்போதும் அமைதியாக உட்கார்ந்திருந்தார். அவனைத் தடுக்கவோ, அவனுக்கு தன்னைப்பற்றி சொல்லி புரியவைக்கவோ எதற்கும் அவர் முயற்சிக்கவில்லை. அவன் திரும்ப திரும்ப அவரை கரும்பால் அடித்துக் கொண்டு இருந்தான்.

அப்போது அங்குவந்த ஸ்ரீ ஹீண்டிவாலா என்பவர் அஸ்ராஜியிடம், ''இதுபோன்று ஞானியரை அடிப்பது தர்மமாகாது. எந்த காரணமும் இன்றி ஏன் இவ்வாறு அடிக்க வேண்டும். இறைவன் ஞானியரின் பாதுகாவலன் ஆவான். அவர் உடலில் அடித்த கரும்பின் தழும்புகளைக் கவனித்தாயா! உனது கையை திரும்ப எடுத்துக் கொள்! இச்செயலால் நீ உன்னுடைய வாழ்க்கையை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துவிட்டாய்! எவ்வாறு



ஒரு வியாதிக்காரன் தன் உடல் நலத்தை புறக்கணித்து மரணத்தை அழைக்கிறானோ, அதைப்போல் இந்த சாதுவை அடித்ததன் மூலம் நீ அனுபவிக்கப்போகிறாய்! நீ இன்னமும் மனது வைத்தால் சத்குரு, உன்னை மன்னித்துவிடுவார்! மனம் திருந்தி மன்னிப்பு கேட்பாயாக'' என்றான். ஆனால் அந்த காவலாளி, ''இந்த ஆடையில்லாத மனிதனிடம் மன்னிப்பு கேட்க எந்த காரணமும் இல்லை. காக்கையின் சாபம், விலங்குகளை கொல்லாது என்பது எனக்குத் தெரியும். நகரத்தின் முக்கிய தெருக்களின் வீதியில் இவ்வாறு ஆடையின்றி அமர்ந்து கொண்டிருக்கும் இந்த போலியானவர் வார்த்தைகள் மிகவும் மோசமாக உள்ளது. ஒருவேளை கடவுள் என்மீது தவறு என்ற பழியை, இவரை அடித்ததற்காக சுமத்தினால் அது சத்தியமான நேர்மையான செயல் அல்ல'' என்றான்.

ஆனால் பரிதாபம், தன் வினையை தானே தேடிக் கொண்டதன் மூலம், அந்தக் காவலாளியும் மிகவும் மோசமான நிலையை அடைந்து அவனும் அவனுடைய உறவினர்களும் அன்றிலிருந்து 14 நாட்களுக்குள் இறந்துவிட்டனர்.

ஆகையால் நாம் எல்லோரும் சாதுக்களையும், தபஸ்வினிகளையும் அவர்களைப்பற்றி உண்மை தெரியும் வரை அவர்களிடம் எச்சரிக்கையாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும்.

நாகர் மாவட்டத்தில், ப்ரவதா நதியின் கரையில் அமைந்த, அழகான சிறிய கிராமமான சங்கம்நேர், பிரபல கவிஞரான ஆனந்த் வாழ்ந்த இடமாகும். நாம் இப்போது அந்தப்பகுதியில் வாழ்ந்த ஹரி ஜாக்த்யாவிடம், நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள், நடத்திய அற்புதத்தைக் காண்போம். ஹரி ஒரு யஜுர் வேத பிராமணன் ஆவான். தன் அன்றாட உணவிற்காக வேறு வேறு இடங்களுக்குச் சென்று கொண்டிருந்தான். அவனுடைய பயணத்தில் ஒரு முறை ஷேக்காவ் கிராமம் வந்தது. அவன் ஸ்ரீ மகராஜ் அவர்களை தரிசிக்கச் சென்றான்.

அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் ப்ரஸாதம் விநியோகம் செய்த கொண்டும், பிராமணர்களுக்கு போஜனம் அளித்துக் கொண்டும், தங்களின் கோரிக்கைகளை ஸ்ரீ மகராஜ் அவர்கள் பூர்த்தி செய்ததால், அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டும் இருந்தனர். இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டு இருந்த ஹரி இவ்வாறு சிந்திக்கலானான்.

''நான் இன்று மாபெரும் ஞானியை சந்தித்துவிட்டு வெறும் கையோடு திரும்பிச் செல்ல வேண்டும். இது என்னுடைய

துரதிருஷ்டம். எவ்வாறு பாறை தன் மீது ஒரு புல்லை கூட வளர அனுமதிக்காதோ, அது போல என் விதியானது இன்று மட்டுமே இங்கே நல்ல உணவைப் பெற்றுத் தரும். நாளை உணவு கிடைக்குமா கிடைக்காதா என்று எனக்குத் தெரியாது. இது தான் என்னுடைய தலை எழுத்து. என்னிடம் எந்த செல்வமும் இல்லை. எனக்கு எவர் பெண் தருவார்கள்?

`ஓ ஸ்வாமி! கஜானன் மகராஜ்! எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிப்பவரே! நான் இல்லற வாழ்க்கையின் சந்தோஷங்களை அனுபவிக்க ஆசை கொண்டுள்ளேன்! தயை கூர்ந்து எனக்காக ஒரு நல்ல குடும்பத்துப் பெண்ணாக அளித்து திருமணத்திற்குப்பிறகு நல்ல குழந்தைகளையும் அளித்து ஆசீர்வதிக்க வேண்டும்'' என்று சிந்தித்தான். அவன் மனதை நம் சத்குரு நன்கு அறிவார். அவர் அவனை ஒரு அடி அடித்துவிட்டு தனக்குத்தானே இவ்வாறு சொல்லிக் கொண்டார்.

நான் அவனை அடித்ததற்கு காரணம், அவன் என்னிடம் உபயோகப்படாத விஷயங்கள தனக்குத் தரவேண்டும் என்று கேட்டான். சிலர் என்னிடம் இவ்வுலக வாழ்வின் பிடியில் இருந்து விடுபடவேண்டுமென்று கேட்டு வேண்டுகிறார்கள். ஆனால் இந்த ஹரி இவ்வுலக வாழ்வின் சுகங்களை என்னிடம் வேண்டுகிறான். இந்த உலகத்தின் போக்கு வித்தியாசமாக உள்ளது. எல்லோருக்கும் உலக சுகங்களை மட்டுமே வேண்டுகின்றனர். எவருமே ஸ்ரீ ஹரியை தரிசிக்க ஆவல் கொள்ளவில்லை.

ஸ்ரீ மகராஜ் ஹரியை நோக்கி, “நீ இப்போது உன் மனதில் என்ன ஆசைகளைக் கொண்டுள்ளாயோ, அவையாவும் உனக்குக் கிடைக்கும். நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், செல்வம் எல்லாமே உனக்குக் கிடைக்கும். இப்போது நீ உன் கிராமத்திற்கு திரும்பி சந்தோஷமான திருமண வாழ்க்கையை வாழ்வாயாக! ஆனால் எல்லாம் வல்ல இறைவனை ஒருபோதும் நீ மறக்கக்கூடாது'' என்றார்.

இந்த அறிவுரையோடு ஸ்ரீ மகராஜ், ஹரிக்கு ஒரு தொகையையும் கையில் அளித்து, அதை அவனுடைய திருமணத்திற்கு செலவிடும்படியும் கூறினார். அதற்குப்பிறகு ஹரி திருமணம் செய்து கொண்டு சுகமாக வாழத் தொடங்கினான். எவ்வாறு ஸ்ரீ மகராஜ் அவர்களின் வார்த்தைகள் வீணாகும்.

ஒரு சமயம் நாசிக் மாவட்டத்தில், அமைந்த இகட்பூரி என்ற இடத்தில் உள்ள காயாரி மலைத் தொடரின் அருகில் பாய்ந்து கொண்டிருந்த, முகானா நதியைக் காண ஸ்ரீ ராமச்சந்திர கோவிந்த் நிமோன்கர் மற்றும் வாசுதேவ் என்ற இருவரும் வந்திருந்தனர். அந்த மலைத்தொடரில் அமைந்த வனப்பகுதியில், காட்டு மரங்களும், பசுமை நிறைந்த புல்வெளிகளும், பழங்கள் கொத்து கொத்தாக பழுத்து தொங்கும் கிளைகளும் அநேக பழமரங்களும், சுதந்திரமாக ஓடிக்கொண்டு இருந்த காட்டு மிருகங்களும் இருந்த அந்த அழகான அப்பகுதியில் ஸ்ரீ நிமோன்கருக்கு யோகாப்யாசம் செய்ய எண்ணம் ஏற்பட்டது.



முகானா நதி பாய்ந்து கொண்டிருக்கும் அந்த இடத்தில், ஒரு சிறிய அழகிய நீரோடை ஒரு குறுகிய பகுதியில் அமைந்து இருந்தது. அதற்கு கபிலதரா என்று பெயர். அது புனிதமான ஸ்தலமாக கருதப்பட்டு, மக்கள் விசேஷ தினங்களில் அங்கு சென்று நீராடுவது வழக்கம். திரு. நிமோன்கர் சிறிதளவே யோக ஞானம் அறிந்தவர். அவர் யோகாவை முறையாகக் கற்கவேண்டும் என்ற விருப்பத்தில், அங்கு வந்திருந்த அனைவரிடமும் தெரிவித்தார். அவர்கள் அனைவரும் தங்களுக்கு தெரியாது என்று சொல்லிச் சென்றுவிட்டனர். அதனால் மிகுந்த வருத்தத்துடன் தன் இருகைகளை கூப்பி இறைவனிடம் தனக்கு யோகஞானம் தர தாம் எவரையாவது காண்பிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

உடனே அவர் கபிலதாராவில், நீண்ட பெரிய கைகளுடன், அமைதியான முகத்துடனும், உயரமாகவும் அதே சமயம் மிகவும் தேஜஸ்துடனும் ஒருவர் தியானத்தில் அமர்ந்து இருப்பதைக் கண்டார். அவருடைய நீண்ட கைகள், கால் முட்டியின் பகுதியை தொட்டுக் கொண்டிருந்தன. அவர் பார்ப்பதற்கு ஒரு சந்யாசியைப் போல தெரிந்தார். நிமோன்கர் அவர் முன்னால் மண்டியிட்டு நமஸ்கரித்து, அவர் மாலைப் பொழுதில் கண்கள் திறக்கும் வரை அங்கேயே அமர்ந்து இருக்கப் போவதாக தீர்மானித்தார். ஆனால் அந்த யோகி கண்களைத் திறக்காமல், வேறு எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார். அந்த நாள் முழுவதும் உணவு அருந்தாமல் இருந்தார். மாலைப் பொழுதில் கபிலதராவில் நிமோன்கருடன் வந்தவர்கள் மற்றும் ஏற்கெனவே அங்கு இருந்தவர்கள் அனைவரும் தங்கள் கிராமத்திற்கு திரும்பிவிட்டனர். ஆனால் ஸ்ரீ நிமோன்கர் தன் கைகளை கூப்பியவாறு அந்த சாதுவை வணங்கி தனக்கு யோகஞானம் அளிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டார்.

இறுதியாக அந்த சாது, நிமோன்கருக்கு ஒரு படத்தை அளித்து அவரிடம், ''உன்னுடைய விருப்பங்கள் யாவையும்

நிறைவேற இந்த படத்தில் எழுதப்பட்டுள்ள மந்திரங்களை இடைவிடாது உச்சரிக்க வேண்டும். இந்த மந்திரத்தின் சக்தியானது உனக்கு யோகாவைக் கற்றுத்தரும். ஒரு சிறிய பூச்சி இமயமலையைச் சுற்றிவர இயலாது. ஒரு கடல்சிப்பி மேருமலையில் ஏறவும் முடியாது. நீ யோகாசனத்தை முயற்சித்து செய்யப்பழகுவாயாக! அதற்காக நீ கண்டிப்பான பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும். மற்றும் உன்னுடைய ஆத்மாவை, உள்மனதை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இதை நீ கண்ணும் கருத்துமாக முயற்சித்தால், உன்னாலும் ஆசனங்களை செய்ய இயலும். இதற்குமேலும் எந்த கேள்வியும் என்னை கேட்காதே! இந்த ப்ரஸாதத்தை எடுத்துச் செல்'' என்று கூறிவிட்டு நிமோன்கருக்கு ஒரு சிவப்பு கூழாங்கல்லைக் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டார்.

சிறிது நாட்களுக்குப் பின்னர், அந்த யோகியை நிமோன்கர் நாசிக்கில் புனித கோதாவரிக் கரையில் சந்தித்தார். அவர் நம் ஸ்ரீ மகராஜ் அவர்களிடம், ''ஐயா நான் மிகுந்த துயரத்திற்கு ஆளாகிவிட்டேன். சென்ற முறை நீங்கள் உங்கள் பெயர், ஊர் எதையும் என்னிடம் சொல்லாமல் சென்றுவிட்டீர்கள்'' என்றார்.

ஸ்ரீ மகராஜ் நிமோன்கரிடம், ''நான் உனக்கு சிவப்பு கூழாங்கல்லை அளித்ததன் மூலம் என் பெயரைக் கூறினேன். புனித நர்மதை நதிக்கரையில் வீற்றிருக்கும் முழுமுதற் கடவுளான விநாயகரின் நிறமும் சிவப்பே ஆகும். ஆனால் நீ மந்தபுத்தி உள்ளவன். ஆகையால் உன்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. என்பெயர் கணேஷ் என்பதாகும். நாளை நீ ஸ்ரீ துமாலின் இல்லத்திற்கு வந்து சேர்வாயாக! நாம் அங்கு மறுபடியும் சந்திக்கலாம்'' என்றார்.

இவ்வாறு கூறிவிட்டு நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் மறைந்துவிட்டார். அதன் பின்னர் சத்குருவின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு, அவர் ஸ்ரீ துமாலின் இல்லத்திற்குச் சென்றார். அங்கு ஸ்ரீ மகராஜ் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் பார்த்து மிகவும் ஆனந்தமடைந்தார். மனதார அவர் ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு வந்தனம் கூறி அவரைப்பணிந்து ஸ்ரீ துமாலிடம், கபிலதாரா தொடங்கி நாசிக் வரை நடந்த அனைத்தையும் விவரித்தார்.

ஸ்ரீ துமால் இவற்றை எல்லாம் கேள்வியுற்று மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அவர் ஸ்ரீ மகராஜை, அவருடைய அளவில்லாத



ஆற்றலைக் கூறி மீண்டும் மீண்டும் பரவசமாக புகழ்ந்தார். ஸ்ரீ துமால் நிமான்கனிடம், அந்த சிவப்பு கூழாங்கல்லை தினமும் பூஜையில் வைத்து வழிபட வேண்டும் என்றும் மேலும் அக்கூழாங்கல்லிற்கு முன்னால் அமர்ந்து கொண்டு யோகாப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவ்வாறு செய்தால் நிமோன்கர் முறையாக யோகாசனத்தின் ஞானத்தை எய்துவார் என்றும் கூறினார். நிமோன்கரும் அவ்வாறே செய்து, முறையாக யோக ஞானத்தை ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆசிகளால் பெற்றார்.

ஒரு சமயம் ஷேக்காவ் கிராமத்தைச் சேர்ந்த, ஸ்ரீ துகாராம் கோகடே தனக்குப்பிறந்த குழந்தைகள், ஒருவர் பின் ஒருவராக, குழந்தைப் பருவத்திலேயே இறந்து கொண்டு இருந்ததால், மனம் உடைந்து போனார். அவர், ஸ்ரீ மகராஜ் அவர்களிடம், ஒரு வேண்டுகோள் வைத்தார். அதாவது தனக்கு பிறந்த குழந்தைகளைக் காப்பாற்றினால் அவற்றில் ஒரு குழந்தையை ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு அளித்துவிடுவதாக சபதம் எடுத்துக் கொண்டார்.

அதற்குப்பிறகு கோகடே அவர்களுக்கு தொடர்ச்சியாக மூன்று குழந்தைகள் பிறந்தன. அவையாவும் தேக ஆரோக்கியத்துடன் நன்கு வளர்ந்தன. ஆனால் கோகடே வாக்கினை மறந்துவிட்டார். அவருடைய வாக்குப்படி ஒரு குழந்தையை, ஸ்ரீ மகராஜ் அவர்களிடத்தில் அளிக்க வேண்டும் என்பதை மறந்துவிட்டார். அதன் பலனாக அவருடைய மூத்த மகன் நாராயணன் பலவீனமடைந்தான். வியாதியால், எந்த மருந்து, மாத்திரைகளும் பலன் அளிக்காத நிலைக்கு ஆளானான். நாளுக்கு நாள் அவன் நிலைமை மிகவும் மோசமானது.

அப்போதுதான் துகாராமிற்கு, தாம் அளித்த வாக்கு நினைவிற்கு வந்தது. அவன் உடனே ஸ்ரீ மகராஜ் அவர்களை நினைத்து வேண்டி, நாராயணன் உடல் நிலை தேறியவுடன் அவனை தந்துவிடுவதாக மன்றாடிக் கேட்டுக் கொண்டான். நாராயணன் மிக வேகமாக உடல்நிலை தேறி, நல்ல உடல் நிலைமைக்கு விரைவில் திரும்பினான். தற்போது அவன் வியாதியற்ற ஆரோக்யமான தேகத்துடன் உற்சாகமாக இருந்தான்.

ஆனால் கோகடே தான் அளித்த வாக்கை மீறிவிட்டார். நம் சத்குரு மகராஜ் அவர்கள், அந்த வாக்கை நினைவூட்டி நாராயணனை அழைத்து வரச்செய்து, தம்மிடம் ஒப்படைக்கும்படி செய்தார். தெய்வத்திடமும், குருவினிடமும் அளித்த வாக்கு

மறையாக காப்பாற்றப்பட வேண்டும். அதை மீறினால் விளைவுகள் மிகவும் விபரீதமாக ஆகிவிடும் என்பதையும் இந்நிகழ்வின் மூலம் ஸ்ரீ மகராஜ் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கிறார். நம்மைப்போன்ற மனிதர்கள் தம்மை ஆபத்து சூழும் காலத்தில் தெய்வத்திடமும் குருவினிடமும் சங்கல்பம் எடுத்துக்கொண்டு தம்மை இக்கட்டான சூழ்நிலையில் இருந்து விடுவித்தால், தாம் எதையாவது சமர்ப்பணம் செய்வதாக வாக்களிக்கின்றனர். ஆனால் தமது பிரச்சினைகள் தீர்ந்தவுடன், தாம் அளித்த வாக்கை நிறை வேற்றுவதில்லை. அதன் காரணமாகவே தங்கள் வாழ்க்கையில் விபரீதங்களைச் சந்திக்கின்றனர். இச்சமயத்திலும் நம் குருவானவர் நம்மை கைவிடாமல் நம்முடைய வாக்கை, நினைவூட்டி, நம்மை சிக்கலில் இருந்து விடுவிக்கிறார். ஸ்ரீ கஜானன் மகராஜ், ஒரு சமயம் ஹரிபாட்டீலுடன் பண்டரிபுரம் சென்று விட்டலைத் தரிசித்தார். விட்டல் ஒருவரே அனைவரும் அடைய வேண்டிய இலக்கு ஆவார். அவர் எல்லா சாதுக்களுக்கும், ஞானியர்க்கும் கல்பதருவைப் போலவும், காமதேனுவைப் போலவும் நினைத்ததை எல்லாம வழங்கினார். அவருடைய புகழை எல்லா வேதங்கள் புகழ்ந்துரைக்கின்றன. தேவி ருக்மணியின் பதியான அவர் எல்லா ஞானியரின் இதயங்களிலும் தங்கி இருக்கிறார். அவர் தனது பக்தர்களிடம் அளவற்ற அன்போடும் அவர்களை எந்த சூழ்நிலைகளிலும் காப்பாற்றுபவராகவும் இருக்கிறார்.

ஸ்ரீ மகராஜ் பண்டரிபுரத்தை அடைந்தவுடன், புனிதநதியான சந்திரபாகாவில் நீராடி பாண்டுரங்கனை தரிசிக்க ஆலயம் சென்றார்.

ஸ்ரீ மகராஜ், ''ஓ பாண்டுரங்கா! பண்டரி நாதா! பக்தர்களைக் காப்பவரும், நன்மையை அளிப்பவரும் தாங்கள் ஒருவரே! சர்வ வல்லமையும், சக்தியையும் கொண்ட ருக்மணி காந்தனே! என் வேண்டுகோளை ஏற்பாயாக! நான் உன்னுடைய ஆணையை ஏற்று, இந்தப் பூமியில் இதுவரை வாழ்ந்து, உத்தம குணம் கொண்டவர்களின் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றினேன்! என்னுடைய இந்தப் பணியும் முடிவடைந்துவிட்டது, என்பதும் உனக்கு நன்றாகத் தெரியும்! ஓ பாண்டுரங்கா! இப்போது நான் செல்வதற்கும் உத்தரவு அளிப்பாயாக! இறைவா! நான் உன்னுடைய பாதங்களில் சரணடைந்து நிரந்தரமாக வைகுந்தத்தில் இருக்க விரும்புகிறேன்! வரும் பாத்ரபத (Bhadrapada) மாதத்தில் நான் தங்களுடன் இணைவதற்கு விரும்புகிறேன்'' என்று கூறியவுடன் ஸ்ரீ



சமர்த்த மகராஜ் அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. இச்செய்தியை படிப்பவர்க்கும், இக்கதையை கேட்பவர்க்கும் கண்களில் நீர் சுரக்கும் போது, இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்ட இருந்த ஹரிபாட்டீல் மிகவும் அதிர்ச்சி அடைந்து அவரும் கண்ணீர் விட்டு, கைகள் கூப்பி, ஓ குரு தேவா! இது என்ன! தங்களின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுக்கின்றது. நான் தங்களின் மனதை புண்படுத்திவிட்டேனா! என் மனம் பதைபதைக்கின்றது தயவு செய்து கூறுங்கள் என்று மன்றாடினான்.

ஸ்ரீ மகராஜ், ஹரிபாட்டீலிடம் நான் காரணத்தைக் கூறினாலும் உன்னால் அதைப்புரிந்து கொள்ள இயலாது! ஆழ்ந்த ஞானத்திற்கு உட்பட்டது! இதைப்பற்றி நீ இப்போது கவலை கொள்ள வேண்டாம். நான் ஒன்றை மட்டுமே உன்னிடத்தில் சொல்ல விரும்புகிறேன்! நம்முடைய தொடர்பு முடிவுக்கு வந்துவிட்டது! வா! இப்போது நாம் ஷேக்காவ் செல்லலாம். நீயும் உன் வாரிசுகளும் எக்குறையுமின்றி சந்தோஷமாக வாழ்வீர்கள் என்று நான் ஆசீர்வதிக்கிறேன் என்றார்.

பண்டரிபுரத்திலிருந்து ஷேக்காவ் வந்தவுடன் ஸ்ரீ குருவின் ஆணைப்படி எல்லா வைதீக சம்ப்ரதாயங்களும் நடத்தப்பட்டன. ஆனால் ஹரிபாட்டீல் மிகுந்த குழப்பத்துடன் இருந்தான். அவன் அனைவரிடமும் ஸ்ரீ மகராஜ் கூறியதை சொல்லி இருந்தான். அதாவது தன்னுடைய தொடர்பு முடிவுக்கு வந்து விட்டதாக ஸ்ரீ மகராஜ் கூறியதை அவன் அனைவரிடமும் கூறினான்.

ஷ்ரவண மாதம் கடந்தவுடன் ஸ்ரீ மகராஜ் நாளுக்கு நாள் பலஹீனத்தை அடைந்தார். அதற்குப் பிறகு பாத்ரபத மாதமும் வந்தது. இப்போது நாம் அங்கு என்ன நடக்கப் போகிறது என்பதை கவனமாக கேட்க வேண்டும்.

மூலாதார மூர்த்தியும் முழு முதற்கடவுளுமான ஸ்ரீ கணேச சதுர்த்தியான புனிதமான நாளன்று, ஸ்ரீ மகராஜ், இப்போது நீங்கள் அனைவரும் மடத்திற்கு வந்து கணபதியை, கணபதி புராணத்தில் சொல்லப்பட்டவாறு, விக்ரஹமானது கணேச சதுர்த்தியன்று களி மண்ணால் செய்யப்பட்டு, பூஜைகள் நடத்தப்பட்டு, மலர்களாலும், கனிகளாலும், இனிப்புகளாலும் நைவேதியம் செய்யப்படவேண்டும். அடுத்த நாள் அந்த விக்ரஹகம் தண்ணீரில் கரைக்கப்பட வேண்டும். அந்த நாள் இப்போது வந்துவிட்டது. இந்த விழாவை என்னுடைய சரீரத்தை இந்தப் பூமியான தண்ணீரில் கரைத்து

கொண்டாடப்பட வேண்டும். யாரும் கண்ணீர் விட தேவையில்லை. ஒன்றை மறக்காமல் நினைவில் கொள்ளுங்கள்! நான் எப்பொழுதும் உங்களுடன் இருந்து கொண்டு உங்களை வழி நடத்தி, காத்து இரட்சிப்பேன்! நான் ஒருபோதும் உங்களை மறக்கமாட்டேன்! ஸ்ரீ கிருஷ்ணர், அர்ஜுனரிடம் பகவத் கீதையில் கூறியவாறு, "நாம் தினமும் துணிகளை மாற்றி உடுத்திக் கொள்வது போல, இந்தச் சரீரமும் மாற்றத்திற்குள்ளானது. இவ்வுலகில் அவதரித்த எல்லா பிரம்ம வேதிகளும் அதாவது எல்லா ஞானியருக்கும் இந்த விதி பொருந்தும். அவர்கள் சரீரத்தை மட்டுமே மாற்றுவார்கள்" என்றார்.

அந்த நாள் முழுவதும் ஸ்ரீ கணேச சதுர்த்தியான நன்னாளை பாலபுவாவும் மற்றும் அனைவரும் ஸ்ரீ மகராஜ் அவர்களுடன் கழித்தனர்.

சதுர்த்தியின் அடுத்த நாள் ஸ்ரீ மகராஜ், பாலபுவாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு அவரை தனக்கு அருகில் அமரச் சொன்னார். அவர் அவனிடம், "**நான் உன்னை விட்டுச் செல்வதாக நினைக்காதே! தொடர்ந்து பக்தியோடு இருப்பாயாக! எந்நேரத்திலும் என்னை மறக்க வேண்டாம்! நான் எப்போதும் இங்கு இருக்கிறேன்**" என்று சொல்லி முடித்த அடுத்த நிமிடம் அந்த மகா ஞானியின் மூச்சுக் காற்று நின்று விட்டது, அவர் மூச்சுக் காற்றை இழுத்து, தன் தலைப் பகுதிக்கு கொண்டு வந்தார். பிராணாயாம முறைப்படி இச்செயலை ஸ்ரீ மகராஜ் செய்தார். அது ஒரு வியாழக்கிழமையின் மதியான நேரம், பாத்ரபத மாதம், சுத்த ரிஷி பஞ்சமி தினமாகும். (1832) அவருடைய கடைசி மூச்சை இழுத்து அவர் கூறிய வார்த்தைகள் "**ஜெய் கஜானன்**" என்பதாகும். தன்னைத்தானே பரப்பிரம்மத்துடன் ஐக்கியமாக்கிக் கொண்டார். இவையாவும் ஷேக்காவ் கிராமத்திலேயே நடந்தது. அவருடைய எல்லா அசைவுகளும் நின்றுவிட்டன.

இதைப்பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் அதிர்ச்சியால் கண்ணீர்விட்டு அழுதனர். அதன்பிறகு முறையாக ஸ்ரீ கஜானன் மகராஜ் மகாசமாதி அடைந்ததை பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஷேக்காவ் கிராம மக்கள், தங்கள் மார்பில் அறைந்து கொண்டு, உரத்த குரலில் அழத் தொடங்கினர். எங்களுடைய வாழும் தெய்வம் சென்றுவிட்டது. ஏழைகளையும், நலிந்தவர்களையும் காப்பாற்றிய இந்தத் தெய்வம் இப்போது எங்களுடன் இல்லை.



ஒரேடியாகச் சென்றுவிட்டது. எங்களை அவருடைய அரவணைப்பில் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்திருந்த அந்தக் கூடு இப்போது சென்றுவிட்டது. நேரமாகி காற்று பலமாக வீசியதால் அக்காற்று அறிவான அக்னியை அணைத்து விட்டது. ஓ கஜானன் மகராஜ், இப்போது யார் எங்களை பாதுகாப்பார்கள்? நீங்கள் ஏன் எங்களைவிட்டுவிட்டு இவ்வளவு சீக்கிரம் சென்றுவிட்டீர்கள் என்றெல்லாம் கூறி கதறி அழுதனர்.

ஸ்ரீ மகராஜ் அவர்களுடன், நீண்டகாலம் தங்கி சேவை செய்த மார்தாண்ட பாட்டீல், ஹரிபாட்டீல், விஷ்ணுசா, பங்கட்லால், தாராசந்த், ஸ்ரீ பாதராவ் குல்கர்னி ஆகிய அனைவரும் மடத்தில் ஒன்றாகக் கூடினர்.

அன்று ரிஷிபஞ்சமியான சுபதினம். ஆகையால் அனைவரும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை, மஹா சமாதியில் வைக்க அதற்கு அடுத்த நாளை தேர்ந்தெடுத்தனர். ஸ்ரீ மகராஜ், மகா சமாதியில் திரும்ப வர இயலாத நிலைக்கு தம் சரீரத்தைக் கொண்டு செல்ல இருப்பதால் அன்று சாயங்காலம் பொழுது வரை, அவருடைய சரீரத்தின் இறுதியான தரிசனத்தை பெற நாலா திசைகளிலும், வந்து கொண்டு இருக்கும் மக்களுக்காக காத்திருந்தனர். அதிர்ஷ்டம் வாய்ந்தவர்கள், மகாசமாதியில் வைக்கப்படும் முன்னரே தரிசனம் செய்தார்கள். அவர் மகா சமாதியைக் குறித்து செய்திகள் நாலாபுறம் அனுப்பப்பட்டன.

ஸ்ரீ கோவிந்த் சாஸ்திரி டோங்காவ்கர், நன்கு கற்று அறிந்த கல்விமான் ஆவார். அவர் ஸ்ரீ மகராஜ் அவருடைய அன்பு மிகுந்த பக்தர்கள் அவருடைய தரிசனம் பெறும் வரை தனது உயிர் ஜோதியை சத்குரு தம் நெற்றியில் வைத்திருப்பார் என்று கூறினார். அவருடைய இக்கருத்தை நிருபிக்கும் வகையில் வெண்ணெய் எடுத்துக் கொண்டு அவரது நெற்றியில் வைத்தார்கள். என்ன அற்புதம்! அந்த வெண்ணெய் உருகி ஓட ஆரம்பித்துவிட்டது, இதுதான் ஸ்ரீ மகராஜ் அவர்களின் யோகசாஸ்திரத்தின் ஞானமாகும்.

ஸ்ரீ கோவிந்த் சாஸ்திரி இந்த நிலையில் உயிர் ஜோதியை நெற்றியில் வைத்துக் கொண்டு ஒரு வருட காலம் முழுவதும் நீடிக்க இயலும். ஆனால் சில விஷயங்களை கருத்தில் கொண்டு, அனைத்து பக்தர்களும் தரிசித்த பின் சமாதியின் குழியை அடைத்து விடவேண்டும் என்று கூறியவுடன் இக் கருத்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பஜனைப் பாடல்களை பக்தர்கள் பாடிக் கொண்டிருந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் அந்நிகழ்ச்சியில்

பங்கெடுத்தனர். நிறைய பக்தர்களின் கனவில் வெகு தொலைவில் இருந்து வர இயலாத நிலையில் ஸ்ரீ மகராஜ் அவர்களே தோன்றி, தான் மகா சமாதி அடைந்துவிட்டதாகக் கூறியுள்ளார். இது வெளியூரில் இருக்கும் பக்தர்க் அளித்த வாக்குமூலமாகம்.

ரிஷிபஞ்சமி தினத்தில் கட்டுப்படுத்த இயலாத மக்கள் கூட்டத்தின் முன்னால், ஸ்ரீ மகராஜ் அவர்களின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. அவருடைய கடைசி பயணத்திற்காக ஒரு பெரிய பல்லக்கு அலங்கரிக்கப்பட்டு, ஏராளமான பஜனை கோஷ்டிகள் ஷேக்காவ் வந்திருந்து பஜனைப் பாடல்கள் பாடினார்கள். பெண்கள் ஊர்வலம் செல்லும் பாதையில், சாணம் கலந்து நீர் தெளித்து அழகிய பூக்கோலங்களை போட்டுக் கொண்டு இருந்தனர். ஊர்வலம் செல்லும் சாலை முழுவதும் விளக்குகளின் ஒளியால் மிகவும் பிரகாசமாக காணப்பட்டன. ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் சரீரம் அந்தப் பல்லக்கில் வைக்கப்பட்டு, ஊர்வலம் தொடங்கியது.

அந்த ஊர்வலம் அந்நகரை இரவு முழுவதும் சுற்றியது. பல்வேறு தாளவாத்திய இசைக் கருவிகள் வாசிக்கப்பட்டன. நாமஸ்மரணை செய்யும் கோஷ்டியில், விட்டலாவின் நாமம் இடைவிடாது உச்சரிக்கப்பட்டுக் கொண்டு இருந்தது.

பக்தர்கள், துளசி, ஹுக்கா, குலால் என்று அழைக்கப்படும் வாசனைப் பொடி வகைகள், நறுமணம் மிக்க மலர்கள் ஆகியவற்றை ஸ்ரீ மகராஜ் அவர்களின் சரீரத்தில் பொழிந்தனர். ப்ரஸாதமும், இனிப்புகளும், ஸ்ரீ மகராஜ் அவர்களின் பெயரில் விநியோகிக்கப்பட்டன. சிலர் ஒரு ரூபாய் நாணங்களையும், மற்றம் சிலர் ரூபாய் நோட்டுகளையும் பல்லக்கின் மீது பொழிந்தனர். இத்தகைய சிறப்பு மிக்க தெய்வ ஊர்வலம் அன்று முழுவதும் ஷேக்காவை சுற்றி வந்த பின்னர் மறுநாள் காலை மடத்திற்கு வந்தது.

சத்குருவின் சரீரம், மகா சமாதி இருக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, **ஸ்ரீருத்ராபிஷேகம்** செய்யப்பட்டது. இறுதியாக பூஜையும் செய்யப்பட்டு, சகல மரியாதைகளுடன் அவரது சரீரம், மகா சமாதியில், முகம் வடக்குத் திசையை நோக்கி இருக்கும் வகையில் மகா சமாதி குழியில் வைக்கப்பட்டது.

அனைவரும் உரத்த குரலில்,

**''ஜெய் கஜானன்''**

**''ஜெய் மனித உருவில் வந்த நாராயணனுக்கு ஜெய்''**



**''ஜெய் தடையில்லாத சந்தோஷத்தை வழங்கியவருக்கு ஜெய்''**

**''ஜெய் இவ்வுலக கடவுளுக்கு ஜெய்''**

- என்றெல்லாம் கோஷம் செய்து நம் சத்குருவின் ஸ்ரீ மகராஜ் அவருக்கு தம் இறுதி மரியாதையை செலுத்தினர். சமாதி குழியில் வைப்பதற்கு முன்னர் இறுதியாக அனைவரும் **''ஜெய் கஜானன்''** என்று கோஷமிட்டனர்.

அந்த மகா சமாதி பல்வேறு பொருட்களுடன், கனத்த, வேதனையுடன் கூடிய இதயங்களோடு மூடப்பட்டது. பக்தர்கள் ஒரு பெரிய சமமான கல்லை வைத்து மகா சமாதியை மூடினார்கள். **இன்றும் ஸ்ரீ மகராஜ் இங்கு இருக்கிறார்.**

அதைத் தொடர்ந்து பத்து நாட்களுக்கு அனைவருக்கும் தினமும் உணவு வகைகள் ப்ரஸாதமாக வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் ப்ரஸாதம் உட்கொண்டனர். இன்றளவும் தினசரி சுமார் முப்பதாயிரம் பக்தர்கள், இலவசமாக மூன்று வேளையும் உணவுப் ப்ரஸாதத்தை பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு ஞானியின் உரிமையும், உயர்வான தன்மையும் ராஜ்யத்தை ஆளும் மகா சக்ரவர்த்தியைக் காட்டிலும் உயர்வானதாகும்.

தாஸ்கணுவால் இயற்றப்பட்ட ஸ்ரீ கஜானன் விஜய்கிரந்தம், அவரது பக்தர்களுக்கு சரியான பாதையை வழி காட்டி, அவர்களிடையே ஹரி பக்தியை பெருக்கி வருகிறது.

**- ஜெய் கஜானன் -**



# அத்தியாயம் - 20

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! ஓ ருக்மிணிவாரா! உன்னைப் போற்றுகிறேன்! புனித சந்திரபாகா நதிக்கரையில் வசிக்கும் இறைவனே இந்த தாஸ்கணுவை ஆசிர்வதீப்பீர்களாக! நீங்கள் அரசர்களுக்கெல்லாம் அரசராவீர்! எல்லா நிகழ்வுகளும் உங்கள் கைவசம் உள்ளது! அவ்வாறு இருக்கும் போது என்னை மட்டும் புறக்கணிப்பது ஏன்! தங்களுடைய அன்பான ஆசிகள் மூலம் தன் பாவங்களை எரித்து கவலைகளைத் தீர்த்து, உன் புகழையே பாடிக் கொண்டிருக்குமாறு என்மனதை உற்சாகமாகவும் பார்த்துக் கொள்ள வேண்டியது, தங்களுடைய கடமையாகும்! இவ்வாறு எனக்கு உதவ மறுத்தால் அந்தப்பழி தங்களையே வந்து சேரும்! ஞானிகள் இதுமாதிரி பழிபாவங்களில் சிக்கி கொள்ள கூடாது! ஆகையால் ஓ ஷ்யாம் சுந்தரா! ருக்மணியின் இறைவனே! பரந்த மனதோடு எல்லோருடைய விருப்பத்தையும் நிறைவேற்றும் பாண்டுரங்கனே! என்னுடைய விருப்பத்தையும் பூர்த்தி செய்வாயாக!

ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள், நிர்வாணநிலை அதாவது மகா சமாதியை அடைந்தவுடன் மக்கள் யாவரும் இனிமேல், ஷேக்காவ் கிராமத்தில் எதுவுமே இல்லை என்று பேசிக் கொண்டனர். தெருக்களின் புழுதியைத் தவிர, அந்த கிராமம் தண்ணீரில்லாத சமுத்திரம் போல, பூக்கள் அற்ற பூமரங்கள் போல ஷேக்காவ் கிராமம் தன்னுடைய முக்கியத்துவத்தை இழந்துவிட்டது என்று பேசிக் கொண்டனர்.

அதனால் மக்கள் ஷேக்காவ் செல்வது, அர்த்தமில்லாத ஒன்றாகும் என்று எல்லோரிடமும் கூறி வந்தனர். ஆலயத்தில் இறைவன் இல்லாதபொழுது, மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்து என்ன பயன் என்று பலரும் பேசிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் நினைத்தது தவறாகும்! **ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் (Body) ஸ்தூல சரீரம் மட்டுமே நம்மை விட்டுச் சென்றது. அவருடைய சூட்சும சரீரம் (Soul) இன்றளவும் அணையாத தெய்வீக உயிர் ஜோதியாக, ஷேக்காவ் கிராமத்தில் இருந்து வருகின்றது.** ஞானியருடைய வரலாறும் நமக்கு இக்கருத்தையே சொல்கிறது. மகா சமாதி அடைந்து வெகு காலங்களுக்குப் பிறகும் அவர் தன் பக்தர்களை அதே இடத்தில்



சந்திக்கிறார். அதே போன்று தன்னுடைய தீவிர பக்தர்களுக்கு, ஸ்ரீ கஜானன் மகராஜ் இன்றளவும், ஷேக்காவ் ஆலயத்தில் மகா சமாதி ஸ்தலத்தில் தரிசனம் தந்து, அவர்களுக்கு துன்பம் நேராமல் காத்துக் கொண்டு இருக்கிறார் என்பது அவருடைய பக்தரின் வாக்குமூலமாகும். தொடர்ந்து வரும் சம்பவங்களால் இக்கருத்து நிரூபிக்கப்படுகிறது.

ஸ்ரீ கணபத் கோதடே என்பவர் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் தீவிர பக்தர் ஆவார். அவர் ராயாலி (Rayali) என்ற நிறுவனத்தின், ஷேக்காவ் பகுதியின் ஏஜென்ட்டாக (Agent) இருந்தார். அவர் தினமும் மாலை நேரங்களில் ஸ்ரீ மகராஜ் அவர்களின் மகா சமாதிக்குச் சென்று சிறிது நேரம் தியானத்தில் இருந்து விட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு சமயம் அவ்வாறு தியானத்தில் உட்கார்ந்து இருக்கும் போது விஜயதசமி தினத்தன்று தாம் ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு தம் கைகளால் அபிஷேகம் செய்து, அவரின் பெயரால் பிராமணர்களுக்கு போஜனம் அளிக்க வேண்டும் என்று நினைத்தார்.

அவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு எல்லா ஏற்பாடுகளையும் செய்யத் துவங்கினார். மடத்திற்கு அன்னதானம் செய்ய தேவையான அரிசி மூட்டைகளையும், காய்கறிகளையும் அனுப்பி வைத்தார். ஆனால் அவருடைய மனைவிக்கு இச்செயலில் விருப்பமில்லை.

அவள் தன் கணவரிடம் நீங்கள் என்ன காரியம் செய்து கொண்டு இருக்கிறீர்கள்! ஏன் இவ்வாறு பணத்தை விரையமாக்கிக் கொண்டு இருக்கிறீர்கள்! நாளை விஜயதசமியான சுபதினத்தில் உங்கள் குழந்தைகளுக்கு புத்தாடை வாங்கித் தாருங்கள்! அபிஷேகமும், பிராமண போஜனமும் அவசியமில்லாத ஒன்றாகும். நம்முடைய குழந்தைகளுக்கு நாம் நன்றாக உணவளிக்க வேண்டும். எனக்கென்று அணிந்து கொள்வதற்கு ஒரு கிராம் தங்க நகை கூட என்னிடம் இல்லை.

ஒரு குடும்பஸ்தருக்கு இச்செயல்கள் எல்லாம் எவ்வாறு பயன்படும்? நம்முடைய குடும்பத்திற்காகவும், வருங்கால தேவைக்காகவும் தாம் சிறிதளவேனும் சேர்த்து வைக்க வேண்டாமா! இவ்வாறெல்லாம் அவருக்கு அறிவுரை கூறினாள்.

ஆனால் கணபத் தம் மனைவியின் இந்த அறிவுரையை விரும்பவில்லை. அவர் அவளிடம் தாம் குடும்ப வாழ்க்கையைவிட, தெய்வீக உணர்வில் இருக்கும் பரமாத்மாவிற்கு மிகவும்

முக்கியத்துவம் அளிப்பதாகவும் அதுவே மிகவும் உயர்வானது என்றும் கூறினார்.

அன்று இரவுப் பொழுதில் ஸ்ரீ மகராஜ், கணபத் அவர்களின் மனைவியின் கனவில் தோன்றி, ''நீ உன்னுடைய கணவனை சித்ரவதை செய்யாதே! அவனுக்கு விருப்பமானதை அவன் செய்யட்டும்! அதனால் உனக்கு எந்த இழப்பும் ஏற்படப் போவது இல்லை. இவ்வுலக வாழ்க்கைக்கு தேவையான பொருட்களிலேயே எப்போதும் நாட்டமாகவும் அவற்றை தேடுவதில் மிகுந்த ஈடுபாடும் வேண்டாம். இறுதி கால கட்டத்தில் இந்த செல்வமானது இங்கேயே தங்கிவிடும். அப்போது நாம் நம்முடன் செய்த புண்ணிய காரியங்களின் பலனையும், பாபங்களின் பலனையும் மட்டும் தான் கூட்டிச் செல்லப்போகிறோம். அபிஷேகமும், அன்னதானமும் புண்ணிய காரியங்கள் ஆகும். இவற்றைச் செய்வதன் மூலம் தியாக மனப்பான்மை நமக்கு ஏற்படுகிறது. பிறரின் நலனுக்காக நாம் ஏதாவது ஒரு நற்காரியத்தை செய்தோம் என்று அமைதியும், ஆனந்தமும் நமக்கு ஏற்படுகிறது.

இத்தகைய காரியங்களுக்காக செலவிடப்படும் பணம் என்றுமே விரையமாகாது. ஒரு நல்ல விதையை பூமியில் விதைப்பதற்கு சமானமாகும். ஆகையால் உன் கணவனை தடுக்க வேண்டாம்'' என்று எடுத்துரைத்தார்.

அடுத்த நாள் காலை கணபத்தின் மனைவி, தன் கணவரிடம் தன் கனவில் நிகழ்ந்தவற்றைப் பற்றி எடுத்துரைத்தாள். அவள் கணவன் மிகுந்த சந்தோஷத்துடன், சத்குருவின் மேல் முழுமையான நம்பிக்கையை வைத்து அவர் நம்முடன் கூட இருக்கிறார் என்பதை அவள் உணர வேண்டும் என்றும் அவர்களுடைய குழந்தைகள் மற்றும் அவருடைய சொத்துக்கள் முழுவதற்கும் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் ஒருவரே உரிமையாளர் என்றும், இனிமேல் எதைப்பற்றியும் கவலைப்பட தேவையில்லை என்றும் கூறினார்.

கணபதிராவ் மிகுந்த மகிழ்ச்சியோடு, ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு பூஜை செய்தது புனிதமான நாளான தஸரா தினத்தில், பிராமணர்களுக்கு போஜனமளித்து தான் விரும்பியவாறு விஜயதசமியை சிறப்பாகக் கொண்டாடினார். ஸ்ரீ மகராஜ் அவர்களின் மேல் கணபதிராவினுடைய நம்பிக்கை மேலும் மேலும் அதிகமானது.



நாம் இப்பொழுது லக்ஷ்மண் ஹரிஜன்லாலின் வாழ்வில் நடந்த சம்பவம் பற்றிக் காண்போம். லக்ஷ்மண், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் மேல் அன்பும், பக்தியும் கொண்டவர் ஆவார். ஒரு சமயம் அவர் தொழில் நிமித்தமாக, மும்பையில் போரிபந்தர் இரயில் நிலையத்தில், தாம் திரும்பிச் செல்வதற்கான பயணச்சீட்டு வாங்குவதற்காக வந்திருந்தபோது, அங்கு ஒரு உயரமான மனிதரைக் கண்டார். அவர் ஒரு சாதுவாகத் தெரிந்தார். அவருடைய கைகள் நீண்டு, கால் முட்டி வரை இருந்தன. அவருடைய கண்கள், மூக்கின் நுனியை நோக்கியும், உதடுகள் இடைவிடாது மந்திரமும் சொல்லிக் கொண்டிருந்ததைக் கண்டார். அந்த சாது லக்ஷ்மணனிடம்,

''ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் தீவர பக்தனான நீ, ஏன் மனம் உடைந்த நிலையில் இருக்க வேண்டும்? உனக்கு நினைவிற்கு வருகிறதா! நீ அமராவதியில், புண்ணிய திதி அன்று 400 பேர்களுக்கு உணவளித்தாய்! அந்த நேரம் பாபத் என்பவன் தன்னுடைய மகனை இழந்தான். அப்போதும் அவன் ஸ்ரீ பேத்கருடன் அங்கு வந்து உன்னுடன் இணைந்து எல்லோருக்கும் உணவளித்து ப்ரஸாதம் பெற்றுக் கொண்டான். ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் உன்னிடத்தில் அனுப்பி வைத்து ப்ரஸாதம் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார் என்ற உண்மையை நீ அறிந்துகொள். எல்லாவற்றையும் நீ மறந்து விட்டாயா!'' என்றார்.

சாதுவின் இத்தகைய வார்த்தைகளை லக்ஷ்மண் மிகவும் குழம்பினான். இவர் யாராக இருக்க முடியும்! எல்லாவற்றையும் இத்தனை தெளிவாக நேரில் நின்று பார்த்த சாட்சியைப் போல கூறுகிறாரே என்று எண்ணி வியந்து அவரை பணிந்தான். அவன் தலை நிமிர்ந்து பார்த்த போது அவர் மறைந்து விட்டிருந்தார். அவன் வீடு திரும்பினான். இப்போது மனம் மிகவும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் இருந்தது. ஒவ்வொரு வருடமும் புண்ணிய திதியை அன்னதானம் அளித்து கொண்டாடினான்.

ஞானியர்கள் தம் பக்தர்கள் மனம் கலக்கமடையும் வேளையில், அவர்கள் எங்கு இருந்தாலும், தாம் அவர்களுக்கு ஏதாவது ரூபத்தில் காட்சி அளித்து, அவர்களை குழப்பத்தில் இருந்து காப்பாற்றுவார்கள் என்பதற்கு லக்ஷ்மண் வாழ்வில் நடந்த சம்பவமே சாட்சியாக விளங்குகிறது.

நாம் இப்போது ஸ்ரீ மகராஜ் அவர்கள் ரோஹித் என்ற கிராமத்தில், காவி உடையில் எவ்வாறு அவதூத் ஜெயராம் கேத்கரை சந்தித்தார் என்பதை காணலாம்.

ஒரு சமயம் மாதவ மார்த்தாண்ட ஜோஷி என்பவர், கால் கச்சூர் என்ற கிராமத்திற்கு, நில அளவு செய்யும் பணிக்காக வந்திருந்தார். அவர் வருமான வரித்துறை இலாகாவில் உயர் பதவி வகித்து வந்தார். ஒரு வியாழக்கிழமை தினத்தில், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் பக்தனான அவர், ஷேக்காவ் சென்று சத்குருவின் மகா சமாதியை தரிசிக்கச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டார்.

அவர் தன் பணியாளரான குத்புதீனிடம், ஷேக்காவ் செல்வதற்காக மாட்டு வண்டியை தயாராக வைக்கும்படி கூறினார். குத்புதீன் மிகவும் பணிவாக தன் எஜமானனிடம், வானம் மிகவும் மேகமூட்டமாக இருப்பதாகவும், ''மன்'' (MAN) என்ற பெயருடைய நதியானது வெள்ளப் பெருக்கெடுத்ததால், அவர் சிறிது யோசித்து செயல்படுமாறு கூறினான். ஜோஷி அவனுடைய வேண்டுகோளை நிராகரித்து, வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டு, குத்புதீனை வண்டியை ஷேக்காவ் நோக்கி செலுத்தக் கூறினார்.

குத்புதீன் ஜோஷியின் ஆணைக்கு கீழ்படிந்து, வண்டியை செலுத்தினான். நதி நீர் வெள்ளமாக பாய்ந்து, அவர்களின் வண்டியை சூழ்ந்து கொண்டது. பலமான இடியுடனும், மின்னலுடனும் புயல்மழை பெய்த காரணத்தால், ''மன்'' நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பலமான காற்றுடன் பெய்த மழையால் விவசாயிகளின் குடிசைகள் முழுவதும் காற்றில் பெயர்ந்து பறந்து விட்டன. குத்புதீன் மிகவும் பயந்தபடி இந்த சூழ்நிலையில் அவர்கள் மரணிப்பது நிச்சயம் நிகழும் என்று கூறினான். ஜோஷியும் தன் தவறை உணர்ந்து பயந்தபடி, ஸ்ரீ மகராஜ் அவர்களை பிரார்த்தித்தார். எவ்வாறாயினும் இந்த ஆபத்திலிருந்து தம்மை காப்பாற்றுமாறு ஸ்ரீ மகராஜ் அவர்களை வேண்டினார்.

ஜோஷி தன் இரு கைகள் கூப்பியபடி, ''ஓ கஜானனா! கருணையோடு எம்மைக் காப்பாற்றுவாயாக! உன்னைத் தவிர வேறு யாராலும், இப்பொழுது எங்களைக் காப்பாற்ற இயலாது! கடலில் மூழ்கிய கப்பலையும், ஒரு சாது தம் கையால் வெளியே எடுத்து கரை சேர்த்து காப்பாற்றினார் என்று புராணங்கள் கூறுகின்றன! அன்பு கலந்து இங்கு வந்து எங்களைக் காப்பாற்றுவாயாக'' என்றார்.

நதி நீர் வண்டிக்குள் பாய்ந்தவுடன் எருதுகள் மிகவும் பயந்தன. ஜோஷி தன் பணியாளனான குத்புதீனிடம், எருதுகளைப் பற்றி இருக்கும் கயிறை விட்டுவிட்டு, ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை நோக்கி பிரார்த்தனை செய்யுமாறு கூறினார். அவன் சத்குருவிடம், ''அளவில்லாத ஆற்றலுடைய மகராஜ் அவர்களே, இப்போது எங்களுடைய உயிர் உங்கள் கைகளில் உள்ளது. நீங்கள் நினைத்தவாறு செய்யுங்கள்'' என்று மனமார தியானித்தான். இவ்வாறு கூறிவிட்டு எருதுகளை கட்டி இருந்த கயிற்றை அவிழ்த்து விட்டு விட்டு, இருவரும் தம் கண்களை மூடிக்கொண்டனர்.



என்ன ஆச்சரியம்! அந்த வண்டி நதியைக் கடந்து, நதியின் அடுத்த கரையில் நின்று கொண்டு இருந்தது. இதைக் கவனித்த அவர்கள் இருவரும், சத்குருவின் அளவில்லாத ஆற்றலை கண்கூடாகப் பார்த்த நிலையில் மகிழ்ச்சி அடைந்தனர். அன்று இரவு ஷேக்காவ் அடைந்து, ஜோஷி சத்குருவின் சமாதியை நமஸ்கரித்து, தம்மை மரணத்தின் விளிம்பில் இருந்து காப்பாற்றியதற்கு நன்றி தெரிவித்தார். அன்று மாலையில் நடந்த ஊர்வலத்திலும் பங்கேற்றார். மறுநாள் ஜோஷி தம்மால் இயன்ற அளவிற்கு நன்கொடை வழங்கினார். மேலும் பாலபுவாவிடம் ஒரு தொகையை அளித்து பிராமணர்களுக்கு போஜனம் அளிக்கச் செய்தார். அவர் அலுவலக பணியின் நிமித்தம் விரைவாக செல்ல வேண்டி இருந்ததால், ஷேக்காவ் கிராமத்திலிருந்து தமது சொந்த ஊருக்குத் திரும்பினார். எத்தகைய மெய் சிலிர்க்க வைக்கும் அனுபவம் ஜோஷியின் வாழ்க்கையில் நம் சத்குருவின் தயவால் நடந்திருப்பதை நினைக்கும் பொழுது, அவர் என்றுமே நம்மோடு இருக்கிறார் என்ற தெளிவும் நமக்கு ஏற்படுகிறது.

ஹிங்கனியைச் சேர்ந்த பருத்தி விற்பனையின் தரகரான யாதவ் கணேஷ் சுபேத்கர் ஒரு சமயம் அவர் தொழிலில் மிகவும் நஷ்டமடைந்து, ஏறக்குறைய பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் இழந்து விட்டார் அக்காலத்தில், அதாவது 1800-களில் பத்தாயிரம் ரூபாய் என்பது மிகப் பெரிய செல்வந்தர்களிடம் மட்டுமே இருந்து வந்தது. திடீரென்று பருத்தி முதலீட்டில் நஷ்டமடைந்து இத்தகைய பெரிய தொகையை இழந்து, தன் குடும்பத்தினரும், நண்பர்களும், தம்முடன் தொழில் செய்யும் வர்த்தகர்களும் தம்மை வியாபாரம் செய்ய தகுதி அற்றவனாக நினைக்கும் சூழ்நிலை ஏற்பட்டதால், யாதவ் நிலை குலைந்து போனார். அது அவருடைய மனநிலையையும், உடல் நிலையையும் வெகுவாகப் பாதித்தது. அவர் தம்மால் இயன்றவரை நஷ்டமடைந்த தொகையை திரும்ப எடுப்பதற்கு தீவிரமாக உழைத்தும், அவர் முயற்சி படுதோல்வி அடைந்தது. இந்த சமயத்தில் அவருடைய நண்பரான அசார்கார் வசிக்கும் நகரமான வார்தாவிற்கு வந்தார்.

அதே நேரத்தில் ஒரு பிச்சைக்காரன், அவர் நண்பன் அசார்காரின் வீட்டின் முன்னால் நின்று கொண்டு, இருகைகளையும் நீட்டி யாசகம் கேட்டான். அவன் பார்ப்பதற்கு மராத்தியைப் போலவும், கையில் ஒரு பெரிய தடியோடும், தலையில் ஒரு அழுக்குத் தொப்பியும் அணிந்திருந்தான். அவன் தோற்றத்தைப் பார்த்தவுடன் அசார்கார் ஆத்திரமடைந்து பிச்சை எடுக்க அடுத்த வீட்டிற்கு செல்லுமாறு துரத்தினான்.

அந்த பிச்சைக்காரனோ இவை எதையுமே காதில் வாங்கிக் கொள்ளாமல், அந் வீட்டினுள் நுழைந்து யாதவ் சுபேதாரின் அருகில் அமர்ந்து கொண்டான். அவன் யாதவ் சுபேதாரைப் பார்த்து எனக்கு பிச்சை அளிப்பாயாக என்று கூறி தன்னுடைய பாத்திரத்தை எடுத்து யாதவ்வின் முன்னால் நீட்டினான். யாதவ் மிகுந்த ஆச்சரியத்துடன் அந்த பிச்சைக்காரன் இவ்வளவு உரிமை எடுத்துக் கொண்டு, வீட்டினுள் நுழைந்து தன்னிடம் பிச்சை கேட்பதைப் பார்த்து அவனை கூர்ந்து நோக்கினான். அவன் கண்களுக்கு பிச்சைக்காரன் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களாகத் தெரிந்தது. அவரைப் போலவே பளிச்சிடும் கண்களும், பேசிய தொனியும், இருந்ததைக் கண்டான். ஆனால் அந்த பிச்சைக்காரன் ஏதோ ஒரு வியாதியால் உடலை அங்கும் இங்கும் அசைத்த வண்ணம் இருந்தான்.

முக அமைப்பும் நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களைப் போன்றே இருந்தது! ஆனால் இது எவ்வாறு சாத்தியமாகும்? ஸ்ரீ கஜானன் மகராஜ், மஹா சமாதியடைந்து வெகுகாலம் ஆகிவிட்டபடியால், அவர் எவ்வாறு இங்கு வருகை தர முடியும்! இவர் யாராக இருந்தாலும் சரி, நான் இவர் கேட்டதை தர வேண்டும் என்று எண்ணி, அவரை ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களாக நினைத்து, தம் பையில் இருந்து பணம் எடுத்துக் கொடுத்தான்.

அவர் அதை வாங்கிக் கொண்டு மேலும் தமக்கு பணம் வேண்டுமென்று கேட்டார். அவர் யாதவ் சுபேதாரிடம், ஸ்ரீ மகராஜ் பெயரில் வெல்லக் கட்டிகளை விநியோகம் செய்வதாக எடுத்த உறுதி மொழி என்னவாயிற்று? என்று கேட்டார்! மேலும் வாக்களித்தபடி விநியோகம் செய்யாத காரணத்தால் தான் அவன் இத்தகைய ஒரு பெரிய நஷ்டத்திற்கு ஆளானதாக கூறினார்.

இதைக் கேட்டவுடன் யாதவ் மேலும் நிறைய தொகையை எடுத்து அவரிடம் கொடுத்தான். ஆனால் அந்த பிச்சைக்காரன் அது



தமக்கு போதாது என்றும் மேலும் ஒரு தொகை வேண்டும் என்றும் கேட்டார். அத்தொகையையும் யாதவ் அளித்தார். அச்சமயம் அசார்கார் ஒரு வேலை விஷயமாக, தன் வீட்டிற்குள் சென்று இருந்தார். ஆகையால் யாதவ் மற்றும் அப்பிச்சைக்காரனும் தனியாக இருந்தனர்.

அப்பிச்சைக்காரன் யாதவை நோக்கி, ''ஏன் இன்னும் ஸ்ரீ கஜானன் மகராஜ் குறித்து சந்தேகப்படுகிறாய்!

நீ இப்போது உடனடியாக உன்னுடைய ஆடைகளை களைந்து என் முன்னால் நிற்பாயாக! நான் உன் சரீரம் முழுவதையும் என் கண்களால் காண வேண்டும். அதனால் உன்னுடைய கர்ம வினைகள் யாவும் அழிந்துவிடும். நீ என்னுடைய மகனைப் போன்றவன். என் முன்னால் நிர்வாணமாக நிற்பதற்கு வெட்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.''

இவ்வாறு கூறிவிட்டு, ஸ்ரீ மகராஜ் தன் கைகளை தூக்கி ஆடையில்லாத யாதவ் சுபேதாரின் உடல் முழுவதையும் தடவிக் கொடுத்தார். அந்த நேரத்தில் அசார்கார் வீட்டினுள் இருந்து வந்தவுடன் அந்தப் பிச்சைக்காரனும் சென்று விட்டான். யாதவ் அவரைக் கண்டுபிடிப்பதற்கு அந்நகரம் முழுவதும் சுற்றியும் அவரைக் காண முடியவில்லை. அவனுக்கு வந்தவர் ஒரு வேளை ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களாக இருந்தால் நிச்சயமாக தான் வியாபாரத்தில் வெற்றிபெற முடியும் என்று நினைத்தான்.

அதே நாளில் அவனுடைய வண்டிகளில் பருத்தி மூட்டைகள் வார்தாவை வந்து அடைந்தன. என்ன ஆச்சரியம்! என்றுமே இல்லாத அளவிற்கு, அன்ற அவருடைய பருத்தி மிக அதிகமான விலைக்கு வாங்கப்பட்டது. யாதவ் சுபேதாருக்கு, ஸ்ரீ மகராஜ் அவர்களே பிச்சைக்காரன் வேடத்தில் வந்து தன் வறுமையைப் போக்கியது தெளிவாகப் புரிந்தது.

கருணாமூர்த்தியான ஸ்ரீ கஜானன் மகராஜ், ஒருபோதும் தன் பக்தர்களைக் கைவிடமாட்டார் என்பதை நாம் இப்போது கேவர் என்பவரின் அனுபவத்தின் மூலம் உணரலாம்.

பாபு ராஜாராம் கேவர் என்ற மருத்துவர், காம்காவ் கிராமத்தில் பணியாற்றி வந்தார். அவர் காம்காவ் கிராமத்தில் இருந்து அரசாங்கத்தால், டெல்ஹாரா (Telhora) கிராமத்திற்கு, பணிமாற்றம் செய்யப்பட்டார். பாபு ராஜாராம், டெல்ஹாராவில் தனது பணியில் சேருவதற்கு முன் தனது குடும்பத்தாருடன் ஷேக்காவ் சென்று, ஸ்ரீ மகராஜ் அவர்களின் மஹா சமாதியை

தரிசித்தார். தரிசனத்திற்கு பின்னர், ஷேக்காவ் கிராமத்தில் இருந்து டெல்ஹாரா செல்வதற்காக, ஒரு மாட்டு வண்டியை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். அன்று மாலைப் பொழுதில் அவருடைய குடும்பத்தாருடன், அவர் டெல்ஹாரா செல்வதற்காக புறப்பட ஆயத்தமானார்கள். பாலபுவா அவரிடம், தாங்கள் நாளை ப்ரஸாதம் உண்ட பிறகே செல்ல வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும் என்றார். இதற்கு முன்னர் இது போன்ற ப்ரஸாதம் உண்ணாமல் தாங்கள் சென்றது கிடையாது. இன்று எதற்காக இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்! மேலும் இன்று வியதிபாத தினம் ஆதலால் வெளியூருக்கு புறப்படுவதற்கு தகாத நாளாக அன்றைய தினம் கருதப்படுகிறது. பிரயாணம் செல்வதற்கு ஏற்ற நாள் அல்ல. இவ்வாறு பாலபுவா கூறியதும் கேவர் அரைகுறை மனதோடு அங்கிருக்க சம்மதித்தார்.

ஆனால் அவர் பாலபுவாவிடம், இரவு உணவை உண்டபிறகு தான் செல்வதாகவும், தன் குடும்பத்தினர் நாளை தினத்தில் புறப்படலாம் என்றும் தற்போது தான் மட்டும் இரவு உணவிற்கு பின்னர் புறப்படுவதாகவும் கூறினார். அதுபோன்றே இரவு உணவு உட்கொண்ட பிறகு தன் குடும்பத்தினரிடம் சொல்லிக் கொண்டு, ஷேக்காவ் கிராமத்தில் இருந்து புறப்பட்டார். விதி யாரையும் விடாது என்பார்கள் நம் ஞானியர்கள்.

அன்று இரவு நடுநிசிப் பொழுதில் அவருடைய மாட்டு வண்டி சென்று கொண்டிருந்தது. ஆனால் டெல்ஹாரா கிராமம் நோக்கிச் செல்லவில்லை. நடுநிசி என்பதால் வண்டியோட்டி தூக்கத்தில் வழியை மாற்றி டெல்ஹாரா செல்லும் பாதை தவறி, வேறு வழியில் வண்டியை செலுத்தி விட்டான்.

சிறிது நேரத்தில் வண்டி நின்றது. அந்தப்பாதை முழுவதும் அடர்ந்த காட்டுப் பிரதேசமாகும். ஒரு பெரிய ஏரியுடன் காணப்பட்ட அந்த அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் கேவரின் மாட்டு வண்டி சென்றுவிட்டது. சரியான பாதையைப் பற்றி விசாரிக்க வேண்டுமானால் யாருமே இல்லாத அந்த இருண்டவனத்தில் எவ்வாறு வழியை அறிந்து கொள்ள இயலும்! வண்டியோட்டி கேவரிடம், வண்டி தவறான பாதையில் சென்றுவிட்டது என்ற உண்மையைக் கூறினான். கேவர் அதிர்ச்சியோடு, வண்டியில் இருந்து இறங்கிப் பார்த்த பொழுது, டெல்ஹாரா செல்லும் பாதையை மாற்றி வேறு காட்டுச் பிரதேசத்தினுள் வண்டி வந்துவிட்டது கண்டு ஆத்திரமடைந்து வண்டியோட்டியை கடிந்து கொண்டார்.



வண்டியோட்டி கேவரிடம், ''நீங்கள் ஏன் என்னை திட்டுகிறீர்கள்? நான் தொடர்ந்து தினமும், ஆயலத்திற்கு வந்தவர்களை டெல்ஹாரா ஏற்றிச் சென்று வந்து கொண்டு இருக்கிறேன். ஆகையால் எனக்கும், என் காளைகளுக்கும் டெல்ஹாரா செல்லும் வழி நன்றாகத் தெரியும்.

நானும் என் காளைகளும் எந்த இடத்திலும் திரும்பவில்லை. ஒரே நேர்கோட்டில் தான் வந்து கொண்டிருக்கிறோம். இந்த பெரிய ஏரியைப் பார்த்ததால் தான், வண்டி இந்த இடத்தில் நின்றுவிட்டது. இது நிச்சயமாக டெல்ஹாரா செல்ல வேண்டிய சாலை அல்ல'' என்றான். தற்பொழுது கேவருக்கு, வண்டி தவறான பாதையில் சென்றதற்கான காரணம் தெளிவாகப் புரிந்துவிட்டது. இது ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் லீலையாகும். பாலபுவாவின் கோரிக்கையை நிராகரித்துவிட்டு, ஷேக்காவ் கிராமத்தில் இன்று ஒரு நாள் தங்கி இருக்காமல் அவர் கூறியவாறு ப்ரஸாதமும் உண்ணாமல் வந்ததுதான், இக்குழப்பம் அனைத்திற்கும் காரணம் என்று கேவருக்கு புரிந்துவிட்டது. அவர் தனது இரு கைகளையும் கூப்பி, ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் மன்னிப்பு வேண்டினார். சத்குரு ஒருவரே இந்த இக்கட்டான நிலையில் இருந்து தம்மைக் காக்க முடியும் என்றும் தீவிரமாக பிரார்த்தனை செய்தார்.

அடுத்த சில நிமிடங்களில் எங்கேயோ காளைகளின் வண்டி சத்தம் கேட்டது. அச்சத்தம் கேட்டதும் கேவருக்கு இழந்த தைரியம் மீண்டும் வந்தது. அவர் வண்டியோட்டியிடம் சத்தம் வரும் திசையை நோக்கி வண்டியைச் செலுத்துமாறு கூறினார். வண்டியோட்டியும் அத்திசையை நோக்கி தன் வண்டியை செலுத்தினார். சிறிது நேரத்தில் அவர்கள் ஒரு பெரிய சாலையை வந்தடைந்தனர். கேவர் அப்பகுதி மக்களிடம் விசாரித்ததில் வண்டி இன்னமும் ஷேக்காவ் கிராம எல்லையை தாண்டவில்லை என்ற உண்மையை புரிந்து கொண்டார். உடனே வண்டியோட்டியை ஷேக்காவ் கிராமம் நோக்கி செலுத்துமாறு கூறினார். அதிகாலையில் அவர்கள் ஷேக்காவ் திரும்பினார்கள். ஆலயம் சென்றடைந்ததும் கேவர் பாலபுவாவிடம் அனைத்தையும் கூறினார்.

பாலபுவா, கேவரிடம், ''ஸ்ரீ மகராஜ் உங்களை ஊர் எல்லையை தாண்ட முடியாமல் உங்கள் நன்மையைக் கருதியே ஆகும். இன்று நாள் பிராயணத்திற்கு உகந்ததே அல்ல. ஆகையால் தாம் ப்ரஸாதம் உட்கொண்டு, டெல்ஹாரா செல்லுங்கள். அதுவரை ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். ஆலயத்திற்கு வரும் அனைவரும் ப்ரஸாதம் உட்கொண்ட பிறகே

ஷேக்காவ் விட்டுச் செல்ல முடியும். ஸ்வாமியின் ப்ரஸாதத்தை யாருமே மறுக்கலாகாது. இன்று அவர்தான் உங்களை பத்திரமாக கொண்டு வந்து சேர்த்துவிட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எந்த ஒருவரும் தம்முடைய எல்லா விருப்பங்களும் நிறைவேறும் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஞானியர் நினைத்தபடியே அது நடந்தேறும். ஆகையால் சத்குருவின் மீது முழு விசுவாசம் வைத்து நாம அமைதியாக இருக்க வேண்டும்'' என்றார். இவ்வாறு பாலபுவா கூறியது மருத்துவர் கேவருக்கு மட்டுமல்ல, நாம அனைவருக்கும் இது பொருந்தும். அடுத்தநாள் கேவர் ப்ரஸாதம் உட்கொண்டு எவ்வித சிரமும் இன்றி டெல்ஹாரா சென்றடைந்தார்.

பாவசார் என்ற குலத்தை சார்ந்த, ரதான்சா (Ratansa) என்பவன், தன் ஒரு வயது மகனான டிங்கர் (Dinkar) ஒரு விதமான வியாதியால் பீடிக்கப்பட்டு, அதன் காரணமாக அவன் பலஹீனமாகவும், தோல் வெளுத்தும் காணப்பட்டான். அவன் நிறைய மருத்துவர்களிடம் சென்று, அவர்கள் தந்த மருந்து மாத்திரைகளை உண்டும், அவரது மகனுக்கு அந்த நோய் சரியாகவில்லை. ஒரு வயது குழந்தையான டிங்கர் பால் கூட அருந்த முடியாத நிலையில் மிகுந்த காய்ச்சலால் இடைவிடாது அழுது கொண்டு இருந்தான்., மருத்துவர்கள் இனியும் அக்குழந்தை குணமாக வாய்ப்புகள் இல்லை ரதான்சாவிடம் கூறிவிட்டனர். ரதான்சா கதறி அழுது புலம்பினான். அவன் மகன் டிங்கர் மரணத்தின் விளிம்பில் இருந்ததால் அக்குழந்தையின் கைகால்கள் மிகுந்த குளிரால் விரைத்துப் போயின. ரதான்சா தற்போதை சூழ்நிலையில் தன் மகனை ஒருவரால் மட்டுமே காப்பாற்ற முடியும் என்று நம்பினான். தன் குழந்தையை தூக்கிக் கொண்டு வந்து, ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் சமாதியின் முன்னால் வைத்தான்.

அவன் கைகளை தொழுது மகராஜ், ''தயை கூர்ந்து என் குழந்தையை காப்பாற்றுங்கள்! அவன் உயிர்பிழைத்தவுடன் நான் இங்கு வந்து ஐந்து ரூபாய்க்கு இனிப்புகள் வாங்கி விநியோகம் செய்கிறேன்'' என்றான். மேலும அவன், ''ஸ்வாமி! நீங்கள் ஆயிரக்கணக்கான பக்தர்களை ஆசீர்வதித்துள்ளீர்கள்! இப்போது எனக்கும் தங்களுடைய ஆசீர்வாதம் என்ற அனுபவம் தேவைப்படுகிறது. நானும் தங்களின் பக்தனாவேன்! ஆதலால் என்னை புறக்கணிக்காதீர்கள்! உங்களுடைய பாதுகாப்பில் விடப்பட்ட இக்குழந்தை இறந்தால், அது உங்களுக்கு தீராத பழியைத் தேடித்தரும். மக்கள் அனைவரும் தங்கள் பாதங்களை



ஸ்பரிசிப்பவர்கள் சுவையான தேனைப்பருகியதற்கு சமமமாகும் என்ற சொல்கின்றனர். நான் தங்கள் பாதங்களில் சரணமடைகின்றேன். ஒரு வேளை உங்கள் ஆசீர்வாதம் பெறாமல் என் மகன் இறந்து விட்டால், நான் உங்களுடைய வாயிற் கதவுகளில், என் தலையை மோதி உடைத்துக் கொள்வேன், ஓ கஜானன் மகராஜ்! கருணையோடு உற்று நோக்கி என் குழந்தையை காப்பாற்றுவாயாக'' என்று மன்றாடி வேண்டிக் கேட்டுக் கொண்டான்.

அதுவரை அக்குழந்தை எவ்வித சலனமும் இல்லாமல் கிடந்தது. கைகால்கள் விரைத்துப் போயின. ஆனால் அவன் பிராத்தித்ததை அடுத்த சில நிமிடங்களில் என்ன அற்புதம்! அக்குழந்தை சிறிது நகர ஆரம்பித்து பின்னர் அது அழத் தொடங்கியது. அதை பார்த்துக் கொண்டிருந்த, அங்கிருந்து அனைவரும் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போயினர். சூரியனின் முன்னால் எதை வைத்து இருட்டடிப்பு செய்ய இயலும்? சிறிது நாட்களில் டிங்கர் முழுவதும் குணமாகி விட்டான். இயல்பு நிலைக்குத் திரும்பி தேக ஆரோக்கியத்துடன் உற்சாகமாக இருந்தான். ரதான்சாவும் தாம் வாக்களித்தபடி ரூபாய் 5-க்கு இனிப்புகள் வாங்கி விநியோகம் செய்தார். அவருடைய அந்தவாக்கும், ஸ்ரீ மகராஜ் மீது அவர் கொண்ட முழு நம்பிக்கையும் அவர் மகனை காப்பாற்றியது.

இதே போன்று ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் கருணையால், தாதா கோலாட்கருக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுடைய மகன் பெயர் ராஜா என்பதாகும். ஞானியரின் கருணைக்கு அளவு என்பதே கிடையாது.

ஸ்ரீ ராமச்சந்திர பாட்டிலின் 16 வயது மகளான சந்திரபாகாவிற்கு பிரசவம் மிகவும் கடினமாகியது. பெண்களுக்கு பிரசவம் என்பது மறு ஜென்மம் என்று கூறுவது வழக்கம். பரம்பரையான வழக்கப்படி பிரசவத்திற்கு, சந்திரபாகா தனது தாயாரின் வீட்டிற்கு லாட்காவ் (Ladegaon) கிராமத்தில் இருந்து வந்தாள். பிரசவம் முடிந்தபின்னர், அவருக்கு காய்ச்சல் கண்டது. அக்காய்ச்சல் இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் நீடித்ததால், சோதித்துப் பார்த்த மருத்துவர்கள், சந்திரபாகாவிற்கு டைப்பாய்டு ஜூரம் வந்ததாக கூறினார். அநேக மருத்துவர்கள் வைத்தியம் செய்து பார்த்தும் காய்ச்சல் இறங்கவில்லை. அதனால் மருத்துவ வசதிக்காக சந்திரபாகாவை அகோலா நகருக்கு எடுத்துச் சென்றனர். ஆச்சரியம் என்னவென்றால் அவளைப் பரிசோதித்த ஒவ்வொரு மருத்துவரும், ஒவ்வொரு விதமான கருத்தை தெரிவித்தனர்.

மருத்துவர்களின் கருத்துக்களில் எந்த ஒரு ஒற்றுமையும் இல்லை. எவ்வித குணமும் இன்றி வைத்தியம் பலனற்றுப் போனது.

பாட்டீல் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களிடம் சரணடைவது ஒன்றே இந்த வியாதிக்கான ஒரே தீர்வு என்று தீர்மானித்தார். பாட்டீல் ஸ்ரீ மகராஜ் அவர்களிடம் பெற்ற உதி என்ற விபூதியையும், தீர்த்தத்தையும் தினமும் அவருக்கு அளித்தார். அவருடைய நம்பிக்கையும், விசுவாசமும் அவர் மகள் சந்திரபாகாவிற்கு சிறிதளவு உடல் நலம் தேற ஆரம்பித்தது. தன் படுக்கையில் இருந்து எழுந்திருக்கவே முடியாத அந்தப்பெண், நடந்து சென்று மகாசமாதியை தரிசனம் செய்து வந்தாள். அது சத்குருவின் ஆசிபெற்ற உதியும், தீர்த்தமும் மட்டுமே செய்ய முடிந்த காரியமாகும். இறைவன் எப்போதும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்களை நிச்சயம் காப்பாற்றுவார். இதேபோன்று ஒவ்வொரு பக்தரும் முழுமையான நம்பிக்கையும், மனதைக் கட்டுப்படுத்தி ஒரு முகமாக்கி ஸ்ரீ மகராஜ் அவர்களை நோக்கி செய்யப்படும், ஆத்மார்த்தமான பிரார்த்தனையும் செய்தால் அவர்களின் அபாயங்கள் எல்லாம், நொடிப் பொழுதில் நீக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

ஒரு சமயம் ராமச்சந்திராவின் மனைவியான ஜானகாபாய் தன்னுடைய வியாதியால் தப்பிக்க முடியாதவளாய் மிகவும வேதனையோடு காணப்பட்டாள். கடுமையான பாரிச வாயுத்தொல்லையில் தொடர்ந்து வயிற்று வலியால் அவதிப்பட்டாள். மருத்துவர்களின் மருந்துகள் அனைத்தும் சில மணிநேரங்களுக்கு மட்டுமே பலன் அளித்தது. இறுதியாக அவ்வியாதி அவள் மூளையை பாதித்தது. அவள் என்ன கூறுகிறாள் என்பது அவளுக்கே நினைவில்லாத நிலை ஏற்பட்டது. அதைப் போன்றே பசியையும் அவள் மறந்திருந்தாள். சிலர் அவள் சில துர்தேவதைகளால் பீடிக்கப்பட்டிருக்கிறாள் என்றனர், மற்றும் சிலர் ஒருவித மனோ வியாதியால் அவஸ்தையுறுவதாக கூறினார்கள். மற்றும் சிலர், பாட்டீல் உயர்ந்த அதிகாரி ஆதலால் அவருக்கு நிறைய எதிரிகளை அவன் உருவாக்கிக் கொண்டான் என்றும் அவனைவிட சக்தி குறைவானவர்கள், அவருக்கு நிகராக மோத இயலாதவர்கள் அவன் மனைவி மேல் செய்வினை வைத்ததால், அவர் மனைவிக்கு இவ்வாறு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தனது கருத்துகளை கூறினர்.

எல்லாவகையான வைத்திய முறைகளும் கையாளப்பட்டு எவ்வித மருந்துகளும் பயனளிக்கவில்லை. சமூகத்தில் செல்வாக்கும், உயர்ந்த அந்தஸ்தும் பெற்றிருந்த பாட்டீல் தன்னைச் சுற்றிலும் நேர்மையற்றவர்களால், தவறான வழியில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டான். அவன் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளைச் செய்தும் அவன் மனைவி குணமாகவில்லை.



இறுதியாக அவர் தன் மனைவியிடம், ''இப்போது நம்முடைய ஒரே மருத்துவர் ஸ்ரீ கஜானன் மகராஜ் ஒருவரே ஆவார். ஞானி, சாது, சந்யாசி, குரு மற்றும் கடவுள் எல்லாமே அவர் ஒருவர்தான். அவர் என்னுடைய தந்தை ஆவார். என் மனைவி அவரது மருமகள் ஆவாள். இது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை ஆதலால் அவருக்கு இனிமேல் எவ்விதமான மருந்துகளும் தேவையில்லை.''

- இவ்வாறு கூறிவிட்டு ராமச்சந்திரா பாட்டீல் தனது மனைவியை, அதிகாலையில் நீராடி மடத்திற்குச் சென்று மஹா சமாதியை பிரார்த்தனை செய்து வரவும் கூறினான். அவள் கணவனின் அறிவுரையை ஏற்று, தினமும் மஹாசமாதியை பிரார்த்தனை செய்து வந்தாள். அவை எதுவுமே வீண்போக வில்லை. அவள் வெகு விரைவில் குணமானாள். சாதுக்களுக்கு செய்யும் சேவை ஒரு போதும் வீண்போவதில்லை. ஆனால் முழுமையான நம்பிக்கையோடு அச்சேவையை செய்ய வேண்டும்.

ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு பிறகு பாலபுவாவும், சில அற்புதங்களை நிகழ்த்தினார். அவர் வைசாக் மாதத்தில் ஷேக்காவில் வைகுண்டத்தை அடைந்தார். அவருடைய இடமானது நாராயணனால் பாதுகாக்கப்பட்டது.

பாலபுவா வைகுந்தத்தை அடைந்தவுடன், ஸ்ரீ கஜானன் மகராஜ் ஸ்ரீ நாராயணனின் கனவில் தோன்றி, ஷேக்காவ் செல்லுமாறும், அங்கு சென்று ஸ்ரீ மகராஜ் அவர்களின் பக்தர்களை பாதுகாக்குமாறும் கூறினார். நாராயணன் தந்துராவைச் சேர்ந்தவர். அவர் சிறிதுகாலம் மடத்தின் அதிகாரத்தை ஏற்று இருந்தார். ஒரு சைத்திர சஷ்டியில் அவர் வைகுண்டப்பிராப்தி அடைந்தார். புண்ணியங்களிலேயே மிகச் சிறந்த புண்ணியமாக கருதப்படுவது சாதுக்களுக்குச் செய்யும் சேவையே ஆகும். ஆனால் எல்லோருக்கும் அந்த பாக்யம் அவ்வளவு எளிதில் கிடைக்காது. அத்தகைய சேவை செய்வதற்கு பூர்வ ஜென்ம பலன் மிகவும் அவசியமானதாகும். ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போல, நம் சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களிடம் சேவை செய்த மகான்களை கணக்கில் கூற இயலாது. நான் ஒரு மந்த

புத்தியுள்ள அறியாத சிறுவன். ஆகையால் இத்தகைய ஒரு பெரிய ஞானியும், ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரியுமான, ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின், சமுத்திரமாகிய இச்சரித்திரத்தை என்னால் முழுமையாக விவரிக்க இயலாது. அவர் என்னிடம் என்ன சொல்லி இருக்கிறாரோ அதை அப்படியே நான் எழுதி இருக்கிறேன். ஒரு கருத்தை நாம் எழுதும்போது, எழுது கோலால் எழுதுகிறோம். அக்கருத்து மிகவும் சிறப்பாக அமைந்தால், அந்தப்புகழ் எழுதுகோலுக்க கிட்டுவதில்லை. அதை எழுதச்செய்தவருக்குத்தான் கிடைக்கிறது. அதைப்போல நானும் ஒரு எழுதுகோல் என்னை இயக்கி எழுத வைத்த **ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கே இப்புகழ் யாவும் சென்று சேரட்டும். ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் கருணையால், என்னால் இச்சரித்திரத்தை எழுத முடிந்தது.** இதை படிப்பவர்களுக்கு நான் கூறிக் கொள்வது ஒன்று தான். **இச்சரித்திரத்தின் புகழும், பலனும், வெற்றியும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு மட்டுமே சொந்தமாகும்.**

தாஸ்கணுவின் இந்த சரித்திரம், இப்போது முடிவடையும் நிலையில் இருக்கிறது. நாம் இனி இறுதி அத்தியாயத்தை காண்போம்.

**- ஜெய் கஜானன் -**





# அத்தியாயம் - 21

ஜெய் கஜானன் மகராஜ்

ஸ்ரீ கணேஷாய நமஹ! ஓ அனந்தனே! உன்னைப் போற்றுகிறேன்! ஓ அவிநாசனே! உன்னைப் போற்றுகின்றேன்! நான் தங்களை தலை தாழ்த்தி நமஸ்கரிக்கின்றேன்! நீ எப்போதும் உன்னை பதீத பாவனன் என்று அழைத்துக் கொள்வதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்! பதீத பாவனனாக இருப்பதால் நீ நலிந்தவர்களை காப்பாற்றி உதவி செய்வதைப் போல என்னையும் காப்பாற்றுவாயாக! பாவம் செய்தவர்களின் மேல் நீ கருணையும், அன்பும் காட்டினாய்! கருணா மூர்த்தியே! மக்கள் அளவுக்கு அதிகமாக பாவம் செய்த காரணத்தால் உன்னைத்தவிர வேறு புகலிடம் இல்லாமல், உன்னையே சரணடைகின்றார்கள். அதனால் அன்பு கூர்ந்து என்னுடைய பாவங்களையும் மன்னித்துவிடு! அழுக்குத் துணிகள் தம்மைச் சுத்தம் செய்து கொள்ள நல்ல நீரைத் தேடி வருகின்றது. ஓ இறைவா! ஆகையால் நீ நலிந்தவர்களைக் கைவிடாதே! இந்த பூமி, தன்மேல் வளரும் சிறிய செடிகளை எவ்வாறு புறக்கணிக்கும்? பாவிகளையும், நல்லவர்களையும் காப்பாற்றி வரும் நீங்கள் சூரியனுக்கு இணையாவீர்கள்! சூரியன் இருளைக் கிழிப்பதற்கு எவ்வித கடின முயற்சியும் எடுத்துக் கொள்வதில்லை. சூரிய தேவனின் கதிர்கள் உதிக்கும் பொழுதே அவை இருளை அழித்து விடுகிறது. பாவ புண்ணியங்கள் தத்துவமே தாங்கள்தாம் என்பதை நான் நன்கு அறிவேன்! இவ்வுலகில் பாவிகளையும் உருவாக்கி பின்னர் அவர்களை நல்வழிப்படுத்தி உன் படைப்புகளின் உயர்வான தன்மையும், முக்கியத்துவத்தையும் நீ உணர்த்தினாய்!

எதுவாக இருந்தாலும், நான் என் கவலைகளில் இருந்து விடுபட்டு உனது அருளால் சுதந்திரமாக இருக்க நீ கருணை காட்ட வேண்டும்! ஓ பாண்டுரங்கா! நீ அளவில்லாத ஆற்றலுடையவன்! உன்னைத்தவிர எனக்கு ஆதரவாக யாருமே இல்லை என்பதால், நீ என்னைக் காத்து இரட்சிக்க வேண்டும் என்ற வேண்டிக் கொள்கிறேன்!

பக்தர்களே! இப்பொழுது நாம் இறுதி அத்யாயத்தில் இருக்கிறோம். இத்தகைய மாபெரும் ஞானியும், தெய்வத்தின் அவதாரமும், ஏழை எளியவர்களின் மேல் அளவில்லாத அன்பும், கருணையும் கொண்ட ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின்

இச்சரித்திரத்தை படிக்கு அனைவரும் மிகுந்த புண்ணியம் செய்தவர்கள். சத்குருவிடம் முழு நம்பிக்கை வைத்திருப்பவர்களின் வாழ்க்கையில் எத்தகைய இடர்களும், துன்பங்களும் நேர்ந்தாலும் அவர் அவற்றைக் களைந்து நமக்கு சந்தோஷத்தைத் தருவார்.

சத்குருவின் ஆலயப்பணி ஷேக்காவில் தொடர்ந்து கொண்டு இருக்கும்போது, ஒரு கூலித்தொழிலாளி மேற்கூரையில் அமர்ந்தபடி கொத்தனாரிடம் கற்களை வாங்கிக்கொண்டு இருந்தான். அவன் கற்களை கொத்தனாரிடம் தூக்கி எறிந்து மாற்றிக்கொண்டு இருந்தான். அவனைத் தொடர்ந்து இன்னும் பலரும் இக்கற்களை தங்கள் கைகளுக்கு மாற்றி அனுப்பிக் கொண்டு இருந்தனர்.

இவ்வாறு கற்களை எறிந்து கொண்டிருக்கும் போது, அவன் தன்னுடைய கால் இடறி, நிலைத்தன்மையை இழந்தான். அதன் விளைவாக சுமார் 30 அடி உயரத்தில் இருந்து, பெரிய கற்கள் மொத்தமாக கொட்டி வைத்திருக்கும் தளத்தின் மேல் விழுந்தான். வழியில் நின்று கொண்டு கற்களை பரிமாற்றம் செய்தவர்கள், அவன் நிச்சயம் இறந்து விட்டிருப்பான் என்று தீர்மானித்தனர். அனைவரும் கீழே வந்து பார்த்தபோது என்ன ஆச்சரியம்! அவன் உடலில் ஒரு காயம் கூட இல்லாமல் நன்றாக இருந்தான். இது எவ்வாறு சாத்தியம் என்று அதிர்ச்சியடைந்த தொழிலாளிகள் அவனிடம் கேட்டபோது, அவன் தான் நிலை தவறி கீழே விழத்தொடங்கிய போது, யாரோ ஒருவர் மேலே வந்து தன் கையை இறுக்கிப்பிடித்துக்கொண்டு, தான் கற்களின் மேல் விழுந்த போது மெதுவாக தன் கைகளை விட்டு, தனக்கு எந்த காயமும் படாமல் தன்னை, மலர் மாதிரி தாங்கிய அந்த கைகளுக்கு சொந்தக்காரரை தேடியபோது அங்கு ஒருவரும் இருக்கவில்லை என்று ஆச்சரியத்துடன் கூறினான். அங்கிருந்த அனைவரும் இவையாவும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் அற்புதமாகும் என்று சொல்லி அவன் உயிரைக் காப்பாற்றியதற்காக அனைவரும் உற்சாகத்துடன் நன்றி தெரிவித்தனர்.

அவருக்கு ஆலயம் கட்டும் பணியாட்களை அவர் எவ்வாறு கைவிட முடியும்? ஆலயம் கட்டுமான பணிகள் முடியும் வரை இரவு நேரத்திலும் ஒருவர் கூட காயப்படாமல் நம் சத்குரு காப்பாற்றினார். அத்தொழிலாளி தாம் மிகவும் புண்ணியம் செய்தவன் ஆகையால் தாம் சத்குருவின் கைகளை ஸ்பரிசித்திருக்க முடியும் என்று கூறினான்.

ஒரு ராஜபுத்திர (Rajput) இனத்தைச் சேர்ந்த பெண் பிசாசு பிடித்திருப்பதாகவும், அவளை சத்குருவிடம் அழைத்து வந்தால், அவள் குணமாகிவிடுவாள் என்றும் நம்பிக்கையோடு, அவள்



உறவினர் அவளை ஜெய்ப்பூரில் இருந்து, ஷேக்காவ் கூட்டிக்கொண்டு வந்தனர். அன்று ஸ்ரீ ராம நவமி தினம் ஆதலால் ஸ்ரீ ராம நவமி கொண்டாட்டங்கள் ஆரம்பித்திருந்தன. ஸ்ரீராம நவமி விழா முதல் நாளான பாத்ரபத மாதத்தில் தொடங்கி நவமியில் முடிவடையும் இந்த நாளில், மக்கள் வெள்ளம் போல் குவிந்து ராமருடைய பிறந்த நாளை மிகவும் உற்சாகமாக கொண்டாடுவது வழக்கமாகும். அந்த நேரத்தில் சபா மண்டபம் கட்டுமான பணியானது துவங்கியதால், பெரிய பாறைகள் காணப்பட்ட கற்களும், சுமார் 3 அடியில் அமைந்த அவைகள், எந்த வித ஆதாரமும் இன்றி அதாவது பூச்சு வேலை எதுவும் செய்யப்படாமல், அப்படியே வைக்கப்பட்டு விட்டது. ஸ்ரீ ராம நவமி கொண்டாடப்பட்டதால் கட்டுமானப்பணி அப்போதைக்கு நிறுத்தபட்டதால் கற்களுக்கு பூச்சு வேலை நடைபெறாமல் அப்படியே நிறுத்தபட்டு இருந்தன. தூண்களை அப்படியே வைத்துவிட்டு, தொழிலாளர்கள் சென்று விட்டனர்.

ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியின் பிறந்த நாள் வைபவம் தொடங்கியவுடன், மக்கள் அனைவரும் ப்ரஸாதம் பெற்றுக் கொள்வதற்காக ஆல வளாகத்தினுள் ஒருவரை ஒருவர் மோதிக் கொண்டு முன்னேறி வரத் தொடங்கினர். மக்கள் வெள்ளம் போல திரண்டு வந்த வேகத்தைக் கவனித்த, அந்தப் பிசாசு பிடித்திருந்த ராஜபுத்திரப் பெண், தன் குழந்தைகளுக்கு ஆபத்து நேராமல் இருக்க வேண்டி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெரிய, பாரமான தூணின் அருகில் வந்து அத்தூணைத் தொட்டவுடன், அந்தத்தூண் அவள் மேல் அப்படியே சாய்ந்து விட்டது. உடனே அங்கிருந்த பத்து பதினைந்து பேர்கள் ஒன்றாகச் சேர்ந்து மிகவும் முயற்சி, செய்து, கடினமான அந்தத்தூணைத் தூக்கி நிறுத்தினர். அதற்கிடையில் அந்தப் பெண் நிச்சயமாக இறந்து விட்டிருக்கக்கூடும் என்று எல்லோரும் நினைத்தனர். என்ன அற்புதம்! அனைவரும் ஒன்றாகக்கூடி விழுந்து அத்தூண் எடுத்து நிறுத்தியவுடன், அதற்கு அடியில் சிக்கிக் கொண்ட அப்பெண்ணை தூக்கி, அவளுக்கு தண்ணீர் அளித்தனர். அவளுக்கு ஒரு சின்ன காயம் கூட ஏற்படவில்லை.

பின்னர் அப்பெண்மணியை மருத்துவர் லோபோவிடம் அழைத்துச்சென்றனர். லோபோ இயேசு நாதரை மனதார ஏற்றுக் கொண்ட கிருஸ்தவர், அவர் ஒரு சிறந்த அறுவை சிகிச்சை நிபுணரும் ஆவார். அவர் அப்பெண்மணியை சோதித்துப் பார்த்து விட்டு மிகவும் வியப்போடு, அவளிடம் ஒரு காயமும் இல்லாததைக் கண்டு ஆச்சரியம் கொண்டார். இதில் இன்னொரு மிகப்பெரிய அற்புதம் என்னவென்றால், அத்தூண் அவள் மேலே விழுந்ததில் அவளுக்கு

அதுவரை பிடித்திருந்த பிசாசும் அவளை விட்டு நீங்கியது. அவள் மிகவும் தெளிவாகவும் உற்சாகமாகவும் இருந்தாள். அவள் உடலில் சென்று துன்புறுத்திக் கொண்டு இருந்த அந்த கெட்ட சக்தியை ஆலயத்தின் கட்டுமானபணிக்காக வைக்கப்பட்டுள்ள தூணை அவள் மேல் விழச்செய்து, அவளைக் காப்பாற்றினார் நம் ஸ்ரீ மகராஜ் அவர்கள் எத்தகைய அற்புதம் இது! அவள் சத்குருவிற்கு நன்றி தெரிவித்து விட்டு ஜெய்ப்பூர் திரும்பினாள்.

இதே போன்று இன்னொரு விழாவில், உத்திரத்திற்காக செய்யப்பட்ட ஒரு பெரிய மரத்துண்டு, ஸ்ரீ நாயக் நாவாராவின் தலையில் விழுந்து விட்டது. ஆனாலும் அவரையும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் ஒரு காயமும் இன்றி காப்பாற்றினார். தலையில் விழுந்த அந்த அகலமான மரம் தலையை உருத்தெரியாமல் நசுக்கி விடக்கூடிய பலம் பொருந்திய போதும் ஸ்ரீ நாயக் நாவாராவிற்கு சத்குருவின் கிருபையால் ஒரு காயமும் ஏற்படவில்லை.

கிருஷ்ணாகிரி பாட்டீலின் மகன் ராமசந்திர பாட்டீல் ஸ்ரீ மகராஜ் அவர்களின் அடியவராகவும் அவர் மீது மிகுந்த அன்பு கொண்ட பக்தராகவும் இருந்தார். ஒரு மத்தியான வேளையில், ஸ்ரீ மகராஜ் அவனிடம் சென்றார். ராமசந்திர பாட்டீலை வெளியில் வருமாறு அழைத்து, தமக்கு ஏதாவது சாப்பிடுவதற்கு தருமாறு கேட்டார். ராமசந்திர பாட்டீல் இறை நம்பிக்கை கொண்ட நல்ல மனிதர். அவர் வாயிலில் வந்து தம்மை அழைத்தவரைக் காணும்போது, அவருக்கு ஸ்ரீ கஜானன் மகராஜை பார்த்த எண்ணம் ஏற்பட்டது. அவர் மிகவும் மரியாதையுடன் அந்த வயதான மனிதனின் கையைப்பிடித்து, தன் வீட்டிற்குள் அழைத்து வந்தார். அவர் அமர்வதற்காக பாடா என்று சொல்லப்பட்ட பாயை விரித்தார். அவருடைய பாதங்களுக்கு பூஜை செய்தார். தன் இரு கைகளையும் கூப்பி அவர் முன் நின்றார் ராமசந்திர பாட்டீல்.

அந்த வயதான மனிதர், ''ஓ மகனே! நான் உன்னிடத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறவே இங்கே வந்துள்ளேன்! கவனமாகக் கேள்! உன்னுடைய கடன்களைப் பற்றி கவலைப்படாதே! அவை சீக்கிரமாகவே திருப்பி அடைக்கப்படும். ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்! புனித கோதாவரி நதியானது கோடை காலத்தில் வற்றினாலும் மழையின் ஆசீர்வாதத்தால் நதியின் நீர் பெருக்கு ஏற்படுவதைப்போல, ஸ்ரீ ஹரி உனக்கு வெள்ளம் போல செல்வத்தை அளிப்பார்! எங்கெல்லாம் நான் உணவருந்துகின்றேனோ அங்கெல்லாம் எதற்கும் குறைபாடு இருந்ததில்லை. ஆகையால் எனக்கு தட்டு நிறைய உணவுப் பதார்த்தங்களைக் கொண்டு வா! மேலும் நான் உடுத்திக்



கொள்வதற்காக வஸ்திரமும் எடுத்து வா'' என்றார். உணவும், பண உதவியும் இதர உதவிகளும் யாராவது நம்மிடம் யாசித்தால், அவர்களுக்கு நாம் அதை உடனே அளித்தால் சந்தேகமின்றி அது இறைவனை சென்றடையும்.

ஆனால் அவற்றை அளிப்பவன் மனது தூய்மையாகவும், நல்ல எண்ணங்கள் கொண்ட தர்ம சீலனாகவும் அவன் இருக்க வேண்டும். ராமசந்திரன் அவர் கேட்டவாறு ஒரு பெரிய தட்டு முழுவதும் சுவையான உணவுப் பதார்த்தம் வைத்து அவரிடம் அளித்தான். அவரும் மகிழ்ச்சியுடன் உணவு உட்கொண்டார். அதன்பின்னர் ராமசந்திர பாட்டீல் அவருக்கு ரூபாய் ஐந்தை தட்சிணையாக அளித்தார்.

அவர் எனக்கு தட்சிணை வேண்டாம். நாம் இன்று இங்கு உன்னிடத்தில் ஒன்றைக் கேட்டும் பெறுவதற்காக வந்தேன். உனக்கு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆலய நிர்வாக பொறுப்பை தருவதற்கு நான் தீர்மானித்துள்ளேன். நீ இந்த தட்சிணை சேவையை எனக்குச் செய்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். இப்போதைய சூழ்நிலையில் உன்னைத் தவிர அந்தப் பொறுப்பை ஏற்று திறமையாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு வேறு யாரும் இல்லை. வியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் உன் மனைவி இந்த தட்சிணையை நீ அளிக்கப் போவதால், விரைவில் குணமடைந்து விடுவாள். உன் மகனை அழைத்துவா? அவனுக்கு இந்த புனிதமான மந்திரக்கயிற்றை (Talismen) கழுத்தில் நான் கட்டுவதன் மூலம் அவன் எல்லாவகையான தீய சக்திகளில் இருந்தும் விடுபட்டு வாழ்வில் முன்னேற்றம் அடைவான்.

ஆனால் நான் அளிக்கப்போகும் இந்த உயர்ந்த பதவி, உனக்கு மிகவும் கடினமான ஒன்றாகும். சில சமயங்களில் உன் உறவினர்களே, உனக்கு எதிராகத் திரும்புவார்கள். அது புலித் தோலை போர்த்திக் கொள்வதற்கு சமமானதாகும். இந்தப் பதவியில் நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எந்த சமயத்திலும் பொறாமை வரக்கூடாது. எப்போதும் நேர்மையாக இருக்க வேண்டும். அரசருடைய விருப்பத்திற்கு மாறாக எந்த செயலையும் நீ செய்யக் கூடாது. (அவர் அரசர் என்று குறிப்பிட்டது நம் சத்குரு கஜானன் மகராஜ் அவர்களையாகும்.) சாதுக்களுக்கும், ஞானிகளுக்கும் முறையான மரியாதை அளித்து மகிழ வைக்க வேண்டும். அதே போன்று தீய எண்ணம் கொண்டவர்களிடம் தள்ளியே இருக்க வேண்டும். நீ இந்த கொள்கைகளை அனுசரித்தால், இறைவன் எப்போதும் உன்னுடன்

இருப்பார். உன்னுடைய வருமானத்திற்கு ஏற்றவாறு நீ செலவு செய்ய வேண்டும்! நீ உன்னுடைய எல்லையைத் தாண்டி உன்னை வெளிப்படுத்த முயற்சிக்காதே! சாதுக்களும், ஞானிகளும் ஆலயத்திலிருந்து வெறும் கையோடு திரும்பக்கூடாது. உண்மையான சாதுக்களை அவமானப்படுத்தினால், அது இறைவனை ஆத்திரமூட்டும் செயலாகும். ஆகையால் உண்மையான சாதுக்களிடம் அன்பு செலுத்துவாயாக! உன் இரத்த சம்பந்தமான உறவுகளின் மனதை புண்படுத்த வேண்டாம்! மேலும் இதர சொந்தபந்தங்களுக்கு உன்னுடைய குடும்ப வழக்கப்படி மரியாதை அளிப்பாயாக! ஒரு வேளை நீ கோபம் கொண்டால் அது உன் அடி மனம் முழுவதும் பலாப்பழத்தைப் போல அன்புச்சுவை நிறைந்ததாக இருக்க வேண்டும். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்! நான் எப்போதும் உன்னுடன் இருப்பேன்'' என்று கூறினார்.

அவர் கூறிய இக்கருத்துகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. உயர்பதவி வகிக்கும் ஒருவர் எவ்வாறு பணிவுடனும், அடக்கத்துடனும் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளை பணியாட்களிடம் காட்டாமல், எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாகும். இக்கருத்துக்கள் நாம் அனைவருக்காகவும் சொல்லப்பட்டவையாகும்.

அவர் இவ்வாறு அறிவுரை வழங்கி விட்டு, ராமசந்திராவின் மகனுக்கு மந்திரக்கயிற்றை கட்டிவிட்டு உடனடியாக மறைந்து விட்டார்.

பாட்டீல் அந்த நாள் முழுவதும் இதைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருந்தார். தம் வீட்டிற்கு வந்தவர் வேறுயாரும் அல்ல! அவர் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களே வந்து தமக்கு அறிவுரை வழங்கியதை ராமசந்திரா தெளிவாக உணர்ந்தார். அன்று இரவு அவருடைய கனவில் சத்குரு தோன்றி அவருடைய சந்தேகங்கள் யாவற்றையும் களைந்துவிடுமாறு கூறினார்.

ஸ்ரீ கஜானன் மகராஜ் தன் பக்தர்களிடம் அளவில்லாத அன்பு கொண்டு இருந்தார். அவர்களுக்கு எவ்விதத்திலும் துன்பம் நேராமல் காத்தருளினார். அவருடைய இச்சரித்திரம் இந்த சமூகத்தை காக்கவல்ல சக்தியாகும்.

ஆனால் அவர் மகிமையை நடைமுறையில் உணர வேண்டுமெனில், அவரிடம் அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். நாம் இப்பொழுது இதுவரை படித்த அத்தியாயங்களின் முக்கிய நிகழ்வுகளை சுருக்கமாகக் காணலாம்.

**- ஜெய் கஜானன் -**



**அத்தியாயம் - 1** ஸ்ரீ கணேசரைப் போற்றுவதில் தொடங்குகிறது. பின்னர் குரு வணக்கமும், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் வாக்கை நடைமுறைகளையும் விவரிக்கிறது. அவர் முதன் முதலில் தோன்றிய மாக் வாத்ய சப்தமி (Magh Vadya Sapthami)-யில் தேவிதாஸின் வீட்டிற்கு அருகில் தோன்றியதும், பங்கட்லாலும், தாமோதர் பண்டிட்டும் அவரை ஞானி என்பதை அடையாளம் கண்டு கொண்டனர்.

**அத்தியாயம் - 2** ஸ்ரீ மகராஜ், கோவிந்தபுவாவின் கீர்த்தனைக்குச் சென்று அங்கு பீதாம்பர் ஷிம்பிக்கு காட்டிய அற்புதங்கள் மற்றும் இறுதியாக அவர் பங்கட்லாவின் வீட்டிற்கு சென்ற விவரம்.

**அத்தியாயம் - 3** ஒரு சந்நியாசி பஞ்சாவை மகராஜ் அவர்களுக்கு, அளிப்பதற்காக கொண்டு வந்ததை மகராஜ் புரிந்து கொண்டு அவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்தார். அன்றிலிருந்து அவர் ஷேக்காவ் கிராமத்தில் கஞ்சா புகையை ஆரம்பித்தார். அவருடைய பாதங்களை ஸ்பரிசித்த புனித நீர், ஜான்ராவ் தேஷ்முக்கை காப்பாற்றியது. மரணத்தின் பல்வேறு விதங்களை விவரித்தார். விட்டோபாவிற்கு அவர் அளித்த அடியால் அவனுடைய அகம்பாவம் அவனை விட்டு விலகியது.

**அத்தியாயம் - 4** ஜானகிராம், மகராஜ் அவர்கள் புகைப்பதற்காக எரியும் கரித்துண்டுகளை தர மாட்டேன் என்று சொன்னதையும், அதன் பலனாக அவன் விருந்தினருக்காக தயார் செய்து வைத்து இருந்த கறி முழுவதும் புழுக்களாக மாறியதும், அவன் ஸ்ரீ மகராஜ் அவர்களை பணிந்ததும் அவர் அக்கறியை மீண்டும் பழையவாறு சுத்தமாக மாற்றிய அற்புதம், அதன் பிறகு ஜானகிராம் சத்குருவின் பக்தனாக மாறிய விவரமும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ மகராஜ் சந்துமுகினிடம் இரண்டு கனோலிஸ் கொண்டு வரச் சொன்னதும், மாதாவிற்கு இறந்த பிறகு அடையும் பேரின்ப வாழ்க்கையை காண்பித்ததும், வசந்த பூஜையை அடியவர்கள் தங்கள் கைகளால் செய்ததும் விவரிக்கப்பட்டுள்ளன.

**அத்தியாயம் - 5** ஸ்ரீ மகராஜ் சமாதி நிலையில், மகாதேவ் ஆலயத்தில் உட்கார்தல், பசுக்களை மேய்ப்பவர்கள் அவரை வணங்கினார்கள். மக்கள் அவரை பிம்பல் காவ் அழைத்துச் சென்றனர். பங்கட்லால் சென்று அவரை மீண்டும் ஷேக்காவ் கொண்டு வந்தார்.

சிறிது நாட்களுக்குப் பிறகு அகோலி சென்று பாஸ்கராவை சுதந்திரமடையச் செய்தார். அகோலியில் ஸ்ரீ மகராஜ் வறண்ட கிணற்றில் தண்ணீர் நிறைய வைத்தார். பாஸ்கராவின் சந்தேகங்களைத் தீர்த்து, அவரோடு ஷேக்காவ் திரும்பி வந்தார்.

**அத்தியாயம் - 6** பங்கட்லால் ஸ்ரீ மகராஜை சோளக்கதிர் உண்பதற்காக, தன் பண்ணை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். எல்லா தேனீக்களும் ஸ்ரீ மகராஜை சுற்றிக் கொண்டு கடித்ததும், அதை பார்த்த அனைவரும் ஓடிவிட்டனர். ஸ்ரீ மகராஜ் தேனீக்களின் கடியால் காயமடையவில்லை. இந்த சோதனை பங்கட்லாலின் பக்தியை சோதிப்பதற்காகத்தான். ஸ்ரீ மகராஜ் அக்கல்கோட் சென்று நரசிங்கஜியை சந்தித்தார். அவர் கோடாஷா அலியுடைய சிஷ்யர் ஆவார். சத்குரு அவ்விடத்தில் சில நாட்கள் தங்கியிருந்து அவருடன் சகோதரத்துவமாக பேசிக் கொண்டும் இருந்தார்.

பிறகு சந்திரபாகா நதிக்கரையில் அமைந்திருக்கும் ஷிவர் கிராமம் சென்று அங்கு வ்ராஜபூஷனரை ஆசீர்வதித்தார். ஸ்ரீ மகராஜ் ஹனுமான் ஆலயத்திற்குச் சென்று அங்கு தங்கி இருந்த ஷ்ரவண் மாத உற்சவ கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்.

**அத்தியாயம் - 7** பாட்டீல் சகோதரர்கள் அனைவரும் ஸ்ரீ மகராஜை அவதூறாகப் பேசினர். அவரிடம் கடுமையாக நடந்து கொண்டனர். ஸ்ரீ மகராஜ், ஹரி தனக்கெதிராக புரிந்த மல்யுத்த போட்டியில், தன் கைகளைக் கூட ஹரியால் அசைக்க முடியாதவாறு ஸ்ரீ மகராஜ், தனது உயர்வான ஆன்மபலத்தைக் கொண்டு ஹரியின் அகம்பாவத்தை அடக்கினார். மற்றொரு சண்டையில் பாட்டீல் சகோதரர்கள் ஸ்ரீ மகராஜை கரும்பால் அடித்து தங்கள் கைகள் களைத்துப்போய் தோல்வியுற்றனர்.

கண்டுபாட்டீல், ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆசீர்வாதத்தில் ஒரு மகனைப் பெற்றார். அவருக்கு பிக்கியா (Bhikiya) எனப் பெயரிட்டார். ஸ்ரீ மகராஜ் கண்டுபாட்டீலை ஒவ்வொரு வருடமும், மக்களுக்கு மாம்பழச் சாறுடன் விருந்தளிக்குமாறு கேட்டுக் கொண்டார். பாட்டீல் சகோதரர்கள் அனைவரும், ஸ்ரீ மகராஜை மிக்க . அன்புடனும் மரியாதையுடனும் வணங்கி அவருடைய பக்தரானார்கள்.

**அத்தியாயம் - 8** மஹர்சௌகிதார் என்ற தபால்காரர் பாட்டீல் குடும்பத்தினருக்கும், தேஷ்முக் குடும்பத்தினருக்கும் இடையேயான பிரிவினையை தனக்கு சாதகமாப் பயன்படுத்திக் கொண்டு,



கண்டுபாட்டீல் மேல்வழக்குப் பதிவு செய்தனர். வழக்கு நடந்து கொண்டிருக்கிற போது, ஸ்ரீ மகராஜ் அவர்களின் கருணையால் அது தள்ளுபடியாகி கண்டுபாட்டீல் விடுதலை செய்யப்பட்டார்.

ஸ்ரீ மகராஜ் தெலிங்கானா பிராமணர்களின் முன்னால், அவர்கள் தவறாகக்கூறிய வேதத்தை திருத்தி, சரியான உச்சரிப்புடன் கூறியது வேதத்தின் மீதான அவருடைய ஆளுமையைக் காட்டியது.

மகராஜ் சிவாலயத்தின் அருகில், ஒரு குடிசையை அமைத்து, அதில் சிறிது காலம் தங்கினார். அந்தவனம் கிருஷ்ணா பாட்டீலுக்குச் சொந்தமானதாகும். பிரம்மகிரி என்ற போலி சந்நியாசியை மக்களுக்கு அடையாளம் காட்டி, அவன் அகம்பாவத்தை அடக்கி அவனுக்கு வேதத்தின் உட்கருத்தையும், பகவத் கீதையின் பெருமையையும் உணர்த்தியது.

ஸ்ரீ மகராஜ் தீ பற்றி எரிந்து கொண்டிருக்கும் கட்டிலில் அமர்ந்த போது கூட அவர் ஒரு காயமும் இன்றி வெளியே வந்தது. அதன் மூலம் அவர் அனைவருக்கும் தெரிவித்தது என்னவெனில் அக்னி உண்மையான ஞானியை ஒன்றுமே செய்யாது என்பதுதான்.

**அத்தியாயம் - 9** பிடிவாதமுள்ள குதிரை அடக்கப்பட்டு சமாதான நிலைக்கு கொண்டுவரப்பட்டது. ஒரு சந்யாசி, ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு புகைப்பதற்காக கொண்டு வந்த கஞ்சாவை அவனுக்கு நினைவூட்டி பெற்றுக் கொண்டார். ஸ்ரீ மகராஜ் அவருடைய சிஷ்யர்களோடு பாலாபூர் சென்று ஸ்ரீ பாலகிருஷ்ணனின் இல்லத்தில் தச நவமியை கொண்டாடினார். பாலகிருஷ்ணாவிற்கு அவரது குருவான ஸ்ரீ சமர்த்த இராமதாஸின் உருவத்தில் ஸ்ரீ மகராஜ் காட்சியளித்து பாலகிருஷ்ணா தன் குழப்பங்கள் தீர்ந்தவனாக மகிழ்ச்சி அடைந்தான்.

**அத்தியாயம் - 10** அமராவதியில் சத்குரு நிகழ்த்திய அற்புதங்கள். பாலபுவா தன்னிலை அறிதல், கணேஷ் அப்பா மற்றும் சந்திராபாய் ஆத்மார்த்தமாக தங்களுடைய அனைத்து சொத்துக்களையும் ஸ்ரீ மகராஜ் அவர்களின் பாதத்தில் சமர்ப்பித்த நிகழ்ச்சி, கணேஷ் தாதா கபர்டே ஆசீர்வதிக்கப்பட்டது. அனைவருக்கும் தெரியபடுத்திய பாலபுவாவின் குரு பக்தியை குடையால் அடித்துச் சோதித்த நிகழ்ச்சி, சுக்காலாலின் முரட்டுபசு, ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஸ்பரிசத்தால் அமைதியானது. கூடேயின் அகம்பாவம் அழிந்த நிகழ்ச்சி.

**அத்தியாயம் - 11** பாஸ்கராவை நாய் கடித்தது. ஸ்ரீ மகராஜ் அவர்களுடன் த்ரியம்பகேஷ்வர் சென்றது. நாசிக்கில்

கோபால்தாஸை சந்தித்தது. சாம்சிங்கின் வேண்டுகோளை ஏற்று, ஸ்ரீ மகராஜ் அவர்கள் அட்சாவ் சென்ற நிகழ்ச்சி, பாஸ்கரா வைகுந்தப் ப்ராப்தி அடைந்தது. அவருடைய உடல், துவாரகேஸ்வரர் சந்நிதிக்கு அருகில் வைக்கப்பட்டது.

ஸ்ரீ மகராஜ் அவர்களின் கட்டளைக்குப் பணிந்து காக்கைகள் அந்த இடத்தை விட்டு நீங்கியது. கிணற்றில் வெடி வைத்த போது கணுவின் உயிரைக் காப்பாற்றியது.

**அத்தியாயம் - 12** சேத் பச்சுலாலின் வாழ்வில் நடைபெற்ற சம்பவம். பிதாம்பர் ஷிம்பி ஸ்ரீ மகராஜ் அளித்த ஆடைகளை அணிந்தார். பிதாம்பர் ஷிம்பி கொண்டோலியில் காய்ந்த மரக்கிளையில் பசுமையான இலைகளை வரவழைத்தது. புதிய ஆலயம் கட்டும்பணி தொடங்கியது. ஸ்ரீ மகராஜ் பழைய மடத்தலிருந்து காளை வண்டியில் புதிய ஆலயத்திற்கு வருகை தந்தது.

சாம்சிங் ஸ்ரீ மகராஜை ஷேக்காவ் அழைத்துச் சென்றது. கடுமையான மழையல் உணவு வழங்கும் நிகழ்ச்சி தடைப்பட்டது. சாம்சிங் ஸ்ரீ மகராஜ் அவர்களுக்கு தன்னுடைய ஆஸ்தி முழுவதையும் அர்பணித்தது. புண்டலீகன் ப்ளேக் வியாதியில் இருந்து காப்பாற்றபட்டது.

**அத்தியாயம் - 13** கங்காபாரதி தொழுநோயில் இருந்து, ஸ்ரீ மகராஜ் அவர்களின் கருணையால் குணமாக்கப்பட்டது.

**அத்தியாயம் - 14** பந்து தாதியாவின் அதிர்ஷ்டமான நாள் அவருக்கு சாதகமாக இருந்தது. பூமிக்கடியில் ஸ்ரீ மகராஜ் அவர்களின் கிருபையால் செல்வம் கிடைத்தவுடன் தன் கடனை எல்லாம் அடைத்தது. சோமாவதி அமாவாசை தினத்தன்று புனித நர்மதை நதியில் நீராடச் சென்றது. புனித நர்மதையில், அவர்கள் பயணித்த ஓடத்தில் ஓட்டை விழுந்தது. புனித நர்மதை தேவி அந்த ஓட்டையை தன் கைகளால் அடைத்து கரை வரை வந்து சேர்த்தாள். மாதவநாத்திற்கு பான்விதா (வெற்றிலை பாக்கு)-வை அவரது சிஷ்யர்களிடம் ஸ்ரீ மகராஜ் அளித்தது.

**அத்தியாயம் - 15** சிவாஜி ஜெயந்தியை முன்னிட்டு லோககமான்ய பாலகங்காதர திலகர் அகோலா வந்த நிகழ்ச்சி பகாரி எனப்படும். (ப்ரஸாதம் திலகருக்கு வழங்குவதற்காக அனுப்பப்பட்டது.) ஸ்ரீதர் காலேவுக்கு மேல்நாடுகளுக்கு செல்ல அனுமதி மறுத்தது.

**அத்தியாயம் - 16** புண்டலீகனை அஞ்சன்காவ் செல்லவிடாமல் தடுத்து உண்மை நிலையை புரிய வைத்தது. தன் பாதுகையை சாம்சிங்கிடம் அளித்தது. புண்டலீகனிடம் சேர்த்துவிடுமாறு கூறியது. கேவர் கொண்டு வந்த பஜ்ஜி பாக்கர் உணவை சுவைத்து உண்ட நிகழ்ச்சி



துகாராம் தன்தலையில் ஒரு துப்பாக்கிக் குண்டு சென்றதால், ஸ்ரீ மகராஜ் அவர்களின் கருணையால் அந்த குண்டு காது வழியாக வெளியே வந்தது.

**அத்தியாயம் - 17** ஸ்ரீ மகராஜ் விஷ்ணுசாவை சந்திப்பதற்காக மால்காபூரில் செல்லும் இரயிலில் ஏறிய நிகழ்ச்சி, நிர்வாணமாக சென்றதற்காக காவல் துறையினரின் விசாரணை.

ஸ்ரீமேதாப்ஷாவை பஞ்சாபிற்கு செல்லுமாறு கூறிய நிகழ்ச்சி, இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே நல்லிணக்கம் ஏற்பட்ட நிகழ்ச்சி

பாபுராவின் மனைவிக்கு பிடித்திருந்த தீய சக்திகளை அழித்த நிகழ்ச்சி, புனித கங்கை நதியையும், புனித பாகீரதி நதியையும் அகோட் கிராமத்தின் கிணற்றில் கொண்டு வந்த நிகழ்ச்சி.

**அத்தியாயம் - 18** பாய்ஜாவின் வாழ்க்கையில் நடந்த அற்புதங்கள். ஸ்ரீ மகராஜ் தன் சிஷ்யர்களுடன் பண்டரிபுரம் சென்ற நிகழ்ச்சி. பாபுனா சாலேவிற்கு விட்டோபாவாக தரிசனம் தந்த நிகழ்ச்சி. காவதே தேவின் அடியவர் ஒருவர் காலராவில் அவஸ்தையுற்றதால், ஸ்ரீ மகராஜ் அதை சரி செய்தார். இறந்த நாயை உயிர்ப்பிக்க செய்த அற்புதம். அதன் மூலம் பெருமை பேசிய பிராமணருக்கு கற்றுக் கொடுத்த பாடம்.

**அத்தியாயம் - 19** காசிநாத் பந்தை ஆசிர்வதித்தல். கோபால் புட்டி, ஸ்ரீ மகராஜ் தன்னுடைய இல்லத்தில் நாக்பூரில் தங்க வைத்த நிகழ்ச்சி ஹரிபாட்டீல் பூட்டியிடமிருந்த, ஸ்ரீ மகராஜை ஷேக்காவ் அழைத்து வந்த நிகழ்ச்சி. ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் ஸ்ரீ மகராஜ் அவர்களுடனான சந்திப்பு. பாலபுவா அவர்களின் சந்திப்பு குறித்து எழுந்த சந்தேகங்களை ஸ்வாமி நிவர்த்தி செய்தல். கழுதைகளிடம் இருந்து தானியக் கிடங்கை காப்பாற்றிய நிகழ்ச்சி, ஸ்ரீ மகராஜை அடித்ததன் பலனாக காவல் துறையைச் சேர்ந்த நாராயணன் இறந்த சம்பவம்.

ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆசீர்வாதத்துடன் ஜகாதியாவிற்கு திருமணம் நடைபெற்ற நிகழ்ச்சி, கபிலதாராவில் ஸ்ரீநிமோண்கருக்கு தரிசனம் அளித்த நிகழ்ச்சி. துகாராம் தன் மகனான நாராயணனை ஸ்ரீ மகராஜ் அவர்களின் சேவைக்காக ஒப்படைத்தது. ஸ்ரீ மகராஜ் அவர்களின் பண்டரிபுர வருகை, விட்டோபாவிடம் அனுமதி

பெற்று ஷேக்காவ் திரும்பிய நிகழ்ச்சி, பர்த்ரபத மாதத்தில், புனித நாளான ரிஷிபஞ்சமியில் மகா ஞானியும், சாதுவும், யோகீஸ்வரரும் ஆன ஸ்ரீ கஜானன் மகராஜ் மகா சமாதி அடைந்தார்.

**அத்தியாயம் - 20** மகா சமாமி அடைந்த பிறகும், ஸ்ரீ மகராஜ் அநேக அற்புதங்கள் செய்த நிகழ்ச்சி. எவர் ஒருவர் அசைக்க இயலாத நம்பிக்கை கொண்டவரோ, அவர் ஸ்ரீ மகராஜ் அவர்களின் தரிசனத்தையும், பாதுகாப்பையும் நிச்சயமாகப் பெறுவார் என்பதை உறுதி செய்த நிகழ்ச்சி.

**அத்தியாயம் - 21** இந்த அத்தியாயத்தில் இச்சரித்திரத்தின் அனைத்து அத்தியாயங்களின் முக்கியமான சாராம்சத்தை அளித்திருக்கிறார் திரு. தாஸ்கணு மகராஜ் அவர்கள். ஆகையால் எல்லா அத்தியாயங்களுக்கு மணிமகுடமாக விளங்குகிறது இந்த 21-ம் அத்தியாயம் ஸ்ரீ மகராஜ் நிகழ்த்திய அனைத்து அற்புதங்களையும் தொகுத்து வழங்கியதால் 21-வது அத்தியாயம் மற்ற எல்லாவற்றினுடைய மொத்த கருத்தாக விளங்குகிறது. ஆலய கட்டுமானப் பணிகளுக்காக, பக்தர்களிடம் நிதி உதவி திரட்டப்பட்டது.

இந்த உலகத்தின் பல்வேறு ஆலயங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவ்வாலயத்தின் முகப்பும், கம்பீரமும், அமைப்பும் வேறு எங்கேயும் காண இயலாது. பக்தர்கள் தங்கும் வசதிக்காக பல்வேறு கட்டிடங்கள் அந்த ஆலயத்தின் நாலாபுறங்களைச் சுற்றியும் கட்டப்பட்டிருக்கின்றது. ஆலயப் பணிக்காக அக்காலத்திலேயே மிகப் பெரிய தொகையை அளித்தவர்கள் ஏராளமானவர் உள்ளனர். அவர்கள் அனைவரையும் பட்டியலிட்டு காட்டுவதற்கு ஒரு தனி நூலையே வெளியிட வேண்டுமாதலால், இங்கே நான் சில முக்கியமான நபர்களின் பெயர்களை மட்டும் கூற ஆசைப்படுகிறேன். ஹரி குக்காஜி பாட்டீல், பனாஜி, உமரியைச் சேர்ந்த கனாஜி, மெஸாஜி, லட்காவ்வைச்சேர்ந்த கங்காரம், கங்கு, அகோலாவைச் சேர்ந்த குஜாபாய் மற்றும் பனாபாய், சுக்தேவ் பாட்டிலின் தாயார் இவர்கள் யாவரும் அக்காலத்தில் மிகப் பெரிய தொகையாக எல்லோராலும் கருதப்படும் ஆயிரம் ரூபாய்கள் வழங்கியவர்கள். ராமசந்திர கிருஷ்ணாஜி பாட்டீல், தட்டுபிகாஜி, பாலஜ்கெட்டைச் சேர்ந்த சுக்தேவ்ஜி, ஷேக்காவைச் சேர்ந்த மார்த்தாண்ட கணபதி, பஞ்சகவனைச் சேர்ந்த ரத்தன்லால் பால்சந்த், தத்துலால் மற்றும் பசன்லால், தகாலியைச் சேர்ந்த அம்பர்சிங், கிசான் மேல்மண்டலேகர், விட்டோபா பாட்டீல் ஆவார்கள்.



ஹன்கானாபூரைச் சேர்ந்த கங்காராம் போன்றோர் ஒரு பெரிய தொகையை ஆலயப் பணிக்காக அளித்தவர்கள்.

மகா சமாதி மிக அற்புதமாகவும், அழகான வேலைப்பாடுகள் கொண்டதாகவும் அவற்றைச் சுற்றிலும் வசதியாக பக்தர்கள் அமர்வதற்காக அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான அறைகளும், அலுவலக அறைகளும், ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு இலவசமாக பரிமாறப்படும் உணவைச் சமைப்பதற்காக, பெரிய சமையலறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. பக்தர்களிடம் வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தையும் கட்டுமானப் பணிகளில் செலவிடப்பட்டது. இன்னமும் சில வசதிகளை பக்தர்களுக்கென்று செய்து கொண்டிருக்கும் மகா சமஸ்தானத்திற்கு பக்தர்கள் உலகம் முழுவதிலிருந்தும் தாராளமான நன்கொடை அளித்து வருகின்றனர்.

அக்காலத்தில் நன்கொடையாக அளிக்கப்படும் தொகை சிறியதாக அதற்கு கூடுதலான மதிப்பு இருந்தது. பணவீக்கம் காரணமாக இன்று ஒரு இலட்சம் ரூபாய்க்குக் கூட அவ்வளவு முக்கியத்துவம் அளிக்க இயலவில்லை. மக்களிடையே நன்கொடை வசூலிக்க மகா சமஸ்தானம் எவரையும் வற்புறுத்தியது இல்லை. எல்லா தரப்பட்ட மக்களுக்கும், ஸ்ரீ மகராஜ் அவர்களின் தரிசனம் பெற ஒரே வரிசையில் நின்றுதான் வர வேண்டும். அதனால் அக்காலத்தில் மக்களிடம் அன்பான முறையில் நன்கொடை பெறுவதற்கு ஒரு நூதனமான வழியைக் கையாண்டனர். அதாவது நில உரிமையாளர்கள், நிலத்திற்கு வரி கட்டும் வேளையில் அவர்கள் செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் ஒரு அணா நன்கொடையாக வசூலிக்கப்பட்டது. அதே போன்று ஷேக்காவ் கிராமத்திற்குள் பருத்தி நூல் அல்லது நெல்மணிகள் விற்பதற்காக உள்ளே நுழையும் ஒவ்வொரு எருதுவண்டிக்கும், ஒவ்வொரு முறையும் அரை அணா நன்கொடையாக வசூலிக்கப்பட்டது. மக்கள் மிகவும் சந்தோஷமாக ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆலயத்திற்கு வேண்டிய நன்கொடையை அளித்தனர்.

நிறைய யாகங்கள், யக்ஞங்கள் மகா சமாதியின் முன்னர் நடத்தப்பட்டன. அவற்றில் நான்கு யாகங்கள் மிகவும் பெரியதும் முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். பிராமணர்களின் கையால் கிசன்லால் சேத்ஜி பயபக்தியோடும் மிகுந்த அக்கறையோடும் சதசண்டி யாகத்தை மிகச் சிறப்பாக நடத்தினார்.

அவற்றுள் ஜகதாம்பாகாளிகாதேவியின் யாகம் மிகவும் எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் நடத்தப்பட வேண்டும். ஏனெனில் காளிகாதேவி மிகச் சிறிய தவறுகளைக் கூட பொறுத்துக் கொள்ள மாட்டாள். ஒரு சிறிய தவறு எங்கேயாவது நேர்ந்துவிட்டால் கூட கடும் தண்டனை உறுதியாகக் கிடைக்கும். அமே சமயம் முறையான வழியில் சரியான மந்திரங்களோடு, நல்லவர்கள் அந்த யாகத்தை செய்யும் போது காளிகாம்பாள் மகிழ்ந்து இரட்டிப்பு பலனை அளிக்க வல்லவர் ஆவார். அதனால் யக்ஞம் மட்டும் மிகுந்த சிரமங்களுக்கு நடுவில், மிகவும் எச்சரிக்கையுடமன் நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும். பங்கட்லாவின் மகன் கிசன்லாலும் ஸ்ரீ மகராஜ் அவர்களின் தீவிர பக்தர் ஆவார். விதியின் வலிமை காரணமாக இறுதிநாளான காளிகாம்பாவிற்கான யக்ஞநாளில் பங்கட்லால் வியாதியால் மிகவும் அவஸ்தையுற்றார். அவ்வியாதி பங்கட்லாலின் உயிரைக் குடிக்க வல்லதாக இருந்தது.

பங்கட்லால் இப்போது மரணத்தின் விளிம்பில் இருந்தார். ஆனாலும் அவர் தன் மகனிடம், ''மகனே நீ வருந்த வேண்டாம்! என்னைக் காப்பவர் இந்த சமாதியில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார். ஆதலால் நீ சென்று யாகத்தை முறையான வழியில் நடத்துவாயாக! சுவாமி ஸ்ரீ கஜானன், இங்கு அமர்ந்திருப்பது தம் பக்தர்களை காப்பதற்காகவே ஆகும். இது போன்ற தண்டனை அவர் உடைத்து விடுவார்'' என்றார். யாகத்தில் பங்கெடுத்த அனைவரும் இது போன்ற யாகத்தின் இறுதியில் பங்கட்லால் மரணத்தின் விளிம்பில் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றனர்.

ஆனால் பங்கட்லால் கூறியவாறு, ஸ்ரீ மகராஜ் அவர்களின் கிருபையால் அவர் சீக்கிரமாகவே தன் வியாதியில் இருந்து விடுதலை ஆனார். மேலும் இந்த யாகத்தின் இறுதியில் தீய சக்தியால் ஆட்டிப் படைக்கப்பட்டு கொண்டிருந்த ஒரு பெண் விடுதலை பட்டாள்.

பனாஜி, திருகேனுஸ்விக்கர், சுகராவைச் சேர்ந்த குஜாபாய், சபத்காவைச் சேர்ந்த வாமன் மற்றும் சிலரும் யாகங்களை மகா சமாதிக்கு முன்னால் நடத்தினர், இவ்வாறு பல வகையான பூஜைகளும் வழிபாட்டு முறைகளும் மகா சமாதிக்கு முன்னர் நடத்தப்பட்டன. அவர் ஒரு மாபெரும் யோகீஸ்வரரும் ஞானியும் ஆவார். மக்கள் தெய்வத்தின் மீது நம்பிக்கை கொண்டு அதன் காரணமாக நல்வழியில் செல்பவர்களாக இருக்கும் வரையிலும் பேரார் நகரம் செழிப்பாகவும் நன்மையாகவும் இருந்தது.



எப்போது அந்த நம்பிக்கையில் தொய்வு ஏற்பட்டதோ அப்போதே அழிவுப்பாதையில் பேரார் சென்று விட்டது.

ஸ்ரீ மகராஜ் தன் பேரார் நகர மக்கள் துன்புறுவது கண்டு மனம் பொறுக்கமாட்டார். இதே காரணமாகத்தான் அவர் தன்னைச் சுற்றிலும் தண்ணீரும் இருக்குமாறு மகா சமாதியை அமைத்துக் கொண்டார். இதில் வியப்பு என்னவென்றால் மகா சமாதியின் அடித்தளம் 30 அடியின் ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் தண்ணீர் தேங்கி இருப்பதற்கான எந்த காரணமும் இல்லை. ஆகையால் ஸ்ரீ மகராஜ், பேரார் நகர மக்களின் தீய நடவடிக்கைகள் காரணமாக, கோபம் கொண்டு தன்னைச் சுற்றிலும் தண்ணீரை உருவாக்கிக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது. மீண்டும் அந்நகரம் செழிக்க வேண்டுமானால் மக்கள் நேர்மையாகவும், உண்மையாகவும் சத்குருவின் மீது ஆழ்ந்த நம்பிக்கையுடனும் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

ஸ்ரீ கஜானன் மகராஜ், அவர்களின் மகா சமாதி இருக்கும் இடத்தில் என்ன விதைக்கிறார்களோ அதை விட பல மடங்கு அதிகமான பலனை அவர்கள், பெற முடியும். பாறையின் மேல் விதைக்கப்பட்ட விதைகள் அழிந்து போகும். எப்போதெல்லாம் சாதுக்கள், ஞானியர்களுக்கு செய்யக்கூடிய சேவையை மறந்தாலும் நம்மை பசியும், பஞ்சமும் தொற்றிக் கொள்ளும். நம்பிக்கை என்பது புலியைப் போன்றது. அது தன் குகையை விட்டு வெளியே தனியாக வந்து விட்டால், நரிக்கூட்டமாகிய தீய எண்ணங்கள் நம்மைச்சூழ்ந்து அழித்து விடும். பக்தி என்பது நல்ல குணமுடைய ஒரு பெண்மணியைப் போன்றதாகும். பக்தியற்ற நிலை தீய வழியில் செல்லும் ஒரு பெண்ணைப் போன்றதாகும். அத்தகைய பெண்ணின் தொடர்பானது நம்மை அழித்துவிடும் நம்முடைய சிந்தனைகள் தவறான வழியில் திசை திரும்பாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதே போன்று இறை நம்பிக்கையை எப்போதும் கைவிடக்கூடாது. ஒருவருக்கொருவர் எதிரிகளாக மாறக்கூடாது. அன்போடு இருக்கும் வரை மட்டுமே நம்பலம் அதிகரிக்கும். நாம் மற்றவரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று மேற்கண்ட இரண்டு வரிகளை கவனித்தால் நம் எதிர்காலம் சிறக்கும். வருடத்திற்கு ஒரு முறையாவது ஷேக்காவ் சென்று ஸ்ரீ மகராஜ் அவர்களின் மகா சமாதியை தரிசித்துவிட்டுவர வேண்டும். ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் இச்சரித்திரமான கஜானன் விஜய் கிரந்தம் என்று மராத்தியால் சொல்லப்பட்ட, இந்தப் புத்தகத்தில்

உள்ள 4 அத்தியாயங்களைப் படித்தவர்கள், ஸ்ரீ கணேஷன் மகராஜ் அவர்களுக்கு 21 கொழுக்கட்டைகள் சமர்ப்பித்தற்கு சமானமாகும். இதைச் செய்வீர்களாக! இச்சரித்திரத்தில் அளிக்கப்பட்டுள்ள 21 அத்தியாயங்களும், 21 வகைகள் கொண்ட அருகம்புல்லிற்கு சமமானமாகும். இவற்றை ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு விருப்பமான அருகம்புல் மாலையும், கொழுக்கட்டையும் சமர்ப்பிப்பதற்கு சமமாகும்.

அனைவரிடமும் அன்பாகவும், நட்பாகவும் பழகும்போது அத்தகைய அன்பின் ஆற்றலானது இந்த பூமியை மகிழ்ச்சி அடையச் செய்து பிரபஞ்சத்தின் அனைத்து சுற்றுச் சூழலையும் மகிழ்வோடு பாதுகாக்கிறது. அது நிலவின் ஒளிக்கதிர்கள், இரவை உணவாக்கி வெளிச்சத்தை உமிழ்வதற்கு ஒப்பானதாகும். இச்சரித்திரத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு துருவா என்ற அருகம்புல்லிற்கு சமமானதாகும். ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தமும் ஒவ்வொரு கொழுக்கட்டைக்கு சமமாகும்.

ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கு அருகம்புல் மாலையையும், கொழுக்கட்டைகளும் சமர்ப்பிக்க விரும்பினால் இச்சரித்திரத்தின் 21 அத்தியாயங்களை ஆழ்ந்த பக்தியோடு படிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ஸ்ரீ மகராஜ் நம் சமர்ப்பணத்தை மகிழ்வோடு ஏற்றுக் கொள்வார். அவரை வணங்கிய பக்தர்களுக்கு எந்தகுறையும் நேராமல் பாதுகாத்து வருகிறார். இச்சரித்திரம் ஒரு கதைப்புத்தகம் அல்ல. புனிதமான ஸ்ரீ கஜானன் லீலா என்று சொல்லப்பட்ட குருவின் சரித்திரமாகும். இந்த வார்த்தையின் உண்மையை புரிந்து கொள்ள இயலாதவர்கள் வாழ்வில் எத்தகைய லாபத்தையும் அடையமாட்டார்கள். தினமும் இச்சரித்திரத்தை ஆத்மார்த்தமாக படித்து வரும் பக்தர்களுக்கு ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள், எல்லா தேவைகளையும் நிறைவேற்றி, தன்னுடைய கருணையால் பக்தர்களை இரவும் பகலும் பாதுகாத்து, அவர்களை என்றென்றும் மகிழ்வோடு காத்தருள்வார்.

இந்த புனித சரித்திரம் புனித நதியான பாகீரதி நதிக்கு சமமாகும். இதன் நிகழ்வுகள் நதியின் நீராகவும், இதன் தத்துவங்கள் அலைகளாகவும் அமைகின்றன. இச்சரித்திரம் கேட்டவை அனைத்தையும் தரும் கல்பதரு (கற்பகவிருக்ஷம்) மரம் போன்றது. சத்குருவின் அற்புதங்கள் மரங்களின் கிளைகளாகவும் தத்துவங்கள் இலைகளாகவும் அமைகின்றன.



எவர் ஒருவர் இச்சரித்திரத்தின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் ஆசீர்வாதங்களை முழுமையாகப் பெறுகிறார். மேலும் இந்த 21 அத்தியாயங்களும் நமக்கு ஆபத்தோ அல்லது கஷ்டமான நேரமோ ஏற்பட்டால் அதிலிருந்து நம்மைக் காக்கும், உயிர்காக்கும் மருந்தாக அமைவதால் ஒவ்வொருவரும் தங்கள் இல்லத்தின் பூஜை அறையில் இச்சரித்திரத்தை வைத்து பூஜிக்க வேண்டும். இச்சரித்திரம் சிந்தாமணிக்கு நிகரானது. நாம் நினைத்த நற்காரியங்கள் அனைத்தையும் நடத்திக் கொடுக்க வல்லது.

தொடர்ந்து இச்சரித்திரத்தை பாராயணம் செய்வதால் வறுமை நீங்கி செல்வம் தழைத்தோங்கும். நோய்வியாதிகளில் இருந்து விடுபட்டு புத்துணர்ச்சிகிட்டும். குழந்தைப்பேறு அற்றவர்கள், சுயநலமில்லாத நட்பு இவை எல்லாவற்றையும் பெற முடியும். இச்சரித்திரத்தை முழுவதுமாக தசமி, ஏகாதசி மற்றும் துவாதசியில் படிப்பவர்கள் மிகுந்த பயனை அடைவார்கள். இச்சரித்திரத்தை ஒரே தடவையாக முழுவதையும் குருபுஷ்ய யோகா தினத்தில் படிப்பவர்களின் எல்லா தேவைளையும் நிறைவேற்றி அவர்களை எல்லாவகையான பிணிகளில் இருந்தும் ஸ்ரீ மகராஜ் விடுவிக்கிறார்.

இச்சரித்திரத்தை தம் இல்லங்களில் வைத்திருப்பதாலேயே, தீய சக்திகள் அணுகாமல், நம்மை பாதுகாக்கவல்லது. உண்மையான நம்பிக்கை கொள்பவர்கள் மட்டுமே, இந்த பாக்கியம் கிடைக்கப் பெறுகிறார்கள். எவ்வாறு மானஸ ஏரியில் ராஜஹம்ஸ பறவைகள் ஆனந்தமாக அமர்ந்து கொண்டிருக்கிறதோ, அதைப்போல ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் இந்த கிரந்தத்தில் எல்லா சாதுக்களும், ஞானியரும் அமர்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

மாபெரும் ஞானியரான தியானேஷ்வர், மிரா, மேத்தா, கபீர், நாமா, சாவத், சோக்காமஹர், கோரா, போதாலா தாமாஜி, ஜநாத், சாகாராம், பியோ மல்லதார், யஷ்வந்த் அல்லது ஸ்ரீமாணிக்பிரபு போல ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களும் ஷேக்காவ் கிராமத்தில் இருந்து தர்மத்தை நிலைநாட்டியவர். ஞானியர்களுக்குள் எந்த வித்தியாசமும் இல்லை.

இப்பொழுது பக்தர்களுக்கு அடியேனுடைய ஒரே வேண்டுகோள் என்னவென்றால் தங்களுடைய அன்பு முழுவதையும் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் பாதங்களில் கிடத்தி அவரை வழிபடுங்கள்! அது உங்களை ஜனனமும், மரணமும் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கும் இந்த சஞ்சல வாழ்க்கையில் இருந்து

விடுபட்டு, நிரந்தரமாக முக்தியை அளிக்க வல்லது.

இப்பொழுது தாஸ்கணுவாகிய நான், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களை என்னுடைய பாவங்களில் இருந்து எனக்கு விடுதலை அளிக்குமாறு வேண்டுகிறேன். நான் தங்களைப் பற்றி எடுத்துரைத்தவனாக இருப்பதால், அடியேனுக்கு நல்வழியைக் காண்பிக்கவும். தீய சக்திகளை நான் வெறுக்கவும் செய்யுங்கள். நான் மரணிக்கும் வரை தங்களின் தரிசனத்தைப் பெற இயன்ற பொழுதெல்லாம் ஆலயத்திற்கு வர வேண்டும். என்னுடைய அன்பு எல்லா சாதுக்களுக்கும் ஞானியர்க்கும் உரித்தாகட்டும். நான் நிரந்தரமாக மாபெரும் ஞானிகள் பிறந்து வளர்ந்த கோதாவரி நதிக்கரையில் தங்கும் பேரானந்தத்தை எமக்கு அருள்வீராக! யாரிடமும் எதற்காகவும் எந்த சூழ்நிலையிலும் எதையும் கேட்டுப்பெறக் கூடிய சூழ்நிலையை எனக்கு உருவாக்க வேண்டாம் என்னறு தயைகூர்ந்து வேண்டிக் கொள்கிறேன். ஓ மகராஜ்! நீங்கள் என்னை நினைத்து எப்போதும் பெருமைப்படக் கூடிய வகையில் நான் நடந்து கொள்ள வேண்டும். மாபெரும் ஞானியர் அனைவரின் பாதங்களில் ஒட்டி இருக்கும் தூசியாக நான் இருக்க விரும்புகிறேன். என்னைப்பாதுகாக்க வேண்டும் என்று உம்மிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

**ஓ ஸ்வாமி கஜானன்! நான் இங்கு கூறியவை யாவும் உன்னிலிருந்து தோன்றியவை ஆகும்.**

நான் இந்த சரித்திரத்தை உமது அருளால் எழுதத் தொடங்கியபோது, ரதான்சா மடத்தில் இருந்து எழுதப்பட்ட சில காகிதங்களை எனக்கு காண்பித்தார். அந்த எழுத்துக்கள் தாம் என்னை இச்சரித்திரம் எழுதுவதற்கு அடிப்படை கருவியாக அமைந்தது. கற்பனைகளுக்கு இங்கு இடம் எதுவும் இல்லை. ஆகையால், தங்களால் அருளப்பட்டதை அவ்வாறே எழுத்து வடிவத்தில் அளித்திருக்கிறேன். இதில் ஏதாவது தவறு இருந்தால் அதற்கு நான் பொறுப்பாக இருக்கமாட்டேன் என்பதையும் தங்கள் பாதங்களில் நமஸ்கரித்து கூறுகிறேன். அவ்வாறு என்னையும் அறியாமல் ஏதாவது தவறு செய்திருந்தால் கருணையோடு என்னை மன்னிப்பீராக! **ஸ்ரீ கஜானன் விஜய் என்ற இந்த சரித்திரமானது இந்த இயந்திர உலகத்தில் இருந்து வரும் பக்தர்களை காப்பாற்றுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.** புண்டலீகனையும், ஹரிவிட்டலையும் போற்றுகின்றேன்.

**- ஜெய் கஜானன் -**



# ஸ்ரீ கஜானன் மகராஜ் சமஸ்தானம் - சீரிய பணிகள்

ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களால் புனிதமடைந்த ஷேக்காவ் என்ற சிறிய கிராமம் மகராஷ்டிரா மாநிலத்தில் புல்தானா மாவட்டத்தில், மும்பையின் கிழக்குப் பகுதியில் சுமார் 550 (KM) தொலைவில் அமைந்துள்ளது.

சத்குரு ஸ்ரீ கஜானன் மகராஜ் இவ்விடத்தை தேர்ந்தெடுத்த காரணத்தால், ஷேக்காவ் உலகப்புகழ் பெற்ற புனித யாத்திரை ஸ்தலமாக இன்றளவும் கொண்டாடப்படுகிறது. எவ்வாறு ஷீரடி என்ற சிறிய கிராமம், ஸ்ரீ சமர்த்த சாய்பாபாவினால் உலகப்புகழ் வாய்ந்ததோ அவ்வாறே ஷேக்காவ் என்ற சிறிய கிராமம், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களால் புனிதமாக்கப்பட்ட ஸ்தலமாகும்.

நாம் முன்னரே கண்டவாறு ஸ்ரீ மகராஜ் அவர்களின் ஆலயக் கட்டுமானப்பணி 1909-இல் தொடங்கப்பட்டது. பிரிட்டிஷ் இராஜ்யத்தின் துணை ஆய்வாளராக (Deputy Commissioner) இருந்த திருவாளர் கேரி (Mr. Curry) ஆலயத்திற்கான நிலத்தை பத்திரப்பதிவு செய்து அளித்தவுடன், நமது ஹரி பாட்டிலால் பணிகள் துவங்கப்பட்டன என்பதை முன்னரே கண்டோம். 48 அடி நீளமும் 42 அடி அகலமும் கொண்ட கருங்கல், ஆலய முகப்பு வளாகத்தில் நாட்டப்பட்டு, புராணங்களில் கூறப்பட்டிருக்கும் தெய்வங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டு அவை இன்றளவும் உயிருள்ள ஓவியங்களாக ஆலயத்தை அலங்கரிக்கின்றன.

ஸ்ரீ மகராஜ் அவர்கள் மகா சமாதி அடைந்த நூற்றாண்டு விழாவில், அந்தக் கருங்கல், மாற்றப்பட்டு தூய்மையான பளிங்குக்கல் நாட்டப்பட்டது. இந்த ஆலயத்தின் சிறப்பு, ஸ்ரீ மகராஜ் அவர்களின் மகா சமாதியை தரிசிக்க, பாதாள அறைக்குச் செல்ல வேண்டும் என்பதே ஆகும். ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்கள் முன்னரே, சமாதியில் தம் அமரப் போவதைக் குறித்து தீர்க்கதரிசனமாக உரைத்ததை நாம் கண்டோம். அதாவது கணேஷ புராணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, கணபதியின் உருவம், சதுர்த்தி தினத்தில் களிமண்ணால் செய்யப்பட்டு, பூஜை வழிபாடுகள் நிறைவடைந்தவுடன், அதற்கு அடுத்த நாளில் திருவுருவச்சிலையை நாம் தண்ணீரில் கரைப்பதைப் போல, நமது சத்குருவிற்கும் கணேஷ சதுர்த்தியன்று பூஜை வழிபாடுகள் செய்யப்பட்டு அதற்கு

அடுத்த நாளான ரிஷி பஞ்சமி தினத்தில் தண்ணீருக்கு நடுவில் ஜல சமாதியில் அமரப்போவதாக கூறினார். மகா சமாதியின் கட்டுமானப் பணிகளும், அதற்கேற்றவாறு, 30 அடி உயரத்தில் தோண்டப்பட்டு அதன் மேல் பீடம் வைக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் ஸ்ரீ மகராஜ் அவர்களை தரிசிக்க எல்லா வழிகளையும் தாண்டி, இறுதியாக பாதாள அறைக்குள் சென்று தரிசிக்கும்படியாக மிகவும் நூதனமாக அமைக்கப்பட்டிருக்கிறது. குருவின்றி தயவின்றி இறைவனை அடைய இயலாது. குருவானவர் நாம் இறைவனை அடைவதற்கு நமக்கு வழிகாட்டுவார் என்ற வாக்கிற்கு ஏற்ப, பக்தர்கள் முதலில் ஸ்ரீ மகராஜ் அவர்களை தரிசித்தவுடன், ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியின் திருவுருவச்சிலையை தரிசிப்பதை வழக்கமாக கடைபிடித்து வருகின்றனர். ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியின் திருவுருவச்சிலைக்கு அருகில், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் இரண்டு திருவுருவச்சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. உற்சவ நாட்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்காக ஸ்ரீ மகராஜ் அவர்களின் திருவுருவச்சிலைகள் அங்கே வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியின் திருவுருவச்சிலையின் முன்னால், ராமதாஸரான ஸ்ரீ ஹனுமான் திருவுருவச்சிலையும் அமைந்துள்ளது. இறைவனுக்கு தொண்டு செய்வதை ஒவ்வொரு பக்தனும் தம் கடமையாக நினைக்கவேண்டும். அத்தகைய சேவை மனப்பான்மையை ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமியிடமிருந்து நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். தம் வாழ்நாள் முழுவதும் ஸ்ரீ ராமனுக்கு சேவை செய்வதையே தம் கடமையாகக் கருதினார் ஸ்ரீ ஹனுமான். இந்த வாக்கை இங்கு வருகை தந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான சேவாதாரிகள் (Service Minded People) மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றனர். ஆலய வளாகத்தின் துப்புரவு பணியில் துவங்கி, விழாக் காலங்களிலும், உற்சவங்களிலும் மற்றும் ஆலய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு சேவை நடவடிக்கைகளிலும், இத்தகைய சேவாதாரிகள் சுயநலமின்றி இறைப்பணிக்காக மட்டுமே, முழுமையாக தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் மனப்பாங்கை நாம் இங்கு காணலாம்.

இந்த ஆலயத்தில் இறைப்பணி செய்வதற்காக மனு அளித்துவிட்டு மாதக்கணக்கில் காத்திருந்து ஒருநாள் சேவை செய்யும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இருக்கிறார்கள். குருவிற்கு செய்யும் சேவை ஒரு நாளும் வீண்போகாது என்று நாம் முன்னரே கண்டோம்.



ஸ்ரீ ஹனுமானின் திருவுருவச்சிலைக்கு முன்னால், ஒரு பெரிய ஆமையில் உருவச்சிலையும் வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறு ஆமையானது, துன்பம் நேரும் சமயத்தில் தன் கைகளையும், கால்களையும் தனக்குள்ளே இழுத்துக் கொண்டு, உறுதியாக உள்ள தனது மேல் ஓட்டை மட்டுமே வெளியில் தெரியப்படுவத்துவதன் மூலம், தன்னைத்தானே காத்துக்கொள்வதைப் போல, இந்த ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் கோபம், பொறாமை, பேராசை, கர்வம் முதலிய தீய குணங்களைக் கைவிட்டால், அவர்கள் அந்த ஆமையின் ஓட்டைப் போல இறைவனால் பாதுகாக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே ஆமையின் திருவுருவச்சிலை வைக்கப்பட்டதன் அர்த்தமாகும்.

**கொடி மரம்**

சுமார் 31 அடி உயரமுள்ள, தங்க தகட்டால் சூழப்பட்ட (த்வஜஸ்தம்பம்) கொடி மரத்தில் உள்ள கொடியில் ''ஓம்'' மற்றும் ''ஸ்ரீ'' என்ற புனித எழுத்துக்களோடு கொடிமரம் கம்பீரமாக நம்மை வரவேற்கின்றது.

**சபா மண்டபம் (Sabha Mandap)**

ஸ்ரீ ராமனின் திருவுருவச்சிலைக்கும், ஸ்ரீ ஹனுமானின் திருவுருவச்சிலைக்கும் நடுவே அமைந்ததுதான் மிகப்பெரிய சபாமண்டபம். மண்டபத்தில் நான்கு புறங்களிலும் காணப்பட்ட அழகிய தூண்களிலும், ஸ்ரீ மகராஜ் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை செதுக்கியுள்ளனர்.

**சமாதி கிருஹான் ஸ்தால் (சாயான் கிருஹா)**

ஆலயத்தின் தென் கிழக்கு பகுதியில் அமைந்த, நுழைவாயிலில் அமைந்தது தான் சமாதி கிருஹான் ஸ்தால் என்று அழைக்கப்படும், ஸ்ரீ மகராஜ், இறுதியாக தனது ஸ்வாசத்தை அடக்கிய இடமாகும்.

இங்கு ஸ்ரீ மகராஜ் அவர்களின் பாதுகை வைக்கப்பட்டுள்ளது. சாயான் கிருஹா என்று சொல்லப்பட்ட இடத்தில் தான் ஸ்ரீ மகராஜ் ஓய்வு எடுத்ததும், அவர் உறங்கிய இடமும் ஆகும்.

**துனி (Dhuni)**

துனி என்று சொல்லப்பட்ட இடத்தில் ஸ்ரீ மகராஜ் ஏற்றி வைத்த புனித அக்னி (தீ) நூறு ஆண்டுகளுக்கு பிறகும் இன்னும் எரிந்து கொண்டிருக்கிறது. இந்த துனியைப் பாதுகாக்க 24 மணி

நேரமும் ஒரு சேவாதாரி நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு நாளைக்கு ஒரு குவிண்டால் விறகு, இப்புனித நெருப்பு எரிய பயன்படுகிறது. இங்கு ஸ்ரீ மகராஜ் அவர்கள் பயன்படுத்திய சில பொருட்களும் பத்திரமாக பாதுகாக்கப்படுகின்றது.

**பாராயணம் செய்யும் மண்டபம்**

சமாதி கிருஹான் ஸ்தால் என்று சொல்லப்பட்ட ஸ்ரீ மகராஜ் அவர்களின் இறுதி மூச்சை அடக்கி இடத்திற்கு முன்னால், பக்தர்கள் பாராயணம் செய்யவும், நாமஸ்மரணை செய்வதற்காகவும், தியானம் செய்வதற்காகவும் மிகப்பெரிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஸ்ரீ மகராஜ் அவர்களின் இச்சரித்திரத்தை, வெவ்வேறு மாநிலங்களிலிருந்தும், நாடுகளிலிருந்தும் வருகை தந்த பக்தர்கள் வரிசையாக அமர்ந்து கொண்டு, ஆழ்ந்த தியானத்துடன் பாராயணம் செய்வது வழக்கம். இங்கு பாராயணம் செய்பவர்களுக்காக மகா சமஸ்தானம் நிறைய வசதிகளைச் செய்து தருகின்றது.

**ஆலயத்தின் நுழைவாயில்**

இந்த மிகப்பெரிய ஆலயத்தில் நாலாபுறங்களிலும் வாயில் அமைக்கப்பட்டிருந்தாலும் வடக்கிலும், மேற்கிலும் அமைக்கப்பட்டவை நுழைவு வாயில்களாக அனுசரிக்கப்படுகின்றன.

**பாடசாலை**

ஆலயத்தின் நாலாபுறங்களிலும் திறந்த வெளி மைதானங்கள் மிகப்பெரிய அளவில் அமைந்துள்ளது. அவற்றில் மிகப்பெரிய வராண்டா என்றழைக்கப்படும் பகுதியில் பாடசாலை அமைந்துள்ளது. அங்கு மகா சமஸ்தானத்தின் ட்ரஸ்ட் அலுவலகங்களும், நன்கொடை மற்றும் அபிஷேகத்திற்கான ரசீது அளிக்கும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆயலத்தின் மிகப்பெரிய சிறப்பு அம்சம் என்னவெனில், பக்தர்கள் தங்கள் காணிக்கையை சமாதி மண்டபத்தின் உண்டியல் மற்றும், அலுவலகத்திலும் மட்டுமே செலுத்தவேண்டும். பிரம்மாண்டமான இந்த ஆலயத்தில் வேறு எங்கேயும், யாரிடமும் காணிக்கை செலுத்தக்கூடாது என்று ஆலய நிர்வாகத்தின் அறிக்கை கூறுகின்றது.

பிரதான நுழைவாயிலின் வெளிப்புறத்தில் நாகதேவதைக்கான சிறிய ஆலயமும், ஸ்ரீ ஹனுமானின் திருவுருவச்சிலையும் வைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஹனுமானின் ஆலயத்தின் முகப்பில் மிகப்பெரிய கிளையுடன் கூடிய புனித அத்தி மரம் பிரம்மாண்டமாக



வளர்ந்துள்ளது. ஸ்ரீ மகராஜ் அவர்களுடைய பிரதான அடியவர்களான ஸ்ரீ பாலபுவா மகராஜ் அவர்களுக்கும், ஸ்ரீ நாராயண் மகராஜ் அவர்களுக்கும் திருவுருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

**மகா ப்ரஸாத மண்டபம்**

இந்த ஆலயத்திற்கு வருகை தந்து கொண்டிருக்கும் பக்தர்களுக்கு ஸ்ரீ மகராஜ் அவர்களின் மகாப்ரஸாதம் மூன்று வேளையும் சமஸ்தானத்தால் அளிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு சுமார் 25,000 பக்தர்களுக்கு மூன்று வேளை உணவும் குடிநீரும் இலவசமாக வழங்கிக் கொண்டிருப்பதுதான் இவ்வாலய சமஸ்தானத்தின் மிகச்சிறந்த பணியாகும். இதற்காக மூன்று அடுக்கு மாளிகை கட்டப்பட்டுள்ளது. ப்ரஸாதம் தயாரிக்கும் பணி பதினெட்டு வெவ்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது.

தூய்மையின் இருப்பிடமே இறைவனின் ஆலயமாக இந்த ஆலயம் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. தினசரி 30,000 பக்தர்கள் வருகை தரும் இந்த ஆலயத்தின் ஒரு மூலை முடுக்குகளில் கூட ஒரு சிறிய காகிதகுப்பையைக்கூட நாம் தேடினாலும் காண இயலாது.

ஸ்ரீ மகராஜ் தம்மைக்காண வரும் பக்தர்களை அன்போடும், தாயுள்ளத்தோடும் கவனித்து அவர்களின் மனக்குறைகளையும் பசி, தாகத்தையும் நீக்கி மிகுந்த மனநிறைவுடன் அனுப்பி வைக்கும் அற்புதம் இவ்வாலயத்தில் மட்டுமே காண இயலும் என்பதை இங்கு மீண்டும் மீண்டும் வருகை தரும் பக்தர்கள் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

ஷேக்காவ், மகாராஷ்டிரா தேசத்தின் அனைத்து முக்கிய நகரங்களுடன் இரயில் வழி மார்கமாக இணைக்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்த செல்லும் நவஜீவன் எக்ஸ்பிரஸ் (Navjeevan Express) மூலம் நேரடியாக ஷேக்காவில் இறங்கி சத்குருவின் ஆலயத்திற்குச் செல்ல இயலும். ஆகாயமார்கமாக செல்ல விரும்பும் பக்தர்கள் நாக்பூரில் இறங்கி, அங்கிருந்து சுமார் 250 கிலோ மீட்டர் தூரத்தில் பேருந்திலும், இரயில் வழியாகவும் ஷேக்காவ் சென்றடைய இயலும்.

ஷேக்காவ், இரயில் நிலையத்தில் இறங்கியவுடன், அங்கு ஆலயத்திற்கு செல்லும் பேருந்துகள் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள, இரயில் நிலையத்திலேயே ஒரு அலுவலகம் அமைக்கப்பட்டு பக்தர்களை, மகா சமஸ்தானம் வழிகாட்டுகின்றது.

ஷேக்காவ் இரயில் நிலையத்தில் இருந்து நிறைய பேருந்துகள் (Buses), சிற்றுந்துகள் (Mini Bus) ஆலயத்திற்கு, இலவசமாக பக்தர்களை அழைத்துச் செல்கின்றன.

ஆலய நிர்வாகம் உணவும், குடிநீரும், பயணம் செய்ய வாகனமும் மட்டுமல்லாமல் யாத்ரீகர்களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் தங்கும் வசதியும் செய்து தருகின்றது.

**ஆனந்த சாகர் (பக்த நிவாஸ்)**

''பக்த நிவாஸ்'' என்ற பெயரில் முதன் முதலில் 161 அறைகளோடு துவங்கப்பட்ட இப்பணியானது பின்னர் 417 அறைகள் கொண்ட மற்றொரு ''பக்த நிவாஸ்'' கட்டிடமும் கட்டப்பட்டது. வெளியூரில் ஆயிரக்கணக்கில் இருந்து வரும் பக்தர்களை கருத்தில் கொண்டு 1999-களில் 350 ஏக்கர் நிலப்பரப்பளவில் சுமார் 300 கோடி ரூபாய் நிதியைத் திரட்டி, 5,000 பக்தர்கள் ஒரே நேரத்தல் தங்கும் வசதியை ''ஆனந்த சாகர்'' என்ற அற்புதமான சிறிய நகரத்தையே ஸ்தாபித்தது மகா சமஸ்தானம்.

மிக அழகிய வேலைப்பாடுகளுடனும் அற்புதமாக கலை வடிவத்துடன் பிரம்மாண்டமாக கட்டி முடிக்கப்பட்ட ''ஆனந்த சாகர்'' என்று அழைக்கப்படும் இந்நகரம், நிறைய பூவனங்களும், தோட்டங்களும், நீரூற்றுகளும், வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்களின் உருவம் பொறித்த வளைவுகளும், நம் தேசத்தின் பதினெட்டு மாநிலங்களைச் சார்ந்த தலைசிறந்த பதினெட்டு ஞானிகளின் திருவுருவச்சிலைகளும் வைக்கப்பட்டு, அவை முறையாக பாதுகாக்கப்படுகின்றன. ஒரே நேரத்தில் சுமார் 10,000 நபர்கள் அமர்ந்து கதாகாலட்சேபங்கள், பஜனைப் பாடல்கள், பக்தியை வெளிப்படுத்தும் அற்புத நாடகங்களையும் ரசித்துப் பார்க்கும் விதத்தில் மிகப்பெரிய சபா மண்டபமும் அழகிய ''மன்'' (Mann River) நதிக்கரையில் அமைக்கப்பட்டு, பிரகாசிப்பதை அனைவரும் தம் வாழ் நாளில் ஒரு முறையாவது ஷேக்காவ் சென்று தரிசித்து வரவேண்டியது மிகவும் அவசியமாகும்.

**கல்விப்பணி**

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'' என்ற வாக்கிற்கு ஏற்ப ஆலய நிர்வாகம் சுமார் 100 ஏக்கர் (Acre) நிலப்பரப்பில் மருத்துவக்கல்லூரி, பொறியியல் கல்லூரி, மராத்திய வழி ஆங்கில வழி கல்விப்பணியை மிகக்குறைந்த கட்டணத்துடன் சிறந்த முறையில் நடத்திக்கொண்டு வருகின்றது. ஏழை மக்களுக்காக சுய



தொழில் பயிற்சி நிறுவனங்கள், உடல் ஊனமுற்றோருக்காக கல்வி மற்றும் விசேஷ பயிற்சிகளை போதிக்கும் பள்ளிகளும், அவர்கள் அங்கேயே தங்கி கல்வி பயிலவும் உறைவிடமும், உணவும் இலவசமாக அளிக்கப்படுகின்றது.

**வார்கரி ட்ரஸ்ட் (Varkari Trust)**

உலகிலேயே முதன்முறையாக இந்த ஆலய நிர்வாகம் மட்டுமே கீர்த்தனைகள் பாடுபவர்களை உருவாக்கி, முறையாக பயிற்சி அளித்து அதன் மூலம் பக்தி உணர்வையும் மக்களிடையே பெருகச்செய்து வருகின்றது. ஆன்மிக வழிக் கல்வியில் சிறந்த வல்லுநர்களும் பண்டிதர்களும், இதற்காக வரவழைக்கப்பட்டு சமஸ்கிருத மொழியையும், பாகவதம் மற்றும் இதிகாச காவியங்களையும் கற்றுக் கொடுக்கும் பயிற்சியையும் மிகச்சிறப்பாக ஆலய நிர்வாம் செய்துவருகின்றது.

கீர்த்தனைகளை இசையுடன் பாடச்செய்து, அவை மராத்திய தேசத்தின் எல்லா இடங்களுக்கும் கொண்டு சேர்க்கும் பணியினையும் செய்துவருகின்றது. இதற்காக இசைப்பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது. பக்தி உணர்வு இல்லாத இசை அல்லது பக்தியோடு சேராத இசை, காலப்போக்கில் அழிந்து மறைந்து விடுகின்றது. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ நாமதேவர், ஸ்ரீ பக்த துகாராம், ஸ்ரீ புரந்தரதாஸர், ஸ்ரீ அன்னமாச்சார்யா போன்ற ஆயிரக்கணக்கான இசை ஞானிகளின் பக்திப்பாடல்கள் கால வெள்ளத்தால் அழியாத ஞாபக மலர்களாய் இன்றளவும் நம்மிடையே இறை உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

**வார்காரி சம்ப்ரதாயம்**

நாம் முன்னரே கண்டவாறு வார்கரி சம்ப்ரதாயம் என்பது இறைப்பணிக்காக தம்மை முழுவதும் அர்ப்பணித்துக் கொள்ளும் முறையான வழக்கமாகும். வாரி என்ற சொல் மராத்திய மொழியில் தொடர்ந்து முறையாக செய்யப்பட்டு வரும் இறைப்பணியை குறிப்பதாகும். ஸ்ரீ மகராஜ் அவர்கள் வருடத்திற்கு ஒருமறை ஸ்ரீ பண்டரிபுர விட்டோபாவான பாண்டுரங்கனை தரிசிக்கச் செல்லும் கால்நடை யாத்திரைப் பணியை துவக்கி வைத்த வழக்கத்தை, இன்றளவும் ஆலய நிர்வாகம் மற்றும்வார்கரிகளும் முறையாக செய்து வருகின்றனர். இதற்காக மகாராஷ்டிர தேசத்தில் உள்ள சுமார் 13,000 கிராமங்களில் இருந்த வார்கரிகள், ஒவ்வொரு வருடமும் ஷேக்காவ் ஆலயத்தில்

இருந்து வருகை தந்து தங்கள் பாதயாத்திரையை ஸ்ரீ மகராஜ் அவர்களின் திருவுருவச்சிலையுடன் துவங்கி, ஆடல், பாடல் மற்றும் இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டும், சுமார் 35 நாட்கள் பாதயாத்திரை செய்து, பண்டரிபுரத்தை அடைந்து, ஸ்ரீ விட்டோபாவை தரிசனம் செய்வதை இன்றளவும் பெரிய உற்சவமாக கொண்டாடி வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் ஆஷாத ஏகாதசி என்று மராத்தியில் அழைக்கப்படும் ஜூன் முதல் ஜூலை வரை, வளர்பிறை (11) பதினோராவது நாள் பால்கி என்று சொல்லப்படும் பல்லக்கு ஊர்வலம், ஷேக்காவில் துவங்கி யானை, குதிரை, காலாட்படையுடன் கொடிகளும், இசைக்கருவிகளும் சுமந்து கொண்டு பாதயாத்திரையாக ஆயிரக்கணக்கான வார்கரிகள் பண்டரிபுரத்தை அடைந்து, விட்டோபாவை வழிபட்டு திரும்பும் இந்த ஊர்வலத்தில் உலகம் முழுவதும் உள்ள ஸ்ரீ மகராஜ் அவர்களின் பக்தர்கள் ஷேக்காவ் வருகை தரும் ஸ்ரீ மகராஜ் அவர்களுக்காக வழியெங்கும் காத்திருந்து, சிறப்பான உணவு, புத்தாடைகள் மற்றும் இரவு நேரத்தில் அவர்கள் தங்குவதற்கு பெரிய கூடாரங்கள் ஊர்வலம் வரும் வார்கரிகளுக்காக மருத்துவர்கள் கொண்ட குழுக்கள் இவை அனைத்து வசதிகளையும் செய்து தருகின்றனர். இத்தகைய வார்கரிகளை நாம் போற்றுவதற்கு மற்றொரு காரணமும் இருக்கின்றது. ஒருவர் தம்மை வார்கரியாக அறிவித்துவிட்டால் அவர் தம் வாழ்நாளில் புகையிலை மற்றும் போதைப் பொருட்கள், உபயோகிப்பது மது அருந்துவது, பொய்யுரைப்பது மற்றும் தகாத உறவில் ஈடுபடுவது இவை அனைத்து தீய பழக்கவழக்கங்களையும் கைவிட்டுவிட்டார் என்பது இச்சம்ப்ரதாயத்தின் விதி முறையாகும். இறைப்பணி செய்பவர்கள் தீய வழக்கங்களுக்கு அடிமையானால், அவர் செய்யும் சேவை இறைவனை சென்று அடைய இயலாது என்ற காரணத்தால் மகா சமஸ்தானம் இம்முறையை தீவிரமாகக் கடைபிடித்து வருகின்றனர். இந்த உற்சவ நிகழ்ச்சி, ஸ்ரீ மகராஜ் அவர்களால் நடை பெற்றுக் கொண்டிருக்கும் மாபெரும் சமுதாய சீர்திருத்த புரட்சி என்றே நாம் கருத வேண்டும். பண்டரிபுரம் மட்டுமல்லாமல், த்ரையம்பகேஷ்வர், ஆலந்தி, பைத்தான், ஓம்காரேஷ்வர் மற்றும் ஸ்ரீ மகராஜ் அவர்கள் நீண்ட காலம் தங்கி இருந்த கபிலதாரா போன்ற புண்ணிய ஸ்தலங்களிலும், ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் நினைவு மண்டபமும், திருவுருவச்சிலையும் மற்றும் வார்கரிகள் தங்குவதற்காக சத்திரங்களும், ஆலய நிர்வாகத்தினால்



அமைக்கப்பட்டு, இவை அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு, சீரிய முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது.

**ஆரத்தி நேர அட்டவனை (Aarti Timings)**

1. காலை 5.00 (5.00 AM) மணிக்கு - காகட் ஆரத்தி (Kakad Aarthi).

2. காலை 7.00 (7.00 AM) மணிக்கு - ஆரத்தி (Aarthi).

3. காலை 11.00 (11.00 AM) மணிக்கு - மத்தியான ஆரத்தியும் நைவேத்யம் சமர்ப்பிக்கப்படுகிறது (Noon Aarthi).

4. காலை சூரிய அஸ்தமன சமயத்தில் - சாஞ்சன ஆரத்தி (Sanjana Aarthi).

5. இரவு 9.00 மணிக்கு (9.00 PM) - ஷேஜா ஆரத்தி (Shejarathi).

**ஸ்ரீ மகராஜ் அவர்களின் நேரடியான உத்தரவிற்கு ஏற்ப ஆலய நிர்வாகம் பக்தர்களுக்காக சில விதிமுறைகளை வகுத்துள்ளது.**

1. பக்தர்கள் ஸ்ரீ மகராஜ் அவர்களின் மகா சமாதியின் திருவுருவச்சிலைக்கு ஊறு விளைவிக்காமல், சற்று தொலைவில் இருந்தே வழிபடவேண்டும்.

2. பெண்கள் கிழக்கு திசையின் வழியாகவும், ஆண்கள் மேற்கு திசையின் வழியாகவும் வந்து தரிசனம் செய்யவேண்டும்.

3. பக்தர்களுக்கு குடிநீர் தடையில்லாமல் கிடைக்க நிர்வாகம் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

4. வெளியூரில் இருந்து வரும் பக்தர்கள் (1880-களில்) ஆலய வளாகத்தின் மேற்குப்புற வராண்டாவில் தங்க அனுமதி வழங்கப்படும். எந்த ஒரு பக்தரும் ஐந்து நாட்களுக்கு மேல் தங்க இயலாது. அவ்வாறு தங்க வேண்டுமானால் மாரோட்டி, சந்திராபன் மற்றும் நிர்வாகக் குழுவின் அனுமதி பெற்றே தங்க இயலும்.

5. எக்காரணத்தை முன்னிட்டும் பெண்கள் ஆலய வளாகத்தில் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

6. ஆலய வளாகத்தில் பக்தர்கள் அளிக்கும் காணிக்கை திரு. பிகாஜி கண்டுஜி பாட்டீலின் கடையில் மட்டுமே செலுத்த இயலும்.


7. பக்தர்கள் எவராவது அறியாமல் தம் காணிக்கையை, ஸ்ரீ மகராஜின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைத்தால், உடனே சேவாதாரிகள், அவரிடத்தில் அக்காணிக்கையை உண்டியலில் இடுமாறு கூறவேண்டும். சேவாதாரிகள் காணிக்கைகளை கைகளால் தொடுவதற்கும் அனுமதி இல்லை.

8. ஸ்ரீ மகராஜ் அவர்களின் உண்மையான பக்தர்கள் தம்மிடமே எல்லா செல்வமும் குவிய வேண்டும் என்று நினைக்க கூடாது. பக்தர்களின் வருகையை ஆலய நிர்வாகத்தினரும், சேவாதாரிகளும் எக்காரணத்தை முன்னிட்டும் தடுக்க முயற்சிக்கக்கூடாது.

9. மேற்கண்ட விதிமுறைகள் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களால் தீர்மானிக்கப்பட்டவை. ஆலய நிர்வாகத்தை நேர்மையாகவும், திறமையாகவும் செயல்படுத்த ஸ்ரீ மகராஜ் அவர்கள், நிர்வாக உறுப்பினர்களை தாமே தேர்ந்தெடுத்து, தலைமை நிர்வாகப் பொறுப்பை திரு. மாரோட்டி, சந்திராபன், கணேஷ் பாட்டீலிடம் வழங்கினார். அதற்குப்பின் நாம் முன்னர் அத்தியாயங்களில் கண்டவாறு திரு. ராமசந்திர கணேஷ் பாட்டீலிடம் வழங்கி, நிர்வாகப் பொறுப்பை எவ்வாறு திறம்பட நடத்தவேண்டும் என்ற அறிவுரையும் வழங்கினார். இந்நிகழ்வு அவர் மகாசமாதி அடைந்தபின்னர் நடந்த ஒன்றாகும். இன்றளவும் ஷேக்காவ் மக்கள் ஸ்ரீ கஜானன் மகராஜ் தம்மை வழி நடத்துவதாக உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளனர். ஸ்ரீ மகராஜ் அவர்களும் பல்வேறு ரூபத்தில், தம்மை நம்பி சரணடைந்தவர்களுக்கு, அவர்கள் வேண்டும் வரத்தை அளித்து, தம் அடியவர்களை பல அற்புதங்கள் மூலம் காப்பாற்றி வருகிறார். இச்சரித்திரத்தை பக்தியோடும், நம்பிக்கையோடும், உள்ளன்போடும் படிக்கும் அடியவர்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது ஷேக்காவ் சென்று ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் மகா சமாதியை தரிசித்தால் அவர்கள் நினைத்த காரியங்கள் யாவும் வெற்றி பெறும் என்பது உறுதியாகும்.

**"அனந்த கோடி பிரம்மாண்டநாயக"**
**ராஜாதி ராஜ யோகிராஜ பரம்பிரும்ம**
**பக்த பிரதிபாலக, சச்சிதானந்த, ஷேக்காவ் நிவாஸி**
**ஸ்ரீ கஜானன் மகராஜ் கி ஜெய்"**

-●-●-●-




அத்தியாயம் 14



அத்தியாயம் 16



அத்தியாயம் 13



அத்தியாயம் 15



ஸ்ரீ கஜானன் மகராஜ் சமாதி மந்திர், ஷேக்காவ்